# அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் A+(CGPA: 3.64) தகுதியும்
மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப்
பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது)

காரைக்குடி - 630003


## தொலைநிலைக்கல்வி இயக்ககம்

## இளங்கலை வரலாறு

## மூன்றாமாண்டு - ஆறாம்பருவம்

## தாள்: 108 63

# வரலாற்று வரைவியல் - ஓர் அறிமுகம்

**Author:**

**DR. T. ASOKAN,** M.A.,M.Phil.,Ph.D.,NET.

*Associate Professor, Department of History, Bharathidasan University, Tiruchirappalli – 620 024*

"The copyright shall be vested with Alagappa University"

All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.

Information contained in this book has been published by VIKAS® Publishing House Pvt. Ltd. and has been obtained by its Authors from sources believed to be reliable and are correct to the best of their knowledge. However, the Alagappa University, Publisher and its Authors shall in no event be liable for any errors, omissions or damages arising out of use of this information and specifically disclaim any implied warranties or merchantability or fitness for any particular use.

VIKAS®

Vikas® is the registered trademark of Vikas® Publishing House Pvt. Ltd.

VIKAS® PUBLISHING HOUSE PVT. LTD.
E-28, Sector-8, Noida - 201301 (UP)
Phone: 0120-4078900 • Fax: 0120-4078999
Regd. Office: A-27, 2nd Floor, Mohan Co-operative Industrial Estate, New Delhi-110044
• Website: www.vikaspublishing.com • Email: helpline@vikaspublishing.com

**Work Order No. AU/DDE/DE12-27/Preparation and Printing of Course Materials/2020 Dated 12.08.2020 Copies 1800**

# முன்னுரை

மொழிக்கு இலக்கணமும், கணிதத்திற்குச் சூத்திரமும் எப்படியோ, அப்படியே வரலாற்றுக்கு வரலாற்று வரைவியல் வரலாற்றின் தரத்தை அறிந்து கொள்ள, உரசிப் பார்க்கும் உரைகல் வரலாற்று வரைவியல், கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் வரலாறு சமுதாயத்திற்குப் படிப்பினையாகக் கருதப்பட்டது. அக்காலக் கட்டத்தில் வரலாறு கதைப்போக்காக அமைந்திருந்தது. அது வரலாற்று வரைவியலின் துவக்கக்காலம் எனலாம். கிரேக்க வரலாற்று ஆசிரியர்கள் ஹெரோடோடஸ், தூசிடைடிஸ் உருவாக்கிய வரலாற்றில் கோட்பாடு இடம் பெறவில்லை. பெரும்பாலும் நடந்து முடிந்த நிகழ்வுகள் வரலாற்றில் இடம் பெற்றாலும், தூசிடைடிஸ் எழுதிய பிலோபோனிசியன் போர்கள் நூலில் சமகால வரலாறு இடம் பெற்றுள்ளது. தூசிடைடிஸ் முடிவு தெரியாத வரலாற்றை எழுத முற்பட்டார். இது வரலாற்று வரைவியலில் மற்றுமொரு புதிய பரிமாணம் எனலாம்.

வரலாற்று வரைவியலை அறிந்து கொள்ளும் போது நாம் ஐரோப்பிய அறிவு வட்டத்திற்குள் (Eurocentric) வரலாற்று முறைகளைப் பார்க்கின்றோம். இது ஓர் அறிவுத்தடை எனக்கூறலாம். ஆசியா மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் காலனி ஆதிக்கத்தினால் ஏற்பட்ட ஐரோப்பிய கல்வியின் தாக்கமே இதற்கு காரணம் ஆகும். மாறாக ஆசிய நாடுகளில், முக்கியமாக சீனா, இந்தியா போன்ற பாரம்பரியமிக்க நாகரிகங்கள் தங்கள் நாடுகளின் வரலாற்றைப் படைத்துள்ளன. இத்தகைய நாடுகளின் துவக்ககால வரலாறுகள், வரலாற்று முறைகள், வரலாற்று வரைவியலில் இடம்பெறவில்லை என்பது வருந்தத்தக்கது.

இடைக்கால ஐரோப்பிய வரலாற்று வரைவியல் ஒரு மதபோதனையாகக் காணப்பட்டது அறிவிலாக இல்லை என பேராசிரியர் கூச் தெரிவிக்கிறார். ஆயினும், மறுக்க முடியாத உண்மை யாதெனில் வரலாற்று வரைவியல் நவீனமயமாக்கப் பட்டது ஐரோப்பாவில் தான்.

இத்தகைய சூழ்நிலையை மாற்றி அமைத்தவர் அறிவொளி சகாப்தத்தின் முன்னோடி எனக்கருதப்படும் வால்டேர் ஆவார். ஜெர்மனியில் ஹெகல், இங்கிலாந்தில் கிப்பன் இக்கால கட்டத்தின் பிரதிநிதிகளாகக் கருதப்படுகின்றனர்.

வரலாற்று முறைகள் நவீன மயமாக்கப்பட்டதற்கு இருகாரணங்கள் உள்ளன. ஒன்று மாறி வரும் அறிவியலின் தாக்கம் இரண்டு வரலாற்று முறைகளை நுணுகி ஆராய்ந்த அறிஞர்களின் கருத்துக்கள். பண்டைய , இடைக்கால அறிவியல் முறைகள் மாறி சோதனை முறையில் அறிவியல் கருத்துக்கள் பெறப்பட்டன. இரண்டாவதாக, ரேனி டெக்கார்ட் போன்ற அறிஞர்கள் வரலாற்றிற்கு முறையான வழி முறைகள் இல்லை எனக்கூறி வரலாற்றை அறிவுப் பாசறையில் இருந்து விலக்க வேண்டும் என வாதிட்டனர். இதுவே, சமூக அறிவியல் தோன்ற காரணமாக இருந்தது. அகஸ்டஸ் காம்டே உடன்பாட்டுக் கோட்பாட்டினை உருவாக்கி சமூகத்தை அறிவியலுக்குப் பயன்படுத்தினார். இதன் மூலம் சமூகத்தை அறிவியல் அடிப்படையில் ஆய்வு செய்தனர். வரலாற்று முறைகளும் மாறத்துவங்கின. அறிவியலின்

தாக்கத்தினால் வரலாற்றை அறிவியல் அடிப்படையில் எழுத வேண்டும் மற்றும் அணுக வேண்டும் என்ற கருத்துக்கள் பரவலாயின. இங்கிலாந்தின் தலை சிறந்த வரலாற்றாசிரியர் ஜே.பி. பியுரி ”வரலாற்று ஓர் அறிவியல், மிகுதியும் அன்று, குறைவும் அன்று” என உரைத்தார்.

அறிவியலின் தாக்கம் பொதுவுடைமைச் சித்தாந்தத்தை உருவாக்கியது. காரல் மார்க்ஸ் தன்னுடைய புகழ்பெற்ற நூலான மூலதனம் வாயிலாக பொருள் முதல் வாதக் கோட்பாட்டினை உருவாக்கினார். இது மார்க்சிய வரலாற்று வரைவியலுக்கு வித்திட்டது. அமெரிக்காவில் சார்லஸ்பியாட், இங்கிலாந்தில் எரிக்ஹாப்ஸ்பாம், இபி.தாம்சன், இ. எச். கார், இந்தியாவில் டி.டி கோசாம்பி, ஆர். எஸ். சர்மா, பிபின் சந்திரா போன்ற வரலாற்று ஆசிரியர்கள் மார்க்சிய முறையிலான வரலாற்றினைப் படைத்தனர்.

மேற்கூறிய வரலாற்று வரைவியல் மாற்றங்கள் சுருக்கமாக இந்நூலில் கூறப்பட்டுள்ளன. இந்த நூல் பதினைத்து அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அத்தியாயங்களின் தொடக்கத்திலுள்ள முன்னுரை மற்றும் நோக்கங்கள் மாணவர்களுக்கு அறிமுகத்தை வழங்குகிறது. பாடத்தை நன்கு புரிந்துக் கொள்வதற்கு வசதியாக அத்தியாயத்திற்குள் ‘உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்’ என்ற தலைப்பில் வினாக்களும் உரியப்பதில்களும் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அலகுகளிலும் அத்தியாயச் சுருக்கம் வழங்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு இந்த நூலை எளிமையாகவும் சுருக்கமாகவும் அறிந்துக் கொள்ளவுதவுகிறது. நூலில் கொடுக்கப்பட்டுள்ள முக்கியச் சொற்களும் அதன் விளக்கமும் அத்தியாயம் தொடர்பான மேலதிக விளக்கத்தை வழங்குகிறது. மேலும் பயிற்சிக் கேள்விகள் அத்தியாத்தில் இறுதியில் வழங்கப்பட்டுள்ள பாடம் தொடர்பான பல நூல் பட்டியல், இந்தப் பாடத்தைத் தாண்டி மேலும் பயிலவேண்டும் என்று நினைப்போருக்குச் சிறந்த வழிகாட்டியாக உள்ளது.

## அலகு-1

## வரலாற்று கருத்தியல்

### வரலாறு மற்றும் வரலாற்று வரைவியலின் பொருள் மற்றும் வரையறைகள்

உள்ளடக்கம்

1.1. முன்னுரை

1.2. நோக்கங்கள்

1.3.வரலாறு என்றால் என்ன ? What is History?

1.3.1. வரலாற்றின் பொருள் (Meaning of History)

1.3.2.வரலாற்றின் வரையறைகள் (Definitions of History)

1.4.வரலாறும் வரலாற்று வரைவியலும் (History and Historiography)

1.5. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

1.6. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்

1.7. அத்தியாயச் சுருக்கம்

1.8. முக்கிய சொற்கள்

1.9. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

1.10. கூடுதல் வாசிப்புகள்

## அலகு-2

## வரலாற்றின் நோக்கம் மற்றும் குறிக்கோள், அதனுடன் தொடர்புடைய பாடங்கள மற்றும் வரலாற்றின் வகைகள்

2.1. முன்னுரை

2.2. நோக்கங்கள்

2.3. வரலாற்றின் எல்லையும் இலக்கும் (Scope and Purpose of History)

2.3.1. வரலாற்றின் எல்லை (Scope of History)

2.3.2. புராண வரலாறு

2.3.3. போர்களைப் பற்றிய வரலாறு

2.3.4. பேரரசு பற்றிய வரலாறு

2.3.5. பிரபஞ்ச வரலாறு

2.3.6.சமயச் சார்பற்ற வரலாறு

2.3.7. அறிவியல் வரலாறு

2.3.8. அறிவொளி வரலாறு

2.3.9.கற்பனைக் காவிய வரலாறு

2.3.10. கூட்டிணைப்பு வரலாறு
2.4. வரலாற்றின் இலக்கு (Purpose of History)
2.5. வரலாறும் மற்ற சமூக அறிவியல்களும் (History and other Social Sciences)
2.6. வரலாறும் அரசியல் விஞ்ஞானமும் (History and Political Science)
2.7. வரலாறும் பொருளாதாரமும் (History and Economics)
2.8. வரலாறும் சமூகவியலும் (History and Sociology)
2.9. வரலாறும் மானிடவியலும் (History and Anthropology)
2.10. வரலாறும் துணைத் துறைகளும் (History and Ancillary Disciplines)
2.11. வரலாறும் தொல்லியலும் (History and Archaeology)
2.12. வரலாறும் கல்வெட்டியலும் (History and Epigraphy)
2.13. வரலாறும் நாணயவியலும் (History and Numismatics)
2.14. வரலாறும் சுவடியியலும் (History and Manuscriptology)
2.15. வரலாற்றின் வகைகள் (Kinds of History)
2.15.1. காலவரன்முறை வரலாறு (Chronological History)
2.15.2. புவியியல் வரலாறு (Geographical History)
2.15..3. அரசியல் வரலாறு (Political History)
2.15.4. அரசியலமைப்பு வரலாறு (Constitutional History)
2.15.5. சட்ட வரலாறு (Legal History)
2.15.6. ராஜதந்திர வரலாறு (Diplomatic History)
2.15.7. ராணுவ வரலாறு (Military History)
2.15.8. சமுக வரலாறு (Social History)
2.15.9. பொருளியல் வரலாறு (Economic History)
2.15.10. பண்பாட்டு வரலாறு (Cultural History)
2.15.11. வாழ்க்கை வரலாறு (Biographical History)
2.15.12. பிரபஞ்ச வரலாறு (Universal History)
2.16. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்
2.17. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்
2.18. அத்தியாயச் சுருக்கம்
2.19. முக்கிய சொற்கள்
2.20. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
2.21. கூடுதல் வாசிப்புகள்

## அலகு-3

### வரலாறு ஒரு கலையா அல்லது அறிவியலா?

3.1. முன்னுரை

3.2. நோக்கங்கள்

3.3. வரலாறு கலையா? அறிவியலா? (Is History Art or Science?)

3.3.1. வரலாறு கலைதான்

3.4. வரலாறு அறிவியல் தான்

3.4.1. வரலாற்றின் அறிவியல் மரபு

3.5. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

3.6. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்

3.7. அத்தியாயச் சுருக்கம்

3.8. முக்கிய சொற்கள்

3.9. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

3.10. கூடுதல் வாசிப்புகள்

## அலகு-4

**வரலாற்றின் பாடங்கள், வரலாற்றின் பயன்பாடுகள் மற்றுமு கெடுபயன்கள், வரலாற்றின் தத்துவம்**

4.1. முன்னுரை

4.2. நோக்கங்கள்

4.3. வரலாற்றுப் படிப்பினைகள் (Lessons of History)

4.4. வரலாற்றின் பயன்கள் (Uses of History)

4.5. வரலாற்றுத் தத்துவம் (Philosophy of History)

4.6. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

4.7. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்

4.8. அத்தியாயச் சுருக்கம்

4.9. முக்கிய சொற்கள்

4.10. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

4.11. கூடுதல் வாசிப்புகள்

## அலகு-5

**காரணம்,** வரலாற்றியம், **வரலாற்று சார்பியல்வாதம் மற்றும் வரலாற்று நிர்ணயம்**

5.1. முன்னுரை

5.2. நோக்கங்கள்

5.3. வரலாற்றில் காரண காரியம் (Causation in History)

5.4. வரலாற்றியம் (Historicism)

5.5. வரலாற்றுச் சார்பியம் (Historical Relativism)
5.6. வரலாற்று முன் நிர்ணயக் கோட்பாடு (Historical Determinism)
5.7. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்
5.8. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்
5.9. அத்தியாயச் சுருக்கம்
5.10. முக்கிய சொற்கள்
5.11. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
5.12. கூடுதல் வாசிப்புகள்

## அலகு-6

**புகழ்பெற்ற வெளிநாட்டு வரலாற்றாசிரியர்கள்: ஹெரோடோடஸ், துசிடைடிஸ் மற்றும் எட்வர்ட் கிப்பன்**

6.1. முன்னுரை
6.2. நோக்கங்கள்
6.3. ஹெரோடோஸ் (Herodotus)
    6.3.1. குறைபாடு
6.4. தூசிடைடிஸ் (Thucydides)
    6.4.1. வரலாற்று வரைவியலில் காணப்படும் குறைகள்
6.5. எட்வர்ட் கிப்பன் (Edward Gibbon)
    6.5.1. இளமைப்பருவம்
6.6. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்
6.7. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்
6.8. அத்தியாயச் சுருக்கம்
6.9. முக்கிய சொற்கள்
6.10. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
6.11. கூடுதல் வாசிப்புகள்

## அலகு-7

***புகழ்பெற்ற வெளிநாட்டு வரலாற்றாசிரியர்கள்***: அர்னால்ட் ஜோசப் டாய்ன்பீ, கார்ல் மார்க்ஸ், லியோபோல்டு வான் ராங்கே, ஹெகல் மற்றும் வி.ஏ. ஸ்மித்

7.1. முன்னுரை
7.2. நோக்கங்கள்
7.3. அர்னால்டு ஜோசப் டாயின்பி Arnold Joseph Toynbee (1889 - 1975)

7.4. காரல் மார்க்ஸ் Karl Marx (1818- 1883)

7.5. லியோபோல்டு வான் ராங்கே Leopold Von Ranke, (1795 - 1885)

7.6. ஜார்ஜ் வில்ஹெம் ஹெகல் George Wilhelm Hegal (1770 - 1831)

7.7. வின்சென்ட் ஆர்தர் ஸ்மித் (Vincent Arthur Smith)

7.7.1. இவரது நூல்கள்

7.7.2. வரலாற்று முறைகள்

7.8. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

7.9. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்

7.10. அத்தியாயச் சுருக்கம்

7.11. முக்கிய சொற்கள்

7.12. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

7.13. கூடுதல் வாசிப்புகள்

## அலகு-8

### புகழ்பெற்ற இந்திய வரலாற்றாசிரியர்கள்: கல்ஹானா, அல்-பிருனி, அபுல் ஃபசல்

8.1. முன்னுரை

8.2. நோக்கங்கள்

8.3. கல்கணர் (Kalhana)

8.4. அல்பரூனி Muhammad Ibn Ahmad Alberuni (973 - 1048 A.D)

8.5. அபுல் பாசல் Abul Fazl (1551 - 1602)

8.6. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

8.7. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்

8.8. அத்தியாயச் சுருக்கம்

8.9. முக்கிய சொற்கள்

8.10. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

8.11. கூடுதல் வாசிப்புகள்

## அலகு-9

### புகழ்பெற்ற இந்திய வரலாற்றாசிரியர்கள்: ஜதுநாத் சர்க்கார், கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, கே.கே. பிள்ளை, டி.டி. கோசாம்பி

9.1. முன்னுரை

9.2. நோக்கங்கள்

9.3. சாதுநாத் சர்கார் (Jadunath Sarkar)
9.3.1. இளமைப்பருவம்
9.3.2. வரலாற்று முறைகள்
9.4. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி (K.A.Nilakanta Sastri)
9.4.1. இளமைப்பருவம்
9.4.2. நவீன வரலாற்றுப் பார்வை
9.4.3. வரலாறு அறிவியலா?
9.5. கனகசபை பிள்ளை (K.K.Pillai)
9.5.1. இளமைப்பருவம்
9.5.2. இவர் எழுதிய நூல்கள்
9.6. தாமோதர் தர்மானந்த கோசாம்பி (D.D. Kosambi)
9.6.1. சாதவாகனர்களைப் பற்றிய கோசாம்பியின் கருத்து
9.7. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்
9.8. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்
9.9. அத்தியாயச் சுருக்கம்
9.10. முக்கிய சொற்கள்
9.11. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
9.12. கூடுதல் வாசிப்புகள்

## அலகு-10

**புகழ்பெற்ற இந்திய வரலாற்றாசிரியர்கள் : ஆர்.சத்தியநாதய்யர், டி.வி.சதாசிவ பண்டாரத்தார், என். சுப்ரமணியன், கி.ராஜய்யன்**

10.1. முன்னுரை
10.2. நோக்கங்கள்
10.3. இரா. சத்தியநாத அய்யர் (R.Sathyanathaiyar)
10.3.1. இளமைப் பருவம்
10.3.2. வரலாற்று முறைகள்
10.4. டி. வி. சதாசிவ பண்டாரத்தார்
10.5. என். சுப்ரமணியன்
10.6. கே.ராஜய்யன்
10.7. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்
10.8. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்
10.9. அத்தியாயச் சுருக்கம்
10.10. முக்கிய சொற்கள்

10.11. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
10.12. கூடுதல் வாசிப்புகள்

## அலகு-11

### ஆராய்ச்சி முறை

11.1. முன்னுரை
11.2. நோக்கங்கள்
11.3. வரலாற்று ஆய்வு (Historical Research)
11.3.1. வரலாற்று ஆய்வின் பரப்பெல்லை
11.3.2. ஆய்வு வழிகாட்டி (Research Guide)
11.3.3. தற்காலிக ஊகக் கோட்பாடு (Hypothesis)
11.3.4. நூற்பட்டியல் அட்டை (Bibliography Card)
11.3.5. குறிப்பெடுத்தல் கலை (The Art of Making Notes)
11.3.6. கால அட்டவணை (Time - Schedule)
11.4. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்
11.5. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்
11.6. அத்தியாயச் சுருக்கம்
11.7. முக்கிய சொற்கள்
11.8. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
11.9. கூடுதல் வாசிப்புகள்

## அலகு-12

### வரலாற்றின் ஆதாரங்கள் முதல் நிலை இரண்டாம் நிலை மற்றும் இணைய ஆதாரங்கள்

12.1. முன்னுரை
12.2. நோக்கங்கள்
12.3. வரலாற்றுச் சான்றுகள்
12.3.1. வரலாற்று அடையாளங்கள் (Historical Traces)
12.3.2. வரலாற்று ஆதாரங்கள் (Historical Evidences)
12.3.3. சான்றுகளின் தன்மை (Nature of Sources)
12.3.4. வரலாற்றுச் சான்றுகளைத் திரட்டுதல்
12.4. மதிப்பாய்வு மற்றும் அறிக்கைகள்
12.5. அரசவை வரலாற்றுக் காவியங்கள், நூல்கள்
12.6. குடும்ப மற்றும் தனி நபர்களது ஆவணங்கள்

12.7. இணைய ஆதாரங்கள்

12.8. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

12.9. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்

12.10. அத்தியாயச் சுருக்கம்

12.11. முக்கிய சொற்கள்

12.12. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

12.13. கூடுதல் வாசிப்புகள்

## அலகு-13

### ஆய்வுத் தலைப்பை தேர்ந்தெடுத்தல், புறநிலை மற்றும் அகநிலை

13.1. முன்னுரை

13.2. நோக்கங்கள்

13.3. ஆய்வுத் தலைப்பைத் தேர்ந்தெடுத்தல் (Selection of Research Topic)

13.4. நடுநிலை நோக்கு

13.4.1. நடுநிலை நோக்கின் முன்தேவைகள் (Pre Requisities of objectivity)

13.5. வரலாற்றுச் சுயநோக்கு (Historical Subjectivity or Bias)

13.6. வரலாற்றுத் தர்க்க வாதத் தவறுகள் (Historical Fallacies)

13.7. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

13.8. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்

13.9. அத்தியாயச் சுருக்கம்

13.10. முக்கிய சொற்கள்

13.11. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

13.12. கூடுதல் வாசிப்புகள்

## அலகு-14

### திறனாய்வு அகம் புறம்

14.1. முன்னுரை

14.2. நோக்கங்கள்

14.3. வரலாற்றுத் திறனாய்வு (Historical Criticism)

14.3.1. புறத் திறனாய்வு (Heuristics or External Criticism)

14.3.2. அகத்திறனாய்வு (Hermeneutics or Internal criticism)

14.4. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

14.5. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்

14.6. அத்தியாயச் சுருக்கம்

14.7. முக்கிய சொற்கள்
14.8. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
14.9. கூடுதல் வாசிப்புகள்

## அலகு-15

### அடிக்குறிப்புகள் மற்றும் துணை நூல் பட்டியல்

15.1. முன்னுரை
15.2. நோக்கங்கள்
15.3. காலப் பெட்டகம் (Time Frame)
15.4. தர்க்க வாதம் (Reasoning)
15.5. ஆய்வுக் கட்டுரையாக்கம் (Exposition of A Thesis)
15.6. அத்தியாயங்கள் பிரித்தல் (Chapterisation)
15.7. தலைப்புகளும் கிளைத் தலைப்புகளும் (Headings and Sub Headings)
15.8. பொருளழுத்தத்துக்கு முக்கியத்துவம் (The Importance of Emphasis)
15.9. தொடர் வரிசையின் முக்கியத்துவம் (The Importance of Serialisatin)
15.10. எழுத்து நடை (The Writing style)
15.11. ஆவண மேற்கோளாட்சி
15.12. முன்னுரை (Preface)
15.13. அடிக்குறிப்புகள் (Footnotes)
15.14. மேற்கோள்கள் (Quotations)
15.15. பட்டியல்கள், வரைபடங்கள், தேசப்படங்கள் (Tables, charts and Maps)
15.16. நூற்பட்டியல் (Bibliography).
15.17. பிற்சேர்க்கைகள் (Apendixes).
15.18. அட்டவணை (Index).
15.19. ஆதாரங்கள் பட்டியல் (Bibliography)
15.20. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்
15.21. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்
15.22. அத்தியாயச் சுருக்கம்
15.23. முக்கிய சொற்கள்
15.24. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
15.25. கூடுதல் வாசிப்புகள்

# அலகு-1

## வரலாற்று கருத்தியியல்

### வரலாறு மற்றும் வரலாற்று வரைவியலின் பொருள் மற்றும் வரையறைகள்

குறிப்பு

**உள்ளடக்கம்**

1.1. முன்னுரை
1.2. நோக்கங்கள்
1.3. வரலாறு என்றால் என்ன ? What is History?
1.3.1. வரலாற்றின் பொருள் (Meaning of History)
1.3.2. வரலாற்றின் வரையறைகள் (Definitions of History)
1.4. வரலாறும் வரலாற்று வரைவியலும் (History and Historiography)
1.5. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்
1.6. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்
1.7. அத்தியாயச் சுருக்கம்
1.8. முக்கிய சொற்கள்
1.9. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
1.10. கூடுதல் வாசிப்புகள்

## 1.1. முன்னுரை

வரலாறு என்பது ஒரு குறிப்பிட்ட நாட்டின் குறிப்பிடத்தக்க தேசிய நிகழ்வுகள் முதல் புகழ்பெற்ற ஆளுமைகள் மற்றும் அவர்களின் படைப்புகள் வரையிலான மனித விவகாரங்களின் வரிசையுடன் தொடர்புடைய கடந்த கால நிகழ்வுகளின் ஆய்வைக் குறிக்கிறது. வரலாற்று வரலாறு என்பது எழுதப்பட்ட வரலாறுகளின் ஆய்வு ஆகும். வரலாற்றுப் பதிவுகள் மற்றும் விளக்கங்கள் காலப்போக்கில் எவ்வாறு மாறுகின்றன என்பதை இது ஆய்வு செய்கிறது சித்தாந்தத்தின் மாற்றம் மற்றும் சில நிகழ்வுகளின் விளைவு. வரலாற்றுக் குறிப்பு முக்கியமானது, ஏனெனில் வரலாறு ஏன் வெவ்வேறு காலங்களில் வித்தியாசமாக விளக்கப்படுகிறது என்பதை புரிந்துகொள்ள உதவுகிறது. இது வரலாற்றின் படைப்புகளுக்கு சூழலை வழங்குகிறது மற்றும் வரலாற்று சூழல்களைப் புரிந்துகொள்வது வரலாற்றாசிரியர்களுக்கு அவர்களின் பார்வையை பாதிக்கிறது கடந்த கால நிகழ்வுகள் மற்றும் மக்கள்.

## 1.2. நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தை படிப்பதன் மூலமாக கீழ்காண்பனவற்றை புரிந்து கொள்ள இயலும்

- வரலாற்றின் பொருள் மற்றும் வரையறையை விளக்கமாக அறிந்து கொள்ள இயலும்
- வரலாற்றில் பயன்படுத்தப்படும் சொல்லாடல்களைப் புரிந்து கொள்ள இயலும்

## 1.3. வரலாறு என்றால் என்ன ? What is History?

### 1.3.1. வரலாற்றின் பொருள் (Meaning of History)

மனிதன் இயல்பாகவே அறிவார்வமிக்கவன். கூடி வாழும் குணமுடையவன். அவனைப் பற்றியும் அவனது கடந்த காலத்தைப் பற்றியும் அறிந்து கொள்ளும் ஆர்வம் கொண்டவன். கடந்த காலத்தை வழிகாட்டியாகக் கொண்டு, நிகழ் காலத்தைப் புரிந்து கொண்டு, எதிர் காலத்தை முன்கணிப்பு செய்யக்கூடிய ஆற்றல் படைத்தவன். மனிதனிடம் இயல்பாய் அமைந்துள்ள அறிவும் ஆர்வமும் ஆற்றலும் மானிட முன்னேற்றத்துக்கும் வரலாற்று வளர்ச்சிக்கும் காரணமாகும். வரலாறு அல்லது சரித்திரம் என்ற சொல் எளிமையானது. ஆனால் அதன் பொருள் கடினமானது. ஏனெனில் வரலாறு என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் உள்ளன! முதன் முதலில் வரலாற்றை அறிவுபூர்வமாக அணுகியவர்கள் பண்டைய கிரேக்கர்கள் ஆவர். வரலாறு (History) என்ற சொல்லே "இஸ்டோரியா" (istoria) என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து பிறந்ததுதான். இக்கிரேக்கச் சொல்லுக்கு ஆய்வு, வினவியறிதல், உண்மையை நாடல், புதுப் பொருள் தேடல், தகவல் திரட்டல், கற்றல் என்று பொருள். இஸ்டோரியா என்ற கிரேக்கச் சொல்லுக்கு இணையான ஜெர்மன் சொல் கெஸ்சிசெட் (Geschichete) ஆகும். இச்சொல்லுக்குக் கடந்த கால நிகழ்ச்சிகளை அறிவார்த்தமாகப் புரிந்து கொள்ளக் கூடியவாறு கூறுதலாகும். ”தாரிக்” என்ற அரேபியச் சொல்லுக்குக் காலவரன்முறை (Chronology) என்று பொருள். "இதிகாசம்" என்ற சமஸ்கிருதச் சொல் புராண காவிய வரலாற்றைக் குறிக்கிறது. வரலாறு அல்லது சரித்திரம் என்ற தமிழ்ச் சொல்லுக்கு ஒரு நாட்டு நிகழ்ச்சிகளின் தொகுப்பு என்று பொருள் கொள்ளப்படுகிறது! மேற்கண்ட இஸ்டோரியா, கெஸ்சிசெட், தாரிக், இதிகாசம், வரலாறு ஆகிய சொற்களின் பொருள்களை வைத்துப் பார்க்கும் போது வரலாறு என்பது 1). வினவியறிதல்: 2). கடந்த காலத்தைக் கூறல் 3). கால வரன்முறைப் படுத்துதல் 4) வரலாறு கலந்த கற்பனைக் காவியம் 5). நிகழ்ச்சித் தொகுப்பு என்று பலவாறாகப் பொருள் கொள்ளப்படுகிறது. காலப் போக்கில் வரலாற்றின் பொருள் மேலும் விரிவடைந்தது குறுகிய

கண்ணோட்டத்தில் பார்க்கும் போது வரலாறு என்பது பதிவு செய்யப்பட்ட கடந்த காலம் என்ற பொருளுடையது. விரிவான கண்ணோட்டத்தில் நோக்கும் போது வரலாறு என்பது கடந்த காலத்தின் துணைகொண்டு, நிகழ் காலத்தைப் புரிந்து கொண்டு, எதிர் காலத்தை முன் கணிப்பு செய்வதாகும். கார் (E.H.Carr) கூறுவதைப் போன்று கடந்த காலத்தை நிகழ் கால வெளிச்சத்தைக் கொண்டு பார்த்தால் தான் அறிவுக்குப் புலனாகும். அதேபோன்று எதிர்கால ஒளியில் தான் நிகழ்காலத்தைக் காண முடியும்.

## 1.3.2. வரலாற்றின் வரையறைகள் (Definitions of History)

வரலாறு என்பது மக்களின் செயல்கள் மற்றும் சாதனைகளைப் பற்றிய ஆய்வின் விளைவாகும் - ஹெரோடொடஸ். வரலாற்றின் தந்தை என்று போற்றப்படும் கிரேக்க வரலாற்று வரைவியல் முன்னோடியான ஹெரோடொடஸ் (கி.மு.484-425) வரலாறு மனிதனை மையமாகக் கொண்டது, மனித செயல்கள் - சாதனைகளைப் பற்றிய ஆய்வு என்று வரையறுத்துள்ளார். அத்தகைய ஆய்வின் நோக்கம் அதிசயிக்கத்தக்க மனித சாதனைகளைப் பற்றிய காலத்தால் அழிக்க முடியாத ஆதாரங்களை எதிர்கால சந்ததியினருக்கு விட்டுச் செல்வதாகும் என்று கூறினார்.

வரலாறு என்பது நினைவு கூறத்தக்க நிகழ்ச்சிகளைப் பற்றிய கதையாகும் - தூசிடைடிஸ். அறிவியல் வரலாற்றின் தந்தை என்று அறியப்படும் தூசிடைடிஸ் (கி.மு.456. 396) வரலாறு குறிப்பிடத்தக்க சிறப்பான நிகழ்ச்சிகளைப் பற்றியதாக இருக்க வேண்டும் என்று வரையறுத்தார். வரலாறு கடந்த கால நிகழ்ச்சிகள் அனைத்தையும் உள்ளடக்கிய தகவல் கிடங்கல்ல மாறாக அது நினைவு கூறத்தக்க முக்கியத்துவமுடைய நிகழ்ச்சிகளைப் பற்றிய விவரிப்பாகும். மனித நடவடிக்கைகள் வரலாற்றில் இடம் பெறத்தக்க தகுதியையும், சிறப்பையும் பெற்றிருக்க வேண்டும் என்பதைக் கோடிட்டுக் காட்டினார் தூசிடைடிஸ்.

வரலாறு என்பது என்றும் மாறாத கடந்த காலத்தைப் பற்றிய விளக்கமாகும் - அரிஸ்டாட்டில். கிரேக்க தத்துவ மேதையான அரிஸ்டாட்டில் மனித இயல்பு மாறாததால் மனித நடவடிக்கைகளும் மாறாதவை என்று கூறினார். ஏனெனில் நிகழ்ந்தவை நிகழ்ந்தவையே அவற்றைக் கடவுளே வந்தாலும் மாற்ற முடியாது என்றார் அரிஸ்டாட்டில்! மனித உள் நோக்கங்கள், உந்துதல்கள், எதிர்பார்ப்புகள் நிலையாக இருப்பதால் நிகழ்ச்சிகளும் மாறுபடாமலேயே இருக்கும் என்பது அவரது வாதமாகும். மனித இயல்பு மாறாமல் இருப்பதால்தான் போரும் சமாதானமும் புரட்சியும் மீட்சியும் முன்னேற்றமும் பின்னடைவும் எழுச்சியும் வீழ்ச்சியும் கடலலைகள் போன்று மாறி மாறி வருகின்றன!

குறிப்பு

பொலிபியஸ் (Polybius) என்ற பிற்கால கிரேக்க வரலாற்றாளர் அரிஸ்டாட்டிலின் வரையறைக்கு வலிவையும் பொலிவையும் கொடுத்தார்.

வரலாறு என்பது எடுத்துக்காட்டுகள் மூலம் பெறப்படும் அனுபவமாகும் - டயோனிசியஸ். மற்றொரு பிற்கால கிரேக்க வரலாற்றாளரான டயோனிசியஸ் (கி.மு.4008) வரலாற்றைத் தத்துவமாகக் கருதினார். வரலாற்றுக்கு இவர் கொடுத்துள்ள வரையறையில் எடுத்துக்காட்டுகள், தத்துவம் ஆகிய இரு சொற்களுக்கும் அழுத்தம் கொடுத்துள்ளார். இவர் வாழ்க்கையின் உண்மையான உதாரணங்களை எடுத்துக்காட்டுகளாகக் கொண்டார். அவற்றிலிருந்து பெறும் படிப்பினைகளைத் தத்துவமாகக் கருதினார். மனித முன்னுதாரணங்களால் பெறப்படும் அனுபவப் படிப்பினை மனித குலத்துக்கு என்றென்றும் பயன்படும் என்று கருதினார் டயோனிசியஸ். இவரைப் பின்பற்றிப் பலரும் வரலாற்றுக்குப் பல்வேறு தத்துவ விளக்கம் கொடுத்துள்ளனர்.

வரலாறு என்பது மக்களை விவேகமுடையவர்களாக்கும் அறிவுத் துறையாகும் - சர். பிரான்சிஸ் பேக்கன் (கி.பி.1561 - 1626). இவர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த மறுமலர்ச்சிக்கால மாபெரும் பரிசோதனை விஞ்ஞானி ஆவார். பேக்கன் வரலாற்றை முறையான அறிவுத் துறையாகக் கருதினார். அதோடு வரலாற்று அறிவு மக்களை மதி நுட்பமுடையவர்களாக்க வல்லது என்றும் வலியுறுத்தினார். மனமுயற்சியே விவேகமாகும். விவேகமிக்கவர்களால்தான் நன்மை தீமைகளை வேறுபடுத்திப் பார்க்க முடியும். அனுபவப் பட்டரையில் அடிக்கப்பட்டு, சிந்தனையால் செதுக்கப்பட்டு, கண்டுணர்தலால் கடையப்பட்டு உருவாகும் வரலாற்று அறிவு மக்களை விவேகமுடையவர்களாக்கும் என்று உறுதியாகக் கூறினார் பேக்கன். அவரது வார்த்தைகளில் கூற வேண்டுமாயின் தந்திரசாலிகள் வரலாற்றை நிந்திப்பர் சாமானியர்கள் வரலாற்றை வியந்து நோக்குவர் விவேகிகள் வரலாற்றை மனிதகுல மேம்பாட்டுக்காகப் பயன்படுத்துவர்.

வரலாறு என்பது மாமனிதர்களின் எண்ணிறந்த சுயசரிதைகளின் சாரம் ஆகும் - தாமஸ் கார்லைல். ஸ்காட்லாந்து வரலாற்று அறிஞரான தாமஸ் கார்லைல் (1795 - 1881) வரலாற்று மாமனிதர்கள் கோட்பாட்டை (Great Men Theory of History) உருவாக்கியவர். இவர் வரலாற்றை மாமனிதர்களின் வாழ்க்கையின் வெளிப்பாடாகக் கருதினார். மாமனிதர்களின் எண்ணங்களே வரலாற்று நிகழ்ச்சிகளாகவும், அவர்களின் சாதனைகளே வரலாற்றின் விளைவுகளாகவும் உருப்பெறுகின்றன என்று கூறினார் கார்லைல். காலத்தின் சவால்களைத் துணிவுடன் எதிர் கொள்வதால்தான் மாமனிதர்களின் பெயரும், புகழும் கல்மேல் எழுத்தென அழியாமல் உள்ளன. அமெரிக்க அறிஞர் எமர்சன் (Emerson) இக்கருத்தையே வரலாறு என்பது சான்றோர்களின் வாழ்க்கைத் தொகுப்பு என்று கூறினார்.

குறிப்பு

வரலாறு கடந்த கால அரசியல் நிகழ்கால அரசியலே வருங்கால வரலாறு - ஜான் சீலி. கேம்பிரிட்ஜ் வரலாற்றுப் பள்ளியைத் தோற்றுவித்த ஜான் ஆர்.சீலி (1834 - 1885) அரசியலே வரலாற்றின் குவி மையம் என்று கருதினார். நடைமுறை அரசியலே வரலாறு என்ற துணியின் ஊடும் பாவும் (warpand woof) ஆகும் என்பது சீலியின் துணிபு. அரசியல் என்ற மூலப் பொருளிலிருந்துதான் வரலாறு என்ற செய்பொருள் உருவாக்கப்படுகிறது. அரசியல் மரம் என்றால் வரலாறு கனியாகும். அரசியல் என்ற கருப்பையிலிருந்துதான் வரலாறு என்ற குழந்தை பிறக்கிறது் இக்குழந்தை வருங்காலத்துக்கான கருவைத் தன்னகத்தே தாங்கிக் கொண்டிருக்கிறது! வரலாற்றின் நோக்கம் ஆட்சியாளர்களுக்குத் தேவையான அரசியல் அறிவைக் கொடுப்பதாகும் என்று கருதினார் சீலி. அதுமட்டுமல்ல, அவர் முக்காலங்களுக்கிடையேயான தொடர்பையும் காட்டியுள்ளார்.

வரலாறு என்பது மனித விடுதலையின் மலர்ச்சியாகும் - ஆக்டன் பிரபு. கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தின் வரலாற்றுப் பேராசிரியரான ஆக்டன் பிரபு (1834 - 1902) விடுதலையே வரலாற்றின் குவிமையம் என்பதை வலியுறுத்தினார். சுதந்திரமான சூழ்நிலையில்தான் மனித குலத்திடம் மறைந்து கிடக்கும் ஆற்றல்கள் அனைத்தும் வெளிப்படும். அறிவாற்றல், ஆக்கத்திறன், புத்தமைப்பு முயற்சிகள் பலப்படும். அரசர்கள் மற்றும் ஆட்சிகளின் எழுச்சி வீழ்ச்சிகளை விவரிப்பதை விட்டு, மனித உரிமை மற்றும் விடுதலையைப் பற்றி வரலாறு வரையப்படுதல் வேண்டும் என்பதை வலியுறுத்தினார் ஆக்டன் பிரபு. மனித சுதந்திரம் மதிக்கப்படும் போதும் வரலாற்று நிகழ்ச்சிகள் ஏற்படுகின்றன என்பதைச் சுட்டிக் காட்டினார் ஆக்டன் பிரபு.

வரலாறு என்பது அறிவியல் அதற்குக் குறைந்ததுமல்ல, கூடியதுமல்ல - ஜே.பி.பியூரி. ஆங்கிலேய வரலாற்றாளரான பியூரி (1861 - 1927) ஆழ்புலமையுடையவர். அறிவியல் யுகத்தின் பிரதிநிதி. இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் (1903) இவர் ஆற்றிய வரலாற்றுச் சிறப்பு மிக்க கேம்பிரிட்ஜ் துவக்கச் சொற்பொழிவில் வரலாறு ஒரு அறிவியலே என்பதை ஆணித்தரமாக எடுத்துரைத்தார். வரலாறு வெறும் விவரக் கிடங்கு என்ற கருத்தையும் வரலாறு ஒரு கலை அல்லது இலக்கியத்தின் கிளை என்ற கூற்றையும் மறுத்தார். மாறாக வரலாறு அறிவியல் கூறுகளைக் கொண்ட சுயேச்சையான தனித்தன்மை வாய்ந்த அறிவுத்துறை என்பதை வலியுறுத்தினார். கூர்ந்து கவனித்தல், விளக்கமளித்தல், துல்லியம், நம்பகத்தன்மை, செல்லத்தக்க தாக்கல் ஆகிய அறிவியல் முறைகள் வரலாற்றுக்கும் பொருந்தும் என்பதை எடுத்துக் காட்டினார். சுருங்கக் கூறின் வரலாற்றுக்கு அறிவியல் அந்தஸ்தைக் கொடுத்த பெருமை பியூரியைச் சேரும்.

அனைத்து வரலாறும் சமகால வரலாறேயாகும் - பெனிடெட்டோ குரோசே. இத்தாலிய வரலாற்றாளரான குரோசே (1866 - 1952) வரலாற்று வரையறைக்குப் புதிய பரிமாணத்தைச் சேர்த்தார். கடந்த கால

நிகழ்ச்சிகள் தான் நிகழ்கால நடவடிக்கைகளில் அதிர்வுறுகின்றன என்று கருதினார் குரோசே. ஏனெனில், நிகழ்ச்சிகள் காலத்தால் முந்தியதாயினும் உண்மையில் அவை பிற்கால நடவடிக்கைகளுக்கு வழிகாட்டுபவையாக உள்ளன. இதையே கடந்த கால நிகழ்வுகள் நிகழ்கால நிகழ்ச்சிகளாக மறுஉரு கொள்கின்றன என்று கூறலாம். அதாவது நிகழ்கால நிகழ்ச்சிகளின் மூலம்தான் கடந்த கால நிகழ்வுகளைப் புரிந்து கொள்ள முடியும்.

வரலாறு என்பது எண்ணத்தின் வரலாறேயாகும் - ஆர்.ஜி.காலிங்வுட். ஆங்கிலேய வரலாற்றாளரான காலிங்வுட் (1889 - 1943) குரோசேயின் வரையறைக்கு உரை எழுதினார். கடந்த கால நிகழ்ச்சிகளுக்குப் பின்னால் உள்ள எண்ணங்களை அறிந்1து கொள்ளாமல் வரலாற்றைப் புரிந்து கொள்ள இயலாது என்று கூறுகிறார் காலிங்வுட். வரலாற்றாளர்தான் கடந்த கால நிகழ்ச்சிகளை வரலாறாக உருமாற்றம் செய்கிறார். அவ்வாறு செய்கையில் அவரது மனம் அந்நிகழ்ச்சிகளைப் பற்றி நினைத்துப் பார்க்கிறது. அந்நிகழ்வுகள் அவரது மனமேடையில் மீண்டும் நிகழ்த்திப் பார்க்கப்படுகின்றன. அதாவது வரலாற்றாளரின் மனத்தின் வழியாகத்தான் வரலாறு வெளிப்படுகிறது. வரலாற்றாளரின் எண்ணத்துக்கு வெளியே எந்த வரலாறும் இல்லை என்பது காலிங்வுட்டின் துணிபு. வரலாறு என்பது கடந்த காலத்தைப் பற்றியது மட்டுமோ அல்லது கடந்த காலத்தைப் பற்றிய வரலாற்றாளரின் எண்ணத்தைப் பற்றியது மட்டுமோ அல்ல் அது இவ்விரண்டின் பரஸ்பர தொடர்பு பற்றியது என்று கூறுகிறார் காலிங்வுட். இக்கருத்தையே பின்னர் பலரும் பலவிதமாக விளக்கியுள்ளனர்.

வரலாறு என்பது வரலாற்றாளருக்கும் அவருடைய ஆதாரங்களுக்குமிடையே நடைபெறும் இடையறாத் தொடர்பாகும் நிகழ் காலத்துக்கும், கடந்த காலத்துக்குமிடையே நடைபெறும் முடிவில்லாத உரையாடலாகும் - இ.எச்.கார். வரலாறு என்றால் என்ன? என்ற சிறிய நூலின் மூலம் பெரும் புகழ் பெற்ற கார், ஆதாரங்களை ஆய்வதற்கு முன்னர் வரலாற்றாளரை ஆராய வேண்டும் என்று கூறியுள்ளார். வரலாற்று உண்மைகள் தூய்மையானவையல்ல! ஏனெனில் அவை எப்போதும் அவற்றைப் பதிபவரின் மனம் என்ற பட்டகத்தின் (Prism) வழியே நெடுமாற்றம் (Refract) அடைகின்றன. இதை வரலாற்றாளர் கற்பனைக் கண்கொண்டு பார்த்து புரிந்து கொள்கிறார். அதாவது வரலாற்றாளர் கடந்த காலத்தைப் பற்றிய ஆதாரங்களைத் தேடித் தேர்ந்தெடுத்து, முறைப்படுத்தி, கற்பனை வழி புரிந்து கொண்டு பிறருக்குப் புரிய வைக்கிறார். ஆதாரங்களின்றேல் வரலாற்றாளரின் முயற்சி வீண். வரலாற்றாளர் இல்லாத ஆதாரங்கள் பொருளற்றவை. எனவே வரலாற்றாளரின் வழியாக நிகழ்காலத்துக்கும் கடந்த காலத்துக்கும் இடையே உரையாடல் தொடர்கிறது.

பிற வரையறைகள் வரலாறு பற்றிய பிற முக்கிய வரையறைகள் பின்வருமாறு: வரலாறு என்பது நாகரிக சமுதாயங்களில் வாழும்

மக்களின் அனுபவங்களைப் பற்றிய கதையாகும் என்று வரையறுக்கிறார் ஜி.ஜே.ரெனியர். வரலாறு என்பது பூகோளச் சூழ்நிலையில் வாழும் மக்களின் வாழ்க்கை பற்றியது என்று கூறுகிறார் எ.எல். ரௌஸ். வரலாறு என்பது ஒழுங்குபடுத்தப்பட்ட மனிதகுல நினைவாற்றல் என்பது பிரெடெரிக் ஹாரிசன் கொடுக்கும் வரையறையாகும். வரலாறு ஒரு கலை எழுதப்பட்ட வரலாறு மனிதனின் அழகுணர்ச்சி பற்றிய கற்பனை என்று கூறுகிறார் ஆர்தர் ஸ்லெசிங்கர். வரலாறு சமயக் கொள்கைகளின் கொள்கலன் எனக் கூறினார் லீப்னிட்ஸ். வரலாறு மனித முன்னேற்றத்தை அளப்பதற்கான அளவுகோல் என்று கருதினார் துர்கோ, கண்டார்சே போன்ற பிரெஞ்சுப் புரட்சியாளர்கள். வரலாறு வர்க்கப் போராட்டத்தின் படப்பிடிப்பு என்றார் காரல் மார்க்ஸ். வரலாறு என்பது அறிவுக்குப் புலப்படக்கூடிய செயல் தளங்களைப் பற்றிய ஆய்வாகும் என்று வரையறுத்துள்ளார் எ.ஜே.டாயின். 1.2.14 எதிர்மறை வரையறைகள் வரலாற்றுக்குப் பல எதிர்மறை வரையறைகளும் (Negative Definitions) கொடுக்கப்பட்டுள்ளன. அரசியல் மற்றும் சமயத்துக்கு அதீத முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதைக் கண்டு அதிருப்தியுற்ற வால்டேர், வரலாறு என்பது அங்கீகரிக்கப்பட்ட கட்டுக்கதைத் இறந்தோரைக் கொண்டு செய்யப்படும் ஏமாற்று வித்தை ˙ மனிதனைப் பற்றிய குற்றம் மற்றும் துன்பப் பட்டியல் என்று கூறினார். பல பொய்களிலிருந்து ஒன்றைத் தேர்ந்தெடுப்பதுதான் வரலாறு என்றார் ரூஸோ. மனித இனத்தின் குற்றங்கள், மடமைகள், இடையூறுகள் பற்றிய பதிவேடே வரலாறு என்று கூறியுள்ளார் எட்வர்டு கிப்பன். வரலாறு ஒரு கொடுங்கனவு என்று நினைக்கிறார் ஜேம்ஸ் ஜாய்ஸ். வரலாறு மிஸிஸிபி ஆற்றைப் போன்ற பொய்ப் பிரவாகம் என்று வர்ணித்தார் மாத்யூர் ஆர்னால்டு. வரலாற்தைத் துன்ப இன்பியலாகக் கருதினார் மார்லி. வரலாறு ஒரு கிடங்கு என்றார் பெட்ரோல் கிடங்கோடு சம்பந்தப்பட்ட அமெரிக்க வணிகர் போர்டு. இத்தகைய எதிர்மறை வரையறைகள் வரலாற்றின் ஒரு பகுதியை மிகைப்படுத்திக் காட்டுபவையாக உள்ளன. இவை வரலாற்றின் இயல்பு, நோக்கம், பணி ஆகியவற்றைத் திரித்துக் கூறுபவையாக இருக்கின்றன.

**மதிப்பீடு**

மேற்கண்ட வரலாற்று வரையறைகள் வரலாற்றாளர்களின் மனப்பான்மையைப் பிரதிபலிப்பனவாக உள்ளன. இவற்றுள் சில சிறப்பாகவும், சில அறிவொளியூட்டுவதாகவும், சில எழுச்சியூட்டக்கூடியதாகவும், வேறு சில கருத்துப் புரட்டாகவும் உள்ளன ஆனால் எந்த ஒரு வரையறையும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை இருக்கவும் இயலாது. ஏனெனில் வரலாறு இயல்பாகவே உயிர்த் துடிப்புள்ளது வளரக் கூடியது மனித குல முன்னேற்றத்தைப் பற்றியது. எனவே அதன் வரையறையும் காலத்துக்கேற்ப மாறிக் கொண்டிருப்பதில் வியப்பில்லை.

குறிப்பு

## 1.4. வரலாறும் வரலாற்று வரைவியலும்

துவக்கத்தில் வரலாறு வாய்வழி மரபாக இருந்தது. நாட்டுப் பாடல்கள் கேட்போரைப் பரவசப்படுத்தின. எழுத்துக்கலை கண்டுபிடிக்கப்பட்டதற்குப் பின்னர் வரலாறு கவிதை வடிவம் பெற்றது. அதன் பின் வரலாறு உரைநடையில் எழுதப்பட்டது. வரலாறு 1) சமூக முக்கியத்துவமுடைய கடந்த காலப் பதிவுகள் 2) அப்பதிவுகள் மூலம் அறியப்படும் நிகழ்ச்சிகள் 3) நிகழ்ச்சிகளைப் பற்றிய விளக்கம் ஆகிய முப்பரிமாணங்களையும் கொண்டது. வரலாற்றுப் பதிவுகள் மற்றும் நிகழ்ச்சிகளைப் பற்றியது வரலாறு என்றும், நிகழ்ச்சி விளக்கம் வரலாற்றுத் தத்துவம் என்றும் அறியப்படுகிறது. இவை எவ்வாறு எழுதப்படுகின்றன என்பதே வரலாற்று வரைவியல் ஆகும். வரலாற்று வரைவியல் என்றால் வரலாற்றாளர், அவர் வரலாற்று ஆதாரங்களைக் கையாளும் பாங்கு, எழுத்துப் பாணி, அணுகும் முறை, எடுத்துக் கொள்ளும் தலைப்பு, தீர்வுகாண விழையும் பிரச்சனைகள், தத்துவ விளக்கம், கருத்தியல்கள், கோட்பாடுகள், பரப்பெல்லை, பயன்பாடு போன்றவை பற்றிய விவரிப்பாகும். சுருங்கக் கூறின், வரலாற்று வரைவியல் வரலாற்று எண்ணத்தைப் பற்றிய வரலாறு ஆகும். வரலாற்று வரைவியல் 19-ம் நூற்றாண்டுக் கண்டுபிடிப்பாகும். அதற்கு முன்பு வரலாறு மனிதர்கள், நிகழ்ச்சிகள், அமைப்புகள் அல்லது இறை வெளிப்பாடு பற்றிய விவரிப்பாக இருந்தது. 19-ம் நூற்றாண்டில் வரலாற்றை ஆராய்ச்சி மனப்பான்மையுடன் அணுகினர். கடந்த காலத்தைப் பற்றிய பதிவை வரலாற்றியல் (Historiology) என்றும், வரலாறு எவ்வாறு எழுதப்படுகிறது என்பதை வரலாற்று வரைவியல் (Historiography) என்றும் வேறுபடுத்தினர். வரலாற்று வரைவியல் என்பது கடந்த கால நிகழ்ச்சிகளைப் பற்றி எழுதும் கலையாகும் என்று வரையறுத்துள்ளார் சார்லஸ் ஓமன். தற்போது வரலாற்று வரைவியல் தனித்தன்மையுடைய, சுயேச்சையான, வரலாற்று இயலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன் நோக்கம் வரலாற்று உண்மையைக் காண்பதாகும். இதன் ஆய்வுப் பொருள் வரலாறு. இதன் முறை வரலாற்று வரைவு வளர்ச்சியை அறிவியல் வழி ஆய்வு செய்வதாகும். இது மனித இனத்தின் முன்னேற்றம் பற்றிப் புரிந்து கொள்ள உதவுகிறது. சுருங்கக் கூறின் வரலாற்று வரைவியல் நிலவியல் (Geography), கையெழுத்துக்கலை (Calligraphy), நாட்டியவியல் (Choreography), போன்று தனித்தன்மையுடைய அறிவுத் துறையாகும்.

## 1.5. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

1. ‘வரலாறு’ என்ற சொல் இப்போது எதற்குப் பயன்படுத்தப்படுகிறது?

2. வரலாற்று கேள்விகளுக்கு பதிலளிக்க வரலாற்றாசிரியர்கள் என்ன ஆதாரங்களைப் பயன்படுத்தியுள்ளனர்?

3. வரலாற்று வரைவியல் எதை ஆராய்கிறது?

## 1.6. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்

1. "வரலாறு" என்ற சொல் இப்போது காலவரிசைப்படி விவரிக்கப்படும் நிகழ்வுகளின் ஆவணத்தில் பயன்படுத்தப்பட்டு, கடந்த காலத்தை கையாள்கிறது.

2. வரலாற்றாசிரியர்கள் எழுதப்பட்ட ஆவணங்கள் மற்றும் வாய்வழி கணக்குகளின் ஆய்வு மூலம் வரலாற்று கேள்விகளுக்கு பதிலளிக்க முயன்றனர். நினைவுச்சின்னங்கள், கல்வெட்டுகள், நாணயங்கள் மற்றும் படங்கள் போன்ற ஆதாரங்களையும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நிகழ்வுகளின் காலவரிசை வரிசையை உருவாக்க அவர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

3. வரலாற்று ஆதாரம் உருவாகும் பல்வேறு வழிமுறைகள், குறிப்பாக பயன்படுத்தப்படும் ஆதாரங்களின் நம்பகத்தன்மை, வரலாற்றை ,யற்றும் வரலாற்றாசிரியரின் நோக்கம் மற்றும் ஆதாரங்களின் நம்பகத்தன்மை ஆகியவற்றை வரலாற்று ஆய்வு ஆராய்கிறது.

## 1.7. அத்தியாயச் சுருக்கம்

- அரிஸ்டாட்டிலின் கூற்றுப்படி, வரலாறு என்பது 'இயற்கையான நிகழ்வுகளின் தொகுப்பின் முறையான கணக்கு.'
- சில வரலாற்றாசிரியர்களின் கூற்றுப்படி, "வரலாறு" என்ற வார்த்தை கிரேக்க வார்த்தையான "ஹிஸ்டாரியா" என்பதில் வேர்கள் கொண்டது, அதாவது விசாரணை மூலம் பெறப்பட்ட "விசாரணை" அல்லது "அறிவு".
- பாரம்பரியமாக, வரலாறு எழுத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது அல்லது வாய்வழி பாரம்பரியத்தால் அனுப்பப்பட்டது. வரலாற்றாசிரியர்கள் எழுதப்பட்ட ஆவணங்கள் மற்றும் வாய்வழி கணக்குகளின் ஆய்வு மூலம் வரலாற்று கேள்விகளுக்கு பதிலளிக்க முயன்றனர்.
- காலவரிசை, கலாச்சார வரலாறு, நவீன வரலாறு போன்றவை உட்பட வரலாறு பற்றிய பல்வேறு சொற்கள் மற்றும் கருத்துகள் உள்ளன.

**குறிப்பு**

- அட்லாண்டிக் பெருங்கடலுக்கு அருகில் வாழும் மக்களின் சம்பவங்களையும் கதைகளையும் அட்லாண்டிக் வரலாறு வெளிப்படுத்துகிறது.
- டிஜிட்டல் வரலாறு என்பது வரலாற்றின் சமீபத்திய கிளை ஆகும், இதன் கீழ் கணினிகள் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்களின் வரலாறு படிக்கப்படுகிறது.
- அரசியல் வரலாறு என்பது அரசியல் நிகழ்வுகள் மற்றும் மாற்றங்கள் உள்ளிட்ட நிகழ்கால மற்றும் கடந்தகால அரசியல் அம்சங்களைப் பற்றிய ஆய்வு ஆகும்.
- வரலாறு எவ்வாறு ஆவணப்படுத்தப்படுகிறது அல்லது காலங்காலமாக கடந்து செல்கிறது என்பதை வரலாற்று வரலாறு கையாள்கிறது.
- வரலாற்று ஆதாரங்களின் இருப்பு கடந்த காலத்தைப் பற்றிய மதிப்புமிக்க உள்ளீடுகளை வழங்குகிறது. வரலாற்றாசிரியர்கள் இந்த ஆதாரங்களை எழுதப்பட்ட மற்றும் வாய்வழி வரலாற்றின் பின்னணியில் வேறுபடுத்துகிறார்கள்.

## 1.8. முக்கிய சொற்கள்

- வரலாறு: இது நிகழ்வுகளின் காலவரிசைப் பதிவு, அல்லது ஒரு குறிப்பிட்ட போக்கு அல்லது நிறுவனம்.
- வரலாற்று வரைவியல்: இது வரலாற்றை ஒரு கல்வித் துறையாக வளர்ப்பதில் வரலாற்றாசிரியர்களின் முறைகள் பற்றிய ஆய்வு ஆகும், மேலும் விரிவாக்கத்தின் மூலம் ஒரு குறிப்பிட்ட தலைப்பில் எந்தவொரு வரலாற்றுப் பணியும் ஆகும்.

## 1.9. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

**குறுகிய வினாக்கள்**

1. வரலாற்றாசிரியர்கள் யார்?
2. அறிவின் மூன்று வகைகளை குறிப்பிடவும்.

**விரிவான வினாக்கள்**

1. வரலாறு படிப்பது தொடர்பான சில சொற்கள் மற்றும் கருத்துகளை விவாதிக்கவும்.
2. வரலாற்று வரைவியல்: பற்றிய கருத்தை விரிவாக விவரிக்கவும்.

குறிப்பு

## 1.10. கூடுதல் வாசிப்புகள்


- வாரன், ஜான். 1998. கடந்த காலம் மற்றும் அதன் வழங்குநர்கள்: வரலாற்றில் சிக்கல்களுக்கான அறிமுகம். லண்டன்: Hodder & Stoughton Educational.
- ∴பெரோ, மார்க். 2003. வரலாற்றின் பயன்பாடு மற்றும் துஷ்பிரயோகம்: அல்லது குழந்தைகளுக்கு கடந்த காலம் எவ்வாறு கற்பிக்கப்படுகிறது அபிங்டன்: ரூட்லெட்ஜ்.
- ஈ.ஸ்ரீதரன். 2004. வரலாற்றுப் பாடநூல்: கிமு 500 முதல் கிபி 2000. புது டெல்லி: ஓரியண்ட் பிளாக்ஸ்வான்.
- சர்மா, அரவிந்த். 2003. இந்து மதம் மற்றும் அதன் வரலாற்று உணர்வு. புது டெல்லி: முரூ இந்தியா.
- இக்கர்ஸ், ஜார்ஜ் ஜி. 2005. 20 ஆம் நூற்றாண்டில் வரலாற்று வரலாறு: அறிவியல் குறிக்கோள் முதல் பின் நவீனத்துவ சவால் வரை. கனெக்டிகட்: வெஸ்லியன் யுனிவர்சிட்டி பிரஸ்.
- ஸ்டுவர்ட், ஹியூஸ் எச். 1964. வரலாறு கலை மற்றும் அறிவியல். நியூயார்க்: ஜோனா கோட்லர் புக்ஸ்.
- ∴பியா, ஜான். 2013. ஏன் வரலாற்றைப் படிக்க வேண்டும்? கடந்த காலத்தின் முக்கியத்துவத்தை பிரதிபலிக்கிறது. வாஷிங்டன்: பேக்கர் பதிப்பகம்.


# அலகு-2

## வரலாற்றின் நோக்கம் மற்றும் குறிக்கோள், அதனுடன் தொடர்புடைய பாடங்கள மற்றும் வரலாற்றின் வகைகள்

உள்ளடக்கம்


2.1. முன்னுரை
2.2. நோக்கங்கள்
2.3. வரலாற்றின் எல்லையும் இலக்கும் (Scope and Purpose of History)
  2.3.1. வரலாற்றின் எல்லை (Scope of History)
  2.3.2. புராண வரலாறு
  2.3.3. போர்களைப் பற்றிய வரலாறு
  2.3.4. பேரரசு பற்றிய வரலாறு
  2.3.5. பிரபஞ்ச வரலாறு
  2.3.6. சமயச் சார்பற்ற வரலாறு
  2.3.7. அறிவியல் வரலாறு
  2.3.8. அறிவொளி வரலாறு

குறிப்பு

2.3.9. கற்பனைக் காவிய வரலாறு
2.3.10. கூட்டிணைப்பு வரலாறு
2.4. வரலாற்றின் இலக்கு (Purpose of History)
2.5. வரலாறும் மற்ற சமூக அறிவியல்களும்
(History and other Social Sciences)
2.6. வரலாறும் அரசியல் விஞ்ஞானமும் (History and Political Science)
2.7. வரலாறும் பொருளாதாரமும் (History and Economics)
2.8. வரலாறும் சமூகவியலும் (History and Sociology)
2.9. வரலாறும் மானிடவியலும் (History and Anthropology)
2.10. வரலாறும் துணைத் துறைகளும் (History and Ancillary Disciplines)
2.11. வரலாறும் தொல்லியலும் (History and Archaeology)
2.12. வரலாறும் கல்வெட்டியலும் (History and Epigraphy)
2.13. வரலாறும் நாணயவியலும் (History and Numismatics)
2.14. வரலாறும் சுவடியியலும் (History and Manuscriptology)
2.15. வரலாற்றின் வகைகள் (Kinds of History)
2.15.1. காலவரன்முறை வரலாறு (Chronological History)
2.15.2. புவியியல் வரலாறு (Geographical History)
2.15..3. அரசியல் வரலாறு (Political History)
2.15.4. அரசியலமைப்பு வரலாறு (Constitutional History)
2.15.5. சட்ட வரலாறு (Legal History)
2.15.6. ராஜதந்திர வரலாறு (Diplomatic History)
2.15.7. ராணுவ வரலாறு (Military History)
2.15.8. சமுக வரலாறு (Social History)
2.15.9. பொருளியல் வரலாறு (Economic History)
2.15.10. பண்பாட்டு வரலாறு (Cultural History)
2.15.11. வாழ்க்கை வரலாறு (Biographical History)
2.15.12. பிரபஞ்ச வரலாறு (Universal History)
2.16. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்
2.17. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்
2.18. அத்தியாயச் சுருக்கம்
2.19. முக்கிய சொற்கள்
2.20. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
2.21. கூடுதல் வாசிப்புகள்

## 2.1. முன்னுரை

வரலாறு என்பது அறிவை வழங்கும் கண்ணோட்டத்தில் பல நோக்கங்களுக்காக சேவை செய்யும் ஒரு துறையாகும். இது நமது வரலாறு, முன்னோர்கள் மற்றும் மரபுகள் பற்றிய விழிப்புணர்வை

ஏற்படுத்துவதன் மூலம் நமக்கு அடையாள உணர்வை வழங்குகிறது, இது எவ்வாறு தேசங்களும் நாகரிகங்களும் தோன்றி காலப்போக்கில் மாற்றத்தின் மூலம் வளர்ந்தன என்பதை விளக்குகிறது, இது உலகின் பல்வேறு சமூகங்கள் மற்றும் மக்களைப் பற்றிய அறிவை வழங்குகிறது. . அரசியல் வரலாறு, இராஜதந்திர வரலாறு, சமூக வரலாறு, பொருளாதார வரலாறு, கலாச்சார வரலாறு, அறிவுசார் வரலாறு மற்றும் பல: சிறப்பு ஆய்வுப் பகுதியின் அடிப்படையில் பல வகையான வரலாறுகள் உள்ளன. வரலாற்றின் நோக்கம், நோக்கம் மற்றும் வகைகள் ஆகியவை இந்த அலகில் விவாதிக்கப்பட்டுள்ளன.

## 2.2. நோக்கங்கள்

**இந்த அத்தியாயத்தை படிப்பதன் மூலமாக கீழ்காண்பனவற்றை புரிந்து கொள்ள இயலும்**

- வரலாற்றின் நோக்கத்தையும் ellaiyaiyum purinthu kolla iyalum
- வரலாறு மற்றும் அதனுடன் தொடர்புடைய பாடங்களை அறிந்து கொள்ள இயலும்
- வரலாற்றின் வகைகளைப் பற்றி விவாதிக்கவ் இயலும்

## 2.3. வரலாற்றின் எல்லையும் இலக்கும்

### 2.3.1. வரலாற்றின் எல்லை (Scope of History)

வரலாற்றுக்கு வரம்புண்டா? அதன் எல்லை என்ன? வரலாறு உயிரோட்டமுடையது. வளரும் தன்மையது. தொடர்ச்சியானது. அரசன் இறந்தான் அரசன் நீடூழி வாழ்க என்று கூறுவதைப் போன்று தனி மனிதன் சாகலாம், ஆனால் மனித இனம் இறப்பதில்லை. அதேபோன்று அரசுகளும், சமூகங்களும், நாகரிகங்களும் தோன்றி மறைந்தாலும் வரலாற்று ஆறு இடம் காலம் ஆகிய இரு கரைகளுக்கிடையே ஓயாமல் ஓடிக்கொண்டிருக்கிறது! அதற்கேற்ப அதன் எல்லையும் இலக்கும் விரிவடைந்த வண்ணம் உள்ளன.

### 2.3.2. புராண வரலாறு

ஆதிகாலத்தில் வரலாற்றின் எல்லை மிகவும் குறுகியதாக இருந்தது. மரபு வழிக் கதைகளும், நாட்டுப் பாடல்களும், வாய்வழிச் செய்திகளும் வரலாறாகக் கருதப்பட்டது. புராண, இதிகாச, காப்பியக் கதைகள் வரலாற்று நிகழ்ச்சிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. இவை முழுத் தலைவர்கள், குறுநில மன்னர்கள், அரசர்கள், அவதாரங்கள் பற்றி

மிகைப்படுத்திக் கூறின. அவையாவும் நினைவாற்றல், கற்பனை, மரபு வழி வந்தவை. இவற்றுள் எந்த அளவுக்குக் கற்பனையும் வரலாறும் கலந்துள்ளன என்பதைப் பற்றி எவரும் கவலைப்படவில்லை. அவை அனைத்தும் வரலாறாகவே ஏற்றுக் கொள்ளப்பட்டன. இப்புராண வரலாற்றை மக்கள் வரலாறு (Folk History) என்று கூறலாம்.

### 2.3.3. போர்களைப் பற்றிய வரலாறு

பண்டைய கிரேக்க வரலாற்றாளர்கள் முதன் முதலாக வரலாற்றுக்கு எல்லை வகுத்தனர். வரலாறு போர்களைப் பற்றியது என்ற எல்லையை ஏற்படுத்தினர். ஹெரோடொட்டஸ் கிரேக்கப் - பர்சியப் போர்களைப் பற்றி எழுதி இரு நாடுகளுக்கிடையேயான மோதலை வரலாற்று எல்லைக்குள் கொண்டு வந்தார். அதேபோன்று தூசிடைடிஸ் கிரேக்க நகர் - நாடுகளுக்கிடையேயான போராட்டத்தை மையமாக வைத்து பெலொப்பனீசயப் போரைப் பற்றி எழுதினார். இவ்விரு வரலாற்றாளர்களும் சமகாலச் சம்பவங்களைப் பற்றியும் மனித நிகழ்ச்சிகளைப் பற்றியும் விவரித்தனர். இவர்களின் பங்களிப்பின் விளைவாக வரலாறு புராணப் பிடியிலிருந்து விடுபட்டு நாடுகளுக்கிடையேயான தொடர்புகளைப் பற்றிய எல்லைக்குள் கொண்டு வரப்பட்டது.

### 2.3.4. பேரரசு பற்றிய வரலாறு

கிரேக்கர்களைப் பின்பற்றிய ரோமானிய வரலாற்றாளர்கள் மேலும் ஒரு படி மேலே சென்று ரோம் நகரம் பேரரசாக விரிவடைந்த வரலாற்றை எழுதினர். வரலாற்றின் எல்லை உலக நாடுகளை உள்ளடக்கியதாயிற்று. வரலாற்றுக் கருத்தியல் விரிவடைந்தது. ரோமின் தேசிய எழுத்தாளரான டைட்டஸ் லிவி ரோமின் ஈடுயிணையற்ற எழுச்சி பற்றி அந்நகரம் துவங்கப்பட்டதிலிருந்து அவரது காலம் வரை எழுதினார். கொர்னீலியஸ் டாசிடஸ் அரசியல் வரலாறு, பிரிட்டனில் ரோமானியப் போர்கள், ஜெர்மானியர் பண்பாடு, அரச பரம்பரை பற்றி விவரித்தார். ஜூலியஸ் சீசர் போர், அமைதி, பழக்க வழக்கங்கள் பற்றிக் கூறினார். ரோமானியர்களின் விரிந்த கண்ணோட்டத்தின் காரணமாக வரலாற்றுக் கருத்தியல் தெளிந்த துல்லியமான நிலையை அடைந்ததாகக் கூறுகிறார் ஆர்.ஜி.காலிங்வுட்.

### 2.3.5. பிரபஞ்ச வரலாறு

இடைக்கால ஐரோப்பியக் கிறித்துவ வரலாற்றாளர்கள் வரலாற்றின் பரப்பெல்லைக்குப் புதிய பரிமாணத்தைக் கொடுத்தனர். அவர்கள் வரலாற்றுக்கு கடவுள் கொள்கை விளக்கமளித்தனர். தெய்வத் தீர்ப்பு (Divine Will) தான் மனித நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதாக நம்பினர். மனிதனை மையமாகக் கொண்ட (Ethnocentric) வரலாறு எழுதுவதற்கு பதிலாகக் கடவுளை மையமாகக் கொண்டு (Theocentric) கொண்ட வரலாற்றை வரைந்தனர். இறைவன் உலக மக்கள்

**குறிப்பு**

அனைவருக்கும் பொதுவாகையால் வரலாறும் மனித இன வாழ்வைப் பற்றியதாக இருக்க வேண்டும் என்றெண்ணிப் பிரபஞ்ச வரலாற்றை (Universal History) எழுதினர். நில உலகும் மேலுலகும் வரலாற்று எல்லைக்குள் கொண்டு வரப்பட்டன. இந்த நோக்குடன் புனித அகஸ்டின் கடவுள் நகரம் (The City of God) என்ற நூலை எழுதினார். கிறித்துவ வரலாற்று வரைவியல் இன, மொழி, மத, நாட்டு வேறுபாடின்றி அகிலுலகப் பொதுமை ஆயிற்று.

### 2.3.6. சமயச் சார்பற்ற வரலாறு

மறுமலர்ச்சிக்கால வரலாற்றாளர்கள் கிரேக்க - ரோமானிய வரலாற்று வரைவியல் முறையை மீண்டும் புதுப்பித்தனர். மனித நிகழ்ச்சிகளை மட்டுமே மையமாக வைத்து வரலாறு எழுதினர். இடைக்கால இறையியல் அணுகுமுறையை நிராகரித்து சமயச் சார்பற்ற வரலாற்றை வரைந்தனர். நிக்கோலோ மாக்கியவெல்லி தனது இளவரசன் (The Prince) என்ற நூலில் இத்தாலிய நகர் நாடுகளின் அரசியல் அமைப்பு மற்றும் செயல்பாடுகளைப் பற்றி விவரித்தார். வரலாற்று அறிவை மேலும் விரிவுபடுத்தினார். நிகழ்ச்சிகளுக்குக் காரண - காரிய விளக்கமளித்தார். மறுமலர்ச்சிக் காலத்தில் வரலாற்று எல்லையின் சமயச் சார்பற்ற பக்கம் மேலும் விரிவடைந்தது.

### 2.3.7. அறிவியல் வரலாறு

17-ம் நூற்றாண்டு அறிவியல் நூற்றாண்டு. அறிவுக் காலத்தில் இயற்கை விஞ்ஞானம் (Natural Science) ஏற்றம் பெற்றது. அறிவாற்றல் புரட்சி ஏற்பட்டது. பரிசோதனை முறை பின்பற்றப்பட்டது. பரிசோதனைக்கு உட்படாத ஆதாரங்கள் நிராகரிக்கப்பட்டன. சர் பிரான்சிஸ் பேக்கன், ரெனி டெக்கார்டஸ் போன்றோர் புதிய அறிவியல் அணுகுமுறையைக் கையாண்டனர். ஜான் லாக், டேவிட் ஹியூம், பிஷப் பெர்க்லே, கியாம் படிஸ்டோ விக்கோ போன்றோர் வரலாற்றுக்கு விஞ்ஞான விளக்கம் கொடுத்தனர். கடந்த காலம் நம்பகமான உறுதி செய்யப்பட்ட ஆதாரங்களைக் கொண்டு அறிவியல் கண்ணோட்டத்தோடு ஆராயப்பட்டது. வரலாற்று வரைவியலில் புதிய திருப்பு முனை ஏற்பட்டது. வரலாற்றின் அறிவியல் எல்லை விரிவடைந்தது.

### 2.3.8. அறிவொளி வரலாறு

18-ம் நூற்றாண்டு அறிவொளிக் காலம் (Age of Enlightenment) என்று அழைக்கப்படுகிறது. அறிவாற்றல் புரட்சியின் விளைவே அறிவொளிக் காலம். இக்காலத்தில் அறிவே சமூகப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான திறவுகோல் என்று கருதப்பட்டது. அறிவொளிக்கால வரலாற்றாளர்கள்

வரலாற்றுக்குப் பகுத்தறிவு மற்றும் பயன்பாட்டு விளக்கம் கொடுத்தனர். மாண்டெஸ்க்யு வரலாற்றில் அரசியல் அமைப்புகளுக்கும், பண்பாட்டுக்கும் முக்கியத்துவம் அளித்தார். வால்ட்டேர் வரலாற்றை சமயச் சார்பற்ற கண்ணோட்டத்துடன் எழுதினார். ரூசோ மனித உரிமைக்கு முன்னுரிமை கொடுத்தார். டேவிட் ஹியூம் சமுக உறவுகள், கலை, இலக்கியம், ஒழுக்கம் ஆகியவற்றுக்கு சிறப்பிடம் அளித்தார். ஆடம் ஸ்மித் பொருளாதார விளக்கத்துக்கு வரலாற்றைப் பயன்படுத்தினார். எட்வர்டு கிப்பன் ரோமின் அழிவையும் வீழ்ச்சியைப் பற்றி எழுதி அறிவொளிக்கால புதிய வரலாற்றின் உச்ச கட்டத்தை எட்டினார். ஜெரிமி பெந்தம், ஜேம்ஸ் மில், ஜான் ஸ்டுவர்ட் மில் பயன்பாட்டுக் கண்ணோட்டத்தோடு வரலாற்றை அணுகினர். இவற்றின் விளைவாக வரலாற்றின் எல்லை பல முனைகளிலும் விரிவாக்கம் பெற்றது.

## 2.3.9.கற்பனைக் காவிய வரலாறு

19-ம் நூற்றாண்டைப் பொதுவாகக் கற்பனைக் காவியக் காலம் (Age of Romanticism) எனக் கூறலாம். இக்காலத்தில் மனித உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. கற்பனைக் காவியம், தேசியம், தாராளக் கொள்கை, யதார்த்தவாதம், பொருண்மை வாதம், நேர்க்காட்சி வாதம் போன்ற கருத்து விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. தனித்துவம், மனித உரிமைகள், உணர்ச்சிகள், கற்பனை, இயற்கை நியதி, இயல்பான மனித நடத்தை முன்னுரிமை பெற்றன. கடந்த காலம் கற்பனைக் காவியப் பின்னணியில் விளக்கப்பட்டது. ஹெகல், காண்ட், ஷில்லர், பிக்டே, ஷெல்லிங், காம்டே, காரல் மார்க்ஸ் போன்றோர் கற்பனைக் காவியக்கால வரலாற்றுத் தத்துவஞானிகள் ஆவர். தற்கால வரலாற்றின் தந்தை என்று போற்றப்படும் ராங்கே சார்பற்ற வரலாற்று ஆராய்ச்சிக்கான அடித்தளத்தை அமைத்தார். குறிப்பாக கற்பனைக் காவியக் காலத்தில் வரலாற்றுத் தத்துவத்தின் எல்லை விரிவடைந்தது.

## 2.3.10. கூட்டிணைப்பு வரலாறு

20-ம் நூற்றாண்டைக் கூட்டிணைப்புக் காலமாகக் (Age of Synthesis) கருதலாம். இக்காலத்தில் அறிவாற்றல், அறிவொளி, சமயச் சார்பின்மை, கற்பனைக் காவியம், உடன்பாட்டுச் சிந்தனை, பொருண்மைவாத நதிகள் இலட்சியக் கடலில் கலக்கின்றன. இவற்றின் நற்பண்புகளின் திரட்சி அல்லது தொகுப்பே (Eclectic) இந்நூற்றாண்டு வரலாற்று வரைவியலின் சிறப்பாகும். இருபெரும் உலகப் போர்களுக்கிடையேயும், அதற்குப் பின்னரும், உலக ஒற்றுமை, பன்னாட்டுச் சார்புடைமை, சர்வதேசப் பண்பாடு பற்றிய உணர்வுகள் தலை தூக்கின. வரலாற்றாளர்கள் உலக நாகரிகங்களின் எழுச்சி வீழ்ச்சி பற்றி ஆராயத் தொடங்கினர். வரலாற்று நிகழ்ச்சிகளிடையே ஒற்றுமையையும், ஒழுங்கையும், வடிவத்தையும் கண்டனர். ஸ்பெங்லர், குரோசே, சொரோக்கின், டாயின் போன்றோர்

**குறிப்பு**

இலட்சிய இணைப்பு வரலாற்று வரைவியல் கலையை வளப்படுத்தினர். வரலாற்றின் உலகளாவிய எல்லை உறுதி செய்யப்பட்டது.

**மதிப்பீடு**

வரலாறு நெகிழும் தன்மையுடையது. கால மாற்றங்களுக்கேற்ப மாறவல்லது. வரலாறு ஒரு காலக் கண்ணாடி. எனவே காலத்தின் தன்மை, சிந்தனை, செயல்பாடு ஆகியவற்றுக்கேற்ப வரலாற்றின் எல்லை விரிந்தும் சுருங்கியும் வந்துள்ளது. அறிவு, நம்பிக்கை, உணர்ச்சி ஆகிய மூன்றும் பல்வேறு கால கட்டங்களில் தனித்தும், சேர்ந்தும் வரலாற்றின் எல்லையைத் தீர்மானித்துள்ளன. பண்டைய கிரேக்க - ரோமானிய வரலாற்றாளர்கள் அறிவு பூர்வமாக வரலாற்றை எழுதினர். இடைக்கால வரலாற்றாளர்கள் நம்பிக்கையின் அடிப்படையில் வரலாற்று விளக்கமளித்தனர். மறுமலர்ச்சி - அறிவொளிக் காலத்தில் மீண்டும் அறிவாற்றலுக்கு சிறப்பிடம் அளிக்கப்பட்டது. கற்பனைக் காவியக் காலத்தில் மனித உணர்வுகள் சிறப்புற்றன. இந்த நூற்றாண்டில் அறிவு, நம்பிக்கை, உணர்ச்சி ஆகியவை ஒருங்கிணைந்துள்ளன. இதை வரலாற்றுச் சங்கமம் என்றழைக்கலாம். சுருங்கக் கூறின் வரலாற்றின் எல்லைக்கு எல்லையில்லை!

## 2.4. வரலாற்றின் இலக்கு (Purpose of History)

வரலாற்றின் இலக்கு என்ன ? வரலாற்றுக்கு நோக்கம் உண்டா? அதாவது வரலாற்று நிகழ்வுகள் குறிப்பிட்ட இலக்கை எட்டுவதற்காக நிகழ்கின்றனவா? வரலாற்றின் எல்லையைப் போன்றே அதன் இலக்கு பற்றிய விளக்கமும் காலத்துக்குக் காலம் மாறுபடுகின்றது. பொதுவாக வரலாற்று நிகழ்ச்சிகளை இரு வகையாகப் பிரிக்கலாம். 1) திட்டமிடப்படாமல் நிகழ்பவை. இவை திடீர்ச் செயல்கள். உணர்ச்சிவயப்பட்டு உடனடியாக மேற்கொள்ளப்படுபவை. இலக்குத் தெளிவின்றி நிகழ்பவை. 2) திட்ட மிட்டு நிகழ்பவை. இவை ஆழ்ந்து அராய்ந்தபின் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள். மனதளவில் எண்ணிப் பார்த்து, காரண - காரிய தொடர்புகளை ஆராய்ந்து, துணிந்து செய்யப்படுபவை. இத்தகைய செயல்களே வரலாற்றின் பொருளடக்கம் (Subject Matter of History) என்று கூறுகிறார் காலிங்வுட்.

கற்கும் நோக்கம் திட்டமிட்ட வரலாற்று நிகழ்ச்சிகளிலிருந்து அவற்றின் நோக்கங்களைத் தெரிந்து கொள்ளலாம். உதாரணமாக அரசியல் நிகழ்வுகளை வரலாற்று ரீதியாக ஆராயலாம். ஏனெனில் இவை நோக்கத்தோடு மேற்கொள்ளப்படுபவை. இவை இலக்கு நோக்கியவை. இவற்றின் வெற்றி தோல்விகள் கொள்கை நிறைவேற்றத்தைப் பொறுத்தே இருக்கும். அதே போன்று இராணுவ நடவடிக்கைகளும் செயல்நோக்குடன் நிறைவேற்றப்படுகின்றன. இராணுவ ஆவணங்களைக் கொண்டு இவற்றை மீண்டும் புதுப்பிக்க முடியும். பொருளாதார மற்றும் சமூக

நடவடிக்கைகளும் இலக்கு நோக்கியவையேயாகும். இவை யாவும் அறிவுக்குப் புலப்படக்கூடிய வரலாறு ஆகும்.

குறிப்பு

கற்பிக்கப்படும் நோக்கம் திட்டமிடப்படாத வரலாற்று நிகழ்ச்சிகளின் நோக்கத்தை அறிவது கடினம். இவை தற்செயல் நிகழ்வுகளாகையால் இவற்றின் இலக்கு கற்பிக்கப்படுகிறது. வரலாற்றாளர்கள் உருவாக்கும் கருத்தியல்களுக்கு ஏற்ப வரலாற்று நோக்கங்களை ஊகங்களாகக் கற்பித்துக் கூறுகின்றனர். அதனால் தான் வரலாற்றின் இலக்கு பற்றி ஒருமித்த கருத்து உருவாகவில்லை. உதாரணமாக இறை நிகழ்ச்சிகள் அல்லது இறைவன் பெயரால் மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சிகளின் நோக்கங்களை வரையறுப்பது இயலாத காரியம். இவை வரலாற்று வரம்புக்குள் வராது. இறைமைக் கோட்பாடு, தொடர் நிகழ்ச்சிகள் கோட்பாடு, நேர்க்கோட்டுக் கோட்பாடு, சுழற்சி கோட்பாடு, புவியியல் கோட்பாடு, மனித இனத் தோற்றக் கோட்பாடு, மாமனிதர்கள் கோட்பாடு, வடிவியல் கோட்பாடு போன்றவை கற்பிக்கப்பட்ட நோக்கங்களோடு வரலாற்றுக்குக் கொடுக்கப்படும் தத்துவ விளக்கங்களாகும்.

## 2.5. வரலாறும் மற்ற சமூக அறிவியல்களும் (History and other Social Sciences)

வரலாற்றில் மானுடத்தின் ஒட்டு மொத்த கூட்டறிவு அடங்கும். வரலாறு மனித விஞ்ஞானத்தின் அச்சாணி ஆகும். எல்லா சமூக விஞ்ஞானங்களுக்கும், கலைத்துறைப் பாடங்களுக்கும் வரலாறு தான் அடிப்படையாக அமைகிறது. ஆதலின் அவற்றிற்கிடையேயான உறவு நெருக்கமானவையாம். மனித வாழ்க்கையின் வெவ்வேறு அம்சங்களும் அனுபவங்களும் வரலாற்றுப் பாடங்களில் மேற்கொள்ளப்படுவதால், எல்லா சமூக விஞ்ஞானங்களும் தங்களின் அடிப்படைகளை வரலாற்றிலிருந்து பெறுவதுடன், அவை வரலாற்றைச் சார்ந்திருக்கின்றன. “வரலாறு என்னும் மாளிகையில் எல்லா பாடங்களும் வகிக்கின்றன” என்ற ட்ரெவல்யனின் கூற்று வரலாறும் மற்ற பாடங்களும் கொண்டிருக்கும் தொடர்பினை விளக்கும். வரலாற்றுடன் தொடர்புடைய சமூக விஞ்ஞான பாடங்களான அரசியல் விஞ்ஞானம், பொருளாதாரம், சமூகவியல், மானிடவியல் ஆகியவற்றுடன் அது கொண்டிருக்கும் தொடர்புகளை சுருங்க காணலாம்.

## 2.6. வரலாறும் அரசியல் விஞ்ஞானமும் (History and Political Science)

அரசியல் விஞ்ஞானம் என்பது அரசியல் கோட்பாடுகள், நிறுவனங்கள் ஆகியவற்றைப் பற்றியதாம். அது அரசியல் வரலாற்றின் ஒரு அம்சமாகிய முறையான அரசு மற்றும் அதன் ஆட்சிமுறை ஆகியவற்றைப் பற்றிய ஆய்வே அரசியல் விஞ்ஞானம் ஆகும். அரசியல் விஞ்ஞானத்திற்குத்

தேவையான அடிப்படைக் கருத்தினை அளிப்பது வரலாறே ஆகும். அதே போன்று அரசியல் நிறுவனங்களின் பரிணாம வளர்ச்சியையும் அரசியல் அதிகாரத்தினைச் செலுத்துதலையும் சீராக புரிந்து கொள்ள வரலாற்றறிவு அத்தியாவசியமாகிறது. அரசுகளின் தோற்றம் மற்றும் வளர்ச்சியினைப் பற்றிய உதாரணங்கள் வரலாற்றில் பலப்பல உண்டு. பண்டைக்கால கிரேக்க, ரோமானிய இந்திய அரசுகள் மற்றும் மறுமலர்ச்சிக்கான தேசிய அரசுகளின் தோற்றத்தினையும், வளர்ச்சியினையும் உலக வரலாறு எடுத்தியம்புகிறது. இந்த வரலாற்று அனுபவ அடிப்படையில் தான் அரசியல் அறிஞர்கள் கோட்பாடுகளை உருவாக்கினர். கிரேக்க அரசியல் நிறுவனங்களின் வரலாறு தான் பிளாட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற அறிஞர்களை சிறந்த கோட்பாடுகளையும், உண்மைகளையும் இயற்ற வழிவகுத்தது. தன் காலத்து வெவ்வேறான இத்தாலிய அரசுகளின் அரசியல் முறைகளைப் பற்றிய ஆய்வு தான் மாக்கியவல்லி என்ற அறிஞருக்கு இளவரசன் (The Prince) என்ற நூலை எழுத வழி வகுத்தது. மேலை மற்றும் கீழை நாடுகளின் அரசியல் முறைகளைப் பற்றிய வரலாற்றறிவு மான்டெஸ்க்யூவை சட்டங்களின் உள்ளுணர்வு என்ற சிறந்த நூலைப் படைக்க வைத்தது. அரசியல் கோட்பாடுகளை விளக்கக் கூடிய ரூசோவின் சமுதாய ஒப்பந்தம், லாக்கின் சிவில் அரசாங்கம் (Civil Government) ஆஸ்டினின் இறைமை என்ற நூல்களெல்லாம் வரலாற்றறிவின் அடிப்படையிலேயே தோற்றுவிக்கப்பட்டவையாம். மேலும் இந்நூல்கள் வரலாற்றின் போக்கில் ஏற்படுத்திய தாக்கங்கள் மகத்தானவை. ரூசோவின் சமுதாய ஒப்பந்தம் 18ம் நூற்றாண்டு பிரெஞ்சு சமுதாயத்தில் ஏற்படுத்திய விழிப்புணர்வு நோக்கத்தக்கது.

மாபெரும் வரலாற்றாசிரியர்கள் மற்றும் அறிஞர்களின் சில கூற்றுக்கள் வரலாற்றுக்கும் அரசியல் விஞ்ஞானத்திற்கும் உள்ள தொடர்பினை நன்கு புலப்படுத்தும். வரலாறு என்பது நடைபெற்ற அரசியலே. மேலும் அரசியல் என்பது நிகழ்கால வரலாறே என்னும் கூற்றுகள் இரண்டிற்கும் உள்ள தொடர்பினை விளக்கும். சீலியின் (Seely) கூற்றான "அரசியல் விஞ்ஞானம் இல்லாத வரலாறு பயனற்றதாகும், வரலாறு இல்லாத அரசியல் விஞ்ஞானம் ஆதாரமற்றதாகும்" என்பது இரு பாடங்களுக்கிடையிலான நெருங்கிய மறவினை நன்குணர்த்தும். அரசியல் கலையை அறிவதில் தான் வரலாற்றின் பயனமைகிறது என்று பொலிபியஸ் (Polybis) அனுபவப் பூர்வமாகக் கருத்தளிக்கிறார். ""வரலாறு என்னும் ஆற்றின் கீழ் மணற்பகுதியில் பொன்தாதுக்களை வடித்து நிற்பது அரசியல் என்னும் கலையொன்று தான்" என்று ஆக்டன் எழுதுகிறார். மேற்கூறிய கருத்துக்கள் வரலாற்றுக்கும் அரசியல் விஞ்ஞானத்திற்குமிடையே உள்ள தொடர்பினை விளக்குவதுடன் அவை எவ்வாறு ஒன்றோடொன்று வளர்ந்தும், பிணைந்து முள்ளன என்பதனைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

குறிப்பு

## 2.7. வரலாறும் பொருளாதாரமும் (History and Economics)

மனிதனின் பொருளாதார நடவடிக்கைகள் வரலாற்று வளர்ச்சி களுடன் நேரடி தொடர்பு கொண்டவையாம். வெவ்வேறு காலத்தில் மனிதனின் பொருளாதார நடவடிக்கைகள், செயல்கள், பொருளாதார நிறுவனங்களின் வளர்ச்சி, பொருளாதார கோட்பாடுகளின் உருவாக்கம் ஆகியவற்றைப் பற்றியும் புரிந்து கொள்ள வரலாற்றறிவு அவசியமாகிறது. ஆதலின் பண்டைக்கால மற்றும் இடைக்கால ஆவணங்கள், கல்வெட்டுக்கள் ஆகியவற்றில் பொதிந்து கிடக்கும் பொருளாதாரம் தொடர்பான வரலாற்றுச் சான்றுகள் கடந்த கால பொருளாதாரத்தினை ஆய்வு செய்யும் அறிஞர்களுக்கு மிகவும் பயன்படும். அதே போன்று வரலாற்று வரைவியலாளர்கள் பொருளாதாரக் கோட்பாடுகளை மனதிற் கொள்ள வேண்டும். உலகின் வெவ்வேறு பகுதிகளில் 1930 ஆம் ஆண்டுகளில் தோன்றிய பொருளாதார (நுஉழழெஅைஉ னுநிசநளளைழெ) மந்தத்தையும் இரண்டாம் உலகப்போருக்குப்பிறகான பொருளாதார வளர்ச்சிகளையும் இன்றைய வரலாற்றாசிரியர்கள் புறக்கணிக்க முடியாது.

காரல் மார்க்ஸ் பொருள் முதல் வாதத்தின் (Materialistic interpretation) அடிப்படையில் வரலாற்றுக்கும் விளக்கம் கொடுக்க முற்பட்டதிலிருந்து வரலாற்றுப் பார்வையிலும், வரைவியலிலும் ஒரு புதிய நோக்கு ஏற்பட்டது எனலாம். அதாவது பொருளாதாரச் செய்கைகள் மற்றும் பொருளாதாரக் காரணிகளில் வரலாற்றின் ஒருங்கிணைப்பைக் காணலாம் என்பது மார்க்ஸின் கருத்து. பொருளாதார செயல்பாடுகளின் விளைவே வரலாற்று நிகழ்ச்சிகள் என்பார் அவர். சமுதாய மாற்றத்தினை நிர்ணயிப்பது பொருளாதாரக் காரணிகளே என்பார் சாலிக்மேன் (Saligman) என்ற அறிஞர். அதாவது வரலாற்று நிகழ்ச்சிகளுக்குப் பொருளாதார விளக்கங்கள் கொடுப்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் பொருளாதாரமே வரலாறாகிவிடாது. பொருளாதார ரீதியாக வளர்ச்சியுற்றுள்ள சமுதாயங்கள் எல்லாம் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. எனவே வரலாற்றாசிரியன் பொருளியல் அறிவு பெற்றிருத்தல் அவசியமாகும்.

## 2.8. வரலாறும் சமூகவியலும் (History and Sociology)

சமூக அறிவியல்களில் ஒன்றான சமூகவியல் (Sociology) அறிவியல் பூர்வமாக சமுதாயத்தினை ஆய்வு செய்கிறது. வரலாறோ சமுதாயங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்களைப் பற்றிய ஆய்வாகும். அகஸ்டஸ் காம்டே சமூகவியலைத் தனிபாடமாகப் பாவிப்பதற்கு முன்பாக வரலாறும் சமூகவியலும் ஒன்றோடொன்று நெருங்கியத் தொடர்பு கொண்டிருந்தது. சமூகவியலின் கருத்துப் பரிமாற்றங்கள் அதிகரித்துள்ளன. வரலாற்று வரைவியலார்கள் சமூகவியல் கோட்பாடுகளை மனதிற் கொள்ள வேண்டும். சமுதாய

**குறிப்பு**

நிறுவனங்களைத் தங்களது ஆய்வுக்குட்படுத்திய சமூகவியல் வல்லுநர்களான எமிலி துர்கீம் (EmileDurkheim) மற்றும் மாக்ஸ்வெபர் (Maxweber) ஆகியோரின் செல்வாக்கினை அனுபவத்தின் வரலாற்றில் காணலாம். வரலாற்றுச் செய்திகளை அனுபவத்தின் அடிப்படையில் வரலாற்றாசிரியர்கள் அணுகுகின்றனர். ஆனால் சமூகவியலாளர்கள் அதே வரலாற்று உண்மைகளைப் பற்றி அறிவியலின் அடிப்படையில் தர முற்படுகின்றனர். சமூக வளர்ச்சிக்கான பொதுவான விதிகளைக்காண விரும்பும் சமூகவியலாளர்கள் வரலாற்றைச் சமூகப் பரிமாணத் தோற்றத்தின் முதன்மையான பதிவாக கருதுகின்றனர். சமூகப் பரிமாண வளர்ச்சிக்கு விளக்கம் தரும் சமூகவியலை வரலாற்றாசிரியர்கள் ஆர்வத்துடன் வரவேற்கின்றனர். சமூகவியல் வரலாற்று நிகழ்ச்சிகளிடையே காணப்படும் பொதுவான கூறுகளை ஆய்வு செய்ய முற்படுகிறது. ஆனால் வரலாறு நடைபெற்ற நிகழ்ச்சிகளின் தனித்தன்மைகளை விளக்குகிறது.சமூகவியல் கோட்பாடுகளின் அடிப்படையில் இந்திய சமுதாய வரலாற்றினை ஆராயும் பொழுது. முழுமையான மற்றும் சீரான வரலாற்றை வரைய முடியும். சமுதாய நிறுவனங்களான அடிமைமுறை சாதிமுறை மற்றும் சமுதாய பழக்க வழக்கங்களான திருமண முறைகள் ஆகியவற்றினைச் சமூகவியலின் தொடர்புடன் ஆராயும் போது பயன் மிகும். வரலாறும் சமூகவியலும் சமுதாயத்தில் வாழும் மனிதனைப் பற்றியதால் அவை ஒன்றுடன் ஒன்று சார்ந்தும் உபயோகமுள்ளதாகவும் உள்ளது. வரலாற்றுக்குச் சமூகவியலின் தேவையைவிட சமூகவியலுக்கு வரலாற்றின் தேவை அதிகமே என்று கருத்தளிக்கிறார் ரெனியர் என்ற அறிஞர்.

## 2.9. வரலாறும் மானிடவியலும் (History and Anthropology)

வரலாறு, மானிடவியல் ஆகிய இருபாடங்களுமே மனிதர்களைப் பற்றியதாம். மனிதனைப் பற்றிய விஞ்ஞானமே மானிடவியல். அது வரலாற்றுடன் குறிப்பாக பண்டைக்கால வரலாற்றுடன் சிறப்பான தொடர்பு கொண்டுள்ளது. உயிரியல் பின்னணியுடன் மனித இன வரலாற்றை அறிவதற்கு மானிடவியல் பெரிதும் துணை புரிகிறது. மனித இனங்களைப் பற்றிய வேறுபாடுகள், வெவ்வேறு கூறுகள் அவை வரலாற்றில் ஏற்படுத்தும் தாக்கங்கள் ஆகியவற்றை நோக்கும் பொழுது இருபாடங்களுக்கு மிடையிலான தொடர்பினை அறியலாம். பண்டைய வரலாற்று மையங்களில் கிடைக்கப் பெற்ற எலும்புக்கூடுகள், மண்டை ஓடுகள் ஆகியவற்றினைப் பற்றி மானிடவியலாரின் அறிக்கைகள் தொல்பொருள் ஆய்வாளருக்கும், வரலாற்றாசிரியர்களுக்கும் பண்டைக்கால வரலாற்றினை மானிடவியல் மற்றும் மனித இன பின்னணியில் புரிந்து கொள்ள வழிவகுக்கும். இது போன்ற ஆய்வுகள் சிந்து வெளி மையங்களான ஹரப்பா, மொஹஞ்சதாரோ, லோத்தல் மற்றும் காளிபங்கன் ஆகிய இடங்களிலும் கற்கால மையங்களான பர்ஸோம், மெகாலிதிய மையங்களான சாதூர், அமிர்த மங்கலம் போன்ற

இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வகை ஆய்வுகள் பண்டைய இனங்களுக்கும் இன்றைய மக்கட்தொகைக்கும் உள்ள தொடர்பு மற்றும் தொடர்புவிடப்பட்டநிலை, குடிபெயர்ப்பு பற்றிய செய்திகள் ஆகியவற்றை வரலாற்றாய்வாளருக்கு அளிக்கின்றன. மேலும், சமுதாய மற்றும் பண்பாட்டு நிறுவனங்கள், பழக்க வழக்கங்கள், மரபுகள் ஆகியவற்றைப் பற்றிய மானிடவியல் பார்வை வரலாற்று வரைவியலுக்குப் பெரிதும் பயன்படும்.

## 2.10. வரலாறும் துணைத் துறைகளும் (History and Ancillary Disciplines)

உண்மைகளைக் கண்டறிய முனையும் வரலாற்றாசிரியரின் கடமை தவறைத் தவிர்ப்பதாகும். அது அவருடைய பணியின் முக்கிய விதிமுறையாகும். வரலாற்று உண்மைகளைக் கண்டறியும் பணியில் வரலாற்றாசிரியர்கள் தனக்கு உதவி புரியும் வரலாற்றின் துணை அறிவியல்களைச் சார்ந்து இருக்க வேண்டியுள்ளது. அவை உண்மையில் அறிவியல்களைச் சாராதிருப்பினும் அவை அறிவாக்கத்தின் தனித்துறைகளாகும். அவற்றினை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வது அவசியமாகும். அந்த துறைகளில் வரலாற்றாசிரியரின் முழுமையான அறிவு பெறாவிடினும் அவற்றின் கண்டுபிடிப்புகளை வரலாற்று வரைவியலில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வரலாற்றாசிரியனின் தொழிலுக்கு அவை கருவிகளாகப் பயன்படுகின்றன. அத்துறைகளாவன தொல்லியல், கல்வெட்டியல், காசியல் மற்றும் சுவடியியல் ஆகும்.

## 2.11. வரலாறும் தொல்லியலும் (History and Archaeology)

பண்டைக்கால மக்கள் விட்டுச் சென்ற சான்றுகளின் (relics) அடிப்படையில் அவர்களது வாழ்க்கை முறைகளைப் பற்றியும் அம்மக்களது நாகரிகத்தைப் பற்றியும் எடுத்தியம்புவது தொல்லியலாகும். தொல்லியல் தன்னகத்தே கல்வெட்டியியல், நாணயவியல், நினைவுச் சின்னங்களைப் பற்றிய பாடம் என்று பலகிளை இயல்களைக் கொண்டுள்ளது. தொல்லியலின் இரு முக்கியக் கள முறைகள் மேற்பரப்பளவு ஆய்வும; (exploration) மற்றும் அகழாய்வும் (excavation) ஆகும். இந்த இரு கள முறைகளின் (கறைடன அநவாழனள) அடிப்படையில் தொல்லியல் சான்றுகள் வெளிப்படுகின்றன. அவற்றை முறையாகப் பயன்படுத்த வேண்டியது வரலாற்றாசிரியரின் கடமையாகும். உண்மையில் வரலாற்று மாணவர்களும், வரலாற்றாசிரியர்களும் தொல்லியலை நுகர்வோர் ஆவர். மனித வரலாற்றில் மனிதன் எழுத்தறிவு பெறுவதற்கு முன்பான காலத்து வரலாற்றினை அறிய தொல்லியல் முழுமையாகப் பயன்படுகிறது. கற்காலத்திலிருந்து இன்றைய விஞ்ஞான

காலம் வரையில் மனிதர்கள் உபயோகித்து விட்டுச் சென்ற பொருட்களின் அடிப்படையில் வரலாற்றினை (Prehistory) அறிய தொல்லியல் பயனாகிறது.

**குறிப்பு**

இந்தியாவில் எழுத்துச் சான்றுகளின் அடிப்படையில் அறிய வரும் வரலாறு நூறில் ஒரு பங்கு என்றால் மிகையாகாது. பெரும்பான்மையான வரலாறு, குறிப்பாக பண்டைக் கால மற்றும் இடைக்கால வரலாறு, தொல்லியல் சான்றுகளின் அடிப்படையிலேயே அமைகின்றன. தொல்லியல் அகழாய்வு சான்றுகளின் அடிப்படையில் தான் இந்திய வரலாற்றின் துவக்க நாகரிகமான சிந்துவெளி நாகரிகத்தினை அறிகிறோம். இலக்கியத்தின் அடிப்படையிலான வரலாறு ஒரு குறிப்பிட்ட நாகரிகத்தின் முழுமையான நிலையை எடுத்தியம்பியது. ஒவ்வொரு காலகட்டத்திலும் வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய பொருள்களை, வெளிக்கொணர்ந்து, அவற்றின் மூலம் வரலாற்றினை அறிய முடியுமென்றால், அது தொல்லியல் அகழாய்வினால் மட்டுமே இயலும். நாடாண்ட மன்னர்களது வரலாற்றினை அறிய தொல்லியல் துணை நிற்கிறது. வரலாற்று சான்றுகளின் கருவூலங்களாகிய கல்வெட்டுகளும், நாணயங்களும், மற்ற நினைவுச்சின்னங்களும் அகழாய்வில் கிடைத்துள்ளன. தமிழகத்தில் கங்கை கொண்ட சோழபுரத்தில் சோழர்கால மாளிகை இருந்ததை அகழாய்வு வாயிலாக வெளிக் கொணரமுடிந்தது. மௌரியர் காலத்து அரண்மனையையும் அவ்வாறே அறிய முடிந்தது. மனித சமுதாயத்தின் பல்வேறு பிரிவினர் மேற்கொண்டிருந்த தொழில்களைக் கூட தொல்லியல் கள முறைகளால் அறிய முடிந்தது. மக்களின் கலை உணர்வு, உணவுமுறை, வாணிகம், இறுதிச் சடங்கு, சமய வளர்ச்சி, மொழி எழுத்துக்களின் வரிவடிவம், மனிதனது இனம், அயல்நாட்டுத் தொடர்பு ஆகியவற்றினைத் தொல்லியல் சான்றுகள் மூலமாக கண்டறியலாம். வரலாற்றாசிரியர்களும், தொல்லியல் நிபுணர்களும் சான்றுகளை, கண்டறிவது மட்டுமல்லாமல் அவற்றினை ஆராய்ந்து சரியான விளக்கத்துடன் கடந்தகால நிகழ்ச்சிகளை வரலாறாக வரைகின்றனர்.

## 2.12. வரலாறும் கல்வெட்டியலும் (History and Epigraphy)

வரலாற்றினை வரைய துணைபுரியும் மூலச்சான்றுகளில் முக்கியமான கல்வெட்டுகள், செப்புப்பட்டயங்கள் ஆகியவற்றைப் பற்றிய பாடமே கல்வெட்டியலாகும். கல்வெட்டுகள் பண்டைக்கால, இடைக்கால மற்றும் 17ம் 18ம் நூற்றாண்டுகளில் ஆட்சி புரிந்த மன்னர்களது வரலாற்றினைத் தெரிந்து கொள்வதற்குத் துணைபுரிகின்றன. அவ்வரசர்களது ஆட்சியின் தோற்றம், வம்சவழி, அது எங்கெல்லாம் பரவியிருந்தது என்பதனையும் அறியலாம். மேலும் ஒரு பரம்பரையைச் சார்ந்த அரசன் ஆண்ட பகுதியில் மட்டுமின்றி மக்களின் பொருளாதார, சமுதாய மற்றும் பண்பாட்டு நிலைகளையும் அறிய கல்வெட்டுகள் துணை புரிகின்றன. கல்வெட்டுயல் இல்லையெனில் தென்னிந்திய வரலாற்றின் பெரும்பகுதி

அறியப்படாமலே இருந்திருக்கும். பல்லவர், சோழர் மற்றும் விசயநகர மன்னர்களின் கல்வெட்டுகள் வரலாற்றாசிரியர்களுக்குச் சான்றுகளை அள்ளித்தரும் மூலமாக அமைகின்றன. இடைக்கால தமிழக வரலாற்றின் வெவ்வேறு அம்சங்களும் தெள்ளத்தெளிவாக கல்வெட்டுச் சான்றுகள் மூலமாக அறியப்படுகின்றன. 17ம் 18ம் நூற்றாண்டு தஞ்சை மராத்தியர், இராமநாதபுரம் சேதுபதி மன்னர்கள், புதுக்கோட்டை தொண்டைமான் கல்வெட்டுக்கள் அக்காலப்பகுதியின் சமுதாய, பொருளாதார, பண்பாட்டு வரலாற்றினை அறிய உதவும் மூலச்சான்றுகளாகும். பெரும்பான்மையான இக்கல்வெட்டுக்களை கண்டுபிடிப்பதற்கு முன்பாக 17ம், 18ம் நூற்றாண்டில் தமிழகத்தின் நிலை கிருத்துவ சான்றுகளின் அடிப்படையில் மட்டும் தான் வரையப்பட்டது. கல்வெட்டுகளைப் பயன்படுத்தும் வரலாற்று மாணவர்கள் அவற்றிலுள்ள சொற்களையும் வாசகங்களையும் நன்கறிந்து அவை இயற்றப்பட்ட காலத்தின் சொல் வழக்கின் அடிப்படையில் ஆராயும் பொழுது முறையான வரலாற்றினை வெளிக்கொணரலாம்.

## 2.13. வரலாறும் நாணயவியலும் (History and Numismatics)

நாணயங்களைப் பற்றிய இயல் நாணயவியல் ஆகும். நாணயங்களில் காணப்படும் வாசகங்கள் உருவங்கள் மற்றும் குறியீடுகள் ஆகியவை நமக்கு வரலாற்று உண்மைகளை விளக்குகின்றன. மூலச் சான்றுகளான நாணயங்கள் மன்னர்களது ஆட்சிக்குட்பட்ட எல்லைகளை அறிவதற்கு பயன்படுகின்றன. அவர்களது காலத்து பொருளாதார, பண்பாட்டு மற்றும் சமய செய்திகள் தொடர்பான உண்மைகளை வரலாற்று மாணவர்களுக்கு எடுத்தியம்புகின்றன. சில இந்திய வம்சங்களின் வரலாற்றினை அறிய நாணயங்கள் பெரிதும் பயன்பட்டுள்ளன. இந்திய வரலாற்றாசிரியனுக்கு நாணயவியல் ஒரு தவிர்க்க முடியா துணை அறிவியலாகும். இந்திய - கிரேக்க இந்திய - பார்த்தியன் ஆகிய வம்சங்களின் இருமொழி நாணயங்கள் இந்திய கல்வெட்டுகளைப் படித்தறிய நமக்கு உறுதுணையாக அமைந்தன. சாகர்கள், குஷாணர்கள், குப்தர்கள், பல்லவர்கள், சோழர்கள், விஜய நகர மன்னர்கள் மற்றும்

முகலாயர் காலத்திய நாணயங்கள் இந்திய நாணவியல் வரலாற்றில் சிறப்பிடங்களைப் பெற்று வரலாற்று மாணவர்களுக்கு பெரிதும் உதவும் மூலச்சான்றுகளாக விளங்குகின்றன. கிறிஸ்துவ சகாப்தத்தின் துவக்க நூற்றாண்டுகளில் இந்திய ரோமானிய தொடர்பினை அறிவதற்கு தென்னியந்தியாவில் கிடைக்கப்பெற்ற ரோமானிய நாணயங்களின் துணை சிறப்பானதாகும்.

## 2.14. வரலாறும் சுவடியியலும் (History and Manuscriptology)

வரலாற்றினை வரைவதற்குச் சுவடிகளின் பயன் இன்றிமையாததாகும். இந்திய வரலாற்றில் குறிப்பாக தமிழக வரலாற்றில் சுவடிகளின் துணைக்

கொண்டு பல வரலாற்று உண்மைகள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. ஓலைச்சுவடிகள் மற்றும் காகிதச் சுவடிகளைப் பற்றிய படிப்பே சுவடியியல் ஆகும். பண்டைக்காலத்திலிருந்து இன்று வரையில் பல சுவடிகள் வெவ்வேறு பகுதிகளில் கிடைத்துள்ளன. சுவடியியல் நிபுணர்கள் இவற்றினைப் படித்து செய்திகளை முறையாக வெளியிடும் போது அவற்றினை வரலாற்றாசிரியர் ஆர்வத்துடன் நாடுகின்றனர். ஐரோப்பிய அறிஞர்களின் சுவடிகள் தொகுப்பான மெக்கந்சி சுவடிகள், டேலர்சுவடிகள் ஆகியவை வெவ்வேறு காலத்து தமிழகத்தின் வரலாற்றுச் செய்திகளை அள்ளித் தருகின்றன. பல்வேறு சாதிகளைப் பற்றிய சுவடிகள், சைவ மடங்களைப் பற்றிய சுவடிகள் மற்றும் பல தனியார் சுவடிகள் தமிழக வரலாற்றின் சமுதாய, பண்பாட்டு, சமய நிலைகளை வரைய சிறப்பாக உதவுகின்றன. தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தில் போற்றிக் காக்கப்படும் சுவடிகள் தரும் வரலாற்று உண்மைகள் பலப்பல. சுவடியியல் நிபுணர்களும் வரலாற்று மாணவர்களைப் போன்று வரலாற்றுச் செய்திகளைத்தான் ஆராய்கின்றனர். இந்தியச் சுவடிகள் பல்வேறு மொழிகளில் கிடைக்கப் பெற்றுள்ளன. ஆங்கிலேய ஆட்சிக் காலத்து காகிதச் சுவடிகள் இந்திய ஆவணக் காப்பகங்களில் பாதுகாக்கப்படுகின்றன. அவை இந்திய ஆங்கிலேய ஆட்சிக்கால வரலாற்றினை வரைவதற்கு பெரிதும் துணை புரிகின்றன.

## 2.15. வரலாற்றின் வகைகள் (Kinds of History)

வரலாறு ஒன்றுதான் அதன் வடிவங்கள் பல. வரலாறு வற்றாத நதியைப் போன்றது அதன் உப நதிகள் பல. வரலாறு ஆல மரத்தைப் போன்றது அதன் கிளைகளும் விழுதுகளும் பல வரலாறு கூட்டுக் குடும்பத்தை ஒத்தது அதிலிருந்து பிரிந்து சென்ற குடும்பங்கள் பல! அதனால் தான் வரலாறு பல அறிவுத் துறைகளின் உறைவிடம் என்று வர்ணித்துள்ளார் டிரெவல்யன். வரலாறு மனித இனத்தின் கடந்த காலத்தைப் பற்றியதால் அதன் பரப்பெல்லை விரிவானது. மனித வாழ்வின் தொடர்ச்சியான வரலாறு பல்வேறு துறைகளாகத் தனித் தன்மையுடன் திகழ்வதில் வியப்பில்லை. வரலாறு பலவிதம். ஒவ்வொன்றும் ஒருவிதம்.

### 2.15.1. காலவரன்முறை வரலாறு (Chronological History)

காலவரன்முறை வரலாறு மிகவும் தொன்மையானது. வரலாற்றைப் பண்டைக்காலம் (Ancient), இடைக்காலம் (Medieval), நவீனகாலம; (Modern) என்று வகைப்படுத்தும் மேலை நாட்டு மரபு இன்றைக்கும் பின்பற்றப்படுகிறது. இப்பாகுபாட்டை ரௌசின் (Rausin) என்பவர் தனது லியோடியம் (Leodium, 1639) என்ற நூலில் அறிமுகப்படுத்தினார். இதை ஹாலே பல்கலைக் கழகப் பேராசிரியர் கெல்லர் (Keller) பிரபலப்படுத்தினார். இந்தப் பாகுபாடு மறுமலர்ச்சிக்கால மனிதாபிமானிகளால் வலுப்படுத்தப்பட்டது. ஹென்றி பிரனே (Henri

குறிப்பு

Pirenne) என்ற டச்சு வரலாற்றாளர் பண்டைய காலம் மத்திய தரைக் கடலைச் சுற்றியும் இடைக்காலம் மத்தியத் தரைக்கடல் மற்றும் வடக்கு பால்டிக் கடலைச் சுற்றியும் நவீன காலம் உலகக் கடல்களைச் சுற்றியும் நிலைபெற்றதாகக் குறிப்பிட்டார். மேற்கு ரோமானிய வீழ்ச்சி (கி.பி.476) பண்டைக் காலத்தை இடைக் காலத்திலிருந்து பிரிக்கும் கோடாகவும், கான்ஸ்டான்டிநோபிளின் வீழ்ச்சி (கி.பி.1453) இடைக் காலத்தை நவீன காலத்திலிருந்து பிரிக்கும் கோடாகவும் கொள்ளப்பட்டது. கிரேக்க ரோமானிய நாகரிகம் பண்டைய வரலாற்றுக் காலத்தின் உச்சகட்டமாகவும், திருச்சபை ஆதிக்கம் இடைக்காலத்தின் குவிமையமாகவும், மறுமலர்ச்சியும் அதைத் தொடர்ந்த அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சி நவீன காலத்தின் அடையாளமாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. வரலாற்றைப் பண்டைக் காலம், இடைக்காலம், நவீன காலம் என்று பாகுபடுத்தி நிகழ்ச்சிகளைக் காலவரன் முறைப்படுத்துவது எளிமையானது. எனினும் இப்பாகுபாடு செயற்கையானது, தன்னிச்சையானது, நிச்சயமற்றது. ஐரோப்பிய வரலாற்றாளர்களால் ஒருதலை பட்சமாக சுமத்தப்பட்ட இப்பாகுபாடு குறுகிய மனப்பான்மையுடையது. இது ஆசிய, ஆப்பிரிக்க, அமெரிக்க வரலாறுகளை ஒதுக்கிவிட்டுத் தீர்மானிக்கப்பட்ட பாகுபாடு ஆகும். மேலும் இந்தப் பாகுபாடு பண்டைய வரலாற்றுக்கான மக்கள் கிரேக்க - ரோமானிய அறிஞர்களைப் போன்று அறிவாளிகளாகவும், இடைக்கால மக்கள் கிறித்துவ நம்பிக்கையில் அமிழ்ந்து போனவர்கள் போன்றும், நவீனகால மக்கள் அறிவியல் மனப்பான்மையுடையவர்கள் போன்ற பிரமையை ஏற்படுத்துகிறது. சில சிறப்பியல்புகளைக் கொண்டு இடையறாது நிகழ்ந்து கொண்டிருக்கும் வரலாற்றை இடை நிறுத்தி வகைப்படுத்துவது புரிந்து கொள்வதற்குப் பயன்படுமேயன்றி உண்மைக்குப் புறம்பானதாகும். காலவரன்முறைப்படி எழுதப்படுவது படுகிடை வரலாறு (Horizontal History) என்றும், பொருளடக்கத்தை (Content or Theme) மையமாக வைத்து எழுதப்படுவது செங்குத்து வரலாறு (ஏநசவஉையட ர்ளைவழசல) என்றும் அறியப்படுகிறது. அதேபோன்று தொல்பொருள் சான்றுகளைக் கொண்டு எழுதப்படுவது வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட வரலாறு (PreHistory) என்றும், எழுதப்பட்ட ஆவணச் சான்றுகளைக் கொண்டு எழுதப்படுவது வரலாறு (History) என்றும் கருதப்படுகிறது. அதாவது வரலாற்று காலம் 1). வரலாற்றுக்கு முற்பட்ட காலம் 2) வரலாற்றுக் காலம் என்று பிரிக்கப்படுகிறது. இப்பிரிவினையும் செயற்கையானதே. வரலாறு உயிர்ப் பொருளானது (Orgnic), பிரிக்க முடியாதது (Indivisible), அதன் போக்கில் செல்ல வல்லது. வரலாறு மனித அனுபவத்தைப் பற்றியது. செயற்கைப் பாகுபாடு கடந்தது. எனினும் வரலாற்று நிகழ்ச்சிகளைப் பகுத்தாய்ந்து பாகுபடுத்திப் பார்த்தால் தான் மானுட நிகழ்வுகளைத் தொடர்ச்சியாகவும், தெளிவாகவும், அறிவு பூர்வமாகவும் எழுத இயலும். குறைபாடுடையதாயினும் காலவரன் முறை வரலாறு முறைப்படி அமைந்த வரலாறாகும். வரலாற்றை அறிவார்த்தமாகப் பிரித்துச் சேர்த்தால்

முழுமையைவிட அதிகமாக அறிந்து கொள்ளலாம் என்று கூறுகிறார் ரெனியர்.

### 2.15.2. புவியியல் வரலாறு (Geographical History)

காலவரன்முறை வரலாற்றைப் போன்றே புவியியல் வரலாறும் தொன்மையானது. மக்கள் மண்ணின் மைந்தர்கள். நில உலகு மக்களுக்குப் பொதுவானது. நிலவியல் அமைப்பு மக்களின் வாழ்க்கை முறையையும், நாகரிக நிலையையும் கட்டுப்படுத்துகிறது. எனினும் உலகம் என்றால் அது ஐரோப்பாதான் என்ற எண்ணம் வரலாற்று அறிவை வெகுவாகப் பாதித்து விட்டது. இரு ஐரோப்பியப் பிராந்திய மனப்பான்மையின் (European Parochialism) வெளிப்பாடாகும். இதை வரலாற்றுக் குறைப்பார்வை (Historical Astigmatism) என்று கூறுகிறார் கொமாகர் (H.S.Commager) இக்குறைபாட்டைப் போக்க 18-ம் நூற்றாண்டில் வால்டேர், ரேனான் போன்ற வரலாற்று விவேகிகள் பெரு முயற்சி செய்தனர். குறிப்பாக வால்டேர் மனித இனம் காட்டுமிராண்டிக் காலத்திலிருந்து நாகரிக நிலையை அடைந்ததற்கான படிகளைப் பற்றி அறிய விரும்பினார். கீழை நாடுகளின் நாகரிகச் சிறப்பை எடுத்துரைத்தார். எனினும் ஐரோப்பாவின் பிராந்தியப் பற்று 19-ம் நூற்றாண்டில் பிராந்திய வெறியாயிற்று! 20-ம் நூற்றாண்டில் உலகப் பொதுமையை வலியுறுத்தி வரலாறு வரைவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வரலாற்று வரைவுக்கு புவியியல் அணுகுமுறை ஏற்றுக் கொள்ளக் கூடியதே. ஹென்றி தாமஸ் பக்கிள் எழுதிய இங்கிலாந்தின் நாகரிக வரலாறு புவியியல் வரலாறுக்கான சிறந்த எடுத்துக்காட்டாகும். எனினும் புவியியல் சூழ்நிலைக்கு மட்டும் முக்கியத்துவம் அளிப்பது வரலாற்றின் பிற பரிமாணங்களைப் புறக்கணிப்பதாகும். உலக மக்களின் வரலாறுகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. புவியியல் சூழ்நிலையைப் போன்றே மனித மரபுரிமையும் (Human Inheritance) முக்கியமே. புவியியல் வரலாறு வரலாற்று நிகழ்ச்சிகளுக்குப் புவியியல் விளக்கமேயன்றி வேறில்லை.

### 2.15..3. அரசியல் வரலாறு (Political History)

அரசியல் வரலாறு மரபு வழி முக்கியமானதாகும். பண்டைக் காலத்திலிருந்தே அரசியல் நிகழ்ச்சிகளுக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டு வந்துள்ளது. அரசர்கள், அரசிகள், அரசவை நிகழ்ச்சிகள் வரலாற்றாளர்களின் கவனத்தைக் கவர்ந்துள்ளன. ஹெரோடொடஸ், தூசிடைடிஸ், கிப்பன், மெக்காலே, கார்லைல் போன்ற வரலாற்றாளர்கள் அரசியல் நிகழ்ச்சிகளுக்கே முன்னுரிமை கொடுத்துள்ளனர். 19-ம் நூற்றாண்டில் தேச நாடுகள் (Nation - States) வரலாற்றாளர்களின் வழிபாட்டுப் பொருளாயிற்று. வரலாறு என்பது கடந்த கால அரசியல் என்று பிரகடனப்படுத்தினார் ஜான் சீலி. மெக்காலேயின் இங்கிலாந்து வரலாறு, மைக்கேலட்டின் பிரான்ஸ் வரலாறு, ஜான் முல்லரின் ஸ்விஸ் கூட்டமைப்பு வரலாறு, பீட்டர் முன்ச்சின் நார்வே மக்கள் வரலாறு,

குறிப்பு

பிரான்சிஸ் பாலக்கேயின் பொஹீமிய மக்கள் வரலாறு, மோட்லேயின் டச்சுக் குடியரசின் தோற்றம், ஹென்றி ஆடம்சின் அமெரிக்க வரலாறு ஆகியவை அரசியல் வரலாறுக்கான சிறந்த முன்னுதாரணங்களாகும். அரசியல் வரலாறு எழுதுவதில் பின்வரும் நன்மைகள் உள்ளன: 1) அரசியல் வரலாறு அனைவருக்கும் பழக்கமானது. எளிதில் புரிந்து கொள்ளக் கூடியது. 2) இது மக்களிடையே செல்வாக்கு பெற்றுள்ளது. ஏனெனில் இத்தகைய வரலாறு மக்களின் இன, மொழி, சமய, கலாச்சார, பிராந்தியப் பற்றுணர்வை வளர்க்கப் பயன்படுகிறது. 3) அரசியல் வரலாறு எழுதுவதற்கு எளிது. அதற்குக் காரணம் அரசியல் சம்பந்தப்பட்ட ஆவணச் சான்றுகள் அதிகம். இவை ஆவணக் காப்பகங்களிலும், நூலகங்களிலும் நன்கு பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. 4) அரசியல் வரலாற்றுக்கு வடிவம் கொடுப்பது எளிது. இதை முன் மாதிரியாகக் கொண்டு கடந்த கால வரலாற்றை எழுதும் போக்கு செல்வாக்கு பெற்றது. 5) வரலாற்றுக்கு அரசியல் அணுகுமுறை அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 6) அரசியல் வரலாறு நிகழ்கால நடப்புகளைக் கடந்த கால நிகழ்ச்சிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க உதவுகிறது. அரசியல் வரலாற்றால் விளையும் தீமைகள் வருமாறு: 1) தேசிய சாயம் பூசப்பட்ட வரலாறு பிராந்தியப் பற்றையும் வெறியையும் ஊக்குவிக்கும். 2) இத்தகைய வரலாறு சார்புடையதாக இருக்கும். 3) அரசியல் வரலாற்று அளவுகோலைக் கொண்டு கடந்த காலத்தைக் கணிப்பது தவறுடையதாகும். 4) அரசியல் நிகழ்வுகளுக்கு அதீத முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. 5) வரலாற்றுக்கு அரசியல் விளக்கமளிப்பது மனித வாழ்வின் பிற சாதனைகளைப் புறக்கணிப்பதாகும். 6) ஆட்சியாளர்கள் அரசியல் வரலாற்றைக் குறுகிய சுயநலத்துக்குத் தவறாகப் பயன்படுத்தக்கூடும்.

### 2.15.4. அரசியலமைப்பு வரலாறு (Constitutional History)

அரசியலமைப்பு வரலாறு அரசியல் வரலாற்றின் பிரதான கிளையாகும். இது தனித்தன்மையுடன் தனித்தியங்குகிறது. இவ்வரலாறு அரசியல் அமைப்புகள் பற்றியது. அரசியல் அமைப்புகளை சமூகத்தின் வழக்கங்கள் (Habits of Societies) என்று வர்ணித்தார் ரெனியர். மனிதனின் அரசியல் வழக்கங்கள் தான் அமைப்புகளாக உருப்பெறுகின்றன அரசியல் அமைப்பு வரலாறு அரசாங்கத்தை மையமாகக் கொண்டது. சட்டமன்றம், ஆட்சித் துறை, நீதித்துறை ஆகியவை அரசாங்கத்தின் அங்கங்கள் ஆகும். எனவே அரசியலமைப்பு மற்றும் அரசியல் நிறுவனங்களின் தோற்றம், வளர்ச்சி, இயல்பு, குடிமக்களின் உரிமைகள் கடமைகள் ஆகியவற்றை உள்ளடக்கமாகக் கொண்டது அரசியலமைப்பு வரலாறு.

அரசியலமைப்பு வரலாற்றின் பிறப்பிடம் இங்கிலாந்து எனலாம். எழுதப்படா அரசியலமைப்பைக் (Unwritten constitution) கொண்ட இங்கிலாந்தின் அரசியலமைப்பு வரலாறு உலகின் பிறநாடுகளுக்கு முன் மாதிரியாக உள்ளது. ஆடம்ஸ், கீத், ஸ்டப்ஸ், மெயிட்லாந்து போன்றோர்

எழுதிய இங்கிலாந்து அரசியலமைப்பு வரலாறு சாகாவரம் பெற்றவை. எனினும் அரசியலமைப்பு வரலாறு தன்னிறைவு பெற்ற வரலாறு ஆகாது. நாடாளுமன்ற வரலாறு (Parliamentary History) அரசியலமைப்பு வரலாற்றின் கிளையாகும். அரசியல் அமைப்புகளில் மிகவும் முக்கியமானது நாடாளுமன்றம் ஆகும். இங்கிலாந்தின் நாடாளுமன்றம் நாடாளுமன்றங்களின் தாய் என்று கருதப்படுகிறது. இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா போன்ற நாடுகளில் நாடாளுமன்ற ஆட்சி முறை உள்ளது. ரஷ்யா, சீனா போன்ற நாடுகளில் கூட நாடாளுமன்றங்கள் செயல்படுகின்றன. நாடாளுமன்ற அமைப்பு முறை மக்களுக்கு அரசியல் கல்வியையும், அனுபவத்தையும் கொடுக்கிறது. நாடாளுமன்ற வரலாறு மக்களின் சட்டமன்ற சாதனைகளை அழிந்துவிடாமல் பாதுகாக்க உதவுகிறது.

### 2.15.5. சட்ட வரலாறு (Legal History)

சட்ட வரலாறு அரசியலமைப்பு மற்றும் நாடாளுமன்ற வரலாறுகளின் கிளையாகத் தோன்றி வளர்ந்து தனி வரலாறாகத் திகழ்கிறது. சட்ட வரலாற்றாளர் சட்ட நிபுணராக இருக்க வேண்டியது இன்றியமையாதது. நாடாளுமன்றம் இயற்றும் சட்டங்கள், அவை அமுலாக்கப்படும் முறை, அவைகளுக்குக் கொடுக்கப்படும் விளக்கங்கள் விளைவுகள் நடைமுறை முக்கியத்துவம் வாய்ந்தவை. சட்டத்தின் ஆட்சி (Rule of Law) நாட்டு மக்களின் அரசியல் பண்பாட்டை அளவிடுவதற்கான அளவுகோலாகும். சட்ட வரலாறு நாட்டின் அரசியல் முதிர்ச்சி நிலையை அறிந்து கொள்ளப் பயன்படும். பாபிலோனிய ஹமுரபி, இந்திய மனு, பிரெஞ்சு நெப்போலியன் ஆகியோரின் சட்டத் தொகுப்புகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. மெயிட்லாந்து, பிளாக்ஸ்டோன், ஹோல்ஸ்வர்த் , பொலாக், ஜென்னிங்ஸ், லாஸ்கி போன்ற ஆங்கில சட்ட வரலாற்றாளர்களின் பங்களிப்புகள் பெருமைக்குரியவை. ஆஸ்திரியா, ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, அமெரிக்கா முறையே கும்ப்ளோவிஸ், கிர்கே, டூகுயிட் , வக்காரோ, ஹோம்ஸ் போன்ற சட்ட வரலாற்றாளர்கள் பற்றிப் பெருமைப்படலாம்.

### 2.15.6. ராஜதந்திர வரலாறு (Diplomatic History)

ராஜதந்திர வரலாறு இறையாண்மையுடைய நாடுகளுக்கிடையே (Sovereign States) உள்ள தொடர்புகளைப் பற்றியது. இது குறிப்பாகப் பன்னாட்டு உறவுகளில் ராஜதந்திரிகளின் பங்கு, விளைவுகள் பற்றி ஆய்கிறது. உடன்படிக்கைகள், கூட்டுகள், அதிகாரச் சமநிலை, ராணுவப் படைக்குறைப்பு, பனிப்போர், உலக அமைதி ஆகியவை ராஜதந்திர வரலாற்றில் இடம் பெறும். நாடுகளுக்கிடையேயான தொடர்புகளும் உறவுகளும் படிப்பும் பயிற்சியும் பெற, நடைமுறை வேகமும் விவேகமும் உடைய ராஜதந்திரிகளால் ஏற்படுத்தப்படுகின்றன. வரலாற்று அனுபவமும் முன்னுதாரணங்களும் ராஜதந்திரியின் பலமாகும். நாடுகளுக்கிடையே இணக்கமான தொடர்புகளை ஏற்படுத்த வரலாற்று அறிவு

இன்றியமையாதது. ராஜதந்திர வரலாற்றாளர் ராஜதந்திரிகளின் செயல்களையும் இவற்றின் விளைவுகள் பற்றியும் எழுதுகிறார். ஒவ்வொரு ராஜதந்திர நடவடிக்கையும் அரசியல், சட்ட, கலாச்சார, வரலாறு, பொருளாதாரப் பிரச்சனைகளுடன் பின்னிப் பிணைந்திருப்பதால் ராஜதந்திர வரலாறு முக்கியத்துவமடைகிறது.

உலக நாடுகளின் நான்கு நூற்றாண்டு ராஜதந்திர வரலாற்றை எழுதியுள்ள ஹென்றி கிஸிஞ்சர் (Henry Kissinger, Diplomacy, 1994) பின்வருமாறு கூறுகிறார்: 17-ம் நூற்றாண்டில் பிரான்சின் கார்டினல் ரிஷ்லு (Cardinal Richelieu) பன்னாட்டுத் தொடர்புகளுக்குத் தற்கால அணுகுமுறையைக் கொடுத்தார். நாட்டு நலனைப் பிரதான நோக்கமாகக் கொண்ட ராஜதந்திரம் அது. 18-ம் நூற்றாண்டில் கிரேட் பிரிட்டன் அதிகாரச் சமநிலைக் (Balance of Power) கொள்கைக்கு அமைப்பு வடிவம் கொடுத்தது. 19-ம் நூற்றாண்டில் மெட்டர்னிக் (Metternich) ஐரோப்பிய ஐக்கியத்தை (Concert of Europe) உருவாக்கினார். அதை ஜெர்மனியின் பிஸ்மார்க் (Bismarck) உருக்குலைத்தார். ராஜதந்திரம் ஈவிரக்கமற்ற அதிகார அரசியல் விளையாட்டாயிற்று. 20-ம் நூற்றாண்டில் பன்னாட்டு ராஜதந்திரத் தொடர்புகளில் அமெரிக்கா பிரதான பங்கேற்கிறது. வில்லியம் ˮமன், கோதான் கார்டி, கார், பால்மர், பெர்கின்ஸ், லூயி சீனிடர் போன்றோரும் பன்னாட்டு ராஜதந்திர வரலாறு எழுதியுள்ளனர்.

### 2.15.7. ராணுவ வரலாறு (Military History)

ராணுவ வரலாறு ராணுவ நடவடிக்கைகளின் அனைத்து வடிவங்களையும் விளைவுகளையும் பற்றியது. இதில் ராணுவப் பொறியியல் (Military Engineering), துப்பாக்கிக் குண்டு வேக ஆய்வு (Ballistics), பொருள் மற்றும் சேவை வினியோக அமைப்பு (Logistics), ராணுவப் போக்குவரத்து (Military Transport), ராணுவத் தொழில் நுட்பம், சாமர்த்தியம், செயல் உத்தி ஆகியவை முக்கிய இடம் பெறும். போர்கள், போர் முறைகள், படையமைப்புகள், போர்க்கருவிகள், ராணுவத் திட்டம், போரின் தாக்கம் பற்றியெல்லாம் ராணுவ வரலாற்றாளர் எழுத வேண்டும். அதற்கான வரலாற்றுச் சான்றுகள் அனைத்தையும் கவனமாகத் திரட்டி பகுத்தாய்ந்து பயன்படுத்த வேண்டும். இவர் ராணுவத்தினர் அனுபவங்களை அறிவதோடல்லாமல் துணை வரலாற்றுத் துறைகளின் உதவியையும் நாடிப் பெற வேண்டும். ஹெரோடொடஸ், தூசிடைடிஸ், பாலிபியஸ், டைலர், சர்ச்சில் ஆகியோர் எழுதிய நூல்கள் ராணுவ வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளன.

### 2.15.8. சமூக வரலாறு (Social History)

சமூக வரலாறு மனிதனின் கடந்த கால சமூக சாதனைகளைப் பற்றிக் கூறுகிறது. “சமூகவியலின் தந்தை”யாகக் கருதப்படும் காம்டே வரலாற்றுச் சான்றுகளை சமூக வரலாற்றுக்கான மூலப்பொருள்களாகக்

குறிப்பு

கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். சமூக வரலாற்றின் முன்னோடியான டிரெவல்யன் அரசியலற்ற வரலாறே சமூக வரலாறு என்று வரையறுத்தார். டச்சு வரலாற்றாளரான பி.ஜி.பிளாக் (P.G.Block) மக்களின் எண்ணம், வேலை, அன்றாட வாழ்க்கை, நம்பிக்கை, தேவைகள், மரபுகள் ஆகியவற்றை உள்ளடக்கியதே சமூக வரலாறு என்றார். மார்க்சிய வரலாற்றாளர்கள் சமூக வரலாற்றுக்குச் சிறப்பிடமளிக்கின்றனர். சமூக வரலாறு மனித இனத்தின் சமுதாயக் கூறுகளைப் பற்றியது. இதில் குறிப்பாக சமூக அமைப்புகளின் தோற்றம், வளர்ச்சி, தாக்கம் பற்றி ஆய்வு செய்யப்படுகிறது. சமூக வரலாறு கடந்த கால மக்களின் சமுதாய வாழ்க்கையைப் பற்றிக் கூறுவதால் வரலாற்றாளர் இதன் மீது கவனம் செலுத்துகிறார். இது வரலாற்றுச் சமுதாயங்களை மையமாகக் கொண்டிருப்பதாலும், சமூக மாற்றங்களை அடையாளம் காட்டுவதாலும் இயக்க ஆற்றல் (Dynamic) மிக்கது. சமூகவியல் வரலாறாவதும், வரலாறு சமூகவியலாவதும் இவ்விரு இயல்களுக்குமிடையே இருவழிப் போக்குவரத்தை அதிகரிக்கும் என்று கூறுகிறார் இ.எச்.கார்.

### 2.15.9. பொருளியல் வரலாறு (Economic History)

பொருளியல் வரலாறு சமூக வாழ்வின் ஆதாரமான பொருளாதாரத்தைப் பற்றியது. சமூகமும், பொருளாதாரமும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றவை. டச்சு வரலாற்றாளர் வான் டில்லன் (Van Dillen) இவ்விரண்டையும் இணைத்து சமூக - பொருளியல் வரலாறு (Socio - economic History) என்றழைத்தார். அரசியல் - பொருளியல் (Political Econom பற்றி எழுதுவதும் வழக்கத்தில் இருந்தது. அரசியலும், சமூகவியலும் தனித் துறைகளாகப் பிரிந்த பின்னர் பொருளியல் வரலாறு சிறப்புற்றது. இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சி (Industrial Revolution) பொருளியல் சிந்தனையை வளப்படுத்தியது. ஆடம் ஸ்மித்தின் (Adam Smith) நாடுகளின் செல்வம் (Wealth of Nations) என்ற நூலை எழுத வரலாற்று ஆதாரங்களைப் பயன்படுத்தினார். காரல் மார்க்ஸ் வரலாற்றுக்குப் பொருளியல் விளக்கம் கொடுத்தார். பொருளியல் வரலாறு என்றால் மனித வாழ்வின் பொருளாதார அடிப்படை பற்றிய யதார்த்த நடைமுறைகளைப் பற்றியது என்று வரையறுத்துள்ளார் சர் வில்லியம் ஆஷ்லி (Sir William Ashly). மனிதன் தன் வாழ்க்கைக்குப் பல்வேறு வழிகளில் பொருள் தேடிக் கொண்ட கதையே பொருளியல் வரலாறு என்று கூறுகிறார் கிராஸ் (N.S.5. Gras) பொருளியல் வரலாறு பொருளாதார அமைப்புகள், கருத்துக்கள், கருத்துருவாக்கங்கள், கோட்பாடுகள், பொருள் உற்பத்தி, வினியோகம், நுகர்வு, விவசாயம், தொழில், வர்த்தகம், சமூக வாழ்வில் பொருளியல் தாக்கம், பொருளாதார மேதைகள் பற்றியெல்லாம் விவரிக்கிறது. பண்டைக்கால வரலாற்றை மக்கள் பொருளியல் தொடர்புகள் என்ற கோணத்தில் விளக்கினார் ஜெர்மானிய பேராசிரியர் ஹீரான். சர் வில்லியம் ஆஷ்லியின் இங்கிலாந்தின் பொருளாதார

அமைப்புகள், வில்லியம் கன்னிங்ஹாமின் இங்கிலாந்தின் தொழில் வாணிப வளர்ச்சி, ஏ.அப்பாத்துரையின் இந்திய பொருளாதார வரலாறு ஆகியவை சிறந்த பொருளியல் வரலாறுகளாகும்.

குறிப்பு

### 2.15.10. பண்பாட்டு வரலாறு (Cultural History)

பண்பாட்டு வரலாறு என்பது மக்களின் மனம் மற்றும் ஒழுக்கம் பற்றியது குறிப்பிட்ட காலக்கட்டத்தில் சமூகத்தை ஆட்கொண்ட பிரதான கருத்துக்களையும், மக்கள் நம்பிக்கைகளையும் நடத்தையையும் தொடர்புபடுத்தும் அமைப்புகளைப் பற்றியது என்று வரையறுக்கிறார் ஹென்றி ஸ்டீல் கொமாகர். பண்பாடு வரலாற்றாளர் கடந்த காலத் தலைமுறையினரின் கருத்துக்களையும், நடத்தைகளையும், ஆர்வங்களையும் அடையாளம் கண்டு விளக்குகிறார். குறிப்பாகக் கருத்துக்கள் நாடு, இன, மொழி, நிற, சமய எல்லைகளைத் தாண்டிச் செல்லக் கூடியவை. கருத்துக்களின் தோற்றம், வளர்ச்சியைக் கூற வேண்டுமாயின் காலம் இடம் ஆகிய பரிமாணங்களைக் கடந்து செல்ல வேண்டும். பண்பாட்டு வரலாற்றை அரசியல் வரலாறு போன்று எளிதாகவும் தெளிவாகவும் எழுதி விட இயலாது. உழைத்து எழுதி விட்டால் அதைப்போன்று கவர்ந்திழுக்கக் கூடிய வரலாறு வேறெதுவுமில்லை. ஜான் அடிங்டன் சைமன்ட் இத்தாலிய மறுமலர்ச்சி என்பது பற்றி ஏழு தொகுதிகள் எழுதினார். ஆல்பிரட் சிம்மர்னின் கிரேக்க காமன்வெல்த், வெர்னர் ஜாகரின் கிரேக்கக் கலாச்சார ஆய்வு, பால் ஹஸார்டின் பதினெட்டாம் நூற்றாண்டில் ஐரோப்பிய சிந்தனை, எடித் ஹாமில்டனின் மேற்கு நாகரிகத்துக்கு கிரேக்க வழி, ஆல்பிரட் நார்த் ஒயிட் ஹெட்டின் எண்ணங்களின் தீரச் செயல்கள், வெர்னான் பாரிங்டனின் அமெரிக்க சிந்தனையின் பிரதான நீரோட்டங்கள் போன்ற நூல்கள் சிறந்த பண்பாட்டு வரலாறுகள் ஆகும். புர்க் ஹார்ட், சைமண்ட்ஸ், லெஸ்லி ஸ்டீபன், ட்ரோயல்ஸ் லுண்ட் ஆகியோர் குறிப்பிடத்தக்க பண்பாட்டு வரலாற்றாளர்கள் ஆவர்.

மனித இனப் பண்பாட்டு ஆய்வியல் (Cultural Anthropology) அண்மைக் காலத்தில் அமெரிக்காவில் வரலாற்று அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. இவ்வாய்வு புதிதல்ல. வால்ட்டேர், டாக்குவல், ரேனால், ஹென்றி மார்கன், லெக்கி, பிரேசர், குரோன்பெக் , வெப்ளன், ஹெர்பர்ட் ஸ்பென்சர், லெஸ்டர் வார்டு, எமர்சன் போன்றோர் இத்துறையில் பெரும் பங்களிப்புகளைச் செய்துள்ளனர். எனினும் அண்மைக்கால அமெரிக்காவில் புதிய ஆய்வு முறைகள் நுணுக்கங்கள் மூலம் இத்துறையை விரிவுபடுத்தியுள்ளனர். பழங்குடிச் சமுதாயங்களை ஆய்வதற்காக மேற்கொண்ட ஆய்வுமுறைகளை நன்கு வளர்ந்த நாகரிகச் சமுதாயங்களைப் பற்றி ஆராய்வதற்குப் பயன்படுத்தினர். உதாரணமாக அமெரிக்கர்களின் காதல் முறைகள், உணவுப் பழக்கங்கள், இனமனப்பான்மை, குழந்தை விளையாட்டுக்கள், தன் மதிப்பு போன்றவை வரலாற்று ஆய்வுப் பொருளாகக் கொள்ளப்பட்டது. இந்த ஆய்வு முறை

குறிப்பு

தேசிய இயல்புகளையும் (National Traits) அடையாளம் காணப் பயன்படுத்தப்படுகிறது.

### 2.15.11. வாழ்க்கை வரலாறு (Biographical History)

வாழ்க்கை வரலாறு மாமனிதர்களின் சாதனைகளைப் பற்றியது. புராணங்கள் கதாபாத்திரங்களின் வாழ்க்கை வரலாற்றுத் தொகுப்பாகவே உள்ளன. வரலாற்றாளர்கள் வரலாற்று நாயகர்களின் வாழ்க்கைக்கும் பங்களிப்புக்கும் சிறப்பிடம் அளித்துள்ளனர். புளூட்டார்க் (Plutarch) கிரேக்க ரோமானிய மாமனிதர்களின் வாழ்க்கை வரலாற்றை வரைந்தார். கார்லைல் வரலாற்றுத் தலைவர்களின் சாதனைகள் மூலம் வரலாற்றுக்குப் பொருள் விளக்கம் கொடுத்தார். நெப்போலியனது வாழ்க்கை வரலாற்றை எழுதிய மாஸன் அம்மாவீரனது ஒவ்வொரு செயலும் வரலாற்றுச் சிறப்புடையது என்றார். வாழ்க்கை வரலாறு ஒருவரது அனுபவங்களை அவரது சமகாலப் பொருளாதார, அரசியல், சமூக, கலாச்சாரச் சூழலோடு தொடர்புபடுத்துகிறது என்று கூறுகிறார் பௌவர் (Bauer). வரலாறு எதுவும் செய்வதில்லை, அதற்கென சொத்து எதுவுமில்லை, மனிதன் தான் எதையும் செய்கிறான், சொத்து சேர்க்கிறான், போராடுகிறான் என்றார் கார்ல் மார்க்ஸ். தனி நபர்களின் நடத்தை அவர்கள் சார்ந்த குழு நடத்தையை விட வரலாற்று முக்கியத்துவமுடையது என்று கருதுகிறார் செல்வி வெட்ஜ்வுட். வாழ்க்கை வரலாறுகளை மாமனிதர்களின் வெற்றி தோல்விகளுடன் தொடர்புபடுத்திக் கூறும் வழக்காறு வலுப்பெற்றது. முதலாம் ஜேம்ஸ் இங்கிலாந்தை சரியாகப் புரிந்து கொள்ளாமையால் தான் எலிசபெத் ஏற்படுத்திய முறை வீழ்ச்சியுற்றதாகக் கூறுகிறார் ரௌஸ். அதுமட்டுமல்ல, செங்கிஸ்கானும் இட்லரும் மோசமான மனிதர்களாகையால் அவர்களை வரலாற்றாளர்கள் தூற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். கம்யூனிசம் காரல் மார்க்சின் அறிவுக் குழந்தையாகக் கருதப்படுகிறது. ஸார் இரண்டாம் நிக்கோலசின் மூடச் செயல்களே 1917 போல்ஷ்விக் புரட்சிக்குக் காரணமாக கூறப்படுகிறது. அதேபோன்று ஜெர்மனியின் இரண்டாம் வில்லியம் மற்றும் இட்லரின் தீய செயல்கள் இரண்டு உலகப் போர்களில் முடிந்ததாகக் குற்றம் சாட்டப்படுகிறது. லெனின், மாசேதுங், மகாத்மா காந்தி முறையே ரஷ்யா, சீனா, இந்தியா விடுதலையடைந்ததற்குக் காரணம் என்று கூறப்படுவதில்லையா? வாழ்க்கை வரலாறு வரலாற்று வடிவம் பெறுவதில் பல நன்மைகள் உண்டு. 1)செல்வாக்கு மிக்க வாழ்க்கை வரலாறு படிப்பதற்கு எளிது. சுவையானது. 2) வாழ்க்கை வரலாறு படிப்பவரது மனதைச் செம்மைப் படுத்துகிறது. அனுபவத்தை வளப்படுத்துகிறது. மனிதர்களின் வாழ்க்கையின் மூலமாக வரலாற்று நிகழ்ச்சிகளைப் புரிந்து கொள்வது எளிது. 4) வாழ்க்கை வரலாறு வரலாற்று நாயகர்களை அவர்கள் வாழ்ந்த காலத்தோடு தொடர்புபடுத்திக் காட்டுகிறது. 5) மாமனிதர்கள் வரலாற்றுப் பின்னணியில் சித்தரிக்கப்படுவதாலும், பிரதான கருத்துக்களோடு இணைக்கப்படுவதாலும் வரலாற்றுக் காலம் ஒளி

குறிப்பு

பெற்றுத் திகழ்கிறது. 6) சட்டம், அறிவியல், வைதிகத் துறைகள் வாழ்க்கை வரலாற்று அணுகுமுறையால் அர்த்தமுள்ளதாகின்றன. எனினும் வாழ்க்கை வரலாறு வரலாறு ஆகாது. ஏனெனில் வாழ்க்கை வரலாறு தனி மனிதரைப் பற்றியது. மாறாக வரலாறு தனிநபரை வரலாற்று முழுமையின் ஒரு பகுதியாகப் பார்க்கிறது. தனி மனித இயல்புகள் அல்லது பங்களிப்புகளைக் கொண்டு வரலாற்று நிகழ்ச்சிகளை விவரிக்க அல்லது விளக்க முனைவது குறைபாடுடையது. இத்தகைய அணுகுமுறை "வரலாற்றுப் பார்வை" யைப் பாதித்துவிடும் என்று எச்சரித்துள்ளார் ஆக்டன் பிரபு. வாழ்க்கை வரலாறு இலக்கிய வடிவம் பெறுவதால் வரலாற்றுக்குப் புறம்பானது. காலிங்வுட்டின் வார்த்தைகளில் கூறுவதாயின், வாழ்க்கை வரலாறு அதன் உயர்ந்த நிலையில் கவிதையாகும் அதன் மோசமான நிலையில் பலவந்தமான செறுக்காகும் எப்படிப் பார்த்தாலும் வாழ்க்கை வரலாறு வரலாறாகாது. வாழ்க்கை வரலாறு குறைபாடுடையது. எனினும் இது விரும்பத்தகு வரலாற்று வடிவம் என்பதில் ஐயமில்லை. வாழ்க்கை வரலாறு அணுகுமுறை காலத்தைக் கடந்து நீடிக்கிறது. மாமனிதர் வழிபாடு தேவையற்றது. அதற்காக அவர்களின் சாதனைகளைக் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை. வரலாற்றுத் தலைவர்களை வரலாற்று வட்டத்துக்கு வெளியே தள்ளுவது குளிப்பாட்டிய தண்ணீரோடு குழந்தையைக் கொட்டிவிடுவதைப் போன்றது. ஹெகல் கூறுகிறார்: மாமனிதன் காலத்தின் விருப்பங்களை வார்த்தைகளில் வடித்துக் காட்டுகிறார் அவ்விருப்பம் என்ன என்பதைக் கூறுகிறார் அவ்விருப்பத்தை நிறைவேற்றுகிறார் அவரது செயல் காலத்தின் இதயமாகவும் சாரமாகவும் உள்ளது.

### 2.15.12. பிரபஞ்ச வரலாறு (Universal History)

பிரபஞ்ச வரலாறு மனித உலகையும் இறை உலகையும் உள்ளடக்கியது. இத்தகைய வரலாறு பண்டைய கிரேக்க ரோமானிய வரலாற்றாளர்கள் அறியாத ஒன்று. பிரபஞ்ச வரலாறு, இடைக்கால கிறித்துவ வரலாற்றாளர்களின் கற்பனைப் படைப்பாகும். இது இறையாற்றலின் வெளிப்பாடே வரலாறு என்ற சிந்தனையின் விளைவாகும். பிரபஞ்சத்தைப் படைத்தவன் இறைவன். இறைவன் உயிர் வாழ்வன அனைத்துக்கும் பொதுவானவன். எனவே இறைவனின் வெளிப்பாடான வரலாறும் மனித குலத்துக்குப் பொதுவானது. பிரபஞ்ச வரலாறு ஊக வரலாறு ஆகும். புனித அகஸ்டின் பிரபஞ்ச வரலாற்றுக்கு எழுத்து வடிவம் கொடுத்தார். பிரபஞ்ச வரலாறு பற்றிய சிந்தனை 18-ம் நூற்றாண்டு ஐரோப்பாவில் புத்துயிர் பெற்றது. இச்சிந்தனை வரலாற்று நிகழ்ச்சிகளுக்கிடையேயான தொடர்பை தத்துவார்த்தமாக விளக்கப் பயன்பட்டது. காண்டும் ஹெகலும் தத்துவச் சிந்தனைகளை ஒங்கிணைத்துப் பிரபஞ்ச வரலாற்றுக்கு விளக்கம் கொடுத்தனர். 19-ம் நூற்றாண்டு வரலாற்றுத் தத்துவ வித்தகர்கள் பிரபஞ்ச வரலாற்றை மேலும் வளப்படுத்தினர். காம்டேயும் காரல்

மார்க்கம் தங்களுக்கேயுரிய பாணியில் பிரபஞ்ச வரலாற்றுக்கு வடிவம் கொடுத்தனர். 20-ம் நூற்றாண்டில் இப்பணியை ஸ்பெங்லர், குரோசே, டாயின்பி போன்றோர்கள் மேற்கொண்டனர்.

**மதிப்பீடு**

வரலாறு பல அறைகளைக் கொண்ட மாளிகையைப் போன்றது. வரலாறு சமூக - அரசியல் ஸ்ரீ பொருளாதார இயல்களின் தோற்றுவாய். எந்த அறிவுத் துறைக்கும் வரலாறு உண்டு. வரலாறு பல வகைப்பட்டது. வரலாற்றுக் காலப் பாகுபாடு முறைமையானது (Methodological). எனினும் வரலாற்றாளர் எந்த ஒரு காலப் பாகுபாட்டுக்குள்ளும் தன்னை சிறைப்படுத்திக் கொள்ளலாகாது. ஒரு குறிப்பிட்ட காலப் பகுதி அல்லது இடம் அல்லது நிகழ்ச்சி பற்றிய வல்லமை (Specialisation) இருப்பதில் தவறில்லை . ஆனால் அது வரலாற்றுப் பார்வையைப் (Historical Perspectives) பாதித்து விடக்கூடாது. செயற்கையான தத்துவ வடிவங்களைச் சுமத்தி வரலாற்றைச் சபலத்தின் சிசு (Offspring of Caprice) வாக்கிவிடக் கூடாது என்று எச்சரிக்கிறார் காலிங்வுட். இதை மாயத் தோற்றம் (ருடைட-ழுறளைி) என்று கூறுகிறார் பி.கல்லி. தல வரலாறு (Local History) இன்னும் அதற்குரிய சிறப்பைப் பெறவில்லை. டச்சுக் குடியரசின் வெளிநாட்டுக் கொள்கையைப் புரிந்து கொள்ள தல வரலாறு பயனுடையதாக இருந்ததாகக் கூறியுள்ளார் ரெனியர். தல வரலாற்றாய்வு பிரெஞ்சுப் புரட்சி வரலாற்றின் தரத்தை உயர்த்தியது. தல வரலாறுகள் ஒன்றுக்கொன்று தொடர்புடைய கடந்த கால நிகழ்வுகளைக் கோர்வையாகத் தெரிந்து கொள்ள உதவ வேண்டும் என்று விரும்புகிறார் கிளார்க் (G.N.Clark)

## 2.16. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

1. எந்த இரண்டு சூழல்களில் ‘வரலாறு’ என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது?

2. வரலாற்றுக்கு முந்தைய மனித இனம் பற்றிய ஆய்வு எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது?

3. இந்திய வரலாற்றை படிக்கும் மாணவருக்கு காலவரிசை பற்றிய சரியான அறிவு ஏன் இன்றியமையாததாகிவிட்டது?

4. உலக வரலாற்றில் எண்ணற்ற அத்தியாயங்களை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தது எது?

5. அனாக்ஸிமாண்டர் எந்தக் கண்டுபிடிப்புக்குப் பெருமை சேர்த்தார்?

**குறிப்பு**

6. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வளர்ந்த சில புவியியல் சமூகங்களின் பெயரைக் குறிப்பிடவும்.

7. உளமொழியியல், நரம்பியல் மொழியியல் மற்றும் மொழி போன்ற துறைகள் என்ன?

8. இயற்கை அறிவியல் ஏன் 'கடின அறிவியல்' என்று குறிப்பிடப்படுகிறது?

9. அரசியலமைப்பு வரலாற்றின் கீழ் எந்த கருத்துக்கள் வரையறுக்கப்பட்டுள்ளன?

10. சட்ட வரலாற்றில் சில முக்கியமான படைப்புகளைக் குறிப்பிடவும்.

## 2.17. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்

1. "வரலாறு" என்ற வார்த்தை இரண்டு சூழல்களில் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது. ஒன்று, கடந்த கால நிகழ்வுகளை விவரிக்கிறது. மற்றொன்று அந்தக் கருத்துக்களைச் சுற்றியுள்ள கருத்தும் பார்வைகளும்.

2. வரலாற்றுக்கு முந்தைய மனித இனம் பற்றிய ஆய்வு நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது, அதாவது:

   1. பழமையான கற்காலம்
   2. முன்னாள் கற்காலம்
   3. வட கற்காலம்
   4. உலோக காலம்

2. இந்திய வரலாற்றைப் படிக்கும் மாணவருக்கு காலவரிசை பற்றிய நல்ல அறிவு இன்றியமையாததாகிவிட்டது, ஏனெனில் பதிவுகளில் தேதிகளும் காலங்களும் மிகவும் குழப்பமாக இருப்பதால், பண்டைய இந்திய வரலாற்றின் பல வம்சங்களைப் பொறுத்து சரியான காலவரிசையை நிர்ணயிப்பது பெரிய ஆராய்ச்சியாக மாறியுள்ளது

## 2.18. அத்தியாயச் சுருக்கம்

- கடந்த காலத்தின் சான்றுகள் எவ்வளவு அதிகமாக சேகரிக்கப்படுகிறதோ, அவ்வளவு சிறப்பாகவும் எளிதாகவும் வரலாற்றாசிரியர் கடந்த காலத்தின் படத்தை வரையலாம். எனவே, வேறு வார்த்தைகளில் கூறுவதானால், வரலாறு என்பது கடந்த காலத்தை ஆதாரத்துடன் விளக்குவது, கதை சொல்பவரின் பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- இந்தியாவில், வரலாற்றின் ஆதாரங்கள் புகழ்பெற்ற வேதங்கள்- ரிக்வேதம், சம்வேதம், யஜுர்வேதம் மற்றும் அதர்வ வேதம் மற்றும் புராணங்கள். இவை வரலாற்றுச் சான்றுகள் மற்றும் கலைப்பொருட்கள் என்று அழைக்கப்படுகின்றன.
- ஏறக்குறைய அனைத்து நாகரிகங்களும் தங்களின் வளர்ச்சிக்கு ஏதுவான நதி பள்ளத்தாக்குகளை ஒட்டியே வளர்ந்து செழித்து வளர்ந்தன என்பது நிச்சயமாக உலகம் அறிந்தது. சிந்து சமவெளி நாகரீகம் மற்றும் மெசபடோமிய நாகரிகத்தின் எடுத்துக்காட்டுகள் அனைவரும் படிக்கும் வகையில் நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.
- நாம் நிலையான மற்றும் விரைவான மாற்றத்தின் சகாப்தத்தில் இருக்கிறோம். என்ற அளவுகோல்கள்
- அளவீடுகள் அசல் மூலங்களிலிருந்து (நாம் வெளிப்படும் இடத்திலிருந்து) தர்க்கரீதியில் இருந்து வெகு தொலைவில் உள்ள ஒன்றுக்கு மாறிவிட்டன, மேலும் எதிர்காலத்தில் நாம் எங்கு இருக்கப் போகிறோம். இது நம் வாழ்வில் இருந்து முன்னோர்களின் முக்கியத்துவத்தை பறித்து விட்டது.

## 2.19. முக்கிய சொற்கள்

- **பேலியோகிராபி:** இது பழங்கால அல்லது பழமையான எழுத்துக்கள் மற்றும் கல்வெட்டுகளின் ஆய்வு மற்றும் வரலாற்று எழுத்து முறைகள் மற்றும் கையெழுத்துப் பிரதிகளை புரிந்துகொள்வது மற்றும் விளக்குவது.
- **சிகிலோகிராபி:** காப்பக ஆவணங்களை அங்கீகரிக்கப் பயன்படுத்தப்படும் மெழுகு, ஈயம், களிமண் மற்றும் பிற முத்திரைகளைப் படிப்பது அறிவார்ந்த துறையாகும்.
- **நாணயவியல்:** இது நாணயங்கள், டோக்கன்கள் மற்றும் காகித பணம் மற்றும் சில சமயங்களில் தொடர்புடைய பொருள்கள் (பதக்கங்கள் போன்றவை) ஆய்வு அல்லது சேகரிப்பு ஆகும்.
- **புவியியல் புள்ளியியல்:** இது எந்த வகையான இடஞ்சார்ந்த ∴ தற்காலிகத் தரவையும் மாதிரியாக்குவதற்கான ஒரு ஒலி கட்டமைப்பாகும். இது தொடர்புடைய நிச்சயமற்ற தன்மையின் அளவீடுகளுடன், மாதிரி இல்லாத இடங்களில் நிகழ்வுகளின் துல்லியமான மதிப்பீடுகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- **தன்னலக்குழு**: இது ஒரு சிலரின் அரசாங்கம், குறிப்பாக சர்வாதிகார சக்தி ஊழல் அல்லது சுயநல நோக்கங்களுக்காக ஒரு சிறிய மற்றும் சலுகை பெற்ற குழுவால் பயன்படுத்தப்படுகிறது.

## 2.20. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

குறிப்பு

**குறுகிய வினாக்கள்**

1. வரலாற்றை மீட்டெடுப்பதற்கும் அதை திறம்பட விவரிப்பதற்கும் முக்கியமானது எது?

2. வரலாற்றில் காலவரிசையின் பங்கு என்ன?

3. புவியியல் ஆராய்ச்சியில் நான்கு வரலாற்று மரபுகள் யாவை?

4. மொழியின் பொருள் பற்றிய ஆய்வு எதைப் பற்றியது?

5. இயற்கை அறிவியலின் ஐந்து பிரிவுகள் யாவை?

**விரிவான வினாக்கள்**

1.பேலியோகிரா.ஃ.பியின் வரலாறு மற்றும் நன்மைகளைப் பற்றி விவாதிக்கவும்.

2. சிகில்லோகிராபியின் கருத்தை பகுப்பாய்வு செய்யுங்கள்.

3. வரைபடங்களின் வரலாறு மற்றும் பரிணாமத்தை விளக்குங்கள்.

4. வரலாற்றிற்கும் அரசியலுக்கும் உள்ள உறவை விவரிக்கவும்.

5. சமூகவியலில் வரலாற்றின் பங்களிப்பை ஆராயுங்கள்.

## 2.21. கூடுதல் வாசிப்புகள்

Warren, John. 1998. *The Past and Its Presenters*: An Introduction to Issues in Historiography. London: Hodder & Stoughton Educational.

Ferro, Marc. 2003. *The Use and Abuse of History*: Or How the Past is Taught to Children. Abingdon: Routledge.

E. Sreedharan. 2004. *A Textbook of Historiography: 500 BC to AD 2000*. New Delhi: Orient Blackswan.

Sharma, Arvind. 2003. *Hinduism and its Sense of History*. New Delhi: OUP India.

Iggers, Georg G. 2005. *Historiography in the 20th Century: From Scientific Objectivity to the Postmodern Challenge*. Connecticut: Wesleyan University Press.

Stuart, Hughes H. 1964. *History as Art and as Science.* New York: Joanna Cotler Books.

Fea, John. 2013. *Why Study History? Reflecting on the Importance of the Past*. Washington: Baker Publishing Group.

குறிப்பு

# அலகு-3

## வரலாறு ஒரு கலையா அல்லது அறிவியலா?

உள்ளடக்கம்

3.1. முன்னுரை
3.2. நோக்கங்கள்
3.3. வரலாறு கலையா? அறிவியலா? (Is History Art or Science?)
3.3.1. வரலாறு கலைதான்
3.4. வரலாறு அறிவியல் தான்
3.4.1. வரலாற்றின் அறிவியல் மரபு
3.5. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்
3.6. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்
3.7. அத்தியாயச் சுருக்கம்
3.8. முக்கிய சொற்கள்
3.9. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
3.10. கூடுதல் வாசிப்புகள்

## 3.1. முன்னுரை

வரலாற்றின் தன்மை குறித்து விவாதம் நடந்து வருகிறது. வரலாறு என்பது கலையா அல்லது அறிவியலா என்பதுதான் கேள்வி. வரலாற்றை ஒரு அறிவியல் என்று நிரூபிப்பதற்காக பல வாதங்கள் கொடுக்கப்பட்டு, அந்த நோக்கத்திற்காக இரண்டிற்கும் இடையே ஒற்றுமைகள் வரையப்பட்டுள்ளன. மறுபுறம், வரலாறு ஒரு கலை என்ற கருத்தை ஆதரிப்பவர்களும் உள்ளனர். அறிஞர்களின் கூற்றுப்படி அறிவியலுக்கும் கலைக்கும் உள்ள ஒற்றுமைகள் பல. விஞ்ஞானம் மற்றும் வரலாறு ஆகிய இரண்டும் உண்மையை நிலைநாட்டுவதற்கான இறுதி நோக்கத்துடன் தொடர்புடையவை, இரண்டும் தங்கள் வளாகத்தின் செல்லுபடியை நிரூபிக்க கண்காணிப்பு மற்றும் பரிசோதனையை பெரிதும் சார்ந்துள்ளது, இரண்டும் நிகழ்வுகளுக்கு எல்லா நேரங்களிலும்

குறிப்பு

பொருந்தக்கூடிய பொதுவான சட்டங்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. .

அறிவியலும் கலையும் வரலாற்றில் ஒன்றோடொன்று துணைபுரிகின்றன, ஏனெனில் விஞ்ஞானம் முன்னர் குறிப்பிடப்பட்ட பல பணிகளைச் செய்கிறது மற்றும் வரலாற்றாசிரியர் பல ஆண்டுகால வரலாற்றாசிரியர் அனுபவத்தின் மூலம் ஆய்வு, ஆய்வு மற்றும் தொடர்புபடுத்தும் பரந்த அணுகுமுறையைக் கொண்டுவருகிறது, உண்மையான கலை அணுகுமுறையாக மர்மங்களைத் தீர்க்கும் திறன்.

## 3.2. நோக்கங்கள்

**இந்த அத்தியாயத்தை படிப்பதன் மூலமாக கீழ்காண்பனவற்றை புரிந்து கொள்ள இயலும்**

- ஜே.பி.புரி மற்றும் அகஸ்டஸ் காம்டே ஆகியோரால் முன்மொழியப்பட்ட ஒரு விஞ்ஞானம் என்பது வரலாறு பற்றிய கருத்தாக்கத்தைப் பற்றி விவாதிக்கவும் இயலும்
- வரலாறு ஒரு கலை என்ற பார்வையையும் அதன் ஆதரவாளர்களின் கருத்துக்களையும் ஆராய இயலும்

## 3.3. வரலாறு கலையா? அறிவியலா? (Is History Art or Science?)

### 3.3.1. வரலாறு கலைதான்

வரலாற்றின் கலை மரபு வரலாறு கலையாகப் பிறந்து, அறிவியலாக மலர்ந்து, தனித் தன்மையுடைய அறிவுத் துறையாகத் திகழ்கின்றது. துவக்கத்தில் நாட்டுப் பாடல்களும் புராணக் கதைகளும் வரலாறாகக் கருதப்பட்டன. வரலாற்றின் தந்தையாகக் கருதப்படும் ஹெரோடொட்சின் வரலாறு இன்றும் பேசப்படுவதற்குக் காரணம் அதன் கதைக் கூறுகள் தான் கலையின் வடிவம்தானே கதை? 19-ம் நூற்றாண்டின் இறுதியில் டில்தேயும், சிம்மெலும் வரலாற்றைக் கலையோடு ஒப்பிட்டனர். பின்னர் ரௌஸ் என்னதான் வரலாறு அறிவியல் முறைகளைக் கையாண்டு எழுதப்பட்டாலும் அது என்றைக்குமே கலையாக நீடிக்கும் என்று உறுதியாகக் கூறினார். பாரக்ளா வரலாற்றை இயற்கை விஞ்ஞானத்தின் அளவுக்குத் தாழ்த்தி விடக்கூடாது என்று எச்சரித்தார். குரோசே, காலிங்வுட் போன்ற வரலாற்றாளர்கள் அறிவியல் கோட்பாடுகளைக் கையாண்டாலும் வரலாற்றைக் கலை நயத்தோடு எழுத முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

**குறிப்பு**

வரலாறு வரலாற்றாளரின் ஆளுமை வெளிப்பாடு வரலாறு என்பது மனிதனுக்கு வெளியே இருப்பதன்று அது மனித மனம் மற்றும் கற்பனை வழியே வடிகட்டப்பட்டு வெளிப்படுவதாகும் என்று கூறுகிறார் கொமாகர். வரலாற்று விவரங்களுக்கு வடிவம் கொடுக்கும் போது வரலாற்றாளர் கலைஞர் ஆகிறார். மேலும் வரலாற்றுக்குப் பொருள் விளக்கம் அளிப்பதற்கு அறிவாற்றல், உழைப்பு, விடாமுயற்சி ஆகியவற்றைவிட நுண்ணறிவும், தனித்தெண்ணும் திறனும், தீர்மானிக்கும் தகுதியும், கலை உணர்வும் அதிகம் தேவை. வரலாற்றை வரைவதற்கு வரலாற்றாளருக்கு முன் நோக்கும், தொலை நோக்கும் வேண்டும். ஏனெனில் வரலாற்றாளரின் கண்டுபிடிக்கும் திறன் குறைவு ஆனால் அவரது நுண்ணறிவுக்கு எல்லை இல்லை என்று கூறுகிறார் ஆர்தர் ஸ்லெசிங்கர்.

வரலாறு இலக்கியப் படைப்பு வரலாறு இலக்கியப் படைப்பாகும். வரலாறு இலக்கிய விதிகளுக்குக் கட்டுப்பட்டது. சிறந்த வரலாற்றுப் படைப்புகள் முன்மாதிரி இலக்கியங்களாகப் போற்றப்படுகின்றன. குறைபாடுடைய வரலாற்று நூல்கள் கூட இலக்கிய நடைக்காகப் படிக்கப்படுவதுண்டு! எடுத்துக்காட்டாக கிளாரண்டன் பிரபு இங்கிலாந்தின் உள்நாட்டுப் போரைப் பற்றி ஒருதலை சார்புடைய வரலாற்றை எழுதினார். மோட்லே ஸ்பெயின் எவ்வாறு நெதர்லாந்தை மோசமாக ஆட்சி செய்தது என்று நடுநிலை பிறழ்ந்து எழுதினார். எனினும் இவர்களது வரலாற்று நூல்கள் இலக்கிய நயத்துக்காக விரும்பிப் படிக்கப்பட்டன. இலக்கிய நயத்தோடு எழுதப்படாத வரலாற்று நூல்கள் படிக்கப்படுவதில்லை.

வரலாறு ஓவியம் போன்றது வாழ்க்கை ஓவியம் வரைவதைப் போன்றது் கணக்குப் போடுவதல்ல என்று கூறினார் பிரபல அமெரிக்க நீதிபதி ஹோம்ஸ். மனித நிகழ்வுகளைப் பற்றி வரலாறு எழுதுவது ஓவியம் தீட்டுவதைப் போன்றது. புகைப்படம் எடுப்பதல்ல கடந்த கால நிகழ்ச்சிகளை நிகழ்ந்தவாரே படம் பிடித்துக் காட்ட முடியாது. ஆனால் அவற்றை இவ்வாறு தான் நிகழ்ந்திருக்கக் கூடும் என்று கற்பனைத் திறனோடு எழுதிக் காட்ட இயலும். வரலாறு நிகழ்ச்சித் தோரணமோ அல்லது புள்ளி விவரத் தொகுப்போ அல்ல. மாறாக வரலாறு என்பது விவரங்கள், நிகழ்ச்சிகள், சான்றுகள் ஆகியவற்றைக் கலவைப் பொருள்களைக் கொண்டு வரையப்படும் எழில்மிகு எழுத்தோவியமாகும். கிப்பன், கார்லைல், மெக்காலே, டிரெவெல்யன், டுக்ளஸ், பிரீமன், ஆலன் நெவின்ஸ், பிரான்சிஸ் பார்க்மன் போன்றோர் வரலாற்றை எழுத்தோவியமாக வரைந்து பெரும் புகழ் பெற்றனர்.

வரலாற்றின் தனித்தன்மை இத்தாலிய வரலாற்று அறிஞரான பெனிடெட்டோ குரோசே வரலாறு கலை தான் என்று வாதிட்டார். அவரது கூற்றுப்படி கலை என்பது புலனின்பத்துக்கான வழியோ, இயற்கை உண்மையின் பிரதிநிதித்துவமோ, தொடர்புகளைப் பற்றிய முறையோ அல்ல. மாறாக கலை என்பது தனித்தன்மையைப் (Individuality) பற்றியது. கலைஞன் இத்தனித்தன்மையைத்தான் பார்க்கிறான். பிரதிபலிக்கிறான். வரலாறு தனித்தன்மையுடைய சான்றுகளைப் பற்றியது.

அறிவியலைப் போன்று பொதுவை (General) பற்றியதல்ல. எனவே குரோசே வரலாறு விளக்கமான விஞ்ஞானம் (Descriptive Science) என்ற கூற்றை ஏற்கவில்லை. இச்சொற்றொடர் முரண்பட்ட வார்த்தைகளைக் கொண்டது என்றார். வரலாற்றாளர் ஆதாரங்களின் தனித்தன்மையை மட்டுமே பார்க்கிறார். ஒரு தேர்ந்த கலைஞரைப் போன்று ஆதாரங்களின் தனித்தன்மை மாறாமல் வரலாறு என்ற கலைப்படைப்பைத் தருகிறார்.

வரலாறு ஒரு சிறப்புக் கலை அறிவியல் அணுகுமுறையுடன் வரலாற்றை எழுத வேண்டும் என்று வலியுறுத்தும் காலிங்வுட் வரலாற்றைச் சிறப்பான கலை என்பதை ஏற்றுக் கொள்கிறார். அதாவது வரலாறு ஒரு கலை என்பதை நிபந்தனையுடன் ஒத்துக் கொள்கிறார். வரலாறைக் கலையென்று கருத வேண்டுமாயின் அதை மிகவும் சிறப்புப் பண்புடைய கலையாகப் பார்க்க வேண்டும் என்று கூறுகிறார் காலிங்வுட். அதற்குக் காரணம் வரலாறு உண்மையைக் கற்பனைக் கண் கொண்டு பார்க்கிறது. ஆனால் கலை கற்பனையையே உண்மையெனக் காட்டக்கூடும். வரலாறு நிகழ்ந்ததை விவரிக்கிறது. கலை நிகழாததையும் சாத்தியமானதாகக் காட்டவல்லது. எனினும் வரலாற்றாளரும் கலைஞரும் தாங்கள் கண்ட காட்சிகளைப் பிறருக்கும் காட்டுவதால் வரலாறும் கலையும் பொதுப் பண்பைக் கொண்டுள்ளன எனலாம். ஜி.ஜே.ரெனியர் குறிப்பிடுவதைப் போன்று வரலாற்று அறிவு காலத்தின் கோலங்களைத் தாண்டி நகர்ந்து கொண்டிருக்கிறது் வரலாற்றுக் கலை காலத்தால் அழியா மலராகும்.

## 3.4. வரலாறு அறிவியல் தான்

### 3.4.1. வரலாற்றின் அறிவியல் மரபு

வரலாறு என்ற சொல் ஆராய்தல் என்ற பொருளுடைய இஸ்டோரியா என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து பிறந்தது. பண்டைக்கால கிரேக்க வரலாற்றாளர் தூசிடைடஸ் அறிவியல் வரலாற்றின் தந்தை என்று போற்றப்படுகிறார். தூசிடைடசின் அறிவியல் அணுகுமுறை இடைக்காலத்தில் கைவிடப்பட்டாலும் மறுமலர்ச்சிக் காலத்தில் புத்துயிர் பெற்றது. 17, 18-ம் நூற்றாண்டுகளில் வரலாறு அறிவியல் தாக்கத்துக்கு உள்ளாயிற்று. நியூட்டனின் கண்டுபிடிப்பு, ஸ்பென்சரின் சமூக அறிவியல், டார்வினின் பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு ஆகியவை வரலாற்று வரைவியலை அறிவியல் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தன. விஞ்ஞானத்தின் வளர்ச்சி மனித முன்னேற்ற வரலாற்றை வழிமொழிந்து உறுதி செய்தது என்று கூறுகிறார் இ.எச்.கார். வரலாறு ஒரு அறிவியல் அதற்குக் கூடியதும் அல்ல, குறைந்ததும் அல்ல என்று உறுதியாகக் கூறினார் ஜே.பி.பியூரி. வரலாறு கடந்த காலத்தில் நிகழ்ந்தவற்றை நிகழ்ந்தவாறே கூறவேண்டும் என்று அறிவியல் வரையறை கொடுத்த காம்டே கணித அறிவியலைக் கொண்டு வரலாற்று விதிகளை வகுத்தார்.

**குறிப்பு**

வரலாறு என்ற அறிவியலுக்கும் இலக்கியத்துக்கும் சம்பந்தமில்லை என்று வாதிட்டார் ஜான் சீலி. வரலாறு அறிவியலே என்று அறிவித்தார் எர்னஸ்ட் பெர்ன்ஹீம்.

வரலாற்றில் அறிவியல் கூறுகள் வரலாறு ஒரு அறிவியல் என்று கருதப்படுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவையாவன :

1. வரலாறு உண்மையைக் கண்டறிவதற்கான முயற்சியாகும். புதிய சான்றுகளைக் கண்டுபிடிப்பதில் குறியாக உள்ளது வரலாறு. வரலாறு உண்மையைக் கண்டறிவதற்கான மார்க்கமேயன்றி முடிந்த முடிவல்ல.

2. வரலாறு அறிவியலைப் போன்றே ஆதாரங்களைத் தேடிச் சேகரித்து, வகைப்படுத்தி, பகுத்தாய்ந்து கடந்த கால நிகழ்வுகளை உறுதி செய்கிறது.

3. வரலாறு கடந்த காலத்தைப் பற்றிய பல வினாக்களுக்கு விடை காண்பதற்கான ஆய்வை மேற்கொள்கிறது. ஒவ்வொரு அறிவியலும் அதன் வழியில் விடை காண விழைகிறது. அதேபோன்று வரலாறும் அதன் தனித் தன்மைக்கேற்ப விடை காண்பதில் ஈடுபடுகிறது. குறிப்பிட்ட காலத்தில் - இடத்தில் என்ன நிகழ்ந்தது என்பதைக் கண்டுபிடிக்கிறது.

4. வரலாறு அறிவியலைப் போன்றே அறியாமையிலிருந்து அறிவுக்கும், தெரியாத நிலையிலிருந்து தெரிந்த நிலைக்கும், ஊகத்திலிருந்து உண்மைக்கும், வரையறையில்லா நிலையிலிருந்து வரையறுக்கப்பட்ட நிலைக்கும் வழிகோலுகிறது.

5. வரலாறு என்ற மாளிகை ஆதாரங்கள் என்ற அடித்தளத்தின் மீது எழுப்பப்படுகிறது. கொட்டிக் கிடக்கும் கற்கள் கட்டடம் ஆகாது. அதேபோன்று சேகரிக்கப்பட்ட சான்றுகள் மட்டும் வரலாறு இல்லை. சான்றுகள் அறிவியல் முறையைக் கொண்டு ஆராயப்பட்டு உண்மையை உறுதி செய்யப்படுகிறது. வரலாறு தர்க்க ரீதியான படைப்பாகும்.

6. வரலாறு அறிவியல் முறைகளைப் பின்பற்றுகிறது. கூர்ந்து கவனித்தல், தகவல்களைத் திரட்டல், அவற்றைப் பகுத்தாய்ந்து ஒப்பிட்டுப் பார்த்தல், தற்காலிகக் கோட்பாட்டு உருவாக்கம், அதை நிரூபித்தல் போன்ற அறிவியல் முறைகளை வரலாற்றாளர்கள் கடைப்பிடிக்கின்றனர். வரலாற்றின் தர்க்க அறிவியல் முறை (Inductive Method) பின்பற்றப்படுகிறது.

7. வரலாறு முறைப்படுத்தப்பட்ட அறிவு (Systematised Knowledge) ஆகும். வரலாறு தகவல் தோரணமோ அல்லது கதைகள் கிடங்கோ அல்ல. மாறாக வரலாறு கடந்த கால நிகழ்ச்சிகள், நடவடிக்கைகள், நிறைவுகள் பற்றிய ஒழுங்குபடுத்தப்பட்ட அறிவாகும்.

8. வரலாறு கடந்த காலத்தைப் பற்றிய காரண - காரியத் தொடர்பு பற்றிய விளக்கமளிக்கிறது. வரலாற்று நிகழ்வுகளைப் பற்றி மட்டும்

விவரிக்காமல் அவற்றுக்கான காரணங்களும் அவற்றின் விளைவுகளும் கூறப்படுகின்றது.

குறிப்பு

9. வரலாற்றாளர் அறிவியல் உணர்வுடன் வரலாற்றை எழுதுகிறார். துல்லியமும் (Accuracy), நடுநிலையும் (Objectivity), நம்பகத் தன்மையும் (Reliability), அறிவியல் உணர்வின் வெளிப்பாடுகளாகும். உண்மை, முழு உண்மை, உண்மையைத் தவிர வேறெதுவுமில்லை என்ற அறிவியல் நெறி வரலாற்று வரைவில் பின்பற்றப்படுகிறது.

10. வரலாற்றாளர் வரலாற்றுச் செயல்பாங்குகளுக்கு (Historical Processes) ஒளி கொடுக்கிறார். பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்கிறார். வரலாற்றாளர் வரலாற்று நிகழ்ச்சிகளில் மட்டும் அக்கறை கொள்வதில்லை. அவற்றின் செயல்முறையிலும் குறியாக உள்ளார்.

வரலாறு அறிவியல் அல்ல என்பதற்கான காரணங்கள் வரலாறு அறிவியல் அல்ல என்று கூறுவோர் காட்டும் காரணங்களாவன :

1. வரலாற்று உண்மைகள் அனைவருக்கும் பொதுவானவை அல்ல.

2. பொது விதிகளைக் கண்டுபிடிப்பது வரலாற்றாளரின் வேலையல்ல.

3. வருங்கால வரலாற்று நிகழ்ச்சிகளை முன்கணிப்பு செய்ய முடியாது.

4. வரலாற்றுச் சான்றுகள் முழுமையானவை அல்ல. ஆவணங்கள் குறைபாடுடையவை.

5. வரலாறு வரலாற்றாளரின் மனம், கற்பனை வழியாக வடிகட்டப்பட்டே வெளிப்படுகிறது.

6. அழிந்த சான்றுகளை மீண்டும் உருவாக்க முடியாது. உதாரணமாக பொலிபியஸ் எழுதிய 40 புத்தகங்களில் 5 மட்டுமே எஞ்சியுள்ளன. லிவியின் 142 புத்தகங்களில் 35 மட்டுமே கிடைத்துள்ளன. அலெக்சாண்டிரிய நூலகம் எரிக்கப்பட்டது. உலகப் போரின் போது அழிந்து போன ஆவணங்களுக்குக் கணக்கில்லை.

7. பொருத்தமான சான்றுகள் வரலாற்றாளரின் கட்டுப்பாட்டில் இல்லை. வரலாற்றாளர் தனது விருப்பு வெறுப்புக்கேற்ப சான்றுகளுக்கு வடிவமும் விளக்கமும் கொடுக்கிறார்.

8. வரலாறு வெற்றி பெற்றோரால் தீர்மானிக்கப்படுகிறது. ரோமானியர்கள் தான் பியூனிக் போர்கள் பற்றி எழுதினர். கிறித்துவர்களே கிறித்துவத்தின் வெற்றி பற்றிக் கூறினர். ஸ்பானியர்கள் தான் மெக்சிகோ, பெரு நாடுகளை வெற்றி கண்டதை விவரித்தனர்.

9. வரலாற்றில் தத்துவம் திணிக்கப்படுகிறது.

குறிப்பு

10. வரலாறும் கற்பனையும் பிரிக்க முடியாதவை.

வரலாறு சிறப்பான அறிவியல் "இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஜே.பி. பியூரி (1903) வரலாறு அறிவியலேயன்றி வேறில்லை என்று கூறி சர்ச்சைப் புயலைக் கிளப்பிவிட்டார். அச்சர்ச்சையில் கலந்து கொண்ட காலிங்வுட் வரலாறு ஒரு சிறப்பான அறிவியல் (A Special Science) என்று கூறினார். காலிங்வுட்டின் கருத்து அனைவரது கவனத்தையும் கவர்ந்தது. இவர் இயற்கை உலகு (World of Nature), மனிதனின் கடந்த கால உலகு (World of Human Past) ஆகிய இருவேறு உலகங்களுக்கிடையேயான வேறுபாட்டைக் கோடிட்டுக் காட்டினார். முன்னது அறிவியல் ஆதிக்கத்துக்குட்பட்டது. பின்னது வரலாற்று ஆட்சிக்குட்பட்டது. எனினும் வரலாறு ஒழுங்குபடுத்தப்பட்ட அறிவு என்பதில் ஐயமில்லை. ஆனால் அந்த அறிவு குறிப்பிட்ட முறையில் ஒழுங்குபடுத்தப்படுகிறது. போர்களும் புரட்சிகளும் நிகழ்பவை வரலாற்றாளர்களால் உருவாக்கப்படுபவை அல்ல. இவற்றை மீண்டும் நேரில் காணவோ, நிகழ்த்திக் காட்டவோ, ஆய்வுக் கூடத்தில் பரிசோதனை செய்யவோ முடியாது. சூறாவளிகளையும் சூரிய கிரகணங்களையும் ஒப்பிட்டு ஆய்வதைப் போன்று வரலாற்று நிகழ்வுகளை ஆராய இயலாது. ரோஜாப்பூப் போர்களை (Wars of Roses) மைசூர்ப் போர்களுடன் (Mysore Wars) ஒப்பிட முடியுமா? எனவே அறிவியலும் வரலாறும் அதனதன் வழிகளில் அறிவை முறைப்படுத்திக் கொள்கின்றன. வரலாற்று அறிவை நிகழ்ந்தவற்றோடு மட்டுமே தொடர்பு படுத்த முடியும். எனவே வரலாறு சிறப்பான அறிவியலாகத் திகழ்கிறது.

சமூக அறிவியல் மனிதன் கூடிவாழும் குணமுடையவன். வரலாறு சமூகமாகக் கூடி வாழும் மனிதனின் நடவடிக்கைகளைப் பற்றியது. சமூக வாழ்வின் செயல்கள் அனைத்தும் வரலாற்று எல்லைக்குள் வரும். எனவே வரலாற்றாளர் மனித சமுதாயத்தில் காணப்படுகிற சிறப்புமிக்க செயற்பாடுகளை ஆராய்கிறார். பண்டைக் கால மக்களின் வாழ்க்கையும் வாழ்க்கை முறைகளும் அவரது ஆய்வும் பொருளாகின்றன. பிரெஞ்சு வரலாற்று அறிஞரான அகஸ்டே காம்டே (Auguste Comte) உயிரியல் பரிணாம வளர்ச்சியைப் போன்றே சமூகப் பரிணாம வளர்ச்சியும் நடைபெறுவதாகக் கூறினார். இக்கருத்தை வலியுறுத்த சமூக சீரமைப்புக்குத் தேவையான அறிவியல் பணிக்கானத் திட்டம் என்ற நூலை எழுதினார். அது மட்டுமல்ல. அவர் வரலாற்றை சமூக இயற்பியல் (Social Physics) என்று அழைத்தார். காம்டே சமூகவியலின் தந்தை என்று போற்றப்படுகிறார். எங்கல்ஸ் குடும்பத்தின் தோற்றம் தனி நபர் சொத்து மற்றும் அரசு பற்றி எழுதினார். ஜேம்ஸ் பிரேஸர்ஸ் மனித சமுதாயக் கலாச்சாரம் பற்றி ஆய்வுரைகள் நிகழ்த்தினார். லெவிஸ் மார்கன் அமெரிக்கர்களின் சமூக வாழ்க்கை பற்றி ஆராய்ச்சி செய்துள்ளார். டிரெவல்யனின் இங்கிலாந்தின் சமூக வரலாறு இன்றைக்கும் சமூக அறிவியலுக்கான முன்மாதிரியாக விளங்குகிறது.

"இரண்டுக்கும் இடைப்பட்ட இல்லம்" கலை கலை தான். அறிவியல் அறிவியல்தான். அதேபோன்று வரலாறு வரலாறு தான்! கலைக்கும் அறிவியலுக்கும் வரலாறு இருப்பதைப் போல் வரலாற்றிலும் கலை மற்றும் அறிவியல் கூறுகள் உள்ளன. வரலாறு இலக்கியச் சுவையோடு எழுதப்படுவதாலும், கடந்த காலத்தை உருவமைப்பதற்குக் கற்பனையைப் பயன்படுத்துவதாலும், வரலாற்று உண்மைகளை விவரிப்பதற்குத் தனிப் பாணியைப் பின்பற்றுவதாலும், வரலாற்று நிகழ்ச்சிகளுக்கிடையே சமநிலையைக் காண்பதாலும், வரலாற்று உணர்வுகளையும் உந்துதல்களையும் மதிப்புகளையும் வெளிப்படுத்துவதாலும், வரலாற்றுக்கும் வரலாற்றாளருக்குமிடையே வேறுபாடின்மையாலும் கலையாக கருதப்படுகிறது. அதே போன்று வரலாறு உண்மையைக் காண விழைவதாலும், தெரிந்தவற்றிலிருந்து தெரியாதவற்றைக் கண்டுபிடிக்க முயற்சிப்பதாலும், கடந்த காலத்தைப் பற்றிய வினாக்களுக்கு விடைகாண முற்படுவதாலும், அறிவு வழி ஆராய்வதாலும், அறிவியல் உணர்வோடு தர்க்க முறைகளைப் பின்பற்றுவதாலும், நடுநிலையோடு ஆய்வு முடிவுகளை வெளியிடுவதாலும் அறிவியல் என்று அழைக்கப்படுகிறது. எனினும் வரலாறு இயற்பியல் (Physics) போன்று முழுமையான அறிவியலன்று இலக்கியம் (Literature) போன்று முழுமையான கலையுமல்ல. வரலாறு கலைதான் என்று ரௌஸ் போன்றோ அல்லது வரலாறு அறிவியல் தான் என்று பியூரி போன்றோ உறுதியாகக் கூற இயலாது. ஏனெனில் வரலாறு கலை மற்றும் அறிவியல் கூறுகளைக் கொண்ட தனித்தன்மையுடைய இயல் ஆகும். ஜி.எம்.டிரெவல்யன் கூறுவதைப் போன்று வரலாறு அறிவியலுக்கும் கலைக்கும் இடைப்பட்ட இல்லம் (History is a half-way house between science and art) ஆகும். வரலாற்றாளர் உண்மையைக் கண்டுபிடிக்க அறிவியல் முறையையும் அதை விவரிக்கக் கலை நயத்தையும் திறமையுடன் பயன்படுத்துகிறார்.

### மதிப்பீடு

வரலாறு கலையா அல்லது அறிவியலா என்ற சர்ச்சை பயனற்றது என்று கருதுகிறார் பொட்ரண்டு ரஸ்ஸல். கலையும், அறிவியலும் கலந்ததே வரலாறு. டிரெவல்யனின் இங்கிலாந்தின் சமூக வரலாறு இதற்கான சிறந்த எடுத்துக்காட்டு என்று கூறுகிறார் ரஸ்ஸல். எனினும் வரலாற்றுக்கென அடிப்படையான அறிவியல் தனித்தன்மைகள் எதுவுமில்லை என்று கூறுவோரும் உளர். இவர்கள் நேர்க்காட்சிவாதிகள் (Positivists) ஆவர். மாறாக இலட்சியவாதிகள் (Idealists) வரலாற்றின் தனித் தன்மையை வலியுறுத்துகின்றனர். வரலாறு அறிவியல், கற்பனை, இலக்கியக் கூறுகள் சேர்ந்த இராசயனக் கலவை (Chemical combination) ஆகும். வரலாறு கலைகளில் பழமையானது அறிவியல்களில் இளமையானது எனவே வரலாறு ஒரு கலை அல்லது

அறிவியல் என்று கூறுவது காலங்கடந்த கருத்து (an outdated concept) ஆகும்.

குறிப்பு

## 3.5. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

1. வரலாறு ஒரு விஞ்ஞானம் என்ற கருத்தின் பிரதான பாதிரியார் யார்?

2. வரலாற்றை ஒரு அறிவியலாகக் கருதுவதில் தொலைநோக்கு தாக்கத்தை ஏற்படுத்திய சில படைப்புகளைக் குறிப்பிடவும்.

3. டார்வினின் 'உயிர்வாழ்க்கை' என்ற கொள்கையை முன்வைத்தவர் யார்?

4. அறிவியல் முறையைத் தவிர, உண்மையைக் கண்டறியும் மற்ற இரண்டு முறைகள் யாவை?

5. இயற்பியல் அறிவியலின் செயல்பாடு என்ன?

## 3.6. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்

1. வரலாறு என்பது ஒரு விஞ்ஞானம் என்ற கருத்தின் பிரதான பாதிரியார் ஜே.பி.புரி, (லார்ட் ஆக்டனுக்குப் பிறகு கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் புகழ்பெற்ற வரலாற்றுப் பேராசிரியர்).

2. இங்கிலாந்தில் பக்கிளின் நாகரீக வரலாறு (1857) தவிர, எங்களிடம் டார்வினின் உயிரினங்களின் தோற்றம் (1859) மற்றும் மனிதனின் வம்சாவளி (1871) ஆகியவை வரலாற்றை அறிவியலாகக் கருதுவதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

3. டார்வினின் 'உறுதியானவர்களின் உயிர்வாழ்தல்' என்ற கொள்கை பிரஷ்யர்களால் முன்வைக்கப்பட்டது, அவர்கள் நீட்சேயின் மனிதனாகவும் சூப்பர்மேன் ஆகவும் நல்ல மாணவர்களாக இருந்திருக்க வேண்டும். நாஜிக்கள், பாசிஸ்டுகள் மற்றும் ஜப்பானியர்கள் இதைப் பின்பற்றினர், மேலும் பைக் மற்றும் துப்பாக்கியின் புனித நூலின் மீது தங்கள் நம்பிக்கையை வளர்த்து, டார்வினின் படைப்புகளை தங்கள் பைபிளாக மாற்றினர்.

4. அறிவியல் முறை என்பது மூன்று முறைகளில் ஒன்று, மற்ற இரண்டு தத்துவ முறைகள், கருதுகோளை கருவியாகப் பயன்படுத்துதல், மற்றும் உள்ளுணர்வு முறை என்பது அகநிலை உணர்வைப் பயன்படுத்தி உயர்ந்த உண்மைகளைப் பெறுதல்.

5. இயற்பியல் அறிவியலின் செயல்பாடு முக்கியமாக நடைமுறைத் துறைகளில் நேரடிப் பயன்பாடாகும், மேலும் அறிவுசார் துறைகளில் காரணம் மற்றும் விளைவு விதிகளின் துப்பறியும்.

**குறிப்பு**

## 3.7. அத்தியாயச் சுருக்கம்

- ஜனவரி 1903 இல் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் தனது தொடக்க உரையில், “வரலாறு ஒரு அறிவியல், குறையாது மற்றும் அதிகமாக இல்லை“ என்று கூறினார். இந்த தைரியமான மற்றும் திட்டவட்டமான கூற்று மிகவும் சர்ச்சையை கிளப்பியுள்ளது.
- ஒரு சீனப் பழமொழியின்படி, “பெரிய மனிதர் ஒரு பொது துரதிர்ஷ்டம்“, மேலும் பெரிய மனிதர்கள் வரலாற்றில் இருந்து மறைந்து போக வேண்டும் என்பதை நேர்மறைவாதிகளும் ஒப்புக்கொள்வார்கள். அவர்கள் காலத்தின் விளைபொருள், ஒரு அற்புதமான முழுப் பகுதி, ஒரு பெரிய மரத்தின் பழம், அவர்கள் தனிமையில் நிற்க முடியாது.
- பத்தொன்பதாம் நூற்றாண்டின் சிந்தனையாளர்கள் சுற்றுச்சூழல் காரணிகள் மீது பெரும் அழுத்தம் கொடுத்தனர். ஒரு நாடு எரிமலை அல்லது பூகம்பத்திற்கு உட்பட்டால், மக்கள் மூடநம்பிக்கை மற்றும் அற்புதங்களை நம்புவார்கள். எகிப்து, மெசபடோமியா மற்றும் சிந்து சமவெளி போன்ற நாகரிகங்கள் நிலம் வளமானதாகவும், பெரிய ஆறுகள் தகவல்தொடர்புகளை எளிதாக்கும் போது உருவாகின்றன.
- வரலாறு மற்றும் அறிவியல் இரண்டின் குறிக்கோள் ஒன்றே, அதாவது உண்மையை நிறுவுதல். விஞ்ஞானம் என்பது நிகழ்வுகளின் அடிப்படையிலான உண்மைகளை அவிழ்ப்பதற்கும், வரலாறு கடந்த காலத்தின் யதார்த்தத்தை வெளிப்படுத்துவதற்கும், கடந்த காலத்தை உண்மையில் நடந்ததைப் போலவே புனரமைப்பதற்கும், அதன் உண்மையான உருவம் புறக்கணிக்கப்படுவதற்கு கண்ணாடியை கடந்த காலத்திற்கு உயர்த்துவதற்கும் நோக்கமாக உள்ளது.

### 3.8. முக்கிய சொற்கள்

- பாசிட்டிவிசம்: இது ஒரு தத்துவக் கோட்பாடாகும், இது ”உண்மையானது” அறிவு (வரையறையின்படி உண்மையில்லாத எதையும் பற்றிய அறிவு) ஆகும் இயற்கை நிகழ்வுகள் மற்றும் அவற்றின் அனுபவத்திலிருந்து பிரத்தியேகமாக பெறப்பட்டது பண்புகள் மற்றும் உறவுகள்.

- அகநிலைவாதம்: பகிரப்பட்ட அல்லது வகுப்புவாதத்திற்குப் பதிலாக, ”நம் சொந்த மன செயல்பாடு மட்டுமே நமது

அனுபவத்தின் கேள்விக்குறியாத உண்மை" மற்றும் புறநிலை அல்லது புறநிலை உண்மை இல்லை என்பது கோட்பாடு.

- பொருள்முதல்வாதம்: இது இயற்கையில் உள்ள அடிப்படைப் பொருள் என்றும், மன நிலைகள் மற்றும் உணர்வு உட்பட அனைத்தும் பொருள் தொடர்புகளின் விளைவுகள் என்றும் கூறும் தத்துவ மோனிசத்தின் ஒரு வடிவமாகும்.
- ஆன்மிகம்: இறந்தவர்களின் ஆவிகள் இருப்பதாகவும், உயிருடன் தொடர்புகொள்வதற்கான திறன் மற்றும் நாட்டம் இரண்டையும் கொண்டிருக்கின்றன என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இது ஒரு முறைசாரா மத இயக்கமாகும்.
- ஹெகலியனிசம்: இது ஜி.டபிள்யூ.எ.ஃப். ஹெகலின் தத்துவமாகும், இது "பகுத்தறிவு மட்டுமே உண்மையானது", அதாவது அனைத்து யதார்த்தமும் பகுத்தறிவு வகைகளில் வெளிப்படுத்தப்படும் திறன் கொண்டது. முழுமையான இலட்சியவாதத்தின் அமைப்பிற்குள் யதார்த்தத்தை மேலும் செயற்கையான ஒற்றுமைக்கு குறைப்பதே அவரது குறிக்கோளாக இருந்தது.சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

## 3.9. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

**குறுகிய வினாக்கள்**

1. அறிவியலுக்கும் வரலாற்றிற்கும் உள்ள ஒரே வித்தியாசம் என்ன?

2. பேராசிரியர் ட்ரெவெல்யன் வரலாற்றைப் பற்றி என்ன கவனித்தார்?

3. வரலாறு ஒரு அறிவியல் என்பதை நிரூபிக்க ஆண்கள் மேற்கொண்ட முயற்சிகள் எதை உணர்த்தின?

4. தேசியவாதம் வரலாற்றில் அகநிலை பிரச்சனைகளை எவ்வாறு உருவாக்குகிறது?

5. வரலாற்றை அறிவியல் என்று சொல்பவர்களை விமர்சிப்பவர்கள் என்ன வாதிடுகிறார்கள்?

**விரிவான வினாக்கள்**

1. வரலாறு பற்றிய பரி மற்றும் ரேங்கின் கருத்துகளைப் பற்றி விவாதிக்கவும்.

2. ஒரு தேசத்தின் மக்கள் மீது சுற்றுச்சூழல் காரணிகளின் தாக்கத்தை விவரிக்கவும்.

3. வரலாறுக்கும் அறிவியலுக்கும் உள்ள ஒற்றுமைகளை விளக்குங்கள்.

4. விஞ்ஞானி மற்றும் அவர் வரலாற்றாசிரியர் அவர்களின் அணுகுமுறையில் எவ்வாறு வேறுபடுகிறார்கள் என்பதை பகுப்பாய்வு செய்யுங்கள்.

குறிப்பு

## 3.10. கூடுதல் வாசிப்புகள்

Warren, John. 1998. *The Past and Its Presenters*: An Introduction to Issues in Historiography. London: Hodder & Stoughton Educational.

Ferro, Marc. 2003. *The Use and Abuse of History*: Or How the Past is Taught to Children. Abingdon: Routledge.

E. Sreedharan. 2004. *A Textbook of Historiography: 500 BC to AD 2000*. New Delhi: Orient Blackswan.

Sharma, Arvind. 2003. *Hinduism and its Sense of History*. New Delhi: OUP India.

Iggers, Georg G. 2005. *Historiography in the 20th Century: From Scientific Objectivity to the Postmodern Challenge*. Connecticut: Wesleyan University Press.

Stuart, Hughes H. 1964. *History as Art and as Science.* New York: Joanna Cotler Books.

Fea, John. 2013. *Why Study History? Reflecting on the Importance of the Past*. Washington: Baker Publishing Group.

# அலகு-4

## வரலாற்றின் பாடங்கள், வரலாற்றின் பயன்பாடுகள் மற்றும கெடுபயன்கள், வரலாற்றின் தத்துவம்

உள்ளடக்கம்

4.1. முன்னுரை

4.2. நோக்கங்கள்

4.3. வரலாற்றுப் படிப்பினைகள் (Lessons of History)

4.4. வரலாற்றின் பயன்கள் (Uses of History)

**குறிப்பு**

4.5. வரலாற்றுத் தத்துவம் (Philosophy of History)
4.6. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்
4.7. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்
4.8. அத்தியாயச் சுருக்கம்
4.9. முக்கிய சொற்கள்
4.10. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
4.11. கூடுதல் வாசிப்புகள்

## 4.1. முன்னுரை

வரலாறு, ஒரு ஒழுக்கமாக, மனித இயல்பைப் பற்றிய நுண்ணறிவை வழங்குகிறது, கடந்த காலத்தில் செய்த தவறுகளிலிருந்து ஒருவர் கற்றுக்கொள்ளக்கூடிய படிப்பினைகளை வழங்குகிறது, சந்ததியினருக்கு ஒரு சமூகம் அல்லது கலாச்சாரத்தின் கூட்டு நினைவகத்தை நிறுவுகிறது மற்றும் பல. அதன் பயன்பாடு பரந்த அளவில் இருப்பது போலவே, வரலாற்றின் துஷ்பிரயோகம் மற்றும் தவறான பயன்பாடு. பதிவு செய்யும் போது வரலாற்று நிகழ்வுகள், அகநிலை உண்மைகளை சிதைக்க ஊடுருவலாம். இது எழுத்தாளரின் சார்பு, தப்பெண்ண மற்றும் முன்முடிவு காரணமாக நிகழலாம். ஒரு வரலாற்று எழுத்தாளர் வரலாற்று ஆராய்ச்சியை மேற்கொள்ளும்போது, அவர் அந்தத் தகவலை இறையாட்சி அல்லது மதத்தின் கண்ணோட்டத்தில் பார்க்கலாம். இந்தக் காரணிகளின் காரணமாக, வரலாற்றின் இத்தகைய ஆவணங்களை முழுமையாக நம்ப முடியாது. இத்தகைய பிழைகளைத் தடுக்க, வரலாற்று எழுத்தாளர்கள் புறநிலைக் கண்ணோட்டத்தில் எழுத வேண்டும்.

## 4.2. நோக்கங்கள்

**இந்த அத்தியாயத்தை படிப்பதன் மூலமாக கீழ்காண்பனவற்றை புரிந்து கொள்ள இயலும்**

வரலாற்றின் பயன்பாடுகள் மற்றும் துஷ்பிரயோகங்கள் பற்றி விவாதிக்கவும் இயலும்

வரலாற்றின் தத்துவத்தை பகுப்பாய்வு செய்ய இயலும்

## 4.3. வரலாற்றுப் படிப்பினைகள் (Lessons of History)

குறிப்பு

வரலாறு அனுபவக் களஞ்சியம். மனிதன் அனுபவத்திலிருந்து அறிந்து கொள்ளும் ஆர்வமுடையவன். மனிதனுக்குப் படிப்பினைகளைப் புகட்டும் நோக்கத்தோடு வரலாற்று நிகழ்ச்சிகள் நிகழ்வதில்லை. ஆனால் மனிதன் அந்நிகழ்வுகளிலிருந்து கற்றுக் கொள்ள விரும்புகிறான். வரலாறு இறந்த காலத்தைப் பற்றியது. எனினும் நிகழ்கால மனிதன் அதில் ஆர்வம் கொள்கிறான். ஏனெனில் வரலாறு இறப்பதில்லை. இதைத்தான் இறப்பில் வாழ்வு (Life-in-Death) என்று கூறுகிறார் பெர்ட்ரண்டு ரஸ்ஸல். சரியான வாழும் வழியைக் கண்டுபிடிப்பதே பண்டைக் காலம் தொட்டு மனிதனின் முயற்சியாக உள்ளது என்று கூறுகிறார் டாயின்பி. உழைப்பு, அரசாங்கம், ஒழுக்கம், சமயம், அறிவியல், தத்துவம், இலக்கியம், கலை ஆகிய எட்டும் நாகரிகத்தின் மூலங்கள் (Elements of Civilizatin) என்று பட்டியலிட்டுள்ளார் வில்டூரண்ட். இம்மூலங்களே வரலாற்றுப் படிப்பினைகளுக்கான களங்களாகும். ஒருவரது பண்பாடு, மன மற்றும் அனுபவ முதிற்சிக்கேற்ப வரலாற்றிலிருந்து படிப்பினைகளைப் பெறலாம். அத்தகைய படிப்பினைகளில் முக்கியமானவை பின்வருமாறு

மனித இயல்பில் மாற்றமில்லை மனிதன் நாட்டால், நிறத்தால், நடத்தையால், நினைப்பால் வேறுபட்டிருந்தாலும் இயல்பால் ஒன்றாகவே இருக்கிறான் கிரேக்க வரலாற்று வித்தகர் மனிதன் இயல்பை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வரலாற்றுப் படிப்பினைகளைக் கூறியுள்ளார். 1). ஒவ்வொரு வீரனும் போரை விரும்புவதில்லை. 2). சம நீதியே சந்தர்ப்பவாதத்தை விடச் சிறந்தது. 3). நல்ல காலத்தைக் கெட்ட காலம் தொடர்கிறது. 4). புகழாசை அழிவுக்கான பாதையாகும். 5) பழம் வாங்கும் போக்கு நியாயமாகத் தோன்றினாலும் எப்போதும் வெற்றி பெறுவதில்லை. 6) மரண தண்டனை எதிர் விளைவையே தரும். 7). அரசியல் அநீதி வன்முறையை விட மோசமானது. 8). மனித இயல்பு மாறக்கூடியது. 9). போர் நம்பிக்கையை அழித்து ஒழுக்கத்தைக் கெடுத்து விடும். 10). நல்லோரைக் கடவுள் காப்பாற்றுவார் இவையாவும் உலகுக்குப் பொதுவான படிப்பினைகளாகும்.

பாதகச் சூழலின் சாதகமான பயன்கள் சுலபமான சாதகமான சூழ்நிலையில் தான் நாகரிகங்கள் தோன்றி வளர்கின்றன என்று நெடுங்காலமாக நம்பப்பட்டது. எகிப்திய, மெசொபொடாமிய, ஹரப்பா - மொகஞ்சதாரோ, சீன நதிக்கரை நாகரிகங்கள் சாதகமான சூழலில் உருவானவையாகக் கருதப்பட்டது. ஆனால் அந்நாகரிகங்கள் நிலைத்து நிற்கவில்லை. 23 வளர்ச்சியடைந்த நாகரிகங்களை ஆராய்ச்சி செய்த பாயின்பி சாதகமான புவியியல் சூழ்நிலையோ அல்லது இனத் திறமையோ மனித முன்னேற்றத்துக்குக் காரணமல்ல என்று முடிவுக்கு வருகிறார். மாறாக பாதகச் சூழல் சவாலாக அமையும் போது தான் சமூக ஆற்றல் முழுமையாக வெளிப்படுகிறது நாகரிகம் தழைகிறது. இதை பாதகச் சூழ்நிலையின் சாதகமான பயன்கள் (Virtues of

குறிப்பு

Adversity) என்று கூறுகிறார் டாயின்பி. அதாவது உழைக்கும் சமுதாயம் உயரும்.

சட்டத்தின் ஆட்சியே சிறந்தது சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், சட்டத்துக்கு முன் சமம் போன்ற கருத்துக்கள் பண்டைக் கால நாடுகள் அறியாத ஒன்று. மக்களாட்சி முறையின் நாற்றங்காலாகக் கருதப்பட்ட கிரேக்க ஏதென்சில் கூட அடிமைகளை வைத்திருப்பது இயல்பாகக் கருதப்பட்டது! இடைக் காலத்தில் சமய குருமார்கள், நிலப் பிரபுக்கள், ஆட்சியாளர்கள் மட்டுமே உரிமைகளையும், சலுகைகளையும் அனுபவித்தனர். இங்கிலாந்தின் 1688 ஆண்டுப் புரட்சியின் விளைவாக நீதித்துறையின் இன்றியமையாமை உணரப்பட்டது. 1787-ம் ஆண்டு அமெரிக்கப் புரட்சி அரசியல் அமைப்பு வழி கூட்டாட்சி அமைப்பு முறையைப் பிரபலப்படுத்தியது. 1789 பிரெஞ்சுப் புரட்சி மனித உரிமைகளை உறுதிப்படுத்தியது. அதன்பின் சட்டத்துக்கு முன் அனைவரும் சமம் என்ற கருத்து நடைமுறைப் படுத்தப்பட்டது. சட்டத்தின் ஆட்சி முக்கிய வரலாற்றுப் படிப்பினைகளில் ஒன்றாகும்.

ஒழுக்கம் விழுப்பம் தரும் ஒழுக்கமே எல்லோர்க்கும் மேன்மையைத் தரும் என்பது வரலாற்றிலிருந்து பெறக்கூடிய பாடங்களில் ஒன்றாகும். ஒழுக்கம் என்பது சரி - தவறு பற்றிய உணர்வு, சுயகட்டுப்பாடு, விருப்பத்தில் ஒழுங்கு , மனசாட்சிக்கு மதிப்பு, போற்றுதற்குரிய பழக்க வழக்கங்கள் ஆகும். குறிப்பாக அகிச்சை வழியே அறவழி, வழியைப் பொறுத்தே விளைவிருக்கும். வன்முறையிலிருந்து இன்முறைக்கு வருவதே முன்னேற்றமாகும். புத்தர், மகாவீரர், வசுநாதர், மகாத்மா காந்தி போன்றோர் அகிம்சை அறவழி நின்று வாழ்ந்து காட்டியுள்ளனர். தீமையைச் செய்து நன்மையைப் பெற முடியாது. பிரெஞ்சு ராபிஸ்பியரும் ரஷ்ய லெனினும் வன்முறை மூலம் அவற்றை அடையலாம் என்று எண்ணினர். தவறான வழியில் சென்று சரியான முடிவைக் காண முடியாது என்பதை வரலாறு உணர்த்தியுள்ளது. சரியான வழி சென்று சாயான இலக்கை எட்ட முடியும் என்பதை மகாத்மா காந்தி சொல்லாலும், செயலாலும் நிரூபித்துக் காட்டினார் என்பது டாயின்பியின் கணிப்பு

சமயப் பொறையின்மையின் பயனின்மை பயம் (Religion) மனிதக் கண்டுபிடிப்புகளுள் மகத்தானது. மனித துயரங்களை துடைக்கவும், நடத்தையை உயர்த்தவும், சமூக ஒழுங்கை வலிமைப்படுத்தவும், சமயம் பருவாக்கப்பட்டது. ஆனால் சமயப் பொறையின்மையும் (Religious Intolerance) கொடுமையும் (Oppression) வரலாற்றின் பக்கங்களைக் கறைபடுத்தி விட்டன. யூதர்கள் தங்களைக் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்று கருதிக் கொண்டது அவர்களின் பாபா பொறையின்மையையும், கொடுமையையும் நிலைப்படுத்தி விட்டது. கிறித்துவ சமயம் தோன்றுவதற்கு முன்பு யூதர்கள் தவிர வேறு எவரிடமும் துன்புறுத்தும் மனப்பான்மை (Irosecuting Attitude) இருந்ததில்லை என்று கூறுகிறார் பெர்ட்ரண்டு ரஸ்ஸல். கிறித்துவ பயம்

குறிப்பு

தோன்றிய பிறகு சமயச் சித்ரவதை உச்சகட்டத்தை எட்டியது. சமய விசாரணை சார்புயம் (Inquisition), சிலுவைப் போர்கள் (Crusades), புனித பார்த்தலோமியோ படுகொலை (Mansucre of St. Bartholomew), Clocor Gowo Curri (War of the Three Henrys), முப்பதாண்டு போர் (Thirty Year War) ஆகியவை சமயப் பொறையின்மையின் வெளிப்பாடுகளாகும். இஸ்லாமும் இந்து சமயமும் பொறையின்மைக்கு விலக்கல்ல. உலகப் பெரிய சமயங்கள் அனைத்து வரலாறும் சமயப் பொறையின்மை மற்றும் கொடுமையின் பயனின்மையைப் பறைசாற்றுதாகவே உள்ளது.

தகுதியானவையே தழைக்கும் வரலாற்றில் அறிவியலின் தாக்கம் அளப்பறியது. வரலாற்று உண்மைகளை விளக்க அறிவியல் கோட்பாடுகள் கை கொடுக்கின்றன. சார்லஸ் டார்வின் உயிரினத் தோற்றங்களின் தன்மையைப் பற்றி ஆராய்ந்தார். அவரது ஆய்வின் போது அறிவியல் சோதனை முறைகளோடு வரலாற்றுப் பகுப்பாய்வு முறைகளையும் சேர்த்துக் கொண்டார். டார்வினின் பரிணாமக் கோட்பாடு வரலாற்றுப் படிப்பினையை விளக்கப் பயன்படுத்தப்பட்டது. குறிப்பாக அவரது தகுதியானவையே தழைக்கும் (Survival of the Fittest) என்ற கருத்தைக் கொண்டு பல வரலாற்று நிகழ்வுகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது. இயற்கைத் தேர்வுக் கொள்கை, வாழ்க்கைப் போராட்டக் கோட்பாடு ஆகியவைகளைக் கொண்டு சமூக வாழ்வின் அடிப்படைக் காரணிகளை அடையாளம் காட்டலாம். பலரும் மேலெழுந்தவாரியாக வரலாற்றின் மேல் முகட்டில் தெரியும் குழப்பங்களையே காண்கின்றனர். மாறாக நியூட்டன், டார்வின், ஐன்ஸ்டின் போன்ற அறிவியலாளர்கள் குழப்பத்திற்குப் (Chaos) பின்னால் உள்ள ஒழுங்கைக் (Order) காட்டுகின்றனர் என்று கூறுகிறார் டாயின்பி. அறிவு, அன்பு ஒழுக்கத் தகுதிகளுடையவையே நீடித்து நிலைக்கும் என்பது வரலாற்றுப் படிப்பினைகளில் ஒன்றாகும்.

மாறாத மாற்றம் மாற்றம் (Change) இயற்கை நியதி. வரலாறு இந்நியதிக்கு உட்பட்டது. உயிர் வாழ்வன அனைத்தும் மாற்றமடைகின்றன. மாற்றம் மட்டுமே மாறாமல் உள்ளது. மனித இனம் மாறிக் கொண்டே இருக்கிறது. நேற்றைய நாகரிக நிலை இன்று நவீன உருமாற்றமடைந்துள்ளது. கடந்த காலத்தில் நாட்டு நலனே மக்கள் நலனாகக் கொள்ளப்பட்டது. தற்போது மக்கள் நலனே நாட்டு நலனாகக் கருதப்படுகிறது. வயது வந்தோருக்கு வாக்குரிமை சலுகை வகுப்பாரின் முக்கியத்துவத்தை வெகுவாகக் குறைத்து விட்டது. வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளில் கீழ்த்தட்டு மக்களின் நலனுக்காக மேற்கொள்ப்படும் முயற்சிகளுக்கிணையான எடுத்துக்காட்டுகள் உலக வரலாற்றில் இதற்குமுன் எந்த கால கட்டத்திற்கும் காண இயலாது. இம்மாற்றம் ஈடுயிணையற்றது.

வேறுபாடுகள் ஆழமற்றவை ஒவ்வொரு நாடும் தனித் தீவாக இருக்க இயலாது. சூழ்நிலைக்கேற்ப நாடுகள் சேர்ந்தும், பிரிந்தும், பிணங்கியும், போரிட்டும் வருகின்றன. நம்பிக்கை, கொள்கை, கோட்பாட்டு வேறுபாடுகளும் மாறுபாடுகளும் இயல்பானவை, மேற்போக்கானவை. டாயின்பி கூறுவதைப் போன்று நாடுகள் தங்கள் வசதிக்காகக் கொள்கை அடைமொழி (Ideological - Epithet) என்ற முகமூடியை அணிந்து கௌ்கின்றன. அவ்வளவே. முற்காலத்தில் ஷியா முஸ்லீம் நாடான இரான் கிறித்துவ வெனிஸ் நகருடன் கூட்டுச் சேர்ந்தது. ஹாப்ஸ்பர்க் குடியரசு சன்னி முஸ்லீம் நாடான துருக்கியோடு கை குலுக்கியது. கத்தோலிக நாடான பிரான்சும் மறுப்பியக்க ஜெர்மனியும் கூட துருக்கியை நட்பு நாடாகக் கருதிய காலமுண்டு. பனிப்போரில் மூழ்கியிருந்த அமெரிக்காவும், ரஷ்யாவும் தற்போது நட்பு பாராட்டவில்லையா? கம்யூனிசத்தின் கிளைகளான ரஷ்யாவும் சீனாவும் எதிரும் புதிருமாக இல்லையா? இஸ்லாம் முஸ்லீம் நாடுகளை ஒரு குடையின் கீழ் கொண்டு வரவில்லையே? எனவே சமய, அரசியல், கொள்கை வேறுபாடுகள் ஆழமற்றவை என்பதை வரலாறு மெய்ப்பிக்கிறது.

வரலாறு உருவாக்கப்படுகிறது வரலாறு உருவாவதில்லை. உருவாக்கப்படுகிறது. வரலாறு மனித முயற்சியின் விளைவு. பானி தன் சுயசிந்தனை உடையவன். வரலாற்றைத் தன் வழியில் கொண்டு செல்லக் கூடிய ஆற்றல் பெற்றவன். வரலாற்று முன் நிர்ணயக் கோட்பாடு டார்வினுக்குப் பின் தகர்ந்து விட்டது. மனிதன் வரலாற்றை உருவாக்கும் வல்லமை படைத்தவன் என்ற எண்ணம் வலுப்பெற்றது. சமூக எழுச்சிக்கும், வீழ்ச்சிக்கும் மனிதனே காரணம் என்ற உண்மை உறுதியாயிற்று. சமூகம் என்பது மனிதனின் செயற்களம் (Field of Action) ஆகும்.

முதாயச் செயல் ஊற்று (Source of Action) மக்களிடமே உள்ளது. ஆக்கச் சிறுபான்மையினர் (Creative Minority) மக்களின் ஆக்கத் திறமைகளை ஒன்று திரட்டி வரலாற்று வளர்ச்சிக்கு வழி வகுக்கின்றனர். ஆக்கச் சிறுபான்மையினர் ஆதிக்கச் சிறுபான்மையினராகத் தாழும் போது வரலாற்றுப் பின்னடைவு ஏற்படுவதாகக் கூறுகிறார் பாயின்பி. மனிதன் தன் தலைவிதியைத் தானே நிர்ணயித்துக் கொள்கிறான் என்பது வரலாற்றுப் படிப்பினைகளில் ஒன்றாகும்.

மக்களாட்சியும் சர்வாதிகாரமும் நாட்டுப்படுத்தினால் மனிதனால் முன்னேற முடியாது. கட்டுப்படுத்தப்படாவிடில் மனிதன் முன்னேற மாட்டான். அறநெறி தவறி அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியதால் ரீதியை மக்களாட்சி முறை வீழ்ந்தது. தற்கால மக்களாட்சி முறையில் அதிருப்தியுற்ற மக்கள் கிளர்ச்சி செய்வது பற்றி ஸ்பானிஷ் சிந்தனையாளர் ஒற்டெகா காசட் (Ortega Gasset) கவலை தெரிவிக்கிறார். எரிக் புரோம் (Eric Fromm) மக்கள் அன்னியப்படுவதை

குறிப்பு

சுதந்திரத்திலிருந்து தப்பி சர்வாதிகாரத்தை நோக்கிச் செல்வதாக எச்சரிக்கிறார். டேவிட் கரைஸ்மன் (David Riesman) மக்கள் பற்றிக் கவலைப்படுகிறார். இவர்கள் மக்களாட்சிக்கும், சர்வாதிகாரத்துக்குமிடையேயான தொடர்பைப் பற்றி ஆராய்ந்துள்ளனர். நெருக்கடியிலிருந்து தப்பிக்க மக்கள் சர்வாதிகாரத்தை ஆதரிக்கின்றனர் என்பதை வரலாற்று நிகழ்ச்சிகள் உறுதி செய்கின்றன. நெருக்கடி நேரத்தில் மக்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளர்கள் அதிகாரத்தைத் துறந்து சர்வதிகாரியை நியமிக்க முதன் முதலில் முடியாட்சி ரோமின் சட்ட அமைப்பில் வகை செய்யப்பட்டது. சர்வாதிகார முறை கி.மு.133 வரை ரோமின் நெருக்கடியை சமாளிக்கப் பெரிதும் பயன்பட்டது. ஜப்பானில் கிடயோஷிக்குப் பின் வந்த டோகுகவாவும், சீனாவில் ஷி ஹுவாங்டிக்குப் பின் வந்த ஹான் லியு பாங்கும் சர்வாதிகாரத்தின் மூலம் நாட்டின் ஸ்திரத் தன்மையை நிலைநாட்டினர். ரீனாவில் ஹான் லியு பாங் ஏற்படுத்திய ஆட்சி 21 நூற்றாண்டுகள் நீடித்தது என்பது குறிப்பிடத்தக்கது. எனவே அமைதிக் காலத்தில் மக்களாட்சியும், நெருக்கடி நேரத்தில் சர்வாதிகாரமும் சிறந்தது என்பது வரலாற்றிலிருந்து பெறக்கூடிய படிப்பினையாகும்.

வெற்றியும், தோல்வியும் நிரந்தரமல்ல வென்ற நாடுகள் தோல்வியடைவதும், தோற்ற நாடுகள் வெற்றியடைவதும் இயல்பு. வெற்றி கண்டு செறுக்கடைவதும், தோல்வி கண்டு துவள்வதும் தேவையற்றது. வென்ற நாடுகள் வாழ்ந்ததுமில்லை. தோற்ற நாடுகள் வீழ்ந்ததுமில்லை. அலெக்சாண்டர், ஜுலியஸ் சீசர், நெப்போலியன், இட்லர் போன்ற வரலாற்று வீரர்களின் சாதனைகள் போரால் கிடைக்கும் வெற்றி நிரந்தரமல்ல என்ற படிப்பினையைக் கொடுக்கிறது. அலெக்சாண்டர் டேரியசைத் தோற்கடித்த போது இருந்த ஈரான் இன்று வியத்தகு உருமாற்றம் அடைந்துள்ளது. துருக்கியர் ஆக்கிரமித்தபோது இருந்த கிரேக்கத்தைத் தற்போது அடையாளம் கண்டு கொள்ள முடியாது. இரண்டாம் உலகப் போரில் அணுகுண்டுத் தாக்குதலுக்குள்ளாகி சீர்குலைந்த ஜப்பானும், தோல்வியுற்ற ஜெர்மனியும் இன்று தலை நிமிர்ந்து நிற்கின்றன.

ஆதிக்க ஆட்சி அழியும் ஏகாதிபத்திய ஆட்சியால் ஒரு நாடு பிற நாடுகளை அடிமையாக வைத்திருக்க முடியாது என்பது வரலாற்றுப் படிப்பினைகளில் ஒன்றாகும். ஏகாதிபத்தியத்துக்கு முன்னோடியாக இருந்தது பண்டைய கிரேக்க ஏத்தன்ஸ் ஆகும். இங்கிலாந்து ரோமானிய ஏகாதிபத்தியின் கீழ் 400 ஆண்டுகள் அடங்கி இருந்தது. இந்தியா பிரிட்டிஷ் பேராதிக்கத்தின் கீழ் 200 ஆண்டுகள் அடிமைப்பட்டிருந்தது. சென்ற நூற்றாண்டின் இறுதியில் ஆப்பிரிக்கா முழுவதும் ஐரோப்பாவின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. தென்கிழக்கு ஆசியா பிரிட்டனாலும், பிரான்சாலும் பங்கிட்டுக் கொள்ளப்பட்டது. டச்சுக்காரர்கள் கிழக்கிந்தியத் தீவுகளைக் கைப்பற்றிக் கொண்டனர். பிலிப்பைன்ஸ், போர்ட்டோ ரிகோ, ஹவாய் ஆகியவை அமெரிக்கா வசமாயிற்று. உலகின் நான்கில் ஒரு பகுதி பிரிட்டன் வசமிருந்தது. "பிரிட்ஷ் ஏகாதிபத்தியம் பொருளாதாரத்

**குறிப்பு**

தேவை மட்டுமல்ல் ஆன்மீக அவசியமும் கூட““ என்று நியாயப்படுத்தினார் பெஞ்சமின் டிஸ்ரேலி. என்னவாயிற்று? ஆதிபத்தியத்துக்கு அடிமைப்பட்டிருந்த நாடுகள் போராடி வெற்றி பெற்று சுதந்திர நாடுகளாயின.

மனித உரிமைகள் பற்றிய அக்கறை மனிதன் சுதந்திரமாகப் பிறக்கிறான் ஆனால் எங்கும் கட்டுண்டு கிடக்கிறான் என்று வருத்தப்பட்டார் ரூஸோ . ஏசுநாதர் பிறப்பதற்கு 2000 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட ஹமுரபியின் சட்டத் தொகுப்பு (Code of Hammurabi) மன்னன் நீதி வழங்கி தீயோரைத் தண்டித்து, வலியோர் எளியோரை அடக்கி வைப்பதைத் தடுத்து, மக்கள் நலனைப் பேணிக்காக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறது. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று கூறுகிறது குறள் (972). கௌடில்யரும் சுக்ராச்சாரியாரும் மக்களைச் சமமாகக் கருத வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்தினர். 1215-ல் மாக்னா கார்ட்டா (Magna Carta) மனித உரிமைக்கு உத்திரவாதமளித்தது. 1789-ல் பிரான்சில் வெளியிடப்பட்ட மனித உரிமைகள் பிரகடனம் விட்டுக் கொடுக்க முடியா உரிமைகளைப் (Inalienable Rights) பிரகடனப் படுத்தியது. அமெரிக்காவில் அடிமை முறையை ஒழிக்க ஆபிரகாம் லிங்கன் உள்நாட்டுப் போரை எதிர்கொள்ளத் தயங்கவில்லை. 1948ல் ஐக்கிய நாடுகள் அவை வெளியிட்ட மனித உரிமைகள் பிரகடனம் (Declaration of Human Rights) மனிதனின் சமூக, பொருளாதார, கலாச்சார உரிமைகள் உலக நாடுகளுக்குப் பொதுவானவை என்று அறிவித்தது. இந்தியாவின் மனித உரிமைகள் கமிஷன் (Human Rights Commission, 1993) இந்திய மக்களுக்கு உரிமை மீறல்களிலிருந்து பாதுகாப்பளிக்கிறது. வரலாற்றின் போக்கில் மனித உரிமைகள் பற்றிய அக்கறை ஆழமாக வேரூன்றியிருப்பது கண்கூடு. சிலரது ஏகபோகச் சலுகைகளாக இருந்த அடிப்படை மனித உரிமைகள் இன்று அனைவருக்கும் அளிக்கப்பட்டுள்ள சாதனை மனித இனத்தின் மாபெரும் முன்னேற்றங்களில் ஒன்றாகக் கருதுகிறார் டாயின்பி.

மனித மரியாதையின் மாண்பு சுதந்திரமும், சமத்துவமும், உரிமையும் மனித மரியாதையைப் (Human Dignity) பாதுகாப்பதற்கான அடிப்படைத் தேவைகளாகும். மனித மதிப்பும் மரியாதையும் புறக்கணிக்கப்படும் போது மனிதன் கிளர்ந்தெழுகிறான் என்ற பேருண்மையை வரலாறு உணர்த்துகிறது. மனித மரியாதையே மானிட முன்னேற்றத்துக்கான அளவுகோலாகும். எந்த ஒன்றுக்கும் மதிப்புண்டு. மதிப்புள்ள எதற்கும் மாற்றுப் பொருள் இருக்கும். எந்த சமுதாயத்தில் மனித மதிப்புக்கும், மரியாதைக்கும், பெருந்தன்மைக்கும் பாதுகாப்பு அளிக்கப்படுகிறதோ அங்கு உரிமைகள் பத்திரமாக இருக்கும் என்பது வரலாற்றுப் படிப்பினையாகும்.

குறிப்பு

நம்பிக்கை நட்சத்திரம் வரலாறு எதிர்காலத்துக்கு வழிகாட்டும் வடமீன் (Pole-Star) போன்றது. நிகழ்கால மனிதன் கடந்த கால அனுபவத்தைக் கொண்டு வருங்காலத்தை நம்பிக்கையோடு எதிர்கொள்கிறான். ஆனால் சிணுங்கிகள் (Cynics) வரலாற்றால் எப்பயனும் இல்லை என்பர். பிரெஞ்சு பூர்பான் மன்னர்களைப் போன்று மக்கள் வரலாற்றிலிருந்து எப்பாடத்தையும் கற்பதுமில்லை மறப்பதுமில்லை என்று கூறுவர். வரலாற்றிலிருந்து ஒருவர் கற்கும் பாடம் என்னவென்றால் எந்தப் பாடத்தையும் கற்பதில்லை என்பது தான் என்று கூறினார் ஹெகல் . அவரே வரலாற்றிலிருந்து கற்ற பாடத்தின் விளைவு தான் அவரது புகழ்மிக்க வரலாறு இயக்கம் (Historical Dialactic) பற்றிய கருத்து ஆகும். போர்களும், போராட்டங்களும், பிரச்னைகளும் தொடர்வதால் சிணுங்கிகள் நம்பிக்கை இழக்கின்றனர். மனித இனம் எண்ணிறந்த சவால்களை சமாளித்து முன்னேறியுள்ளது. மனிதனிடம் உயிர்வாழ வேண்டும் என்ற உணர்வு (Survival Instinct) ஆழப் பதிந்திருப்பதாலும், பின்வாங்கி முன் செல்லும் திறன் (Resilience) உள்ளதாலும் மனித இனத்துக்கு அழிவில்லை. சிணுங்கிகள் குழப்பத்தைக் (Chaos) காண்கிறார்கள். விவேகிகள் குழப்பத்துக்குப் பின்னால் உள்ள ஒழுங்கைப் (ழுசனநச) பார்க்கிறார்கள்.

எச்சரிக்கைக் குரல் வரலாறு நம்பிக்கை நட்சத்திரம் மட்டுமல்ல. எச்சரிக்கைக் குரலும் கூட. பிரெஞ்சு பூர்போன் மன்னர்கள் வரலாற்றிலிருந்து கற்பதுமில்லை, மறப்பதுமில்லை என்று கூறப்படுவதுண்டு. பதினைந்தாம் லூயி அண்டிப் பிழைப்போரின் புகழுரையில் மயங்கி மதியிழந்தார். பதினாறாம் லூயி அரண்மனை ஆடம்பர வாழ்வால் பிரான்சுப் புரட்சிக்கு வழிகோலினார். 1192-ல் முகமது கோரி இந்தியாவின் மீது படையெடுத்த போது ராஜபுத்திர மன்னர் கனோஜ் ஜயசந்திர பிரிதிவிராஜ் சௌகானோடு சேர்ந்து போரிடாமல் நாட்டைக் காட்டிக் கொடுத்தார். பதவிக்கு ஆசைப்பட்டு மீர் ஜாபர் பிளாசியில் ஆங்கிலேயரிடம் சரணடைந்தார். 12-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வீரபாண்டியனும் குலசேகரப் பாண்டியனும் அரச பதவிக்குப் போட்டியிட்டுப் பாண்டிய நாட்டைப் பலவீனப் படுத்தினர். நாடிழந்த சுந்தர பாண்டியன் மாலிக்காபூரின் துணையை நாடித் தமிழகத்தில் அயலார் படையெடுப்புக்கு வழிகாட்டினார். ஒற்றுமையின்மையே அந்நியர் ஆதிக்கத்துக்கான அழைப்பிதழ் என்பது வரலாறு விடுவிக்கும் எச்சரிக்கைக் குரலாகும்.

## 4.4. வரலாற்றின் பயன்கள் (Uses of History)

வரலாற்றின் பயன் மனிதன் வசிக்க மட்டும் விரும்பாது வாழவும் விழைகிறான். உண்டு, உடுத்தி, உறங்கினால் மட்டும் போதாது. சிந்தித்து, உணர்ச்சியை வெளிப்படுத்தி அழகை அனுபவித்து வாழ்க்கையை அர்த்தமுள்ளதாகவும் ஆக்க வேண்டும். மனிதன்

உள்ளதை உள்ளவாறு அறிய அறிவிக்க முனைகிறான். அதே சமயம் உள்ளதை உணர்ந்தவாறு உணர்த்தவும் விரும்புகிறான். எனவே அறிவும் உணர்ச்சியும் முழு வாழ்க்கை என்ற நாணயத்தின் இரு பக்கங்களாகும். அறிவின் வெளிப்பாடு அறிவியல். உள்ளத்தின் பிரதிபலிப்பு கலை. அறிவினை அடிப்படையாகக் கொண்டு மனித இனம் முன்னேறுகிறது. கலைகள் மூலம் முன்னோரின் அனுபவங்களைப் பெற்றுப் பயனடைகிறது. இசை, ஓவியம், சிற்பம், இலக்கியம், வரலாறு மனித மனதை செம்மைப்படுத்துகின்றன, வளப்படுத்துகின்றன. மனித சமூகத்துக்குப் பொருளியல் தேவைகளோடு சமூக, கலாச்சார, அறிவுத் தேவைகளும் உள்ளன. இவை கால இட மாற்றங்களுக்கேற்ப உருமாற்றமடைகின்றன. ஆனால் அழிவதில்லை. அதைப்போன்று வரலாறு காலத்தின் தேவைக்கேற்பப் பொருள் கொள்ளப்படுகிறது. அதன் பயன் மக்களின் மனப்பான்மை, முதிர்ச்சி, அணுகுமுறை ஆகியவற்றுக்கேற்ப அமைகிறது. வரலாற்றின் பொதுப் பயன்கள் வருமாறு:

வரலாறு மனிதனின் சுய அறிவுக்கான திறவுகோல் வரலாற்று அறிவுக்கு வேலியில்லை. அது அனைவருக்கும் பொது. வற்றாத வரலாற்று மகாநதியில் நீராடித் திளைத்தவர்கள் தாங்கள் பெற்ற இன்பத்தை இவ்வையகமும் பெற வேண்டும் என்று விரும்பினர். எடுத்துக்காட்டாக, வரலாறு மனிதனின் அறிவார்வத்தைத் தூண்டவல்லது என்று கருதினார் ஹெரோடொடஸ். வரலாறு அறிவுக் கூர்மைக்கும் அறநெறிக்கும் வழிவகுக்கும் என்று எண்ணினார் தூசிடைடிஸ். வரலாறு கற்காவிடில் குழந்தையாகவே இருக்க வேண்டியது தான் என்று எச்சரித்தார் சிசரோ. வரலாறு முடியும் அடியுமற்ற காவியத்தைப் போன்று கவிதை இன்பத்தைக் கொடுக்க வல்லது என்றார் டிரெவல்யன். மனிதன் என்ன செய்தான் என்பதைக் கூறுவதன் மூலம் மனிதன் என்னவாக இருக்கிறான் என்பதை வரலாறு கற்பிக்கிறது என்பது காலிங்வுட்டின் கணிப்பு. வரலாறு மனித எண்ணத்துக்கும், உணர்வுக்கும், நிலைத்தன்மைக்கும், ஆழத்தையும் அழுத்தத்தையும் கொடுப்பதாகக் கூறுகிறார் பெர்ட்ரண்டு ரஸ்ஸல். சுருங்கக் கூறின் வரலாறு மனிதனின் சுய அறிவுக்கான திறவுகோல் ஆகும்.

வரலாறு சமூக நினைவாற்றல் ஒருவருக்கு நினைவாற்றல் எப்படியோ அப்படிப்பட்டது சமூகத்திற்கு வரலாறு ஆகும். வரலாறு இல்லாத மனித சமுதாயம் நினைவாற்றல் இழந்த நிலைக்குத் (Societal Amnesia) தள்ளப்படும். வரலாற்று நினைவாற்றல் மூலம் கடந்த கால அனுபவம் பாதுகாக்கப்படுகிறது, பாரம்பரியமாகிறது. தலைமுறைகளை இணைக்கிறது. வரலாறு என்ற முறைப்படுத்தப்பட்ட நினைவாற்றல் மக்களின் இன சமூக கலாச்சார சுயமரியாதைக்கும், சுய வளர்ச்சிக்கும், சுய தீர்மானத்துக்கும் இன்றியமையாத் தேவையாகும்.

வரலாற்றுச் சேமிப்புக் கிடங்கு வரலாறு ஒரு அனுபவ சேமிப்புக் கிடங்கு போன்றது. மனிதன் காட்டுமிராண்டி நிலையிலிருந்து நாகரிக நிலையை அடைந்து தொழில் நுட்ப சமூகமாக வளர்ந்த வரையான அனுபவங்கள்

குறிப்பு

வரலாற்றில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. போராட்டங்கள், பொற்காலங்கள், சோதனைகள், சாதனைகள், நாகரிகங்களின் எழுச்சி, வீழ்ச்சி ஆகிய அனைத்தும் வரலாற்றில் இடம் பெற்றுள்ளன. வரலாற்றோடு தொடர்பு கொண்டவர்கள் உலகம் தோன்றியதிலிருந்து வாழ்ந்தவர்களோடு தொடர்பு கொண்டவர்களாவர் என்று கூறுகிறார் டேவிட் ஹியூம். கடந்த காலத்தின் உண்மைத் தன்மையை அறிந்தவர்கள் நிகழ்கால யதார்த்தத்தைப் பற்றித் தப்புக் கணக்கு போட மாட்டார்கள் என்று கருதுகிறார் லெக்கி. எனவே வரலாற்று அனுபவக் கிடங்கிலிருந்து அவரவர் திறமைக்கும் தகுதிக்கும் ஏற்பப் பயன் பெறலாம்.

வரலாறு வாழ்க்கைக்கு வழிகாட்டி வரலாறு மனித வாழ்க்கைப் பயணத்தைப் பற்றியது. மனித இனம் தொடர்ந்து பயணம் செய்வதற்கு வரலாறு தோன்றாத் துணையாக உள்ளது. மனிதன் திசை தெரியாது தவிக்கும் போது வரலாறு ஒளிவிளக்காகப் பயன்படுகிறது் நல்வழி காட்டுகிறது. வரலாறு வெளிநாடுகளில் பயணம் செய்வதைப் போன்றது. புதிய இடங்கள், புதிய மனிதர்கள், புதிய அனுபவங்கள். இத்தகைய பயணங்களால் அறிவு விரிவடைகிறது. மனம் பண்படுகிறது. தொலைப் பார்வை தெளிவாகிறது. ஹெரோடொட்சிலிருந்து டாயின்பி வரையான வரலாற்று வித்தகர்கள் பயண வழிகாட்டிகளாக உள்ளனர். மெக்காலே கூறுகிறார், பல விதங்களில் வரலாற்றின்பம் வெளிநாட்டுப் பயணத்தைப் போன்று மனதிற்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. வரலாற்று மாணவர் புதியதொரு சமுதாயத்துக்குள் அழைத்துச் செல்லப்படுகிறார். புதிய வாழ்க்கை பாணிகளைப் பார்க்கிறார். பல்வேறுபட்ட சட்டங்கள், ஒழுக்க முறைகள், பழக்க வழக்கங்கள் பற்றித் தெரிந்து கொள்வதால் அவரது மனம் விரிவடைகிறது.

வரலாறு ஒரு இணைப்புப் பாலம் வரலாறு கடந்த காலத்தையும் நிகழ் காலத்தையும் இணைக்கும் பாலம் போன்றது. கடந்த காலத்தை வேர்களாகக் கொண்டு தான் நிகழ்காலம் என்ற ஆலமரம் விழுதுகள் பல விட்டுத் தழைத்துள்ளது. கடந்த காலம் என்ற அடித்தளத்தின் மீதுதான் நிகழ்காலம் என்ற நாகரிக மாளிகை எழுப்பப்பட்டுள்ளது. கலைகள், கலாச்சாரங்கள், இலக்கியங்கள், சமயங்கள், தத்துவங்கள், வாழ்க்கை பாணிகள், நிறுவனங்கள் ஆகிய அனைத்தும் கடந்த கால விதைப்பின் நிகழ்கால விளைச்சலாகும். எனவே இன்றைய உலகத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமாயின் நேற்றைய உலகைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாதது. இவ்விரு உலகங்களையும் ஒருங்கிணைப்பது வரலாறு ஆகும். அதனால்தான் வரலாறு என்பது கடந்த காலத்துக்கும் நிகழ்காலத்துக்குமிடையேயான முடிவற்ற உரையாடல் என்று கூறுகிறார் காலிங்வுட்.

வரலாறு காலத்தின் குரல் வரலாறு காலக் குரலாக ஒலித்து கொண்டிருக்கிறது. யார் இக்குரலைக் கேட்கிறார்கள் என்று வரலாறு கவலைப்படுவதில்லை. பயன் கருதாது குரல் கொடுத்துக்

குறிப்பு

கொண்டிருக்கிறது. இக்குரலுக்குச் செவிமடுப்போர் பயன் பெறுகின்றனர். இக்குரலைக் கேட்காதவர்கள் முன்னர் செய்த தவறுகளை மீண்டும் செய்து தண்டனையைப் பெறுவர். வரலாற்று ஓட்டத்தோடு ஒத்துப் போகாதவர்கள் வரலாற்றால் ஒதுக்கப்படுகிறார்கள். வரலாறு எப்படி வாழவேண்டும் என்று கற்பிக்கவில்லை ஆனால் வாழ்வாங்கு வாழ்வதற்கான வழிகளைக் காட்டுகிறது. தனி மனிதர்களும், ஆட்சியாளர்களும், நிறுவனங்களும் வரலாற்றின் குரல் கேட்டுப் பயனடையலாம். வரலாறு மாபெரும் ஆற்றல். அது மக்களுக்குப் பயன்படும் போது அதைப் பற்றி மறந்து விடுகின்றனர். தங்கள் நல்வாழ்வுக்குத் தாங்களே காரணம் என்று கூறிக் கொள்வர். ஆனால் தங்களுக்குப் பாதகம் ஏற்படும் போது வரலாற்றின் குரலுக்கு செவிமடுப்பர் என்று கூறுகிறார் ரஷ்ய வரலாற்றாளர் கிளியுசெவிஸ்கி (V.O.Kiychevsky) வரலாற்றின் கல்விப் பயன் வரலாற்று நிகழ்ச்சிகள் நிரந்தரமானவையல்ல. ஆனால் அதன் கல்விப் பயன் நிலையான பயனைத் தரவல்லது. வரலாற்றின் கல்விப் பயன்கள் வருமாறு: 1.மக்களுக்கு மனப் பயிற்சியையும், மனப் பக்குவத்தையும், மனமுதிர்ச்சியையும் கொடுக்கிறது. 2. வரலாற்று நிழல்களுக்குப் பின்னால் உள்ள நிஜத்தை அறிந்து கொள்ள உதவுகிறது. 3. பகுதிகளின் சேர்க்கையை விட முழுமை பெரியது சிறந்தது என்ற உண்மையை உணர்த்துகிறது. 4. கற்பனையைத் தூண்டி சிந்தனையை வளர்த்து இலக்கிய இன்பத்தைக் கொடுக்கிறது. 5. நாடகங்கள், கதைகள், கவிதைகளுக்கான கருவையும், பொருளையும் வழங்குகிறது. 6. பிற அறிவுத் துறைகளுக்குப் பின்புலமாகவும் அவற்றைப் புரிந்து கொள்வதற்குக் காரணமாகவும் உள்ளது.

வரலாறு நுண்ணறிவைக் கொடுக்கிறது வரலாறு மனித இயல்பைப் பற்றிய நுண்ண ணறிவைக் (insight) கொடுக்கிறது. மனித இயல்பு குணக் கலவை. அவனது நற்செயல்களும் தீச்செயல்களும் வரலாற்றில் பதிவாகியுள்ளன. நீதி - அநீதி, சமத்துவம் - சமத்துவமின்மை, உண்மை - பொய், எளிமை - ஆடம்பரம், அமைதி - போர், இன்முறை - வன்முறை, அடக்குமுறை - புரட்சி, அறிவாற்றல் - உணர்ச்சிப் பெருக்கு, தேசப்பற்று - உலக ஒற்றுமை, முன்னேற்றம் - பின்னடைவு போன்ற உடன்பாட்டு எதிர்மறைப் போக்கு வரலாற்றில் தொடர்ந்து காணப்படுகிறது. இதற்குக் காரணம் என்ன? இவையாவும் முரண்பட்ட மனித இயல்பின் வெளிப்பாடுகளே என்பதை வரலாறு தெளிவுபடுத்துகிறது.

வரலாறு பிரச்சனைகளுக்குப் பரிகாரம் காண உதவுகிறது வரலாறு முன்னுதாரணங்களைக் காட்டுகிறது. கடந்த காலத்தில் பிரச்சனைகளுக்கு எவ்வாறு தீர்வு காணப்பட்டது என்பதற்கான வரலாற்று எடுத்துக்காட்டுகள் ஏராளம். பலதரப்பட்ட உள்நாட்டு வெளிநாட்டுத் தகராறுகளைத் தீர்க்க வரலாற்றின் துணையைத்தான் நாட வேண்டியுள்ளது. இடைக்கால ஐரோப்பாவில் பல நகரங்கள் நிலச் சொந்த ஆவணங்களின் அடிப்படையில் நிலப் பிரபுக்களின் பிடியினின்றும் விடுதலை பெற்றன.

இன்றைக்கும் ஆட்சியாளர்கள் நாட்டெல்லையைப் பாதுகாக்கவோ, அண்டை நாட்டின் நிலப்பகுதியின் மீது சொந்தம் கொண்டாடவோ, அல்லது மீட்கவோ வரலாற்றுச் சான்றுகளைத்தான் காட்ட வேண்டியுள்ளது. இந்தியா - பாகிஸ்தான், சீனா - தைவான், வடக்கு - தெற்கு வியட்நாம், வட - தென் கொரியா, பாஸ்சிய - செர்பிய - ஹெர்சகொவினத் தகராறுகள் வரலாற்றுப் பிரச்சனைகள் தானே? வரலாற்று முன்னுதாரணங்களைக் கொண்டு நாடுகளுக்கிடையேயான தகராறுகளுக்குத் தீர்வு காண்பது இன்றைக்கும் அதிகாரப் பூர்வமான நடைமுறையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

வரலாற்று அறிவின் பொதுமை வரலாற்று அறிவும் அனுபவமும் உலகுக்குப் பொதுவானது. இந்த அறிவு மக்களிடையே அகிலுலகக் கண்ணோட்டத்தைக் (Universal outlook) கொடுக்கிறது. 17-ம் நூற்றாண்டில் இருந்து எழுதப்பட்டு வரும் பிரபஞ்ச வரலாறு இப்பரந்த மனப்பான்மையை வலுப்படுத்துவதாகவே உள்ளது. ஆட்டோ ஹெனிம் ரீனின் பொதுப் பண்பாட்டு வரலாறு, எச்.ஜி. வெல்சின் உலக வரலாறு, ஹாமர்ட்டனின் பிரபஞ்ச வரலாறு, வில்டூரண்டின் நாகரிகத்தின் கதை, யுனெஸ்கோவின் வெளியீடான மனிதகுல வரலாறு ஆகியவை வரலாற்று அறிவின் பொதுமையை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.

வரலாறு வருங்காலத்தை எதிர்ரொள்ள உதவுகிறது எதிர்காலம் ஒரு புதிர்காலம். இப்புதிர் காலத்தைப் புரிந்து கொள்வதற்கான திறவுகோல் கடந்த காலத்தில் உள்ளது. கடந்த காலத்தைப் பற்றிய அறிவின் துணையோடு நிகழ்காலத்தில் காலூன்றி நின்றால் தான் வருங்காலத்தை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியும். எதிர்காலத்தைப் பற்றி முன் கணிப்பு செய்வது சமூக உள்ளியக்கமாக (Social Urge) உள்ளது. 1) முன்கணிப்புகளைத் தேர்ந்தெடுத்தல் 2) மாற்று முன்கணிப்புகளை முடிவு செய்தல் 3) முன்கணிப்புகளைத் தொடர்ந்து சரி பார்த்தல் 4) முன் கணிப்புகளைப் பற்றி மக்களுக்கு எடுத்துரைத்ததல் ஆகியவை வரலாற்று முன்கணிப்பின் (Historical Forecasting) நான்கு கட்டங்களாகும். வருங்கால வரலாறு (Fuistory) புதிய அறிவுத் துறையாக உருவாகி வருகிறது.

வரலாற்றின் பொருளியல் பயன் வரலாற்றுக் கல்வியால் உலகியல் பொருளியல் பயன் உண்டா? உண்டு. அரசாங்கப் பதவிகளிலும், வெளிநாட்டுத் தூதரகப் பணிகளிலும் சேர்வதற்கு வரலாற்றுக் கல்வி பொருத்தமானது. மத்திய மாநில அரசுப் பணிகளுக்கான நுழைவுத் தேர்வுகளில் வெற்றி பெற இக்கல்வி கைகொடுக்கும். வரலாற்றுப் பட்டதாரிகள் அருங்காட்சியகங்கள், கலைக் கூடங்கள், அறநிலைய மற்றும் சுற்றுலாத் துறைகளில் சேர்ந்து பணியாற்றத் தகுதியுடையோராவர். வரலாற்று முதுநிலை மற்றும் ஆராய்ச்சிப் பட்டதாரிகள் பல்கலைக் கழகங்களிலும், கல்லூரிகளிலும், வரலாற்று ஆய்வு நிலையங்களிலும் பணியாற்ற சிறப்புத் தகுதி பெற்றோராவர். இவை யாவும் வரலாற்றின் வெளிப்படையான பொருளியல் பயன்களாகும்.

வரலாற்றின் உண்மையான அடிப்படையான பயன் மனித மனதை வளப்படுத்துவதில் தான் உள்ளது.

வரலாற்றின் கெடுபயன் (Abuse of History) வரலாறு சரியாக எழுதப்படாத போது அல்லது தவறாகப் பயன்படுத்தப்படும் போது கெடுபயன் விளைகிறது. இத்தவறு பின்வரும் நான்கு நிலைகளில் ஏற்படக் கூடும்: 1). போதிய நம்பகமான சான்றுகளின்றி வரலாறு எழுதுதல், 2) வரலாற்றாளர் தனது விருப்பு வெறுப்புக்கேற்ப வரலாறு எழுதுதல் 3). வரலாற்று நிகழ்வுகளுக்கு நோக்கம் கற்பித்தல் 4). வரலாற்று விளக்கங்களின் அடிப்படையில் தீர்ப்புகளைக் கூறல். எனவே வரலாற்று உண்மைகளின் தன்மை, வரலாற்றாளரின் குறைபாடு, வரலாற்று விளக்கம் மற்றும் தீர்ப்பு வரலாற்றின் கெடுபயனுக்கான காரணங்களாகும். வாலாற்றின் கெடுபயனுக்கான வரலாறுகள் வருமாறு:

புராண வரலாறு (Mythological History) புராணக் கதைகள் கற்பனைப் புனைவுகள், புராண நிகழ்வுகள் கால - இட வரம்புக்கு அப்பாற்பட்டவை. சரிபார்த்து ஒப்பிட்டு அறியக்கூடிய ஆதாரங்களற்றவை. பண்டைய பாபிலோனியர்களும், எகிப்தியரும், எபிரேயர்களும், இந்துக்களும் புராணக் கதைகளை வரலாற்று நிகழ்ச்சிகள் என்று எண்ணி மயங்கினர். புராண வரலாறு என்ற சொற்றொடர் முரண்பாடுடையது. இது தோற்றத்தால் வரலாறேயன்றி உண்மை வரலாறல்ல. புராணக் கதையை வரலாறாகக் கருதுவது வரலாற்றுக் கெடுபயன் ஆகும்.

இறையருள் வெளிப்பாட்டு வரலாறு (Apocalyptic History) அப்போகாலிப்ஸ் (Apocalypse) என்பது பைபிளின் இறுதிப் பகுதி. இதில் புனித ஜான் உலகம் முடியப் போகும் செய்தியை வெளிப்படுத்துகிறார். வரலாற்றை சமய நம்பிக்கையின் மூலம் விளக்க முயல்வது இறையருள் வெளிப்பாட்டு வரலாறு ஆகும். அதாவது இறைவனால் படைக்கப்பட்ட இந்த உலகை இறைவனால் மட்டுமே திருத்தி அமைக்கவோ, மாற்றம் செய்யவோ , வேறுபடுத்தவோ முடியும் என்ற நம்பபிக்கையின் மீது வரையப்படுவதாகும். யுசேபியசின் ஆண்டு நிகழ்ச்சித் தொகுப்பும், புனித அகஸ்டினின் கடவுளின் நகரமும் இத்தகைய வரலாற்றுக்கான உதாரணங்களாகும். இது வரலாற்றின் கெடுபயன்.

சார்பு வரலாறு (Biased History) சார்பு வரலாறு புராண மற்றும் இறையருள் வெளிப்பாட்டு வரலாற்றினின்றும் வேறுபட்டது. சார்பு வரலாறு சான்றுகளைக் கொண்டு எழுதப்படுகிறது. ஆனால் சான்றுகள் சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ பயன்படுத்தப்படுகின்றன. சமயச் சீர்திருத்தக் காலத்து ஐரோப்பாவில் கத்தோலிக்கர்கள் வரலாற்றைத் தங்களுக்குச் சார்பாகவும், மறுப்பியக்கத்தார் அவர்களுக்கு ஆதரவாகவும் எழுதிக் கொண்டனர். 1752ல் வெளியிடப்பட்ட கடவுள் வழி நெதர்லாந்து" என்ற நூல் மறுப்பியக்க வரலாற்று அணுகுமுறைக்கான உதாரணமாகும். டிரெவல்யன் எழுதிய ஆன் அரசியின் கீழ் இங்கிலாந்து என்ற நூலை விக் (Whig) கட்சிக் கண்ணோட்டத்தோடு எழுதினார். குரோசே, மாம்சன்,

குறிப்பு

மெக்காலே, நேமியர், கிப்பன், கார்லைல், மெய்ன்கே போன்றோர் சார்பு வரலாற்றாளர்கள் ஆவர். 1973-ல் இந்திரா காந்தி அரசு ஒரு சார்பு காலப் பெட்டகத்தை (Time Capsule) செங்கோட்டையில் புதைத்து நேரு குடும்பப் பெருமையை நிலைநாட்ட முற்பட்டது. குறிப்பிட்ட கண்ணோட்டத்துடன் எழுதப்படும் எந்த வரலாறும் கெடுபயனை விளைவிக்கக் கூடியதேயாகும்.

உள்ளூக்க வரலாறு (Motivated History) சமகால சமூக எழுச்சியால் ஊக்கம் பெற்று எழுதப்படுவது உள்ளுக்க வரலாறு ஆகும். எடுத்துக்காட்டாக 19-ம் நூற்றாண்டில் பிரிட்டன் பெற்ற பொருள் வளமும் பேரரசுப் பெருக்கமும் வரலாற்றாளர்களை முன்னேற்ற வழிபாட்டை (Cult of Progress) ஊக்குவிக்கச் செய்தது. உலகில் ஒவ்வொரு காலத்திலும் உண்மையான செல்வமும், மகிழ்ச்சியும், அறிவும், நற்பண்பும் அதிகரித்துள்ளது என்று எழுதினார் கிப்பன். வரலாறு ஒரு முன்னேற்ற அறிவியல் என்று கருதினார் ஆக்டன் பிரபு. வருங்காலத்தில் இயற்கை வளங்களின் மீதுள்ள மனித ஆற்றலுக்கும், அவ்வளங்களை மனித இன நலத்துக்காகப் பயன்படுத்துவதற்குமான அறிவுக்கும் எல்லையில்லை என்று எண்ணினார் டாயின். “நான் நிரம்பி வழிந்த விக்டோரியன் நம்பிக்கையுகத்தில் வளர்ந்தேன் இந்த நம்பிக்கையில் வாழ்கிறேன்” என்று எழுதினார் பெர்ட்ரண்டு ரஸ்ஸல். இவ்வாறு உள்ளூக்க உந்துதலால் எழுதப்படுவது வரலாற்றின் கெடுபயனாகும்.

வாழ்க்கை வரலாறு (Biographical History) வரலாற்று மாமனிதர்கள் தங்களது அடிச்சுவடுகளை கால மணற்பரப்பில் பதித்துச் செல்வதாகப் பரவசத்துடன் பாடினார் லாங்பெலோ. ”மாமனிதர் கோட்பாட்டைக் கொடுத்தார் கார்லைல். அவரைப் பின்பற்றிப் பலரும் வாழ்க்கை வரலாற்றை வரலாறு என்று எண்ணி மயங்கினர். தனி மனிதரை வரலாற்று நிகழ்வுக்குப் பொறுப்பாக்குவது வரலாற்றுக்குப் புறம்பானது. மாமனிதர்களின் சாதனைத் தொகுப்பே வரலாறு என்ற எண்ணம் தவறானது. வாழ்க்கை வரலாறு சான்றுகளைக் கொண்டு எழுதப்பட்டாலும் கெடுபயனுடையது.

இன வரலாறு (Racial History) இன வரலாறு வரலாற்றின் கெடுபயனுக்கான சிறந்த எடுத்துக்காட்டாகும். இன உயர்வுக் கோட்பாட்டுக்கு வித்திட்டவர் பிரெஞ்சு நாட்டு மேல் குடிமகனாகிய காம்டே (Comte de Gobineau) ஆவார். அவரது கற்பனைக் கூற்றுக்கு ஜெர்மானிய மொழி நூலார் இனவாத வடிவம் கொடுத்தனர். வெள்ளை நிறத்தவரை, நார்டிக், ஆல்பைன், மெடிட்டரேனியன் இனத்தவர் என்றும் அவர்களுக்கெனத் தனித்திறன் உண்டு என்றும் வாதிட்டனர். ஜெர்மானிய நார்டிக் இனமே உலகில் உயர்ந்த இனம் என்றார் இட்லர். மங்கோலிய இனத்தைச் சேர்ந்த சீனர்கள் தனித்திறன் கொண்ட நாகரிகத்துக்குச் சொந்தம் கொண்டாடினர். பண்டைய இந்திய ஆரியர் வர்ணாசிரம அடிப்படையில் தங்களது இன மேன்மையை நிலை நாட்டினர். திராவிட

**குறிப்பு**

இனப்பற்று தனித் திராவிட நாடு கோரிக்கை அளவுக்குச் சென்று அடங்கியது. தமிழன் என்றொரு இனமுண்டு தனியே அவர்க்கொரு திறமுண்டு என்ற கூற்றும் இந்த வகையைச் சேர்ந்ததே. உலக நாகரிகங்களின் தோற்றம் பற்றி ஆராய்ந்த டாயின்பி இன மேம்பாட்டுக் கோட்பாட்டை நிராகரித்தார். இன வரலாறு அறிவியல் அடிப்படையற்றது. அரசியல் பேராபத்து" என்று கூறுகிறார் காலிங்வுட்.

நாட்டுப்பற்று வரலாறு (Patriotic History) நாட்டுப் பற்றுடன் எழுதப்படும் வரலாறும் தவறானதே. தேசியம் பிராந்தியப் பற்றை ஊக்குவிக்கிறது. "தேசியம் என்பது தல சமூகத்தின் கூட்டு அதிகாரப் பட்டரை" என்று கூறுகிறார் டாயின்பி. சொந்த நாட்டின் நிறைகளை உயர்த்தி எதிரி நாடுகளின் குறைகளை மிகைப்படுத்திக் கூறச் செய்கிறது. பிரெஞ்சுப் புரட்சிக்குப் பின் ஐரோப்பாவில் நாட்டுப் பற்றுடன் எழுதும் வழக்கம் வேரூண்டியது. மிக்சலெட்டின் பிரான்ஸ், டிரெய்ட்ஸ்கேயின் ஜெர்மனி, பிரான்சிஸ் பாலகேயின் பொஹீமிய மக்கள் வரலாறு, ஜார்ஜ் பான்கிராப்டின் அமெரிக்க வரலாறு, தேசிய வெறியைத் தூண்டக் கூடியவை. இத்தேசிய வைரஸ் பிற நாடுகளின் வரலாற்றாளர்களையும் பற்றிக் கொண்டது. தேசியம் தற்கால வரலாற்றின் அசாதாரண ஆற்றலாகி வரலாற்று வரைவியலை ஆக்கிரமித்து வரலாற்றாளர்களை அடிமைப்படுத்தி விட்டது என்று கூறுகிறார் கொமாகர்.

கோட்பாட்டு வரலாறு (Theoretical History) கோட்பாட்டைக் கொண்டு வரலாற்று நிகழ்வுகளை விளக்குவது வரலாற்றுக் கெடுபயன் ஆகும். வரலாற்றை நிகழ்ந்தவாறு கூறுவது வரலாற்றாளர் நினைத்தவாறு கூறுவது தவறான அணுகுமுறையாகும். உதாரணமாக பண்டைய எகிப்தியர் வரலாற்றைக் கடவுள்களின் காலம், வீரர்களின் காலம், மனிதர்களின் காலம் என்று பிரித்தனர். இந்துக்கள் திரேதாயுகம், துவபரயுகம், கலியுகம் என்று பிரித்தனர். இத்தகைய எண்ணம் வரலாற்று வட்டச் சுழற்சிக் கோட்பாட்டில் (Cyclical Theory of History) முடிந்தது. இக்கோட்பாட்டில் விக்கோ, ஹெகல், மார்க்ஸ், ஸ்பெங்லர், டாயின் போன்றோர் அறிவியல் சாயம் பூசினர். இத்தகைய கோட்பாட்டு விளக்கம் வரலாற்றைத் தவறாகப் பயன்படுத்துவதாகும்.

கற்பனை வரலாறு (Imaginative History) கற்பனை வரலாறும் வரலாற்றுக் கெடுபயனுக்கான எடுத்துக்காட்டாகும். இலட்சிய சமூகத்தை எட்டுவதற்காகக் கற்பனைக்கு வரலாற்று வடிவம் கொடுக்கப்படுகிறது. பிளேட்டோவின் குடியரசு, சர் தாமஸ் மூரின் கற்பனை உலகு, தாமஸ் ஹாப்சின் லெவயதான், ஜான் லாக்சின் சிவில் அரசாங்கம், மாண்டெஸ்க்யுவின் சட்டங்களின் சாரம், ரூசோவின் சமுதாய ஒப்பந்தம் போன்றவை கற்பளை வரலாறுகள் ஆகும். இவை கருத்துருவாக்கத்துக்கும் அறிவுப் புரட்சிக்கும் காரணமாக இருந்தன. ஆனால் இவை வரலாறல்ல. கற்பனை வரலாறு மனித நம்பிக்கைகளை ஏளனம் செய்வதாக உள்ளது என்று கருதினார் வில்டூரண்ட்.

குறிப்பு

தத்துவ வரலாறு (Philosophical History) வரலாற்றுக்குத் தத்துவ விளக்கமளிப்பது வரலாற்றுக் கெடுபயனுக்கான மற்றுமொரு எடுத்துக்காட்டாகும். நம்பிக்கை முறைகளை (Systems of Beliefs) சான்றுகளாகக் கொண்டு வரையப்படுவது வரலாறல்ல. தத்துவ வட்டத் துளைக்குள் வரலாற்றுச் சதுரக் கட்டையை நுழைப்பது வரலாற்றைத் தவறாகப் பயன்படுத்துவதாகும். மேலும் தத்துவ வரலாற்று அடிப்படையும் காலத்துக்குக் காலம் மாறிக் கொண்டிருக்கிறது. பண்டைய கிரேக்க தத்துவ ஞானிகள் கணித அறிவை மையமாகக் கொண்டு சிந்தித்தனர். இடைக்காலத்தில் இறையருள் தத்துவம் வரலாற்றின் குவிமையமாக இருந்தது. தற்காலத்தில் வரலாற்றுத் தத்துவத்துக்கு அறிவியல் விளக்கம் அளிக்கப்படுகிறது. இத்தகைய தத்துவ ஊக விளக்கங்கள் வரலாற்று வரைவாகாது.

மதிப்பீடு வரலாற்றின் பயனும் கெடுபயனும் அதைப் பயன்படுத்துவதைப் பொறுத்தே உள்ளது. வரலாறு என்ற சமூக ஆய்வுக் கூடத்தில் இடையறாது பரிசோதனைகள் நடந்த வண்ணம் உள்ளது. அதனால் வரலாற்று அணுகுமுறையும் காலத்துக்குக் காலம் மாறுபடுகிறது. அறிவியல் விதிகள் கூட அசாதாரண சூழ்நிலைகளில் தவறாகிவிடுகின்றன. இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியின் மாபெரும் கண்டுபிடிப்பாகக் கருதப்படுவது குழப்பக் கோட்பாடு (Chaos Theory) ஆகும். புள்ளி விவர விதிகளில் உருவாக்கப்பட்டுள்ள இக்கோட்பாட்டின் படி உலகில் நிகழும் எந்த சம்பவத்தையும் எந்த நிகழ்ச்சியோடும், எந்த விளைவையும் எந்தக் காரணத்தோடும் இணைக்கலாம். எனினும் இக்கோட்பாடும் முடிந்த முடிவல்ல. எனவே வரலாறு உட்பட எந்த அறிவுத் துறையின் பயனும் கெடுபயனும் அதைக் காலமாறுபாடுகளுக்கேற்பப் பயன்படுத்திக் கொள்வதில்தான் உள்ளது.

## 4.5. வரலாற்றுத் தத்துவம் (Philosophy of History)

”வரலாற்றுத் தத்துவம்” எனும் தொடரினை உருவாக்கியவர் ஃபிரெஞ்சுத் தத்துவரான வால்டேர் (18ஆம் நூற்றாண்டு) ஆவார். இத்தொடரை எந்தப் பொருளில் வால்டேர் வழங்கினார் என்பதை ஆர்.ஜி. காலிங்வுட் கீழ்வருமாறு கூறுவார். வால்டேர் வரலாற்றுத் தத்துவம் என்று கூறியது ஆய்வு முறை வரலாறு அல்லது விஞ்ஞான முறை வரலாறு என்பதேயாம். அதாவது வரலாற்றாளன் தனது பகுத்தறிவினைக் கொண்ட எம்முடிவையும் காணல் என்பதாம் என்றும் அவர் விளக்கம் கூறினார். சமயவாதிகள் வரலாற்றிற்குப் பாரம்பரிய முறையில் பொருள் வழங்குவர். அப்பொருளினின்றும் வால்டேரின் கருத்தை வேறுபடுத்திக் காண்பதற்கே காலிங்வுட் இவ்வாறு விளக்கம் கூறினார். 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஹெகல் போன்ற ஜெர்மானிய வரலாற்றாளர்களும் வரலாற்றுத் தத்துவம் என்னும் தொடரைப் பயன்படுத்தினார்கள். ஆனால்,

அத்தொடருக்கு அவர்கள் உலக வரலாறு அல்லது பிரபஞ்ச வரலாறு என்றே பொருள் கண்ட னர்.

**குறிப்பு**

கூறிய பொருளையே மேற்கொள்ளுவர். லோவித் (Lowith) என்னும் வரலாற்றாளர் வரலாற்று நிகழ்ச்சிகள், தொடர்ச்சிகள் என்பவற்றை ஒன்றித்து ஓர் ஆதாரத் தத்துவக் கோட்பாட்டினையொட்டிப் பிரபஞ்ச வரலாற்றிற்கு ஒரு முறையான வகையில் பொருண்மை காணல் வரலாற்றுத் தத்துவம் ஆகும் என கூறினார். இவ்வாறு காணப்போனால் வரலாற்றுத் தத்துவம் என்பது வரலாற்றுச் சமய மரபில் கொண்டு போய்விடும். கிறிஸ்துவ சமய மரபின்படி மனித வரலாறு முதற்பாகம், கருவாய், நிறைவு , வீடு என்று பரிணமித்து வருவதாம். ஆகவே, வரலாற்றுத் தத்துவம் என்பது சமயச் சார்பாகவோ, வேறு விதமாகவோ வரலாற்றிற்கு ஒரு பொருண்மை கண்டு அப்பொருண்மையினைத் தத்துவநிலைக்கு உயர்த்துதல் என்பதாகும்.

19ஆம் நூற்றாண்டு (விஞ்ஞான) உடன்பாட்டுக் கோட்பாட்டாளர்கள் (Positivists) வரலாற்றுத் தத்துவத்தை வரலாற்றில் கூறப்படும் நிகழ்ச்சிகளையெல்லாம் பொருள்தரும் வகையில் பிணைக்கும் ஒரு தத்துவம் என்று கொண்டனர்.

வரலாற்றுத் தத்துவம் வரலாற்றுப் பழமையோடும் அப்பழமையோடு தொடர்புடைய வரலாற்றும் சிந்தனைகளோடு மட்டும் தொடர்புடையதன்று, அவ்விரண்டின் பரஸ்பர உறவாடலால் தோன்றும் நிலைமையை ஆய்வதே வரலாற்றுத் தத்துவமாகும் என்று ஆர்.ஜி.காலிங்வுட் கூறுகிறார்.

18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அறிவொளி அறிஞர்கள் இடைக்கால (Enlighterment Philosophers) மூடநம்பிக்கையிலிருந்து தாங்கள் விடுபட்டுவிட்டதாகக் கருதி அறிவொளித் தத்துவத்தைப் பரப்பினர். அவர்கள் கணக்குப்படி பகுத்தறிவு ஒன்றையே மூல ஆதாரமாகக் கொண்டு (அதாவது தருக்க ரீதியாக) ஆய்ந்தறிந்தவையே தவிர்க்க முடியாத இயற்கை நெறி என்று அவர்கள் கண்டுணர்ந்தனர்.

வரலாற்றுத் தத்துவம் என்னும் தொடருக்கு மூன்று விதமாகப் பொருள் கூறலாம் (1) காரண காரியத் தொடர்பு, முன்னியக்கம் முதலிய வரலாற்று நிகழ் - முறைகளைப்பற்றி வரலாற்றாளர் கொண்டுள்ள அடிப்படைக் கொள்கைகள் அல்லது தற்கோள்கள், (2) வரலாற்று ஆய்வு முறைகளைப் பற்றிய கருத்துக்களும் ஆராய்ச்சிக் கட்டுரை வரைவதற்கான விதிமுறைகளும், (3) வரலாற்றின் ஆதாரத் தன்மையைப் பற்றிய உயர்நிலைக் கோட்பாடுகள். பெரும்பாலும் வரலாற்றுத் தத்துவத்தைப் பற்றி வரைவோர் யாவரும் மூன்றாவதாக

இக்காலத்தில் தோன்றிய கருத்துகளில் முக்கியமானவை மூன்று (1) மனித குலத்தைப் பூரணச் சிறப்படையச் செய்ய முடியும் (2) வரலாற்று நிகழ்முறை தவிர்க்க முடியாதது (3) சமுதாய நிகழ்முறையை மனிதன் மாற்றியமைக்க முடியும். இதில் விந்தை யாதெனில் இம்மூன்று

குறிப்பு

கருத்துக்களும் ஒரே சமயத்தில் பலரிடையே பரவியிருந்தமையே. இக்கருத்துகளைப் பரப்பிய முன்னோடிகள் என்று கருத்ததக்கவர்கள் டர்கோ (Turgot), கண்டார்ஸெ (Condercet) என்னும் பிரெஞ்சு அறிஞர்கள். அவர்களைப் பின்பற்றி பத்தொன்பதாம் நூற்றாண்டின் செயின்ட் சைமன் (SaintSimon), காமட் (Comte), மார்க்ஸ் என்போர் தமது கோட்பாடுகளை உருவாக்கினர்.

இவ்வகை விளக்கங்களைத் தவிர விக்கோ (Vico) ஹெர்டர் (Herder), மான்டெஸ்க்யூ (Montesquieu) என்போர் வேறு சில கொள்கைகளை நிறுவினர். டெகார்ட் என்னும் பிரெஞ்சுக் கணிதத் தத்துவர் நிறுவிய கார்டீசியனிச கோட்பாட்டினை விக்கோ ஏற்றுக்கொள்ள மறுத்தார். (டெகார்ட்டின் ஆதாரக் கோட்பாட்டினைக் கார்டீசியனிக் கோட்பாடு என்பர்). கணிதத்திலும் பிற விஞ்ஞான இயல்களிலும் பொது உண்மைகளைக் கண்டால் அவை எல்லா நிகர்நிலைகளுக்கும் பொருந்துவனவாம் என்பது டெகார்டின் கூற்று

காமட் போன்ற பிரெஞ்சு அறிஞர்கள் விஞ்ஞானத்தின் பொதுத் தன்மையை வற்புறுத்தித் தமது உடன்பாட்டுக் கோட்பாட்டினை நிறுவினர். அக்கோட்பாடு மிக விரைவிலேயே அறிவியலுலகில் மிகுந்த செல்வாக்குப் பெற்றுவிட்டது. மற்றொரு ஐரோப்பியத் தத்துவரான ஹேகல் இயற்கை நிகழ்ச்சிகளுக்கும் வரலாற்று நிகழ்ச்சிகளுக்கும் இடையே எழும் வேறுபாடுகள் பல என்றார். ஹேகல் பகுத்தறிவு, பரிணாமம், (மனித இச்சையால் தோன்றும் வளர்ச்சி) நிகழ்முறை, சுதந்திரம் என்னும் கருத்துகள் யாவையும் வரலாற்று வளர்ச்சிக்கு மட்டும் பொருந்துபவை, இவற்றை விஞ்ஞான அளவைகளால் அளவியற்படுத்தி அளந்து காணமுடியாது என்பது இதன் கிளை முடிவு (Corollary). ஒரு சில அறிவியல் துறைகளில் (உதாரணமாக, அளவியற்படுத்தற் கெளிய விஞ்ஞானத் துறையில்) பயன்படும் நிகழ்முறைகள், சோதனைக் கருவிகள் முதலியவை பிற அறிவியல் துறைகளுக்கும் (உதாரணமாக, வரலாறு) பொருந்துவனவாம் என்னும் கருத்தை ஒப்புக் கொள்ள மறுத்து ஹெகல் தமது புகழ்பெற்ற விவாதக் கோட்பாட்டினை (dialectics) நிறுவினார். காமட் மற்றும் ஹெகலின் தத்துவங்கள் மார்க்ஸ்சின் கோட்பாட்டிற்கு துணையாக அமைந்தது.

## 4.6. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

1. வரலாற்றின் பயன்பாடு பற்றிய கருத்து ஏன் சிக்கலானதாகவும் சர்ச்சைக்குரியதாகவும் மாறுகிறது?

2. ஆர்.ஜியின்படி ‘அபோகாலிப்டிக்’ வரலாறு என்றால் என்ன. காலிங்வுட்?

3. வரலாற்றின் தத்துவங்களின் இரண்டு பிரிவுகள் யாவை?

4. ஹெகலால் அங்கீகரிக்கப்பட்ட நான்கு சகாப்தங்களை குறிப்பிடவும்.

குறிப்பு

## 4.7. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்

1. வரலாற்றின் பயன்பாடு என்ற கருத்து தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் குழுக்களின் அணுகுமுறை மற்றும் அணுகுமுறையை அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது நிராகரிக்கப்பட்ட தேவைகளை பிரதிபலிக்கிறது என்பதால், அது சிக்கலானது, சிக்கலானது மற்றும் சர்ச்சைக்குரியதாகிறது.

2. கிறிஸ்தவ வரலாற்றில், கடவுள் மக்களையும் நாடுகளையும் படைத்தார் என்று நம்பப்படுகிறது. எனவே, வரலாற்று செயல்முறை என்பது கடவுளின் நோக்கத்தின் செயல்பாடாகும், இது மனிதனின் நோக்கமாக இருக்க வேண்டும். காலவரிசையின் மையத்தில் கிறிஸ்துவின் பிறப்பை நிர்ணயித்து, வரலாறு இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது-கிறிஸ்து பிறப்பதற்கு முன் (கி.பி.) மற்றும் (கி.பி.) பிறகு. இந்த வகை வரலாற்றை ஆர்.ஜி காலிங்வுட் "அபோகாலிப்டிக்" என்று அழைத்தார்.

3. வரலாற்றின் தத்துவங்களில் இரண்டு பிரிவுகள் உள்ளன் ஒன்று வரலாற்றின் ஊகத் தத்துவம், மற்றொன்று வரலாற்றின் விமர்சன அல்லது பகுப்பாய்வுத் தத்துவம்.

4. உலக வரலாற்றுக் காட்சியில் நான்கு சகாப்தங்களை ஹெகல் அங்கீகரித்தார். அவை ஓரியண்டல் சகாப்தம், கிரேக்க சகாப்தம் ரோமானிய சகாப்தம் மற்றும் ஜெர்மானிய சகாப்தம்.

## 4.8. அத்தியாயச் சுருக்கம்

- ஹெரோடோடஸின் கூற்றுப்படி, வரலாறு ஆர்வத்தைத் தூண்டுகிறது, மகிழ்ச்சியுடன் அறிவுறுத்துகிறது, தகவலை அளிக்கிறது மற்றும் ஆர்வத்தைத் தூண்டுகிறது. ரோமானிய சட்ட அறிஞர் சிசரோ, 'நீங்கள் பிறப்பதற்கு முன் என்ன நடந்தது என்பதை அறியாமல் இருப்பது குழந்தையாகவே இருப்பதே' என்று கூறினார். சு.பு ஊழுடடைபெறழழன கருத்துப்படி, 'வரலாற்றின் மதிப்பு என்னவென்றால், மனிதன் என்ன செய்தான், அதனால் மனிதன் என்ன என்பதை அது நமக்குக் கற்பிக்கிறது.
- புனித அகஸ்டின் மற்றும் போஸ்யூட் கருத்துப்படி, வரலாறு ஒரு நேரியல் வளர்ச்சியை உறுதிப்படுத்துகிறது, அதாவது தெய்வீக ஞானத்தின் செல்வாக்கை தீர்மானிக்கக்கூடிய தொடர்ச்சியான முன்னேற்றம்.

- இம்மானுவேல் கான்ட் வரலாற்றை ஒரு தொடர்ச்சியான, எளிமையானதாக இல்லாவிட்டாலும், ஒரு சிறந்த நிலையை நோக்கி முன்னேறுவதாகக் கண்டார். இயற்கையானது ஒரு நீண்ட காலத் திட்டத்தைக் கொண்டுள்ளது.
- ஃபிரெட்ரிக் ஏங்கெல்ஸின் கூற்றுப்படி, உலக வரலாறு அதன் அனைத்து மாறிவரும் காட்சிகளுடன் "வளர்ச்சியின் செயல்முறை மற்றும் ஆவிகளின் உணர்தல்" ஆகும். வரலாற்று நிகழ்வுகள் அந்த ஆவிகளின் வெளிப்பாடுகள்.
- அகஸ்டே காம்டே (1798-1857) வரலாற்று செயல்முறையை விளக்க முயன்ற மூன்று நிலைகளின் சட்டத்தை உருவாக்கினார். அவரது கருத்துப்படி, மனிதகுலத்தின் வரலாறு தெளிவாக கவனிக்கக்கூடிய மூன்று நிலைகளில் வடிவமைக்கப்பட்டுள்ளது. முதல் கட்டம் பழமையான காட்டுமிராண்டித்தனத்தால் குறிக்கப்பட்ட இறையியல் காலம்.
- கார்ல் மார்க்ஸ் (1818-1883) ஹெகலிடம் இருந்து இரண்டு கோட்பாடுகளை கடன் வாங்கி தனது சொந்த வரலாற்றுக் கோட்பாட்டிலிருந்து மறுவடிவமைத்தார். முதலாவது இயங்கியல் பற்றிய யோசனை. இயங்கியல் சிந்தனை மண்டலத்திற்கு மட்டுமல்ல, பொருள் விஷயங்களுக்கும் பொருந்தும் என்று மார்க்ஸ் நம்பினார். இரண்டாவதாக, ஒரு சமூகத்தின் வாழ்க்கையின் பல்வேறு அம்சங்கள் இயல்பாகவே தொடர்புடையவை என்ற பார்வை.
- வரலாற்றின் விமர்சனத் தத்துவம் 19 ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டது மற்றும் அது 20 ஆம் நூற்றாண்டில் சிறப்பைப் பெற்றது. அதன் முக்கிய முக்கியத்துவம் வரலாற்றாசிரியர்கள் தங்கள் பொருளைச் செயலாக்குவதில் பயன்படுத்தும் நடைமுறைகள் மற்றும் வகைகளில் உள்ளது.

## 4.9. முக்கிய சொற்கள்

- சமூக மறதி: இது ஒரு குழுவினரால் ஏற்படும் கூட்டு மறதி. இது நினைவுகளின் "கட்டாய அடக்குமுறை", அறியாமை, மாறிவரும் சூழ்நிலைகள் அல்லது மாறிவரும் ஆர்வங்களிலிருந்து வரும் மறதி ஆகியவற்றின் விளைவாக இருக்கலாம்.
- இயங்கியல்: இது ஒரு விஷயத்தைப் பற்றி வெவ்வேறு கண்ணோட்டங்களைக் கொண்ட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கு இடையிலான உரையாடலாகும், ஆனால் நியாயமான வாத முறைகள் மூலம் உண்மையை நிறுவ விரும்புகிறது.
- லீனியர் டெவலப்மென்ட்: இது ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு நேராக மாறுவது அல்லது முன்னேறும் ஒரு

செயல்முறையாகும், மேலும் இது ஒரு தொடக்கப் புள்ளி மற்றும் முடிவுப் புள்ளியைக் கொண்டுள்ளது.

- சகாப்தம்: இது ஒரு நிகழ்வு அல்லது ஒரு புதிய காலம் அல்லது வளர்ச்சியைத் தொடங்கும் நிகழ்வால் குறிக்கப்பட்ட நேரம்.

## 4.10. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

**குறுகிய வினாக்கள்**

1. வரலாறு பற்றி ஹெரோடோடஸ் என்ன கூறுகிறார்?

2. 'வரலாற்றின் தத்துவம்' என்பதன் மூன்று முக்கிய அர்த்தங்கள் யாவை?

3. வரலாற்று எழுத்துக்கான ஊக அணுகுமுறை எதைக் குறிக்கிறது?

4. வரலாற்றின் ஊக தத்துவத்திற்கான மத அணுகுமுறை பற்றி ஒரு சிறு குறிப்பை எழுதவும்.

5. இம்மானுவேல் கான்ட் வரலாற்றை எவ்வாறு பார்த்தார்?

**விரிவான வினாக்கள்**

1. வரலாற்றின் பயன்பாட்டை விரிவாகக் கூறுங்கள்.

2. வரலாறு தவறாகப் பயன்படுத்தப்படும் சில சூழ்நிலைகளை பகுப்பாய்வு செய்யுங்கள்.

3. காம்டேயின் மூன்று நிலைகளைப் பற்றி விவாதிக்கவும், அதன் மூலம் அவர் வரலாற்று செயல்முறையை விளக்க முயன்றார்.

## 4.11. கூடுதல் வாசிப்புகள்

Warren, John. 1998. *The Past and Its Presenters*: An Introduction to Issues in Historiography. London: Hodder & Stoughton Educational.

Ferro, Marc. 2003. *The Use and Abuse of History*: Or How the Past is Taught to Children. Abingdon: Routledge.

E. Sreedharan. 2004. *A Textbook of Historiography: 500 BC to AD 2000*. New Delhi: Orient Blackswan.

Sharma, Arvind. 2003. *Hinduism and its Sense of History*. New Delhi: OUP India.

குறிப்பு

Iggers, Georg G. 2005. *Historiography in the 20th Century: From Scientific Objectivity to the Postmodern Challenge*. Connecticut: Wesleyan University Press.

Stuart, Hughes H. 1964. *History as Art and as Science.* New York: Joanna Cotler Books.

Fea, John. 2013. *Why Study History? Reflecting on the Importance of the Past*. Washington: Baker Publishing Group.

# அலகு-5

## காரணம், வரலாற்றியம்,வரலாற்று சார்பியல்வாதம் மற்றும் வரலாற்று நிர்ணயம்

உள்ளடக்கம்

5.1. முன்னுரை

5.2. நோக்கங்கள்

5.3. வரலாற்றில் காரண காரியம் (Causation in History)

5.4. வரலாற்றியம் (Historicism)

5.5. வரலாற்றுச் சார்பியம் (Historical Relativism)

5.6. வரலாற்று முன் நிர்ணயக் கோட்பாடு (Historical Determinism)

5.7. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

5.8. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்

5.9. அத்தியாயச் சுருக்கம்

5.10. முக்கிய சொற்கள்

5.11. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

5.12. கூடுதல் வாசிப்புகள்

## 5.1. முன்னுரை

ஒவ்வொரு நிகழ்வும் அதன் முந்தைய நிகழ்வுகளால் ஏற்படுகிறது அல்லது தொடங்கப்பட்டது என்று கூறும் காரணக் கொள்கையால் வரலாறு நிர்வகிக்கப்படுகிறது. எனவே, சமகாலத்தில் நடக்கும் ஒரு நிகழ்வை வரலாற்று நிகழ்வுகளிலிருந்து தனித்து பார்க்க முடியாது.

**குறிப்பு**

வரலாற்றின் ஆய்வில் உள்ள மற்றொரு முக்கியமான நம்பிக்கை, வரலாற்றில் நிகழ்வுகளின் விளக்கம் முற்றிலும் புறநிலையாக இருக்க முடியாது மற்றும் வரலாற்று உண்மையின் புறநிலை தரநிலை இல்லை, ஏனெனில் அது வரலாற்றாசிரியரின் கருத்துக்கள் மற்றும் கருத்துக்களால் பாதிக்கப்படும். ஒரு குறிப்பிட்ட வரலாறு எழுதப்பட்ட காலத்தின் தப்பெண்ணங்கள் மற்றும் நம்பிக்கைகள், கடைசியாக, வரலாற்று நிர்ணயவாதம் என்பது வரலாற்றைப் பற்றிய மற்றொரு முக்கியமான கோட்பாடாகும், இது அனைத்து நிகழ்வுகளும் ஏற்கனவே உள்ள பல்வேறு சக்திகளால் முன்னரே தீர்மானிக்கப்பட்டது என்பதை வெளிப்படுத்துகிறது. இந்தக் கருத்துக்கள் இந்த அலகில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

## 5.2. நோக்கங்கள்

**இந்த அத்தியாயத்தை படிப்பதன் மூலமாக கீழ்காண்பனவற்றை புரிந்து கொள்ள இயலும்**

- காரணம் மற்றும் மாற்றம் பற்றிய கருத்துகளை பகுப்பாய்வு செய்ய இயலும்
- வரலாற்றுவாதம், வரலாற்று சார்பியல்வாதம் மற்றும் வரலாற்று நிர்ணயவாதம் ஆகியவற்றின் கருத்துகளைப் பற்றி விவாதிக்கலாம்.

## 5.3. வரலாற்றில் காரண காரியம் (Causation in History)

இடைக்காலத்தில் வரலாற்று நிகழ்வுகள் மனித செயலுக்கு அப்பாற்பட்டு நடைபெற்றன என்ற காரணம் கூறப்பட்டது. நவீன காலத்தில் அறிவியலின் தாக்கத்தினால் வரலாற்று நிகழ்வுகள், ஏன் நடந்தன? எப்படி நடந்தன? என்ற வினாக்களுக்கு ஆட்படுத்தப்பட்டன. மற்றொரு சாரார் வரலாற்றில் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு முக்கியத்துவம் அளித்து சந்தர்ப்ப சூழ்நிலைகளே, நிகழ்வுகளே வரலாற்று நிகழ்வுகளை அவற்றிற்குரிய பாதையில் அழைத்துச் செல்கின்றன எனக் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் பேராசிரியர் இ.எச்.கார் தன்னுடைய ”வரலாறு என்றால் என்ன? என்ற நூலில் மிகத் தெளிவாக ஒவ்வொரு வரலாற்று நிகழ்வுக்கும் பல காரணங்கள் உள்ளன. அவற்றில் மிகத்தெளிவாக ஒவ்வொரு வரலாற்று நிகழ்வுக்கும் பல காரணங்கள் எவை என்பதை வரலாற்று ஆசிரியர் முடிவு செய்ய வேண்டும். சமய சந்தர்ப்பங்கள் வரலாற்றினைப் பாதிக்கிறது என்னும் கருத்தை இ.எச்.கார் மிக ஆணித்தரமாக வலியுறுத்தியுள்ளார். எனவே வரலாற்று நிகழ்வுகள் தன்னிச்சையாக நடைபெறுகின்றன என்னும் கருத்தில் இருந்து வேறுபட்டு அவை மனித செயல்களுக்கு உட்பட்டு, மனித செயல்களின்

தாக்கத்தினால் உருவாகின்றன என்பதை வரலாற்றில் காரண காரியம் என்னும் அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ளார். வரலாற்றில் காரணகாரியம் அறிந்து கொள்ளும் முறை, அறிவியல் பூர்வமான சந்தர்ப்ப சூழ்நிலைகள் வரலாற்றை உருவாக்குகின்றன என்னும் கொள்கை, வரலாற்றை அறிவியல் அணுகு முறையில் இருந்து திசை திருப்பிவிடுகிறது.

## 5.4. வரலாற்றியம் (Historicism)

வரலாற்றியம் என்ற சொல் பரவலாக ஜெர்மனியில் அரசியல், மற்றும் பொருளியல் வல்லுநர்களிடையே பயன்படுத்தப்பட்டது. உதாரணமாக காரல் மென்சர் என்னும் ஜெர்மானிய பொருளியல் வல்லுநர் கஸ்டாவ் சோமேலரின் பொருளியல் கோட்பாட்டைக்குறை கூறும் போது முறையற்ற வகையில் பொருளாதார வரலாற்றினைப் பயன்படுத்தியுள்ளார் என்றார். இக்குறையைச் சுட்டிக்காட்டும் போது மென்சர் வரலாற்றியம் என்னும் சொல்லைப் பயன்படுத்தினார். இதன்படி பார்த்தால் வரலாற்றியம் என்னும் சொல் முறையற்ற வரலாற்றினைப் பயன்படுத்துவதைக் குறிப்பாக அமைந்தது. முதல் உலகப்போருக்குப் பின் வெகு பரவலாக இச்சொல் பயன்படுத்தப்பட்டது. இச்சூழ்நிலையில் எர்னஸ்ட் ட்ரோல்ச் (Ernst Troeltsch) வரலாற்றின் துவக்கம், தன்மைகள், பயன்கள் மற்றும் குறைகளை விளக்கினார். ட்ரோல் வரலாற்றியத்தை பயன்படுத்தும் போது அனைத்து அறிவியல்களின் வளர்ச்சியையும் வரலாற்று மாற்றத்தின் அடிப்படையில் காண்பதை வரலாற்றியம் என வர்ணித்தார்.

ட்ரோஸ் 19 மற்றும் 20ஆம் நூற்றாண்டுகளில் தத்துவ ஞானிகள் மற்றும் சமூகவியல் ஆய்வாளர்கள் ஆகியோரின் கருத்துக்களில் வரலாற்றியம் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை விளக்கினார்.

காரல் மேன்கிம் (KarlMannheim) ”ஹிஸ்டாரிஸிஸம்” (Historicism) என்னும் கட்டுரையை 1924 ஆண்டு எழுதினார். இக்கட்டுரையில் இடைக்காலத்தில் இருந்து அறிவொளி சகாப்தத்திற்கு எவ்வாறு ஐரோப்பிய உலகம் மாறியிருக்கிறது என்பதைக் குறிப்பிடும் மாற்றத்தை வரலாற்றியம் என வர்ணித்தார்.

1936ஆம் ஆண்டு பிரடெரிக்மெய்னக் என்னும் ஜெர்மானிய வரலாற்று அறிஞர் வரலாற்றியத்தைப்பற்றிய நூல் ஒன்றினை வெளியிட்டார். மெய்னக், ட்ரோலிச் மற்றும் மேன்கிம் போன்றோரது கருத்துக்களில் இருந்து வேறுபட்டு வரலாற்றியம் தனி மனித தன்மை வாய்ந்தது என்பதைக் குறிப்பிட்டார். இத்தகைய வரலாற்றியம் கோத்தே மற்றும் ராங்கே போன்றோர்களின் கருத்துக்களில் காணப்படுவதையும் மெய்னக் சுட்டிக்காட்டியுள்ளார். வரலாற்றியம் என்பது மனித மதிப்புகளை பாதிக்கவல்லது அல்ல என்றும், மனித மதிப்புகளை அதிரடி மாற்றத்திற்குக் கொண்டு செல்லாது என்றும் அவர் உரைத்தார்.

இத்தாலி நாட்டைச் சார்ந்த குரோஸ், மெய்னக்கின் கருத்தை ஏற்றுக்கொண்டார். குரோஸின் கருத்துப்படி வரலாற்று அறிவு, இயற்கை அறிவைப் போல பொதுவானது அல்ல. ஆனால் அது தனித்தன்மை வாய்ந்தது. அத்தகைய தன்மையின் அடிப்படையில் தான் வரலாற்றியம் அமைந்துள்ளது என்று குரோஸ் குறிப்பிடுகிறார்.

கார்ல் பாப்பர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் உருவான வரலாற்றியம் என்னும் கருத்தை மதிப்பிடும் போது சமூக மாற்றத்தினால் உருவான சமூகவிதிகள் எதிர்காலத்தை அறிந்து கொள்ளப் பயன்படுகின்றன என்றார். மாறகல் தாம்டே, மார்க்ஸ் ஆகியோரின் கருத்துக்களை கார்ல் பாப்பர் தனது கோட்பாட்டின் வறுமை என்னும் நூலில் சாடியுள்ளார்.

## 5.5. வரலாற்றுச் சார்பியம் (Historical Relativism)

“வரலாற்றுச் சார்பியம்” என்றால் என்ன? தத்துவ இலக்கியத்தில் ”சார்பியம் ” என்ற சொல் உண்மைக்கும் மனவியல்புக்கும் தொடர்புள்ளது என்பதைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. “வரலாற்று சார்பியம்” என்ற சொற்றொடர் வரலாற்று நிகழ்வுக்கும் அது நிகழ்ந்த காலச் சூழலுக்குமிடையேயான தொடர்பைக் காட்டுகிறது என்று கூறுகிறார் ஜி.பார்க்லா (G.Barrclough). அதாவது வரலாற்று நிகழ்வுகள் அவை நிகழ்ந்த காலத்தோடும் சூழலோடும் தொடர்புடையவை. காலத்துக்கு மட்டுமோ அல்லது சூழலுக்கு மட்டுமோ உள்ளார்ந்த மதிப்பு (Inherent Value) இல்லை. இவை இரண்டையும் தொடர்புபடுத்திப் பார்க்கும் போதுதான் இவற்றுக்கு மதிப்பு ஏற்படுகிறது. வரலாற்றுச் சார்பியம் இரு பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது: 1). வரலாற்று நிகழ்வுகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை 2). ஒவ்வொரு நிகழ்ச்சியும் காலத்தோடும் சூழலோடும் தொடர்புடையது. சுருங்கக்கூறின் வரலாற்றுச் சார்பியம் வரலாற்று நிகழ்வுகளின் தொடர்புகளைப் பற்றியது. இது ஆல்பர்ட் ஐன்ஸ்டினின் தொடர்புக் கோட்பாட்டை (Theory of Relativity) நினைவூட்டுவதாக உள்ளது.

வரலாற்றுச் சார்பியம் பற்றிய கருத்து விளக்கங்கள் வரலாற்றுத் தத்துவஞானிகள் வரலாற்றுச் சார்பியத்துக்குப் பொருள் விளக்கம் (Interpretation) கொடுத்துள்ளனர். முக்கிய பொருள் விளக்கங்கள் வருமாறு: 1. வில்ஹெம் டில்தே (ருடைாநடஅ னுடைவாநல, 1833 - 1911) என்ற ஜெர்மானிய வரலாற்றுத்தத்துவர்” வரலாற்று உலகு” (Historical world) பற்றி விளக்கினார். இவர் எழுதிய “மனிதவியல் ஆய்வுகளுக்கு முன்னுரை” (Introduction to Human Studies) என்ற நூலில் ஒவ்வொரு வரலாற்றுக் காலமும் அதன் வாழ்க்கை பற்றிய மனப்போக்கை எண்ணங்கள் மற்றும் செயல்கள் மூலம் வெளிப்படுத்தியது என்பதைத் தெளிவுபடுத்தினார். இத்தகைய வெளிப்பாடுகள் குறிப்பிட்ட நியதிகளுக்கு உட்பட்டிருக்கின்றன. இந்நியதிகள் சார்புடையவை் அவை சார்ந்த

காலத்தைப் பொறுத்தவரை முழுநிறைவானவை. வரலாற்று நிகழ்வுகள் வரலாற்றுச் செயல்பாங்கின் (Historical Process) பகுதிகளேயாகும். சுருங்கக் கூறின் டில்தே வரலாற்றுச் சார்பியத்தை வரலாற்றியத்தோடு சமப்படுத்தினார்.

2. கார்ல் பெக்கர் (Carl L.Beckar, 1873 - 1945) வரலாற்று உண்மைகள் பற்றிச் சிந்தித்த அமெரிக்க வரலாற்றாளர். வரலாற்று உண்மைகள் சமூக மாற்றங்கள் மற்றும் அவை செல்லும் திசைகள் ஆகியவற்றோடு தொடர்புபடுத்தப்படும் போதுதான் அர்த்தமுள்ளவை ஆகின்றன. முக்கியத்துவம் பெறுகின்றன. வரலாற்று நிகழ்வுகளுக்கும் அவை நிகழ்ந்த காலத்துக்கும், வரலாற்று உண்மைக்கும் வரலாற்றாளரின் மனதுக்கும் இடையே உள்ள தொடர்பைத் தெளிவுபடுத்தினார் பெக்கர். அப்படிச் செய்ததன் மூலம் வரலாற்று நிகழ்வுகள் இறைமையியல் வாதிகள் கூறுவதைப் போன்று முழுநிறைவானவையல்ல அவை சார்புடையவையே என்பதை உறுதிப்படுத்தினார் பெக்கர். 3. சார்லஸ் ஆஸ்டின் பியர்டு (Charles Ausin Beard, 1874 - 1948) என்ற அமெரிக்க வரலாற்றாளர் குரோசேயின் வரலாற்றியம் பற்றிய கருத்தால் ஈர்க்கப்பட்டார். இவர் வரலாறு என்பது மனித ஆற்றலின் சுயவளர்ச்சியாகும் என்ற வரலாற்றியக் கருத்தை வலியுறுத்தினார். வரலாறு இயற்கை மற்றும் இயற்கை அறிவியல் விதிகளுக்கு உட்படாது. வரலாற்று அணுகுமுறை தற்காலிகமானது. இறைமையியல் வாதிகள் கூறுவதைப் போன்று வரலாற்று நிகழ்வுகள் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டவையோ, மாற்ற முடியாததோ அல்ல. மாறாக இவை சமூக அரசியல் வளர்ச்சியோடு தொடர்புடையவை. பியர்டு வரலாற்றுச் சார்பியக் கண்ணோட்டத்தோடு அமெரிக்க அரசியலமைப்புச் சட்ட வரலாற்றை எழுதினார்.

மதிப்பீடு வரலாற்றியமும் வரலாற்றுச் சார்பியமும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றவை. டில்தே இவை இரண்டுக்குமிடையே வேறுபாடில்லை என்றார். ஆனால் பெக்கர் , பியர்டு போன்றோர் இவை இரண்டும் ஒன்றையொன்று சார்ந்துள்ளன என்பர். வரலாற்றிய - வரலாற்றுச் சார்பியக் கோட்பாடுகளின் பங்களிப்புகளாவன: 1). வரலாற்றுச் செயல் பாங்கின் வளர்ச்சி - தொடர்ச்சியைக் கோடிட்டுக் காட்டுகின்றன. 2). கடந்த கால - நிகழ்கால - எதிர்கால உயிரின ஒற்றுமை (Organic Unity) இருப்பதால் வரலாற்று முன்கணிப்பு செய்வது சாத்தியமே என்பதை வலியுறுத்துகின்றன. 3) வரலாற்று நிகழ்வுகள் சமகாலச் சூழலோடு தொடர்புடையவை, ஒன்றையொன்று சார்ந்திருப்பவை என்று கூறுகின்றன. 4) வரலாற்றுக் கண்ணோட்டம் தற்காலிகமானது, காலத்துக்கேற்ப மாறக்கூடியது என்பதை எடுத்துக்காட்டுகின்றன. 5) வரலாற்று உண்மைகள் முழு நிறைவானவை, மாற்ற முடியாதவை, நிரந்தரமானவை என்ற கருத்தை நிராகரிக்கின்றன. 6). இயற்கை உலகும் வரலாற்று உலகும் வெவ்வேறானவை என்பதைத் தெளிவு படுத்துகின்றன. வரலாற்றியம் - வரலாற்றுச் சார்பியக் கோட்பாடுகளின் குறைபாடுகளாவன:

1) வரலாற்று வளர்ச்சியும், தொடர்ச்சியும் அதீதமாக மிகைப்படுத்தப்பட்டுள்ளன. 2). தற்காலிக அணுகுமுறையால் வரலாற்றின் நிலையான பயன்களையும் பரப்பையும் கட்டுப்படுத்துகிறது. 3) வரலாற்று உண்மை சார்புடையது என்று கூறுவதால் வரலாற்று ஆய்வு அர்த்தமற்றதாகிறது. 4) முழுநிறைவற்ற வரலாற்று உண்மைகள் முரண்பட்ட விளக்கங்களுக்கு இடமளிக்கும். 5) வரலாற்று முன்னேற்றத்தை விளக்க இக்கோட்பாடுகள் போதா . எதிர்காலத்தை முன்கணிப்பு செய்வது முடியாத காரியம். 6. முன்விதிக் கோட்பாட்டாளர்கள் இக்கோட்பாடுகளைத் தவறாகப் பயன்படுத்த வாய்ப்புண்டு. எனினும் வரலாற்றிய - வரலாற்றுச் சார்பியக் கோட்பாடுகள் வரலாற்றின் போக்கைப் புரிந்து கொள்வதற்கான தத்துவ விளக்கமளிக்கின்றன.

## 5.6. வரலாற்று முன் நிர்ணயக் கோட்பாடு (Historical Determinism)

வரலாற்று முன் நிர்ணயக் கோட்பாடு என்பது பண்டைய கிரேக்க, ஆசிய, மக்களிடையே நிலவி வந்த விதிப்பயன் என்னும் கொள்கையின் அடிப்படையில் செயல்பட்டது. இதில் மனித செயல்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. மாறாக வரலாற்று நிகழ்வுகள் மனித சக்திக்கு அப்பாற்பட்டு ”இயற்கையின் சக்தியால்” நடைபெறுகின்றன என்ற வாதம் நிலவி வந்தது. இதனுடைய அடிப்படையாதெனில் எது நடக்க வேண்டுமோ அது நடந்தே தீரும் என்பதே. ஆனால் வரலாற்று நிகழ்வுகள் தாமாக நடைபெறா. அவை 1857-ஆண்டு சிப்பாய் கலகமாக இருந்தாலும், 1917-ம் ஆண்டு ரஷ்ய புரட்சியாக இருந்தாலும், முதல் மற்றும் இரண்டாம் உலகப் போர்களாக இருந்தாலும் இவை அனைத்திற்கும் சூழ்நிலைக் காரணங்கள் உண்டு.

சமய தத்துவ வரலாற்று ஆசிரியர்கள் முன்நிர்ணயக் கோட்பாட்டை முற்றிலும் கடைப்பிடித்துள்ளனர். இவர்களுடைய வரலாற்றில் ”இறைவனின் கைவண்ண த்தைக் ” (Handof God in History) காணலாம். இத்தகைய வரலாற்றிற்கு எடுத்துக்காட்டாக ரெயின்ஹால்ட் நீதர் (Reinhold Niether) எழுதிய நம்பிக்கையும் வரலாறும் (Faith and History) எபிஷப் போசோட் (Bishop Bossuet) எழுதிய உலக வரலாற்றுக் கருத்துக்கள் (Discourse in Universal History) ஆகியவற்றைக் கூறலாம்.

வரலாற்று முன்நிர்ணயக் கோட்பாடுடன் பிணைந்து “தவிர்க்க முடியாத வரலாற்று நிகழ்வுகள்” என்னும் கோட்பாடு ஆகும். இக் கோட்பாட்டின் வாதம் வரலாற்று நிகழ்வுகள் முன் கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட திசையை நோக்கி நகர்கின்றன என்பதாகும். கிரேக்க வரலாற்று ஆசிரியர் இதை வரலாற்று வட்டச்சுற்று“ என்று அழைத்தனர். அறிவொளி சகாப்த

காலத்தில் வரலாற்றின் இத்தகைய தன்மை முன் நோக்கி முன்னேறும் வளர்ச்சி என்று அழைக்கப்பட்டது. விக்கே வரலாற்றின் இத்தன்மையை மேல் நோக்கி நகரும் வட்டச் சுற்று பாதை என குறிப்பிடுகிறார். ஹெகல் வரலாற்றின் இத்தகைய முன்னேற்றம், மேல் நோக்கிய வட்டச் சுற்று பாதையில் தர்க்க முறையில் மனித சுதந்திரத்தை நோக்கி முன்னேறுகிறது என சுட்டிக் காட்டுகிறார். அதே போல் ஸ்பெங்லரின் மேற்கின் வீழ்ச்சி (Decline of theWest) அர்னால்ட் டாயீன் பீயின் வரலாறு ஓர் ஆய்வு (Study of History) இவற்றில் ஆங்காங்கு முன் நிர்ணயக் கோட்பாட்டின் கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. சர்ச்சைக்குரிய வரலாற்று ஆசிரியர் கார்ல் பாப்பர் எழுதிய வரலாற்றியத்தின் வறுமை மற்றும் ஈசையா பெர்லின் படைத்த வரலாற்றில் தவிர்க்க யியலாதவை (Historical Inevitability) போன்ற நூல்கள் மேற் கூறிய கருத்துகளை வலியுறுத்துகின்றன.

## 5.7. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

1. “காரணம்“ என்ற சொல் முதல் நிகழ்வு (காரணம்) மற்றும் விளைவாக அடுத்த நிகழ்வு (விளைவு) ஆகியவற்றுக்கு இடையேயான உறவைப் பிரதிபலிக்கிறது.

2. கர்மா என்பது நமது செயல்களின் முழுமையையும், இந்த மற்றும் முந்தைய வாழ்க்கையில் அவற்றுடன் இணைந்த எதிர்வினைகளையும் குறிக்கிறது, இவை அனைத்தும் நமது எதிர்காலத்தை தீர்மானிக்கிறது.

3. ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க அதிபரானபோது தென்னக மக்கள் அச்சுறுத்தலுக்கு ஆளானார்கள். விவசாயத்தின் நோக்கத்திற்காக அடிமைத்தனம் தேவைப்படும் விவசாயப் பொருளாதாரம் என்பதால் தெற்கில் அடிமைத்தனம் நடைமுறையில் இருந்தது மற்றும் புதிய ஜனாதிபதி அடிமைத்தனத்திற்கு முற்றிலும் எதிரானவர்.

4. வரலாற்றுவாதம் சார்பியல்வாதமாகவும் கருதப்படலாம், ஏனெனில் இது பொதுவான, அடிப்படை மற்றும் முழுமையான விளக்கங்களின் கருத்துக்களைக் கெடுக்கிறது.

5. சோபிஸ்ட் பிரிவின் நிறுவனர் புரோட்டகோரஸ் சார்பியல்வாதத்தின் தந்தையாகக் கருதப்படுகிறார்.

6. புறநிலைவாதம் என்பது தனிப்பட்ட சார்பு அல்லது பாரபட்சம் இல்லாமல் வரலாற்று உண்மைகளைப் பயன்படுத்துவதைக் குறிக்கிறது. வரலாற்றுப் புறநிலை என்பது வரலாற்று உணர்தல் அல்லது உண்மை விளக்கத்தைக் குறிக்கிறது.

குறிப்பு

7. வரலாறு என்பது சட்டங்களால் தீர்மானிக்கப்பட்டது என்ற நம்பிக்கை, மக்களையும் கலாச்சாரங்களையும் புரிந்துகொள்வதற்கு அவர்களின் வரலாற்று நிகழ்வுகளைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற நம்பிக்கை.

8. முதல் வித்தியாசம் என்னவென்றால், நவீன ஆசிரியர்கள் ஒரு கோட்பாட்டை உருவாக்கி அதை அறிவியல் என்று அறிவிக்கவில்லை, மாறாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவியல் கோட்பாடுகளுடன் தொடங்கி அங்கிருந்து செயல்படுகிறார்கள். இரண்டாவதாக, 19 ஆம் நூற்றாண்டின் வரலாற்று நிர்ணயவாதிகளுக்கு மாறாக, நவீன “தீர்மானிப்பாளர்கள்“ எதிர்காலத்தை கணிப்பதில்லை.

## 5.8. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்

1. வரலாற்றின் பயன்பாடு என்ற கருத்து தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் குழுக்களின் அணுகுமுறை மற்றும் அணுகுமுறையை அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது நிராகரிக்கப்பட்ட தேவைகளை பிரதிபலிக்கிறது என்பதால், அது சிக்கலானது, சிக்கலானது மற்றும் சர்ச்சைக்குரியதாகிறது.

2. கிறிஸ்தவ வரலாற்றில், கடவுள் மக்களையும் நாடுகளையும் படைத்தார் என்று நம்பப்படுகிறது. எனவே, வரலாற்று செயல்முறை என்பது கடவுளின் நோக்கத்தின் செயல்பாடாகும், இது மனிதனின் நோக்கமாக இருக்க வேண்டும். காலவரிசையின் மையத்தில் கிறிஸ்துவின் பிறப்பை நிர்ணயித்து, வரலாறு இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது-கிறிஸ்து பிறப்பதற்கு முன் (கி.பி.) மற்றும் (கி.பி.) பிறகு. இந்த வகை வரலாற்றை ஆர்.ஜி காலிங்வுட் “அபோகாலிப்டிக்“ என்று அழைத்தார்.

3. வரலாற்றின் தத்துவங்களில் இரண்டு பிரிவுகள் உள்ளன் ஒன்று வரலாற்றின் ஊகத் தத்துவம், மற்றொன்று வரலாற்றின் விமர்சன அல்லது பகுப்பாய்வுத் தத்துவம்.

4. உலக வரலாற்றுக் காட்சியில் நான்கு சகாப்தங்களை ஹெகல் அங்கீகரித்தார். அவை ஓரியண்டல் சகாப்தம், கிரேக்க சகாப்தம் ரோமானிய சகாப்தம் மற்றும் ஜெர்மானிய சகாப்தம்.

## 5.9. அத்தியாயச் சுருக்கம்

- காரணங்கள் மற்றும் விளைவுகள் பொதுவாக மாற்றங்கள் அல்லது நிகழ்வுகளுடன் தொடர்புடையதாக இருந்தாலும், வரலாற்றாசிரியர்கள் பொருள்கள், செயல்முறைகள், பண்புகள், மாறிகள், உண்மைகள் மற்றும் விவகாரங்களின் நிலைகளை காரண உறவை வகைப்படுத்துகின்றனர்.

குறிப்பு

- காரணம் விளைவுக்கு முன்னோடியாகும், இது பெரும்பாலும் அதன் விளைவு என்று அழைக்கப்படுகிறது. முழு காரணமும் ஒட்டுமொத்த விளைவுக்கு முன்னோடி என்று கருதவும் கூடாது.
- இந்திய நம்பிக்கைகளில், அனைத்து செயல்களின் கர்ம விளைவுகளும் கடந்த கால, நிகழ்கால மற்றும் எதிர்கால அனுபவங்களை தீவிரமாக வடிவமைக்கின்றன. செயல்களின் முடிவுகள் அல்லது "பலன்கள்" கர்ம-பலா என்று அழைக்கப்படுகின்றன.
- ஷ்ரமண மதங்களின் காலத்தில்தான், மறுபிறப்பைப் பாதிக்கும் பூமியில் செயல்களின் தார்மீகத் தரம் என்ற கருத்தை இந்தியா பெற்றது. பிராமணர்கள் இந்தக் கருத்தை மற்ற மதங்களிலிருந்து உள்வாங்கியதாகக் கருதப்படுகிறது.
- ஒவ்வொரு போரும், அது நாடுகளுக்கிடையேயானாலும் அல்லது உள்நாட்டுப் போராக இருந்தாலும், பல்வேறு காரணங்களின் விளைவு மற்றும் போரே தொடரும் பல்வேறு விளைவுகளுக்கு ஒரு காரணமாகும். போர்கள் பெரும்பாலும் நீண்ட காலம் நீடிக்கும் விளைவுகளை ஏற்படுத்துகின்றன.
- பிரெஞ்சுப் புரட்சியானது வெகுஜனங்களின் பொருளாதாரப் பற்றாக்குறையின் நேரடி விளைவாகும், இது "சமத்துவம்-சுதந்திரம்-சகோதரத்துவம்" என்ற போர் முழக்கத்திற்கு வழிவகுத்தது.
- 1990 களில் இந்திய அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தாராளமயமாக்கல் கொள்கைகள், அரசாங்கம் தன்னைக் கண்டறிந்த கடினமான நிலுவைத் தொகையின் நேரடி விளைவாகும். இது இந்தியாவிற்கு கொண்டு வந்த நேர்மறையான நன்மைகள் தொடங்கப்பட்ட பொருளாதாரத்தில் சுயமாகத் தெரிகிறது. 1990க்கு முந்தைய மெதுவான ஆமை வேகத்தில் இருந்து ஓட்டம் பிடித்தது.
- வரலாற்றுவாதம் என்பது ஒரு காலகட்டம், புவியியல் இருப்பிடம் அல்லது குறிப்பிட்ட கலாச்சாரம் போன்ற ஒரு குறிப்பிட்ட சூழலுக்கு ஒரு முக்கிய மற்றும் இன்றியமையாத முக்கியத்துவத்தை ஒதுக்கும் ஒரு சிந்தனை பாணியாகும்.
- கார்ல் பாப்பர், நன்கு அறியப்பட்ட ஆஸ்திரிய-ஆங்கில தத்துவஞானி, வரலாற்றுவாதத்தை விமர்சித்தார், மேலும் வரலாற்றுவாதத்தின் அடிநாதமாக கடினமான அடிப்படை நிர்ணயம் இருப்பதாக நம்பினார்.
- பிரபஞ்சத்தின் அனைத்து கூறுகளும் மாறும் தன்மை கொண்டவை. மாற்றங்களுக்கு ஏற்ப மாற்றங்களை ஆய்வு செய்வது சார்பியல்வாதத்தின் முக்கிய அம்சமாகும். சார்பியல் கருத்தாக்கத்தின் சிறப்பு இயக்கம் மற்றும் மாற்றம்.
- வரலாற்று நிர்ணயவாதம் என்பது வரலாற்று செயல்முறைகள் என்ற நம்பிக்கை முன்னரே தீர்மானிக்கப்பட்டது அல்லது தற்போது பல்வேறு சக்திகளால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதன் படி, வரலாற்று செயல்முறைகள் தனிப்பட்ட மனித அமைப்பின்

குறிப்பு

செல்வாக்கிற்கு அப்பாற்பட்ட காரணிகளால் தீர்மானிக்கப்படுகின்றன் (சில சமயங்களில்) குறிப்பாக, தீர்மானிக்கும் காரணிகளின் தன்மையை புரிந்து கொண்டவுடன் எதிர்கால வளர்ச்சிகளை கணிக்க முடியும் என்ற நம்பிக்கை.

## 5.10. முக்கிய சொற்கள்

- அனுபவவாதம்: அனைத்து அறிவும் புலன்களிலிருந்து பெறப்பட்ட அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டது என்பது கோட்பாடு.
- ஹெர்மனியூட்டிக்ஸ்: இது விளக்கத்தின் கோட்பாடு மற்றும் வழிமுறையாகும், குறிப்பாக விவிலிய நூல்கள், ஞான இலக்கியம் மற்றும் தத்துவ நூல்களின் விளக்கம்.
- சார்பியல்வாதம்: இது முழுமையான உண்மை இல்லை என்பது நம்பிக்கை, ஒரு குறிப்பிட்ட தனிநபர் அல்லது கலாச்சாரம் நம்பும் உண்மைகள் மட்டுமே.
- நிர்ணயவாதம்: தார்மீக தேர்வுகள் உட்பட அனைத்து நிகழ்வுகளும் என்று அது கூறுகிறது
- ஏற்கனவே இருக்கும் காரணங்களால் முற்றிலும் தீர்மானிக்கப்படுகிறது. நிர்ணயவாதம் பொதுவாக சுதந்திரமான விருப்பத்தைத் தடுக்கும் என்று புரிந்து கொள்ளப்படுகிறது, ஏனென்றால் மனிதர்கள் அவர்கள் செய்வதைத் தவிர வேறுவிதமாக செயல்பட முடியாது.
- போலி அறிவியல்: இது அறிவியல் மற்றும் உண்மை என கூறும் ஆனால் அறிவியல் முறைக்கு பொருந்தாத அறிக்கைகள், நம்பிக்கைகள் அல்லது நடைமுறைகளைக் கொண்டுள்ளது.

## 5.11. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

**குறுகிய வினாக்கள்**

1. Read's 'Theory of Causation' கூறும் மூன்று புள்ளிகளை பட்டியலிடுங்கள்.

2. ஷ்ரமண பாரம்பரியத்தைப் பற்றி ஒரு சிறு குறிப்பை எழுதுங்கள்.

3. நம்பகத்தன்மையின் கொள்கை என்ன கூறுகிறது?

4. குறைப்புக் கோட்பாடுகள் எதை முன்வைக்கின்றன?

5. டார்டெல் கருத்துப்படி, புறநிலைத்தன்மை எவ்வாறு பொருத்தப்படுகிறது?

குறிப்பு

6. இரண்டு வகையான வரலாற்றுவாதம் பற்றி ஒரு சிறு குறிப்பை எழுதுங்கள்.

**விரிவான வினாக்கள்**

1. டேவிட் ஹியூமின் 'காரணம்' பற்றிய கருத்துக்களை பகுப்பாய்வு செய்யுங்கள்.

2. "காரணம் மற்றும் விளைவு" அணுகுமுறையுடன் சிக்கல்களைப் பற்றி விவாதிக்கவும்.

3. வரலாற்று நிர்ணயம் காணப்படும் நம்பிக்கை அமைப்புகளை விளக்குங்கள்.

## 5.12. கூடுதல் வாசிப்புகள்

Warren, John. 1998. *The Past and Its Presenters*: An Introduction to Issues in Historiography. London: Hodder & Stoughton Educational.

Ferro, Marc. 2003. *The Use and Abuse of History*: Or How the Past is Taught to Children. Abingdon: Routledge.

E. Sreedharan. 2004. *A Textbook of Historiography: 500 BC to AD 2000*. New Delhi: Orient Blackswan.

Sharma, Arvind. 2003. *Hinduism and its Sense of History*. New Delhi: OUP India.

Iggers, Georg G. 2005. *Historiography in the 20th Century: From Scientific Objectivity to the Postmodern Challenge*. Connecticut: Wesleyan University Press.

Stuart, Hughes H. 1964. *History as Art and as Science.* New York: Joanna Cotler Books.

Fea, John. 2013. *Why Study History? Reflecting on the Importance of the Past*. Washington: Baker Publishing Group.

# அலகு-6

## புகழ்பெற்ற வெளிநாட்டு வரலாற்றாசிரியர்கள்: ஹெரோடோடஸ், துசிடைடிஸ் மற்றும் எட்வர்ட் கிப்பன்

குறிப்பு

உள்ளடக்கம்

6.1. முன்னுரை
6.2. நோக்கங்கள்
6.3. ஹெரோடோஸ் (Herodotus)
6.3.1. குறைபாடு
6.4. தூசிடைடிஸ் (Thucydides)
6.4.1. வரலாற்று வரைவியலில் காணப்படும் குறைகள்
6.5. எட்வர்ட் கிப்பன் (Edward Gibbon)
6.5.1. இளமைப்பருவம்
6.6. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்
6.7. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்
6.8. அத்தியாயச் சுருக்கம்
6.9. முக்கிய சொற்கள்
6.10. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
6.11. கூடுதல் வாசிப்புகள்

## 6.1. முன்னுரை

வரலாற்றுத் துறையானது, அறிவாற்றல், வரலாற்றுக் குறிப்புகள் மற்றும் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் மற்றும் ஆளுமைகளின் பதிவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் தலைசிறந்த வரலாற்று அறிஞர்களின் பங்களிப்புகளால் உருவாக்கப்பட்டது. இந்த பிரிவில், ஹெரோடோடஸ், துசிடிடிஸ் மற்றும் எட்வர்ட் கிப்பன், சித்தாந்தம் மற்றும் வரலாற்றுப் பதிவுகளுக்கான பங்களிப்புகள் விளக்கப்பட்டுள்ளது. தொன்மங்கள் மற்றும் பழக்கவழக்கங்களைப் பதிவு செய்த முதல் கிரேக்க வரலாற்றாசிரியர் ஹெரோடோடஸ் என்று நம்பப்படுகிறது, அதே நேரத்தில் மற்றொரு கிரேக்க வரலாற்றாசிரியரான துசிடிடிஸ், முந்தையவற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்ட கண்ணோட்டத்தில் எழுதினார். இவையனைத்தும் இவ்வத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது.

குறிப்பு

## 6.2. நோக்கங்கள்

**இந்த அத்தியாயத்தை படிப்பதன் மூலமாக கீழ்காண்பனவற்றை அறிந்து கொள்ள இயலும்**

ஹெரோடோடஸ் மற்றும் துசிடிடிஸ் போன்ற வரலாற்றாசிரியர்களின் பங்களிப்பை ஆராய்கிறது.

எட்வர்ட் கிப்பனின் The History of the Decline and Fall of the Roman Empire (1776-88) உள்ளடக்கங்கள் மற்றும் பண்புகளை விவாதிக்கிறது.

## 6.3. ஹெரோடோஸ் (Herodotus)

இவர் கி.மு. 5ம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்க வரலாற்று ஆசிரியராவார். இவர் கி.மு. 484ம் ஆண்டு சிறிய ஆசியாவிலுள்ள ஹாலிகார்னஸ் (Halicarassus) என்னுமிடத்தில் பிறந்தார். லிக்டானிஸ் (Lygdanis) என்னும் கொடுங்கோல் மன்னனால் நாடு கடத்தப்பட்டார். சிறிது காலம் கழித்து ஹெரோடோட்டஸ் தாய்நாடு திரும்பி லிக்டானிஸ் ஆட்சியைக் கவிழச் செய்தார். அதைத் தொடர்ந்து அங்கு அரசியல் சட்டத்திற்குட்பட்ட ஆட்சியை நிறுவ ஹெரோடோடஸ் உதவி புரிந்தார். இவர் காவியக் கவியாக விளங்கிய பன்யாரிஸின் (Panyaris) உறவினராவார். ஹெரோடோடஸ் தம்முடைய சொந்த நாட்டில் புகழ் இழந்து நாட்டை விட்டு வெளியேறினார். பின்னார் தெற்கு இத்தாலியில் உள்ள தூரி (Thurii) நகரில் குடியேறி தன்னுடைய வாழ்நாளின் இறுதி காலங்களை அங்கேயே கழித்து இறந்தார். இவரைப் பற்றிய வாழ்க்கை வரலாறு எதுவுமில்லை. ஆனால் 10ஆம் நூற்றாண்டில் பைசன்டைன் நகரில் இவர் எழுதிய வரலாற்றில் அறிவியல் முறையான ஆராய்ச்சிக் கோட்பாடு காணப்படுகின்றது. இவர் ஆராய்ச்சிக்கு அடிப்படையாக உள்ள வினாக்களை எழுப்பி அதன் மூலம் அவரது ஆராய்ச்சி முடிவுகளை உணர்த்துகிறார். உதாரணத்திற்குப் பாரசீகப் போர்களைப் பற்றி எழுதும் போது, ஆராய்ச்சிப் பூர்வமான கேள்விகளான ஏன் பாரசீகப் போர்கள் நடைபெற்றன? இவற்றால் ஏற்பட்ட விளைவுகள் யாவை? போன்ற வினாக்களுக்குரிய விடைகளை இவரது வரலாற்று நூலில் காணலாம். இவர் பல இடங்களுக்கும் சென்று ஆதாரங்களைச் சேகரித்தக் காரணத்தினால் அவரது வரலாற்று நூலில் அதிகப்படியான வரலாற்று ஆதாரங்கள் காணப்படுகின்றன. இத்தகைய வரலாற்று ஆதாரங்களை அதிக அளவில் பயன்படுத்தியதன் மூலம் இவர் கோவையான வரலாற்றைத் தொகுத்தளித்துள்ளார். ஹெரோடோட்சின் எழுத்து நடை உணர்ச்சி நிறைந்ததாகவும் விறுவிறுப்பாகவும் அமைந்துள்ளது.

குறிப்பு

### 6.3.1. குறைபாடு

இவர் தனது நூலில் முழு அறிவியல் பூர்வமான ஆராய்ச்சி முறைகளைப் பின்பற்றவில்லை. உதாரணமாக கிரேக்க புராணத்தில் காணப்படும் டெல்∴பி (Delphi) என்னும் குறிசொல்லும் தேவதையின் ஆருடங்களை அடிப்படையாக வைத்து தனது நூலை எழுதியுள்ளார். மேலும் அவர் மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட இயற்கையின் சக்தி வரலாற்றை மாற்றி அமைப்பதாகவும் கூறியுள்ளார். கிரேக்க சமயங்களை ஆராயும் போது இவரது அணுகுமுறை அறிவியல் பூர்வமாக இல்லை. அதேபோல வாழ்க்கையில் ஏற்படும் முக்கியமான நிகழ்ச்சிகள் கனவுகளின் அடிப்படையில் அமைந்துள்ளன என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார். உதாரணமாக பாரசீக மன்னரான சைரஸ் தன்னுடைய மகன் டேரியஸ் ஒரு சிறந்த மன்னனாவதைப் பற்றிக் கனவு காண்பதாக இவரது நூலில் குறிப்பிட்டுள்ளார். செர்ஸஸின் (Xerses) கனவில் இனம் புரியாத தேவதை ஒன்று தோன்றி கிரேக்க நாட்டின் மீதான படையெடுப்பை எக்காரணத்தைக் கொண்டும் பின்வாங்கக் கூடாது என்று பயமுறுத்துவதாக எழுதியுள்ளார். இத்தகைய அணுகுமுறை அறிவியல் பூர்வமான அணுகுமுறையாகக் கருதப்படமாட்டாது.

மேலும் பிற நாடுகளுக்கு இவர் சென்றிருந்தாலும் அந்நாட்டில் நிலவியமொழிகள் அனைத்தும் ஹெரோடோடஸ்ஸுக்குத் தெரிந்திருக்கவில்லை. எனவே அவர் சேகரித்த ஆதாரங்களை முழுமையான சோதனைக்கு உட்படுத்த முடியவில்லை. இவரது எழுத்துக்களில் வரலாற்று ஆசிரியர்களுக்குத் தேவையான புற நோக்குத் தன்மை தென்படவில்லை. இவரைப்பற்றிய **மதிப்பீடு**

இவரது வரலாற்றில் பல குறைகள் இருப்பினும் வரலாற்று ஆசிரியர்களிடையே இவர் ஒரு உயர்ந்த இடத்தில் உள்ளார். ஏனெனில் இவரது வரலாறு எழுதும் முயற்சி முதல் முயற்சியாகும். அவரது காலத்தில் கடந்த காலத்தைப் பற்றி எழுதுவதற்கு அறிஞர்கள் தயங்கிய போது இவர் எடுத்துக்கொண்ட முழு முயற்சிப் பாராட்டப்பட வேண்டியதாகும். ஒரு வரலாற்று ஆசிரியருக்கு இருக்க வேண்டிய குணநலன்கள் ஆதாரங்களைச் சேகரித்த விதம் மற்றும் இவருக்கு முன் இருந்த ஆசிரியர்களின் நூல்களைப் பயன்படுத்திய விதம் இரண்டும் ஒரு வரலாற்று ஆசிரியருக்கு இருக்க வேண்டிய குணநலன்களை எடுத்துக்காட்டுகின்றன. எனவே இவரை வரலாற்றின் தந்தை என்று கூறுவது மிகையாகாது.

## 6.4. தூசிடைடிஸ் (Thucydides)

இவர் தலை சிறந்த கிரேக்க வரலாற்று ஆசிரியராவார். இவர் ஏதென்ஸ் நகரில் கி.மு. 460ல் பிறந்தார். இளமைக்கல்விக்குப் பிறகு இராணுவ கவர்னராகப் பதவி உயர்வு பெற்றார். அதே ஏதென்ஸ் நகரில் சிறந்த

இராணுவத் தளபதியான மில்டியாடிஸ் (Miltiades) இவரது உறவினராவார். கி.மு. 430-429 இடையே ஏதென்ஸ் நகரில் கொள்ளை நோய் பரவியிருந்த

குறிப்பு

போது தூசிடைடிஸ் அந்நோயால் தூசிடைடிஸ் பாதிக்கப்பட்டார். ஆனால் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். பின்னர் கப்பற்படைக்குத் தளபதியாக்கப்பட்டு தாஸஸ் (Thasos) நகரில் முகாம் அமைத்தார். ஏதென்ஸ் நகரின் எதிரியான ஸ்பார்டா நாட்டின் தளபதி பிராஸிடாஸ் (Brasidas) ஆம்ஃபி (Amphi) நகரை இவரிடமிருந்து கைப்பற்றினார். இத்தோல்வியை அடுத்து தூசிடைடிஸ் தன்னுடைய பணியை இழக்க நேரிட்டது. அதையடுத்து நாடு கடத்தப்பட்டார். 20 ஆண்டு காலம் வெளிநாடுகளில் சுற்றி அலைந்தார். அப்பொழுது தான் இவர் மிகப்பெரிய வரலாற்று நூலை எழுதினார். இவர் எழுதிய வரலாற்று நூல்

இவர் எழுதிய பிலோபோனியஸியன் போர்கள் எட்டு பாகங்களைக் கொண்டது. கடைசி பாகமான எட்டாவது பாகம் கி.மு. 411ல் முடிந்து விடுகிறது. இவரது வரலாற்று நூல் பிலோபோனிஸியன் (Peloponnesian) போர்களைப் பற்றியது. இந்நூல் இராணுவம் மற்றும் அரசியல் செய்திகளை அலசி ஆராய்கிறது. முக்கியமாக ஏதென்ஸ் நகருக்கும் ஸ்பார்டா நகருக்குமிடையே கி.மு. 431-404 வரை நடந்த போர்களைப் பற்றி உளவியல் ரீதியாக விரிவாக எழுதப்பட்டுள்ளது.

தூசிடைடிஸ் இவ்வரலாற்று நூலை எழுத பின்வரும் மூன்று நிலைகளை கடைப்பிடித்தார். முதல் நிலையில் வரலாற்றுக் குறிப்புகளைச் சேகரித்தார். இரண்டாவது நிலையில் அவ்வாறு சேகரித்த வரலாற்றுக் குறிப்புகளைத் தொகுத்து முறைப்படுத்தினார். இறுதி நிலையில் கோவையான வரலாற்றை உருவாக்கினார்.

இவரின் வரலாற்று நூல், அவருடைய காலத்தில் நிகழ்ந்த வரலாற்று நிகழ்ச்சிகளைப் படம் பிடித்துக் காட்டுகிறது. அத்தகைய வரலாற்று நிகழ்ச்சிகளில் வரலாற்று ஆசிரியரான தூசிடைடிஸ் பங்கு கொண்டுள்ளார். இவர் எழுதிய வரலாறு 27 வருடம் நடந்த போரின் துவக்கம் மற்றும் அதன் போக்கு போன்றவற்றைக் குறிப்பிடுகிறது. ஆயினும் தூசிடைடிஸ் போர் முடியும் வரை உயிருடன் இல்லாத காரணத்தினால் இவருடைய வரலாற்று நூல் முழுமை பெறவில்லை. இந்நூலை முழுமை பெறச்செய்தவர் ஜெனபோன் ஆவார்.

இந்நூலில் வரலாற்று மற்றும் அரசியல் காரணங்கள் தவிர இரு நாடுகளைச் சீர் தூக்கிப் பார்க்கின்ற பாத்திரப் படைப்பைப் காண முடிகிறது. ஏதென்ஸ் நாட்டைப் பற்றிக் குறிப்பிடும் போது அந்நாட்டு மக்கள் எப்போதும் விருவிருப்புக் கொண்டவர்களாக இருந்தார்கள் என்றும் ஸ்பார்டாவைப் பற்றிக் குறிப்பிடும் போது அந்நாட்டு மக்கள் அமைதியாகவும் கவனமாகவும் நடந்து கொள்ளும் பாங்கினைக் கொண்டவர்கள் என்றும் குறிப்பிடுகிறார். இவரது வரலாற்று நூலில்

**குறிப்பு**

நான்கு முக்கிய வரலாற்று நாயகர்களைக் காண முடிகிறது. அவர்கள் திமிஸ்டாக்ளிஸ் (Themistocles), பெரிக்ளிஸ் (Pericles) அல்சிபையாடிஸ் (Alcibiades) பிராசிடாஸ்(Brasidas) ஆகியோர் ஆவார்.

தூசிடைடிஸ் இராணுவத்தில் பணியாற்றிய காரணத்தினால் போரின் நுணுக்கங்களை அறிந்திருந்தார். இவரது நூலில் போரின் வெற்றிக்கான காரணங்களைக் குறிப்பிடும் போது போரில் ஈடுபட்டோருக்குத் தடைபடாமல் உணவு அளிப்பது மற்றும் இராணுவத் தளவாடங்கள் அமைப்பதும் முக்கியம் என்பதைக் குறிப்பிடுகின்றார். அதே போல் முற்றுகைப் போருக்குரிய நுணுக்கங்களைக் கோடிட்டுக் காட்டுகிறார். ஸ்பார்டா மற்றும் ஏதென்ஸின் போர்த் திறமைகளைச் சீர்தாக்கிப் பார்த்து ஸ்பார்டா தரைப்பேரில் வல்லமை பெற்ற நாடு ஆனால், ஏதென்ஸ் கடல் போரில் வல்லமை பெற்ற நாடு எனக் குறிப்பிடுகின்றார். இவரது வரலாற்று வரைவியல் முறை தூசிடைடிஸ்வரலாற்றில் அவர்காலத்தில் வாழ்ந்த அறிஞர்களின் தாக்கம் அவரது எழுத்துக்களில் காணப்படுகின்றது. ஊதாரணமாக சோபஸ்ளிஸ் (Sophocles), யூரிபிடிஸ் (Euripidis) மற்றும் அனெக்ஸ்கோரஸ் (Anexagoras) மற்றும் சாக்ரடீஸ் (Socrates) ஆகியோரைக் குறிப்பிடலாம். இவரது எழுத்து நடை சுருக்கமாகவும் நேரடியாகவும் அமைந்துள்ளது. இவர் எழுதிய வரலாறு அறிவியல் ரீதியான அணுகுமுறை கொண்டதாகவும் பாரபட்சமின்றியும் எழுதப்பட்டுள்ளது. இவரது வரலாற்று நூலைக் குறிப்பிடும் போது ஒரு முறையான வரலாற்றை எழுத வாய்மொழி செய்திகளை தீர விசாரித்து உண்மையை அறிய பல முயற்சிகளை எடுத்துக் கொண்டது பற்றிக் குறிப்பிடுகிறார்.

இத்தகைய அணுகுமுறையால் இவரது வரலாற்றில் செய்திகள் ஆதாரத்துடன் காணப்படுகின்றன. வரலாற்றுச் செய்திகள் மிகைப்படுத்திக் காணப்படவில்லை. வரலாற்று நிகழ்ச்சிகளைக் குறிப்பிடும் போது என்ன நடந்தது என்பதையும் காரணம் காட்டி விளக்கியுள்ளார். வரலாற்று ஆதாரங்களுக்கிடையேயுள்ள உறவு முறைகளைப் பற்றிக் கூறியுள்ளார். இவர் எழுதிய வரலாற்றில் மனித வாழ்வியலின் முழுத்தன்மையையும் விளக்கியுள்ளார். மேலும் பொருளாதார வரலாற்றையும் இவரது நூலில் காணலாம். வரலாற்றுச் செய்திகளிலிருந்து பொது வரலாற்று உண்மைகளை உருவாக்கினார். சுருங்கக் கூறின், தற்கால வரலாற்று வரைவியலுக்கு விதித்திட்டவர் இவர் எனலாம். இவர் நூலில் காணப்படும் வரலாற்றுத் தத்துவங்கள்

தூசிடைடிஸ் வரலாற்றில் பல வரலாற்றுத் தத்துவங்கள் அடங்கியுள்ளன. அத்தகையத் தத்துவங்கள் தனி மனித வாழ்வியலுக்குத் தேவையான பொன்மொழிகள் எனக்கூறினால் மிகையாகாது. உதாரணமாகப் பின்வரும் வரலாற்றுத் தத்துவங்களைக் கூறலாம். அ) அஞ்சாநெஞ்சம் படைத்த அனைவரும் போரை விரும்புவதில்லை. ஆ) தற்காலிகமான தீர்வைவிட நிலையான நீதி மேலானது. இ) பொற்காலங்களையும் அழிவு தாக்கும். ஈ) புகழும் அடிமையாகும் போது அழிவு நேரிடும். உ) பழிக்குப்பழி

குறிப்பு

இனிமையாக இருந்தாலும் எப்போதும் வெற்றியைத்தராது. ஊ) இறைவன் நல்லவர்களைக் காப்பான் அதிகாரம் நன்மை பயக்காது.

### 6.4.1. வரலாற்று வரைவியலில் காணப்படும் குறைகள்

தூசிடைடிஸ் எழுதியுள்ள வரலாற்றில் வரலாற்று ஆசிரியர்கள் சிலகுறைபாடுகளைச் சுட்டிக்காட்டியுள்ளார். இவரது வரலாற்றில் கால வரையறை (Chornology) முறைப்படுத்தப்படவில்லை . தூசிடைடிஸின் எழுத்து நடை விறுவிறுப்பாகவும், சுவாரஸ்யமாகவும் அமையவில்லை. இவரது எழுத்தைப் புரிந்து கொள்ளுதல் மிகவும் கடினமாக உள்ளது. இக்காரணங்களில் அறிஞர்கள் தவிர சாதாரண மக்களிடையே தூசிடைடிஸின் வரலாறு பிரபலடையவில்லை .

**மதிப்பீடு**

இவர் ஒரு சிறந்த பண்டைய கிரேக்க வரலாற்று ஆசிரியராவார். இவர் நுணுக்கமான வரலாற்று வரைவியல் முறையைக் கண்டார். புற நோக்குத் தன்மையுடன் கூடிய அறிவியல் ரீதியான அணுகுமுறையை இவரது வரலாற்றில் காணலாம். எனவே, தூசிடைடிஸ் இவரை அடுத்து வந்த வரலாற்று ஆசிரியர்களுக்கு ஒரு வழிகாட்டியாய் அமைந்தார் என கூறுவது மிகையாகாது.

## 6.5. எட்வர்ட் கிப்பன் (Edward Gibbon)

### 6.5.1. இளமைப்பருவம்

அறிவொளி சகாப்பதத்தைச் சார்ந்த சிறப்பு வாய்ந்த ஆங்கிலேய வரலாற்று ஆசிரியர் கிப்பன் ஆவார். இவர் 1737 ஆம் ஆண்டு ஏப்ரல் 27ஆம் நாள் இங்கிலாந்திலுள்ள புட்னி என்னுடமிடத்தில் பிறந்தார். இவர் இளமைப் பருவத்தில் கடுமையாக நோய் வாய்ப்பட்டிருந்தார். இவருடன் பிறந்த அறுவரில் இவர் ஒருவரே பிழைத்தார்.

எட்வர்ட்கிப்பன் மற்றவர்கள் மாண்டு போயினர். இளமைப் பருவத்தில் இவருடைய தாய் இவரை கவனிக்கவில்லை. இவருடைய சித்தியான கேத்தரின் போர்டின் இவரிடம் அன்பு காட்டி இவரை வளர்த்தார். எனவே கிப்பன் பிற்காலத்தில் இவரை நினைவுக்கூறும் பொழுது தன்னுடைய அறிவின் தாய் என பெருமிதத்தோடு அழைக்கின்றார். சிறு வயதிலேயே புத்தங்களை கற்கும் ஆர்வம் இவரிடம் அதிகமாகக் காணப்பட்டது. முதலில் புட்னியிலுள்ள ஒரு பள்ளியில் பயின்றார். பின்னர் 1746 ஆம் ஆண்டு கிங்ஸ்டன் இலக்கணப் பள்ளியில் பயின்றார். இங்குதான் கண்ணீருக்கும், குருதிக்குமிடையே இலத்தீன் மொழியை இவர் கற்றாரென தம்முடைய சுயசரிதையில் குறிப்பிகின்றார். உடல் நலக் குறைவால் இரண்டாண்டுகாலம் தனியாக ஆசிரியர்களிடம் பயின்றார்.

**குறிப்பு**

இவருடையத் தந்தை பல ஊருக்கு இவரை அழைத்து சென்ற போது அவ்வூர்களின் நூலகங்களில் உள்ள நூல்களை ஆர்வத்துடன் கற்றார். இத்தருணத்தில் தான் இவரது சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளது போல தம்முடைய 12 ஆவது வயதில் தம் அறிவிற்கு சரியான உணவு வரலாறு எனக் குறிப்பிடுகின்றார். மிகப்பெரிய வரலாற்று நூலுக்கு வேண்டிய அஸ்திவாரத்தை அமைத்துவிட்டார். கிப்பன் தம்முடைய அறிவு வளர்ச்சிக்குத் தனிமையை நாடினார். இவர் படைத்த மாபெரும் நூலான ரோமானியப் பேரரசின் சீர்குலையும், வீழ்ச்சியும் என்னும் நூலை மற்ற எந்த அறிஞர்களையும் கலந்தாலோசிக்காமல் எழுதி தம்முடைய தனி முத்திரையைப் பதித்தார். 15 வயதிற்கு மேல் கிப்பனுடைய உடல் நலத்தில் தேர்ச்சி பெற்றார். இதைத் தொடர்ந்து ஏப்ரல் 1752 ஆம் ஆண்டு ஆக்ஃபோர்ட்டிலுள்ள மேக்டலன் கல்லூரியில் சேர்ந்தார். இங்கு சமயத்துறையில் ஆர்வம் காட்டினார். கத்தோலிக்க மதத்திலுள்ள கருத்துக்களை ஏற்று அம்மதத்தைத் தழுவினார். இச்செயல் அவடைய தந்தைக்குக் கடும் கோபத்தை ஏற்படுத்தியது. ஏனெனில் அப்பொழுது இங்கிலாந்தில் நிலவிய சட்டத்தின் படி கத்தோலிக்க மதத்தைத் தழுவினால் அவர்கள் அரசாங்கப் பணிகளுக்குத் தகுதியற்றவர்கள் என்ற சட்டம் நிலவியது. எனவே இவரது தந்தை இவரை பிரான்சு நாட்டிலுள்ள பெவிலார்டு (Rev.Daniel PavillardDas Capital) பாதுகாப்பில் விட்டார். பெவிலார்டின் அன்பும், ஆதரவும் இவருடைய கற்கும் முறையை சீர்படுத்தின. இங்கு லத்தீன் இலக்கியங்களை கற்றறிந்தார். கணிதம், தருக்கம் போன்றவற்றில் தேர்ச்சிப் பெற்றார். இதன் பின் 1754 ஆம் ஆண்டு மறுபடியும் புராட்டஸ்டண்ட் சமயத்தைத் தழுவினார். இவர் பிரெஞ்சு நாட்டில் தங்கியிருந்த பொழுது அப்பொழுதியிருந்த பிரஞ்சு அறிஞர்களின் நட்பைப் பெற்றார். உதாரணமாக வால்டேர், சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த ஜார்ஜஸ் டெவிவர்டன் மகளான சூசன் கர்சாடுடன் காதல் வயப்பட்டார். 1758 ஆம் ஆண்டு அவர் இங்கிலாந்திற்கு அழைக்கப்பட்டார். அவருடைய காதலுக்கு அவருடைய பெற்றோர் மறுப்பு தெரிவித்தனர். 1760 லிருந்து 1762 வரை ஹேம்ஷையர் ராணுவத்தில் கேப்டனாகப் பணிபுரிந்ததனால் கல்வித்துறையில் நாட்டம் குறைந்தது. ஜனவரி 1763 ஆம் ஆண்டு பாரிஸ் நகருக்குச் சென்று தங்கியிந்தார். அப்போதைய தத்துவ மேதைகளாக விளங்கிய டெட்ரோ மற்றும் ஜின்லிரோண்டுடி ஆலம்பாட் (JeanLRondAlembert) போன்றரது நட்பைப் பெற்றார். இத்தருணத்தில் தனது வாழ்நாளில் முக்கியமான நண்பரான ஜான்பேக்கர் ஹால் ராய்டு நட்பினைப் பெற்றார். 1764ஆம் ஆண்டு ரோம் நகருக்குச் சென்றார். அக்டோபர் மாதத்தில் ரோம் நகரின் நினைவுச் சின்னங்களை பார்வையிட்டுக் கொண்டிருக்கும் போது ரோமானிய வரலாற்றின் சீர்குலைவும், வீழ்ச்சியும் பற்றி எழுத வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. 1794 ஆம் ஆண்டு லண்டன் நகரில் ஜனவரி 16 ஆம் நாள் கிப்பன் உயிர் நீத்தார். இவருடைய நூல்கள்

இவர் எழுதிய மிகச்சிறந்த வரலாற்று நூல் ஆறு தொகுதிகளைக் கொண்ட ரோமானியப் பேரரசின் சீர்குலைவும், வீழ்ச்சியுமாகும். பிப்ரவரி

குறிப்பு

1776 ஆம் ஆண்டு இந்நூலின் முதல் தொகுதி வெளியிடப் பட்டது. உடனடியாக இந்நூல் அறிஞர்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியது. முக்கியமாக இவர் கிறித்துவ மதத்தைத் தாக்கி எழுதிய விதம் பலரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இவர் 1779 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசாங்கத்தில் வர்த்தக மற்றும் காலனிகளுக்கு ஆணையராக நியமிக்கப்பட்டார். அதே தருணத்தில் அமெரிக்காவில் பிரிட்டிஷ் அரசாங்கத்தில் கொள்கையை எதிர்த்து ஒரு சிறந்த கட்டுரையை எழுதியுள்ளார். 1781ஆம் ஆண்டு ரோமானியப் பேரரசின் சீர்குலைவும் வீழ்ச்சியும் என்னும் வரலாற்று நூலின் இரண்டு மற்றும் மூன்றாவது தொகுதிகளை வெளியிட்டார். இதற்கிடையே இவரை ஆதரித்து வந்த பிரதம மந்திரி நார்த் பிரபுவின் அரசாங்கம் வீழ்ச்சியுற்றது. அதைத் தொடர்ந்து லாசேன் நகருக்குச் சென்று தம்முடைய நண்பர் டெலிவர்டன் வீட்டில் இறுதி மூன்றுத் தொகுதிகளை (ரோமானியப் பேரரசின் சீர்குலைவும், வீழ்ச்சியும் ஜூன் மாதம் 1787ஆம் ஆண்டு எழுதி முடித்தார். இவரது 51ஆவது வயதில் (மே, 1788) இந்நூல்கள் வெளியிடப்பட்டன. இவரின் வரலாற்று முறைகள்

கிப்பன் பகுத்தறிவுப் பள்ளியைச் சார்ந்த வரலாற்று ஆசிரியர்களான வால்டேர், ஹியூம் மற்றும் போலிங்ப்ரூக் (Boling Broke) வழி வந்தவர். இவரது வரலாற்று வரைவியல் முறையில் மனித ஆற்றலுக்கு அப்பாற்ப்பட்ட இயற்கையின் தத்துவத்திலிருந்து மாறுபட்டார். அது போலவே செய்திகளை மட்டும் தொகுத்து வழங்கப்படும் வரலாற்று முறையிலிருந்து மாறுபட்டார். அதற்கு மாறாக ஆதாரங்களை கூர்மையாகச் சோதனை செய்து தத்துவத்தினடிப்படையில் முறையாக வரலாற்றை எழுத முற்பட்டார்.

இவருடைய ரோமானியப் பேரரசின் சீர்குலைவும், வீழ்ச்சியும் என்ற நூலை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம். முதல் பகுதி 300 ஆண்டுகளுக்கான மேற்கிலிருந்த ரோமானியப் பேரரசின் வரலாற்றைப் படம் பிடித்துக் காட்டுகிறது. இரண்டாடவது பகுதி, 1000 ஆண்டுகளுக்கான வரலாற்றைத் தொகுத்து வழங்குகிறது. சுருங்க கூறினால் மேற்கில் தோன்றிய ரோமானியப் பேரரசு எவ்வாறு கிழக்கு ஐரோப்பாவில் வீழ்ச்சி அடைந்து என்பதை விரிவாகக் கூறியுள்ளார். இவருடைய இந்நூல் அதிக அளவிலான வரலாற்று ஆதாரங்களைக் கொண்டு திறந்த நடையில் முக்கியமாக கான்ஸ்டான்டி நோபில் எவ்வாறு வீழ்ச்சி எனவும் எழுதியுள்ளார். முதல் தொகுதியில் இவர் மதத்திற்கு எதிராகக் கருத்துக்களைக் கூறியதற்குக் காரணம் இவர் கிறித்துவ மதத்தை மனித அனுபவமாகக் கொண்டு அதிக அறிவியல் பூர்வமான ஆராய்ச்சிக்கு

பொருளாக அணுகப்பட வேண்டும் என்ற கருத்தை கிப்பன் வலியுறுத்துகின்றார். இவர் கிழக்கு ஐரோப்பில் தழைத்தோங்கியிருந்த ரோமானியப் பேரரசின் ஆட்சி மொழியாக இருந்த, கிரேக்க

**குறிப்பு**

மொழியிலிருந்து வரலாற்று ஆதாரங்கள் மற்றும் இலக்கியங்கள் சரியான முறையில் பயன் படுத்தப்படவில்லை எனக் குற்றம் சாட்டினார்.

**மதிப்பீடு**

கிப்பன் எழுதிய ரோமானிய பேரரசின் சீர்குலைவும், வீழ்ச்சியும், கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1453ஆம் ஆண்டு வரை நிலவிய ரோமானியப் பேரரசின் வரலாற்றை காவியமாக வடித்துள்ளார். இவர் ஒரு தலை சிறந்த வரலாற்று ஆசிரியருக்குரிய முறைகளை கையாண்டுள்ளார். தன் வாழ்வில் ஏற்பட்ட அனுபவங்களின் தாக்கத்தின் காரணமாக திருச்சபையின் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டு ரோமானியப் பேரரசின் வீழ்ச்சிக்குக் கிறித்துவ மதமும், திருச்சபையின் வளர்ச்சியுமாகும் என குறிப்பிட்டுள்ளார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக வரலாற்று ஆசிரியர் ஜெ.பி. பியுரி கூறுவதுப் போல ”பல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செய்திகளைப் பொறுத்தவரை (கிப்பன்) பின் தங்கியுள்ளார். அவர் கூறுவது போல் நம் முன்னோர்கள் முற்றிலும் தகுதியற்ற உலகில் வாழ்ந்திடவில்லை . ஆயினும் அவர் எவ்வளவு தான் பின் தங்கி இருந்தாலும் முக்கியமான பலவற்றில் அவர் நம்முடைய ஆசனாகத் திகழ்கிறார். இக்கூற்று மெய்யானது.

## 6.6. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

1. ஹெரோடோடஸ் ஏன் கவனிக்கத் தகுதியானவர்?

2. துசிடிடீஸைப் பின்பற்றிய இரண்டு வரலாற்றாசிரியர்களின் பெயரைக் குறிப்பிடவும்.

3. “ரோமானியப் பேரரசின் சரிவு மற்றும் வீழ்ச்சியின் வரலாறு (1776-88)“ இன் இரண்டு பகுதிகள் எதைக் கொண்டுள்ளன?

4. வரலாற்று புலமையில் அசாதாரணமான வரலாற்றைப் பற்றி கிப்பன் என்ன புரிந்து கொண்டார்?

## 6.7. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்

1. ஹெரோடோடஸ் தனது நலன்களைப் பயன்படுத்துவதற்கு கவனிக்கத் தகுதியானவர் அவர் கட்டுக்கதைகளைப் பதிவு செய்தார், பழக்கவழக்கங்களை விவரித்தார், மேலும் யூகங்களையும் செய்தார்.

2. துசிடிடிஸ் உயர் மதிப்பைப் பெற்றார், மேலும் ரோமானிய காலத்தின் இரண்டு முக்கியமான கிரேக்க வரலாற்றாசிரியர்களான பாலிபியஸ் மற்றும் டியோ காசியஸ், அதிகமாகவோ அல்லது குறைவாகவோ துசைடைடுகளைப் பின்பற்றினர்.

3. முதல் பகுதி 460 வருட வரலாற்றையும், இரண்டாம் பகுதி சுமார் 800 ஆண்டுகளின் சுருக்கமான வரலாற்றையும் வழங்குகிறது.

குறிப்பு

4. வரலாற்றுப் புலமைத் துறையில் வழக்கத்திற்கு மாறான தொலைநோக்குப் பார்வை மற்றும் முழுமையான அறிவாற்றலுடன் வரலாற்றின் தொடர்ச்சி பற்றிய கருத்தைப் புரிந்துகொண்ட முதல் எழுத்தாளர் கிப்பன் ஆவார்.

## 6.8. அத்தியாயச் சுருக்கம்

- கிமு 6 ஆம் நூற்றாண்டில் கிடைத்த ஒழுங்கமைக்கப்பட்ட பதிவுகள். லோகோகிராபோயின் தொகுப்புகளாக இருந்தன. எவ்வாறாயினும், நியாயமான முறையில், ஹெரோடோடஸ் முதல் வரலாற்றாசிரியராக ஏற்றுக்கொள்ளப்படுகிறார், ஏனெனில் அவரது படைப்பில் நிகழ்வுகளின் தொகுப்பைச் சுற்றியுள்ள அனைத்து முக்கியமான மற்றும் குறிப்பிடத்தக்க சூழ்நிலைகளையும் பதிவுசெய்து அந்த நிகழ்வுகளில் மக்களின் செயல்களை பாதிக்கும் நனவான விருப்பம் தோன்றுகிறது.
- மற்ற பெரிய கிரேக்க வரலாற்றாசிரியரான துசிடிடிஸ், ஹெரோடோடஸிலிருந்து மிகவும் வேறுபட்டவர். பெலோபொன்னேசியப் போரின் வரலாற்றில், துசிடிடிஸ் அரசு மற்றும் போரைப் பற்றி மட்டுமே எழுதினார் ஹெரோடோடஸின் திசைதிருப்பல்களைப் புறக்கணித்து, காலவரிசை மற்றும் உண்மைகளை துல்லியமான வடிவத்துடன் இணைக்க முயன்றார்.
- எட்வர்ட் கிப்பன் (1737-94) ஒரு ஆங்கில வரலாற்றாசிரியர் மற்றும் உறுப்பினர் பாராளுமன்றம். அவர் தனது காலத்தின் சிறந்த வரலாற்றாசிரியர். அவர் அறிவொளி சகாப்தத்தின் வரலாற்றை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்.
- கிப்பனின் அழியாப் படைப்பு, சரிவு மற்றும் வீழ்ச்சியின் வரலாறு ரோமானியப் பேரரசு (1776-88) ஐரோப்பாவிலிருந்து ஆசியா வரையிலான ஒரு பெரிய புவியியல் இடத்தை உள்ளடக்கியது, இந்த வேலையின் வரம்பு மற்றும் இடைவெளி மகத்தானது. இது ரோமானியர்கள், பைசண்டைன்கள் மற்றும் வடக்கு பழங்குடியினர் மீது கவனம் செலுத்துகிறது. நவீன ஐரோப்பாவின் தோற்றம் மற்றும் வளர்ச்சியின் கதையையும் இது விவரிக்கிறது, இது உலகின் பிற பகுதிகளை விட உயர்ந்ததாக உள்ளது.
- கிப்பன் வரலாற்றாசிரியர்களின் பகுத்தறிவுப் பள்ளியைச் சேர்ந்தவர், அதன் நோக்கமாக வரலாற்றை இயற்கைக்கு அப்பாற்பட்ட விளக்கங்களின் பிடியில் இருந்து விடுவிப்பதும், வரலாற்றை எழுதும் பழைய வரலாற்று முறையை மாற்றுவதும், அதிகாரிகளின் விமர்சன ஆய்வு மற்றும் கலாச்சார மதிப்பின் அடிப்படையில் நியாயமான தத்துவக் கதை மூலம் ஆதாரம்.

- கிப்பன் வரலாற்றாசிரியர்களின் பகுத்தறிவுப் பள்ளியைச் சேர்ந்தவர், அதன் நோக்கமாக வரலாற்றை இயற்கைக்கு அப்பாற்பட்ட விளக்கங்களின் பிடியில் இருந்து விடுவிப்பதும், வரலாற்றை எழுதும் பழைய வரலாற்று முறையை மாற்றுவதும், அதிகாரிகளின் விமர்சன ஆய்வு மற்றும் கலாச்சார மதிப்பின் அடிப்படையில் நியாயமான தத்துவக் கதை மூலம் ஆதாரம்.
- கிப்பன் போர்களில், வெற்றியாளர்கள், மாவீரர்கள் மற்றும் தளபதிகள் வரலாற்றின் முக்கிய பாடங்களாக இருந்தனர். “முன்னேற்றம்“, இயற்கை விதி மற்றும் சமூக இயற்பியல் மற்றும் பிற கருத்துக்கள் அனைத்தும் கற்பனைகள்.

## 6.9. முக்கிய சொற்கள்

சிடுமூஞ்சித்தனம்: இது மற்றவர்களின் நோக்கங்கள் மீதான பொதுவான அவநம்பிக்கையால் வகைப்படுத்தப்படும் ஒரு அணுகுமுறை. ஒரு இழிந்த நபருக்கு பொதுவாக நம்பிக்கை அல்லது நம்பிக்கையின்மை இருக்கலாம்

மனித இனம் அல்லது லட்சியம், ஆசை, பேராசை ஆகியவற்றால் தூண்டப்பட்ட மக்கள் மனநிறைவு மற்றும் பொருள்முதல்வாதம்.

புராட்டஸ்டன்டிசம்: இது கிறிஸ்தவத்தின் ஒரு வடிவமாகும், இது 16 ஆம் நூற்றாண்டின் சீர்திருத்தத்துடன் தோன்றியது, இது கத்தோலிக்க திருச்சபையில் பிழைகள் என்று அதன் பின்பற்றுபவர்கள் உணர்ந்ததற்கு எதிரான இயக்கம்.

சுவிசேஷம்: இது வெளிநாட்டு வரலாற்றாசிரியர்களான புராட்டஸ்டன்ட் கிறிஸ்தவத்திற்குள் உலகளாவிய டிரான்ஸ்-டெனிமினேஷனல் இயக்கமாகும், இது நற்செய்தியின் சாராம்சம் கிருபையால் மட்டுமே இரட்சிப்பின் கோட்பாட்டைக் கொண்டுள்ளது என்ற நம்பிக்கையைப் பராமரிக்கிறது, இது இயேசுவின் பிராயச்சித்தத்தில் உள்ள நம்பிக்கையின் மூலம் மட்டுமே.

## 6.10. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

**குறுகிய வினாக்கள்**

1. ஹெரோடோடஸ் ஏன் முதல் வரலாற்றாசிரியராகக் கருதப்படுகிறார்?

2. கிப்பன் எதற்காகக் குறிப்பிடப்படுகிறார்?

**விரிவான வினாக்கள்**

1. எட்வர்ட் கிப்பனின் ஆரம்பகால வாழ்க்கையைப் பற்றி விவாதிக்கவும்.

2. கிப்பனின் அறிவுசார் வளர்ச்சியின் நான்கு கட்டங்களை பகுப்பாய்வு செய்யுங்கள்.

குறிப்பு

## 6.11. கூடுதல் வாசிப்புகள்

Warren, John. 1998. *The Past and Its Presenters*: An Introduction to Issues in Historiography. London: Hodder & Stoughton Educational.

Ferro, Marc. 2003. *The Use and Abuse of History*: Or How the Past is Taught to Children. Abingdon: Routledge.

E. Sreedharan. 2004. *A Textbook of Historiography: 500 BC to AD 2000*. New Delhi: Orient Blackswan.

Sharma, Arvind. 2003. *Hinduism and its Sense of History*. New Delhi: OUP India.

Iggers, Georg G. 2005. *Historiography in the 20th Century: From Scientific Objectivity to the Postmodern Challenge*. Connecticut: Wesleyan University Press.

Stuart, Hughes H. 1964. *History as Art and as Science.* New York: Joanna Cotler Books.

Fea, John. 2013. *Why Study History? Reflecting on the Importance of the Past*. Washington: Baker Publishing Group.

# அலகு-7

## புகழ்பெற்ற வெளிநாட்டு வரலாற்றாசிரியர்கள்: அர்னால்ட் ஜோசப் டாய்ன்பீ, கார்ல் மார்க்ஸ், லியோபோல்டு வான் ராங்கே, ஹெகல் மற்றும் வி.ஏ. ஸ்மித்

உள்ளடக்கம்

7.1. முன்னுரை
7.2. நோக்கங்கள்
7.3. அர்னால்டு ஜோசப் டாயின்பி Arnold Joseph Toynbee (1889 - 1975)

7.4. காரல் மார்க்ஸ் Karl Marx (1818- 1883)
7.5. லியோபோல்டு வான் ராங்கே Leopold Von Ranke, (1795 - 1885)
7.6. ஜார்ஜ் வில்ஹெம் ஹெகல் George Wilhelm Hegal (1770 - 1831)
7.7. வின்சென்ட் ஆர்தர் ஸ்மித் (Vincent Arthur Smith)
7.7.1. இவரது நூல்கள்
7.7.2. வரலாற்று முறைகள்
7.8. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்
7.9. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்
7.10. அத்தியாயச் சுருக்கம்
7.11. முக்கிய சொற்கள்
7.12. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
7.13. கூடுதல் வாசிப்புகள்

**குறிப்பு**

## 7.1. முன்னுரை

இந்த பிரிவில், புகழ்பெற்ற வெளிநாட்டு வரலாற்றாசிரியர்களின் பங்களிப்புகள் மற்றும் கோட்பாடுகள் ஆகியவை விளக்கப்பட்டுள்ளது. இவர்கள் அர்னால்ட் ஜோசப் டாய்ன்பீ, கார்ல் மார்க்ஸ், லியோபோல்ட் வான் ரேங்க், ஹெகல் மற்றும் வி.ஏ. ஸ்மித். மேலே குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்றாசிரியர்கள் எத்தகைய வரலாற்று ஆய்வுமுறைகளை பின்பற்றி தங்களுடைய படைப்புகளை வெளியிட்டார்கள் என்பதையும் தங்களுடைய ஆய்வின் போது எதிர்க்கொண்ட சவால்களும் அவற்றை வெற்றிக்கரமாக எதிர்க்கொண்ட விதங்களும் இந்த அத்தியாயத்தில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

## 7.2. நோக்கங்கள்

**இந்த அத்தியாயத்தை படிப்பதன் மூலமாக கீழ்காண்பனவற்றை புரிந்து கொள்ள இயலும்**

- அர்னால்ட் ஜோசப் டாய்ன்பீயின் படைப்புகள் மற்றும் கோட்பாடுகளை பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது
- வரலாறு மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் நிலைகளில் கார்ல் மார்க்சின் கருத்துக்களைப் பற்றி விளக்கப்பட்டுள்ளது
- லியோபோல்ட் வான் ரேங்கின் “பாரம்பரியம்“ மற்றும் கருத்துக்கள் விளக்கப்பட்டுள்ளன

- ஹெகல் மற்றும் வி.ஏ.ஸ்மித்தின் வரலாறு பற்றிய் கருத்துக்கள் விளக்கப்பட்டுள்ளது

குறிப்பு

## 7.3. அர்னால்டு ஜோசப் டாயின்பி Arnold Joseph Toynbee (1889 - 1975)

வரலாற்றுத் தேவதை டாயின்பி இருபதாம் நூற்றாண்டின் வரலாற்றுத் தேவதை (Clio, the Muse)யாகக் கருதப்படுகிறார். இலண்டனில் பிறந்த இவர் ஆக்ஸ்போர்டின் பெலியோல் கல்லூரியில் கிரேக்க இலத்தீன் இலக்கியங்கள் பயின்றார். ஏதென்சில் ஓராண்டு தொல்பொருள்கலை கற்றார். பெலியோலில் மூன்றாண்டுகள் பண்டைய வரலாறு கற்பித்தார். அதன் பிறகு இவர் இலண்டன் பல்கலைக் கழகத்தின் அரசர் கல்லூரியில் ஆறாண்டுகள் (1919 - 1924) பல்கலைக் கழகத்தில் முப்பதாண்டுகள் (1925 - 1955) வரலாற்றுப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வெளியுறவுத் துறை சார்பாகப் பாரிஸ் அமைதி மாநாட்டில் பிரிட்டிஷ் குழுவின் உறுப்பினராகக் கலந்து கொண்டார் (1946). இரண்டாம் எலிசபெத் ராணியின் பிறந்த நாளன்று “வாகை வீரன் கவுரவப்பட்டம்” (Champion of Honour) கொடுத்து பாராட்டப்பட்டார். டாயின்பியின் படைப்புகள் டாயின்பி வளமிக்க வரலாற்று வரைவாளர். ஏராளமாக எழுதினார். அவரது முக்கிய படைப்புகளாவன: 1) நாட்டுரிமையும் போரும் 2). கிரேக்க வரலாற்றுச் சிந்தனை 3). நாகரிகத்துக்குச் சோதனை ̇ 4). ஒரு வரலாற்றாளரின் சமய நோக்கு ̇ 5) அனுபவங்கள் 6) வரலாற்று ஆய்வ் 7) மறு பரிசீலனைகள் 8). புதிய ஐரோப்பா 9). சீனப் பயணம் 10) வாழ்க்கைத் தேர்வு. இவையன்றிப் பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். இவற்றுள் வரலாற்று ஆய்வு (யு ளுவரனல ழக ர்ளைவழசல) என்ற நூல் டாயின்பியின் இலக்கியப் பெரும் படைப்பு (அயபரெஅ ழிரள) ஆகும். 40 ஆண்டுகால ஆராய்ச்சியின் விளைவாக இப்படைப்பு 12 தொகுதிகளாக வரையப்பட்டுள்ளது. சோமர்வெல் (D.C.Somervel) இவற்றை இரு தொகுதிகளாகச் சுருக்கித் தந்துள்ளார். தற்போது இவை ஒரே தொகுதியாக வெளியிடப்பட்டுள்ளது! டாயின்பியின் வரலாற்றுப் பங்களிப்புகள் 1. உலக நாகரிகங்க ள் (World Civilizations). உலகில் மனித இனம் தோன்றி இன்று வரை இருந்த, இருந்து வரும் நாகரிகங்கள் 28 என்று அடையாளம் கண்டார் டாயின்பி. இவற்றுள் பின்வரும் 6 நாகரிகங்கள் மட்டும் உயிர் வாழ்கின்றன : 1. மேற்கத்திய சமுதாயம் (The Western Societẏ) 2.சனாதன கிறித்துவ சமுதாயம் (The Orthodox Christian Societẏ) 3. அதன் ரஷ்யக் கிளை (Its Russian Offshooṫ) 4.இஸ்லாமிய சமுதாயம் (The Islamic Societẏ) 5. இந்து சமுதாயம் (The Hindu Societẏ) 6.சீன சமுதாயம் (The Chinese Societẏ) பிற 22 நாகரிகங்க ள் கருவில் சிதைந்தோ (Aborted), வளர்ச்சி தடைப்பட்டோ

*Self-Instructional Material*

குறிப்பு

(arrested) அல்லது வளர்ந்து மறைந்தோ போயின. வாழும் நாகரிகங்களில் மேலை நாகரிகம் தவிர பிறவெல்லாம் சிதறுண்டு போவதற்கான நிலையில் உள்ளன என்று கூறுகிறார் டாயின்பி. 2. வரலாற்று ஆய்வு அலகு (The Unit of Historical Study). வழக்கமாக வரலாற்றாளர்கள் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி போன்ற நாடுகளை அலகுகளாகக் கொண்டு வரலாறு எழுதினர். இம்மரபிலிருந்து மாறுபட்டுப் பண்பாட்டை (Culture) அலகாகக் கொண்டு ஆய்ந்தார் ஸ்பெங்லர். டாயின்பி நாகரிகம் (Civilization) அல்லது சமுதாயம் (Society) என்ற அலகைக் கொண்டு வரலாற்று ஆய்வை மேற்கொண்டார். உதாரணமாக இங்கிலாந்தின் வரலாற்றைப் பின் நோக்கிப் பார்த்தால் அது பிரான்ஸ், நெதர்லாந்து ஆகிய நாடுகளை உள்ளடக்கிய ஒரு பொது நாகரிகத்தின் பகுதியே என்பது தெரிய வரும் என்று கூறுகிறார் டாயின்பி. எனவே இங்கிலாந்து சமுதாயம் என்பதற்குப் பதில் மேற்கத்திய சமுதாயம் என்பதே புரிந்து கொள்ளக்கூடிய ஆய்வுக் களம் (intelligible field of study) என்ற முடிவுக்கு வருகிறார் டாயின்பி. எனவே டாயின்பியின் வரலாற்று ஆய்வுக் களம் பரப்பளவில் மிகவும் பெரியது.

நாகரிகங்களின் தோற்றம் நாகரிகங்களின் தோற்றம், வளர்ச்சி, முறிவு, சிதறல் (Origin, Growth, Breakdown and Disintergration of Civilizations). நாகரிகங்க ளின் தோற்றம் (Origin of Civilizations). சவாலும் சமாளிப்பும் (Challenge and Response). வழக்கமாக இனம் (Race), சூழ்நிலை (Environment) ஆகிய இரண்டும் நாகரிகம் தோன்றுவதற்கான காரணங்களாகக் கூறப்பட்டு வந்தன. ஆனால் டாயின்பி இக்காரணங்களை நிராகரித்துவிட்டு நாகரிகம் மோதலின் (Encounter) விளைவாகத் தோன்றுவதாகக் கூறுகிறார். சவாலை வெற்றிகரமாகச் சமாளிப்பதால் நாகரிகம் தோன்றுகிறது. இச்சவால்கள்: 1.கடுமையான நிலப்பகுதி (Hard Country) 2.புதிய நிலப்பகுதி (New Ground) 3. பேரிடர்கள் (Blows) 4. அழுத்தங்கள் (Pressures) 5. தண்ட னைக்குள்ளாதல் (Penalisation) ஆகிய வடிவில் தோன்றக்கூடும். சவால்கள் மிக அதிகமாகவோ, மிகக் குறைவாகவோ அல்லது மிதமாகவோ இருக்கக் கூடும். உகந்த சவாலே (Optimum challenge) நாகரிகம் தோன்றுவதற்குச் சாதகமானதாகும். பாதகங்களின் சாதகங்களின் (Virtues of Adversities) பயனாக நாகரிகங்கள் தோன்றுகின்றன. இத்தங்க நடுநிலைக் கோட்பாட்டுக்கான (Lawof Golden Mean) பல உதாரணங்களைக் கொடுத்துள்ளார். 4. நாகரிகங்க ளின் வளர்ச்சி (Growth of Civilizations) தோன்றிய நாகரிகங்கள் தொடர்ந்து சவால்களை வெற்றிகரமாகச் சமாளித்தால் வளரும். புறத்தடைகளை வெற்றி கண்டு தோன்றிய நாகரிகம் அக ஆற்றலால் சவால்களை எதிர்கொண்டு வளர்கின்றது. இதை நுண்பொருள் மாற்றம் (Etherialisation) என்று கூறுகிறார் டாயின்பி. இம்மாற்றகத்தை ஆக்கத்திறன் மிக்கத் தனி மனிதர்களோ (Creative Individuals) அல்லது ஆக்கச் சிறுபான்மையினரோ (Creative Minority) ஏற்படுத்துகின்றனர்.

குறிப்பு

இவர்கள் காட்டும் வழியில் (Mimesis) மக்கள் செல்வர். ஆக்கத் திறன்மிக்கத் தலைவர்கள் சமூகத்திலிருந்து பின் வாங்கிச் சென்று (Withdraw) சவால்களுக்கான தீர்வு கண்டு முன்வந்து (Return) மக்களை நல்வழி நடத்திச் செல்வர். அப்போது நாகரிகம் வளர்கிறது. 5. நாகரிகங்க ளின் முறிவு (Breakdown of Civilizations) வளர்ச்சி பெறும் நாகரிகங்கள் எல்லாம் வாழ்வதில்லை. பல பாதியில் முறிந்து விடுகின்றன. ஏனெனில் 1. ஆக்கத்திறன் மிக்கச் சிறுபான்மையினரின் (Creative Minority) மன வலிமையும் படைப்பாற்றலும் குறைந்து விடுகின்றன் 2. மக்கள் அவர்களை விட்டு விலகி விடுகின்றனர் (Mimesis), 3. அதன் விளைவாகச் சமூகச் சீர்குலைவு ஏற்படுகிறது. நாகரிக முறிவு வளர்ச்சியைத் தடை செய்கிறது. சுருங்கக் கூறின் சுயத் தீர்மானத் திறன் இழப்பு (Loss of Self Determination) நாகரிகத்தின் முறிவுக்குக் காரணம் என்று கூறுகிறார்.

டாயின்பி. வெற்றி மயக்கத்தில் மதி இழந்து மாறும் சூழலுக்கேற்ப மாறாமல் இருந்து விட்டால் முறிவு தவிர்க்க முடியாததாகி விடுகிறது. விளைவு? தேக்க நிலை (Nemesis) நாகரிகங்க ள் சிதறுண்டு போதல் (Disintegration of Civilization) முறிந்து போன நாகரிகங்களில் சில சிதறிப் போகின்றன. வேறு சில உயிரற்ற உயிரோடு (Lifeless Life) ஊசலாடிக் கொண்டிருக்கின்றன. இது தடைப்பட்டச் சிதறல் நிலை (The Period of Petrifaction) ஆகும். உதாரணமாக எகிப்திய சமுதாயம், இந்திய ஜெய்னர்கள், இலங்கை, பர்மா, சயாம், கம்போடியா ஹீனயான பௌத்தர்கள். இவை இவர்கள் நாகரிகத்தின் புதைப் பகுதிகள் (Fossilised Fragments) ஆகும். சமுதாய உடலில் ஏற்படும் பிளவு (A Schism inthe Body Social) நாகரிகம் சிதறுண்டு இருப்பதற்கான அறிகுறியாகும். முறிவுற்ற சமுதாயம் மூன்று கூறுகளாகப் பிளவுபடுகிறது. ஆக்கச் சிறுபான்மை (The Creative Minority) ஆக்கத் திறனிழந்து ஆதிக்கச் சிறுபான்மை (The Dominant Minority)யாக மாறிவிடல் 2. ஆதிக்கக் கொடுங்கோன்மையால் உரிமையிழந்து, வாழ்விழந்து, மனக்குமுறலோடு உள்ள உட்பக்க எதிர்ப்பாளிகள் (The Internal Proletariat) 3. அன்னியப்பட்டுப் போய் சமூகத்துக்கு வெளியிலிருந்து ஆட்சிக் கெதிராகச் சதி செய்யும் வெளிப்பக்க எதிர்ப்பாளிகள் (The External Proletariat). பிரபஞ்சப் பேரரசும் (Universal State) பிரபஞ்சத் திருச்சபையும் (Universal Church) சிதறுண்ட நாகரிகங்களின் சின்னங்களாகும். சிதறிப்போன நாகரிகம் மீண்டும் சீர்ப்பட்டு நிலைக்க முடியுமா? முடியாது. ஏனெனில் பிறந்த நாகரிகம் இறக்கத்தான் வேண்டும். ஆய்வு முடிவுகள் உலக நாகரிகங்களின் தோற்றம், வளர்ச்சி, முறிவு, சிதறல் பற்றி ஆய்ந்த டாயின்பி பின்வரும் முடிவுகளுக்கு வந்துள்ளார். 1). எல்லா நாகரிகங்களும் சமமானவை 2). மேலை நாகரிகத்தின் கீழ் கீழை நாகரிகம் வந்துள்ளது 3) உலக வரலாற்றில் முதன் முறையாக மனித இனம் புதிய உலக ஒழுங்கை (நேற றுழசடன முசனநச) ஏற்படுத்துவதற்கான முயற்சியை மேற்கொண்டுள்ளது. 4).

மேலை நாகரிகத்தில் மட்டும் இன்னும் நாகரிகச் சிதறுக்கான அறிகுறிகள் தோன்றவில்லை 5). அதற்குக் காரணம் கிறித்துவத்தின் செல்வாக்கேயாகும். "விதை விதைப்பவர் ஒருவரே. விதைகள் தனித்தனியே விதைக்கப்பட்டாலும் அறுவடை ஒன்றாகத்தான் இருக்கும்" என்று கூறுகிறார் டாயின்பி . டாயின்பியின் குறைபாடுகள் டாயின் பியின் வரலாற்று ஆய்வு வியப்புக்குரியது. எனினும் இவரது ஆய்விலும் அணுகுமுறையிலும் வரலாற்று வரைவு அமைப்பிலும் வெளிப்படையாகக் காணப்படும் குறைகளாவன: 1) டாயின்பி மேலை நாகரிகம் மற்றும் கிறித்துவச் சமயச் சார்புடையவராக உள்ளார். 2). இவரது முடிவுகளுக்குச் சாதகமான நாகரிகங்களையே தேர்ந்தெடுத்துக் கொள்கிறார். 3) வரலாற்றுச் சான்றுகளை இவர் முன்னரே முடிவு செய்யத் திட்டத்துக்குள் திணித்துள்ளார். 4). நாகரிகங்களின் தோற்றத்தை விளக்கப் புராணக் கதைகளைக் கையாள்கிறார். 5). டாயின்பியின் வரலாற்று விளக்கம் நுண் பொருள் சார்ந்த இறையியல் விளக்கமாக உள்ளது. 6). சவாலும் சமாளிப்பும் போன்ற கருத்தியல்கள் முன்விதி நிர்ணயக் கோட்பாட்டை உறுதி செய்வனவாக உள்ளன. 7) முடிவுகள் நம்பிக்கையற்ற விரக்தி மனப்பான்மையின் பிரதிபலிப்பாக உள்ளன. 8). டாயின்பியின் வரலாற்று மாற்றங்கள் பற்றிய மாதிரிகள் (அழனநடள ழக ாளைவழசஉையட உாயபெநள) வரலாற்றுக்குப் புறம்பானவை.

**மதிப்பீடு**

டாயின்பி 20-ம் நூற்றாண்டின் மாபெரும் வரலாற்றாளர் (Mega Historian). இவர் ஆய்வுக் எடுத்துக் கொண்ட பொருள் பரப்பில் மிகவும் விரிவானது. மனித இன வரலாற் அனுபவத்தின் இயல்பை அறிவுபூர்வமாக விவரிக்கிறார். இவரது வாதங்களுக்கு சார்பான சான்றுகளையும், உதாரணங்களையும், மேற்கோள்களையும் கையாளும் வித வியப்புக்குரியது. உலக வரலாற்றின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லா எடுத்துக்காட்டுகளைக் கூறித் தன் கருத்துக்களை வலுப்படுத்துகிறார். வால்பே வித்திட்ட வரலாற்றுத் தத்துவம் விக்கோ, காம்டே, கான்ட், ஹெகல், மார்கஸ், ஸ்பெங்க வழியாக வந்து டாயின்பியிடம் புது உருப்பெருகின்றது. டாயின்பி மனித குல போதகராகக் காட்சியளிக்கிறார். மனித இனம் இறையறிவு பெற்று வாழவேண்டுமென் விரும்புகிறார். டாயின்பி சொல்வதைத் தெளிவான இனிய நேரடியான ஆங்கில நடையி கூறுகிறார். இவரது வரலாற்று வீச்சுக்கும், சிந்தனைச் செறிவுக்கும், புதி அணுகுமுறைக்கும் இணையில்லை. இருபதாம் நூற்றாண்டில் மிக விரிவா விமரிசிக்கப்பட்ட வரலாற்று வரைவாளர் அர்னால்டு ஜே.டாயின்பி ஆவார்.

குறிப்பு

## 7.4. காரல் மார்க்ஸ் Karl Marx (1818- 1883)

அறிவியல் சோசலிசத்தின் தந்தை (Father of Scientific Socialism) காரல் மார்க்ஸ் ஜெர்மனியில் ட்ரெவெஸ் (Traves) என்ற இடத்தில் யூத குடும்பத்தில் வழக்கறிஞரின் மகனாகப் பிறந்தார். பான் மற்றும் பெர்லின் பல்கலைக் கழகங்களில் வரலாறு, தத்துவம் கற்றார். ஜீனா பல்கலைக் கழகத்திலிருந்து டாக்டர் பட்டம் பெற்றார். ஹெகலின் கருத்துக்களால் கவரப்பட்ட மார்க்ஸ் தீவிர சிந்தனையாளர். மார்க்ஸ் புரட்சி இயக்கத்தில் பங்கேற்றமைக்காகத் தேசத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டு நாடு கடத்தப்பட்டார். நாட்டை விட்டு வெளியேறிய கார்ல் மார்க்ஸ் வாழ்வின் பெரும் பகுதியை லண்டனில், குறிப்பாக நூலகத்தில் செலவிட்டார். அப்போது செல்வந்தர் மகனான பிரெடெரிக் எங்கல்சின் (Frederick Angels) நட்பும் ஆதரவும் இவருக்குக் கிடைத்தது. இருவரும் இணைந்து கம்யூனிஸ்ட் பிரகடனத்தை (The Communist Manifesto, 1848) வெளியிட்டனர். கார்ல் மார்க்சின் தத்துவத்தின் வறுமை“ (Poverty of Philosophy, 1847) மற்றும் மூலதனம் (Das Capital, 1867) ஆகிய படைப்புகள் அவருக்கு அழியாப் புகழைத் தேடித் தந்தன. மார்க்ஸ் அறிவியல் சோஷலிசத்தின் தந்தை” என்று அறியப்பட்டார்.

அறிவியல் சோஷலிசம் (Scientific Socialism) கற்பனையுலகு சோஷலிஸ்டுகள் (Utopian Socialists) பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்கு தத்துவார்த்தமான நடைமுறை சாத்தியமற்ற விளக்கமளித்தனர். மாறாக மார்க்ஸ் சமுதாயத்தில் காணப்படும் வர்க்க பேதங்களுக்கும் போராட்டங்களுக்கும் தெளிவான தொடர்ச்சியான யதார்த்தமான பகுத்தறிவுப்பூர்வமான வரலாற்று விளக்கமளித்தார். குறிப்பாகத் தொழிற்சாலை நாகரிகத்தின் (Industrial Civilisation) எழுச்சியால் ஏற்பட்ட சிக்கல்மிக்கப் பிரச்சனைகளை வரலாற்றுப் பின்னணியில் விவாதித்துப் புரட்சிகரமான முடிவுகளைக் கூறினார். காரல் மார்க்ஸ் ஹெகலின் இயக்கவியலின் (னுயைடநஉவைஉ) அடிப்படையில் வரலாற்றுக்குப் பொருளாதார விளக்கமளித்தார். அதற்கு “அறிவியல் சோஷலிசம்” என்று பெயரிட்டார். அறிவியல் சோஷலிசத்தின் சிறப்பியல்புகளாவன: 1) . பொருளாதாரக் காரணிகள் வரலாற்றின் போக்கைத் தீர்மானிக்கின்றன. எனவே இக்காரணிகளைக் கொண்டு வரலாற்றின் செயல்பாங்கை மாற்றியமைக்கலாம். 2) வர்க்கப் போராட்டத்தின் மூலம் வர்க்க பேதமற்ற சமுதாயத்தை உருவாக்கலாம். 3) உற்பத்தியாகும் பொருள்களையும் சேவைகளையும் சமவினியோகம் செய்வதன் மூலம் உழைப்பாளிகளுக்கு நீதி வழங்கலாம். 4) உழைப்பாளிகள் பெறும் ஊதியத்தைவிட அதிக மதிப்புடைய பொருள் உற்பத்தி செய்கின்றனர். எனவே உபரி மதிப்பு (Surplus Value) உழைப்பவர்களுக்கே சொந்தம். 5) உற்பத்தி மற்றும் வினியோக சாதனங்களைப் பொதுவுடமையாக்குவதன் மூலம் பொருளாதாரச்

குறிப்பு

சுரண்டலை ஒழித்து விடலாம். 6).சுரண்டலற்ற வர்க்கங்கள் இல்லாத சமத்துவ சமுதாயமே கம்யூனிச சமுதாயமாகும்.

இயக்கவியல் பொருள்முதல்வாதம் (Dialectical Materialism) வரலாற்று நிகழ்ச்சிகள் இன்று போல் தான் என்றும் இருந்தனவா? அல்லது அவை காலப்போக்கில் மாற்றமடைந்துள்ளனவா? அல்லது இவை தங்களைப் புதுப்பித்துக் கொண்டு வளர்கின்றனவா? வரலாற்று மாற்றங்களுக்கான உந்து சக்தி எது? இத்தகைய வினாக்களுக்கு இயக்கவியல் பொருள் முதல் வாதத்தின் மூலம் விடை காண முயன்றார் மார்க்ஸ். ஹெகலின் இயக்கவியலுக்கும் (Dialectic) பியூயர்பாக் (Feuerback) கின் பொருள் முதல் வாதத்துக்கும் (Materialism) புதுப்பொருள் விளக்கம் கொடுத்தார். கற்பனைக் காவிய அணுகுமுறையை நிராகரித்துவிட்டுப் பயன்பாட்டுக் கோட்பாட்டு வழி இயக்கவியல் பொருள் முதல் வாதத்தை வரையறுத்தார். காரல் மார்க்ஸ் விண்ணுலகைப் பற்றிக் கூறாமல் மண்ணுலகைப் பற்றிக் கவலைப்பட்டார். மனிதனுக்கும் (Man) பொருளுக்குமிடையே (Matter) உள்ள தொடர்பை ஆராய்ந்தார். முரண்பாடுகளே வரலாற்று மாற்றத்தின் தோற்றுவாய் என்ற முடிவுக்கு வந்தார். இம்முரண்பாடு இரண்டு எதிர்ப் போக்குகளுக்கிடையே ஏற்படும் போராட்டத்தின் விளைவேயாகும். உதாரணமாக நிலமானிய முறை (Feudalism)யும் முதலாளித்துவ முறை (Capitalism)யும் எதிர்மறைப் போக்குகள். முரண்பாடுகளைக் கொண்ட இவ்விரு பொருளாதார முறைகளுக்கிடையே ஏற்படும் மோதலின் விளைவாக சோஷலிசம் (Socialism) பிறக்கிறது. நிலமானிய முறை முதலாளித்துவ முறை - சோஷலிசம். முரண்பாடற்ற கம்யூனிசம் (Communism) இயக்கவியல் போராட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும்.

வரலாற்றுப் பொருள்முதல்வாத விளக்கம் (Materialistic interpretation of History) காரல் மார்க்சுக்கு முன்பிருந்தோர் வரலாற்று வளர்ச்சியைப் பற்றி கூறியவை கருத்து முதல் வாத விளக்கங்களாகவே (Theoretical Explanations) இருந்தன. அவை யாவும் யதார்த்த நிலைக்குப் புறம்பானவை என்று கருதினார் மார்க்ஸ். ஏனெனில் அத்தத்துவஞானிகள் “உலக ஆன்மா”, “தன் முதல் கருத்து”, “பிரபஞ்சப் பேராற்றல்”, இறைத் திட்டம், ”இயற்கை நியதி” போன்ற புலன்களுக்கு அப்பாற்பட்ட ஆற்றல்கள் மக்கள் நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதாக நினைத்தனர். மார்க்ஸ் இத்தகைய ஒரு சார்பான மெய்ப்பொருள் விளக்கத்தை நிராகரித்தார். அதற்குப் பதில் வரலாற்றுப் பொருள் முதல் வாத அணுகுமுறையைக் கொடுத்தார். பொருளாதாரமே வாழ்க்கையின் ஆதாரம் என்பது வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் சாரமாகும். வரலாற்றில் அரசியல், சமய, தத்துவ, கலை சகாப்தங்கள் அனைத்தும் பொருள் உற்பத்தி மற்றும் வினியோக முறைகளின் விளைவுகளேயாகும். பொருளில்லாதோருக்கு இவ்வுலகமில்லை. ஆனால் தொழிற்சாலை முதலாளித்துவம் நிலச் சொந்தக்காரர்களையும் உழைப்பாளிகளையும் வஞ்சித்து “உபரி மதிப்பை” அபகரித்துக் கொள்கிறது. இச்சுரண்டல்

அபகரிப்பே முதலாளித்துவத்துக்கெதிரான அழிவாற்றலாக உருவெடுக்கிறது. முதலாளித்துவத்தின் முரண்பாடுகளான மிகை உற்பத்தியும் வேலையில்லாத் திண்டாட்டமும் பிற நெருக்கடிகளைப் பலப்படுத்தி வர்க்கப் போராட்டத்துக்கு வழிவகுக்கின்றன. இப்போராட்டத்தின் விளைவாக முதலாளித்துவம் தோல்வியுற்று சோஷலிசத்துக்கு வழிவிடும். இறுதியில் வர்க்கப்பேதமற்ற கம்யூனிச பூலோக சுவர்க்கம் தோன்றும். இதுவே காரல் மார்க்சின் வரலாற்றுப் பொருள் முதல்வாத விளக்கமாகும்.

வரலாற்றில் வர்க்கப் போராட்டம் (Class Struggle in History) மானிட வரலாறு வர்க்கப் போராட்டத்தின் வரலாறுதான் என்று கூறுகிறார் காரல் மார்க்ஸ். வர்க்கப் போராட்டமே வரலாற்றுச் சக்கரத்தைச் சுழற்றும் ஆற்றல். உற்பத்திச் சாதனங்களின் தனியுடைமை வர்க்கப் போராட்டத்தைத் தோற்றுவிக்கிறது. மக்களுக்கும் உற்பத்திச் சாதனங்களுக்குமிடையே உள்ள உறவு அப்போராட்டத்தைத் தீர்மானிக்கிறது. இவ்வர்க்கப் போராட்ட வரலாறு பின்வரும் ஆறு கட்டங்களைக் கொண்டது. 1. ஆதிகாலப் பொதுவுடைமை (Primitive Communism) துவக்கத்தில் பொருளுற்பத்திச் சாதனங்கள் சமூகப் பொதுவுடைமையாக இருந்தன. அடிமை முறைச் சமுதாயம் (Society with Slavery). உற்பத்திச் சாதனங்கள் தனியுடைமையாக்கப்பட்டதால் ஆண்டான் - அடிமைச் சமுதாய அமைப்பு உருவானது. 3. நிலமானிய முறை (Feudalism). இடைக்கால நிலமானிய அமைப்பு முறையில் நிலப்பிரபுக்கள் சுரண்டும் வகுப்பாகவும், விவசாயத் தொழிலாளிகள் சுரண்டப்படும் வர்க்கமாகவும் இருந்தனர். 4. முதலாளித்துவம் (Capitalism) தொழில் மய சமுதாயத்தில் (Industrial Society) தொழில் முதலாளிகள் சுரண்டும் வர்க்கமாகவும் தொழிலாளிகள் சுரண்டப்படும் வர்க்கமாகவும் உருமாற்றமடைந்தன. 5. சோஷலிசம் (Socialism) முதலாளித்துவத்துக்கும் தொழிலாளர் வர்க்கத்துக்குமிடையே ஏற்படும் மோதலின் விளைவாக வர்க்கப் போராட்டத்தின் வடிவம் மாறும். பாட்டாளி சர்வாதிகாரம் (Dictatorship of the Proletariat) ஏற்பட்டு முதலாளித்துவம் பின்னுக்குத் தள்ளப்படும். நிலப்பிரபுக்கள் வர்க்கம் மறைந்து விடும். சோஷலிச சமுதாயம் உருவாகும். 6. கம்யூனிசம் (Communism) கம்யூனிசப் பொதுவுடமைச் சமுதாயத்தில் தொழில் விவசாயி, மூளை உழைப்போர் வர்க்க பேதங்கள் நீங்கிவிடும். சமுதாயம் இயக்கம் வர்க்கப் போராட்ட வட்டச் சுழற்சியிலிருந்து விடுபட்டுவிடும். 20.2.6 வரலாற்று வளர்ச்சியின் இயக்கு ஆற்றல்கள் (Moving Forces of Historical Development) மக்கள் சக்தியே வரலாற்று வளர்ச்சியின் இயக்கு சக்தி என்று கூறுகிறார் காரல் மார்க்ஸ். இச்சக்தியே பொருள் உற்பத்திச் சக்தியாகும். சமூக சக்திகள் சமுதாய நலன்கள், அவசியங்கள், குறிக்கோள்கள் ஆகியவற்றை உள்ளடக்கிக் கொண்டுள்ளன. மக்கள் புரட்சிகரமான சித்தாந்தத்தைத் தன்வயப்படுத்திக் கொள்ளும் போது அது பொருளாதார சக்தியாக மாறுகிறது. வரலாறு

**குறிப்பு**

வீரர்களாகவோ அல்லது மாமனிதர்களாகவோ உருவாக்கப்படுவதில்லை. மாறாக வரலாறு மக்கள் ஆற்றலின் பொருளாதார வெளிப்பாடாகும். ஏனெனில் மக்களின் பொருளியல் நலன்கள் தான் வரலாற்று விதிகளின் புறத் தேவைகளைப் பிரதிபலிக்கின்றன. மக்கள் நடவடிக்கைகளின்றிச் சமூக உறவுகளும் வரலாற்று மாற்றங்களும் சாத்தியமில்லை. எடுத்துக்காட்டாக ஒடுக்கப்பட்ட மக்களின் ஓயாத போராட்டத்தால் அடிமை முறையும், பண்ணை முறையும் ஒழிந்தன. தேசிய விடுதலைப் போராட்டங்கள் காலனி ஆதிக்க முறையை முடிவுக்குக் கொண்டு வந்தன. அதேபோன்று தொழிலாளி வர்க்கத்தின் போராட்டம் முதலாளித்துவ முறைக்கு மாற்று முறையாக சோஷலிச கம்யூனிச பொதுவுடைமைச் சமுதாய அமைப்பைக் கொண்டு வரும். எனவே மக்கள் ஆற்றலே வரலாற்று இயக்கத்தின் உந்து ஆற்றலாகும்.

காரல் மார்க்சின் குறைபாடுகள் காரல் மார்க்ஸ் கோட்பாடுகளில் காணப்படும் குறைபாடுகளாவன: 1. வரலாறு பொருளாதாரக் காரணிகளால் மட்டும் உருவாக்கப்படுவதில்லை. கலையுணர்வு, சமய நம்பிக்கை, தேசிய எழுச்சி, கருத்தாற்றல் போன்ற காரணிகளும் சமூக வாழ்க்கையைத் தீர்மானிக்கின்றன. எனவே மார்க்சின் அறிவியல் சோசலிசம் முழுமையான வரலாற்று விளக்கமாகாது. 2. மார்க்சின் இயக்கவியல் பொருள் முதல் வாத விளக்கம் ஐரோப்பிய வரலாற்று அனுபவத்தை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு பின்னப்பட்டதாகும். அதை உலக நாடுகள் அனைத்துக்கும் பொதுவான கோட்பாடாகக் கொள்ள இயலாது. 3. மார்க்சின் ஆறுகட்ட வர்க்கப் போராட்ட வரலாறு மார்க்சிய சித்தாந்தச் சட்டத்துக்குள் அடைக்கப்பட்ட செயற்கையான வரைபடமாகும். இது வரலாற்றுக்குப் புறம்பான வரைவு. 4. மார்க்சின் இயக்கவியல் (னுயையடநஉவஉை) சுழற்சி கம்யூனிச சமுதாயம் ஏற்பட்டவுடன் நின்றுவிடும் என்று கூறுகிறது. இயக்கமற்ற சமுதாயம் தேக்கமுற்ற சமுதாயமாகி விடாதோ? கம்யூனிசம் அதன் எதிர்ப்பு அமைப்பைத் தோற்றுவிக்காது என்பது என்ன நிச்சயம்? கற்பனையுலகு சோஷலிஸ்டுகளைக் குறை கூறிய காரல் மார்க்ஸ் கற்பனைக் கம்யூனிச உலகைப் படைத்துவிட்டார். 5. பொருள் உற்பத்திச் சாதனங்களைக் கட்டுப்படுத்துவதால் தான் முரண்பாடுகள் தோன்றி வர்க்கப் போராட்டம் வெடித்து மாற்றம் ஏற்படுகிறது என்பது வரலாற்று உண்மையல்ல. உதாரணமாக 1688-ல் இங்கிலாந்தில் ஏற்பட்ட புரட்சி, 1789-ல் ஏற்பட்ட சுப் புரட்சி, 1868-ல் ஜப்பானில் ஏற்பட்ட மெய்ஜி புரட்சி வர்க்கப் போட்டங்களின் விளைவல்ல. உற்பத்திச் சாதனங்கள் கட்டுப்பாட்டுக்கும் மலர்ச்சி, அறிவொளி, கற்பனைக் காவியம் போன்ற இயக்கங்களுக்கும் என்ன தொடர்பு? ஒரு சில வாலாற்று முன்னுதாரணங்களைக் கொண்டு வரலாற்றுப் பொது விதிகளை வகுப்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. மனித முன்னேற்றம் தவிர்க்க முடியாதது என்ற மார்க்சின் நம்பிக்கையை நியாயப்படுத்தவே இப்பொதுவிதிகளை வலிந்து வகுத்துள்ளார். 7. வர்க்கப் போராட்டத்தில் பாட்டாளி வர்க்கம் தான் வெற்றி பெறும் என்ற வாதம் வரலாற்று முன்விதிக் கோட்பாடாகும் (ர்ளைவழசைஉயட

னுநவநசஅைைளஅ). இது வரலாற்று விரோதப் போக்காகும். 8. வர்க்கப் போராட்டத்தின் விளைவாக சோஷலிச சமுதாயம் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி போன்ற தொழில் மயமான நாடுகளில் தான் ஏற்படும் என்று முன்கணிப்பு செய்தார் மார்க்ஸ். மாறாக அப்புரட்சி விவசாய நாடான ரஷ்யாவில் தான் ஏற்பட்டது. வரலாற்றில் முன் கணிப்பு செய்ய முடியாது. 9. ""பாட்டாளிகள் சர்வாதிகாரம்" பொதுவுடமைச் சமுதாயத்தை ஏற்படுத்தும் என்பதற்கு உத்தரவாதமல்ல என்பதற்கு ரஷ்யாவே எடுத்துக்காட்டாகும். அண்மையில் சோவியத் ரஷ்ய சோஷலிசக் கோட்டை சரிந்தது அதற்கான சான்று. 10. வரலாற்றில் மக்கள் சக்தியே மாபெரும் சக்தி என்று கூறும் காரல் மார்க்சின் கோட்பாடு சர்வாதிகார அமைப்புக்கே சாதகமாக உள்ளது. தேன் கூட்டைப் போன்ற கம்யூனிசப் பொதுவுடமைச் சமுதாயத்தில் உரிமை உணர்வுக்கு இடமேயில்லை. மனித ரோபோக்களைக் (Human Robots) கொண்ட இயந்திரத்தனமான அமைப்பு அது.

**மதிப்பீடு**

காரல் மார்க்ஸ் மனித இன முன்னேற்றத்தை மையமாகக் கொண்டு சிந்தித்த மாபெரும் வரலாற்றுத் தத்துவமேதை. தற்கால வரலாற்றுச் சிந்தனை வளர்ச்சியில் இவரது தாக்கம் அளப்பரியது. மார்க்சின் வரலாற்று விளக்கம் சமுதாய மாற்றங்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவியல் கருத்துரையாகும். இது உலக முக்கியத்துவமுடைய முதல் முழுமையான வரலாற்று இயக்கவியல் பொருள்முதல்வாத விளக்கமாகும். அரசியல் மற்றும் பொருளாதார வரலாற்றில் இயக்கவியலைப் பயன்படுத்தி ஹெகலை மிஞ்சி வெற்றி கண்டவர் மார்க்ஸ் என்று கூறுகிறார் காலிங்வுட். வரலாற்றுப் பொருள்முதல்வாதத் தத்துவ ஞானம் ஒரு மகத்தான அறிவியல் சாதனையாகும் என்று கருதுகிறார் வி.கிரபிவின். மார்க்சின் வரலாறு பற்றிய கருத்தியல் " மிக முக்கிய ஆய்வு" என்று மதிப்பீடு செய்கிறார் பெர்ட்ராண்டு ரஸ்ஸல். வரலாற்றுத் தத்துவத்தை அரசியல் நடவடிக்கைக்கான செயல் திட்டமாக மாற்றிய பெருமை மார்க்சையே சேரும் என்றுப் புகழாரம் சூட்டுகிறார் அர்னால்டு டாயின்பி. அரிஸ்டாட்டிலுக்குப் பிறகு சமூக அறிவு முழுவதையும் திறனாய்ந்து ஒன்றுபடுத்திய அதிசயத்தை நிகழ்த்தியவர் காரல் மார்க்ஸ் என்று பாராட்டுகிறார்ஷேக் அலி.

## 7.5. லியோபோல்டு வான் ராங்கே Leopold Von Ranke, (1795 - 1885)

"அறிவியல் வரலாற்றின் தந்தை" ராங்கே ஜெர்மனியின் வியத்தகு அறிவியல் வரலாற்றாளர் ஆவார். இவர் வசதியான லூதரினிச சமயத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் குடும்பத்தில் பிறந்தார். லீப்சிக் மற்றும் பெர்லின் பல்கலைக் கழகங்களில் இறையியல், மொழியியல், செம்மரபு

இலக்கியம் கற்றார். பிராங்பர்ட் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுப் பேராசிரியராகப் பணியாற்றினார். அப்போது அவர் கருத்தரங்கு முறையை (Seminar Method) வெற்றிகரமாகக் கையாண்டு பிரபலப்படுத்தினார். இவர் கான்ட், பிக்டே, நீபர் போன்றோரின் வரலாற்றுச் சிந்தனையால் கவரப்பட்டார். இளவரசர் மெட்டர்னிக்கின் உதவியோடு பெர்லின், வியன்னா, பாரிஸ், ரோம், வெனிஸ் சென்று அரசு ஆவணங்களை ஆய்வு செய்தார். வரலாறு சஞ்சிகையின் பதிப்பாசிரியராக இருந்தார். 70-வது வயதில் "வான் " என்ற கவுரவ பிரபுப் பட்டம் வழங்கி பெருமைப்படுத்தப்பட்டார். அமெரிக்க வரலாற்றுக் கழகத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பணி ஓய்வுக்குப் (1870) பின் வரலாற்று ஆய்விலும் வரைவிலும் ஈடுபட்டார். ராங்கே "அறிவியல் வரலாற்றின் தந்தை" (Father of scientific History) என்று அழைக்கப்பட்டார்.

ராங்கேயின் படைப்புகள் ராங்கே வளமான வரலாற்று வரைவாளர். இவரது சிறந்த படைப்புகளாவன: 1.திறனாய்வுக் கட்டுரைகள் 2).போப்பாண்டவர்களின் வரலாறு 3). ஜெர்மானிய சமய சீர்திருத்த வரலாறு, 4). இலத்தீன மற்றும் டியூடானிய நாடுகளின் வரலாறு, 5). செர்பியாவின் வரலாறு, 6) பிரான்சின் வரலாறு, 7). இங்கிலாந்தின் வரலாறு. 8).பிரஷ்யாவின் வரலாறு, 9).உலக வரலாறு. ராங்கேயின் வரலாற்று வரைவு வீச்சு 15-ம் நூற்றாண்டிலிருந்து 18-ம் நூற்றாண்டு வரை விரிவானது. ராங்கேயின் வரலாற்றுப் பங்களிப்புகள் ராங்கே வரலாற்று ஆய்வையும் வரைவையும் வாழ்நாள் பணியாக (Career)க் கொண்டார். அவரது எண்ணங்கள் அறிவாழமிக்கவை. அறிவியல் அடிப்படையைக் கொண்டவை, விரிவான பரப்பெல்லை உடையவை. ராங்கேயின் வரலாற்றுப் பங்களிப்புகள் வருமாறு: 1. “ஆவணமின்றேல் வரலாறில்லை” (No document, no history) என்றார் ராங்கே.

ஆவணச் சான்றுகளின் அடிப்படையில் தான் வரலாறு வரையப்படுதல் வேண்டும் என்பதை வலியுறுத்தினார். ஆவணங்களைத் தேடித் திரட்டி, சான்றுகளைக் கவனமாகச் சேகரித்து, சரிபார்த்து, பகுத்தாய்ந்து, திறனாய்வு செய்து, நம்பகமானவற்றை மட்டுமே பயன்படுத்தினார். அதன் மூலம் அவர் திறனாய்வு வரலாற்று வரைவியல் சகாப்தத்தை (Era of Critical Historiography)த் துவக்கினார். 2. ராங்கே " நிகழ்ந்தவற்றை நிகழ்ந்தவாறே கூற வேண்டும்" என்ற நியதியை ஏற்படுத்தினார். அவரே இந்நியதியைக் கடுமையாகக் கடைப்பிடித்தார். இவருக்கு முன்பிருந்தோர் வரலாற்றை ஒழுக்கத் தீர்ப்புகளை வழங்கவோ , இறை அல்லது இயற்கைத் திட்டத்தை விளக்கவோ, எதிர்காலத்தை முன்கணிப்பு செய்யவோ அல்லது அவர்களின் சொந்தக் கோட்பாடுகளை நியாயப்படுத்தவோ முயன்றனர். ராங்கே அப்போக்கை மாற்றினார். கடந்த காலத்தை நம்பிக்கை, கற்பனை, தப்பெண்ணம் ஆகியவற்றினின்றும் காப்பாற்றினார். சரியான சார்பற்ற வரலாற்று வரைவுக்கு வழிவகுத்தார். 3. ராங்கே வரலாற்றைச் சுயேச்சையான அறிவு ஆய்வுத் துறையாக

குறிப்பு

(Autonomous Field of Study) மாற்றினார். வரலாற்று வரைவை சமய - இறையியல் - தத்துவப் பிடியினின்றும் விடுவித்தார். வரலாற்றுக்குரிய சிறப்பிடத்தையும், செல்வாக்கையும், அங்கீகாரத்தையும் பெற்றுத் தந்தார். வரலாற்று அறிவை சிறப்புப் பயிற்சியாலும் முயற்சியாலும் மட்டுமே பெற முடியும் என்ற நிலையை உருவாக்கினார். 4. ராங்கே வரலாற்றுக் காலங்கள் அனைத்துக்கும் சம முக்கியத்துவம் அளித்தார்.

ஐரோப்பிய வரலாற்றுக்குச் சிறப்பிடம் கொடுத்த மரபை நிராகரித்தார். ஏனெனில் வரலாறு புவியியல், இன, நாட்டு எல்லைகளைக் கடந்தது. ஒவ்வொரு வரலாற்றுக் காலமும் தனித்தன்மை (Unique)யுடையது மதிப்புகளாளும் (Values), பங்களிப்புகளாலும் (Contributions) மாறுபடுவது. எனவே பன்னாட்டு வரலாறுகளும் பாரபட்சமின்றி வரையப்படுதல் வேண்டும் என்பதை அடிக்கோடிட்டுக் காட்டினார். அதுமட்டுமல்ல கிரேக்க - ரோமானிய - ஜெர்மானிய வரலாற்றுக் கூறுகளின் கலப்பே ஐரோப்பிய வரலாறு என்பதை எடுத்துக் காட்டினார். ராங்கேயின் ”வரலாற்றுச் சமத்துவ” அணுகுமுறை கீழை நாடுகளின் கலாச்சாரங்களைச் சரியாகப் புரிந்து கொள்வதற்குக் காரணமாயிருந்தது.

வரலாறு என்பது கருத்துக்களின் (Ideas) வெளிப்பாடு என்று கூறுகிறார் ராங்கே. கருத்துக்களுக்கிடையேயான பரிவர்த்தனையே வரலாறு. வரலாற்று வளர்ச்சியை (Historical Progress)க் கருத்துக்களின் மூலமாக வெளிப்படும் ”கடவுளாக”க் கருதினார் ராங்கே. குறிப்பிட்ட கருத்தைக் குவிமையமாகக் கொண்டிருப்பதால்தான் ஒவ்வொரு வரலாற்றுக் காலமும் தனித்தன்மையைக் கொண்டிருப்பதாகக் கூறினார். உதாரணமாக மறுப்பியக்கம் (Protestantism) ஒரு கருத்தின் உதவி வெளிப்பாடேயாகும் என்றார் ராங்கே. 6. ராங்கே வரலாற்றுத் தொடர்ச்சி (Historical continuity)க்கு முக்கியத்துவமளித்தார்.

வரலாறு தனித்தனி நாடுகள், நிகழ்ச்சிகள், மாமனிதர்கள் மற்றும் காலங்களைப் பற்றிய வரைவு மட்டுமல்ல இவற்றுக்கிடையேயான தொடர்புகளையும் தெளிவுபடுத்துகிறது. அப்போது தான் கடந்த காலத்துக்கும் நிகழ்காலத்துக்குமிடையேயான உயிரோட்டமுள்ள ஒற்றுமையைக் கண்டறிய முடியும். இக்கருத்தே பின்னர் வரலாற்றியம் (Historicism) என்று விரிவடைந்தது. 7. ராங்கே வரலாற்றுச் செயல்பாங்கு (Historical Process)ச் சிறப்பிடமளித்தார். மனித இன வரலாறே முழுமையான வரலாறு எனக் கருதினார் ராங்கே. உலக வரலாற்றில் தான் ”பொதுவான வரலாற்று வாழ்க்கை” (General Historical Life)யைக் காண முடியும் என்று நம்பினார். வரலாற்றின் போக்கை இடையறாச் செயல்பாங்காகச் சித்தரித்தார். ராங்கே தனது 85வது வயதில் உலக வரலாற்றை இரண்டு தொகுதிகளில் எழுதி இக்கருத்துக்கு வடிவம் கொடுத்தார். 8. ராங்கே அறிவியல் வரலாற்றைச் சுவையோடு இலக்கிய நடையில் எழுத முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார். வரலாற்று எழுத்து நடையும் ஆய்வு முறையைப் போன்றே

முக்கியமானது என்பதை வலியுறுத்தினார் ராங்கே. ராங்கேயின் குறைபாடுகள் அறிவியல் வரலாற்றுக்கு அடித்தளமிட்ட ராங்கேயிடம் பல குறைகள் காணப்பட்டன : 1.நிகழ்ந்தவற்றை நிகழ்ந்தவாறே கூற வேண்டும் என்று வற்புறுத்திய ராங்கே கடைசி வரை ஒரு லூதரியனாகவே (Lutherian) இருந்தார். அவருடைய சமய நம்பிக்கை சார்புடைமைக்குக் காரணமாயிருந்தது. 2.புதுமையைச் செய்ய விரும்பிய ராங்கே மரபுவழி அரசியல் வரலாற்றையே எழுதினார். சமூக, பொருளாதார, கலாச்சார கூறுகளைப் புறக்கணித்தார். 3.பிரஷ்ய நாட்டின் பெருமையைப் பேசினாரேயன்றி சிறப்பான தத்துவ விளக்கம் எதையும் கருத்துக் கொடையாகக் கொடுக்கவில்லை. 4.ராங்கே ஆவணச் சான்றுகள் என்ற சிறைக்குள் அடைபட்டுவிட்டதால் வரலாற்றில் தற்செயல் காரணிகளுக்கு (Chance Factors) உரிய முக்கியத்துவத்தைக் கொடுக்கத் தவறிவிட்டார். 5.அறிவியல்வாதியான ராங்கே ”வரலாற்றில் கடவுள் உறைகிறார்““ என்று கூறுவதும், அறிவை (Reason) உள்ளுணர்வோடு (Intitution) சேர்ப்பதும் குழப்பத்தை ஏற்படுத்துகிறது. 6.ராங்கேயின் சமகால ஐரோப்பிய பழமைவாதிகளின் மனதைப் புண்படுத்தக்கூடிய வரலாற்றுப் பகுதிகளை எழுதுவதைத் தவிர்த்தார் என்று கூறுகிறார் பியர்டு. இது ராங்கேயின் நேர்மையை சந்தேகிக்கச் செய்கிறது.

**மதிப்பீடு**

ராங்கே தற்கால வரலாற்றாளர்களுள் தலைசிறந்தவர். இவரது அறிவியல் வரலாற்று ஆய்வு முறையியல் (Research Methodology in Scientific History) வரலாற்றுத் திறனாய்வில் திருப்புமுனையை ஏற்படுத்தியது. நிகழ்ந்தவற்றை நிகழ்ந்தவாரே வரைய வேண்டும் என்று வற்புறுத்தியதன் மூலம் ராங்கே கடந்த காலத்தைப் பற்றிய ஆய்வை நிகழ்கால நிர்ப்பந்தங்களினின்றும் பிரித்து விட்டார். வரலாற்றுக் கருத்தரங்கம், சஞ்சிகை, மூலச் சான்றுகள், திறனாய்வு, சார்பற்ற வரைவு ஆகியவற்றின் மூலம் ராங்கே பெர்லின் புரட்சி செய்தார். உட்புறத் திறனாய்வு (Internal Criticism) மூலம் ஆதார அறிவியலை (Science of Evidence)த் தோற்றுவித்தார். யாவற்றுக்கும் மேலாக வரலாற்றைப் புரியும்படி , விரும்பிப் படிக்குமாறு எழுதினார். குறை நீக்கிப் பார்த்தால் ராங்கே ”திறனாய்வு வரலாறு“ (Critical History) தலை நிமிர்ந்து நிற்கக் காரணமாக இருந்தார் என்பது தெளிவு. அதனால் தான் “ராங்கே தற்கால வரலாற்றாளர்கள் அனைவருக்கும் தலைவராக உள்ளார்““ என்று கூறுகிறார் கூச் (G.P.Gooch).

குறிப்பு

## 7.6. ஜார்ஜ் வில்ஹெம் ஹெகல் George Wilhelm Hegal (1770 - 1831)

தத்துவச் சிகரம் ஹெகல் ஜெர்மனியில் ஸ்டட்கார்ட் (Stuttgart) என்ற நகரில் வைதிக மறுப்பியக்கச் சமய மத்தியதரக் குடும்பத்தில் பிறந்தார். இவரது பெற்றோர் சொத்தை விற்று இவரைப் படிக்க வைத்தனர். பெர்லினும், பிராங்பர்ட்டிலும் ஆசிரியராகப் பணியாற்றினார். நூலகங்களை நன்கு பயன்படுத்தினார். இலத்தீன், இறையியல், தத்துவம், வரலாறு ஆகிய துறைகளில் புலமை பெற்றார். நண்பர் ஷெல்லிங்கின் ஆலோசனைப்படி நூலக நகரமான ஜேனா (Jerma) சென்று அங்கிருந்த பல்கலை கழகத்தில் சேர்ந்தார். நெப்போலியன் ஜேனாவின் மீது படையெடுத்த போது ஹெகல் அந்நகரைவிட்டு வெளியேற வேண்டியதாயிற்று. பின்னர் பத்திரிக்கைப் பதிப்பாசிரியராகவும் ஹீடல்பர்க் மற்றும் பெர்லின் பல்கலைக் கழகங்களிலும் பேராசிரியராகப் பணியாற்றினார். இவரது முக்கியப் படைப்புகள் ஏசுநாதரின் வாழ்க்கை, ஜெர்மனியின் அரசியல் அமைப்புச் சட்டம், தத்துவ அறிவியல்கள் பற்றிய கலைக் களஞ்சியம், மனக் கோட்பாடு, வலதுசாரித் தத்துவம், அழகுணர்ச்சியியல், சமயத் தத்துவம், தத்துவ வரலாறு, வரலாற்றுத் தத்துவம். ஹெகல் கற்பனைக் காவிய இலட்சியவாதத்தின் சிகரமாகத் திகழ்ந்தார். ஹெகலின் வரலாற்றுத் தத்துவம் (Hegal's Philosophy of History) ஹெகல் இறந்தபின் அவரது மாணவர்கள் தாங்கள் கவனமாக எடுத்த குறிப்புகளையும் ஹெகலின் சொற்பொழிவுகளையும் அக்கறையோடு சேர்த்து நான்கு நூல்களை வெளியிட்டனர். அவற்றுள் வரலாற்றுத் தத்துவச் சொற்பொழிவுகள் (Lectures on the Philosophy of History) வரலாற்று மாணவர்களுக்கு முக்கியமானது. கற்பனைக் காவிய இலட்சியத்துக்கு ஹெகலின் வரலாற்றுப் பங்களிப்புகள் வருமாறு: 1. வரலாறு என்பது அறிவின் அல்லது எண்ணத்தின் வரலாறேயாகும். அறிவு என்பதற்கு ணநவைபநளைவ என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். இச்சொல் பிரபஞ்சப் பேரறிவையும் குறிப்பிடுவதாக உள்ளது. அதாவது மனித அறிவு (Human Reason) பிரபஞ்ச அறிவின் (Universal Reason) பிரதிபலிப்பாகும். எனவே வரலாற்று நிகழ்வுகள் அனைத்தும் அறிவின் வெளிப்பாடுகளேயாகும். 2. வரலாறு என்பது அறிவும் உள்ளுணர்வும் மோதும் விளையாட்டுக் களமாகும்.

வரலாற்று நிகழ்ச்சிகள் அறிவுக்கும் உணர்ச்சிக்குமிடையே ஏற்படும் மோதல்களின் விளைவேயாகும் தற்செயல் நிகழ்வுகள் அல்ல. இவை கால - இட அளவில் தர்க்க ரீதியாக ஏற்படும் மாற்றங்களாகும். இத்தர்க்கச் செயல்பாங்கில் (Logical Process) கடந்த காலமும் எதிர் காலமும் சங்கிலித் தொடராக உள்ளன. 3. அறிவின் சூழ்ச்சி (Cunningof Reason) பற்றிய ஹெகலின் கருத்து வரலாற்றுத் தத்துவ முக்கியத்துவம் வாய்ந்தது. அறிவற்ற உணர்ச்சியும், உணர்ச்சியற்ற அறிவும் மனிதனை மிருகமாக்கிவிடும். எனவே மனித அறிவு மனித

உணர்வைத் தன் கருவியாகக் கொண்டு ஒழுக்க விடுதலை“ (Moral Freedom) என்ற குறிக்கோளை அடைகிறது. அதாவது அறிவு சூழ்ச்சி செய்து உணர்ச்சியைத் தன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளப் பயன்படுத்திக் கொள்கிறது. வேறுவிதமாகக் கூறுவதாயின் உணர்ச்சிமயமான மனிதன் அறிவுக்குக் கட்டுப்பட்டு அறிவு காட்டும் வழி சென்று விடுதலை அடைகிறான். ஹெகலின் அறிவுபூர்வமான அணுகுமுறை மனிதனைப் பற்றிய புதிய கண்ணோட்டத்தைக் கொடுப்பதாகக் கூறுகிறார் காலிங்வுட். 4. இயற்கை (யேவரசந)யும் வரலாறும் வெவ்வேறானவை. இயற்கைக்கும் காலம் - இடம் தொடர்பான வரலாறு கிடையாது. இது சுழலும் (Cyclical) தன்மையுடையது. திரும்ப திரும்ப மாற்றமின்றி இயந்திரத்தனமாக நிகழ்ந்து கொண்டிருப்பது. உதாரணமாக சூரியன் தோன்றி மறைவது, அலைகள் எழுந்து விழுவது, புவி ஈர்ப்புச் சட்ட (Law of Gravitation)த்தின் மூலம் பொருள்கள் மேலிருந்து கீழ்நோக்கிச் செல்வதை விளக்கலாம். மாறாக வரலாற்று நிகழ்வுகள் விண்மீன்கள், கோள்கள், கடலலைகள் போன்றவையல்ல. இவை தனித்தன்மை கொண்டவை, மாறிக் கொண்டிருப்பவை. புரட்சிகளும் போர்களும் ஒன்று போல் தோன்றினாலும் புதுத் தன்மைகளைக் கொண்டவை. அதற்குக் காரணம் மனித அனுபவம்தான். எனவே ஒவ்வொரு வரலாற்று மாற்றத்தின் போதும் திருகுச் சுற்று (Spiral) மூலம் முன்னேற்றம் ஏற்படுகிறது. 5. வரலாற்றுக்கு உட்பக்கம் (Inside), வெளிப்பக்கம் (Outside) ஆகிய இரு பக்கங்கள் உள்ளன. வரலாற்றின் உட்பக்கம் எண்ணங்களோடு தொடர்புடையது. அனைத்து வரலாறும் எண்ண த்தைப் பற்றிய வரலாறு தான் (All History is the History of Thought) என்று கூறுகிறார் ஹெகல். கடந்த கால மக்கள் என்ன செய்தார்கள் என்று அறிவதை விட அவர்கள் செய்ததைப் பற்றி என்ன எண்ணினார்கள் என்பதைத் தெரிந்து கொள்வதே முக்கியம். எண்ணங்களின்றி நிகழ்ச்சிகள் இல்லை. எனவே எண்ணங்களே நிஜம். வரலாற்றின் வெளிப்பக்கம் எண்ணங்களின் வெளிப்பாடான நிகழ்ச்சிகளைப் பற்றியது. இது காலம் - இடம் ஆகியவற்றோடு தொடர்புடையது. நிகழ்ச்சிகள் எண்ணங்களின் நிழல்களாகும். எனவே வரலாற்றாளர்கள் எண்ணங்களை முதலில் சான்றுகளைக் கண்டறிந்து அதன்பின் எண்ணங்களின் புறவெளிப்பாடான நிகழ்ச்சிகளை விவரிக்க வேண்டும். அப்படிச் செய்யும் போது வரலாற்றாளர் கடந்த காலத்தைப் பற்றி மட்டுமே ஆய்வு செய்ய முடியுமேயன்றி எதிர் காலத்தைப் பற்றி முன்கணிப்பு செய்ய இயலாது. 6. வரலாறு என்பது முன்னேற்றம் (History is Progress).

ஹெகல் வரலாற்று முன்னேற்றத்தை இருத்தல் (Being), சிறத்தல் (Becoming) தத்துவக் கோட்பாட்டைக் கொண்டு விளக்குகிறார். இது ”உள்ளது சிறத்தல்” சித்தாந்தமாகும். தண்ணீர் நீராவியாகவோ அல்லது பனிக்கட்டியாகவோ மாறுகிறது. எனினும் நீராவியோ பனிக்கட்டியோ தண்ணீர் இல்லையல்லவா? அதேபோன்று எண்ணம் செயலாகும் போது மனிதன் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்குச் செல்கிறான். மனித

குறிப்பு

இனம் "இருத்தல்" நிலையிலிருந்து "சிறத்தல் " நிலைக்குச் செல்லாவிடில் மாற்றமோ முன்னேற்றமோ இருக்காது. தேங்கிவிடும். இருத்தல் சிறக்கும் போதுதான் மனித இனம் இயக்க ஆற்றல் (Dynamic) பெறுகிறது. வளர்ச்சியடைகிறது. முன்னேறுகிறது. 7. வரலாற்று முன்னேற்றம் இயக்கவியல் (Historical Progress is Dilectic) ஆகும். போராட்டமே (struggle) முன்னேற்றத்துக்கான விசையாகும். வரலாற்று இயக்கம் மூன்று தொகுதிகளைக் (Triad) கொண்டது. 1.கருத்து (Thesis), 2.எதிர்க் கருத்து (Anti-thesis), 3. பொதுக் கருத்து (Synthesis) இதை விளக்கம் (Exposition) எதிர் விளக்கம் (Opposition) சமரசம் (Reconciliation) என்றும் கூறலாம். ஒவ்வொரு கருத்தும் எதிர் கருத்துக்கான விதையைத் தன்னகத்தே கொண்டுள்ளது. கருத்து எதிர்க்கருத்து மோதலின் விளைவாகப் பொதுக் கருத்து உருவாகிறது. கணவன் கருத்தாகவும் மனைவி எதிர்க்கருத்தாகவும் இருந்தால் குழந்தை பொதுக் கருத்தாகும். எதிர்ப்பு ஏற்றுக் கொள்ளப்படும் போது விவேகம் பிறக்கிறது. வெற்றி முழுமை பெறுகிறது. அதற்குக் காரணம் பொதுக் கருத்தானது கருத்து மற்றும் எதிர்க் கருத்தின் தன்மைகளைக் கொண்டிருப்பதேயாகும். பின்னர் பொதுக்கருத்தே கருத்தாக இருந்து எதிர்க் கருத்தைத் தோற்றுவிக்கிறது. இதைக் கருத்து எதிர்க் கருத்து - பொதுக் கருத்து என்ற சமநிலைக் கூற்றாகக் கொள்ளலாம்.

ஹெகல் முப்பக்க முரண்பாட்டு இயக்கவியலைக் கொண்டு வரலாற்று நிகழ்ச்சிகளை விளக்கியுள்ளார். உதாரணமாக வல்லாட்சிக்கும் (Despotism) சுதந்திரத்துக்குமிடையே (Freedom) ஏற்பட்ட மோதலால் சட்டத்துக்குட்பட்ட முடியாட்சி (Constitutional Monarchy) தோன்றியது. அதே போன்று கிரேக்க - ரோமானிய செம்மரபுக் காலத்துக்கும் இடைக்காலக் கிறித்துவத்துக்குமிடையே ஏற்பட்ட போராட்டத்தால் மறுமலர்ச்சிக்காலம் பிறந்தது. பழமைவாதமும் (Conservatism) புதுமைவாதமும் மோதும் போது தாராளவாதம் (Liberalism) தோன்றுகிறது. இதுவே வரலாற்று முன்னேற்றத்தின் இயக்கவியலாகும். 8. வரலாற்று வீரர்கள் (Heroes of History). மாமனிதர்கள் காலத்தின் தேவையைக் கண்டறியும் நுண்ண றிவு படைத்தவர்கள். இவர்கள் பிரபஞ்ச அறிவின் (Zeitgeist) எதிர்பார்ப்புக்கேற்ப செயல்படுவர். காலம் கனிந்துள்ளதா என்பதைக் கண்டறிவர். இவர்கள் பழுக்கக் காய்ச்சிய இரும்பை அடித்துக் கருவிகள் செய்யும் கொல்லர்களைப் போன்றவர்கள். காலத்தின் கருப்பையில் வளரும் வரலாற்றுச் சிசுவைப் பிரசிவிப்பதற்கு உதவும் செவிலித்தாய்களுக்கிணையானவர்கள். வரலாற்று வீரர்கள் மகிழ்ச்சி விற்பனையாளர்கள் (Peddlers of Happiness) அல்லர். ஒரு தலைமுறையினர் துன்பப்பட வேண்டியிருப்பினும் காலத்துக்கேற்ற கோலத்தைக் கட்டாயப்படுத்தத் தயங்காதவர்கள். உலக வரலாறு மகிழ்ச்சி மேடையன்று. மகிழ்ச்சி மிக்க காலங்களெல்லாம் வரலாற்றின் வெற்றி ஏடுகளாகும். ஏனெனில் அக்காலங்களில் மக்கள் ஒற்றுமையோடு வாழ்ந்துள்ளனர். எதிர்ச் செயலற்ற காலம் வரலாற்றின் ஊக்க காலமாகும்

என்று கூறுகிறார் ஹெகல். 9. வரலாற்றுக் காலங்கள் (Periods of History) பிரபஞ்ச அறிவாற்றலுக்கு உட்பட்டது.

**குறிப்பு**

பிரபஞ்ச அறிவின் பிரதிபலிப்பான மனித அறிவு தன் சூழ்ச்சிக்கு உணர்ச்சியை உட்படுத்தி மனித முன்னேற்றத்துக்கு வழி செய்கிறது. இக்கண்ணோட்டத்தில் ஹெகல் கடந்த காலத்தைப் பின்வரும் மூன்று காலகட்டங்களாகப் பிரித்துள்ளார். 1).கிழக்கத்திய காலம் (The Oriental Age) இக்காலத்தில் ஒரு ஆட்சியாளரிடம் சர்வ அதிகாரமும் கொடுக்கப்பட்டிருந்தது. 2). கிரேக்க ரோமானியர் காலம் (The GracoRoman Age) இக்காலத்தில் அடிமைகளைக் கொண்டு ஆட்சி செய்தோரிடம் சர்வ அதிகாரமும் வழங்கப்பட்டது. 3). கிறித்துவக் காலம் (The ChristianAge) இக்காலத்தில் மனித குலத்தின் ஆன்ம விடுதலைக்கு வழி வகுக்கப்பட்டது. இக்காலங்களில் வரலாற்று வளர்ச்சி தடைப்பட்டாலும் மானிட முன்னேற்றம் தடையின்றி சென்றது. 10. நாடு தெய்வீகமானது (The State is Divine) என்பது ஹெகலின் கற்பனைக் காவிய இலட்சியக் கருத்தாகும். ஹெகலின் இயக்கவியல் (Dilectic) நாட்டில் நிறைவு பெறுகிறது. நாடு தான் மனித சாதனையின் சிகரம். நாடுதான் குழப்பத்துக்கிடையே ஒழுங்கை ஏற்படுத்துகிறது. இதுவே சுதந்திரத்தின் சங்கமம். ஒழுக்க உயர்வுக்குக் காரணமான ஆன்மீகம் நாட்டை தெய்வீகத் தன்மை பெறச் செய்கிறது. ஒரு தலைமுறை சேமிக்கும் அறிவும் ஆன்மீகமும் அடுத்த தலைமுறை சுவீகரிக்கும் சொத்தாகிறது. இப்பரம்பரைச் சொத்தே சமூகத்தின் ஆன்மாவாக, ஆன்மீகப் பொருளாக உள்ளது என்று கூறுகிறார் ஹெகல். ஹெகலின் குறைபாடுகள் ஹெகலின் கற்பனைக் காவிய இலட்சிய வாதத்தில் காணப்படும் குறைபாடுகளாவன: 1.ஹெகலின் தத்துவ விளக்கத்தில் புதுமை எதுவும் இல்லை. இவர் ஹெர்டர், கான்ட், ஷில்லர், பிக்டே, ஷெல்லிங் போன்றோரின் தத்துவத் தோள் மீது நிற்பதால் மிகவும் உயரமாகத் தெரிகிறார். 2. வரலாற்றை இயற்கையினின்றும் வேறுபடுத்திக் காட்டும் ஹெகல் வரலாற்றுப் பரிணாம வளர்ச்சியை மறுப்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. 3. ஹெகலின் ”அறிவின் சூழ்ச்சி” பற்றிய கருத்து அறிவை மனித வாழ்க்கைக்கு வெளியே கொண்டு செல்கிறது. அறிவு வெளியில் எங்கோ இருந்து கொண்டு மனித நடவடிக்கைகளை நெறிப்படுத்துகிறது என்ற வாதம் தவறானது. 4.வரலாறு தர்க்க ரீதியானது என்ற கருத்து வரலாற்று நிகழ்ச்சிகளை முன் விதிக் கோட்பாட்டுக்கு உட்படுத்துகிறது. இவரது இயக்கவியல் (Dialectic) எதிர்ப்பை (Opposition) வேறுபாடு (Distinction) என்று குழப்புகிறது. 5. ஹெகல் கலாச்சாரத்தைப் புறக்கணித்துவிட்டு சமயச் சாயம் பூசப்பட்ட அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார். 6.ஹெகல் பிரஷ்யாவுக்கு முன்னுரிமை கொடுப்பதற்காக வரலாறு நிகழ்காலத்தில் முடிவதாக நியாயப்படுத்துகிறார். இவர் நாட்டை வழிபாட்டுப் பொருளாக்கி விடுகிறார். ஹெகலின் வாதம் பிஸ்மார்க்,

இட்லர், முஸோலினி, லெனின் போன்றோருக்கு வழிகாட்டுவதாக இருந்தது.

**மதிப்பீடு**

ஹெகல் ஒரு சகாப்தம். கற்பனைக் காவிய இயக்கம் ஹெகலின் தத்துவத்தில் முழுமை பெற்றது. இவரது சிந்தனையின் வீச்சும், வேகமும் வியப்புக்குரியது. பிறரது கருத்துக்களைக் கொண்டு ஹெகல் புதிய வரலாற்றுத் தத்துவ விளக்கமளித்தார். செயலறிவு சார்ந்த (Empirical) வரலாற்று ஆய்வைத் தத்துவார்த்த (Philosophical) சிந்தனை அளவுக்கு உயர்த்தினார். வரலாற்றை உறுதிப்படுத்தினால் மட்டும் போதாது வரலாற்று நிகழ்வுகளுக்கான காரணங்களையும் புரிந்து கொள்ள வேண்டும் என்ற ஹெகலின் உறுதிப்பாடு கருத்துப் புரட்சியை ஏற்படுத்தியதாகக் கூறுகிறார் காலிங்வுட். இலக்கியத்தில் கெத்தே, இசையில் பித்தோவன் போன்று ஹெகல் தத்துவ உலகின் முடிசூடா மன்னராக இருந்தார் என்று பாராட்டுகிறார் வில் டூரண்ட்.

## 7.7. வின்செண்ட் ஆர்தர் ஸ்மித (Vincent Arthur Smith)

ஸ்மித் ஜுன் மூன்றாம் நாள் 1843 ஆம் ஆண்டு டியூப்லின் நகரில் பிறந்தார். இது அயர்லாந்தில் உள்ள ஒரு நகரமாகும். இவருடைய தந்தை ஒரு சிறந்த அறிஞர் ஆவார். இளம் பருவத்தில் இருந்தே வின்செண்ட் ஸ்மித் நாணயங்கள் மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சி போன்றவற்றில் அதிக கவனத்தைச் செலுத்தினார். டூப்லின் நகரில் உள்ள ட்ரினிட்டி கல்லூரியில் முதுநிலைப்பட்டமும், பின்னர் டூப்லின் பல்கலைக் கழகத்தில் டிலிட் பட்டமும் பெற்றார். 1869 ஆம் ஆண்டு இந்திய அரசுப் பணியில் சேர்ந்தார். இந்தியாவில் வடமேற்கு மாநிலங்களில் முக்கியமாக உத்திரபிரதேசத்தில் பல நிர்வாகப் பதவிகளை வகித்தார். அதைத் தவிர அவர் அப்பகுதியில் தலைமைச் செயலாளராகவும், ஆணையராகவும் பணிபுரிந்தார். முக்கியமாக வருவாய்த்துறையில் பணிபுரிந்து கொண்டிருந்த பொழுது கங்கைச் சமவெளியில் தொல்பொருள் ஆராய்ச்சியை மேற்கொண்டார். இவ்வகையில் இந்திய வரலாற்றைப் பற்றிய முழுமையான ஆய்வில் ஈடுபட்டார். அதன் விளைவாக அவர் ஒரு சிறந்த இந்திய வரலாற்று ஆசிரியராகத் திகழ்ந்தார்.

இவர் எழுதிய வரலாற்றில் குறைகள் இருப்பினும் ஆர். சி. மஜும்தார் போன்ற வரலாற்று ஆசிரியர்கள் ஜேம்ஸ்மில்லை வரலாற்றை எழுதுவதற்கு மில் இங்கிலாந்தில் இந்தியாஹவுசில் இருந்த ஆவணங்களை முழுமையாகப் பயன்படுத்தி இந்நூலை எழுதியுள்ளார். இவர் 18 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில், ஐரோப்பாவில் நிலவி வந்த அறிவியல் பூர்வமான வரலாற்று முறைகளைக் கற்றறிந்திருந்தார். இருப்பினும் இந்தியக் கலாச்சாரத்தின் மீதும், நாகரீகத்தின் மீதும்

**குறிப்பு**

இவருக்கிருந்த காழ்ப்புணர்ச்சியைச் சுட்டிக்காட்டி மஜும்தார் போன்ற வரலாற்றாசிரியர்கள் அவரது அணுகுமுறை அறிவியல் பூர்வமான வரலாற்று வரைவியலுக்கு அப்பாற்பட்டது என்று உரைக்கின்றனர். அதேபோல ஆங்கில வரலாற்று ஆசிரியரான எர்பின்ஸ்டன் பிரிட்டிஷ் இந்திய வரலாற்றை ஒரு சிறந்த வரலாற்று நூலாகக் கருதிய போதிலும், இந்நூலை எழுதுவதற்கு ஜேம்ஸ்மில்லுக்குத் தேவையான இந்தியாவின் இவர் கி. பி. ஆம் ஆண்டு இந்திய அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்ற பின்னரும் தொடர்ந்து ஆக்ஸ்போர்டில் உள்ள இந்திய மையத்தில் இருந்து வரலாற்றைப் போதித்து வந்தார். இவரது இச்சேவையைப் பாராட்டி 1918ஆம் ஆண்டு இவருக்குத் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது. 1919 ஆம் ஆண்டு சர்பட்டம் வழங்கப்பட்டது. இவர் 1920 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6ஆம் நாள் இயற்கை எய்தினார்.

### 7.7.1. இவரது நூல்கள்

1. இந்தியாவின் தொடக்க கால வரலாறு (Early History of India)

2 இந்தியாவின் பௌத்தப் பேரரசர் அசேகர் (Asoka, The Buddhist Emperor of India)

3. இந்திய அருங்காட்சியகத்திலுள்ள நாணயங்களின் அட்ட வணை. (A Catalogue of Coins in the Indian Museum 1906)

4. இலங்கை மற்றும் இந்திய நுண்கலைகளின் வரலாறு (History of Fine Arts in India and Ceylon 1911)

5. மொகலாய மன்னர் அக்பர். (Akbar the Great Mughal 2, Vols, 1917)

6. ஆக்ஸ்போர்ட் இந்திய வரலாறு (The Oxford Historyof Indian 1918)

### 7.7.2. வரலாற்று முறைகள்

இவர் எழுதிய இந்தியாவின் பௌத்தப் போரரசர் அசோகர் என்னும் நூல் ஆங்கிலத்தில் வெளியான இந்திய அரசரைப் பற்றிய முதல் நூலாகும். இந்நூல் பலராலும் பாராட்டப்பட்டது. ஸ்மித்துக்குப் பிறகு பல இந்திய வரலாற்று ஆசிரியர்கள் அசோகரைப் பற்றி எழுதியுள்ளனர். குறிப்பாக பண்டார்க்கர், முகர்ஜி, ரோமிலாதாபர் போன்றவர்களைக் குறிப்பிடலாம். ஸ்மித் எழுதிய இப்புத்தகத்தில் இரு விவாதத்திற்குரிய கருத்துக்களை எழுப்பியுள்ளார். 1. கிரேக்க அரசுகளுக்கு அசோகர் அனுப்பிய தூதுக் குழுக்கள் மற்றும் 2. அசோகர் பின்பற்றிய பௌத்த தருமத்தின் தன்மை. ஸ்மித் இரண்டாவது கருத்தைப் பற்றி கூறும் பொழுது அசோகருடைய

தருமம் என்பது இந்து தருமத்தைப் பின்பற்றியதும், பௌத்த தருமத்தைச் சிறிதளவு கொண்டதுமாகும், என்று குறிப்பிடுகின்றார்.

குறிப்பு

இவர் எழுதிய இந்தியாவின் தொடக்க கால வரலாறு கிட்டதட்ட நான்கு மறுபதிப்புகளாக வெளிவந்துள்ளது. நான்காவது பதிப்பு 1924 ஆம் ஆண்டு ஆங்கில நூலாசிரியரான எட்வர்ட்ஸ் என்பவரால் மாற்றியமைக்கப்பட்டது. இந்நூலில் இந்திய வரலாற்று ஆசிரியரான எமல்பென்ஸ்டினின் இரு கருத்துக்களை மறுத்து விளக்கியுள்ளார். உதாரணமாக மாமன்னர் அலெக்ஸ்சாண்டர் இந்தியாவில் முக்கியமான அரசியல் நிகழ்ச்சிகள் ஒன்றும் நடைபெறவில்லை என்ற கூற்றையும், இந்தியாவை மொகலாயர்கள் கைப்பற்றியதற்கு முன்னால் முறையான காலப் பாகுபாட்டைக் கடைபிடிக்க இயலாது என்கின்ற இவ்விரு கருத்துக்களையும் ஸ்மித் மறுத்துள்ளார். மேலும் இந்திய நாகரிகம் உலகத்திலுள்ள மற்ற நாகரிகங்களிலிருந்து மாறுபட்ட ஒன்று. அதே நேரத்தில் சிறப்புத்தன்மை வாய்ந்தது என்ற கருத்தை வலியுறுத்தியுள்ளார் இவரது கருத்தின்படி இந்திய நாகரீகம் சமூக, சமய மற்றும் அறிவியல் வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள பணிகளைக் குறைவாக மதிப்பிட முடியாது எனக் கூறுகின்றார்.

இவர் எழுதிய மூன்றாவது நூல் இந்திய அருகாட்சியகத்திலுள்ள நாணயங்களின் அட்டவணை, நாணவியல் ஆராய்ச்சி செய்யும் மாணவர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் ஒரு முதன்மை நூலாக விளங்குகின்றது. இந்தியாவின் பண்டைய வரலாறு மற்றும் நாணவியலின் வரலாற்றை இந்நூல் விளக்குகிறது.

இலங்கை மற்றும் இந்திய நூண் கலைகளின் வரலாறு என்னும் இந்நூல் இலங்கை மற்றும் இந்திய நுண்கலைகளின் தோற்றம் மற்றும் வளர்ச்சியினை மிகச் சிறப்பாக எடுத்துரைக்கிறது. ஸ்மித்தின் இந்த முயற்சி இந்திய நுண்கலை வரலாற்றை எழுதிய ஹேவல், பெர்கூசன், பாதல் மற்றும் போக்கர் போன்றோரது அரிய முயற்சியின் ஒரு பகுதியாகக் கருதப்படுகிறது. சாரனாத்திலுள்ள சிங்கச் சிகரத்தைப் பற்றிக்குறிப்பிடும் பொழுது இத்தகைய கலை நுணுக்கமுடைய அழகிய வேலைபாட்டை எந்நாட்டிலும் காண இயலாது என்று குறிப்பிட்டுள்ளார்.

இவ் அசோகச் சின்னம் இயற்கையாகவும் எழிலுடனும் அமைக்கப்பட்டுள்ளது. அழகிய வேலைப்பாடுகளுடன் உள்ள காஞ்சியிலுள்ள ஸ்தூபியைப் பற்றிப் புகழ்ந்து பாராட்டியுள்ளார். இந்நூல் நுண்கலை வரலாற்றில் ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

ஸ்மித் எழுதிய மொகலய மாமன்னர் அக்பர் என்னும் நூல் மூல ஆதாரங்கள் மற்றும் ஆராய்ச்சியின் அடிப்படையில் உருவக்கப்பட்டது. ஜெர்மானிய நாட்டைச் சேர்ந்த பான்ரோயர் மற்றும் மாலிசன் இவர்கள் இவருக்குப்பின் அக்பரைப் பற்றி எழுதப்பட்ட மூன்றாவது நூல் ஸமித் உடைய நூலாகும். இந்நூல் எழுதுவதற்கு முக்கிய காரணமாக அமைந்த நிகழ்ச்சி என்னவெனில் 1893 ஆம் ஆண்டு ஸ்மித் சர்

வில்லியம்ஸின் பல்வேறு தொகுப்புக்களைப் பதிப்பித்துக் கொண்டிருந்த வின்செண்ட் ஸ்மித்தின் முயற்சியாகும். இதன் விளைவாக அக்பரைப் பற்றி வரலாற்று நூலை 1917 ஆம் ஆண்டு எழுதி முடித்தார். இந்நூல் ஒரு சிறிய வாழ்க்கை வரலாற்று நூலாகும். இதற்கு விளக்கம் அளிக்கையில் ஸ்மித் இந்த சிறிய வாழ்க்கை வரலாற்று நூல் பல பேர்களையும் நிகழ்ச்சிகளையும் உள்ளடக்கிய அதிக பக்கங்களை உடைய வரலாற்று நூலை விட பல சிறப்புகளைப் பெற்றுள்ளது என்று கூறுகின்றார். ஸ்மித் அக்பரைப் பற்றிக் குறிப்பிடுகையில் அவர் ஒரு தலை சிறந்த வரலாற்றுப் பேரரசர் என்கிறார். இந்நூலில் ஸ்மித்தின் அறிவியல் அணுகுமுறையையும் சிறந்த எழுத்தாற்றலையும் காணலாம்.

இறுதியாக அவர் எழுதிய ஆக்ஸ்போர்டு இந்திய வரலாறு என்னும் நூல் பண்டைய இடைக்கால மற்றும் நவீன இந்தியாவின் வரலாற்றைச் சுருக்கமாக உள்ளடக்கிய ஒன்றாகும். இதற்கு முன் எந்தவொரு வரலாற்று ஆசிரியரும் மேற்கொள்ளாத முயற்சியை வின்செண்ட் ஸ்மித் மேற்கொண்டு மூன்று காலக்கட்டங்களில் இந்திய வரலாற்றைத் தொகுத்து எழுதியுள்ளார். இவ்வாறு எழுதுவதின் வாயிலாக ஒரு முழு வரலாற்றை அறிந்து கொள்கின்ற வாய்ப்பு ஏற்படுகிறது என்று ஸ்மித் கருதுகிறார். இந்நூலில் நவீன காலத்தில் பிரிட்டிஷ் ஆட்சியைப் பற்றிய முழு விபரங்கள் குறிப்பிடப்படவில்லை. இப்புத்தகத்தை பற்றி குறை கூறி பல விமர்சனங்கள் இருந்தாலும் அப்புத்தகம் ஒரு தனிநபரால் எழுதப்பட்ட இந்தியாவின் முழு வரலாற்றையும் பிரதிபலிப்பதாக உள்ளது.

## 7.8. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

1. வரலாறு பற்றிய ஆய்வு எப்போது வெளியிடப்பட்டது?

2. ஹெகலும் மார்க்சும் 'இயங்கியல்' என்றால் என்ன?

3. நிலப்பிரபுத்துவ நிலையிலும் முதலாளித்துவ காலத்திலும் அடிமைப் பொருளாதாரத்தில் செல்வம் எவ்வாறு உற்பத்தி செய்யப்பட்டது?

4. கம்யூனிஸ்ட் அறிக்கை என்ன எதிர்பார்க்கிறது?

5. பிரெஞ்சுப் புரட்சி எதனால் கொண்டு வரப்பட்டது?

6. ஹெகலின் கூற்றுப்படி பிரபஞ்சத்தை புரிந்துகொள்ளக்கூடியது எது?

7. மதம் பற்றிய ஹெகலின் கருத்துக்களுக்கு ஒரு சிறு குறிப்பை எழுதுங்கள்.

8. ஹெகலின் தத்துவத்தின் முக்கிய குறிப்பு என்ன?

9. பொதுமைப்படுத்தல் எப்போது செயல்பாட்டுக்கு வரும்?

குறிப்பு

## 7.9. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்

1. A Study of History என்பது 1934 மற்றும் 1961 க்கு இடையில் வெளியிடப்பட்ட பன்னிரண்டு தொகுதித் தொடராகும்.

2. இயங்கியல் மூலம், ஹெகலும் மார்க்சும் எல்லா விஷயங்களும் இயக்கத்திலும் பரிணாம வளர்ச்சியிலும் உள்ளன, மேலும் அனைத்து மாற்றங்களும் முரண்பாடான கூறுகளின் மோதலின் மூலம் வருகிறது.

3. ஒரு அடிமை-சொந்த பொருளாதாரத்தில், செல்வம் அடிமைகளின் உரிமையிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டது நிலப்பிரபுத்துவ நிலையில், நிலத்தின் உரிமையிலிருந்து முதலாளித்துவ காலத்தில் தொழிற்சாலைகளின் உரிமையிலிருந்து.

4. கம்யூனிஸ்ட் அறிக்கை ஒரு கற்பனாவாதத்தை கற்பனை செய்கிறது, அதில் அரசு வர்க்கமற்ற சமுதாயத்தில் வாடிவிடும், அதில் ஒவ்வொருவரும் அவரவர் திறனுக்கு ஏற்ப சமூக செல்வத்திற்கு பங்களித்து, அதிலிருந்து தனக்குத் தேவையானதை எடுத்துக்கொள்கிறார்கள்.

5. பிரெஞ்சுப் புரட்சியானது, முதலாளித்துவத்தின் எழுச்சியின் விளைவாக பொருளாதார அதிகாரத்தை திறம்பட கைப்பற்றி, பின்னர் அரசியல் மற்றும் சமூகத் துறையில் அதன் மேலாதிக்கத்தை விரிவுபடுத்த விரும்பிய ஒரு பணக்கார, நம்பிக்கையுள்ள முதலாளித்துவ வர்க்கத்தால் கொண்டுவரப்பட்டது.

6. ஹெகலின் கூற்றுப்படி, பிரபஞ்சத்தை புரிந்துகொள்ளக்கூடியதாக ஆக்குவது என்னவென்றால், அதை நித்திய சுழற்சி செயல்முறையாகப் பார்ப்பது, இதன் மூலம் முழுமையான ஆவி தன்னை ஆவியாக (ை) அதன் சொந்த சிந்தனையின் மூலம் அறிந்து கொள்கிறது (ை) இயற்கையின் மூலம் மற்றும் (iii) வரலாறு, கலை மற்றும் தத்துவத்தில் சுய வெளிப்பாடு மூலம்.

7. ஹெகல் மாய மற்றும் இயற்கை மதத்துடன் தொடங்கும் இயங்கியல் ரீதியாக முற்போக்கான வரிசையில் அவற்றை ஒழுங்கமைப்பதன் மூலம் பல்வேறு மதங்களின் பன்முகத்தன்மையிலிருந்து விடுபட முயற்சிக்கிறார். பின்னர் அவர் சீனா, இந்தியா, பாரசீகம், எகிப்து, யூதேயா (இதை அவர் விழுமியத்தின் மதம் என்று அழைக்கிறார்), கிரீஸ் (அழகின் மதம்) மற்றும் ரோம் (பயன்பாட்டின் மதம்) ஆகிய மதங்களை எடுத்துக்கொள்கிறார், மேலும் கிறிஸ்தவத்தில் உச்சக்கட்டத்தை அடைகிறார்.

## 7.10. அத்தியாயச் சுருக்கம்

- டாய்ன்பீயின் பணியின் குறிப்பிட்ட கருப்பொருள் நாகரிகங்களின் தோற்றம், வளர்ச்சி மற்றும் சிதைவு பற்றிய தத்துவ விசாரணை ஆகும். நினைவுச்சின்ன ஆய்வு நாகரிகங்களின் சுழற்சி வளர்ச்சி மற்றும் வீழ்ச்சியின் பகுப்பாய்வு அடிப்படையில் வரலாற்றின் தத்துவத்தை முன்வைத்தது.
- கற்பனை செய்வது தவறு, ஒரு நாகரிகம் தோற்றுவிக்கப்படும்போது, அதன் வளர்ச்சி நிச்சயமாக ஒரு விஷயமாக இருக்கும் என்று டாய்ன்பீ எச்சரிக்கிறார். இருப்பை அடைந்த சில நாகரிகங்கள் வளரவில்லை. அவை பாலினேசியன், எஸ்கிமோ மற்றும் நாடோடி வாழ்க்கை முறைகள் போன்ற கைது செய்யப்பட்ட நாகரிகங்களின் வழக்குகள்.
- எச்.ஈ. பார்ன்ஸ் எழுதுகிறார்: "டொய்ன்பீயின் நாகரீகங்களின் எழுச்சி மற்றும் வீழ்ச்சியை ஒப்பிட்டுப் பார்க்கும் திட்டம் அவரது தீவிர இறையியல் வளாகத்தால் அழிக்கப்பட்டது, இது அவரது பணியை ஒரு வரலாற்றை விட ஒரு தத்துவமாக மாற்றியது". அவரது வரலாற்றுத் தத்துவம் கடவுளையும் உயர்ந்த மதத்தையும் மகிமைப்படுத்துவதைத் தவிர வேறில்லை.
- மார்க்ஸ் மற்றும் ஏங்கெல்ஸ் ஆகியோரால் உருவாக்கப்பட்ட வாழ்க்கை மற்றும் வரலாற்றின் பார்வை - உண்மையில், மார்க்சியத்தை ஒரு ஒருங்கிணைந்த, அழுத்தமான மற்றும் ஆற்றல்மிக்க கோட்பாடாக மாற்றுவது இயங்கியல் பொருள்முதல்வாதத்தின் தத்துவமாகும். இயங்கியல் பொருள்முதல்வாதம் மனித வாழ்க்கையின் மாறிவரும் பொருள் நிலைமைகளில் வரலாற்று செயல்முறையின் சாரத்தை நாடுகிறது.
- புனித குடும்பத்தில், மார்க்ஸ் மற்றும் ஏங்கெல்ஸ் "வரலாறு என்பது மனிதனின் நோக்கத்தைத் தொடரும் செயலைத் தவிர வேறில்லை" என்று எழுதியுள்ளனர். இந்த செயல்பாட்டின் வேர் பொருளாதாரம் மற்றும் பொருளாதார நிர்ணயவாதத்தின் கோட்பாடு பொருள் உற்பத்தி மனிதகுலத்தின் வரலாற்றின் அடிப்படை என்றும், அந்த காலத்தின் தொழில்துறையின் அறிவு இல்லாமல் அந்த வரலாற்றின் எந்த பகுதியையும் புரிந்து கொள்ள முடியாது என்றும் கூறுகிறது.
- தாஸ் மூலதனத்தில், உழைப்புக்கும் மூலதனத்திற்கும் இடையே உள்ள பகைமைக்கான முதன்மைக் காரணம், முதலாளிகள் உழைப்பால் உருவாக்கப்படும் உபரி மதிப்பை உரிமையாக்கிக் கொள்ள முடிவதால், உழைப்புக்குச் செல்ல வேண்டும் என்று மார்க்ஸ் கூறினார்.
- 1840 களில் முதலாளித்துவத்தின் அக்கிரமங்களைப் பற்றிய மார்க்ஸின் அவதானிப்புகள் அடிப்படையில் நியாயமானவை,

ஆங்கிலேய உழைக்கும் வர்க்கத்தின் ஏங்கெல்ஸின் நிலை, (1845) இல் எடுத்துக்காட்டுகின்றன.

குறிப்பு

## 7.11. முக்கிய சொற்கள்

மெட்டாஹிஸ்டரி: இது வரலாற்றை எழுதும் வரலாறு, வரலாற்றியல் துறையின் ஒரு பகுதியாகும்.

பிளவு: கருத்து அல்லது நம்பிக்கையில் உள்ள வேறுபாடுகளால், வலுவாக எதிர்க்கும் பிரிவுகள் அல்லது கட்சிகளுக்கு இடையேயான பிளவு அல்லது பிரிவைக் குறிக்கிறது.

பாட்டாளி வர்க்கம்: இது ஊதியம் பெறுபவர்களின் சமூக வர்க்கம், ஒரு சமூகத்தின் உறுப்பினர்கள் குறிப்பிடத்தக்க பொருளாதார மதிப்பைக் கொண்ட ஒரே உடைமை அவர்களின் உழைப்பு சக்தியாகும்.

தியோடிசி: இது கடவுளை நியாயப்படுத்துதல். ஒரு நல்ல கடவுள் ஏன் தீமையை வெளிப்படுத்த அனுமதிக்கிறார் என்ற கேள்விக்கு பதிலளிக்க வேண்டும், இதனால் தீமையின் சிக்கலை தீர்க்கிறது.

## 7.12. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

**குறுகிய வினாக்கள்**

1. டாய்ன்பீயின் கூற்றுப்படி, நாகரிகங்கள் உருவாகும் இரண்டு நிபந்தனைகள் யாவை?

2. “உபரி மதிப்பு கோட்பாடு“ பற்றி ஒரு சிறு குறிப்பை எழுதவும்.

3. ரேங்கின் சுத்திகரிக்கப்பட்ட அணுகுமுறையை வழங்கக்கூடிய புள்ளிகளைப் பட்டியலிடுங்கள்.

4. ஆய்வறிக்கை, எதிர்நிலை மற்றும் தொகுப்பு ஆகியவற்றின் ஹெகலிய இயங்கியல் அடிப்படை என்ன?

5. வி.ஏ.வின் மூன்று முக்கியமான படைப்புகளைக் குறிப்பிடவும். ஸ்மித்.

**விரிவான வினாக்கள்**

1. வரலாற்று ஆய்வுகளில் மார்க்சிய வரலாற்றாசிரியர்களின் பங்களிப்பை விளக்குக.

2. மனித மனம் பற்றிய ஹெகலின் பகுப்பாய்வை ஆராயுங்கள்

3. விவாதிக்க வி.ஏ. இந்தியாவின் ஆரம்பகால வரலாறு பற்றிய ஸ்மித்தின் பகுப்பாய்வு



குறிப்பு

## 7.13. கூடுதல் வாசிப்புகள்


Warren, John. 1998. *The Past and Its Presenters*: An Introduction to Issues in Historiography. London: Hodder & Stoughton Educational.

Ferro, Marc. 2003. *The Use and Abuse of History*: Or How the Past is Taught to Children. Abingdon: Routledge.

E. Sreedharan. 2004. *A Textbook of Historiography: 500 BC to AD 2000*. New Delhi: Orient Blackswan.

Sharma, Arvind. 2003. *Hinduism and its Sense of History*. New Delhi: OUP India.

Iggers, Georg G. 2005. *Historiography in the 20th Century: From Scientific Objectivity to the Postmodern Challenge*. Connecticut: Wesleyan University Press.

Stuart, Hughes H. 1964. *History as Art and as Science.* New York: Joanna Cotler Books.

Fea, John. 2013. *Why Study History? Reflecting on the Importance of the Past*. Washington: Baker Publishing Group.


# அலகு-8

## புகழ்பெற்ற இந்திய வரலாற்றாசிரியர்கள்: கல்ஹானா, அல்-பிருனி, அபுல் ஃபசல்

உள்ளடக்கம்


8.1. முன்னுரை

8.2. நோக்கங்கள்

8.3. கல்கணர் (Kalhana)

8.4. அல்பருனி Muhammad Ibn Ahmad Alberuni (973 - 1048 A.D)

8.5. அபுல் பாசல் Abul Fazl (1551 - 1602)

8.6. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

8.7. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்

8.8. அத்தியாயச் சுருக்கம்

8.9. முக்கிய சொற்கள்

8.10. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

8.11. கூடுதல் வாசிப்புகள்

## 8.1. முன்னுரை

கல்ஹானா, அல்-பிருனி மற்றும் அபுல் ∴பசல் போன்ற இந்திய வரலாற்றாசிரியர்கள் வெவ்வேறு காலகட்டங்களில் இந்திய வரலாற்றைப் புரிந்துகொள்வதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளனர். கலஹானா' ராஜதரங்கிணி காஷ்மீர் பற்றிய ஆரம்ப காலத்திலிருந்து அதன் உருவான தேதி வரையிலான தகவல்களின் சிறந்த ஆதாரமாக உள்ளது. இது எட்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

அல்-பிருனியின் கிதாப்-உல்-ஹிந்த் இந்து மத நிறுவனங்களின் அறிவார்ந்த பகுப்பாய்வை வழங்குகிறது, அதே நேரத்தில் கலை, அறிவியல் மற்றும் இலக்கியம் ஆகியவற்றின் அடிப்படையில் பணக்கார இந்திய பாரம்பரியத்தை வலியுறுத்துகிறது. ஜாதி அமைப்பு உள்ளிட்ட இந்திய கலாச்சாரம் குறித்து அவருக்கு நல்ல புரிதல் இருந்தது.

அபுல் ∴பசல் முகலாய மன்னர் அக்பரின் ஆட்சியின் வரலாற்றை அக்பர்நாமா என்று எழுதினார். இந்திய வரலாறு முகலாய சாதனைகளைத் தவிர வேறொன்றையும் கொண்டிருக்கக்கூடாது என்ற அந்தக் காலத்தின் பாரம்பரிய முஸ்லீம் பார்வைக்கு மாறாக இந்திய வரலாற்றைப் பற்றிய மாறுபட்ட பார்வையை அவர் வழங்கினார். அவர் இந்து மரபுகள், நடைமுறைகள் மற்றும் கலாச்சாரத்தில் கவனம் செலுத்தினார்.

## 8.2. நோக்கங்கள்

**இந்த அத்தியாயத்தை படிப்பதன் மூலமாக கீழ்காண்பனவற்றை புரிந்து கொள்ள இயலும்**

1. ராஜதரங்கிணியைக் குறித்து அறிந்து கொள்ள இயலும்

2. அல்-பிருனி படைப்புகள் விளக்கப்பட்டுள்ளது

3. அக்பர்நாமா குறித்த அடிப்படை தகவல்கள் விளக்கப்பட்டுள்ளது

## 8.3. கல்கணர் (Kalhana)

குறிப்பு

பண்டைக்கால இந்திய வரலாற்று மனப்போக்குக்கு விதி விலக்கு கல்கணரின் வரலாற்று வரைவு. காஷ்மீரத்தின் நீரோ என்றழைக்கப்பட்ட காஷ்மீர் மன்னர் ஹர்ஷருக்கு அமைச்சராக இருந்த கம்பகா (kampaka)வுக்கு மகனாகப் பிறந்த கல்கணர் கல்வி அறிவும் வாழ்க்கை அனுபவமும் பெற்றார். நாட்டை நேசித்த கல்கணர் காஷ்மீரத்தின் வரலாற்றை வரைய விரும்பினார். காஷ்மீரின் தலபுராணங்கள், ஆண்டு நிகழ்ச்சிக் குறிப்புகள், பாரம்பரிய மரபுகள் ஆகியவற்றைக் கருத்தூன்றிப் படித்தார். இயற்கையின் சுவர்கபுரியான காஷ்மீரத்தைப் பற்றிய நினைவுகள் நீடித்து நிலைக்க வேண்டும் என்று எண்ணிய கல்கணர் இராஜதரங்கிணியைப் படைத்தார். இராஜதரங்கிணி (Rajatarangini) கல்கணரின் இராஜதரங்கிணி காஷ்மீரத்தைப் பற்றிய பொது வரலாறு ஆகும். ”இராஜதரங்கிணி“ என்றால் அரசர்களின் ஆறு (சுளைநச ழக முபைௌ) என்று பொருள். இது சமஸ்கிருத மொழியில் எட்டு காண்டங்களாக எழுதப்பட்ட கவிதை நூலாகும். ஒவ்வொரு காண்டமும் தரங்கா (Taranga) அல்லது ”அலை” என்று பெயரிடப்பட்டுள்ளது. புலவர் - வரலாற்றாளரான கல்கணர் இராஜதரங்கிணியைக் காஷ்மீர் மன்னர் ஜெயசிம்மர் காலத்தில் இரண்டாண்டுகளில் (1148 - 1150 யு.னு) எழுதி முடித்தார். 8000 கவர்ச்சிமிக்க கவிதைகளைக் கொண்ட இந்நூல் மூன்று பகுதிகளைக் கொண்டது. 1) முதல் பகுதியில் புராண கால காஷ்மீரத்து மன்னர்களின் வீரதீரச் செயல்கள் விவரிக்கப்பட்டுள்ளது.

2) இரண்டாவது பகுதியில் கார்கோட்டா முதல் உத்பாலா வரையிலான அரச குலங்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது 3. மூன்றாவது பகுதியில் இரண்டு லொகாரா அரசகுலப் பெருமைகள் பேசப்பட்டுள்ளது. முதல் மூன்று காண்டங்களிலும் காலவரன்முறை (Chronology) கொடுக்கப்படவில்லை . நான்காவது காண்டத்தில் 703வது பாடலிலிருந்து நிகழ்ச்சிகள் காலவரன்முறைப் படுத்தப்பட்டுள்ளன. கி.பி.813-14லிருந்து காஷ்மீரத்து வரலாறு துல்லியமாக தொடர்ச்சியாக விவரிக்கப்பட்டுள்ளது. கல்கணர் காஷ்மீரத்தின் கடந்த காலத்தை ஒரு நீதிபதியின் தீர்ப்பைப் போன்று விருப்பு வெறுப்பின்றிப் பதிவு செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். மன்னரை மனதில் கொண்டே கல்கணர் இராஜதரங்கிணியைப் படைத்துள்ளார். அவரது நோக்கம் காஷ்மீர் மன்னருக்கு 1) வாழ்க்கையின் நிலையாமையை எடுத்துரைத்தல் 2) ஒழுக்கப் படிப்பினைகளைப் போதித்தல் 3). கடந்த கால நிகழ்ச்சிகளைப் படம்பிடித்துக் காட்டல். காஷ்மீரின் வரலாறு ““மன்னருக்கு காலத்துக்கும் நேரத்துக்குமேற்ற தூண்டுகோலாக இருக்க வேண்டும்” என்று கூறியுள்ளார். குற்றங்குறைகளைச் சுட்டிக் காட்டுகிறார். கல்கணர் வரலாற்று வீரர்களுக்கு முக்கியத்துவமளிக்காமல் நிகழ்ச்சிகளுக்கும்

குறிப்பு

படிப்பினைகளுக்கும் சிறப்பிடமளிக்கிறார். வரலாறு காலத்தால் அழிந்துவிடக் கூடாது, சம காலத்துக்கு ஆசானாகவும் எதிர்காலத்துக்கு வழிகாட்டியாகவும் இருக்க வேண்டும் என்ற நல்நோக்கோடு இராஜதரங்கிணியை வரைந்துள்ளார் கல்கணர். கல்கணர் எழுத்தோவியங்கள் (ௗநளஉைௌவரசநள) கருத்தாழமிக்கவை , படிப்போரைப் பரவசப்படுத்தக் கூடியவை. காஷ்மீரத்தின் காந்தக் கவர்ச்சிமிக்க இயற்கைச் சூழல், நகரங்கள், கோயில்கள், மடங்கள், மக்களின் வாழ்க்கை முறை, பழக்கவழக்கங்கள், ஆடை அணிகலன்கள், குணநலன்கள், மனித உணர்வுகள், விருப்பு வெறுப்புகள், நம்பிக்கைகள், பெண்ணின் பெருமை ஆகியவை படிப்போரைத் தன்வயப்படுத்துமாறு வர்ணிக்கப்பட்டுள்ளன. நாட்டின் பெருமை பேசும் கல்கணர் முடியாட்சியின் நிறைகுறைகளையும், நிலமானிய முறையின் குறைபாடுகளையும் விமரிசிக்கத் தயங்கவில்லை. அதிகாரவர்க்கத்தைக் கடுமையாகச் சாடுகிறார். நண்டு தந்தை நண்டைத் தின்று விடுகிறது. வெள்ளை எறும்பு தாய் எறும்பைக் கொன்று விடுகிறது. நன்றி கெட்ட காயஸ்தனுக்கு அதிகாரம் கிடைத்தால் அனைத்தையும் அழித்து விடுவான். கல்கணரின் வரலாற்றுப் பங்களிப்புகள் கல்கணரின் இராஜதரங்கிணி 12-ம் நூற்றாண்டின் மத்தியில் இயற்றப்பட்ட நிகரற்ற வரலாற்றுக் கவிதையாகும். கல்கணரின் வரலாற்றுப் பங்களிப்புகளாவன: 1. கல்கணர் சான்றுகளைக் கொண்டு காஷ்மீரத்தின் வரலாற்றை வரைந்துள்ளார். இவர்

காஷ்மீர் பற்றிய பதினோறு நூல்களைப் படித்து அவற்றில் காணப்பட்ட குறைகளை நிராகரித்ததாகக் குறிப்பிட்டுள்ளார். கல்கணர் ஆவணங்கள், தொல்பொருள், கல்வெட்டு, சாசன , நாணய, இலக்கியச் சான்றுகளை மூலப்பொருள்களாகப் பயன்படுத்தி இராஜதரங்கிணியைப் படைத்துள்ளார். 2. கல்கணர் கூடியவரை அறிவுப்பூர்வமான அணுகுமுறையைக் கையாண்டுள்ளார்.

ஆதாரங்களை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் பகுத்தாய்ந்து பயன்படுத்தியுள்ளார். தவறான சான்றுகளை நிராகரித்துள்ளார். உதாரணமாக ஷமேந்திரரின் தவறான நிகழ்ச்சிக் குறிப்பை ஏற்றுக் கொள்ளவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். தேவையான இடங்களில் மரபுகளைத் தக்க விளக்கங்களுடன் மேற்கோள்களாகக் காட்டுகிறார். கட்டுக் கதைகளுக்கும் அதிசயங்களுக்கும் அவதாரங்களுக்கும் கல்கணரின் வரலாற்றில் இடமில்லை .

3. கல்கணர் வரலாற்றைச் சார்பின்றி எழுத முயன்றுள்ளார். இந்த பெருந்தன்மையான புலவன் நீதிபதியின் தீர்ப்பைப் போன்று விருப்பு வெறுப்பின்றி கடந்த காலத்தைப் பதிவு செய்வதில் பெருமைப்படுகிறான் என்று நூலின் துவக்கத்திலேயே குறிப்பிட்டுள்ளார். கல்கணர் தப்பெண்ண ங்களுக்கும் (Prejudices) இடந்தரவில்லை . 1 கல்கணர் காஷ்மீரத்தின் வரலாற்றை ஆண்டுக்கால வரிசைப்படி

முறைப்படுத்தியுள்ளார். குறிப்பாக நான்காவது காண்டத்தில் 703வது பாடலிலிருந்து நிகழ்ச்சிகள் காலவரன் முறைப்படுத்தப்பட்டுள்ளன. ”காலவரன் முறை வரலாற்றின் கண் என்றால் பண்டைய இந்திய வரலாறு என்றைக்குமே குருடாகத்தான் இருக்க வேண்டும்” என்ற சீனிவாச ஐயங்காரின் கூற்று கல்கணரின் இராஜதரங்கிணிக்குப் பொருந்தாது. 5. கல்கணர் மக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வரலாற்றைப் பாடியுள்ளார். இவர் குறிப்பிட்ட அரசர்கள் அல்லது அரச குலங்கள் பற்றி எழுதாமல் காஷ்மீரத்தின் பொது வரலாற்றை வரைந்துள்ளார். அவ்வாறு எழுதும் போது மக்களின் அன்றாட வாழ்க்கையை அக்கறையோடு ஆய்ந்து எழுதியுள்ளார். அடிமை முறையைச் சாடுகிறார். பெண்ணின் பெருமை பேசுகிறார். ஆட்சியில் பெண்களின் பங்கேற்பு, கலப்புத் திருமணங்கள், பொது வாழ்க்கையில் பெண்களின் பங்கு பற்றிக் குறிப்பிட்டுள்ளார். 6. கல்கணர் வரலாற்றுக்குத் தத்துவ விளக்கமளித்துள்ளார். வரலாற்று நெருக்கடி, நன்மைக்கும் தீமைக்குமிடையேயான போராட்டம், சவால்களை வெற்றிகரமாகச் சமாளிப்பதே சாதனை, காலம் கனிந்தால் வெற்றி நிச்சயம் போன்ற படிப்பினைகளைப் போதிக்கிறார். வரலாற்று நிகழ்வுகளுக்குக் காரண - காரிய விளக்கமளிப்பதோடு தீர்ப்பையும் வழங்குகிறார். கல்கணர் மனித வாழ்க்கையை வரலாற்றுப் பின்னணியில் மதிப்பீடு செய்கிறார். கல்கணரின் குறைபாடுகள் கல்கணர் காஷ்மீரத்தின் வரலாற்றை ஒரு நீதிபதியைப் போன்று நடுநிலை தவறாது வரைய முயன்றாலும் பின்வரும் குறைபாடுகள் காணப்படுகின்றன. 1). கல்கணர் கொடுக்கும் காலவரன்முறை குறைப்பாடுடையது. கி.பி. 813-க்கு முற்பட்ட காஷ்மீரத்தின் வரலாற்றுக்குத் தொடர்ச்சியான காலவரன்முறை கொடுக்கப்படவில்லை. 2) கல்கணர் வரலாற்றுக்குப் புறம்பான தகவல்களைத் தருகிறார். உதாரணமாக புராதன ஸ்ரீநகரிதான் ஸ்ரீநகர் ஆயிற்று, ஸ்ரீநகர் அசோகரால் தோற்றுவிக்கப்பட்டது. அசோகரும் கனிஷ்கரும் காஷ்மீரத்திலிருந்து ஆட்சி புரிந்தனர். ரணாதித்யா 300 ஆண்டுகள் ஆண்டார் காஷ்மீரம் இந்தியாவை வெற்றி கொண்டது போன்ற தகவல்கள் 3). கல்கணர் பல இடங்களில் கர்ம வினை, ஊழ்வலி, விதியின் விளையாட்டு, தேவருலகத்தாரின் பாதுகாப்பு பற்றிப் பேசுகிறார். போதனைகள் செய்கிறார். 4) கல்கணர் நாட்டுப்பற்று மிகுதியால் காஷ்மீரத்தைப் பற்றிய பெருமையைக் கூறக்கூடிய புராணக் கதைகளை சந்தேகிக்காமல் ஏற்றுக் கொள்கிறார். உதாரணங்கள் : வல்லாட்சியே கலாச்சார வளர்ச்சிக்கும் ஸ்திரத்தன்மைக்கும் ஏற்றது மக்களின் அரசனை அன்பானவன் என்றால் ஆட்சி தோல்வியுற்றது என்று பொருள் முற்பிறவியில் பாவம் செய்ததால்தான் இப்பிறவியில் தவறாக ஆட்சி செய்கின்றனர் 5) இலக்கிய நடை வெள்ளத்தில் வரலாற்று விவரங்கள் மூழ்கிவிடுகின்றன.

**மதிப்பீடு**

கல்கணரின் இராஜதரங்கணி பண்டய இந்தியாவின் தனிப்பெரும் வரலாற்று வரைவாகும். கவிதையில் எழுதப்பட்ட முதல் வரலாற்று

வரைவு இதுதான். கல்கணரின் முற்போக்கு அணுகுமுறை வியப்புக்குரியது. இவரது சமூக வரலாறு ஜி.எம். டிரவெல்யனை முன்னறிவிப்பு செய்வதாக உள்ளது. கல்கணருக்குத் திறனாயும் திறன் இருந்த போதிலும் நடக்க முடியாதவை பற்றிக் குறிப்பிட்டுள்ளார் என்று கூறுகிறார் ஸ்டீன் (Sir A.Stein) எனினும் "பண்டைய இந்தியாவின் தனிப்பெரும் வரலாற்றாளர் கல்கணர் தான்" என்று கூறுகிறார் வின் டர்னிட்ஸ் (M.Winternitz). "வரலாற்றாளர் என்று கூறப்படுவதற்கான தகுதி கல்கணருக்கு இருக்கிறது" எனக் கருதுகிறார் ஆர். சத்தியனாதய்யர். சுருங்கக் கூறின் இந்தியாவில் ஹெரோடொட்டஸ், தூசிடைடிஸ், பொலிபியஸ், விலி, டாசிடெஸ் போன்ற வரலாற்று வரைவாளர்கள் தோன்றவில்லை என்ற அவச்சொல்லைப் போக்கிய பெருமை கல்கணரைச் சேரும்.

## 8.4. அல்பரூனி Muhammad Ibn Ahmad Alberuni (973 - 1048 A.D)

பல்கலை வல்லவர் அல்பரூனி மத்திய ஆசிய துர்க்கிஸ்தானில் கீவா (Khiva) என்ற இடத்தில் பிறந்தார். அறிவியலையும் இலக்கியத்தையும் கற்றார். அரசியலில் ஆர்வம் கொண்டார். கீவா இளவரசருக்கு ஆலோசகரானார். முகமது கஜினி கீவாமீது படையெடுத்த போது அல்பரூனி கைது செய்யப்பட்டார்! அல்பரூனியின் அறிவாற்றலால் கவரப்பட்ட கஜினி அவரை விடுவித்துத் தன்னுடன் வைத்துக் கொண்டார். பின்னர் முகமது கஜினி இந்தியாவின் மீது படையெடுத்த போதெல்லாம் அல்பரூனி அவருடன் வந்து திரும்பினார். முகமது கஜினி இறந்த பின் அவரது மகன் மசூதின் அரசவைச் சோதிடரானார். மசூதின் ஆதரவுடன் அல்பரூனி வரலாற்று ஆய்விலும் வரைவிலும் ஈடுபட்டார். அல்பரூனி இந்தியாவில் தங்கிய காலத்தை அரிய வாய்ப்பாகக் கொண்டு இந்தியாவைப் பற்றியும் இந்தியரைப் பற்றியும் ஆய்வு செய்தார். முன்னமேயே கிரேக்கத் தத்துவத்தைப் புரிந்து கொள்வதற்காக கிரேக்க மொழி கற்றிருந்தார். இந்தியாவில் இந்தியக் கலாச்சாரத்தின் திறவுகோலான சமஸ்கிருத மொழியைப் பயின்றார். உபநிடதங்களையும், பகவத்கீதையையும், புராணங்களையும், பதஞ்சலியின் மகாபாஷ்யத்தையும், இலக்கண இலக்கியத்தையும் விரும்பிப் படித்தார். இந்தியாவின் பல இடங்களுக்கும் பயணம் செய்த போது பண்டிதர்களுடன் உரையாடினார் அறிவியல், கலாச்சாரம் பற்றித் தெரிந்து கொண்டார் மக்களின் பழக்கவழக்கங்களைக் கூர்ந்து கவனித்தார். அரேபிய, கிரேக்க, சமஸ்கிருத மொழிகளைப் பழுதறக் கற்ற அல்பரூனி வரலாறு, வானவியல், கணிதம், இயற்பியல், வேதியியல், கனிமவியல், புவியியல், மருத்துவம், காலவரன்முறை, தத்துவம் ஆகியவற்றில் துறைபோகியவர். அல்பரூனி பல்கலை வல்லவர். தாரிக் - இ - இந்து (Tarrik-i-Hindi) அல்பரூனி சீரிய சிந்தனையாளர். வளமான எழுத்தாளர். அவரது புரவலர் மசூதைப் பற்றியும், இந்திய வானவியல் வரலாறு,

**குறிப்பு**

சமயம், தத்துவம் பற்றியும் இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதினார். இவற்றுள் தாரிக் - இ - இந்து அல்லது இந்தியாவைப் பற்றிய உண்மை என்ற நூல் பெரும் படைப்பாகும். “என்னுடைய இப்புத்தகம் எளிய வரலாற்றுப் பதிவு” என்று தன்னடக்கத்துடன் குறிப்பிட்டுள்ளார் அல்பரூனி. இவர் இந்நூலில் இந்தியாவின் பன்முகச் சாதனைகளைப் பெருமையோடு பாராட்டியுள்ளார். இந்திய அறிவியலையும் குறிப்பாக வானவியலையும் இலக்கியத்தையும் வியந்து போற்றுகிறார். இந்திய நூல்களிலிருந்து மேற்கோள்களைக் காட்டுவதோடன்றி அவற்றைக் கிரேக்க அரேபிய நூல்களோடு ஒப்பிடுகிறார். இந்து வேதாந்த வித்தகர்களுக்கும் சூ.ஃ.பி அருட் தொண்டர்களுக்குமிடையே உள்ள ஒற்றுமையைக் காட்டுகிறார். இந்துக்களின் சமய நம்பிக்கைகள், சமூகப் பழக்கவழக்கங்கள், அரசியல் பொருளாதார நிலைகள், தத்துவக் கருத்துக்கள் பற்றி விவரிக்கிறார். அதே சமயம் இந்தியர்களின் குறைபாடுகளையும் சுட்டிக் காட்டத் தயங்கவில்லை. பிளவுபட்ட நாடு, ஒற்றுமையில்லா அரசர்கள், இஸ்லாமியரை மிலேச்சர்கள் என ஒதுக்கும் மக்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இந்தியர்கள் கர்வம் கொண்டவர்கள், மூடத்தனமான செறுக்குடையவர்கள், தற்பெருமை கொண்டவர்கள், தங்களுடைய ஊருக்கு நிகரான ஊர் வேறெதுவுமில்லை, தங்களுடைய நாட்டுக் கொப்பான நாடு வேறெதுவுமில்லை, தங்களுடைய அறிவியலுக்கிணையான அறிவியல் வேறெதுவுமில்லை என்று நம்புபவர்கள் என்று குறிப்பிட்டுள்ளார். யாவற்றையும் விட போர்கள், படையெடுப்புகள், படுகொலைகள், சூறையாடல்கள் ஆகியவற்றுக்குப் பின்னால் பொறுமையான அறிவுத் தேடலும் நடந்து கொண்டிருந்தது என்று எழுதியுள்ளார்! தமிழ் நாட்டில் சோழ அரசின் கீழிருந்த பாசனக் கால்வாய்களைப் பற்றிய குறிப்பும் இந்நூலில் உள்ளது. மதிப்பீடு அல்பரூனி ஒரு அசாதாரண வரலாற்று வரைவுக் கலைஞர். இவர் ஒரு வெளிநாட்டு முஸ்லீம் வரலாற்றாளரின் கண்ணோட்டத்தோடு முற்றிலும் மாறுபட்ட பழமைவாத இந்துக் கலாச்சாரத்தை விருப்பு வெறுப்பின்றி மதிப்பீடு செய்ய முயன்றுள்ளது பாராட்டத்தக்கது. அல்பரூனி இந்தியர்களைப் பற்றிச் சரியாகவே சொல்லியிருக்கிறார் என்று கூறுகிறார் ஜவகர்லால் நேரு. சமஸ்கிருதம் பயின்று இந்தியக் கலாச்சாரத்தைப் புரிந்து கொள்வதில் அல்பரூனி காட்டிய ஆர்வம் அதிசயிக்கத்தக்கது. அல்பரூனி இஸ்லாமிய வண்ணக் கண்ணாடி அணிந்து இந்தியாவைப் பார்த்தார், சமூகப் பொருளாதாரக் காரணிகளைப் புறக்கணித்தார், அருங்கலைகள் பற்றி ஆராயவில்லை, தென்னிந்தியாவைப் பற்றிய விவரங்கள் காணப்படவில்லை போன்ற குற்றச்சாட்டுகள் கூறப்பட்டுள்ளன. தவிர்க்கவியலாக் குறைகள் இருப்பினும் அல்பரூனியின் படைப்பு அரிய திறனாய்வு. தற்கால அறிவியல் மனப்போக்கு , அனுதாப நுண்ணறிவு ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆழமான சமூகவியல் ஆய்வாகும் என்று சான்றிதழ் கொடுத்துள்ளார் ஜாதுநாத் சர்க்கார். “அறிவியல் கண்ணோட்டத்தோடு அல்பரூனி எழுதிய வரலாறு பிளினியின் இயற்கை வரலாற்றோடும், ஹம்போல்ட்டின் காஸ்மாஸோடும் ஒப்பிடத்தக்கது என்று கருதுகிறார் வில் டூரண்ட். அல்பரூனி நன்கு

குறிப்பு

கற்றறிந்த ஐரோப்பிய அறிஞரைப் போன்று எழுதியுள்ளதாகக் கூறுகிறார் பி.எ. சைக்ஸ். அல்பருனியின் நூல் மட்டும் இல்லாதிருக்குமானால் வடமேற்கில் உள்ள முஸ்லீம் அரசுகள் உறுதியாக ஊடுருவிய அக்காலத்து இந்தியாவைப் பற்றிய பல விஷயங்கள் மறைந்து போயிருக்கும் என்று கூறுகிறார் கு.ராஜய்யன்.

## 8.5. அபுல் பாசல் Abul Fazl (1551 - 1602)

அக்பரின் ஆத்மா" அபுல் பாசல் முகலாயர் கால வரலாற்று வரைவாளர். ஆக்ராவில் பிறந்த அபுல் பாசல் வயதுக்கு மீறிய அறிவாற்றல் பெற்றிருந்தார். இவரது சகோதரர் பெய்சி இவரை மன்னர் அக்பருக்கு அறிமுகம் செய்து வைத்தார் (1574). அபுல் பாசலின் அறிவுக் கூர்மையால் ஈர்க்கப்பட்ட அக்பர் அவரைத் தன் அந்தரங்க நண்பராக்கிக் கொண்டார்! அபுல் பாசல் அறிவுத் தெளிவாலும், அயரா உழைப்பாலும், அந்தரங்க சுத்தியான நம்பகத்தன்மையாலும் படிப்படியாக உயர்ந்து அக்பரின் பிரதம அமைச்சரானார். அக்பரின் ஆத்மாவாகத் திகழ்ந்த அபுல் பாசலின் உயர்வு கண்டு பொறாத அக்பரின் மகன் சலீம் சூழ்ச்சியால் அமைச்சரைக் கொன்று விட்டான் ! அறிவுச் சுடர் அணைக்கப்பட்டது. அபுல் பாசலின் படைப்புகள் அபுல் பாசல் அறிவுக்கடல். அற்புத ஆய்வாளர். வளமான எழுத்தாளர். இவர் அக்பரின் விருப்பப்படி அப்பேரரசரின் ஆட்சிக்கால வரலாற்றை வரைந்தார். அபுல் பாசலின் இரு பெரும் படைப்புகளாவன: 1) அக்பர் நாமா (யுமடியச யேஅய) மூன்று தொகுதிகளாக எழுதப்பட்டுள்ள இந்நூல், அ) தைமூரிலிருந்து "ஹுமாயூன் காலம் வரை ஆ) அக்பரின் ஆட்சிக் காலம் இ) சமூகப் பொருளாதார நிலைகள் பற்றி விவரிக்கிறது. அபுல் பாசல் இந்நூலில் அக்பரின் ஆட்சிக் காலத்தை ஆண்டு வரன்முறைப்படுத்தி நேர்மையோடும், பக்தியோடும், ஆர்வப்பற்றோடும் " விவரித்துள்ளார். 2) அயினி அக்பரி (யுiெ-யுமடியசi). இந்நூல் அக்பர் கால நிறுவனங்களைப் பற்றியது. அரசாங்கத் துறைகள், பொருள் வளங்கள், நீதி நிர்வாகம், அரசாங்க ஆணைகள், விதிகள், கட்டுப்பாடுகள், முக்கிய இடங்கள், இராணுவ அமைப்பு முறை, பிரபுக்களின் நிலை பற்றிய புள்ளி விவரங்களும் விளக்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. அபுல் பாசலின் பங்களிப்புகள் அபுல் பாசலின் வரலாற்றுப் பங்களிப்புகளாவன: 1). அக்பர் என்ற அறிவொளிமிக்க மாமனிதரின் சாதனைகளைப் பிற்காலச் சந்ததியினரும் போற்றிப் பாராட்ட வேண்டும் என்ற நோக்குடன் எழுதியுள்ளார். 2) ஆதாரங்களை ஆர்வத்துடன் திரட்டி, சரிபார்த்து, ஒப்பிட்டு, திறனாய்வு செய்து, பகுத்தாய்ந்து பயன்படுத்தியுள்ளார். 3) தத்துவ விளக்கங்களுக்கும் வரலாற்று விதிகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்காமல் நம்பத்தக்கத் தகவல்களுக்குச் சிறப்பிடமளித்துள்ளார். 4) புரவலர் அக்பரைப் பற்றி மட்டும் கூறாமல் அக்பர் கால முகலாயப் பேரரசைப் பற்றிய வரலாற்றை முழுமையாக வரைந்துள்ளார். 5.அக்பரைத் துதிபாடாமல் அவரது முயற்சிகளையும் சாதனைகளையும் பாராட்டுகிறார்.

6.அபுல் பாசல் வரலாற்றைத் தனித்தன்மை கொண்ட "அறிவியல் முத்து " (Pearl of Science) எனக் கருதினார். அபுல் பாசலின் குறைபாடுகள் அபுல் பாசலிடம் காணப்படும் குறைபாடுகளாவன: 1). அரசவை வரலாற்றாளராக இருந்து கொண்டு அவரது புரவலர் அக்பரை அளவுக்கதிகமாகப் புகழ்கிறார். 2). இவர் விருப்பு வெறுப்பு வட்டத்தை விட்டு வெளிவரவில்லை. உதாரணமாக இவர் ஷெர்ஷாவைப் பற்றி நியாயமாக எழுதத் தவறிவிட்டார். 3) உண்மையை மறைத்தும் திரித்தும் கூறுகிறார். 4)."உண்மை என்ற எழுதுகோலால்" எழுதப்போவதாகக் கூறிய அபுல் பாசல் அறிவு பூர்வமாகத் தொடர்ந்து எழுதவில்லை. அக்பரின் ஆட்சியைப் பிற நல்லாட்சிகளோடு ஒப்பிட்டு நோக்கவில்லை. 5). அக்பரின் ஆளுமை, நிர்வாகம், நிறுவனங்கள் ஆகியவற்றுக்குக் கொடுத்த முக்கியத்துவத்தைக் கலாச்சாரக் கூறுகளுக்குக் கொடுக்கவில்லை. 6). எழுத்து நடை சலிப்பூட்டக்கூடியதாக உள்ளது.

**மதிப்பீடு**

அபுல் பாசல் தன்னிகரற்ற வரலாற்று விவேகி. ஆர்வமிக்க வரலாற்று ஆய்வாளர். ஏழாண்டு காலம் உழைத்து அக்பர் நாமாவையும், அயினி அக்பரியையும் வரைந்தார். அபுல் பாசலின் குறைகளைப் பட்டியலிட்டுக் காட்டும் வின்சண்ட் ஸ்மித் கூட அக்பர் நாமா அக்பரின் ஆட்சிக் காலத்துக்கான அடித்தளம் என்று கூறியுள்ளார். இந்நூலை அபுல் பாசல் அவரது ஆசானைப் பற்றி மன்னிக்கக்கூடிய அன்போடு எழுதியுள்ளார் என்று கூறுகிறார் வில் டூரண்ட். அயினி அக்பரி திறமையோடு தயாரிக்கப்பட்ட அதிகாரப் பூர்வமான நம்பகமான தொகுப்பாகக் கருதப்படுகிறது. ஷெர்ஷாவைக் குறைகூறும் அபுல் பாசல் அந்த ஆப்கன் அரசரது வியத்தகு நீதி நிர்வாக முறையைப் பாராட்டியுள்ளார். அபுல் பாசல் முகலாயர் காலத்து மிக முக்கிய வரலாற்றாளர் என்று கூறுகிறார் பி.வி.பவான். அபுல் பாசல் வரலாற்றைத் திரித்துக் கூற முடியாத அளவுக்கு உயர்ந்த மனிதர் என்று குறிப்பிடுகிறார் ஆர்.சத்தியனாதய்யர்.

## 8.6. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

1. இது காஷ்மீர் பகுதியின் முழு வரலாற்றையும் கொண்டுள்ளது, ஆரம்பகாலம் தொடங்கி உரை உருவாக்கப்பட்ட வரை.

2. ராஜதரங்கனி தரங்காஸ் அல்லது அலைகள் என குறிப்பிடப்படும் மொத்தம் எட்டு புத்தகங்களில் 7,826 வசனங்களைக் கொண்டுள்ளது.

3. பண்டைய பெர்சியாவில், மாவீரர்கள் மற்றும் பாதிரியார்கள், துறவிகள் மற்றும் தீ-பூசாரிகள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், வானியலாளர்கள் மற்றும் பிற விஞ்ஞானிகள் மற்றும் விவசாயிகள் மற்றும் கைவினைஞர்கள் என நான்கு சமூக பிரிவுகள் அங்கீகரிக்கப்பட்டதாக அல்-பிருனி குறிப்பிட்டார்.

4. அக்பர்நாமாவின் அசல் வரைவு அக்பரிடம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன் ஐந்து முறை திருத்தப்பட்டது.

குறிப்பு

## 8.7. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்

1. இது காஷ்மீர் பகுதியின் முழு வரலாற்றையும் கொண்டுள்ளது, ஆரம்பகாலம் தொடங்கி உரை உருவாக்கப்பட்ட வரை.

2. ராஜதரங்கனி தரங்காஸ் அல்லது அலைகள் என குறிப்பிடப்படும் மொத்தம் எட்டு புத்தகங்களில் 7,826 வசனங்களைக் கொண்டுள்ளது.

3. பண்டைய பெர்சியாவில், மாவீரர்கள் மற்றும் பாதிரியார்கள், துறவிகள் மற்றும் தீ-பூசாரிகள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், வானியலாளர்கள் மற்றும் பிற விஞ்ஞானிகள் மற்றும் விவசாயிகள் மற்றும் கைவினைஞர்கள் என நான்கு சமூக பிரிவுகள் அங்கீகரிக்கப்பட்டதாக அல்-பிருனி குறிப்பிட்டார்.

4. அக்பர்நாமாவின் அசல் வரைவு அக்பரிடம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன் ஐந்து முறை திருத்தப்பட்டது.

## 8.8. அத்தியாயச் சுருக்கம்

- இன்றும், ராஜதரங்கிணி அந்த வகையான மிகவும் உண்மையான உரையாக விளங்குகிறது. இது காஷ்மீர் பகுதியின் முழு வரலாற்றையும் கொண்டுள்ளது, ஆரம்ப காலத்திலிருந்து உரை உருவாக்கப்பட்ட வரை. கல்ஹானா முஸ்லீம் சகாப்தத்திற்கு முன், இதிகாசமான மகாபாரதத்தின் காலம் முதல் சங்கராம தேவாவின் ஆட்சி (கி.பி. 1006) வரையிலான ஆரம்ப காலங்களிலிருந்து அதை விவரிக்கிறார்.
- அவரது வரலாற்றை எழுதுவதில், கல்ஹானா ஆராய்ச்சி செய்து, கடன் வாங்கி, உறுதிப்படுத்தி, இந்திய வரலாற்றாசிரியர்கள் எழுதினார். அவரது தகவல்கள் சாவிலக்கரா, பத்மமிரிஹா மற்றும் க்சேமேந்திரா போன்ற ஆசிரியர்களிடமிருந்தும், வேலைப்பாடுகள், இலக்கிய கையெழுத்துப் பிரதிகள், பிற வரலாறுகள் மற்றும் உள்ளூர் வாய்மொழி மரபுகள் ஆகியவற்றிலிருந்தும் வந்துள்ளன.
- பதினொன்றாம் நூற்றாண்டு 'அல்-பிருனியின் வயது' என்று கருதப்பட்டதில் இருந்து அல்-பிருனியின் இடத்தை விஞ்ஞானி மற்றும் அறிஞராக மதிப்பிடலாம். அவரது முழுப்பெயர் அபு-ரைஹான் முகமது.
- அவர் கஷ்டங்களை எதிர்கொண்டாலும், அல்-பிரூனி பொருள் ஈட்டுதல் மற்றும் வாழ்க்கையின் வசதிகளுக்கு எந்த

**குறிப்பு**

பலவீனத்தையும் வெளிப்படுத்தவில்லை. அவர் 1017 இல் மாமுனி வம்சத்தின் குவாரிஸ்ம் ஷாவின் அரசியல் ஆய்வாளராக இருந்தார், அவரது சொந்த நாடு மஹ்மூத் கஸ்னவியால் தாக்கப்பட்டு கைப்பற்றப்பட்டது.

- அவர் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு நீண்ட பயணம் செய்தார், இந்து மொழி, மதம் மற்றும் தத்துவத்தைப் படித்தார் மற்றும் ”தஹ்கிக்-இ-ஹிந்த்” அல்லது ”கிதாப்-உல்-ஹிந்த்” என்ற தலைப்பில் அரபு மொழியில் நாட்டையும் அதன் குடிமக்களையும் பற்றிய உன்னதமான கணக்கை எழுதினார். .
- மகத்தான உழைப்பு, அறிவியல் பகுத்தறிவு மற்றும் அயராத முயற்சிகள் அல்-பிருனியை இடைக்காலத்தின் மிகச்சிறந்த புவியியலாளர்களில் ஒருவராக மாற்றியது. அல்-பிருனி சமஸ்கிருத இலக்கியங்களை விரிவாகப் பயன்படுத்தினார், அதில் அவர் தனது வாதங்களுக்கு ஆதரவாக அத்தியாயம் மற்றும் வசனங்களை மேற்கோள் காட்டினார்.
- அக்பரின் சகாப்தத்தின் அரசியல், சமூக மற்றும் அறிவுசார் வளர்ச்சியும், அவரால் கற்பனை செய்யப்பட்டு தொடங்கப்பட்ட பேரரசின் நாவல் தன்மையும் அதை நிலைநிறுத்த ஒரு கல்விப் பிரச்சாரத்திற்கு அழைப்பு விடுத்ததை அப்துர் ரஷீத் கவனிக்கிறார். மேலும், மதம் மற்றும் அரசியல் குறித்த அவரது தாராளவாதக் கருத்துக்களால், அபுல் பசலை விட வேறு யாரும் அந்த பணியை சிறப்பாக செய்திருக்க முடியாது.
- இந்துக்கள் ஷிர்க் செய்தார்கள், அதாவது கடவுளின் பண்புகளை மனிதர்களுடனும் அவர்களின் உருவங்களுடனும் தொடர்புபடுத்துகிறார்கள் என்ற நம்பிக்கையில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான மத விரோதம் மற்றும் கசப்பு ஆகியவற்றின் மூலத்தை அபுல் ∴பசல் கண்டறிந்தார். இந்துக்கள் மீதான குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்று அபுல் ∴பசல் வலியுறுத்தினார்.
- அபுல் ∴பசல் அனைத்து வகையான ஆதாரங்களையும் சேகரித்தார் மற்றும் அக்பர் அவருக்கு எல்லா வழிகளிலும் உதவினார். அக்பர் தனது பத்தொன்பதாவது ஆட்சியாண்டில் நிறுவிய இம்பீரியல் ரெக்கார்ட் ஆபீஸிலிருந்து பல நிகழ்வுகளின் பதிவுகள் சேகரிக்கப்பட்டன.

## 8.9. முக்கிய சொற்கள்

இந்தியவியல்: இது இந்திய வரலாறு, இலக்கியம், தத்துவம் மற்றும் கலாச்சாரம் பற்றிய ஆய்வு ஆகும்.

குறிப்பு

தெளிவின்மை: ஒரு விஷயத்தின் உண்மைகள் அல்லது முழு விவரங்கள் அறியப்படுவதை வேண்டுமென்றே தடுக்கும் நடைமுறை இது.

அனாடகோனிசம்: இது நட்பற்ற அல்லது முரண்பட்ட குழுக்களுக்கு இடையே ஒரு செயலில் உள்ள விரோதம் அல்லது எதிர்ப்பு.

ஆட்சி ஆண்டு: இது தேதி அல்லது ஆண்டு நிறைவில் இருந்து கணக்கிடப்படும் ஆண்டு

## 8.10. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

**குறுகிய வினாக்கள்**

1. கல்ஹனாவின் ராஜதரங்கிணிக்கான தகவல் ஆதாரங்கள் என்ன?

2. அல்-பிரூனி ஆழ்ந்த புலமை பெற்ற பாடங்களைக் குறிப்பிடவும்.

3. கிதாப்-உல்-ஹிந்த் பற்றிய சிறு குறிப்பை எழுதவும்.

4. அபுல் ∴பசல் தனது பணியைச் செய்த இரண்டு வழிகளைப் பட்டியலிடுங்கள்.

**விரிவான வினாக்கள்**

1. அல்-பிருனியின் ஆரம்பகால வாழ்க்கையைப் பற்றி விவாதிக்கவும்.

2. இந்தியாவில் உள்ள சாதி அமைப்பு மற்றும் பெர்சியாவில் அதன் இணையான அல்-பிருனியின் கருத்துக்களை பகுப்பாய்வு செய்யுங்கள்.

## 8.11. கூடுதல் வாசிப்புகள்

Warren, John. 1998. *The Past and Its Presenters*: An Introduction to Issues in Historiography. London: Hodder & Stoughton Educational.

Ferro, Marc. 2003. *The Use and Abuse of History*: Or How the Past is Taught to Children. Abingdon: Routledge.

E. Sreedharan. 2004. *A Textbook of Historiography: 500 BC to AD 2000*. New Delhi: Orient Blackswan.

Sharma, Arvind. 2003. *Hinduism and its Sense of History*. New Delhi: OUP India.

Iggers, Georg G. 2005. *Historiography in the 20th Century: From Scientific Objectivity to the Postmodern Challenge*. Connecticut: Wesleyan University Press.

Stuart, Hughes H. 1964. *History as Art and as Science.* New York: Joanna Cotler Books.

Fea, John. 2013. *Why Study History? Reflecting on the Importance of the Past*. Washington: Baker Publishing Group.

குறிப்பு

# அலகு-9

## புகழ்பெற்ற இந்திய வரலாற்றாசிரியர்கள்: ஜதுநாத் சர்க்கார், கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, கே.கே. பிள்ளை, டி.டி. கோசாம்பி

உள்ளடக்கம்

9.1. முன்னுரை
9.2. நோக்கங்கள்
9.3. சாதுநாத் சர்கார் (Jadunath Sarkar)
 9.3.1. இளமைப்பருவம்
 9.3.2. வரலாற்று முறைகள்
9.4. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி (K.A.Nilakanta Sastri)
 9.4.1. இளமைப்பருவம்
9.4.2. நவீன வரலாற்றுப் பார்வை
9.4.3. வரலாறு அறிவியலா?
9.5. கனகசபை பிள்ளை (K.K.Pillai)
9.5.1. இளமைப்பருவம்
9.5.2. இவர் எழுதிய நூல்கள்
9.6. தாமோதர் தர்மானந்த கோசாம்பி (D.D. Kosambi)
 9.6.1. சாதவாகனர்களைப் பற்றிய கோசாம்பியின் கருத்து
9.7. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்
9.8. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்
9.9. அத்தியாயச் சுருக்கம்
9.10. முக்கிய சொற்கள்

9.11. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

9.12. கூடுதல் வாசிப்புகள்

குறிப்பு

## 9.1. முன்னுரை

இந்த பிரிவில், இருபதாம் நூற்றாண்டை சார்ந்த இந்திய வரலாற்றாசிரியர்கள் வரலாற்றுக்கு ஆற்றிய பங்களிப்புகளைப் பற்றி அறிந்து கொள்ள இயலும். இந்த அத்தியாயத்தில் விவாதிக்கப்பட்ட வரலாற்றாசிரியர்கள் ஜதுநாத் சர்க்கார், நீலகண்ட சாஸ்திரி, கே.கே. பிள்ளை மற்றும் டி.டி. கோசாம்பி.

ஜதுநாத் சர்க்கார் ஒரு சிறந்த வரலாற்றாசிரியர். அவரது வரலாற்றுப் படைப்புகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம், அவற்றில் முதலாவது முகலாய வரலாறு, அதைத் தொடர்ந்து மராட்டிய வரலாறு.

நீலகண்ட சாஸ்திரி 1892 இல் கல்லிடைக்குறிச்சியில் பிறந்தார். தென்னிந்திய வரலாற்றின் எழுத்தாளர்களில் அவர் மிகவும் குறிப்பிடத்தக்கவர், ஏனெனில் அவர் தென் பிராந்தியங்களில் இந்திய வரலாற்றின் குறிப்பிடத்தக்க காலங்கள் மற்றும் நிகழ்வுகளை விரிவாக எழுதியுள்ளார். அவரது படைப்புகள் வரலாற்றின் நிலையான குறிப்பு புத்தகங்களாக கருதப்படும் அளவிற்கு மதிப்பிடப்படுகின்றன.

கே.கே.பிள்ளை தென்னிந்தியாவைச் சேர்ந்த மற்றொரு வரலாற்றாசிரியர் ஆவார். அவர் ஏற்கனவே உள்ள வரலாற்று பதிவுகளை மறுகட்டமைப்பு செய்தார். அவரது குறிப்பிடத்தக்க படைப்புகளில் சில: தமிழர்களின் சமூக வரலாறு, நாஞ்சில்நாட்டின் ஆரம்பகால வரலாறு, மற்றும் தமிழ்நாடு வரலாறு.

டி.டி.கோசாம்பி வரலாற்று விசாரணையின் ஒப்பீட்டு முறையைப் பயன்படுத்தினார். கடந்த காலங்களில் மக்களிடையே உள்ள உறவுகளைப் புரிந்துகொள்வதற்கும் விளக்குவதற்கும் அவர் முதன்மை ஆதாரங்களைப் பயன்படுத்தினார்.

இந்த புகழ்பெற்ற வரலாற்றாசிரியர்கள் அனைவரும், நாடு முழுவதும் உள்ள பல்வேறு சமூகங்கள் மற்றும் மக்களின் வரலாறுகளைப் படித்து, எழுதி இந்திய வரலாற்றுக்கு பெருமைச் சேர்த்துள்ளனர்.

## 9.2. நோக்கங்கள்

**இந்த அத்தியாயத்தை படிப்பதன் மூலமாக கீழ்காண்பனவற்றை புரிந்து கொள்ள இயலும்**

குறிப்பு

- ஜதுநாத் சர்க்காரின் வரலாற்று புலமை மற்றும் படைப்புகளை பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது
- நீலகண்ட சாஸ்திரி மற்றும் கே.கே.பிள்ளையின் வரலாற்று அணுகுமுறைகள் மற்றும் படைப்புகளைப் பற்றி விவாதிக்கப்பட்டுள்ளது
- டி.டி. கோசாம்பியின். ஒப்பீட்டு முறை விளக்கப்பட்டுள்ளது

## 9.3. சாதுநாத் சர்க்கார் (Jadunath Sarkar)

### 9.3.1. இளமைப்பருவம்

சாதுநாத் சர்க்கார் வங்காளத்தில் ராக்சாகி மாவட்டத்தில் சுரக்மரியா கிராமத்தில் 1870 ஆம் ஆண்டு டிசம்பர் 10ஆம் நாள் பிறந்தார். இம்மாவட்டம் இப்போது பங்காளதேஷ்சில் உள்ளது. சர்க்கார் கிராம சூழ்நிலையில் வளர்ந்த போதிலும் அறிவுக்கூர்மை படைத்த மாணாக்கராக விளங்கினார். இவருடைய இளமைக் கல்வி இவரது கிராமத்திலேயே துவங்கியது. - சாதுநாத் சர்க்கார் கி.பி.1891ஆம் ஆண்டு கல்கத்தாவில் உள்ள மாநிலக் கல்லூரியில் ஆங்கிலத்திலும் வரலாற்றிலும் பட்டங்களை பெற்றார். கி. பி. 1892ஆம் ஆண்டு ஆங்கில இலக்கியத்தில் முதுகைலைப்பட்டம் பெற்றார். இதைத் தொடர்ந்து ஜுன் 1893ஆம் ஆண்டு கல்கத்தாவிலுள்ள ரிப்பன் கல்லூரியில் ஆங்கில விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். வித்தியாசாகர் கல்லூரியில் பணிபுரிந்து கொண்டிருந்த பொழுது பேராசிரியர் பதவியினை அடைந்தார். இவரது நூல்கள் கி. பி. 1901 ஆம் ஆண்டு இவரது முதல் வரலாற்று ஆய்வு நூலான ஔரங்சீப்பின் இந்தியா வெளியிடப்பட்டது. இதைத் தொடர்ந்து ஆங்கிலத் துறையிலிருந்து வரலாற்றுத் துறைக்கு இவர் மாறினர். இப்புத்தகத்தின் இறுதியில் பழைய சகாப்தம் முடிந்து புதிய சகாப்தம் துவங்குவது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இவர் இறுதியாக எழுதிய இந்தியாவின் இராணுவ வரலாறு அவர் மறைவுக்குப் பின் கி.பி. 1960ஆண்டு வெளியிடப்பட்டது. இப்புத்தகத்தில் பல முக்கியமான போர்கள் குறித்த விளக்கங்களும், காரணங்களும், இதன் முடிவுகளும் அடங்கியுள்ளன. சர்க்கார் பல போர்களை பற்றிய நிகழ்ச்சிகளை அப்படியே இந்நூலில் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

### 9.3.2. வரலாற்று முறைகள்

சர்க்காரின் வரலாற்று முறைகளை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம். 1. வரைபடவியல், 2. அடையாளம் காணுதல், 3.காலப்பாகுபாடு, 4. நோக்குமை ஆகும். அவருடைய சிறப்புகள் ஆய்வுக்காக எடுத்துக்கொண்ட தலைப்பை முழுமையாகவும், ஆழமாகவும் ஆய்வு செய்வதே ஆகும். சர்க்கார் வரலாறு எழுத துவங்கும் போது அவரது

குறிப்பு

ஆய்வுடன் தொடர்புடைய அனைத்து மொழிகளிலும் உள்ள சம காலத்து வரலாற்றாதாரங்கள் அனைத்தையும் அவரது கண்களில் நிறுத்தி உற்று நோக்குவார். அவர் ஆவணங்களை ஒருபோதும் பார்க்க தவறியதில்லை. அதே நேரத்தில் வரலாற்று முக்கியத்துவம் கொண்ட இடங்களுக்குச் சென்று ஆய்வு செய்து அவற்றையும் தனது ஆய்வுடன் தொடர்புபடுத்திக் காட்டியுள்ளார். சர்கார் சேகரித்த ஆதாரங்களில் பெருமளவில் அரிய வரைபடங்கள் காணப்படுகின்றன. அவைகள் தற்போது நூலகத்தில் வைத்துப் பாதுகாக்கப்படுகின்றன.

சில வரைப்படங்களின் உதவியுடன் சர்கார் சில படங்களை அடையாளங்காட்டி அவைகள் அமைந்திருக்கும் இடத்தையும் விரிவாகக் கூறியுள்ளார். எடுத்துக்காட்டாக தின்தோரி, தென்மேற்கில் 28 மைல் தொலைவில் நாசிக்கிலிருந்து 16 மைல் தொலைவு வடக்காக இருந்ததை இவர் குறிப்பிட்டுள்ளார். இவர் எழுதிய வரலாற்று நூல்களில் ஒரே பெயரைக் கொண்ட பல இடங்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. இவைகளை சர்கார் நுணுக்கமாக ஆராய்ந்து அவற்றிற்குரிய இடங்களை அடையாளம் காட்டியுள்ளார். அதே போல நகரங்களும் இருபெயர்களைக் கொண்டவையாக அமைந்திருப்பதை சர்கார் சுட்டிக்காட்டுகிறார். பிரபாத் அலகாபாத் என்றும் நாசிக் குல்ஸனாபாத் என்றும் பூனாமுசயாபாத் என்றும் அழைக்கப்பட்டன. மேலும் மராத்திய ஆவணங்களில் பெயர்கள் இந்திய மயமாக்கப்பட்டதைக் குறிப்பிட்டு அவை எவ்வாறு வரலாறு எழுதுவதற்கு தடையாக உள்ளன என்பதைக் சுட்டிக் காட்டியுள்ளார். உதாரணமாக, ஆன்டர்சன் என்றும் ஆங்கிலப் பெயர் மண்டக் என்று திரித்து கூறப்பட்டுள்ளது. இவ்வகையில் முறையான பெயர்களை கண்டுபிடித்து அவர் எழுதிய வரலாற்று நூல்களில் குறிப்பிட்டுள்ளார்.

சர்கார் நுணுக்கமான முறையில் காலப் பாகுபாட்டை கடைபிடித்துள்ளார். இம்முறை வரலாற்று நிகழ்ச்சிகளை அவை நிகழ்ந்த காலக் கட்டங்களில் சரியான வகையில் புரிந்து கொள்ள உதவுகிறது. உதாரணத்திற்கு மொகலாய காலபாகுபாட்டை முறைப்படுத்தி சிவாஜிக்கும் அவுரங்கசீப்பிற்கும் இடையே ஏற்பட்ட சந்திப்பு டெல்லியில் நடக்கவில்லை. மாறாக அச்சந்திப்பு ஆக்ராவில் தான் நடந்தது எனச் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் வரலாற்று நாயகர்கள் வரலாற்று நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளும் போது அவர்களுடைய காலக்கட்டங்களைக் குறிப்பிடுகின்றார். உதாரணத்திற்கு சிவாஜி அப்ஸல்கானைச் சந்தித்த போது சிவாஜிக்கு வயது 30. அதே போல சிந்தியாவிற்கு 16வயது இருக்கும் போது வடக்கு ரோக்ஞ் பஹுடயெடுத்தானீ. மேலும் விசுவேசுவரராவ்மூன்றாம் பானிப்பட்டில் மாண்ட போது அவருக்கு வயது 20க்குள் இருந்தது என்பதை சுட்டிக்காட்டி இத்தகைய நாயகர்களின்வீரச்செயல்களை எடுத்துக் காட்டியுள்ளார். ஒருவரலாற்று நிகழ்ச்சியை அறிந்து கொள்வதற்காக பல வரலாற்று ஆதாரங்களை சர்கார் உபயோகப்படுத்தியுள்ளார். இத்தகைய

ஆதாரங்களை ஒப்பு நோக்குவதன் மூலமாக ஒரு தீர்க்கமான முடிவுக்கு சர்காரால் வர முடிந்தது.

அவரைப் பொறுத்தவரை எந்த ஒரு வரலாற்று ஆதாரமும், நுணுக்கமான ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட வேண்டும். ஏனெனில் இச்செயலே ஆராய்ச்சியின் முதல் படி என்று சுட்டிக் காட்டுகின்றார். இவர் பல வெளிநாட்டு ஆதாரங்களைப் பகுத்து ஆராய்ந்து அவற்றிலுள்ள குறைகளைச் சுட்டிக்காட்டியுள்ளார். இதன் வாயிலாக பொய்யான ஆதாரங்கள் பலவற்றை வெளிக் கொணர்ந்துள்ளார். சர்காரைப் பொறுத்தவரை வரலாறு இறைவனுடைய ஆணைக்குட்பட்டது என்ற கருத்தைக் கொண்டிருந்தார். ஒரு மனிதனுடைய குணநலன்களும், நடத்தையுமே அவனுடைய விதியை நிர்ணயிக்கின்றன எனச் சுட்டிக் காட்டுகின்றார். உதாரணத்திற்கு இரண்டாம் ஷா ஆலம் முடிவு அவருடைய நடத்தையைப் பொருத்தே அமைந்தது என விளக்கமளிக்கின்றார். இதே கருத்து அவுரங்கசீப் வாழ்க்கைக்கும் பொருந்தும் என்று கூறியுள்ளார்.

சர்காரைப் பொறுத்தவரை உண்மையான வரலாறு என்பது எல்லாக் காலத்து மக்களுக்கும் பொருந்துகின்ற வகையில் உள்ள ஒரு சிறந்த பாடமாகும். சர்காரின் வரலாற்று நூல்கள் பல வரலாற்று ஆசிரியர்களால் குறை கூறப்படுகின்றன (அ) அவுரங்கசீப் பனாரசிலுள்ள இந்துக் கோவிலுக்கு நிலம் நன்கொடையாக வழங்கியது. (ஆ) ஜிஸியா வரியைப் பற்றி இவருடைய கருத்து (இ) சிவாஜி அப்ஸல்கானைக் கொன்றது ஒரு தற்காப்புக் கொலை என்னும் இவரது கருத்துக்களைக் குறை கூறுகின்றனர். இத்தகைய குறைகள் எல்லாவற்றிற்கும் சர்கார் முறையான வகையில் ஆதாரங்களைச் சுட்டிக்காட்டி பதிலளித்துள்ளார். உதாரணமாக, (அ) பதவிப் போட்டிக்கான போர்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது அவுரங்கசீப்பிற்கு இந்துக்களின் ஆதரவு தேவைப்பட்டது. எனவே அத்தருணத்தில் அவர் பனாரசில் உள்ள இந்துக்கோயில்களுக்கு நிலம் வழங்கினார். (ஆ ஜிஸியா வரியைப் பற்றி கருத்துக்கள் இவரது சொந்தக்கருத்துக்கள் அல்ல என்றும் ஆவணங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட குறிப்புகளே என்று ஆதாரத்துடன் சுட்டிக்காட்டியுள்ளார். (இ) அகமத் நகரின் முதலமைச்சரும் வரலாற்று ஆசிரியருமாக இருந்த நைஸாம் முல் முல்க் கொடுத்துள்ள ஆதாரத்தின் படி அப்ஸல்கான், சிவாஜியை முதலில் தாக்கினார். தன்னை பாதுகாத்துக் கொள்வதற்காகவே சிவாஜி அப்ஸ்ல்கானைக் கொல்ல நேரிட்டது என்றும் விளக்கத்தை ஆதாரத்துடன் சர்கார் அளித்துள்ளார்.

### மதிப்பீடு

சர்கார் இந்திய வரலாற்று ஆசிரியர்களில் தலை சிறந்தவராகக் கருதப்படுகிறார். இவருடைய வரலாற்று முறைகள் அடுத்து வந்த வரலாற்று ஆசிரியர்கள் பின்பற்றும்படி அமைந்தன. முக்கியமாக கனங்கோ மற்றும் ஸ்ரீ வஸ்தவா, சர்மா, ஈஸ்வரி பிரசாத் நைஸாமி

போன்றறோரைக் குறிப்பிடலாம். இவர் விட்டுச்சென்ற ஆவணங்கள் வரலாற்று மாணவர்களுக்குக் கருவூலமாக அமைந்துள்ளன. இவ்வகையில் சர்க்காரின் பணி தொடர்ந்து வரலாற்றிற்கு நன்மை புரிந்து வருகின்றது.

## 9.4. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி (K.A.Nilakanta Sastri)

### 9.4.1. இளமைப்பருவம்

கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, கி.பி.1892 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 12ம் நாள் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கல்லிடைக்குறிச்சி என்னும் ஊரில் தெலுங்கு பிராமண குடும்பத்தில் பிறந்தார். அவர் இளமைக் கல்வியைக் கல்லிடைக்குறிச்சி சார்ச் மேல்நிலைப்பள்ளியிலும், அம்பாசமுத்திர மேல்நிலைப்பள்ளி என அக்காலத்தில் அழைக்கப்பட்ட தீர்த்தபதி மேல்நிலைப்பள்ளியிலும் பயின்றார். அவருடய பி.ஏ. பட்டப்படிப்பிற்காக ரூபாய் 14 உதவித் தொகையாகப் பெற்றார். கி.பி. 1913 ஆம் ஆண்டு சென்னை கிறித்துவ கல்லூரியில் எம்.ஏ படிப்பில் முதல் வகுப்பில் தேர்வு பெற்றார். இவர் திருநெல்வேலியிலுள்ள இந்துக் கல்லூயின் முக்கிய பிரதிநிதியாக பொறுப்பேற்றார். நாட்டுப்பற்று மற்றும் விட்டுக் கொடுக்கும் கொள்கையுடன், பொது நலனைக் கருத்தில் கொண்டு அங்கே பேராசிரியர்கள் மாணவர்களை ஊக்குவிப்பவர்களாக மாற்றப்பட்டனர்.

கி.பி. 1918 ஆம் ஆண்டு முதல் கி.கி. 1920 ஆம் ஆண்டு வரை பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணியாற்றினார். பின்னர் சிதம்பரம் மீனாட்சி கல்லூரியின் முதல்வர் பதவியைப் பெற்றார். இக்கல்லூரி தற்போது அண்ணாமலை பல்கலைக்கழகம் என்னும் பெயரில் செயல்பட்டு வருகிறது. அங்கே, தான் ஒரு சிறந்த ஆராய்ச்சித் திறன் பெற்றவர் என்பதையும் நிருபித்துக் காண்பித்தார். கி.பி. 1920 ஆம் ஆண்டு முதல் கி.பி. 1929 ஆம் ஆண்டு வரை அப் பதவியில் நீடித்தார்.

வரலாறு மற்றும் தொல்பொருள் ஆய்வுத்துறையின் தலைவராக இருந்த டாக்டர் அய்யங்கார் பணியிலிருந்து ஓய்வு பெற்ற போது கே.ஏ. என். சாஸ்திரி, ஜே.என். சர்க்கார் மற்றும் அருட்தந்தை ஹீராஸ் அடங்கிய குழு மூலம் முதல் கட்டமாக அப்பதவியில் அமர்த்தப்பட்டார். கி.பி. 1929 ஆம் ஆண்டு பணியில் சேர்ந்து 1947 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

கி. பி. 1951 ஆம் ஆண்டு லக்னோவில் நடைபெற்ற கீழைநாடுகளைச் சார்ந்த அனைத்திந்திய மாநாட்டின் தலைவராக சாஸ்திரி பதவி வகித்தார். இவர் பல்வேறு கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளுக்குத் தலைமைப் பொறுப்பேற்று செயலாற்றினார். ராயல் ஆசியாடிக் சொசைட்டியின் பம்பாய், இலங்கை மற்றும் பல்வேறு பிரிவுகளிலும் Ecole Francaise Extreme Orient Saigon ஆகியவற்றிலும் கௌரவ

குறிப்பு

உறுப்பினராகவும் பணியாற்றினார். பிரிட்டன், அயர்லாந்தின் ராயல் ஆசியாடிக் சொசைட்டியின் வரலாறு உறுப்பினராகவும் டெல்லி, மத்திய தொல்லியல் ஆலோசனைக் குழுவின் உறுப்பினராகவும் செயலாற்றினார்.

கி. பி. 1952 ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழகத்தின் பேரராசிரியராக இருந்து ஓய்வு பெற்ற பின், ஐ.நா. நிறுவனத்தின் இந்தியா வரலாற்று ஆய்வுத் துறைக்குப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். இப்பதவியில் இவர் கி. பி. 1956 ஆம் ஆண்டு வரை பொறுப்பேற்று இருந்தார்.

கி.பி. 1958 ஆம் ஆண்டு இந்திய அரசு பத்மவிபூசன் விருதை இவருக்கு வழங்கியது. பன்னாட்டு கலாச்சார கழகமான யுனெஸ்கோ , சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து தென்கிழக்கு ஆசிய மரபு வழிப்பண்பாட்டு மையம் ஒன்றை கி. பி. 1957ஆம் ஆண்டு சென்னையில் நிறுவயது. இம்மையத்தின் இயக்குநராக கே.ஏ நீலகண்ட சாஸ்திரி நியமிக்கப்பட்டார். ஆறுமாதம் பேரராசிரியராககி.பி.1959ஆம் ஆண்டு சிகாகோ பல்கலைக் கழகத்திற்கு இவர் சென்றார். கே. ஏ.என். சாஸ்திரியின் நூல்கள் இவர் 22 நூல்களையும், 159 ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அவை அனைத்துமே அவரின் தனிவழியில் இணையற்றதாக உள்ளன. அவற்றில் சில முக்கியமானவைகள் மட்டுமே கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. பாண்டிய அரசு

2. சோழர் வரலாறு மற்றும் ஆட்சி முறையில் ஆய்வுகள்

3. சோழர்கள் (இரண்டு தொகுதிகள )

4. தென்னிந்திய வரலாற்றும் சிக்கலுக்குத் தொடர்புடைய வரலாற்று முறை

5. தூரக்கிழக்கு நாடுகளில் தென்னிந்திய தாக்கங்கள்.

6. இந்தியாவின் ஒரு பரந்த வரலாறு (தொகுதி இரண்டு).(பதிப்பாசிரியர்)

7. நந்தர்கள் மற்றும் மௌரியர்களின் காலம்.

8. தென்னிந்திய வரலாறு. சோழர்கள்

கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியின் சோழர்கள் நூல் ஒரு இலக்கியப் பெரும்படைப்பாகும். இந்நூல் வரலாற்றின் பால் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரிக்கு இருந்த விருப்பத்தினையும் கடின வேலையை ஏற்றுக் கொண்டதையும் காட்டுகிறது. சோழர் வரலாற்றுச் சான்றுகளின் ஒரு பொதுத் திட்டத்துடன் தொடங்கும் இந்நூலை மூன்று பெரும் வம்சாவழியினதாகப் பிரிக்கலாம். அவை 1.சங்க கால சோழ அரசர்கள், 2. சோழர்களின் பேரரசு, 3. சாணக்கிய வழிச் சோழர்கள்.

இந்நூல் சோழர்களின் பண்பாட்டு நிலைகளுடன், ஆட்சி முறை மத்திய மற்றும் உள்ளாட்சி அரசாங்கம், சமயம், இலக்கியம், சமூகப் பொருளாதார நிலை, கலை, கட்டடக்கலை ஆகியவைகள் பற்றி விளக்குகின்றது. அவருடைய இந்த ஆய்வு சோழர்களைப் பற்றிய ஆய்வை மேற்கொள்ள விரும்பும் ஆய்வாளர்களுக்கு சிறந்த வழிகாட்டி ஆகும்.

இவரது ஆய்வு முறையியல் தென்னிந்திய வரலாற்றுச் சிக்கலுக்கான ஆன தொடர்பின் வரலாற்று முறை என்னும் நூலில் வரலாற்றுக் கட்டுரைகள் எழுதுவதில் அவருடைய செயல் முறையை நீலகண்ட சாஸ்திரி நன்கு விளக்கியுள்ளார். தென்னிந்திய வரலாற்றாய்வில் முக்கியமாக இந்திய வரலாற்றின் ஒரு தெளிவான பகுதியினை நிறைவு செய்து தந்துள்ளார்.

### 9.4.2. நவீன வரலாற்றுப் பார்வை

சாஸ்திரியின் கூற்றுப்படி நவீன வரலாற்று முறையானது கடைசி நூற்றாண்டிலும் அதற்குப் பிந்திய பாதி நூற்றாண்டுக்காலத்திலும் உருவானவை. இதற்கு முந்திய காலங்களில் வரலாற்று ஆசிரியர்களான ஹெரோடோடஸ், தூசிடைடிஸ், லிவி ஆகியோர் மேற்கிலும் கல்கணர், இபன் கல்டூண் ஆகிய வரலாற்று ஆசிரியர்கள் கிழக்கிலும், வரலாற்றைப் பற்றி பல தொகுதிகள் எழுதியிருந்த போதிலும் அவர்களுடைய வரலாற்றுப் பார்வை தற்போதைய நவீன வரலாற்றுப் பார்வையிலிருந்து வேறுபட்டுள்ளது. உயிரியலின் வாழ்க்கை வளர்ச்சியானது வரலாற்று ஆதாரங்கள் மூலமாகச் சொல்லப்படுகின்றது. அனைத்துவிதமான கருத்துகளின் மதிப்பீட்டிற்கும் வரலாறே அடிப்படையானது என்று சாஸ்திரி கூறியுள்ளார்.

வரலாற்றில் மதிப்பீடுக் கொள்கைக்கும் எந்தவிதமான வேறுபாடும் கிடையாது என்றும் இயற்கையின் மற்றும் வரலாற்றின் சிறுசிறு மாற்றங்களைப் பின்பற்றி படிப்பதுதான் மதிப்பீடு என்றும் சாஸ்திரி கூறுகிறார். வரலாறு என்பது அரசர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளும் போர்களைப் பற்றிய செய்திகள் மட்டும் அல்ல, அந்த வாழ்க்கைக்குள் பொதுமக்கள் செய்யும் வேலைகளும் அடங்கி இருக்கிறது என்று குறிப்பிடுகின்றார். வரலாற்று மறு அமைப்பு வரலாற்றை மறு அமைப்பு செய்யும் பொழுது கடந்தகால ஆதாரங்கள் என்பது முக்கியமானவை. ஆனால் ஆதாரங்கள் மட்டுமே வரலாறாகாது. முழுமையான வரலாற்று முதிர்ச்சி இல்லாத வரலாற்றாளர்கள் ஆதாரங்களைத் தேடாமல் கதைகளை அப்படியே வரலாறு என நம்பி விட்டனர். ஆனால் அனுபவம் முதிர்ந்த வரலாற்றாசிரியர்கள் அவற்றை வரலாற்று ஆதாரங்களுடன் இணைத்தனர். உதாரணமாக மாம்சன் என்பவர் ஒரு அடிக்குறிப்பு கூட இல்லாமல் ரோம் வரலாற்றை எழுதியுள்ளார். இதில் நிகழ்ச்சிகளுக்குப் பதிலாக முடிவுகள் நிரப்பட்டுள்ளன. வரலாற்று வல்லுனர்கள் எங்கு இருக்கிறார்களோ அங்கு வரலாறு இருக்கும். அவர்கள் இல்லையேல்

குறிப்பு

வரலாறும் இருப்பதில்லை. ஆனால் வரலாற்றாளனாக மட்டுமல்லாது அதில் அனுபவம் முதிர்ந்த அறிவும் படைப்பில் இருக்க வேண்டும் என சாஸ்திரி கூறுகிறார்.

### 9.4.3. வரலாறு அறிவியலா?

வரலாறு என்பது முழுமையான அறிவியல் என்னும் பியூரியின் கருத்துடன் சாஸ்திரி உடன்படுகின்றார். அறிவியல் வரலாற்று முறையின் அடிப்படை இயற்கையின் தன்மைகளைச் சோதனைக்குட்படுத்தி உண்மைகளை கண்டறிவது தான்.

மற்றொரு புறத்தில், வரலாறு எழுவதற்கு தேவையான ஒன்று சுய அறிவே ஆகும். மற்றபடி வரலாறு என்பது செயல் முறையில் நடக்க முடியாதது. உருவ மாற்றத்தைத் தவிர, மொகஞ்சதரோவின் காலத்தில் வாழ முடியாது. வரலாற்றின் செய்திக் குறிப்புகளான ˙ கடந்து போன காலம், இறந்தவை, சென்றவைகள் ஆகியனவைகளான இவைகள் இணையற்றவையாக உள்ளன. ஒரே மாதிரியாக இரண்டு வரலாற்றுச் சூழ்நிலைகள் இருக்கவில்லை . வரலாறு என்பது மனிதனின் நடவடிக்கைகள் அவனது இயக்கம் ஆகியவைகளுடன் சேர்ந்தே பெருமளவு உள்ளது. எல்லாக் காலங்களிலும் அவைகள் புரிந்து கொள்ளப்படவில்லை.

கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி வரலாற்று ஆசிரியரான ஜெ.பி. பியூரியின் கூற்றான துல்லியமாக வரலாறு என்பது ஒரு அறிவியலே என்பதை ஏற்றுக் கொள்கிறார். அறிவியல் முறையில் ஆதாரங்களைக் கொண்டு ஆராய்ச்சி முடிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய ஆதாரங்களைச் சோதனைக்குட்படுத்தலாம். இவ்வகையில் அறிவியல் ஆதாரங்கள் எக்காலத்திற்கும் பொதுவானது.

மாறாக அந்தரங்க செய்திகள், வரலாறு எழுவதற்கு அடிப்படையாக அமைகின்றன. இத்தகைய ஆதாரங்கள் கடந்த காலத்தைச் சார்ந்தவை. எனவே வரலாற்று ஆசிரியர் நிகழ்காலத்திலும், வரலாற்று நிகழ்ச்சிகள் கடந்த காலத்திலும் அமைந்துள்ளன. இது வரலாற்றின் நியதி வரலாற்றைத் தொகுக்கும் பொழுது முறையான வரலாற்று ஆதாரங்கள் கிடைப்பதில்லை. எனில் அத்தகைய முயற்சி நூறு மடங்கு கடினமான முயற்சியாகிவிடும். மேலும் வரலாற்றில் ஒவ்வொரு நிலையிலும் மனித செயல்களும் நிகழ்ச்சிகளும் வரலாற்று ஆசிரியரின் முயற்சியைக் கடுமையாக்குகின்றன. இவ்வகையில் வரலாறு எழுதுவது என்பது புற நோக்குத் தன்மையுடன் அணுகும் அறிவியலை விட கடினமான செயலாகும். வரலாறு என்பது ஒரு ஓவியத்தைப் போன்ற ஒன்று. அவ்வோவியம் படைத்தவனுடைய மனநிலை, திறமை, அவ்வோவியத்தின் பின்னணி போன்றவை ஒரு ஓவியப்படைப்பில் அடங்கிவிடுகின்றன. ஆனால் ஒரு இயற்பியல் விதி போல் ஓவியம் செயல்படுவதில்லை . வரலாறு அறிவியலின் ஒரு பகுதியை நமக்கு உணர்த்துகிறது. ஆனால்

இத்தகைய வரலாற்று அறிவைப் போல பொதுமைப்படுத்தி பயன்படுத்த இயலாது. இருப்பினும் வரலாற்று ஆய்வாளர்களும் அறிவியல் ஆய்வாளர்களும் தங்களுடைய குறிக்கோளை அடைய முறையான அறிவியல் பூர்வமான அணுகுமுறைகளைக் கடைபிடிக்கின்றனர்.

**மதிப்பீடு**

இறுதியில் கே.ஏ. என். சாஸ்திரி ஒரு சிறந்த வரலாற்று ஆசிரியர் உண்மையான ஆதாரங்களின் அடிப்படையில் வரலாற்றை படைப்பார் என விளக்கமளிக்கின்றார். கே.ஏ. என். சாஸ்திரி உருவாக்கிய வரலாற்று நூல்களில் முக்கியமாகக் கருதப்படுவது சோழர்களின் வரலாறு. மேலும் சங்க காலத்தை அறிவியல் பூர்வமாக வெளிப்படுத்தியவர் கே. ஏ. என். சாஸ்திரியாவார். பண்டைய தமிழக வரலாற்றில் இவர் உருவாக்கிய பல கோட்பாடுகள் இன்னும் நிலைத்து நிற்கின்றன. இவர் ஆற்றிய பணியின் காரணமாக தமிழக வரலாற்று ஆசிரியர்களுள் தலைசிறந்தவராக கே.ஏ. என். சாஸ்திரி கருதப்படுகிறார்.

## 9.5. கனகசபை பிள்ளை (K.K.Pillai)

### 9.5.1. இளமைப்பருவம்

கே.கே. பிள்ளை , கி. பி. 1905 ஆம் ஆண்டு ஏப்ரல் 3ஆம்நாள் கன்னியாகுமரி மாவட்டத்தில் பிறந்தார். இவர் பள்ளி நாட்களில் அறிவுக் கூர்மையுடன் விளங்கினார். கி.பி. 1927ஆம் ஆண்டு வரலாற்றில் முதுகலைப்பட்டம் பெற்றார். கி.பி. 1946 ஆம் ஆண்டு இவர் “சுசீந்திரம்” கோயில் பற்றி ஆய்வு செய்து சென்னைப் பல்கலைக்கழகத்தில் எம்.லிட் பட்டம் பெற்றார். இதைத் தொடர்ந்து மேற்படிப்பிற்காக இலண்டனில் உள்ள கிழக்கத்திய மற்றும் ஆப்பிரிக்க ஆராய்ச்சி மையத்திற்குச் சென்றார். அங்கு பேராசிரியர் சி. எச். பிலிப்ஸ் மேற்பார்வையின் கீழ் 1948 ஆம் ஆண்டு பட்டம் பெற்றார். அப்பொழுது அவர் எழுதிய ஆய்வுக்கட்டுரையின் தலைப்பு சென்னை மாநிலத்தின் தன்னாட்சி வரலாறு கி.பி. 1882- கி.பி. 1918.

இவர் சென்னை மாநிலத்தில் கல்வித்துறையில் உதவிப் பேரரசிரியராக கி. பி. 1928லிருந்து கி.பி. 1946ஆம் ஆண்டு வரை பணிபுரிந்தார். மூன்றாண்டுகள் இங்கிலாந்தில் மேற்படிப்பை முடித்துவிட்டு திரும்பிய பொழுது கி.பி.1951 ஆம் ஆண்டு சென்னை மாநிலக் கல்லூரியின் வரலாற்றுத் துறையின் தலைவராகவும், மாநிலக் கல்லூரியின் வரலாற்றுத் துறையின் தலைவராகவும், பேரரசிரியராகவும் நியமிக்கப்பட்டார். கி.பி. 1953 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தின் இந்திய வரலாற்றுத் துறையின் தலைவராகவும், பேரரசிரியராகவும் பொறுப்பேற்றார். ஐந்தாண்டு காலம் இப்பதவியில்

குறிப்பு

இருந்தார். பின்னர் சென்னைப் பல்கலைக் கழகத்திலுள்ள பண்பாட்டு மரபு மையத்தின் இயக்குனராகப் பணியாற்றினார். அப்பதவியிலிருக்கும் போதே இயற்கையெய்தினார்.

### 9.5.2. இவர் எழுதிய நூல்கள்

இவர் ஆய்வின் மூலமாக தமிழக வரலாற்றின் சிறப்புகளை வெளிக் கொணர்ந்துள்ளார். இவர் எழுதிய நூல்கள் பல இருப்பினும் முக்கியமான நூல்கள் பின்வருமாறு. 1. சுசீந்திரம் கோயில் 2. சென்னை மாநிலத்தின் தன்னாட்சி வரலாறு (1882-1918) 3. நாஞ்சில் நாட்டின் துவக்க கால வரலாறு 4. தமிழகர்களின் துவக்கால வரலாறு 5. தமிழக வரலாற்று நோக்குடன் இந்திய வரலாறு ஓர் ஆய்வு வரலாற்று முறைகள் கே.கே. பிள்ளை தற்காலத்தில் தோன்றிய ஒரு சிறந்த வரலாற்று ஆசிரியராவார். தமிழக வரலாற்றை அறிவியல் நோக்குடன் ஆராய்ச்சி செய்தார். வரலாறு எழுதும் பொழுது வரலாற்று ஆசிரியர் பாரபட்சமின்றி செயல்பட வேண்டும் என்பது இவரது கருத்து. அதே போல அறிவியல் அணுகுமுறை வரலாற்று ஆய்வுக்கு முக்கியமானது என்பதையும் சுட்டிக்காட்டினார். வரலாறு படைக்கும் பொழுது சார்புத்தன்மையின்றி, புற நோக்குத் தன்மையுடன் செயல்படவேண்டும், என்பதை வலியுறுத்தியுள்ளார். வரலாற்று ஆசிரியர் நீதிபதி போல திறந்த மனத்துடன் செயல்பட வேண்டும். மேலும் பண்டைய வரலாற்று ஆதாரங்கள், வரலாற்றுச் செய்திகளை விட கட்டுக்கதைகளையும், புராணக்கதைகளையும் தாங்கியுள்ளது என்பதை ஆதாரத்துடன் விளக்கியுள்ளார். உதாரணமான சின்னமனூர், பட்டயங்களில் வல்லப் பாண்டியன் உலகம் முழுவதும் தனது குடையின் கீழ் கொண்டு வந்தாகக் கூறப்பட்டுள்ளது. அதே போல நரசிம்மவர்மன் பல்லவன் சிவன் மற்றும் பிரம்மா போன்றவர்களுக்கு இணையானவன் என்று குறிப்பிடுவதையும் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே கே. கே. பிள்ளை வரலாற்று மூல ஆதாரங்களை கண்மூடித்தனமாக பயன்படுத்தலாகாது என்று சுட்டிக்காட்டி எழுதியுள்ளார்.

வரலாற்று ஆசிரியர் எந்த பகுதியின் வரலாற்றை எழுதுகிறாரோ அப்பகுதியின் மொழி தெரிந்திருக்க வேண்டும் இல்லையேல் துணை ஆதாரங்களைக் கொண்டு தான் வரலாறு எழுத வேண்டும் என்கிறார். உதாரணமாக மெகஸ்தனிஸையும், வின்ஸெண்ட் ஸ்மித்தையும் சுட்டிக் காட்டுகின்றார். மெகஸ்தனிஸ் இந்திய சமூகத்தைப் பற்றி முழுமையாக அறிய முடியாமைக்குக் காரணம் இந்திய மொழிகளை அறியாததே. அதே போல வின்ஸெண்ட் ஸ்மித் தென்னிந்திய மொழிகளை அறிந்திருக்காததால் அவர் எழுதிய இந்திய வரலாற்றைக் காவிரிக் கரையிலிருந்து எழுத முடியவில்லை .

ஒரு வரலாற்று ஆசிரியர் பல துறைகளிலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்னும் கருத்தை இவர் வலியுறுத்துகின்றார். உதாரணமாக, ஒரு வரலாற்று ஆசிரியர் கல்வெட்டியல், மனித இன இயல், சமூக

இயல், தத்துவம், உளவியல் மற்றும் அரசியல் ஆகிய இத்துறைகளில் தேர்ச்சி பெற்றிருந்தாலன்றி அவர் எழுதுகின்ற முழுவரலாற்றின் முக்கியத்துவத்தை உணர்த்த இயலாது என்று கூறுகின்றார்.

குறிப்பு

மேலும், ஆதாரங்களைப் பகுத்து ஆய்வு செய்யும் பொழுது ஒரு நிகழ்ச்சி இருவகையான ஆதாரங்களைக் கொண்டு உறுதிப்பட வேண்டும். இதற்கு உதாரணமாக கிரேக்க வரலாற்று ஆதாரங்களையும், இலங்கை வரலாற்று ஆதாரங்களையும் சுட்டிக்காட்டி அவை எவ்வாறு இந்திய வரலாற்று நிகழ்ச்சிகளை உறுதிப்படுவதற்கு பயன்படுகின்றன என்பதையும் சுட்டிக்காட்டுகின்றார்.

ஒரு வரலாறு எழுதுவதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் மட்டுமே முக்கியமானவை அல்ல. மாறாக, இலக்கியத்திற்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும் என்பது பேராசிரியர் கே.கே. பிள்ளையின் கருத்து. இதற்குக் காரணம் கல்வெட்டுக்கள் முழுவரலாற்றுச் செய்திகளையும் தாங்கி இருக்க வாய்ப்பு இல்லை. அத்தகைய செய்திகளை இலக்கிய ஆதாரங்கள் நிறைவு செய்கின்றன. உதாரணமாக பல்லவர் கல்வெட்டுகள் நந்திவர்மனின் போர்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது தெள்ளாற்று போரை மட்டுமே குறிப்பிடுகிறது. ஆனால் நந்திக்கலம்பகத்தில் கடம்பூர், தொண்டி மற்றும் பழையாறை போன்ற இடங்களில் நந்திவர்மன் நடத்திய போர்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வரலாற்றில் புறநோக்குத் தன்மை எதிரிகளாக மொழிப்பற்று, இனப்பற்று, மண்டலப்பற்று ஆகியவற்றைச் சுட்டிக் காட்டுகின்றார்.

வரலாறு என்பது மக்களின் வாழ்க்கை , சமூக நிலை பற்றியதாகும். ஆங்கில வரலாற்று ஆசிரியர்களான மெக்காலே, மெயின், ஹண்டர், லயஸ் மற்றும் ஸ்மித் போன்றோர், சமூக வரலாற்றை விட அரசியல் மற்றும் நிர்வாக வரலாற்றுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளனர். எனவே சம நிலையிலான வரலாறு எழுதப்படுதல் வேண்டும்.

இந்திய வரலாற்றைப் பொறுத்தவரை வரலாற்றின் துவக்கமாக வைகை மற்றும் காவிரி வேண்டும். இவர் சிந்து சமவெளி நாகரீகத்திற்கும், தமிழக நாகரிகத்திற்கும் பல ஒற்றுமை இருப்பதை சுட்டிக்காட்டுகின்றார். அதேபோல் பல்லவர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது அவர்கள் முதலில் சத்திரியர்களாகவும், பின்னர் அந்தணர் நிலையை அடைந்தனர் என்றும் பிள்ளையவர்கள் சுட்டிக்காட்டுகின்றார். இதன் பிரதிபலிப்பாக, ஆரிய கலாச்சாரமும், சமஸ்கிருதமும் தமிழ்நாடு முழுவதும் பரவியுள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றார்.

கே.கே. பிள்ளை சாதி பாகுபாட்டையும் தமிழ்நாட்டில் அவை தோன்றிய விதம் பற்றியும் விரிவாக பற்றியும் விரிவாக ஆராய்ச்சி செய்து வெளியிட்டு உள்ளார். இவரைப் பொறுத்தவரை ஒரு வரலாற்று ஆசிரியர்.

பல ஆதாரங்களிலிருந்து வரலாற்று உண்மைகளைச் சேகரிக்க முடியும் என வலியுறுத்துகிறார்.

**மதிப்பீடு**

பண்மைய, இடைக்கால மற்றும் நவீன தமிழக வரலாற்றைச் சீரிய ஆய்வின் மூலமாக வெளிப்படுத்திய பெருமை கே.கே.பிள்ளை அவர்களையே சாரும். இவர் தற்காலத்தில் வாழ்ந்து மறைந்த தமிழகத்தின் தலைசிறந்த வரலாற்றாளர் ஆவார். இவர் எழுதிய தமிழர்களின் சமூக வரலாறு மிகச் சிறந்த நூலாகக் கருதப்படுகிறது. இவர் கடைப்பிடித்த வரலாற்று முறைகளும் அறிவியல் அணுகுமுறையாகும். புறநோக்குத் தன்மை கொண்டதாகும். இவர் வரலாற்று ஆதாரங்களைக் கடுமையான சோதனைக்குட்படுத்தி வரலாற்று நூல்களைப் படைத்துள்ளார்.

## 9.6. தாமோதர் தர்மானந்த கோசாம்பி (D.D. Kosambi)

இந்தியாவில் வரலாற்று ஆய்வும் வரலாறு எழுதலும் பல்வேறு முறைகளில் அதிகரித்திருக்கின்றன என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. வம்ச வரலாறுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஆங்கிலேயர்களின் அடிச்சுவடுகள் ஆங்காங்கே ஆய்வு மற்றும் எழுத்துகளில் பின்பற்றப்படுவது என்பது கூட உண்மையாகத்தான் இருக்கிறது. இதில் மார்க்சிய சுழற்சி பார்வையின் கீழ், இந்திய டி.டி.கோசம்பி வரலாற்று வரைவியலின் குழப்பமான போக்கு மற்றும் செயல்திறன் அற்ற பார்வையில், ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்திய வராக கோசாம்பி இருந்தார். கோசாம்பி கணிதவியலை நன்கு அறிந்திருந்தார். ஒரு வரலாற்றாளராக கோசாம்பியின் பணி மிகவும் உயர்ந்த ஒன்று. கோசாம்பி பழங்கால இந்திய வரலாறு மற்றும் பண்பாடு தொடர்பாக 100 ஆய்வுக் கட்டுரைகளைப் பல்வேறு விதமான முறைகளில் எழுதியுள்ளார். இந்திய வரலாற்று ஆய்வுக்கான LOCATION (Introduction to the Study of Indian History - 1956), வரலாற்று எச்சங்களில் பழங்கால இந்திய நாகரிகமும் பண்பாடும் (Culture and Civilization of Ancient India in Historical Outline - 1965) ஆகிய இரண்டும் இந்திய வரலாற்றை மரபு வழி அணுகுமுறையின் அடிப்படையில் நிலை நிறுத்தாமல் திறம்பட புதிய முறையில் எழுதப்பட்டுள்ளன.

இவர் மார்க்சிய வரலாற்றாளன், மார்க்ஸ் ஏங்கல்ஸ் கருத்துக்களுக்கு ஏற்ப வரலாற்று உண்மைகளைச் சேகரிக்கும் குணம் கொண்டுள்ளார். இந்திய வரலாற்றை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் அடங்கி விட முடியாது என கோசாம்பி ஆமோதித்திருக்கிறார். எனவே, இந்த வகையில் கோசாம்பியை மார்க்சிய வரலாற்றாளனாக கருத முடியாது. அர்த்த சாஸ்திரம் மற்றும் பாலி இலக்கியங்களின் கூற்றுப்படி, கி.மு. 400

குறிப்பு

லிருந்து கி.மு. 100 க்கு இடையில் வேத காலத்திலிருந்து கூலி தொழிலாளர்கள் பயிரிடுதல் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். குறிப்பாக கி.பி. 500 லிருந்து கி.பி. 100 வரையிலான காலத்தில் பெரிய அளவிலான நிலத்தில் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அச்சமயத்தில் குறிப்பிடத்தக்க அளவில் எவ்வளவு அடிமைகள் இருந்தார்கள். சூத்திரர்களுக்கும் அவர்களுக்குமிடையிலான சமூக மாற்றங்கள் பற்றிய கேள்விகளுக்கு இவரது நூலில் விளக்கம் தரப்படவில்லை .

பாரம்பரிய மார்க்சியக் கருத்தாகிய, ஆசிய சமூகங்கள் மாற்றப்பட முடியாதவை என்னும் இக்கருத்திலிருந்து கோசாம்பி வேறுபடுகிறார். கோசாம்பியைப் பொறுத்த வரை நிலத்தை உழும் போதே உற்பத்தி முறையில் பெரிய முன்னேற்றம் காண முடிகிறது என்று கூறுகின்றார். மேலும் மார்க்சியக் கருத்தாகிய தன்னிறைவு கொண்ட கிராமங்கள் ஆசிய சமூகங்களில் காணப்படுகின்றன என்ற கருத்துக்கு மாறாக கோசாம்பி தன்னிறைவு அற்றவையாக இருந்தன, பின்னர் அவை தன்னிறைவு அடைந்தன இதற்குக் காரணம் நகரங்களின் வளர்ச்சியே ஆகும் என்கிறார்.

கோசாம்பி அடிப்படை மார்க்சிய தத்துவங்களிலிருந்து சிறிது வேறுபடுகின்றார். உதாரணமாக அவரைப் பொறுத்த வரை மார்க்சிசம் என்பது அறிவியல் ஆராய்ச்சிக்கு பயன்படும் ஒரு கருவி. அதுவே ஒரு சிந்தனையாகாது என்று எடுத்துக்காட்டுகின்றார். மேலும் எல்லாக் கால கட்டங்களிலும் மார்க்சின் கருத்துகளைக் கண்மூடித்தனமாக பின்பற்றக் கூடாது எனவும் எடுத்துரைக்கிறார். இத்தகைய கருத்து வேறுபாடுகள் இருப்பினும் கோசாம்பி அடிப்படையில் ஒரு மார்க்சிய வரலாற்றாசிரியர் ஆவார். இவரைப் பொறுத்த வரை வரலாறு என்பது வெவ்வேறு காலக்கட்டங்களில் உற்பத்தி வழி முறைகளில் ஏற்பட்ட மாற்றங்களே ஆகும். மேலும் அந்தரங்க நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட புகழ்பாடும் வரலாறுகள் கற்பனை உணர்ச்சி மிக்க கலைகளாகக் கருதப்படும். எனவே கோசாம்பியைப் பொறுத்த வரை எவ்வாறு நிலம் உழப்பட்டது என்பதை அடிப்படையாகக் கொள்ள வேண்டுமே தவிர யார் நிலத்துக்குச் சொந்தகாரர் என்பது முக்கியமானது அன்று என்று கருதுகிறார். பண்பாட்டின் அளவு கோலாகக் கருதப்படுவது ஒரு சமுதாயத்தின் அறிவியல் மற்றும் சமய வளர்ச்சி அல்ல மாறாக உற்பத்தித் திறனையே பண்பாட்டின் அளவுகோலாகக் கொள்ள வேண்டும் என்று அவர் கருதுகிறார்.

இந்தியாவைப் பொறுத்தவரை பண்டைய இந்திய வரலாற்றைத் தொல்பொருளியல் மற்றும் மனித இன இயல் அடிப்படையில் உருவாக்கியுள்ளார். மேற்கூரிய இவ்விரு இயல்களும் தத்துவம் மற்றும் மொழியியல் அடிப்படையில் எழுதப்படும் வரலாறுகளில் உள்ள குறைகளைக் களைந்து எறிய உதவுகிறது. எனவே தொல்பொருளியல் ஆதாரங்களையும் மனித இயல் ஆதாரங்களையும் வரலாற்று

ஆசிரியர்கள் அதிக அளவில் பயன்படுத்தி அறிவியல்பூர்வமாக எழுத வேண்டும் என்ற கருத்தை கோசாம்பி வலியுறுத்துகின்றார்.

கோசாம்பி பல்துறை அணுகுமுறையைப் புள்ளிக்காசுகளைப் பற்றிய ஆய்வில் பயன்படுத்தியுள்ளார். இவ்வாராய்ச்சியின் மூலமாக பாலிமொழியிலுள்ள பௌத்த நூல்களில் காணப்படும் அரசர்களின் பட்டியலுடன் அகழ்வாராய்ச்சியின் மூலம் கிடைத்த புள்ளிக் காசுகளை ஒப்பிட்டு இரண்டிற்குமுள்ள உறவு முறைகளை வெளிப்படுத்தியுள்ளார்.

கோசாம்பி இந்திய வரலாற்றின் பல காலக்கட்டங்களில் உள்ள நிகழ்ச்சிகளை ஒப்பிட்டு நோக்கியுள்ளார். இவரது கோட்பாட்டின் வாயிலாக மலைசாதி மக்கள் பொது சமூக அமைப்பில் எவ்வாறு இணைந்தனர் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார். சிந்து சமவெளி பற்றி கோசாம்பியின் கருத்துக்கள்

அடிப்படையில் நாகரிகங்கள் ஆற்றுப்படுக்கைகளில் தோன்றின. இதற்குக் காரணம் வாழ்க்கைக்கு வேண்டிய உணவுப் பொருட்கள் சேகரிப்பதற்கு இச்சூழ்நிலை உதவியாக அமைந்தது. மேலும் ஆற்றுச் சமவெளியைச் சுற்றி செழிப்பான காடுகளும், சதுப்பு நிலங்களும் அமைந்திருந்தன. இச்சூழ்நிலை நாகரிகத்துவக்கத்தில் அம்மக்களுக்கு வேண்டிய தேவைகளைப் பூர்த்தி செய்தன. சிந்து சமவெளி நாகரிகத்தைப் பொறுத்தவரை, கோசாம்பியின் கருத்துப்படி அம்மக்கள் வாய்க்கால் பாசனத்தைப் பயன்படுத்தவில்லை. மேலும் அதிக வலுவுடைய ஏரையும் பயன்படுத்தவில்லை. மொகஞ்சதாரோவில் காணப்படும் பெரிய குளம் சடங்களுக்குகாக பயன்பட்டிருக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறார். விளைப்பொருட்கள் மக்களுக்கு கோயில் மூலமாக பகிர்ந்தளிக்கப்பட்டன என்ற கருத்தின் வாயிலாக சிந்து சமவெளி மற்றும் ஹரப்பாவிலிருந்த நாகரிகங்கள் சமயச் சார்ப்புடைய அரசைக் கொண்டிருந்தன எனச் சுட்டிக்காட்டுகின்றார். ஆரியர்களின் தொழில் நுட்ப மேன்மை நாடோடிகளாகவும், ஆயர்களாவும் வாழ்க்கை நடத்தி வந்த ஆரியர்கள் போரில் குதிரை பூட்டிய இரதங்களையும் அதிக கனமுள்ள பொதிகளைச் சுமப்பதற்கு எருது பூட்டிய வண்டிகளையும் பயன்படுத்தினர். இவை இரண்டையும் சிந்து சமவெளி மக்கள் பயன்படுத்தவில்லை . பின்னர் ஆரியர்கள் இரும்பின் பயனையும், ஏரின் முக்கியத்துவத்தையும் அறிந்து கொண்டனர். இத்தொழில்நுட்ப உதவியுடன் ஆரியர்கள் இரும்பின் பயனையும், ஏரின் முக்கியத்துவத்தையும் அறிந்து கொண்டனர். இத்தொழில்நுட்ப உதவியுடன் ஆரியர்கள் சமவெளிகளையும் காடுகளையும் தங்கள் வசம் கொண்டு வர முடிந்தது. சாதி முறை கோசாம்பியின் கருத்துப்படி இந்தியாவிற்குள் வந்த ஆரியர்கள் இந்தியாவிலேயே வசித்து வந்த பழங்குடி மக்கள் ஆரியர்களால் அடிமைப்படுத்தப்பட்டனர். இதுவே சாதி முறை தோன்ற அடிப்படையாக அமைந்தது. ஆரியர்கள் ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்த நிலையிலிருந்து நிலையான உழவுத்தொழில் செய்யத் தொடங்கிய காலத்தில் பல சடங்குகளைப் பின்பற்றினார்கள். இத்தகைய சடங்குகள்

ஆரியரது கலாச்சாரத்தில் பல நிலைகளில் பிரதிபலித்தன. இத்தகைய சடங்குகளை நடத்த பிராமணர்கள் தேவைப்பட்டனர். இதனடிப்படையில் பிராமணர்கள் சமூகத்தில் உயர்ந்த நிலையை அடைந்தனர். இரும்பின் காலத்தைப் பற்றிய கோசாம்பியின் கருத்துக்கள் கோசாம்பியைப் பொறுத்த வரை இரும்பின் பயன் ஆரிய சமூகத்தைப் பல மாறுதல்களுக்குள்ளாகியது. வலிமை வாய்ந்த ஏரை பயன்படுத்தக்கூடிய விவசாய சமூகமாக ஆரிய சமூகம் மாறியது.

லிச்சாவி, மல்லா மற்றும் கோசலா போன்ற நாடுகளிடையே, ஏற்பட்ட அரசியல் போராட்டத்தில் மகதநாடு பேரரசாக உருவெடுத்தது. இதற்குக் காரணம், இராக்கியர் மலைகளில் இரும்புத்தாதுப் பொருட்கள் கிடைத்தன் விளைவேயாகும்.

மௌரிய அரசு பணப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட அரசு என்று அர்தசாஸ்திரத்திலிருப்பதை கொசாம்பி சுட்டிக் காட்டுகிறார். அசோகருடைய காலத்தில் மௌரிய நிர்வாகத்தில் ஏற்பட்ட மாறுதல்கள் காரணமாக மௌரிய அரசு உலோகங்களின் மீது கொண்டிருந்த ஏகபோக உரிமை சிறிது குறைந்தது. இதனால் மௌரியப் பேரரசுக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டது என்று சுட்டிக்காட்டுகின்றார்.

### 9.6.1. சாதவாகனர்களைப் பற்றிய கோசாம்பியின் கருத்து

மௌரியர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு தக்காணத்தில் சாதவாகனர்கள் ஆட்சியை நிலை நாட்டினர். சாதவாகனர்களுடைய அயல் நாட்டு வாணிபம் முக்கியமாக ரோம் பேரரசுடன் ஒரு செழுமை மிக்க வாணிப வர்க்கத்தை உருவாக்கியது. இத்தகைய நிலையில் மூன்றாம் நூற்றாண்டில் ரோம் பேரரசு வீழ்ச்சியுற்றது. கிராமங்களில் பொருட்களுக்கு உண்டான தேவையை நகரங்கள் பூர்த்தி செய்ய இயலவில்லை. கிராமங்களுக்குத் தேவையான சுய தேவைகளைப் பூர்த்தி செய்ய தொழிலாளர்கள் அங்கு குடி பெயர்ந்தனர். இதன் விளைவாக கிராமங்களில் நிலமானிய முறை தோன்றியது.

இத்தகைய நிலமானிய முறை ஏற்படுத்தவதற்கு சமயக் கருத்துக்கள் உதவி புரிந்தன என்று கோசாம்பி சுட்டிக் காட்டுகின்றார். கீதா உபதேசத்தை எடுத்துக்காட்டி ஒவ்வொருவரும் பலனை எதிர்பார்க்காமல் தனது கடமையைச் செய்ய வேண்டும் என்ற கருத்து நிலமானிய முறையில் வேரூன்றியிருந்த அடிப்படைக் கருத்து என்பதை கோசாம்பி சுட்டிக் காட்டுகின்றார்.

அதேபோல பொருளாதாரம் எவ்வாறு சமயக் கருத்துகளை மாற்றியமைத்தது என்பதையும் கோசாம்பி சுட்டிக் காட்டுகிறார். இந்து மதத்திற்கு எதிராக புத்த மதம் மற்றும் சமணமதம் தோன்றியிருந்தாலும் காலப்போக்கில் இந்து சமயங்களில் ஏற்பட்ட மாறுதல்கள் புத்த மற்றும் ஜைன மதங்களில் ஏற்படவில்லை . செலவு மிக்க சமயச்சடங்குகள்

**குறிப்பு**

புத்த மதத்தில் ஒழிக்கப்பட்டன. ஆடு மாடுகள் கொல்லப்படுவதையும் புத்தமதம் தடை செய்தது. இதையே பிராமணர்கள் பின்பற்றி பல மாற்றங்களைக் கொண்டு வந்தனர்.

**மதிப்பீடு**

கோசாம்பி தேக்கமடைந்திருந்த இந்திய வரலாற்றியலில் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தினார். இவரது அணுகுமுறை அறிவியல் பூர்வமானதாகவும், பல்வேறு துறைகள் அடிப்படையிலும் அமைந்திருந்தது. இந்திய வரலாற்றுக்கு ஒரு புதிய உத்வேகத்தை அளித்தது. இவரது அணுகுமுறையைப் பின்பற்றி பல இந்திய வரலாற்றாசிரியர்கள் இந்திய வரலாற்றை எழுதியுள்ளார்

## 9.7. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

1. ஜதுநாத் சர்க்கார் எதற்காகப் புகழ்பெற்றவர்?

2. ஜதுநாத் தாக்கத்தை ஏற்படுத்திய ஐரோப்பிய வரலாற்றாசிரியர்களின் பெயரைக் குறிப்பிடவும்.

3. சர்க்காரின் வரலாற்றுப் படைப்புகளின் மூன்று பகுதிகளைக் குறிப்பிடவும்.

4. சர்க்காரின் ‘சிப்ஸ் ∴ப்ரம் அவரது மெயின் ஒர்க்ஷாப்’ எதனுடன் தொடர்புடையது?

5. நீலகண்ட சாஸ்திரி எந்த பல்கலைக்கழகங்களில் கற்பித்தார்?

6. சாஸ்திரியின் சில படைப்புகளை குறிப்பிடவும்.

7. எங்கே கே.கே. பிள்ளாய் டாக்டர் பட்டம் பெற்றவர்?

8. தமிழர்களின் வரலாற்றுப் பாரம்பரியம் எதைக் கையாள்கிறது?

9. வரலாற்றின் தீம் மற்றும் முறை என்ன?

10. மைக்ரோலிதிக் தளங்கள் மற்றும் கலைப்பொருட்கள் பற்றிய கோசாம்பியின் விரிவான களப்பணி அவரை என்ன செய்ய உதவியது?

11. பழங்குடியிலிருந்து சாதிக்கு மாறுவது எதன் விளைவு?

12. கங்கை பள்ளத்தாக்கில் பொருளாதார மாற்றங்களின் எழுச்சியின் விளைவாக தோன்றிய இரண்டு வகுப்புகளை பட்டியலிடவும்.

குறிப்பு

## 9.8. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்

1. ஜதுநாத் சர்க்கார், வரலாற்றிற்காக அவர் தேர்ந்தெடுத்த பாடத்தின் வரம்பு, அவரது ஆராய்ச்சிக்காக அவர் பின்பற்றிய நுட்பம் மற்றும் சிகிச்சை மற்றும் கிட்டத்தட்ட அறுபது ஆண்டுகளாக நீண்ட மற்றும் சுறுசுறுப்பான காலப்பகுதியில் அவர் உருவாக்கிய ஏராளமான படைப்புகளுக்காக புகழ்பெற்றவர்.

2. ஜாதுநாத் ஐரோப்பிய வரலாற்றாசிரியர்களான கிளாரெண்டன், ஹன்ட், கார்லைல், ரேங்கே, மெக்காலே, கிப்பன் மற்றும் பிறரால் பெரிதும் பாதிக்கப்பட்டார்.

3. ஜதுநாத் சர்க்காரின் வரலாற்றுப் படைப்புகளை மூன்று வெவ்வேறு பகுதிகளாகப் பிரிக்கலாம். முதலாவது முகலாய ஆய்வுகள், இரண்டாவது மராட்டிய ஆய்வுகள் மற்றும் மூன்றாவது 'சிப்ஸ் ஃப்ரம் ஹிஸ் மெயின் ஒர்க்ஷாப்'.

4. முகலாயர்கள் மற்றும் மராட்டியர்கள் மீது அவர் சேகரித்த பரந்த பொருட்களிலிருந்து வெளிப்பட்ட துணை தயாரிப்புகளுடன் "அவரது முக்கிய பட்டறையில் இருந்து சிப்ஸ்" தொடர்புடையது.

5. 1929 முதல் 1946 வரை சென்னைப் பல்கலைக்கழகத்தில் வரலாறு மற்றும் தொல்லியல் துறைப் பேராசிரியராகப் பணியாற்றினார். மைசூர் பல்கலைக்கழகத்தில் இந்தியவியல் பேராசிரியராகவும் 1952 முதல் 1955 வரை பணியாற்றினார்.

6. சாஸ்திரியின் படைப்புகள் பாண்டிய இராச்சியம், இந்திய வரலாறு, தென்னிந்தியாவில் மத வளர்ச்சி மற்றும் இந்தியாவின் விரிவான வரலாறு மற்றும் தக்காணத்தின் வரலாறு பற்றிய தொகுதிகளுக்கு அவர் பங்களித்த பல அத்தியாயங்களை உள்ளடக்கியது.

7. கே.கே. பிள்ளை ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் "மெட்ராஸ் பிரசிடென்சியில் உள்ளாட்சி சுயாட்சி, 1850-1919" என்ற தலைப்பில் முனைவர் பட்டம் பெற்றார்.

8. இந்நூல் லெமூரியன் கோட்பாடு உட்பட தமிழர்களின் வரலாற்றுப் பாரம்பரியத்தை விரிவாகக் கையாள்கிறது.

9. மனித வாழ்க்கையின் உண்மை, அதாவது, மனிதனின் வாழ்க்கைக்கும் அவன் வசம் உள்ள உற்பத்திச் சாதனங்களுக்கும் இடையே உள்ள உள்ளார்ந்த தொடர்பு-முன்னர் மாறிய பரி பாஸு (சம வேகத்துடன்) பிந்தையவற்றுடன்-வரலாற்றின் கருப்பொருளாகவும் வழிமுறையாகவும் அமைகிறது.

குறிப்பு

10. மைக்ரோலிதிக் தளங்கள் மற்றும் கலைப்பொருட்கள் பற்றிய கோசாம்பியின் விரிவான களப்பணி, வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மேற்கு தக்காணத்தில் மேய்ப்பர்கள், கால்நடை வளர்ப்பவர்கள் மற்றும் தொடக்க வணிகர்கள் சென்ற பாதைகளைக் குறிக்க அவருக்கு உதவியது.

11. உற்பத்தி முறையை மாற்றி, பழங்குடியினர் மற்றும் குலங்களின் கட்டமைப்பை உடைத்து, சமூக அமைப்பின் மாற்று வடிவமாக சாதியை மாற்றிய பல்வேறு பகுதிகளில் உழவு விவசாயம் அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக இந்த மாற்றம் ஏற்பட்டது.

12. முதலாவது, கிருஹபதிகள் அல்லது பெரிய ஆணாதிக்க குடும்பங்களின் தலைவர்கள் என்று அழைக்கப்படும் நிலத்தை உடைய விவசாயிகளின் வர்க்கம் மற்றும் இரண்டாவது ஒரு கில்ட் அல்லது நகரத்தில் மிக முக்கியமான நபர்கள் என்று பொருள்படும் ஷ்ரேஷ்டிஸ் என்று அழைக்கப்படும் பணக்கார வணிகர்களின் வர்க்கம்.

## 9.9. அத்தியாயச் சுருக்கம்

- ஜமீன்தாரான ராஜ்குமார் சர்க்கரின் மகன் ஜதுநாத் சர்க்கார் (1870-1958), டிசம்பர் 10, 1870 இல் வங்காளதேசத்தின் ராஜ்ஷாஹி மாவட்டத்தில் உள்ள ராம்பூர் என்ற இடத்தில் காயஸ்தா குடும்பத்தில் பிறந்தார்.
- அவர் சுயசரிதை, நிலப்பரப்பு, கலை, கட்டிடக்கலை, மதம், பொருளாதாரம், புள்ளியியல், கணக்கெடுப்பு மற்றும் இராணுவ அறிவியல் போன்ற பல்வேறு பாடங்களில் குறிப்பிடத்தக்க படைப்புகளை உருவாக்கிய பன்முக மேதை.
- ஜதுநாத் ஐரோப்பியப் புலமையின் இந்தியப் பதிப்பாகத் தோன்றினார், மேலும் மேற்கத்திய வரலாற்றுச் சிந்தனையில் சிறந்து விளங்கும் அனைத்தின் உருவகமாக அவரைக் காண்கிறோம்.
- ஜதுநாத் ஔரங்கசீப் மீது கடுமையாக நடந்துகொண்டார், அவர் மதவெறியராகக் கருதினார், இந்துக் கோயில்கள் அழிக்கப்படுவதற்கும், இந்துக்களுக்கு எதிரான தொடர்ச்சியான பாகுபாடுகளுக்கும் காரணமானவர்.
- அவரது சிவாஜி அண்ட் ஹிஸ் டைம்ஸ் (1919) எட்டு வெவ்வேறு மொழிகளில் உள்ள ஆதாரங்களைப் பற்றிய அவரது விமர்சன ஆய்வின்

விளைவாகும். இந்த வேலையில்தான் ஜதுநாத்தின் உண்மையான ரேங்க் பிரதிபலித்தது, ஏனென்றால் சிவாஜி மறுக்கமுடியாத பாதையின் ஹீரோ என்ற மக்கள் எழுச்சியிலிருந்து அவரது தொனி வேறுபட்டது.

- ஜதுநாத் ஒரு விஞ்ஞானி மட்டுமல்ல, ஒரு வரலாற்றாசிரியர் விஞ்ஞானியை விட கலைஞருடன் அதிக தொடர்பு வைத்திருப்பதாக நம்பிய ஒரு கலைஞரும் ஆவார். அவர் வரலாற்றை தெளிவாகவும், கவர்ச்சியாகவும், வசீகரமாகவும் மாற்ற விரும்பினார், மேலும் “கத்தரிக்கோல் மற்றும் கம்-பாட்டில்“ வகை ஆராய்ச்சியை கண்டித்தார்.
- கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி முன்னாள் அதிகாரி இயக்குநராக நியமிக்கப்பட்டார்

1954 இல் மைசூர் மாநிலத்திற்கான தொல்லியல் துறை. 1950களின் தொடக்கத்தில் அகில இந்திய ஓரியண்டல் மாநாட்டின் தலைவராகவும் இருந்தார். 1957 முதல் 1972 வரை, தென்கிழக்கு ஆசியாவின் பாரம்பரிய கலாச்சாரக் கழகத்தின் யுனெஸ்கோ திட்டத்துடன் தொடர்புடையவர்.

- 1920 களில், சாஸ்திரி ”ஒரு சுயாதீனமான தமிழ் கலாச்சாரத்தின் இருப்பை வலியுறுத்தினார், இது புறம்பான தாக்கங்களால் தொடப்படுவதற்கு முன்பே பல நூற்றாண்டுகளாக செழித்து வளர்ந்தது”.
- கே.கே. வரலாற்றாசிரியர்கள் நேர்மை, நேர்மை, விவேகம் மற்றும் பக்கச்சார்பற்ற தன்மை ஆகிய அடிப்படை குணங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்றும், ஜாதி, மொழி, பிராந்தியம் மற்றும் மதம் தொடர்பான பிரச்சினைகளில் குறுகிய மனப்பான்மை, ஒருதலைப்பட்ச மற்றும் உணர்ச்சிபூர்வமான அணுகுமுறை தவிர்க்கப்பட வேண்டும் என்றும் பிள்ளை நம்பினார்.
- நாஞ்சில்நாட்டின் வரலாறு இதுவரை கிடைக்கப்பெற்ற முழு தரவுகளின் அடிப்படையில் முறையான முறையில் புனரமைக்கப்படவில்லை என்று பிள்ளை நம்புகிறார். இது திருவிதாங்கூர் வரலாற்றை எழுதுபவர்களின் கைகளில் இடது கை சிகிச்சையை விட சற்று அதிகமாகவே பெற்றுள்ளது.
- கே.கே.பிள்ளையின் மாபெரும் படைப்பு சுசீந்திரம் மிகவும் பிரபலமான படைப்பு.

கோவில்-ஒரு தனிக்குறிப்பு. தென்னிந்திய வரலாறு மற்றும் கலை பற்றிய நமது அறிவுக்கு இது ஒரு சிறந்த பங்களிப்பாகும். இந்த

மோனோகிராப்பில், கே.கே.பிள்ளை சுசீந்திரத்தில் உள்ள புகழ்பெற்ற கோவிலின் வரலாற்றை ஒரு விரிவான ஆய்வு செய்கிறார்.

## 9.10. முக்கிய சொற்கள்

- நிலப்பரப்பு: இது நிலப்பரப்புகளின் வடிவங்கள் மற்றும் அம்சங்களைப் பற்றிய ஆய்வு ஆகும்
- மெட்டாபிசிக்ஸ்: இது மெய்யியலின் அடிப்படைத் தன்மையை ஆராய்கிறது, இதில் மனம் மற்றும் பொருளுக்கு இடையே உள்ள உறவு, பொருள் மற்றும் பண்புக்கு இடையே, மற்றும் சாத்தியம் மற்றும் உண்மைத்தன்மை ஆகியவற்றுக்கு இடையே உள்ள தொடர்பு உட்பட.
- எதிர்ப்பு: இது ஒருவருக்கு அல்லது வேறு ஏதாவது ஒன்றிற்கு நேர் எதிரான ஒரு நபர் அல்லது பொருளைக் குறிக்கிறது.
- பிரிவினை: இது ஒரு பெரிய நிறுவனத்திலிருந்து, குறிப்பாக ஒரு அரசியல் அமைப்பிலிருந்து, ஆனால் எந்தவொரு அமைப்பு, தொழிற்சங்கம் அல்லது இராணுவக் கூட்டணியிலிருந்தும் ஒரு குழுவைத் திரும்பப் பெறுவதாகும்.
- இனவியல்: பல்வேறு மக்களின் குணாதிசயங்களையும் அவர்களுக்கிடையிலான உறவுகளையும் ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்வது மானுடவியலின் கிளையாகும்.
- மேட்ரிலினி: இது தாயின் கோடு வழியாக வம்சாவளியைக் கண்டறியும் நடைமுறையாகும்.
- டிடிரிபலைசேஷன்: இது ஒரு நபர்களுக்குச் சொந்தமான செயல்முறையாகும்

## 9.11. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

**குறுகிய வினாக்கள்**

1. வரலாற்று நிகழ்வு தொடர்பாக ஜதுநாத் சர்க்கார் என்ன உணர்ந்தார்?

2. 1917 இல் சர்க்கரின் வாழ்க்கையில் என்ன வளர்ச்சிகள் நடந்தன?

3. முகலாயப் பேரரசு பற்றிய சர்க்கரின் சில முக்கியமான படைப்புகளைக் குறிப்பிடவும்.

4. நீலகண்ட சாஸ்திரி பற்றிய சுப்பையாவின் கருத்துக்களுக்கு ஒரு சிறு குறிப்பை எழுதுங்கள்.

5. டி.டி.யின் முக்கிய படைப்புகளுக்கு பெயரிடவும். கோசாம்பி.

6. சிந்து நாகரிகத்தின் வீழ்ச்சிக்கு கோசாம்பி யாரைக் காரணம் கூறுகிறார்?

**விரிவான வினாக்கள்**

1. ஜதுநாத்தின் தாக்கத்தை ஏற்படுத்திய மற்றும் வடிவமைத்த மூன்று உருவாக்கும் காரணிகளைப் பற்றி விவாதிக்கவும்

வரலாற்று புலமை.

2. முகலாய ஆய்வுத் துறையில் சர்க்காரின் பணி மற்றும் பார்வைகளை பகுப்பாய்வு செய்யுங்கள்.

3. நாஞ்சில்நாட்டின் வரலாறு குறித்த பிள்ளையின் கருத்துக்களை ஆராயுங்கள்.

4. கோசாம்பியின் ஒப்பீட்டு விசாரணை முறையை விரிவாகக் கூறுங்கள்.

## 9.12. கூடுதல் வாசிப்புகள்

Warren, John. 1998. *The Past and Its Presenters*: An Introduction to Issues in Historiography. London: Hodder & Stoughton Educational.

Ferro, Marc. 2003. *The Use and Abuse of History*: Or How the Past is Taught to Children. Abingdon: Routledge.

E. Sreedharan. 2004. *A Textbook of Historiography: 500 BC to AD 2000*. New Delhi: Orient Blackswan.

Sharma, Arvind. 2003. *Hinduism and its Sense of History*. New Delhi: OUP India.

Iggers, Georg G. 2005. *Historiography in the 20th Century: From Scientific Objectivity to the Postmodern Challenge*. Connecticut: Wesleyan University Press.

Stuart, Hughes H. 1964. *History as Art and as Science.* New York: Joanna Cotler Books.

Fea, John. 2013. *Why Study History? Reflecting on the Importance of the Past*. Washington: Baker Publishing Group.

# அலகு-10

## புகழ்பெற்ற இந்திய வரலாற்றாசிரியர்கள் : ஆர்.சத்தியநாதய்யர், டி.வி.சதாசிவ பண்டாரத்தார், என். சுப்ரமணியன், கி.ராஜய்யன்

உள்ளடக்கம்

10.1. முன்னுரை
10.2. நோக்கங்கள்
10.3. இரா. சத்தியநாத அய்யர் (R.Sathyanathaiyar)
10.3.1. இளமைப் பருவம்
10.3.2. வரலாற்று முறைகள்
10.4. டி. வி. சதாசிவ பண்டாரத்தார்
10.5. என். சுப்ரமணியன்
10.6. கே.ராஜய்யன்
10.7. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்
10.8. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்
10.9. அத்தியாயச் சுருக்கம்
10.10. முக்கிய சொற்கள்
10.11. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
10.12. கூடுதல் வாசிப்புகள்

## 10.1. முன்னுரை

இந்த பிரிவு புகழ்பெற்ற இந்திய வரலாற்றாசிரியர்களின் தொடர்ச்சியாக அமைகிறது. இந்த அலகில் விவாதிக்கப்பட்ட வரலாற்றாசிரியர்கள் ஆர்.சத்தியநாதய்யர், டி.வி.சதாசிவ பண்டாரத்தார், என்.சுப்ரமணியன் மற்றும் கே.ராஜய்யன். இவர்கள் அனைவரும் தென்னிந்திய வரலாற்றாசிரியர்கள். இவா்கள் அனைவரும் தென்னிந்திய வம்சங்கள் மற்றும் மக்களின் வரலாற்றில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தனர். ஆர்.சத்தியநாதய்யர் மதுரை நாயக்கர்களின் வரலாறு, 17-ம் நூற்றாண்டில் தமிழகம், இந்திய வரலாறு: புதிய கால வரலாறு ஆகிய நூல்களை எழுதியுள்ளார். பண்டாரத்தார் கல்வெட்டுகள் மற்றும் பிற ஆதாரங்களை நன்கு புரிந்துகொள்வதற்காக தமிழ் இலக்கணம் மற்றும் இலக்கியம் பற்றிய ஆய்வை மேற்கொண்டார். மேலும், சோழர்களின் காலகட்டத்தை விரிவாக ஆய்வு செய்தார்.

என்.சுப்ரமணியன் சங்க காலம் மற்றும் பாண்டிய சாம்ராஜ்யம் பற்றி எழுதினார். அவரது படைப்புகள் சமூக வரலாற்றின் முக்கிய ஆதாரமாக உள்ளன. கடைசியாக கே. ராஜய்யன் தென்னிந்திய கிளர்ச்சி (1800-1801) என்ற புகழ்மிக்க நூலை எழுதியதன் மூலமாக தென்னிந்திய வரலாற்றுக்கு பெருமைச் சேர்த்துள்ளார். இது தவிர, பல்வேறு இதழ்களில் 150 ஆய்வுக் கட்டுரைகளை அளித்து ஆய்வுகளை மேற்கொண்டார்.

## 10.2. நோக்கங்கள்

**இந்த அத்தியாயத்தை படிப்பதன் மூலமாக கீழ்காண்பனவற்றை புரிந்து கொள்ள இயலும்**

- தென்னிந்திய வரலாற்று எழுத்துக்கு ஆர். சத்தியநாதய்யர் மற்றும் டி.வி. சதாசிவ பண்டாரத்தார் ஆகியோரின் பங்களிப்புகளை பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது

- என். சுப்ரமணியன் மற்றும் கே.ராஜய்யன் ஆகியோரின் வரலாற்றுப் படைப்புகள் மற்றும் எழுத்துக்களைப் பற்றி இங்கு விளக்கப்பட்டுள்ளது.

## 10.3. இரா. சத்தியநாத அய்யர் (R.Sathyanathaiyar)

### 10.3.1. இளமைப் பருவம்

சத்தியநாத அய்யர் கி.பி. 1896 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் சீர்காழியில் பிறந்தார். இவர் அந்தணர் குடும்பத்தைச் சார்ந்தவர் இவரது பெற்றோர் இராம் அய்யர், நாரயணி அம்மாள் ஆவார். இவர் தனது இளமைக் கல்வியையும், கல்லூரிக் கல்வியையும் திருச்சிராப்பள்ளியில் உள்ள புனித வளனார் கல்லூரியில் பெற்றார். முதுகலைப்பட்டத் தேர்வில் 1917 ஆம் ஆண்டு மாநிலத்தில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். அதற்காக ரிப்பன் தங்கப்பதக்கத்தையும் பெற்றார். அதைத் தொடர்ந்து சென்னைப் பல்கலைக் கழகத்தின் இந்திய வரலாற்றுத் துறையில் ஆராய்ச்சி மாணவராகச் சேர்ந்தார். முதன் முதலாக இத்துறையில் ஆராய்ச்சிக்கான அரசு உதவி பெற்ற மாணவர் இவரே. ஐந்து ஆண்டுகளில் இந்த ஆராய்ச்சியை முடித்தார். பின்னர் தான் கல்வி பயின்ற திருச்சிராப்பள்ளியிலுள்ள புனித வளனார் கல்லூரியில் வரலாற்றுத்துறையில் உதவிப் பேராசிரியராகப் சேர்ந்தார். 1946 ஆம் ஆண்டு வரை பேராசிரியராகவும், துறைத் தலைவராகவும் சிறப்பான முறையில் பணியாற்றினார். இவர் தனது பணிக்காலத்தில் மிகச் சிறந்த வரலாற்று ஆசிரியராகவும், ஆராய்ச்சியாளராகவும் விளங்கினார்.

சத்தியநாத அய்யர் பல்வேறு நாடுகளின் வரலாறுகளையும் அரசியல் கோட்பாடுகளையும் அனைத்து மாணவர்களுக்கும் நன்கு புரியும்படி கற்றுக்கொடுத்தார். இவர் நல்ல பல ஆராய்ச்சி மாணவர்களை உருவாக்கினார். அவர்களின் ஆராய்ச்சி வெற்றிக்கு உறுதியான அடிப்படையை ஏற்படுத்திக் கொடுத்தார்.

இவரது முக்கிய நூல்கள் 1. பண்டைய கிரேக்க ரோமானிய வரலாற்றுச் சுருக்கம் 2. மதுரை நாயக்கர் வரலாறு (ஆராய்சி நூல்) 3. தொண்டை மண்டலத்தின் பண்டைய வரலாறு 4. இந்தியாவின் அரசியல், பண்பாட்டு வரலாறு ( மூன்று தொகுதிகள்) 5.கி.பி. 17ஆம் நூற்றாண்டின் தமிழக வரலாறு

## 10.3.2. வரலாற்று முறைகள்

சத்தியநாத அய்யர் எழுதிய நூல்களில் மிக முக்கியமாக கருதப்படுவது மதுரை நாயக்கர் வரலாறு ஆகும். இந்நூல், சத்தியநாத அய்யரால் ஆய்வுப் பட்டம் படிப்புக்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு வரலாற்று ஆய்வாகும். இந்நூல் வெளியிடுவதற்கு முன்னமே மதுரை நாயகர்களைப் பற்றி சில நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றில் முக்கியமானவை நெல்சனுடைய மதுரை பற்றிய வரலாற்றுத் தொகுப்பு கால்டுவெல்லுடைய திருநெல்வேலி வரலாறு மற்றும் வி. ரெங்காச்சாரி அவர்கள் இந்தியன் ஆண்டி கோரி இதழில் வெளியிட்ட கட்டுரைகளைக் குறிப்பிடலாம். சத்தியநாத அய்யரின் ஆய்வு நூலானது மேற்கூறிய நூல்களிலிருந்து மாறுபட்டுள்ளது. அதற்குக் காரணம் கல்வெட்டியல் துறையில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட பல கல்வெட்டுக்கள் மதுரை நாயக்கர்களின் வரலாற்றைப் புதிய ஆய்வுக் கண்ணோட்டத்தில் எழுத வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியது. மேலும் முதல் முறையாக சத்தியநாத அய்யர் தமிழ்நாட்டில் இருந்த இயேசு சபை பாதிரிகள் வரலாற்று ஆவணங்களைப் பயன்படுத்தி மதுரை நாயகர்களின் வரலாற்றை எழுதியுள்ளார்.

மதுரை நாயக்கர் வரலாறு 15 ஆம் நூற்றாண்டில் துவங்கி 18ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தின் தென்பகுதியில் நடைபெற்ற முக்கிய வரலாற்று நிகழ்ச்சிகளைக் கொண்டுள்ளது. குறிப்பாக மதுரையில் விஜயநகர ஆட்சி நிறுவப்பட்டதில் இருந்து ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் வளர்ச்சி வரை இந்நூல் தெளிவாக விளக்குகின்றது. இவ்வாய்வு நூல் 14 ஆம் நூற்றாண்டில் மதுரையை டில்லி சுல்தான்கள் கைப்பற்றியது குறித்தும், ஹெய்சால மன்னர்கள் மதுரையில் ஆட்சியில் இருந்த டில்லி சுல்தான்களை வீழ்ச்சியடையச் செய்ததையும் விளக்குகிறது. இச்செயல் பின்னர் விஜய நகரப் பேரரசின் ஆட்சி மதுரையில் வேரூன்ற காரணமாக இருந்தது. கிட்டதட்ட 2 நூற்றாண்டுகளுக்கு மேலாக மதுரையில் நிலவிய விஜயநகரப்பேரரசின் ஆட்சி டில்லி சுல்தான்களின் தமிழகத்தின் மீதான படையெடுப்பை தடுத்தது. ஐரோப்பியர்களின் வருகையை தொடர்ந்து மதுரை ஒரு

முக்கிய வியாபார இருப்பிடமாக விளங்கியது. முதன் முதலில் வணிக நிறுவனங்களை ஏற்படுத்திய, போர்ச்சுகீசியர் மதுரை நாயக்கர்களின் அனுமதி பெற்று முக்கிய நிறுவனங்களைத் தமிழகத்தில் ஏற்படுத்தினார். இவர்களைத் தொடர்ந்து ஆங்கிலேயர்களும், நாயக்கர்களின் அனுமதி பெற்று முக்கிய வியாபார நிறுவனங்களைத் தமிழகத்தில் ஏற்படுத்தினர். போர்ச்சுக்கீசிய வியாபாரிகளுடன் கத்தோலிக்க

இயேசு சபைகளை அமைத்தனர். இவ்வாறு 400 ஆண்டுகால வரலாற்றைச் சத்தியநாத அய்யர் மதுரை நாயக்கர் வரலாற்றில் தெளிவாக விளக்கியுள்ளார்.

இவர் எழுதிய இந்தியாவின் அரசியல் பண்பாட்டு வரலாறு பல தொகுதிகளைக் கொண்டுள்ளது. இந்தியாவின் பண்டைய , இடைக்கால, நவீன கால வரலாற்றை முழுமையாகத் தொகுத்து வழங்கியுள்ள நூல் இது ஆகும். அது மட்டுமல்ல முதன் முதலில் தமிழக வரலாற்று ஆசிரியர்களிடையே மேற்கொள்ளப்பட்ட முதல் முயற்சியுமாகும். இந்நூல் சிந்து சமவெளி நாகரிகத்திலிருந்து இந்தியா சுதந்திரம் அடைந்து வரையிலான இந்தியாவின் வரலாற்றை விளக்கமாகவும், தெளிவாகவும் விளக்குகிறது. மதிப்பீடு

சத்தியநாத அய்யர் புகழ் பெற்ற ஆசிரியராகத் திகழ்ந்தார். இவர் மாணவர்களுக்கு வரலாற்றைக் கற்பிக்கும் பொழுது எளிமையான நடையிலும், உரத்த குரலிலும், அறிவியல் நோக்குடனும் கற்பித்தார். உயர்ந்த பதவி வகித்தவர். பெரியவராக இருந்தாலும் அவர் செய்யும் வேளையில் அஞ்சாமல் தவறுகளைச் சுட்டிக் காட்டும் ஆற்றல் படைத்தவராக இருந்தார். வாழ்க்கையின் குறிக்கோளை அடையும் முயற்சியில் ஒவ்வொருவரும் தமது அறிவாற்றுலுக்கேற்ப உண்மையாக உழைக்கும் முயற்சியே அவரவர் வாழ்க்கையின் வளர்ச்சியைக் காட்டும் என்று இவர் மற்றவர்களுக்குக் கூறுவது வழக்கமான ஒன்று. இந்திய வரலாற்றில் அரசர்கள் ஆட்சியாளர்களுடைய பண்பும் நோக்கங்களும், செயல்களும், இந்தியர்களின் நல்வாழ்க்கைக்கு உதவி புரிந்தன என்ற அடிப்படையை அளவுகோலாக வைத்து மதிப்பீடு செய்தார்.

வரலாற்றாராய்ச்சி என்பது ஒரு நீண்ட பளுவான பணி என்றும், ஒரு சிறந்த வரலாற்றாராய்ச்சியாளர் என்ற புகழைப் பெற சுருக்கமான வழி எதுவும் இல்லை என்றும் தனது" வரலாறும் வரலாற்றுத் தத்துவமும்" என்ற கட்டுரையில் தெளிவாக விளக்கியுள்ளார். மேலும் இவர் அறிவாகிய மரத்திலே வரலாற்றாராய்ச்சி என்ற கனியானது கடைசியாகத்தான் முதிர்ந்து பழுத்துக் கிடைக்கும் என்று வரலாற்றாராய்ச்சியாளர்களுக்கு விளக்கம் அளித்துள்ளார். இதன்மூலம் ஒரு வரலாற்றாராய்ச்சி செய்பவரது குறிக்கோள் அவரது அயராத உழைப்பின் மூலமாகவே பெற முடியும் என்ற கருத்தினை ஆணித்தரமாக அவர் நம்பியமை புலனாகியது. பண்புடையவர் வாழ்க்கையில் தான்

உலகத்துக்குப் பயன் உண்டு என்ற குறள் நெறியை நன்கு உணர்ந்து அவற்றைத் தன் வாழ்வில் கடைப்பிடித்தார்.

குறிப்பு

## 10.4. டி. வி. சதாசிவ பண்டாரத்தார்

டி.வி. சதாசிவ பண்டாரத்தார் ஆகஸ்ட் 15, 1892 இல் தமிழ்நாட்டில் திருப்புறம்பியத்தில் பிறந்த ஒரு தமிழ் வரலாற்றாசிரியர் ஆவார். ஆரம்ப ஆண்டுகளில் அவர் பிறந்த இடத்திலும் பின்னர் கும்பகோணத்திலும் படித்தார். அவரது பள்ளி ஆசிரியரான பின்னத்தூர் நாராயணசுவாமி ஐயர், அந்த ஆரம்ப ஆண்டுகளில் கல்வெட்டியில் உள்ளார்ந்த ஆர்வங்களை வளர்ப்பதில் அவருக்கு ஒரு பெரிய உத்வேகத்தை அளித்தார். சாக்ஷிநாதர் கோவில் திருப்புரம்ப்ளியம், அதன் பணக்கார வரலாற்று பின்னணி மற்றும் கல்வெட்டுகளுடன் பண்டாரத்தாரின் தேடலுக்கு தேவையான விருப்பத்தை அளித்தது. 1910 இல் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்த பிறகு, வளம்புரி பாலசுப்பிரமணிய பிள்ளையின் கீழ் பண்டாரதர் ஆர்வத்துடன் தமிழ் இலக்கணம் மற்றும் இலக்கியப் படிப்பை மேற்கொண்டார். ஆரம்பகால கல்வெட்டுகள் மற்றும் சாசனங்களை புரிந்துகொள்வதில் பண்டாரதரின் முக்கிய ஆதாரமாக இந்த முக்கியமான ஆய்வு பின்னர் மாறியது. பாபநாசத்தில் சிறிது காலம் கழித்து மற்றும் கும்பகோணம் தாலுகா அலுவலகம் மற்றும் கும்பகோணம் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராக, பண்டாரத்தார் 1917 முதல் 1942 வரை கும்பகோணத்தில் உள்ள வானதுரை உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராக மிகவும் நிலையான வாழ்க்கையைக் கண்டார்.

குறிப்பாக தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் கும்பகோணத்தின் கலாச்சார சூழல் இந்த காலகட்டத்தில் பண்டாரத்தாரின் உணர்ச்சியை உயிருடன் மற்றும் சிறப்பாக வைத்திருக்க உதவியது. அவர் தனது வரலாற்று கட்டுரைகளை செந்தமிழ், மாத இதழில் பங்களிக்கத் தொடங்கினார். 23 வது வயதில் ”சோழன் கரிகாலன்” என்ற தலைப்பில் அவரது முதல் கட்டுரை இலக்கியம் மற்றும் பிற சமகால ஆதாரங்களின் வெளிச்சத்தில் வரலாற்றைப் புரிந்துகொள்வதற்கான ஆழமான உணர்வை வெளிப்படுத்துகிறது. அவரது ஆரம்பகால எழுத்துக்கள் மற்றும் ஆராய்ச்சிகள் புகழ்பெற்ற தமிழ் அறிஞர்களான என்.எம்.வெங்கடசாமி நாட்டார், கரந்தை தமிழ்வேல் உமாமகேஸ்வரன் பிள்ளை, திரு.வி.கல்யாணசுந்தரனார், எல்.டி. சுவாமிக்கானு பிள்ளை மற்றும் பி.வி. மாணிக்க நாயக்கர் தொடர்புடைய துறைகளில் பணியாற்றி வந்தார்.

பண்டாரத்தர் பிற்கால சோழர் வரலாற்றோடு நேரடியாக தொடர்புடைய தஞ்சாவூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களுக்குச் சென்று கள ஆய்வு நடத்தத் தொடங்கினார். சோழ மன்னர், முதலாம் குலோத்துங்க சோழன், அவரது கவனத்தை ஈர்த்தார், பண்டாரதர் தனது வாழ்க்கையையும் நேரத்தையும் புரிந்துகொள்ள தனது நேரத்தையும் ஆற்றலையும் அர்ப்பணித்தார். அவர் தனது முதல் புத்தகமான முதலாம் குலோத்துங்க

சோழனை 1930 இல் வெளியிட்டார். இந்த புத்தகம் தமிழில் வரலாற்று ஆராய்ச்சிப் பணிகளுக்கான தரங்களை அமைத்தது. னுச.ரு.ஏ. பண்டாரதாரரின் முதல் புத்தகத்தில் தமிழ் இலக்கியத்தின் டோயன் சுவாமிநாத ஐயர் பின்வருமாறு கருத்துக்களை வெளியிட்டார்: "இந்த புத்தகம் நீண்ட காலமாக சிலாசாசனங்கள் மற்றும் சங்க இலக்கியங்களைப் படித்து ஆராய்ச்சி செய்து வருபவரால் எழுதப்பட்டது என்பதை விளக்குகிறது." அவை அந்த நாட்கள் தென்னிந்திய வரலாறு பற்றிய பெரும்பாலான ஆராய்ச்சிப் படைப்புகள் ஆங்கிலத்தில் மட்டுமே வெளியிடப்பட்டன, முக்கியமாக ஆங்கிலம் பேசும் அறிஞர்களால். இந்த நிலையை மாற்ற விரும்பிய பண்டாரதர் தமிழில் தரமான படைப்புகளை கொண்டு வர முயன்றார். பேராசிரியர் வே. தமிழில் தயாரிக்கப்பட்டது அதன் மூலம் அதன் பயனை விரிவாக்குகிறது.

அவர் 1942 முதல் 1960 வரை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் ஆராய்ச்சித் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். விரிவுரையாளராக இருந்தபோது, அவர் விரிவான கள ஆய்வு மேற்கொண்டார். இது 1949, 1951 மற்றும் 1961 இல் மூன்று பகுதிகளாக வெளியிடப்பட்டது

சுமார் 250 ஆண்டுகள் தென்னிந்தியாவை ஆண்ட பிற்கால சோழ மன்னர்களின் வாழ்க்கை மற்றும் ஆட்சிகளை காலவரிசைப்படி பட்டியலிட்டு பகுப்பாய்வு செய்ய ஒரு மகத்தான முயற்சி. ஒவ்வொரு ஆட்சியின் பிறப்பு மற்றும் அரசியல் நிலைமைகளிலிருந்து தொடங்கி, பண்டாரத்தார் அந்தக் காலத்தின் முக்கிய நிகழ்வுகளை மன்னருடன் தொடர்புடைய அனைத்து முக்கிய நபர்களின் விளக்கத்துடன் விவரிக்கிறார்.

அவரது மனைவிகள், நிலப்பிரபுக்கள், அதிகாரிகள் மற்றும் கொடி ஏந்தியவர்கள் போன்ற ஆட்சி. இன்றுவரை, சோழர்கள் குறித்த அவரது குறிப்பிடத்தக்க பணி இந்த விஷயத்தில் ஒரு நிலையான உரையாக உள்ளது மற்றும் தென்னிந்திய வரலாற்றைப் படிப்பதற்கான அவரது முக்கிய பங்களிப்பாகக் கருதப்படுகிறது.

பண்டாரத்தார் புனித தலங்களின் வரலாற்றை தமிழில் தலை வரலாறு (கோவில் வரலாறு) புத்தகங்கள் என்று எழுதினார். அவரது இரண்டு படைப்புகள், ஒன்று திருப்புறம்பியம் மற்றும் இன்னொன்று சேரமாதேவி, கற்பனை மற்றும் செவிவழி கதைகளை விட வரலாறு மற்றும் கல்வெட்டுகளின் வெளிச்சத்தில் இத்தகைய புத்தகங்களை எழுதுவதற்கான தரத்தை அமைத்தது. பண்டாரதர் ஆரம்பகால அறிஞர்களில் ஒருவர், தமிழ் இலக்கியத்தின் வரலாறு மற்றும் பரிணாம வளர்ச்சிக்கு பெரிதும் பங்களித்தார். 13 முதல் 15 ஆம் நூற்றாண்டு வரையிலான இலக்கிய ஆதாரங்கள் பற்றிய அவரது புத்தகம், தொல்காப்பியம் பாயிரம் பற்றிய வர்ணனை மற்றும் பல ஆய்வுக்

கட்டுரைகள் இந்த விஷயத்தைப் பற்றிய அவரது நுண்ணறிவுகளுக்கு எடுத்துக்காட்டுகளாக உள்ளன.

தென்னிந்திய வரலாற்றின் மாய கதவுகளைத் திறப்பதற்காக தமிழ் இலக்கியம் மற்றும் இலக்கணம் பற்றிய தனது அனைத்து அறிவையும் முதலீடு செய்த ஒரு சிறந்த தமிழ் அறிஞராகவும் வரலாற்றாசிரியராகவும் பண்டாரதர் எப்போதும் நினைவுகூரப்படுவார். ஆங்கிலத்தில் பேசும் அறிஞர்கள் ஆங்கிலத்தில் தமிழ் வரலாறு குறித்து ஆராய்ச்சி செய்து எழுதியபோது தமிழில் வரலாற்று புத்தகங்களை எழுத முன்னோடியாக இருந்தவர்.

## 10.5. என். சுப்ரமணியன்

புகழ்பெற்ற வரலாற்றாசிரியரும் அறிஞருமான டாக்டர் என். சுப்பிரமணியன் ஒரு தாழ்வு மனப்பான்மையை வைத்திருந்தார். 'டாக்டர் என்எஸ்' என்று அன்புடன் அழைக்கப்பட்ட அவர், தமிழ்நாட்டில் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள உடுமலப்பேட்டை வீட்டில் அடைக்கப்பட்டார். அவர் பல்வேறு தலைப்புகளில் 150 க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியுள்ளார். என்.சுப்பிரமணியன் எழுதிய சங்க அரசியல் என்ற புத்தகம் சங்க காலத்தின் விரிவான ஆய்வு ஆகும்

சங்க காலத்தைப் பற்றி விரிவாகப் பேசுகிறது. இது சமூக வரலாற்றின் வரிசையில் நம் நாட்டின் மிகவும் தகுதியான பங்களிப்பாகும். தென்னிந்திய வரலாற்றில் இது குறிப்பிடத்தக்க சாதனையாகும். இந்த புத்தகத்தில், டாக்டர் என். சுப்பிரமணியன் பாண்டிய ராஜ்யத்தின் முத்து முற்காலத்திலிருந்தே கங்கை பள்ளத்தாக்கின் ராஜ்யங்களில் மிகவும் விரும்பப்பட்ட கட்டுரையாக இருந்தது. கவடைில்யரின் அர்த்த சாஸ்திரம் சிலவற்றைக் குறிப்பிடுகிறது

பாண்டியகாவதம் (ஒரு வகையான முத்து பெயர்) மற்றும் மதுரம் (மதுரையிலிருந்து ஒரு வகையான பருத்தி துணி) போன்ற பொருட்கள் பாண்டியர்களின் நிலத்திலிருந்து வந்தவை.

தொழில்நுட்ப மொழியில் மூன்று பிரிவுகள் பிண்டம் அல்லது டிரினிட்டி என்று அழைக்கப்படுகின்றன, இதில் எழுத்தடிகாரம் (ஆர்த்தோகிராபி), சொல்லடிக்காரம் (சொற்பிறப்பியல் மற்றும் சொற்பொருள்) மற்றும் பொருளாடிகாரம் (அகம் (காதல்) மற்றும் புரம் (அன்பில்லாத) கருப்பொருள்கள், பேச்சின் உருவங்கள், ஒரு எச்சத்தின் உரைநடை, சமூக மற்றும் இலக்கிய மரபுகள் இயற்கை மற்றும் சமூக உளவியல் வியத்தகு மற்றும் தொடர்புடைய இலக்கியம் தொடர்பாக. தமிழில் அகம் மற்றும் புரம் இலக்கியக் கருப்பொருள்களின் வகைப்பாடு தனித்துவமானது என்று அவர் நம்புகிறார். இந்த வேலையின் இந்த மூன்று பிரிவுகளில் ஒவ்வொன்றும் ஒன்பது லியல்களாக (துணை

குறிப்பு

அத்தியாயங்கள்) பிரிக்கப்பட்டுள்ளது, எனவே வேலை 27 இயல்கள் மற்றும் 1612 சூத்திரங்களைக் கொண்டுள்ளது. கட்டியம் என்றாலும்

அகஸ்தியாவின் (தற்போது இல்லை) தமிழின் மூன்று பாரம்பரிய பிரிவுகளான இயல், இசை மற்றும் நாடகம் ஆகியவற்றைக் கையாண்டதாக நம்பப்படுகிறது, தொல்காப்பியம் அந்த வழக்கமான பிரிவைக் கையாளவில்லை.

இந்த புத்தகம், ஒரு தலைமுறையில் தென்னிந்திய வரலாற்றில் வரும் மிக முக்கியமான வரலாற்று மோனோகிரா∴ப்களில் ஒன்றாகும், ஏனெனில் இது தொழில்முறை வரலாற்றாசிரியரின் பங்கை கோடிட்டுக் காட்டுகிறது. மற்றபடி அவரது உலகத்தின் பார்வை, மற்றும், ஒரு முக்கியமான வரலாற்று ஆதாரம் என். சுப்பிரமணியனின் தொனி எப்போதுமே அடக்கமாகவும் நேராகவும் இருக்கிறது, மேலும் கவிஞரின் கற்பனையின் இந்த வெளிப்படையான பாரம்பரியத்தை தீவிர வரலாற்றாசிரியருக்கு மீட்டெடுப்பதில் அவரது பணியின் முழு முக்கியத்துவமும் படைப்பில் புரியவில்லை. இந்த முக்கியத்துவத்தை தெளிவுபடுத்துவது விமர்சகரின் பணியாக இருக்கலாம்.

முற்கால தமிழ் இலக்கியத்தில் டாக்டர் சுப்ரமணியனின் கவனமாக புலமை அவரது பல்லவன் தமிழ் குறியீட்டில் (பல்லவன் முன் தமிழ் இலக்கியத்தில் வரலாற்றுப் பொருள் அட்டவணை) நன்கு நிறுவப்பட்டுள்ளது, இது சங்கப் படைப்புகளில் ஆராய்ச்சிக்கான தவிர்க்க முடியாத கையேடு இந்த 7224 கவிதைகள், 490 பெயரிடப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் 102 பிறரின் தெளிவற்ற எழுத்துக்கள் சமகால தமிழ்நாட்டில் கூட குறிப்பிடத்தக்கவை, அங்கு இலக்கிய மற்றும் ”மொழியியல்” புலமை பெரும்பாலும் இந்த ஆரம்ப கவிதையில் மட்டுமே வேலை செய்கிறது. அவரின் பல்வேறு முக்கியமான மற்றும் அதிகம் விவாதிக்கப்பட்ட பத்திகளின் வாசிப்புகள் மற்றும் விளக்கங்கள், படைப்பாளிகளின் கவிதை நோக்கத்திற்கு அனுதாபம் காட்டுவதோடு மட்டுமல்லாமல், அறிஞராகவும் புத்திசாலியாகவும் வாசகர்களைத் தாக்குகிறது. இலக்கிய உதவித்தொகையாக மட்டும், இது புத்தகம் தீவிர கவனம் செலுத்த வேண்டும். இருப்பினும், தமிழர்களின் தொலைதூர கடந்த காலங்களில், அவரது கைவினைஞர் போன்ற வரலாற்று அணுகுமுறையில், வாழ்க்கையின் முக்கிய குணாதிசயங்களைக் கையாள்வதில் தான் இந்த புத்தகம் அதிகம் சாதிக்கிறது.

சங்ககால கவிதைகள் வரலாற்றாசிரியருக்குத் தமிழ்ச் சமூகம் மற்றும் கலாச்சாரத்தின் இந்த முக்கியமான உருவாக்கும் காலகட்டத்தை வெளிச்சம் போட்டுக் காட்டக்கூடிய அனைத்தையும் கொடுக்க வேண்டும் என்றால், மொழியியல் பகுப்பாய்வு உட்பட தீவிர உரை பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும்.

டாக்டர் சுப்ரமணியன் இந்த கவிதைகளின் தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வளமான சாத்தியக்கூறுகளின் மிக சரியான நேரத்தில் மற்றும் முக்கியமான ஆர்ப்பாட்டத்தை வழங்கியுள்ளார். அவரது சாதனை இதில் கணிசமானதாகும். சங்கக் கவிதைகள் பழங்காலத்துடன் எந்த ஒற்றுமையையும் காட்டாது என்று அவர் கருதினார்

புராண இலக்கியம் மற்றும் இடைக்கால தமிழ் இலக்கியங்கள், இவை இரண்டும், அவரது கருத்துப்படி, கற்பனை புராணங்கள் மற்றும் சாத்தியமற்ற புராணக்கதைகளைக் கொண்டுள்ளது. சங்க இலக்கியம், பெரும்பாலும், கடந்த காலத்தின் நிகழ்வுகள் பற்றிய ஒரு தெளிவான வார்னிஷ் இல்லாத கதை என்று அவர் உணர்கிறார் மற்ற புகழ்பெற்ற அறிஞர்களும் இந்த கருத்துடன் ஒத்துப்போகிறார்கள். கூர்மையான ஞாபக சக்தி கொண்ட என். சுப்பிரமணியன் அந்த நாட்களில் தமிழ் அறிஞர் வி.ஜி.சூரியநாராயண சாஸ்திரி என்றழைக்கப்படும் பரிதிமார் கலைஞர் வழிகாட்டுதலின் கீழ் படித்த 12 மாணவர்களில் ஒருவர் என்று நினைவு கூர்ந்தார். குறைந்த சுயவிவரத்தை வைத்திருந்தாலும், டாக்டர் சுப்பிரமணியன் 1950 இல் பரிதிமார் கலைஞர் வாழ்க்கை வரலாற்றை தமிழில் எழுதினார். அக்காலத்தில் தமிழை செம்மொழியாக அறிவிக்க கலைஞர் முதலில் குரல் எழுப்பினார். னுச.ளூ நூற்றாண்டு விழாவை 1970 டிசம்பர் 15 அன்று மதுரையில் பரிதிமார் கலைஞர் நினைவாக ஏற்பாடு செய்தார். 1994 ஆம் ஆண்டில், என்.சுப்பிரமணியன் தனது தந்தை என்.பலராம அய்யரின் நினைவாக ஒரு வீட்டு நூலகத்தை நிறுவினார், இது ஆராய்ச்சி மாணவர்கள் தங்கள் குறிப்புக்கு பயன்படுத்த உதவுகிறது.

## 10.6. கே.ராஜய்யன்

பேராசிரியர் கே.ராஜய்யன் குறிப்பாக இந்தியா மற்றும் தென்னிந்தியாவின் நன்கு அறியப்பட்ட வரலாற்றாசிரியர். அவர் தென்னிந்திய வரலாற்றின் டோயனாக கருதப்படுகிறார். அவர் இருபது புத்தகங்கள் மற்றும் 150 க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகளை எழுதியுள்ளார். அவர் ஜூன் 23, 1929 அன்று தெற்கு திருவாங்கூரில் உள்ள நெல்லிக்கக்குழியில் தென்காசியில் இருந்து ஒரு தமிழ் புலம்பெயர்ந்த குடும்பத்தில் பிறந்தார். 1953 ஆம் ஆண்டில், அவர் கேரளா பல்கலைக்கழகத்தில் முதுகலை பட்டப்படிப்பையும், 1960 இல் மெட்ராஸ் பல்கலைக்கழகத்தில் எம். லிட்டையும், 1965 இல் மெட்ராஸ் பல்கலைக்கழகத்தில் பிஎச்டியையும் முடித்தார். குறிப்பாக தென்னிந்தியாவின் நவீன வரலாறு அடங்கும். தமிழ்நாடு மற்றும் அமெரிக்காவின் வரலாறு அவர் இருபத்தி ஒன்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஆசிரியர், ஆராய்ச்சியாளர் மற்றும் ஆராய்ச்சி வழிகாட்டியாக பணியாற்றியுள்ளார் மற்றும் தனது சொந்த பங்களிப்பை வழங்கியுள்ளார். அவர் பல்வேறு பல்கலைக்கழகங்களில் பதின்மூன்று

குறிப்பு

வருடங்கள் விரிவுரையாளராகவும், அமெரிக்காவின் தேசிய ஆவணக் காப்பகத்தில் ஆராய்ச்சி அறிஞராகவும், ஒரு வருடம் சென்னை பிரசிடென்சி கல்லூரியில் வரலாற்றுப் பேராசிரியராகவும், நவீன வரலாற்றுத் துறை பேராசிரியராகவும் தலைவராகவும் பணியாற்றினார். மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தில் ஐந்து ஆண்டுகள். பேராசிரியர் கே.ராஜய்யன் வால்பரைசோ மற்றும் பெர்ஹாம்பூர் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மைசூர் மற்றும் கேரள பல்கலைக்கழகங்களில் வருகைதரும் பேராசிரியராக இரண்டு ஆண்டுகள் மற்றும் இரண்டு மாதங்கள் பணியாற்றினார்.

பேராசிரியர் கே.ராஜய்யன் ஆங்கில ஊடகத்தில் வரலாறு குறித்த இருபது புத்தகங்களையும், தமிழ் மொழியில் ஐந்து புத்தகங்களையும் எழுதியுள்ளார். வரலாற்றை எழுதுவதில் அவரது முன்னோடி முயற்சி மற்றும் ஆராய்ச்சி நுட்பத்தின் புத்திசாலித்தனமான பயன்பாடு தேசிய மற்றும் சர்வதேச பத்திரிகைகளில் 150 க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகளை வழங்கியது, அவை அறிஞர்கள் அனைவராலும் பாராட்டப்பட்டவை உலகம் முழுவதும். புதிய யோசனைகளின் முன்னோடியாக, அவரது படைப்பான தென்னிந்திய கலகம் 1800- 1801: முதல் சுதந்திரப் போர் ஒரு சிறந்த படைப்பாக கருதப்படுகிறது. ஒரு வரலாற்று ஆசிரியராக, பேராசிரியர் கே.ராஜய்யன் வரலாற்று எழுத்துக்கான தலைப்புகளைத் தேர்ந்தெடுப்பதில் மற்றவர்களிடமிருந்து முற்றிலும் மாறுபட்டவராக இருந்தார். அவர் விமர்சன பகுப்பாய்வு, விளக்கம் மற்றும் உண்மைகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் அவரது படைப்புகளை வழங்குவதற்காக புகழ் பெற்றவர். அவர் நடத்தினார் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் அறிஞர்களுக்கு பயிற்சி அளிக்கும் நோக்கத்துடன் வரலாறு குறித்த பல கருத்தரங்குகள், பட்டறைகள் மற்றும் மாநாடுகள். பேராசிரியர் மற்றும் வரலாற்று ஆய்வுகள் பள்ளியின் தலைவர் மற்றும் மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தின் கல்வி வாரியத்தின் தலைவராக பல புதுமையான படிப்புகளை அறிமுகப்படுத்தினார். தமிழ்நாட்டின் வரலாறு, இந்தியாவில் சுதந்திரப் போராட்டம், அமெரிக்க வரலாறு, ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று வரலாறு ஆகியவற்றுடன் தொடர்புடைய ஆவணங்களை அறிமுகப்படுத்தும் பொறுப்பில் அவர் இருந்தார். மெட்ராஸ், பிரசிடென்சி கல்லூரியில் வரலாற்றின் தலைமைப் பேராசிரியராக தனது இரண்டு ஆண்டு காலத்தில் பாடத்திட்டம் மற்றும் கற்பித்தல் முறையை அவர் திருத்தியுள்ளார். வரலாற்றில் ஆசிரியராக, அவர் ஒரு புதிய காகித காப்பகங்களை வைத்து, மாணவர்களுக்கான கருத்தரங்கு, கருத்தரங்கைப் படித்தார் மற்றும் முதுகலை வகுப்புகளுக்கான ஆராய்ச்சி முறை. அவர் வரலாற்றில் பல ஆராய்ச்சி திட்டங்களை நடத்தினார். ஆராய்ச்சி முறை பற்றிய அவரது வெளியீடு ஆராய்ச்சி சமூகத்திற்கான கையேடு அல்லது கையேடாக செயல்படுகிறது. இது தவிர, இருபத்தி ஆறு அறிஞர்கள் முனைவர் பட்டம் மற்றும் நூற்று ஐம்பது அறிஞர்கள் எம் பில் எடுத்துள்ளனர்.

அவரது திறமையான மேற்பார்வையின் கீழ் பட்டம். அவர் தென்னிந்திய காங்கிரஸ் செயல்முறையின் நிறுவனர் செயலாளர், அப்போதைய தலைவர் மற்றும் ஆசிரியர் ஆவார். அவர் ஐ.யு.ளு தேர்வு சீர்திருத்த வாரியத்தின் உறுப்பினராகவும், பல்கலைக்கழக மானியக் குழுவின் பிரதிநிதியாகவும் ே.ஊ.நு.சு.வு இன் ஆய்வில் பொறுப்பான பதவிகளை வகித்தார். தேர்வுகள் மற்றும் ஐஏஎஸ் தலைவர் வரலாற்று குழு, இந்திய வரலாற்று பதிவுகள் ஆணையத்தின் பல்கலைக்கழக பிரதிநிதியாக, வரலாற்று ஆய்வுக் கழகத்தின் உறுப்பினராக. கல்வி உலகில், அவர் பல முக்கிய பதவிகளை வகித்தார், அது அவருக்கு உயர் அந்தஸ்தையும், வரலாற்று புலமைக்கு அவரது குறிப்பிடத்தக்க பங்களிப்புகளையும் வழங்கியது. பேராசிரியர் கே.ராஜய்யன் அவர்களின் பங்களிப்பின் காரணமாக, வரலாற்று ஆய்வுகளின் வரைபடத்தில் நிரந்தர மற்றும் முன்னுரிமை பெற்ற இடத்தைக் கண்டுபிடிக்க முடிந்தது. ”இந்தியாவில் சுதந்திர இயக்கத்தை நோக்கி” என்ற தலைப்பில் வரலாற்றைக் கணக்கிடுவதில் புகழ்பெற்ற வரலாற்றாசிரியர்களின் பணிக்குழுவின் உறுப்பினராக அவர் அழைக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ராஜய்யனின் படைப்பான தமிழ்நாடு ஒரு உண்மையான வரலாறாக தமிழ்நாட்டின் வரலாற்றை வெளிப்படுத்துகிறது, இது ஒரு விரிவான மற்றும் ஆய்வுக்கான யதார்த்தமான அணுகுமுறையை பயன்படுத்தி ஒரு பயிற்சியை வகைப்படுத்துகிறது. இது ஒரு அசல் படைப்பாகும், இது வரலாற்று புலமைக்கு முக்கிய பங்களிப்பை வழங்கியது. அவர் தமிழர்களின் வரலாற்றை எழுதுவது வேதனையான பணி. வரலாற்றாசிரியருக்கு வேதனை மற்றும் துன்பத்தின் அனுபவம் இருக்க வேண்டும்

இதன் மூலம் அறிவார்ந்த மற்றும் உழைப்பாளி மக்கள் போராடுகிறார்கள். தமிழக வரலாற்றின் பாரம்பரிய அணுகுமுறை- பாண்டியர்கள், சேரர்கள், சோழர்கள் மற்றும் பல்லவர்களின் வரலாறு போன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகள் கலை, கட்டிடக்கலை மற்றும் மதத்திற்காக அவர்கள் என்ன செய்தார்கள் என்பதற்கு அதிக கவனம் பெற்றனர். எனினும், மக்களின் வாழ்க்கை, சமூக தீமைகள் மற்றும் பிற்கால வளர்ச்சிகள் கவனிக்கப்படவில்லை. தமிழக வரலாறு ஆய்வில் இந்த அம்சங்களைப் படிப்பதற்கு எந்த ஊக்கமும் இல்லை. இந்த வேலை சுமார் நாற்பது ஆண்டு அவர் செய்த அசல் ஆராய்ச்சியை இரத்தக் கொண்டது. அவர் தமிழர்களின் வரலாறு குறித்து பல புத்தகங்களை எழுதினார், மேலும் உண்மைகளைப் பெறுவதற்கு அதிகமாகச் செய்வது இன்றியமையாததாக உணர்ந்தார். எனவே, அவர் கூடுதல் தரவுகளைச் சேகரித்து அதற்கு உரிய முக்கியத்துவத்தைக் கொடுத்தார் காணாமல் போன இணைப்புகளை அடையாளம் காணும் விளக்கம். இந்த வேலை ஒரு அறிமுகம் மற்றும் ஒரு முடிவுக்கு கூடுதலாக இருபது அத்தியாயங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இது ஒரு அறிவியல் அணுகுமுறை மற்றும் ஒரு முழுமையான ஆய்வை

பிரதிபலிக்கும் வகையில் தமிழக வரலாற்றை புனரமைக்க முயற்சிக்கிறது.

குறிப்பு

பேராசிரியர் கே.ராஜய்யனின் மற்றொரு முக்கியமான படைப்பு துரோகம் மற்றும் பயங்கரவாதம் அமெரிக்காவின் இந்திய பழங்குடியினருக்கு எதிராக. இது அமெரிக்காவின் இந்திய பழங்குடியினரின் வரலாற்றைப் பற்றி விவாதிக்கிறது, அமெரிக்க விரிவாக்கத்துடன் இந்தியர்களின் நலன்களின் மோதல், பழங்குடியினரின் கூட்டமைப்பின் எழுச்சி, வடக்கு மற்றும் தெற்கில் போர், பழங்குடி கூட்டமைப்பின் வீழ்ச்சி, போருக்குப் பிந்தைய குடியேற்றங்கள் பற்றி பேசுகிறது. மற்றும் கிறிஸ்தவத்தின் மீது மோதலின் தாக்கம். ஒரு அறிமுகம் மற்றும் ஒரு முடிவுக்கு கூடுதலாக தீம் எட்டு அத்தியாயங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

## 10.7. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

1. இந்து சுதந்திரத்திற்கான காரணம் எப்படி தூக்கியெறியப்பட்டது?

2. மௌரிய மன்னர் பிந்துசாரர் தோடமண்டலத்தை எப்படி கைப்பற்றினார்?

3. பண்டரதருக்கு உத்வேகத்தின் முக்கிய ஆதாரமாக இருந்தவர் யார்?

4. பண்டரதரின் முதல் கட்டுரை எதைக் காட்டுகிறது?

5. தமிழின் மூன்று மரபுப் பிரிவுகள் யாவை?

6. தமிழை செம்மொழியாக அறிவிக்க முதன் முதலில் குரல் எழுப்பியவர் யார்?

7. கே.ராஜய்யனின் சிறப்புப் பகுதிகள் யாவை?

8. அமெரிக்காவின் இந்திய பழங்குடியினருக்கு எதிரான துரோகமும் பயங்கரவாதமும் என்ன பேசுகின்றன பற்றி?

## 10.8. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்

1. இந்து சுதந்திரத்திற்கான காரணம், கடைசி பெரிய ஹொய்சாள ஆட்சியாளர், வீர பல்லலா III திருச்சினோபோலியில் தனது உயிரை இழந்தார், கடைசியாக சந்தா சாஹிப்பால் தூக்கி எறியப்பட்டார், அவர் தனது கடைசி நாயக்க ராணி மீனாக்ஷியின் துரோகச் செயலால் 1736 இல் அல்லது அதற்கு அடுத்த ஆண்டு தற்கொலை.

2. மௌரிய மன்னன் பிந்துசாரன், கௌடில்யரின் தீவிர ஆதரவுடன் தொண்டமண்டலத்தைக் கைப்பற்றினான், தென்னிந்தியாவைப் பற்றிய

குறிப்பு

அவனது தனிப்பட்ட அறிவு, அவனது த்ரமிதாச்சார்யாவில் பிரதிபலிக்கிறது.

3. அவரது பள்ளி ஆசிரியரான பின்னத்தூர் நாராயணசுவாமி ஐயர், அந்த ஆரம்ப ஆண்டுகளில் கல்வெட்டுகளில் உள்ளார்ந்த ஆர்வங்களை வளர்ப்பதில் அவருக்கு உத்வேகத்தின் முக்கிய ஆதாரமாக இருந்தார்.

4. 23 வயதில் "சோழன் கரிகாலன்" என்ற தலைப்பில் அவர் எழுதிய முதல் கட்டுரை, இலக்கியம் மற்றும் பிற சமகால ஆதாரங்களின் வெளிச்சத்தில் வரலாற்றைப் புரிந்துகொள்ளும் ஆழமான உணர்வை வெளிப்படுத்துகிறது.

5. தமிழின் மூன்று மரபுப் பிரிவுகள் பிண்டம் அல்லது திரித்துவம் என அழைக்கப்படுகின்றன, இதில் எழுத்ததிகாரம் (எழுத்துக்கலை), சொல்லடிகாரம் (சொற்பொழிவு மற்றும் தொடரியல்) மற்றும் பொருளடிகாரம் (அகம் (காதல்) மற்றும் புறம் (காதல் அல்லாத) கருப்பொருள்கள் உள்ளன.

6. அக்காலத்தில் தமிழை செம்மொழியாக அறிவிக்கக் குரல் எழுப்பியவர் பரிதிமாற் கலைஞர்.

7. கே ராஜய்யனின் சிறப்புப் பகுதிகள் தென்னிந்தியாவின் நவீன வரலாறு, குறிப்பாக தமிழ்நாடு மற்றும் யு.எஸ்.ஏ.

8. அமெரிக்க விஸ்தரிப்புவாதத்துடனான இந்தியர்களின் நலன்களின் முரண்பாடு, பழங்குடியினரின் கூட்டமைப்பின் எழுச்சி, வடக்கு மற்றும் தெற்கில் போர், பழங்குடியினரின் கூட்டமைப்பின் வீழ்ச்சி, போருக்குப் பிந்தைய குடியேற்றங்கள் போன்றவற்றைப் பற்றி அமெரிக்காவின் இந்தியப் பழங்குடியினருக்கு எதிரான துரோகமும் பயங்கரவாதமும் பேசுகிறது. மற்றும் கிறிஸ்தவத்தின் மீதான மோதலின் தாக்கம்.

## 10.9. அத்தியாயச் சுருக்கம்

- பேராசிரியர் ஆர். சத்தியநாதய்யரின் மதுரா நாயக்கர்களின் வரலாறு என்ற புத்தகம் பதினைந்தாம், பதினாறாம், பதினேழாம் மற்றும் பதினெட்டாம் நூற்றாண்டுகளின் முதல் மூன்றில் உள்ள வரலாற்றைக் கையாளும் ஒரு நினைவுச்சின்னமாகும், மேலும் இது தென்னிந்தியாவின் சிறந்த நாட்களிலிருந்து வரலாற்றைக் கொண்டுள்ளது விஜயநகரப் பேரரசின், ஆங்கிலேயர்களின் கர்நாடக ஆக்கிரமிப்புக்கு முந்திய காலம் வரை.

குறிப்பு

- அசோகரின் கல்வெட்டுகளின் புலிந்தாக்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும்

- பல்லவ, சோழர் காலத்து கிராம மகாசபையின் கிருமிகள் கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்தில் காணப்படுகின்றன, மேலும் குடவோலை அமைப்பிலிருந்து வேறுபட்ட வாரியம் அமைப்பு, தென்னிந்திய நிறுவனமாக கருதப்படுவதை விட இந்தியனாக கருதப்பட வேண்டும்.

- தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் கும்பகோணத்தின் பண்பாட்டுச் சூழல் இந்தக் காலகட்டத்தில் பண்டரதரின் பேரார்வத்தை உயிர்ப்புடன் வைத்திருக்கக் காரணமாக இருந்தது. செந்தமிழ் மாத இதழில் தனது வரலாற்றுக் கட்டுரைகளை எழுதத் தொடங்கினார்.

## 10.10. முக்கிய சொற்கள்

- நிலப்பிரபுத்துவம்: நிலப்பிரபுத்துவ முறையின் கீழ் நிலத்தை வைத்திருக்கும் ஒருவரை இது குறிக்கிறது.
- ஆர்த்தோகிராபி: இது ஒரு மொழியை எழுதுவதற்கான மரபுகளின் தொகுப்பாகும். இது எழுத்துப்பிழை, ஹைபனேஷன், கேப்பிடலைசேஷன், வார்த்தை முறிவுகள், வலியுறுத்தல் மற்றும் நிறுத்தற்குறி ஆகியவற்றின் விதிமுறைகளை உள்ளடக்கியது.
- உரைநடை: இது ஒரு மொழியில் உள்ள அழுத்தம் மற்றும் ஒலியின் வடிவங்களைக் குறிக்கிறது.
- வரைபடவியல்: இது வரைபடங்களை உருவாக்கும் ஆய்வு மற்றும் பயிற்சி ஆகும்.
- விரிவாக்கம்: இது ஒரு தேசத்தின் விரிவாக்கம் மற்றும் குறிப்பாக பிராந்திய விரிவாக்கத்தின் கொள்கை அல்லது நடைமுறையாகும்.

## 10.11. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

**குறுகிய வினாக்கள்**

1. பேராசிரியர் ஆர். சத்தியநாதய்யரின் மதுரா நாயக்கர்களின் வரலாறு புத்தகம் எதைக் குறிப்பிடுகிறது?

2. பண்டாரதர் எப்படி ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தார்?

3. பீர்கால சோழர் சரித்திரம் பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதவும்.

4. தமிழில் வரலாற்று ஆய்வுப் படைப்புகளுக்குத் தரமாக அமைந்த புத்தகம் எது?

5. கே. ராஜய்யனின் எந்தப் படைப்பு ஒரு பெரிய படைப்பாகக் கருதப்படுகிறது?

6. ராஜய்யனின் படைப்பு தமிழ்நாடு ஒரு உண்மையான வரலாறாக ஒரு சிறு குறிப்பை எழுதவும்.

**விரிவான வினாக்கள்**

1. தொண்டமண்டலத்தின் பண்டைய வரலாற்றில் ஆர். சத்தியநாதய்யர் ஆய்வுகளின் முக்கிய முடிவுகளைப் பற்றி விவாதிக்கவும்.

2. பண்டரதர் படைப்புகளை விரிவாகக் கூறுங்கள்.

3. என்.சுப்ரமணியனின் சங்க அரசியலின் முக்கிய புள்ளிகளை அலசவும்.

## 10.12. கூடுதல் வாசிப்புகள்

Warren, John. 1998. *The Past and Its Presenters*: An Introduction to Issues in Historiography. London: Hodder & Stoughton Educational.

Ferro, Marc. 2003. *The Use and Abuse of History*: Or How the Past is Taught to Children. Abingdon: Routledge.

E. Sreedharan. 2004. *A Textbook of Historiography: 500 BC to AD 2000*. New Delhi: Orient Blackswan.

Sharma, Arvind. 2003. *Hinduism and its Sense of History*. New Delhi: OUP India.

Iggers, Georg G. 2005. *Historiography in the 20th Century: From Scientific Objectivity to the Postmodern Challenge*. Connecticut: Wesleyan University Press.

Stuart, Hughes H. 1964. *History as Art and as Science.* New York: Joanna Cotler Books.

Fea, John. 2013. *Why Study History? Reflecting on the Importance of the Past*. Washington: Baker Publishing Group.

குறிப்பு

# அலகு-11

## ஆராய்ச்சி முறை

உள்ளடக்கம்

11.1. முன்னுரை
11.2. நோக்கங்கள்
11.3. வரலாற்று ஆய்வு (Historical Research)
11.3.1. வரலாற்று ஆய்வின் பரப்பெல்லை
11.3.2. ஆய்வு வழிகாட்டி (Research Guide)
11.3.3. தற்காலிக ஊகக் கோட்பாடு (Hypothesis)
11.3.4. நூற்பட்டியல் அட்டை (Bibliography Card)
11.3.5. குறிப்பெடுத்தல் கலை (The Art of Making Notes)
11.3.6. கால அட்டவணை (Time - Schedule)
11.4. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்
11.5. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்
11.6. அத்தியாயச் சுருக்கம்
11.7. முக்கிய சொற்கள்
11.8. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
11.9. கூடுதல் வாசிப்புகள்

## 11.1. முன்னுரை

வரலாற்றில் ஆராய்ச்சி வரலாற்று முறை மூலம் மேற்கொள்ளப்படுகிறது. வரலாற்று முறை என்பது கடந்த கால நிகழ்வுகளை அவற்றின் சரியான கண்ணோட்டத்தில் முன்வைக்க உருவாக்கப்பட்ட ஒரு நுட்பமாகும். வரலாற்று உண்மைகளின் தன்மையால், வரலாற்றை எழுதுவது எப்படி என்பதை அறிய உதவுகிறது, இது எளிதான வேலை அல்ல. வரலாறு என்பது அறிவியல் மற்றும் கலை ஆகிய இரண்டும் என்பதால், வரலாற்றை எழுதும் முறைகள் மற்ற எல்லா துறைகளிலிருந்தும் வேறுபட்டதாக இருக்கும். இந்த அத்தியாயமானது வரலாற்றை எழுதும் வழிமுறையை குறித்து விளக்குகிறது.

## 11.2. நோக்கங்கள்

**இந்த அத்தியாயத்தை படிப்பதன் மூலமாக கீழ்காண்பனவற்றை புரிந்து கொள்ள இயலும்**

- ஒரு நல்ல ஆராய்ச்சி அறிஞராக இருப்பதற்குத் தேவையான குணங்களை அடையாளம் காண இயலும்
- வரலாற்றை எழுதுதல், அவுட்லைன் உருவாக்குதல், நூல் பட்டியல், குறிப்புகள் எடுப்பது போன்றவற்றில் உள்ள படிகளை விளக்கப்பட்டுள்ளது
- ஒரு ஆய்வறிக்கையை எவ்வாறு தயாரிப்பது மற்றும் வழங்குவது என்பதை விவரிக்கப்பட்டுள்ளது

## 11.3. வரலாற்று ஆய்வு (Historical Research)

### 11.3.1. வரலாற்று ஆய்வின் பரப்பெல்லை

வரலாற்று ஆய்வு : விளக்கம் ஆய்வு அல்லது ”ரிசர்ச்“ (Research) என்ற ஆங்கிலச் சொல் Recerche என்ற பிரெஞ்சுச் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். இப்பிரெஞ்சுச் சொல்லுக்கு மீண்டும் “தேடு” என்று பொருள். அதாவது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மைகளை மறுபரிசீலனை செய்வதும், புதிய உண்மைகளைக் கண்டுபிடிப்பதும், கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகளுக்குப் புதிய விளக்கங்கள் அளிப்பதும் ஆய்வாகும். வரலாற்று ஆய்வு என்பது நம்பத்தக்கச் சான்றுகளைக் கொண்டு வரலாற்று உண்மையைக் கண்டு பிடித்தலாகும். இவ்வாய்வு ஆதாரங்களின் அடிப்படையில் கடந்தகால நிகழ்வுகளை நிகழ்ந்தவாறு புதுப்பிக்க முனைகிறது. வரலாற்று ஆய்வு 1). புதிய சன்றுகளை வெளிக் கொண்டு வருகிறது் 2). சான்றுகளுக்குப் பொருள் விளக்கம் கொடுக்கிறது் 3).சான்றுகளைக் கொண்டு பொது விதியை வகுக்கிறது. வரலாற்று ஆய்வு இருவகைப்படும் : 1). உடன்பாட்டு ஆய்வு (Positive Research). இவ்வகை ஆய்வு அறிவியல் ஆய்வு முறையின் மூலம் புதிய உண்மைகளையும், கருத்துருவாக்கங்களையும், விதிகளையும், விளக்கங்களையும் கொடுக்கிறது. 2). எதிர்மறை ஆய்வு (Negative Research). இது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மைகள், ஊகங்கள், விளக்கங்கள், கருத்துருவாக்கங்கள், விதிகள் ஆகியவற்றை ஆதாரப்பூர்வமாகத் தவறென நிரூபிக்கிறது. வரலாறு ஆய்வின் நோக்கம் பகுத்தறிவு முறையின் மூலம் கடந்த கால நிகழ்வுகளின் போக்குகள், உண்மைகள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கண்டறிந்து, தீர்வு காணப்படாமல் இருக்கும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதாகும் என்று கூறுகிறார் விட்னே (Frederick Lamson Whitney). தனித்தன்மையுடைய கடந்த கால நிகழ்வுகளைக் கண்டறிந்து, அவற்றிற்குப் பொருள்

விளக்கம் கூறி, அவற்றுக்கிடையேயான தொடர்புகளையும் தெளிவுபடுத்துவதே வரலாற்று ஆய்வு என்று கூறுகிறார் முர்டிக் (Robert G.Murdick). I 32.2 ஆய்வாளரின் முன் தேவைகள் (Requisites of a Researcher) வரலாற்றாளர் பிறப்பதில்லை. அவர் உருவாக்கப்படுகிறார். முயற்சியாலும் பயிற்சியாலும் வரலாற்றாளர் உருவாகிறார். "திருமணத்தைப் போன்றே அறிவுத் துறையில் ஆய்வாளர் தனது மனதைப் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும் என்று கூறுகிறார் வில்லியம் முல்டர் (William Mulder). தன்னை அறிந்து கொண்டவனால்தான் தன் மனைவியைப் புரிந்து கொள்ள முடியும். அதேபோன்று ஆய்வின் நோக்கையும் பரப்பெல்லையையும் தெளிவாகத் தெரிந்துள்ள ஆய்வாளரால்தான் ஆய்வின் நோக்கத்தை நிறைவேற்ற முடியும். அதற்கான ஆய்வாளரின் முன்தேவைகள் அல்லது தகுதிகள் வருமாறு: 1. ஆய்வாளர் ஆய்வை நேசிக்க வேண்டும். விருப்பத்தோடு ஆய்வை மேற்கொள்ள வேண்டும். சுவையற்ற வரலாற்று ஆய்வைச் சுவை மிக்கதாக்க ஆய்வுப் பொருளை அன்போடு அணுக வேண்டும். 2. ஆய்வாளர் சமநிலை காக்க வேண்டும். நேர்மையும் நாணயமும் ஆய்வின் இரு கண்களாகும். கண்ணியமும் கட்டுப்பாடும் ஆய்வாளரின் கவசங்களாகும். வரலாற்று ஆய்வில் விருப்பு வெறுப்புக்கும், புகழ்ச்சி இகழ்ச்சிக்கும், கூட்டிக் குறைத்து எழுதுவதற்கும் இடமில்லை . 3. ஆய்வாளர் செய்வதைச் சரியாகச் செய்ய வேண்டும். அவசரமும், அரைகுறை ஆய்வும், பொறுமையின்மையும் தீரா இடும்பை தரும். தெளிந்த அறிவுடைய நிலை ஆய்வாளரின் ஆஸ்தி ஆகும். ஆய்வாளர் எவ்வளவு காலம் ஆய்வை மேற்கொண்டார் என்பது முக்கியமல்ல. அவர் மேற்கொண்ட ஆய்வை எவ்வளவு துல்லியமாகச் செய்தார் என்பதே முக்கியம். 4. ஆய்வாளருக்கு அறிவுப்பசி இருக்க வேண்டும். அரம்போலும் கூரிய அறிவு பெற்றிருக்க வேண்டும். புதிர்களை விடுவிக்கும் திறனும், பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் துணிவும், நெருக்கடிகளை எதிர்கொள்ளும் தன்னம்பிக்கையும் தேவை.

அறிவார்வமே ஆய்வாளருக்கான அடையாளமாகும். 5. ஆய்வாளருக்குத் தோல்வி கண்டு துவளாத ஆண்மை வேண்டும். சான்றுகளைத் தேடும் முயற்சியில் எதிர்பாராத் தடைகள் ஏற்படக் கூடும். ஆய்வுத் தலைப்பையே மாற்ற வேண்டியிருக்கலாம். இத்தகைய நெருக்கடி நிலையில் ஆய்வாளரிடம் எண்ணக்குலைவோ செயல்குலைவோ ஏற்படக் கூடாது. 6. ஆய்வாளருக்கு வரலாற்று ஆய்வு முறையியல் பற்றிய நடைமுறைத் திறமைகள் இருக்க வேண்டும். இத்திறமைகள் சரியான தலைப்பைத் தேர்ந்தெடுத்தல், தற்காலிகக் கோட்பாட்டை உருவாக்கல், சான்றுகளைத் திரட்டிப் பகுத்தாய்தல், குறிப்பெடுத்தல், திட்டமிடுதல், நூற்பட்டியல் தயாரித்தல், அடிக்குறிப்பெழுதல், ஆய்வுக் கட்டுரை எழுதல் போன்ற ஆய்வு நடவடிக்கைகளுக்கு இன்றியமையாதவை. சுருங்கக்கூறின் வரலாற்று ஆய்வாளர் ஆய்வுப் புல்வெளியில் மனம்போன போக்கில் திசை தெரியாது திரியாமல் கால, இட, சான்று, நிதி வசதிகளுக்கேற்ப

ஓரிடத்தில் நின்று நிதானித்து கருத்தூன்றி மன ஒருமைப்பாட்டுடன் ஆய்வுப் பணியை நிறைவேற்ற வேண்டும்.

### 11.3.2. ஆய்வு வழிகாட்டி (Research Guide)

ஆய்வுத் தலைப்பைப் போன்றே ஆய்வு வழிகாட்டியையும் விவேகத்துடன் தேர்ந்தெடுக்க வேண்டும். ஆய்வு வழிகாட்டி தேவையான தகுதியையும், ஆழ்ந்த ஆய்வு அனுபவத்தையும், அப்பழுக்கற்ற ஒழுக்கத்தையும் பெற்றிருக்க வேண்டும். சுயகட்டுப்பாடும், தன்னடக்கமும், ஆய்வாளரைப் புரிந்து கொண்டு ஊக்குவித்து உதவக் கூடியவராக இருத்தல் அவசியம். தற்செருக்கும், இறுமாப்பும், பொறாமையும் ஆய்வு வழிகாட்டிக்கும் ஆய்வாளருக்குமிடையேயான நல்லிணக்கத் தொடர்பைப் பாதித்துவிடும். ஆய்வு வழிகாட்டி ஆராய்ச்சி மாணவர் ஆய்வுத் தலைப்பைத் தேர்ந்தெடுக்கத் துணையாக இருக்கலாம், ஆனால் ஆய்வுத் தலைப்பை அவர் மீது திணிக்கக்கூடாது. வழிகாட்டி ஆய்வாளரை உற்சாகப்படுத்தி, மறைந்துடாரு ரடரஅயஅ பாவாணர்ந்து உரிய நேரத்தில் உரிய ஆலோசனைகளை வழங்கி, ஆயாபாரத்தில் நாகாரம் கட்டத்தையும் கூர்ந்து கவனித்து, தவறுகளை உனுக்கு திருத்தி ஆயாரின் ஆய்வுப் பயணத்துக்குத் தோன்றாத் துணையாக இருக்க வேண்டும்.மலையான அறியப்படும் ஆய்வு வழிகாட்டி அவரது ஆய்வாளர்களால் அறியப்படுவார்

### 11.3.3. தற்காலிக ஊகக் கோட்பாடு (Hypothesis)

தற்காலிக ஊகக் கோட்பாடு என்பது புனைவுகோள். வரலாற்றுவாத ஆதாரமாகத் தற்காலிகமாக மேற்கொள்ளப்படும் ஊகக் கருத்து. இதை மெய்மைக்கோள் எனலாம். இது வரலாற்று மேலாய்வுக்கு அடிப்படையான தற்காலிகப் பொது விளக்கக் கோட்பாடாகும். இந்த ஊகக் கோட்பாட்டின் அடிப்படையில் வரலாற்று ஆய்வுப் பொருள் அல்லது பிரச்னை வரையறுக்கப்படுதல் வேண்டும். தற்காலிகமாக வரையறுக்கப்படும் ஊகக் கோட்பாடு ஆய்வின் போது சோதித்துப் பார்த்து சரியா தவறா என்று உறுதி செய்யப்படுகிறது. அதாவது கிடைக்கும் ஆதார அறிவைக் கொண்டு ஆய்வுப் பொருளை வரையறுப்பதே தற்காலிக ஊகக் கோட்பாடாகும். தற்காலிக ஊகக் கோட்பாட்டின் நோக்கம் ஆய்வின் திசையையும் (Direction), வீச்சையும் (Extent) காட்டுவதாகும். இக்கோட்பாடே ஆய்வின் குவிமையமாகும். ஆய்வாளர் வீணே அலைந்து நேரவிரயம் செய்யாமல் இருப்பதற்கான எல்லையை இக்கோட்பாடு வகுத்துக் கொடுக்கிறது. அதுமட்டுமல்ல. எந்த அளவுக்கு ஆதாரங்களைத் தேடித் திரட்டுவது என்பதையும் இது தெளிவுபடுத்துகிறது. “தற்காலிக ஊகக் கோட்பாடு என்பது உண்மைகளுக்கிடையேயான தொடர்பை நோக்கி ஆய்வை இயக்குவதாகும்” என்று வரையறுத்துள்ளார் நார்த்ரோப் (North Rope). ஊகக் கோட்பாட்டை உருவாக்குவது எளிதன்று. ஆய்வுப் பொருளை நன்கு சிந்தித்து, அதற்கான ஆதாரங்களைப் பற்றிப் பூர்வாங்கமாக

அறிந்து கொண்டு , மேற்கோள் நூல்களைப் படித்த பின்னர் இக்கோட்பாட்டை உருவாக்க வேண்டும். சுருங்கக்கூறின், தற்காலிக ஊகக் கோட்பாடு ஆய்வாளரின் நோக்கம், அறிவாற்றல், அனுபவம், அணுகுமுறை ஆகியவற்றை வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும். ஊகக் கோட்பாடு நடைமுறை சாத்தியமானதாக (Working Hypothesis) இருக்க வேண்டியது அவசியம். ஏனெனில் இதைக் கொண்டு தான் ஆய்வைத் துவங்கி, தொடர்ந்து, முடிக்க வேண்டும். எனவே தற்காலிக ஊகக் கோட்பாடு தெளிவாகவும், எளிதாகவும், சுருக்கமாகவும், சோதித்துச் சரிபார்க்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். இருக்கும் அறிவையொட்டி உருவாக்கப்படும் இக்கோட்பாடு ஆய்வு முறையோடு தொடர்பு படுத்தப்படல் வேண்டும். இது ஒழுக்கத்துறைச் சார்பற்றதாகவும் (Amoral) இருத்தல் அவசியம். தற்காலிக ஊகக் கோட்பாடு எவ்வளவுக்கெவ்வளவு அக்கறையோடு உருவாக்கப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு ஆய்வு எளிதாக அமையும். ஊகக் கோட்பாட்டை உருவாக்கும் போது கவனிக்க வேண்டியவை: 1). ஆய்வுப் பொருளைப் பற்றிய தெளிவ் 2) ஆய்வு முறையியலில் பயிற்சி ˙ 3). மேற்கோள் நூல்களை ஆழ்ந்து கற்றல் ˙ 4). சான்றுகளைச் சேகரிப்பதற்கான மாற்று வழிகளை அறிந்திருத்தல் 5).ஆய்வின் உத்தேச விளைவுகளைப் பற்றிய முன்னறிவ் 6). சொந்த விருப்பு வெறுப்பின்மை. செயலறிவு சார்ந்த ஆய்வில; (Empvical Research) தற்காலிக ஊகக் கோட்பாட்டை உருவாக்கல் கட்டாயத் தேவை. ஆனால் வரலாற்றாய்வு போன்ற பகுப்பாய்வுக்கு (Analytical Research) இக்கோட்பாடு கட்டாயமில்லை. எனினும் வரலாற்று ஆய்வு ஊகங்கள் (Assumptions) இருப்பின் அவை தெளிவுபடுத்தப்பட வேண்டியது இன்றியமையாதது. 32.6 நடைமுறை நூற்பட்டியல் (A Working Bibliography) ஆய்வாளர் ஆய்வுத் தலைப்பைத் தேர்ந்தெடுத்து, அதற்குரிய தற்காலிக ஊகக் கோட்பாட்டை உருவாக்கிய பின்னர் முறையான பூர்வாங்க நூற்பட்டியலைத் தயாரிக்க வேண்டும். ஆய்வாளர் தலைப்பைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்பே பல நூல்களைப் படித்திருப்பார். தலைப்பு முடிவானபின் தற்காலிக நூற்பட்டியலைத் தயாரிக்க வேண்டும்.

இதற்குக் கல்லூரி, பல்கலைக்கழக மற்றும் தனியார் நூலகங்களைப் பயன்படுத்தலாம். நூலகம் தான் வரலாற்று ஆய்வாளரின் ஆய்வுக்கூடம். ஆய்வாளர் நூலகப் பட்டியல் (Library Catalogue), அட்டைப் பட்டியல் (Card Catalogue), புத்தக அலமாரிகள் (Book Shelves) ஆகியவற்றைப் பார்த்து நடைமுறை நூற்பட்டியலைத் தயாரிக்க வேண்டும். பாட மற்றும் மேற்கொள் நூல்களோடு கலைக் களஞ்சியங்கள், வாழ்க்கை வரலாறுகள், சுய வரலாறுகள், வரலாற்றுத் தனி வரைவுகள் (Monographs), வரலாற்று நூற்பட்டியல், கையேடுகள், பத்திரிக்கை செய்திச் சுருக்கங்கள், ஆய்வுக் கட்டுரைகள், அறிக்கைகள், கட்டுரைக் கோப்புகள் ஆகியவை பற்றிய தகவல்களையும் திரட்ட வேண்டும். ஆவணக் காப்பகங்களிலிருந்து ஆவணங்களைப் பற்றிய விவரங்களைப் பெறலாம். இவற்றைக் கொண்டு நடைமுறை நூற்பட்டியலைத் தயாரித்துப்

பின்னர் ஆய்வின் போது கிடைக்கும் ஆதார நூல்களையும் சேர்த்து இறுதியாக ஆய்வின் முடிவில் முழுமையான நூற்பட்டியலைத் தயாரிக்கலாம்.

### 11.3.4. நூற்பட்டியல் அட்டை (Bibliography Card)

ஆய்வு தொடர் நடவடிக்கை. ஆய்வாளர் சான்று நூல்களைத் தொடர்ந்து படிக்க வேண்டியிருக்கும். எனவே படிக்கும் போதே நூல்களைப் பற்றிய குறிப்பெடுத்துக் கொள்ள வேண்டியது அவசியம். இக்குறிப்புகளை எடுக்க சீரான ஒரே அளவுடைய அட்டைகளை ஆய்வு முடியும் வரைப் பயன்படுத்துவது நல்லது. வழக்கமாக ஆய்வாளர்கள் "3 க்கு 3" அல்லது 3 க்கு 5 அளவுள்ள அட்டைகளைப் பயன்படுத்துவர். ஒரு நூலுக்கு ஒரு அட்டை வீதம் உபயோகிக்க வேண்டும். ஒவ்வொரு அட்டையிலும் 1) புத்தகத்தின் எண் (Call No.) 2) ஆசிரியர் பெயர் 3). நூலின் பெயர் 4) வெளியீட்டாளர், வெளியிடப்பட்ட இடம், ஆண்டு 5). நூலகத்தின் பெயர் 6). பொருள் சுருக்கம் பற்றிய குறிப்புகள் இருக்க வேண்டும். நூற்பட்டியல் அட்டைகளைத் தயாரிப்பதில் பல நன்மைகள் உண்டு: 1) . இவற்றை அகர வரிசையில் அடுக்குவது எளிது. 2). குறிப்புகள் சேரச்சேர அட்டைகளை உரிய இடங்களில் சேகரிக்கலாம். 3) புதிய தகவல்களை சேர்ப்பதோ அல்லது தேவையற்ற தகவல்களை நீக்குவதோ எளிது. 4) அட்டைகளை சேமித்து வைத்தல் சுலபம். 5) மேற்கோளுக்காக அடிக்கடி பயன்படுத்தலாம். 6). ஆய்வு முடிவில் இறுதி நூற்பட்டியல் தயாரிக்கும் போது பெற்றுக்கொள்ளலாம். செலவு கருதி நூற்பட்டியல் அட்டை முறையைப் பின்பற்றாமல் இருப்பது புத்திசாலித்தனமல்ல.

### 11.3.5. குறிப்பெடுத்தல் கலை (The Art of Making Notes)

குறிப்பெடுத்தல் ஒரு கலையாகும். ஆய்வாளர் நினைவாற்றலை நம்பியிருக்க முடியாது. சான்று நூல்களிலிருந்து நிறைய குறிப்புகள் தயாரிக்க வேண்டும். ஆய்வாளர் திரட்ட வேண்டிய தகவல்களைப் பற்றித் தெளிவாக இருத்தல் அவசியம். ஏனெனில் தகவல்களின் தன்மைக்கேற்பக் குறிப்புகளைத் தயாரிக்க வேண்டும். குறிப்பெடுத்தல் இரு வகைப்படும்: அப்படியே எழுதிக் கொள்வது (Verbatium Copy) ஆதார நூல் அல்லது ஆவணத்தில் இருப்பதை அப்படியே எழுதிக் கொள்வது. இது மேற்கோள் காட்ட உதவும். 2.சுருக்கத்தை (Gist) எழுதல் பொருத்தமான தேவையான தகவல்களை மட்டும் சுருக்கி எழுதிக் கொள்ளல். வரலாற்று ஆய்வுக்கு இவ்விரண்டு முறைகளும் பயன்படும். குறிப்பெடுப்பது எப்படி? ஆய்வாளர்கள் குறிப்பெடுக்கப் பல முறைகளைக் கையாள்கின்றனர். சிலர் குறிப்பெடுக்க நோட்டுப் புத்தகங்களைப் பயன்படுத்துகின்றனர். ஒரு கருத்துக்கு ஒரு பக்கம் என்று கணக்குப் பதிவுப் பேரேடு (Ledger) போன்று குறிப்பெழுதிக் கொள்வர். இது வரலாற்றாய்வுக்கு ஏற்றதல்ல. நோட்டுப்புத்தக முறை சிக்கலானது,

குறிப்பு

திறமையற்றது, போதுமானதன்று, வேறுசிலர் தனித் தாள்களில் குறிப்பெடுப்பர். இதுவும் இடைஞ்சலான எளிதில் கையாள முடியாத (Cumbersome) முறையாகும். இவ்விரண்டையும் விட குறிப்பட்டை (Notes Card System) சிறந்தது. இதற்கு ஒரே அளவுள்ள அட்டைகளையோ அல்லது சற்று கடினமான தாள்களையோ பயன்படுத்தலாம். குறிப்பட்டைகள் நூற்பட்டியல் அட்டைகளைவிட அளவில் சற்றுப் பெரிதாக இருந்தால் நல்லது. அட்டை 4” க்கு 6” என்ற அளவில் இருக்கலாம். குறிப்பெடுக்கையில் பின்வரும் காரணக் கூறுகளை (குயஉவழசள)க் கவனத்தில் கொள்ள வேண்டும். 1). ஒரு கருத்துக்கு ஒரு குறிப்பட்டை 2) அட்டையின் உச்சியில் குறிப்புத் தலைப்பை எழுதுதல் 3). இடது பக்க ஓரத்தில் பக்க எண்ணைக் குறிப்பிடல் 4). குறிப்பு போதிய அளவில் இருத்தல் 5). தகவல் மேற்கோளா அல்லது சுருக்கமா என்று குறிப்பிடல் 6.புத்தகம் அல்லது ஆவணம் பற்றிய தகவல் குறிப்பு ஒரு அட்டைக்கு மேல் போனால் தொடர்ச்சி அ, ஆ, இ.... என்று ஒரு குறிப்புக்குப் பல அட்டைகளைப் பயன்படுத்தலாம்.

பூர்வாங்க ஆய்வுக் கட்டுரைச் சுருக்கம் (Preliminary outline of the Thesis) வரலாற்றாய்வு தொடர் நடவடிக்கைகளைக் கொண்ட செயல்பாங்கு (Process) ஆகும். ஆய்வுத் தலைப்பைத் தேர்ந்தெடுத்தல். பூர்வாங்க நூற்பட்டியல் தயாரித்தல், ஆய்வுக் கட்டுரைச் சுருக்கம் எழுதுதல் ஆகியவை வரலாற்று ஆய்வின் முதல் மூன்று நடவடிக்கைகள் ஆகும். கட்டுரைச் சுருக்கம் என்பது கட்டடத் திட்டம் (Blue- Print) போன்றது. ஆய்வுக் கட்டுரைச் சுருக்கம் 1. முன்னுரை (Introduction) 2.உடல் பகுதி (Body) 3. முடிவு (Conclusion) ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்டது. பூர்வாங்க ஆய்வுக் கட்டுரைச் சுருக்கம் இரண்டாம் நிறை ஆதாரங்களின் (Secondary Sources) அடிப்படையில் தயாரிக்கப்படுவது. இச்சுருக்கம் காலவரன் முறைப்படித் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

### 11.3.6. கால அட்டவணை (Time - Schedule)

ஆய்வாளருக்குக் கால உணர்வு கட்டாயம் இருக்க வேண்டும். துவக்கத்தில் வாளாவிருந்துவிட்டு ஆய்வு முடிவில் அவசரப்படுவதில் அர்த்தமில்லை. ஆய்வு நிலைக்கேற்பக் காலக்கெடு நிர்ணயிக்கப்படுகிறது. இக்காலக்கெடுக்குள் ஆய்வுக் கட்டுரையை ஆக்கப் பூர்வமாகவும், நம்பகத் தன்மையுடையதாகவும், புதிய முடிவுகளைக் கொண்டதாகவும் முழுமையாக எழுதி முடிக்க வேண்டும். இதற்குப் பின்வரும் கால அட்டவணை வழிகாட்டியாக இருக்கும்.

1. ஆய்வுப் பொருளை வரையறுத்தல், சான்றுகளைத் திரட்டல், முறைப்படுத்துதல்....... 60 % 2. ஆய்வுக் கட்டுரையின் முதல் நகல் தயாரிக்க.........

20மூ 3. மேற்கோள்கள், வரைபடங்கள், நூற்பட்டியல், இறுதி நகல், நகல்படி சரிபார்த்தல்.......20%

## 11.4. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

1. ஒரு நல்ல ஆராய்ச்சியாளராக இருக்க என்ன தேவை?

2. ஒரு ஆராய்ச்சியாளர் எந்த மூன்று குறைபாடுகளால் பாதிக்கப்படக்கூடாது?

3. குறிப்புகளை எடுக்கும் அறிவியல் முறை எது?

4. அட்டை முறையின் இரண்டு நன்மைகள் யாவை?

5. நான்கு வகையான வரலாற்று எழுத்துக்கள் யாவை?

## 11.5. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்

1. ஒரு நல்ல ஆராய்ச்சியாளராக இருப்பதற்கு, உழைப்பின் மீது அன்பும் தனிப்பட்ட நேர்மையும் இருக்க வேண்டும்.

2. ஒரு ஆராய்ச்சி அறிஞர் பணிபுரியும் சக்தியை இழந்து தவிக்கக் கூடாது,

மிகை விமர்சனம் மற்றும் கவனக்குறைவு.

3. குறிப்புகளை எடுக்கும் அறிவியல் முறை கார்டு அல்லது சீட்டு முறை.

4. அட்டை முறையின் இரண்டு நன்மைகள், ஒன்று எங்கு சென்றாலும் எடுத்துச் செல்வது எளிது, இரண்டாவதாக, இந்த அமைப்பில் சேர்த்தல்களை இணைப்பது எளிது.

5. சரித்திர எழுத்தின் நான்கு முக்கிய வகைகள் வெளிப்பாடு, வாதம், விவரிப்பு மற்றும் விளக்கம்.

6. வரலாற்று ஆராய்ச்சியின் தார்மீக, மன மற்றும் நடைமுறை அறிவைத் தவிர, மற்ற மூன்று ஆராய்ச்சி முறைத் திறன்கள் சந்தேகம், சான்றிதழ் மற்றும் விசாரணை.

7. ‘விமர்சனம்’ என்பது சரியிலிருந்து தவறென்றும், உண்மையானதை போலியிலிருந்தும் வேறுபடுத்துவதற்கான ஒரு கருவியாகும். பிழைகள் மற்றும் தவறுகளை நீக்குவதற்கும், ஒரு ஆவணத்தின் உண்மை அல்லது உண்மைத்தன்மையைத் தீர்மானிப்பதற்கும் இது அறிஞர்களின் கைகளில் உள்ள ஒரு கருவியாகும்.

8. உண்மைகளின் தொகுப்பால் எதிர்கொள்ளும் ஒரு பிரச்சனை என்னவென்றால், மனிதனின் செயல்கள் ஒன்றையொன்று ஒன்றுடன் ஒன்று சேர்ப்பதால் அவற்றை ஒழுங்கமைப்பது கடினம்.

குறிப்பு

9. செயற்கை செயல்பாடுகளின் கீழ் உள்ள செயல்பாடுகள், உண்மைகளை தொகுத்தல், ஒரு ஆய்வறிக்கையை உருவாக்குதல், அடிக்குறிப்புகளை உருவாக்குதல் மற்றும் ஆக்கபூர்வமான பகுத்தறிவு.

10. ஆக்கபூர்வமான பகுத்தறிவு என்பது ஒரு வரலாற்றாசிரியர், கிடைக்கக்கூடிய அனைத்து ஆதாரங்களையும் ஆய்வு செய்த பிறகும் தனக்குத் தெரியாததை அறிய முயற்சிக்கும் செயல்முறையாகும்.

11. ஆக்கபூர்வமான பகுத்தறிவைப் பயன்படுத்தும்போது, எழுத்தாளர் சொல்லாததை உரையில் அறிமுகப்படுத்தாதபடி நாம் கவனமாக இருக்க வேண்டும்.

## 11.6. அத்தியாயச் சுருக்கம்

ஆராய்ச்சி என்பது உண்மைகளைக் கண்டறிய அல்லது அறியப்பட்ட உண்மைகளை மறுபரிசீலனை செய்ய அல்லது உண்மைகளை கோட்பாடுகளில் வைப்பதற்காக, ஒரு விஷயத்தை விடாமுயற்சியுடன் மற்றும் முறையான விசாரணை அல்லது விசாரணையை மேற்கொள்ளும் முயற்சியாகும்.

கடந்த காலத்தை முழுவதுமாக மீண்டும் உருவாக்கவும், கடந்த கால நிகழ்வுகளை அவை நடந்திருக்க வேண்டிய அளவுக்கு முழுமையாக மறுகட்டமைக்கவும், அந்த நிகழ்வுகளின் அர்த்தத்தையும் முக்கியத்துவத்தையும் விளக்கவும், நீண்டகாலமாக நிலவும் தவறான கருத்துக்களை சரிசெய்யவும் வரலாற்று ஆராய்ச்சி கடந்த காலத்தை தோண்டி எடுக்கிறது. , ஏதேனும் இருந்தால், மற்றும் நம்மிடம் உள்ள அறிவின் வெளிச்சத்தில் யோசனைகளை விரிவுபடுத்தவும், பகுப்பாய்வு செய்யவும், ஒருங்கிணைக்கவும் மற்றும் தத்துவப்படுத்தவும்.

ஒரு நல்ல ஆராய்ச்சியாளர் கொண்டிருக்க வேண்டிய குணங்கள், பொருள் மீதான அன்பு, தனிப்பட்ட நேர்மை, நிதானம் மற்றும் புத்திசாலித்தனம்.

□ குறிப்புகளை எடுக்கும் அறிவியல் முறை அட்டை அல்லது சீட்டு முறை ஆகும்.

□ பாடத்தின் தேர்வுக்குப் பிறகு அறிஞரின் அடுத்த வேலை, ஒரு நூலகத்தைத் தயாரிப்பதாகும். இதற்காக அவர் தனது தகவலைப் பெற்ற முதன்மை மற்றும் இரண்டாம் நிலை ஆதாரங்களைப் பதிவு செய்ய வேண்டும்.

□ பாடத்தைத் தேர்ந்தெடுத்து நூலகத்தைத் தயாரிப்பதற்குப் பிறகு மூன்றாவது முக்கிய வேலை, முழுத் திட்டத்தைப் பற்றிய தோராயமான யோசனையை அவருக்கு அளிக்கும் ஒரு அவுட்லைன், ஒரு கட்டமைப்பை அல்லது ஒரு சுருக்கத்தை உருவாக்குவதாகும்.

□ வரலாற்று ஆராய்ச்சியின் தார்மீக, மன மற்றும் நடைமுறை அறிவைத் தவிர, ஒரு அறிஞர் இன்னும் சில தேவையான திறன்களான விமர்சனம், பகுப்பாய்வு, கற்பனை, சந்தேகம், சான்றிதழ் மற்றும் விசாரணை போன்றவற்றை விரும்புவார்.

□ வரலாற்று உண்மைகளின் உண்மையான தன்மையைப் பற்றிய ஒரு யோசனையைப் பெற்ற பிறகு, அறிஞர் செயற்கை நடவடிக்கைகளில் அடுத்த முக்கியமான படியை எடுக்கிறார், இது நடைமுறை அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட சில திட்டவட்டமான வகைப்பாடு திட்டத்தின் படி உண்மைகளை தொகுக்க வேண்டும்.

□ ஒரு ஆய்வாளர், உண்மைகளின் தேர்வு, குழுவாக்கம் மற்றும் ஏற்பாடு ஆகியவற்றில் வழிகாட்டும் ஒரு கொள்கையைக் கண்டறிய வேண்டும். நேரம், இடம் மற்றும் நபர்களின் வெளிப்புற நிலைமைகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்படும் எளிய மற்றும் எளிதான வகைப்பாடு ஆகும்.

□ சுருக்கமாக, செயற்கைச் செயல்பாடுகள் பொருளை மிகவும் கவனமாகவும் புத்திசாலித்தனமாகவும் பயன்படுத்துவதை உள்ளடக்கியது. ஒரு உண்மை மற்றொன்றுடன் என்ன உறவில் நிற்கிறது என்பதை அறிய சில பகுத்தறியும் சக்தி தேவை.

□ செயற்கைச் செயல்பாடு ஆய்வறிக்கையைத் திட்டமிடுதல் மற்றும் உண்மைகளை ஒழுங்குபடுத்துதல் ஆகியவற்றுடன் தொடர்புடையது. இதற்காக ஆராய்ச்சியாளர் தனது அனைத்து உண்மைகளும் தர்க்கரீதியாக பல முக்கிய தலைப்புகள் மற்றும் துணைத்தலைப்புகளின் கீழ் அமைக்கப்பட்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

□ கதையில் விவாதம் விமர்சன ரீதியாகவும் பகுப்பாய்வு ரீதியாகவும் இருக்க வேண்டும். ஏன் என்ற கேள்வியை வைப்பதன் மூலம் மட்டுமல்ல, வாசகரின் திருப்திக்கு பதிலளிப்பதன் மூலமும் அறிஞர் ஒரு சிக்கலை எப்போதும் காரண பகுப்பாய்வு மூலம் உருவாக்க வேண்டும்.

□ செயற்கை செயல்பாடுகளின் கீழ், ஆக்கபூர்வமான பகுத்தறிவு என அறியப்படும் மேலும் ஒரு முக்கியமான செயல்பாடு வருகிறது. ஆராய்ச்சிப் பணிகளில் இன்னும் இருக்கும் இடைவெளிகளை அல்லது பலகைகளை நிரப்புவதே இதன் முக்கிய வேலை. பல்வேறு ஆதாரங்களில் இருந்து நமக்குக் கிடைக்கும் வரலாற்றுப் பொருள்கள் ஒவ்வொரு விவரத்தையும் விளக்குவதற்குப் போதுமானதாக இல்லை என்பதால் இத்தகைய வெற்றிடங்கள் மிகவும் இயல்பானவை.

□ நேர்மறை பகுத்தறிவு மிகவும் சிக்கலானது, ஆனால் வரலாற்றாசிரியர்களுக்கு அதிகப் பயன்படுகிறது. இது ஆவணங்களால் நிறுவப்பட்ட உண்மையுடன் தொடங்குகிறது மற்றும் ஆவணம் குறிப்பிடாத வேறு சில உண்மையை ஊகிக்கிறது. இது வரலாற்றின் அடிப்படைக் கோட்பாட்டின் பயன்பாடு ஆகும், அதாவது நிகழ்காலத்திற்கும் கடந்தகால மனிதகுலத்திற்கும் இடையிலான ஒப்புமை.

## 11.7. முக்கிய சொற்கள்

□ ஆழ்நிலைவாதம்: இது அமெரிக்காவில் 1800 களின் முற்பகுதியில் தொடங்கப்பட்ட ஒரு மத மற்றும் தத்துவ இயக்கமாகும்.

□ ப்ரோட்டோ-வரலாறு: இது வரலாற்றுக்கு முந்தைய காலத்திற்கும் வரலாற்றுக்கும் இடைப்பட்ட காலகட்டமாக இருந்தது, அப்போது ஒரு கலாச்சாரம் எழுதும் கலையை வளர்க்கவில்லை.

□ நூல் பட்டியல்: இது ஒரு அறிவார்ந்த படைப்பில் குறிப்பிடப்பட்ட புத்தகங்களின் பட்டியல்,

பொதுவாக பின்னிணைப்பாக அச்சிடப்படும்.

## 11.8. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

**குறுகிய வினாக்கள்**

1. ஒரு நல்ல ஆராய்ச்சியாளராக இருப்பதற்குத் தேவையான குணங்களைக் கணக்கிடுங்கள்.

2. ஃப்ரூட் நோய் எனப்படும் நிலை என்ன?

3. நேர்மறையான விமர்சனத்திற்கான கொள்கைகளை பட்டியலிடுங்கள்.

4. வரலாற்று ஆய்வில் உண்மைகளை தொகுப்பதில் உள்ள சிக்கல்கள் என்ன?

**விரிவான வினாக்கள்**

1. மூன்று வகையான ஆராய்ச்சிகள் எவை? விவாதிக்கவும்.

2. ஆய்வறிக்கையை உருவாக்கும் செயல்முறையை விளக்குங்கள்.

3. ஆக்கபூர்வமான பகுத்தறிவைப் பயன்படுத்தும்போது ஒருவர் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கைகள் என்ன? விவாதிக்கவும்.

4. சுருக்கத்தை எவ்வாறு தயாரிப்பது என்று விவாதிக்கவும்.

## 11.9. கூடுதல் வாசிப்புகள்

Warren, John. 1998. *The Past and Its Presenters*: An Introduction to Issues in Historiography. London: Hodder & Stoughton Educational.

Ferro, Marc. 2003. *The Use and Abuse of History*: Or How the Past is Taught to Children. Abingdon: Routledge.

E. Sreedharan. 2004. *A Textbook of Historiography: 500 BC to AD 2000*. New Delhi: Orient Blackswan.

Sharma, Arvind. 2003. *Hinduism and its Sense of History*. New Delhi: OUP India.

Iggers, Georg G. 2005. *Historiography in the 20th Century: From Scientific Objectivity to the Postmodern Challenge*. Connecticut: Wesleyan University Press.

Stuart, Hughes H. 1964. *History as Art and as Science.* New York: Joanna Cotler Books.

Fea, John. 2013. *Why Study History? Reflecting on the Importance of the Past*. Washington: Baker Publishing Group.

# அலகு-12

## வரலாற்றின் ஆதாரங்கள் முதல் நிலை இரண்டாம் நிலை மற்றும் இணைய ஆதாரங்கள்

உள்ளடக்கம்

12.1. முன்னுரை

12.2. நோக்கங்கள்

12.3. வரலாற்றுச் சான்றுகள்

12.3.1. வரலாற்று அடையாளங்கள் (Historical Traces)

12.3.2. வரலாற்று ஆதாரங்கள் (Historical Evidences)

12.3.3. சான்றுகளின் தன்மை (Nature of Sources)

12.3.4. வரலாற்றுச் சான்றுகளைத் திரட்டுதல்

12.4. மதிப்பாய்வு மற்றும் அறிக்கைகள்

12.5. அரசவை வரலாற்றுக் காவியங்கள், நூல்கள்

12.6. குடும்ப மற்றும் தனி நபர்களது ஆவணங்கள்

12.7. இணைய ஆதாரங்கள்

12.8. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

12.9. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்

12.10. அத்தியாயச் சுருக்கம்

12.11. முக்கிய சொற்கள்

12.12. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

12.13. கூடுதல் வாசிப்புகள்

## 12.1. முன்னுரை

வரலாற்றை விளக்குவதற்கும் கடந்த காலத்தைப் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்கும் பல ஆதாரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. வரலாற்றுத் தகவல்களுக்கு முக்கியமாக இரண்டு ஆதாரங்கள் உள்ளன: முதன்மை ஆதாரங்கள் மற்றும் இரண்டாம் நிலை ஆதாரங்கள். முதன்மை ஆதாரங்களில் நாணயங்கள், கல்வெட்டுகள் மற்றும் புதைப்பொருள் ஆதாrangal ullanả..

மறுபுறம், இரண்டாம் நிலை ஆதாரங்கள் முதன்மை மூலத்தின் விளக்கம் மற்றும் பகுப்பாய்வு மூலம் உருவாக்கப்படுகின்றன. இவை அடிப்படையில் முதன்மை ஆதாரங்களில் இருந்து அனுமானங்களை வரைந்து உருவாக்கப்படுகின்றன. வரலாற்றுத் தகவல்களின் புதிய ஆதாரங்களில் இணையமும் ஒன்று

யார் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் அணுகலாம். இந்த அலகில், இத்தகைய ஆதாரங்கள் விளக்கப்பட்டுள்ளது.

## 12.2. நோக்கங்கள்

**இந்த அத்தியாயத்தை படிப்பதன் மூலமாக கீழ்காண்பனவற்றை புரிந்து கொள்ள இயலும்**

□ வரலாற்று ஆதாரங்களின் தன்மையை பகுப்பாய்வு செய்தல்

☐ முதன்மை ஆதாரங்களின் வகைகள் மற்றும் பண்புகளைப் பற்றி விளக்கப்பட்டுள்ளது

☐ இரண்டாம் நிலை ஆதாரங்களின் நன்மைகள் மற்றும் அதன் பண்புகள் விளக்கப்பட்டுள்ளது

☐ இணைய ஆதாரங்களைப் பயன்படுத்துவதன் நன்மைகள் மற்றும் சிரமங்களை ஆராயப்பட்டுள்ளது.

## 12.3. வரலாற்றுச் சான்றுகள்

### 12.3.1. வரலாற்று அடையாளங்கள் (Historical Traces)

வெஸ்டிஜியம் (Vestigium) என்ற இலத்தீன் சொல்லுக்குப் பொருள் அடையாளம் (Trace) என்பதாகும். அதாவது காலடி அடையாளம். வரலாற்று அடையாளங்கள் என்பதை மனிதன் வரலாற்று மணற்பரப்பில் பதித்துச் சென்றுள்ள சாதனைப் பதிவுகளாகும். இவை மனிதனின் கடந்த கால நடவடிக்கைகளை நினைவூட்டும் சான்றுகள் (Sources) ஆகும். கடந்த கால நிகழ்வுகளை நேரடியாக சந்திக்க முடியாத வரலாற்றாளர் அவற்றைப் பற்றிய அடையாளங்களைக் கொண்டு வரலாற்றைப் புதுப்பிக்கிறார். வரலாற்று அடையாளம் என்பது நிகழ்ச்சிகளின் தொடர்ச்சி பற்றிய பதிவு என்று வரையறுத்துள்ளார் ரேனியர் (G.J.Ranier). அடையாளம் அல்லது சுவடு இருக்க வேண்டுமாயின் அதைப் பதித்தவரும் இருந்திருக்க வேண்டும். அடையாளங்களை விட்டுச் சென்றோர் அவை எதிர்காலச் சந்ததியினருக்குத் தெரிய வேண்டும் என்ற நோக்கத்தோடு செய்திருக்கலாம். அல்லது எவ்வித எதிர்பார்ப்புமின்றி இயல்பாகவே விட்டுச் சென்றிருக்கலாம். எது எவ்வாறாயினும் கடந்த கால அடையாளங்கள் நிகழ்வுகளின் பிரதிபலிப்புகளாகும் வரலாற்று நிகழ்வுகளைப் பற்றி அறிந்து கொள்வதற்கான இந்த அடையாளங்களே வரலாற்றுச் சான்றுகள் ஆகும்.

### 12.3.2. வரலாற்று ஆதாரங்கள் (Historical Evidences)

வரலாற்று அடையாளங்கள் வரலாற்று ஆதாரங்களாகப் பயன்படுகின்றன. நீதிபதி நிலையில் உள்ள வரலாற்றாளருக்கு ஆதாரங்களே சான்றுகளாகும். செவிவழிச் செய்திகளும், கற்பனைக் கூறுகளும், நம்பிக்கைகளும், ஊகங்களும், வதந்திகளும், உறுதிக் கூற்றுகளும் ஆதாரங்கள் ஆகா. அடையாளங்களை அப்படியே ஆதாரங்களாக ஏற்றுக் கொள்ள முடியுமா? முடியாது. ஏனெனில் அது உண்மையாகவோ, பொய்யாகவோ அல்லது இரண்டும் கலந்ததாகவோ இருக்கக் கூடும். எனவே வரலாற்று அடையாளங்கள் உருவில் உள்ள ஆதாரங்களைப் பகுத்தாய்ந்து, திறனாய்வு செய்து, நம்பத்தக்கவைதானா என்பதை உறுதி

குறிப்பு

செய்ய வேண்டும். சோதிக்கப்பட்ட ஆதாரங்களே சாட்சிகளாகும். சுருங்கக் கூறின் திறனாய்வு செய்து மெய்ப்பிக்கப்பட்ட அடையாளங்களே வரலாற்று ஆதாரங்களாகும், சான்றுகளாகும்.

### 12.3.3. சான்றுகளின் தன்மை (Nature of Sources)

சான்றுகள் வரலாற்று வரைவுக்கான மூலப் பொருள்கள். ""சமுதாயத்தில் தனித் தன்மையுடைய நடவடிக்கைகளைப் பற்றி மனிதன் விட்டுச் செல்லும் பதிவுகளே வரலாற்றுச் சான்றுகள்" என்று கூறுகிறார் நீலகண்ட சாஸ்திரி. இச்சான்றுகள் வரலாறு சார்ந்ததாகவோ (Historical) அல்லது வரலாறு சாராததாகவோ (Non-Historical) இருக்கக் கூடும். வரலாற்றுச் சான்றுகளே நம்பகமானவை. தன்மைக்கேற்பச் சான்றுகளைப் பின்வருமாறு பிரிக்கலாம். 1. பொருள் சான்றுகள் (Mateiral sources). கடந்த கால மனித வாழ்வை நினைவூட்டக் கூடிய பொருள் எச்சங்கள் பொருள் சான்றுகள் ஆகும். இவை எழுதப்பட்டோ அல்லது எழுதப்படாமலோ இருக்கலாம். பொதுவாக எழுதப்படா சான்றுகளே பொருள் சான்றுகளாக உள்ளன. ஆயுதங்கள், கருவிகள், பாண்டங்கள், நாணயங்கள், தட்டுமுட்டுச் சாமான்கள், தாழிகள், சிற்பங்கள், ஓவியங்கள், நினைவுச் சின்னங்கள் பொருள் சான்றுகளாகும். இவை வரலாற்றுக்கு முற்பட்ட கால (Pre-Historical Age) வாழ்க்கையை அறிய உதவும். 2. பொருளல்லாத சான்றுகள் (Non-Material Sources). இச்சான்றுகள் தொட்டறிய முடியாதவை (Intangible), சூட்சமமானவை (Subtle), மரபுவழி வந்தவை (Traditional). இவை கடந்த கால நிகழ்வுகளோடு தொடர்புடையவை, தொடர்ந்து நீடிப்பவை, நிகழ்வுகளைப் புரிந்து கொள்ள உதவுபவை, பிற சான்றுகளுக்குத் துணையாக இருப்பவை. பழக்க வழக்கங்கள், ஒழுக்க நெறிகள், சமூகக் கட்டுப்பாடுகள் , சமயச் சடங்குகள், நம்பிக்கைகள், கட்டுக் கதைகள் பொருளல்லாத சான்றுகள். 3. எழுத்துச் சான்றுகள் (Written Sources). எழுத்துச் சான்றுகள் குறிப்பிட்ட மொழிகளில் எழுதப்பட்டிருக்கும். இவற்றை எளிதில் அச்சு வடிவில் புதுப்பிக்கலாம். இச்சான்றுகள் நம்பகத் தன்மையுடையவை. இவையே ஆவணங்கள் (Documents) ஆகும். ஆவணங்கள் இயல்பாதத் தயாரிக்கப்படலாம். அல்லது எதிர்கால சந்ததியினரை மனதில் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கலாம். நாட்குறிப்புகள், நினைவுக் குறிப்புகள், கடிதங்கள் போன்றவை தனிப்பட்டவை. அதிகாரப்பூர்வமற்றவை. பொது ஆவணங்களல்ல. மாறாக வரலாற்றுக் குறிப்புகள் (Annals), காலவரன்முறைக் குறிப்புகள் (Chronologies), பதிவேடுகள் (Records) போன்றவை எழுத்துச் சான்றுகளாகும். இவை வரலாற்றாளரின் ஆதார சாட்சிச் சான்றுகளாகும்.

குறிப்பு

### 12.3.4. வரலாற்றுச் சான்றுகளைத் திரட்டுதல்

சான்றுகள் வரலாற்றிற்கு முதுகெழும்பு போன்றன. வரலாற்று ஆய்வாளர் சான்றுகளின் அடிப்படையில் தான் வரலாற்றைப் படைக்கின்றார். கடந்த காலத்தில் மனிதர்களின் செயல்களையும், அவர்களுடைய எண்ணங்களையும் பிரதிபலிப்பது சான்றுகள். கடந்த கால நிகழ்ச்சிகள் முழுமையையும் தாங்கி இருப்பதில்லை. அப்படி இருப்பினும் ஏதாவது எதிர்பாராத விபத்துக்கள் காரணமாக அத்தகைய சான்றுகள் கடந்த கால நிகழ்ச்சிகள் மற்றும் செய்திகள் வரலாற்றில் இடம் பெறாமல் போய்விடும். வரலாற்றை பொருத்தவரை அத்தகைய நிகழ்ச்சிகள் நிகழாமல் போய்விடும். எனவே சான்றுகளுக்குப் பதிலாக வேறு ஒன்றைக் கொண்டு வரலாறு எழுத இயலாது. எனவே சான்றுகள் இல்லையெனில் வரலாறு இல்லை. வரலாற்றுச் சான்றுகளுக்கும், அதைக் கொண்டு வரலாறு எழுதுகின்ற வரலாற்று ஆசிரியனுக்கும் இடையில் உள்ள உறவைப் பற்றி இ. எச். கார் என்னும் ஆங்கில வரலாற்று ஆசிரியர் வரலாறு என்றால் என்ன? என்னும் புத்தகத்தில், “வரலாற்று ஆசிரியருக்கும், சான்றுகளுக்கும் இடையில் உள்ள உறவு, கடந்த காலத்திற்கும், நிகழ்காலத்திற்கும் இடையே நடக்கும் இடைவிடாத உரையாடல் ஆகும்” என அருமையாகக் கூறுகின்றார்.

தொழில் நுட்பத்தில் பல முன்னேற்றங்கள் அடைந்திருந்தாலும் கடந்த காலத்திலும் நவீன காலத்திலும் வரலாற்று சான்றுகளைச் சேகரிப்பது என்பது கடினமான செயலாகத்தான் உள்ளது. இதற்கு முக்கிய காரணம். தனி நபர்கள், அரசர்கள், பிரபுக்கள், செல்வந்தர்கள் போன்றோர் ஆவணங்களைச் சேகரித்து பொது மக்களின் பார்வையில் படாமல் மறைத்து வைத்திருப்பது தான். நவீன காலத்தில் ஒவ்வொரு நாட்டிலும் அரசாங்கங்கள் அந்நாட்டிற்கு உரிய ஆவணங்களைச் சேகரித்துப் பாதுகாத்து வரும் ஆவண காப்பகங்கள், அரசு அருங்காட்சியங்கள் மற்றும் பொது ஆவணங்கள் ஒரு நாட்டின் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் வரலாற்றையும் பிரதி பலிக்கின்றன.

வரலாற்றுச் சான்றுகள் பொதுவாக இருவகைப்படும். அவை அ. மூலச்சான்றுகள் (அல்லது) முதல் நிலைச்சான்றுகள் ஆ. இரண்டாம் நிலை சான்றுகள் ஆகும். முதல்நிலை, இரண்டாம் நிலைச் சான்றுகள் ஆழ்ந்த புலமையுடைய நம்பத்தகுந்த வரலாற்று நூல் எனப்படுவது அந்த நூல் எந்த அளவிற்கு முதல் நிலை சான்றுகளைக் கொண்டு எழுதப்பட்டுள்ளது என்பதைப் பொறுத்தே அமையும். இவ்வாறு எழுதப்பட்ட வரலாற்று நூல் இரண்டாம் நிலைச் சான்றாகும். பொதுமக்கள், பத்திரிகைத் துறையைச் சார்ந்தவர்கள், வரலாற்றில் ஆர்வம் கொண்டவர்கள் வரலாற்றைப் பற்றி தெரிந்து கொள்ள முதல் நிலை சான்றுகளை நாடிச் செல்வது இல்லை. சமயத்தில் அவர்களுக்குப் போதிய நேரமும் கிடைப்பதில்லை. எனவே அத்தகையோர் முதல் நிலை சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட வரலாற்று நூல்களை நாடுகின்றனர். சுருங்கக் கூறின் வரலாற்று ஆய்வாளர் பரந்து

சிதறிக் கிடைக்கும் வரலாற்றுச் சான்றுகளை ஒன்று திரட்டி முறையாக யாவரும் அறிந்து கொள்ளும் வண்ணம் ஒரு நூலைப் படைக்கின்றார். இது இரண்டாம் நிலைச்சான்று ஆகிறது.

குறிப்பு

வரலாற்று ஆய்விற்கு முதல் நிலை சான்றுகள் எவ்வளவிற்கு தேவையோ, அந்த அளவிற்கு இரண்டாம் நிலைச் சான்றுகளும் தேவையானவை. ஒரு தலைப்பின் வரலாற்றுப் பின்னணி, கோட்பாடு மற்றும் ஆய்வு அனுமானம் இவற்றை நிர்ணயிப்பது இரண்டாம் நிலை சான்றுகள்தாம்.

இவற்றைத் தவிர மூன்றாம் நிலையில் உள்ள வரலாற்றுப் பாட புத்தகங்கள் மக்களிடையே பிரபலமடைந்துள்ளது வரலாற்று நூல்கள் இவை சான்றுகளாக எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை சான்றுகள் என அறுதியிட்டுக் கூற முடியாத நிலையில் சில சான்றுகள் அமைந்துள்ளன.

இவ்வகையைச் சார்ந்தவைதான் வரலாற்று நூல்கள் ஆகும் இத்தகைய நூல்களில் ஆசிரியரின் சமகாலத்து நிகழ்ச்சிகள் கூறப்பட்டு இருந்தாலும் அந்நிகழ்ச்சிகளைப் பொருத்தவரை இத்தகையை நூல்கள் இரண்டாம் நிலை சான்றுகளே ஆகும். ஆனால் அந்நூலின் ஆசிரியரின் வரலாற்றை ஆய்வு செய்யும் பொழுது அந்நூல் முதல் நிலை சான்றாகத்திகழ்கிறது.

அடுத்த வகை நூல்கள் சமகாலத்தில் எழுதப்பட்டவை இவற்றை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று வரலாற்று ஆசிரியர்களால் புற நோக்குத் தன்மையுடன் எழுதப்பட்ட சமகாலத்து வரலாறு. உதாரணத்திற்கு எ.பி. டைலர் எழுதிய ஆங்கிலேய வரலாறு 1914 -1915. இரண்டாம் வகை, சமகாலத்து வரலாற்று நிகழ்ச்சிகளில் பங்குகொண்டவர்கள் எழுதியுள்ள வரலாற்று. உதாரணம், இரு தொகுதிகளாக வின்சென்ட் சர்ச்சில் எழுதியுள்ள இரு உலகப் போர்கள். வரலாற்றிற்கு இரண்டாம் நிலை சான்றுகளாக இருப்பதை விடவின்சென்ட் சர்ச்சிலின் வாழ்க்கை வரலாற்றிற்கு முக்கிய சான்றாக அமையும். மேற்கூறிய அடிப்படையில் முதல்நிலை, இரண்டாம் நிலைச் சான்றுகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

முதல்வகைச் சான்றுகள் என்பன சோதனைகளின் மூலமாகவோ, விசாரணைகளின் மூலமாகவோ சேகரிக்கப்பட்ட முதல் நிலை செய்திகள் இத்தகைய சான்றுகள் அரசாங்க முடிவுகள், தீர்ப்புகள் போன்றவற்றைக் குறிக்கும். இம்முடிவுகள் பண்டைக் காலத்தில் அரசனுடையதாகவோ, பேரரசனுடையதாகவோ அமைந்துள்ளன. நவீன காலத்தில் அவை கூட்டு முடிவுகளாக அமைந்துள்ளன. உதாரணத்திற்கு பாராளுமன்ற அறிக்கைகளைக் கூறலாம். இவை அரசாங்க ஆவணங்கள், ஆணைகள், சட்டங்கள், சரத்துகள் போன்றவற்றைக் கொண்டுள்ளன. அரசாங்கத்தின் பல துறைகளான நீதி, வருவாய், பாராளுமன்ற அறிக்கைகள், காவல் துறை, பொதுத்துறை, ஆய்வுத்துறை போன்றவற்றின் ஆவணங்களும், சட்டமன்றத்துறை, போக்குவரத்துத் துறை, நலவாழ்வுத்துறை, உள்

குறிப்பு

ஆட்சித்துறை போன்றவற்றின் ஆவணங்களும் இவ்வகையில் அடங்கும். நிறுவனங்களின் ஆவணங்களாக பல்கலைக்கழக அறிக்கைகள், தனியார் நிறுவனங்களின் அறிக்கைகள் போன்றவற்றின் ஆவணங்கள் இவ்வகையில் அடங்கும். நான்காவது வகையில் பண்ணை ஆவணங்கள், அறிக்கைகள் அடங்கும்.

## 12.4. மதிப்பாய்வு மற்றும் அறிக்கைகள்

இவ்விரண்டிலும் பெரும்பான்மையானவை அரசாங்க குழுக்களால் தயாரிக்கப்பட்டவை. வரலாற்றிற்கு மதிப்பாய்வு அறிக்கைகள் மிகவும் பயன்பட்டாலும், இவை அரசாங்கத்தின் நேரடிப் பார்வையில் தயாரிக்கப்படுவதால் பெரும்பாலும் அரசாங்க எண்ணங்களையும் செயல்களையும் பிரதிபலிக்கின்றன. இவ்வகையில் இவை ஒரு தலைபட்சமாக இருக்க வாய்ப்பு உள்ளது. தனியார் சமூக அறிவியல் நிறுவனங்கள் தயாரிக்கும் மதிப்பாய்வுகள் பாரபட்சமின்றி இருக்க வாய்ப்புள்ளன. இவை வரலாற்று ஆய்விற்கு மிகவும் பயனுள்ளதாக அமைகிறது. பிரிட்டிஷ் இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் அறிக்கைகள் பல துறைகளில் வெளியிடப்பட்டன. சென்னை நிர்வாக அறிக்கை, சென்னை மாநிலத்தில் ஜெயில் நிர்வாக அறிக்கை, சென்னை மாநிலத்தில் நீதித் துறை நிர்வாக அறிக்கை, சென்னை மாநிலத்தில் காவல் துறை நிர்வாக அறிக்கை போன்ற சிலவற்றைக் குறிப்பிடலாம்.

## 12.5. அரசவை வரலாற்றுக் காவியங்கள், நூல்கள்

இடைக்கால இந்திய வரலாற்றை அறிந்து கொள்வதற்கு மிகவும் முக்கியமாக இருப்பது அரசு வரலாற்று ஆசிரியர்களால் எழுதப்பட்ட வரலாறுகளும், காவியங்களும் ஆகும். இதை தவிர, மன்னர்களும், அவர்களது உறவினர்களும் எழுதியுள்ள வாழ்க்கைக் குறிப்புகள் இடைக்கால வரலாற்றை அறிய உதவுகின்றன. ஆனால் இந்நூல்களில் வரலாற்று உண்மைகளின் சதவீதம் எவ்வளவு என்பதை ஆய்வாளர் மிக கவனமாகப் பிரித்துத் தெரிந்து கொள்ளுதல் அவசியம். ஏனெனில் நடைமுறையில் இத்தகைய இடைக்கால இலக்கியங்கள் அரசனின் புகழ்பாடுபவை. தென்னகத்து வரலாற்றில் விஜய நகரத்து அரசி கங்காதேவி தனது கணவனான குமாரகம்பணாரின் வெற்றிகளை வருணித்து எழுதிய காப்பிய நூல் மதுராவிஜயம் அதனை வீரகம்பராஸ சரித்திரம் எனவும் கூறுவர். சுல்தான்கள் ஆட்சியில் மௌலான ஸியா உதீன் பரணி எழுதிய தாரிகி பிருஸ் ஷாஹி, பெரிஷ்டா எழுதிய தாரிகி பிரிஷ்டா, மொகலாயர் ஆட்சியில் பாபர் நாமா, குல்பதான் பேகம் இயற்றிய "ஹுமாயூன் நாமா , அபுல்பசல் எழுதிய அயினி அக்பரி, பதௌனி எழுதிய தபகதி அக்பரி மற்றும் முண்ட காபுல் தபாரிக் காபிகான் எழுதிய தாரிகி காபிகான் போன்ற நூல்களை உதாரணமாக கூறலாம்.

## 12.6. குடும்ப மற்றும் தனி நபர்களது ஆவணங்கள்

குறிப்பு

வரலாற்றுப் புகழ்பெற்ற அரசியல் தலைவர்கள், சமூகத் தொண்டர்கள், விஞ்ஞானிகள், அரசாங்க அலுவலர்கள் மற்றும் தொழிலதிபர்கள் இவர்களுடைய நாட்குறிப்புகள், கடித பேக்குவரத்து போன்றவை அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை ஆய்வு செய்யவும், அவர்கள் வாழ்ந்த காலத்து நிகழ்ச்சிகளின் தாக்கத்தை அறிந்து கொள்ளவும் மிகவும் பயனுள்ளதாக அமைகின்றன. இந்திய தேசிய இயக்கத்தைப் பற்றி ஆய்வு செய்யும் நேரத்தில் மகாத்மா காந்தியின் குறிப்புகள், கடிதங்கள், ஜவஹர்லால் நேரு, தென் இந்தியாவில் ராஜாஜி, சத்திய மூர்த்தி போன்றவர்களுடைய அந்தரங்க ஆவணங்கள் வரலாற்று ஆய்விற்கு மிகவும் பயன்படுகின்றன. இந்திய விஞ்ஞானிகளில் கணித மேதை ராமானுஜம் அவர்களின் நோட்டுப் புத்தகம் அவரைப்பற்றி முழுமையாக அறிந்து கொள்ள உதவுகிறது. தொல்பொருள் ஆய்வுச் சான்றுகள்

கல்வெட்டுகள், நாணயங்கள், கட்டடங்கள், பண்டைய மக்களின் மட்பாண்டங்கள், கலைப்பொருட்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் போன்றவை பண்டைய வரலாற்றை அறிந்து கொள்ள மிகவும் உதவிகரமாக உள்ளன. முக்கிய எழுத்து வடிவத்தில் சான்றுகள் இல்லாத நாகரீகங்களைப் பற்றி அல்லது அந்நாகரீகங்களின் எழுத்து முறையை அறிந்து கொள்ள முடியாத சூழ்நிலையில் இத்தகைய தொல்பொருள் சான்றுகள் மட்டுமே ஒரு நாகரீகத்தின் சிறப்பியல்புகளை வரலாற்று ஆய்வாளர்கள் அறிய உதவுகிறது.

முக்கியமாக சிந்து சமவெளி நாகரிகத்தை இங்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். எழுத்து வடிவில் இலக்கியங்கள் மற்றும் கல்வெட்டுகள், செப்பேடுகள், நாணயங்கள் பண்டைய வரலாற்றை முழுமையாக ஆய்வு செய்யப்பயன்படுகின்றன. இலக்கியங்கள் மற்றும் கலைச்சான்றுகள் தொல்பொருள் சான்றுகள் அறவே இல்லா நிலையில் ஒரு நாகரிகத்தின் வரலாற்றினை அறிய உதவுவது அந்நாகரிகத்தின் இலக்கியங்கள் தாம். பண்டைய தமிழர் நாகரிகத்தை அறிய உதவுவது சங்க இலக்கியங்கள் தாம். பண்டைய தமிழர் நாகரிகத்தை அறிய உதவுவது சங்க இலக்கியங்கள் ஆகும். சங்க இலக்கியங்கள் இல்லாமல்

இருந்தால், பண்டைய தமிழர் அரசியல், சமூக, பொருளாதார மற்றும் கலைகள் வரலாற்றில் இடம் பெறாமல் போயிருக்கும். மேலும் ஒவ்வொரு கால கட்டத்திலும் இலக்கியங்கள் சமூகத்தின் பிரதிபலிப்புக்களாகவே உள்ளன. சமூக வரலாற்றை ஆய்வு செய்வதற்கு இலக்கியம் மிகவும் முக்கியம். இதைத் தவிர கலைப்பொருட்களாக இருக்கும் கட்டடங்கள், கோபுரங்கள், ஓவியங்கள், சிற்பங்கள் போன்றவையும் வரலாற்று முதன்மைச் சான்றுகளாகத் திகழ்கின்றன. வாய்வழிச் சான்று நவீன தொழில் நுட்ப கண்டுபிடிப்புகளின் வாயிலாக ஒலிப் பதிவு நாடாவில், ஒலி ஒளி நாடாவில் நேர்முகப் பேட்டியின் மூலம் பதிவு செய்யப்பட்டவை

வரலாற்றுச் சான்றுகளாக திகழ்கின்றன. கிராமியப் பாடல்கள் இவ்வகையில் சேகரிக்கப்பட்டு வரலாற்று ஆய்விற்குப் பெரிதும் பயன்படுகின்றன. அம்மானை பாடல்கள், கும்மிகள், நாட்டுப்புறப்பாடல்கள் ஆகியவற்றை இவ்வரிசையில் குறிப்பிடலாம். தொழில்நுட்ப முறைகளும் வரலாற்றுச் சான்றுகளும் தொழில்நுட்பப் புரட்சி காரணமாக புகைப்படக்கருவி, ஒலிப்பதிவு நாடா, டி.வி, வீடியோ மற்றும் செயற்கைக் கோள் போன்றவை அறிவியல் வளர்ச்சிக்குத் துணை புரிகின்றன. இத்தகைய நவீன தொழில் நுட்ப முறைகள் வரலாற்றுச் சான்றுகளாகவும் திகழ்கின்றன. செயற்கைக் கோள் உதவியுடன் எடுக்கப்படும் புகைப்படங்கள், பண்டைய நாகரிகத்தின் புவியியல் இருப்பிடங்களை அறிய உதவுகின்றன. மேலும் இலக்கியங்களிலும் மற்றும் வழக்கிலும் உள்ள பல ஆறுகள், நதிகளின் ஆற்று படுகைகளை மிக துல்லியமாக அறிய முடிகிறது. மேலும் வரலாற்று ஆய்வில் புள்ளியல் விவரங்களைப் பயன்படுத்தும் பொழுது ஆய்வு மிகவும் பயனுடையதாக விளக்குகிறது. புள்ளியலின் துணைக்கொண்டு நவீன வரலாறுகள் படைக்கப்படுகின்றன. இரண்டாம் நிலைச் சான்றுகள் மேற்கூறிய சான்றுகளைத் தவிர செய்தித்தாள்கள், பத்திரிகைகள், கேலிச்சித்திரங்கள், துண்டுப் பிரசுரங்கள், வானொலி வர்ணனைகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், சினிமா பாடல்கள் போன்றவையும் நவீன வரலாற்றுச் சான்றுகளாகும். வரலாற்று ஆய்விற்குப் போதுமான அளவில் முதல்நிலைச் சான்றுகள், இரண்டாம் நிலைச் சான்றுகளும் இல்லையெனில் வரலாற்று ஆய்வு முழுமை பெறாது.

## 12.7. இணைய ஆதாரங்கள்

இணைய ஆதாரங்கள் பெரும்பாலான வரலாற்றாசிரியர்களுக்கான ஆராய்ச்சி செயல்முறையின் பல பகுதிகளின் ஒருங்கிணைந்த பண்பாக மாறிவிட்டன. ஆன்லைன் நூல்கள் மற்றும் நூலகப் பட்டியல்கள் இரண்டாம் நிலை இலக்கியங்களைச் சேகரிப்பதை மிகவும் எளிதாக்கியுள்ளன, மேலும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட முதன்மை மூலப் பொருட்களின் பெருகிவரும் அளவு கணிசமாக எளிதாக அணுகலை அதிகரிக்கவில்லை,ஆனால் புதிய மற்றும் மிகவும் சக்திவாய்ந்த வகை கணினி உதவியுடன் பகுப்பாய்வுக்கான ஆதாரங்களைத் திறந்தது. இணையப் பக்கங்கள், வலைப்பதிவுகள், மன்றங்கள், சமூக ஊடகங்கள், பட்டியல்கள் மற்றும் பலவற்றின் மூலம் அனைத்து வகையான வரலாற்றுப் பாடங்கள் பற்றிய தகவல்களை இணையம் வழங்குகிறது. இருப்பினும், பிரச்சனை இரு மடங்கு: நீங்கள் தேடும் குறிப்பிட்ட தகவலைக் கண்டறிதல் (இது ஒரு வைக்கோலில் ஊசியைத் தேடுவது போல் இருக்கலாம்) எந்த தகவல் பயனுள்ளதாக இருக்கும், எது பயனற்றது என்பதைக் கண்டறிதல். இணையம் கட்டுப்பாடற்றது என்பதால், இணையத்தில் உள்ள பெரும்பாலான தகவல்கள் பயனுள்ளதாக இல்லை. எவரும், எந்த நேரத்திலும், எந்த இடத்திலும்,

எந்த கருத்தியல் வற்புறுத்தலும் தங்கள் எண்ணங்களை வலையில் பதிவு செய்யலாம் மற்றும் தகவல்களை விரைவாக வெளியிட முடியும். இங்கே, மற்ற வகை ஆதாரங்களை விட, ஒருவர் தனது விமர்சன வாசிப்பு திறனைப் பயன்படுத்த வேண்டும் மற்றும் சார்பு மற்றும் தப்பெண்ணத்தைக் காட்டும் அல்லது நம்பமுடியாத தகவல்களை பரப்பும் தளங்களைப் பற்றி எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நம்பகமான ஆதாரங்களைத் தேர்ந்தெடுப்பதில் ஆராய்ச்சியாளர் விழிப்புடன் இருப்பது முக்கியம். இணைய ஆதாரங்களின் எண்ணிக்கை வேகமாக வளர்ந்து வருகிறது. ஒரு இடைக்கால கிராமத்தில் ஒரு புரவலர் ஆராய்ச்சி தினசரி வாழ்க்கைக்கு உதவுவது, ஹிரோஷிமாவில் அணு கதிர்வீச்சின் விளைவுகள் அல்லது பெருநிறுவன வரலாறுகளில் கூட கிட்டத்தட்ட அனைத்து வரலாற்று தலைப்புகள் பற்றிய பயனுள்ள தகவல்களை ஆன்லைனில் காணலாம். பின்வருபவை நூலகர்கள் மற்றும் பிற தரவுத்தள வல்லுநர்களுக்கு காலத்தின் பயணத்தை கண்காணிக்கும் சில முக்கியமான ஆதாரங்களை வழங்குகிறது.

இணையத்தில் தேட எளிதான நுட்பம், உங்கள் விருப்பத்தின் தேடுபொறியில் உங்கள் பொருளின் பெயரைத் தட்டச்சு செய்வதே: கூகுள், எடுத்துக்காட்டாக, அல்லது யாஹூ, முதலியன வரவிருக்கும் முடிவுகள் பெரும்பாலும் தரத்தை குறிக்காத வரிசையில் பட்டியலிடப்படுகின்றன அல்லது பட்டியலிடப்பட்ட ஆதாரங்களின் சம்பந்தம், ஆனால் ஒவ்வொரு மூலத்திலும் "வெற்றி" எண்ணிக்கை. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், முதலில் பட்டியலிடப்பட்ட மூலமானது அடிக்கடி அணுகக்கூடிய ஒன்றாக இருக்கும் (மணிக்கு குறைந்த பட்சம் அந்த தேடுபொறியின் பயனர்கள்), இரண்டாவது பட்டியலிடப்பட்ட ஆதாரம் இரண்டாவது முறையாக அடிக்கடி அணுகப்படும், முதலியன விக்கிபீடியா, பிரபலமானது, எப்போதும் நம்பகமான திறந்த மூல இணைய கலைக்களஞ்சியம் அல்ல, ஏனெனில் இது பெரும்பாலும் முதலில் பட்டியலிடப்படுகிறது. மற்ற ஆதாரங்களுடன் ஒப்பிடும்போது அதை அணுகவும். தளம் என்பது வெறும் உண்மை அதிக எண்ணிக்கையிலான வெற்றிகளை அனுபவிப்பது அவசியம் அதை உயர்தர தளமாக மாற்றாது.

முதன்மை ஆவணங்கள் இணையத்தில் செல்லத் தொடங்கியுள்ளன. அசாதாரண காலங்களில் சாதாரண மக்களால் எழுதப்பட்ட நாட்குறிப்புகள் அல்லது கடிதங்களைப் படிப்பது மற்ற சில ஆதாரங்களைப் போலவே ஒரு காலத்தின் உள்ளுணர்வு உணர்வைத் தருகிறது. மாநில காப்பகங்கள் போன்ற பல காப்பகங்கள் முதன்மை ஆவணங்களின் சேமிப்பு வீடுகள் மற்றும் இணையத்தில் இலவசமாகப் பயன்படுத்தலாம். பொது அல்லது கல்வி நூலகத்தில் சேகரிக்கப்பட்ட காப்பகங்களுக்கு வரலாற்று வாடிக்கையாளர்கள் இருப்பிடத்திற்கு பயணிக்க வேண்டும், ஆனால் நூலகங்கள் பொதுவாக காப்பகத்தைப் பயன்படுத்த எந்த கட்டணத்தையும் வசூலிக்காது, நகலெடுக்கும் செலவுகளைத் தவிர. ஒரு தனியார் காப்பகத்திற்கான அணுகலைப்

பெறுவதற்கு உரிமையாளரின் ஒப்புதல் தேவை. முதன்மை வரலாற்று வளங்களை மட்டுமல்ல, உருப்படியை (களை) வைத்திருக்கும் நூலகம் அல்லது நிறுவனத்தையும் கண்டறிய காப்பக அடைவுகள் உதவும்.

வலைத்தளங்களில் ஏற்பட்ட வெடிப்பு வரலாற்றாசிரியர்களுக்கு பொருத்தமான பொருட்களில் வெடிப்பை கொண்டு வந்துள்ளது. இதில் அரசியல் ஆவணங்கள், உரைகள், புத்தகங்கள், கால ஆவணங்கள், ஆய்வறிக்கை மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் அடங்கும். பதிப்புரிமை சட்டம் ஒரு சில விதிவிலக்குகளுடன் முதன்மை ஆதாரங்களை பொது களத்தில் உள்ள ஆவணங்களுக்கு கட்டுப்படுத்துகிறது. அணுகக்கூடிய முதன்மை ஆதாரங்களின் எண்ணிக்கை பெரும்பாலும் டிஜிட்டல் வடிவத்தில் மாற்றுவதற்கு தேவையான பணம் மற்றும் மனித உழைப்பால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், ஒவ்வொரு வாரமும் ஆதாரங்களின் வரம்பு அதிகரிக்கிறது. இணைய அடிப்படையிலான ஆவணச் சேகரிப்புகள் வழங்கப்பட்ட ஒலி, கிரா∴பிக் படங்கள் மற்றும் திரைப்படத்தின் கூடுதல் ஈர்ப்புடன், துணை வாசிப்புகளின் பாரம்பரிய புகைப்பட நகல் பாக்கெட்டை எளிதாக மாற்ற முடியும்.

வரலாற்றின் ஆதாரமாக இணையத்தைப் பயன்படுத்துவது, வலைத்தளங்களின் பயன்பாடு மற்றும் தொடர்புடைய விஷயங்கள் வரலாற்றாசிரியர்களிடையே விவாதத்திற்குரிய தலைப்பு. ஆன்லைன் வளங்கள் மற்றும் வரலாற்று மற்றும் பிற ஆய்வுகளில் அவற்றின் பயன்பாடு பற்றிய விவாதம் தீர்க்கப்படாமல் உள்ளது. ஆயினும்கூட, ஆன்லைன் ஆதாரங்கள் கதைகள், கதைகள் மற்றும் முன்னோக்குகளுக்கு மற்றொரு பணக்கார அடுக்கைச் சேர்க்கின்றன

ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ளன அல்லது சொல்லப்பட்டு வருகின்றன, இது சம்பந்தமாக அவை எதிர்கால வரலாற்றாசிரியர்களால் பயன்படுத்தப்படக்கூடிய அனுபவ தரவுகளின் களஞ்சியத்தில் சேர்க்கின்றன.

## 12.8. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

1. ஆதாரங்கள் என்றால் என்ன?

2. வரலாற்றின் பொருளற்ற ஆதாரங்கள் எதை உள்ளடக்குகின்றன?

3. அரச பிரகடனங்கள் என்றால் என்ன?

4. ஏன் நாணயவியல் ஒரு முக்கியமான முதன்மை ஆதாரமாக உள்ளது?

5. செய்தித்தாள் அறிக்கைகள் மற்றும் அனுப்புதல்கள் ஏன் நம்பகமானவை?

குறிப்பு

6. அரசாங்க ஆவணங்களை முதன்மை ஆதாரமாக ஏன் தீர்மானிக்க முடியாது?

7. இரண்டாம் நிலை மூலங்களின் இரண்டு முக்கிய பண்புகளை பட்டியலிடுங்கள்.

## 12.9. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்

1. ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தின் வரலாற்றைக் கட்டமைக்கப் பயன்படுத்தப்படும் அனைத்துப் பொருட்களும் ஆதாரங்கள் எனப்படும்.

2. சமூக நிறுவனங்கள், பழக்கவழக்கங்கள் மற்றும் மரபுகள், மத வழிபாட்டு முறைகள் மற்றும் கோட்பாடுகள், நெறிமுறைக் கோட்பாடுகள், புனைவுகள் மற்றும் மூடநம்பிக்கைகள் போன்ற வாய்வழி, பாரம்பரிய மற்றும் மானுடவியல் ஆதாரங்கள் வரலாற்றின் பொருளற்ற ஆதாரங்களில் அடங்கும்.

3. சில கல்வெட்டுகள் பொதுவாக பொது மக்களுக்கு நிர்வாக, மத மற்றும் முக்கிய முடிவுகள் தொடர்பான முடியாட்சி உத்தரவுகளை தெரிவிக்கின்றன. இவை அரச பிரகடனங்கள் மற்றும் கட்டளைகள் என அழைக்கப்படுகின்றன.

4. நாணயவியல் அல்லது நாணயங்களின் ஆய்வு ஒரு முக்கியமான முதன்மை ஆதாரமாக உள்ளது, ஏனெனில் இது இறையாண்மைகளின் ஆளுமைகள் மற்றும் தனிப்பட்ட சாதனைகள் மற்றும் அரசியல், மத, பொருளாதார மற்றும் சமூக நிலை ஆகியவற்றை எடுத்துக்காட்டுகிறது.

5. செய்தித்தாள் அறிக்கைகள் மற்றும் அனுப்புதல்கள் மிகவும் நம்பகமானவை, ஏனெனில் நிகழ்வுக்கும் அதன் பதிவுக்கும் இடையே மிகக் குறுகிய இடைவெளி உள்ளது.

6. அரசு ஆவணங்களை முதன்மை ஆதாரமாக மதிப்பிட முடியாது, ஏனெனில் அவை உண்மையான கண்காணிப்பில் இருந்து பல படிகள் நீக்கப்பட்ட நபர்களால் தொகுக்கப்பட்டுள்ளன.

## 12.10. அத்தியாயச் சுருக்கம்

- நினைவுச்சின்னங்கள் கடந்த காலத்திலிருந்து எஞ்சியிருக்கும் தடயங்கள் மற்றும் அவற்றை மக்களுக்கு நினைவூட்டுவதற்கு உதவுகின்றன. சுவடுகளை மக்கள் தங்கள் செயல்பாடுகளின் போது தற்செயலாக விட்டுவிடலாம் அல்லது அவர்களின் செயல்களை சந்ததியினருக்கு தெரிவிக்க அவர்கள் நோக்கம் கொண்டுள்ளனர்.

**குறிப்பு**

□ வரலாற்று ஆதாரங்கள் வரலாற்றை எழுதுவதற்கு மதிப்புள்ள கடந்த கால நிகழ்வுகளின் வரிசையை வரலாற்றாசிரியர்கள் மூலம் கண்டறிய வழிவகுக்கின்றன. வரலாற்று ஆதாரங்களை பொருள், பொருளற்ற மற்றும் எழுதப்பட்டவை என வகைப்படுத்தலாம்.

□ எழுத்து மூலங்கள் மொழி ஊடகத்தில் இருந்து வருகின்றன. அவை நகலெடுக்கப்படலாம். கவனமாக திருத்தப்பட்டு அச்சிடப்பட்ட ஒரு எழுத்து மூல ஆதாரமாகக் கணக்கிடப்படலாம்.

□ ஒரு முதன்மை ஆதாரம் என்பது நேரடிப் பொருள் ஆகும், இது பரீட்சைக்கு உட்பட்ட காலப்பகுதியில் இருந்து பெறப்படுகிறது. இது ஒரு சாட்சி அல்லது ஒரு நிகழ்வின் நிகழ்வைக் குறிக்கும் தொல்பொருள் எச்சங்கள், கல்வெட்டுகள், நாணயங்கள், கடிதங்கள் மற்றும் பயணக் கணக்குகள் போன்ற ஒரு இயந்திர சாதனத்தின் சான்றாகும்.

□ தொல்லியல் ஆதாரங்கள் மாசுபடாத முதன்மை ஆதாரம். அவர்கள்

சமகால சான்றுகள், பக்கச்சார்பற்ற மற்றும் சிதைக்கப்படாதவை.

□ கட்டிடங்கள், படங்கள், மட்பாண்டங்கள், டெரகோட்டா உருவங்கள் மற்றும் பிற பழங்கால பொருட்கள் நினைவுச்சின்ன கண்டுபிடிப்புகளை உள்ளடக்கியது. அவர்கள் எந்த காலகட்டத்தின் நாகரிகத்தின் வகையை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார்கள்.

## 12.11. முக்கிய சொற்கள்

□ நாட்டுப்புறவியல்: இது நாட்டுப்புறவியல் ஆய்வுக்கு அர்ப்பணிக்கப்பட்ட முறையான, கல்விசார் ஒழுக்கத்திற்காக கல்வி நாட்டுப்புறவியலாளர்களால் விரும்பப்படும் சொல்.

□ முதன்மை ஆதாரம்: இது ஆய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் இருந்து பெறப்படும் நேரடி பொருள். இது ஒரு சாட்சி அல்லது ஒரு நிகழ்வின் நிகழ்வைக் குறிக்கும் தொல்பொருள் எச்சங்கள், கல்வெட்டுகள், நாணயங்கள், கடிதங்கள் மற்றும் பயணக் கணக்குகள் போன்ற ஒரு இயந்திர சாதனத்தின் சான்றாகும்.

□ ஸ்டெனோகிராபி: இது சுருக்கெழுத்தில் எழுதும் செயல் அல்லது செயல்முறையாகும்

ஒரு தட்டச்சுப்பொறியில் சுருக்கெழுத்தை படியெடுத்தல்.

□ கல்வெட்டு: இது கல்வெட்டுகள் அல்லது கல்வெட்டுகள், குறிப்பாக பண்டைய கல்வெட்டுகளின் ஆய்வு அல்லது அறிவியல் ஆகும்.

குறிப்பு

## 12.12. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

**குறுகிய வினாக்கள்**

1. தடயங்கள் விட்டுச் செல்லும் வழிகள் யாவை?

2. வரலாற்றின் சில பொருள் ஆதாரங்களைக் கூறவும்.

3. இரண்டாம் நிலை மூலத்தைப் பற்றி ஒரு சிறு குறிப்பை எழுதவும்.

4. இந்தியாவில் உள்ள சில மதிப்புமிக்க கல்வெட்டுகளை பட்டியலிடுங்கள்.

5. முதன்மை ஆதாரங்களின் மூன்று பண்புகளை பட்டியலிடுங்கள்.

6. இரண்டாம் நிலை ஆதாரங்கள் பொதுவாக எந்த வடிவத்தில் காணப்படுகின்றன?

7. இணையம் தொடர்பான இரு மடங்கு பிரச்சனை என்ன?

**விரிவான வினாக்கள்**

1. எழுதப்பட்ட வரலாற்று ஆதாரங்களை பகுப்பாய்வு செய்யுங்கள்.

2. முதன்மை வரலாற்று ஆதாரங்களின் இரண்டு வகைகளைப் பற்றி விவாதிக்கவும்.

3. வரலாற்று தகவல்களின் குறிப்பிடத்தக்க ஆதாரமாக நாணயங்களை ஆராயுங்கள்.

## 12.13. கூடுதல் வாசிப்புகள்

Warren, John. 1998. *The Past and Its Presenters*: An Introduction to Issues in Historiography. London: Hodder & Stoughton Educational.

Ferro, Marc. 2003. *The Use and Abuse of History*: Or How the Past is Taught to Children. Abingdon: Routledge.

E. Sreedharan. 2004. *A Textbook of Historiography: 500 BC to AD 2000*. New Delhi: Orient Blackswan.

Sharma, Arvind. 2003. *Hinduism and its Sense of History*. New Delhi: OUP India.

குறிப்பு

Iggers, Georg G. 2005. *Historiography in the 20th Century: From Scientific Objectivity to the Postmodern Challenge*. Connecticut: Wesleyan University Press.

Stuart, Hughes H. 1964. *History as Art and as Science.* New York: Joanna Cotler Books.

Fea, John. 2013. *Why Study History? Reflecting on the Importance of the Past*. Washington: Baker Publishing Group.

# அலகு-13

## ஆய்வுத் தலைப்பைத் தேர்ந்தெடுத்தல், புறநிலை மற்றும் அகநிலை

உள்ளடக்கம்

13.1. முன்னுரை

13.2. நோக்கங்கள்

13.3. ஆய்வுத் தலைப்பைத் தேர்ந்தெடுத்தல் (Selection of Research Topic)

13.4. நடுநிலை நோக்கு

13.4.1. நடுநிலை நோக்கின் முன்தேவைகள் (Pre Requisities of objectivity)

13.5. வரலாற்றுச் சுயநோக்கு (Historical Subjectivity or Bias)

13.6. வரலாற்றுத் தர்க்க வாதத் தவறுகள் (Historical Fallacies)

13.7. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

13.8. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்

13.9. அத்தியாயச் சுருக்கம்

13.10. முக்கிய சொற்கள்

13.11. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

13.12. கூடுதல் வாசிப்புகள்

## 13.1. முன்னுரை

வரலாற்று ஆய்வில் முதன்மையானதும் மற்றும் முக்கியமானதானவும் விளங்குவது ஆய்வுக்கான தலைப்பைத் தேர்ந்தெடுத்தல். இத்தலைப்பைத் தேர்ந்தெடுப்பதற்கு முன் ஆய்வாளர் அந்த குறிப்பிட்ட தலைப்பில் தனக்கு ஆர்வம் உள்ளதா என்பதையும், அந்த தலைப்பு குறித்த மேலதிகமான செய்திகளையும் உள்வாங்கி இருத்தல் வேண்டும். இத்தகைய பண்புகளை ஆய்வாளர் கொண்டில்லாமல் இருந்தால் அவருடைய ஆய்வு பயனற்றதாக மாறிவிடும். மேலும் ஆய்வாளர் ஆய்வை மேற்க்கொள்ளும் போது பாரபட்சமின்றி உள்ளதை உள்ளவாறு விளக்க வேண்டும். அவ்வாறு செய்தால் தான் ஒரு முழுமையான வரலாற்றை எழுத இயலும். அதே சமயத்தில் ஒரு வரலாற்றாசிரியருக்கு விருப்பு வெறுப்பின்றி ஒரு நிகழ்வை விவரிப்பது என்பது கடினமான பணியாகும். ஏனென்றால் கிடைக்கக்கூடிய ஆதாரங்கள் ஒரு தலைப்பட்சமாக இருந்தால் அத்தகைய வரலாறுகளும் பக்கச்சார்புடையதாகவே மாறிவிடும். எனவே ஆய்வாளர் மிகுந்த கவனத்தோடு தன்னுடைய ஆய்வை நிகழ்த்த வேண்டும் என்பதை இந்த அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது.

## 13.2. நோக்கங்கள்

**இந்த அத்தியாயத்தை படிப்பதன் மூலமாக கீழ்காண்பனவற்றை புரிந்து கொள்ள இயலும்**

- ஆய்வுக்கான தலைப்பை தேர்ந்தெடுக்கும் முறை விளக்கப்பட்டுள்ளது
- ஒரு ஆராய்ச்சி சிக்கலின் கருத்து மற்றும் தேர்வு செயல்முறை பற்றி விவாதிக்கப்பட்டுள்ளது
- வரலாற்று எழுத்தில் புறநிலை மற்றும் அகநிலை பற்றிய கருத்துகள் விவரிக்கப்பட்டுள்ளது

## 13.3. ஆய்வுத் தலைப்பைத் தேர்ந்தெடுத்தல் (Selection of Research Topic)

ஆய்வின் வெற்றி ஆய்வுத் தலைப்பைப் பொருத்தமாகவும் சரியாகவும் தேர்ந்தெடுப்பதைப் பொறுத்தே உள்ளது. இது நல்ல நம்பகமான நண்பனைத் தேர்ந்தெடுப்பதைப் போன்றது. ஆய்வுத் தலைப்பை அவசரமாகத் தேர்ந்தெடுத்து விட்டு நிதானமாக வருத்தப்படுவதில் பயனில்லை. தலைப்பைத் தேர்ந்தெடுப்பது எளிய காரியமன்று. ஆய்வுத் தலைப்பைத் தேர்ந்தெடுக்கும் போது கவனத்தில்

கொள்ள வேண்டியவை வருமாறு: 1. ஆய்வாளர்தான் தலைப்பைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஆய்வாளருக்காகத் தலைப்பு தேர்ந்தெடுக்கப்படக் கூடாது. ஆய்வுத் தலைப்பு ஆய்வாளரின் கருத்தையும் கவனத்தையும் கவர்ந்ததாகவும் இருத்தல் அவசியம். அப்போதுதான் அவரால் தேர்ந்தெடுத்துக் கொண்ட தலைப்பில் தொடர்ந்து ஆர்வமும் அக்கறையும் காட்டிக் கடுமையாக உழைக்க முடியும். ஆய்வு சுமையாக இல்லாமல் சுகமாக இருக்கும். 2. ஆய்வுத் தலைப்பு எல்லா அம்சங்களிலும் தெளிவாக இருக்க வேண்டியது இன்றியாமையாதது. தலைப்பு காலவரன்முறைப்படுத்தி வரையறுக்கக் கூடியதாக இருத்தல் அவசியம். தெளிவற்ற தலைப்பு (Vague Topic) உறுதியற்ற துல்லியமில்லாத ஆய்வில் முடிந்து விடும். துலக்கம் அல்லது தெளிவே (Clarity) ஒரு நல்ல ஆய்வுத் தலைப்பின் அடையாளமாகும். 3. ஆய்வுத் தலைப்பின் பரப்பெல்லை (Scope) சந்தேகத் துக்கிடமின்றி வரையறுக்கப்படக் கூடியதாக இருத்தல் வேண்டும். அப்போது தான் ஆய்வாளர் தடம்மாறிச் செல்லாமல் திசைமாறிப் போகாமல் ஆய்வு முறையில் (Research Methodology) விதிகளுக்குட்பட்டு ஆய்வை மேற்கொண்டு வெற்றிகரமாக முடிக்க இயலும். 4. ஆய்வுத் தலைப்பு புதிய சான்றுகளைத் திரட்டவோ, கிடைக்கும் சான்றுகளுக்குப் பொருள் விளக்கமளிப்பதற்கோ அல்லது புதிய கருத்துருவாக்கம் கொடுப்பதற்கு ஏற்றதாகவோ இருக்க வேண்டும். தலைப்பு ஆய்வாளரின் திறமைகளுக்குச் சவாலாக இருத்தல் நல்லது. 5. ஆய்வுத் தலைப்புக்குத் தேவையான பொருத்தமான போதிய சான்றுகள் கிடைக்குமா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். போதிய சான்றுகள் (Sufficient Sources) கிடைத்தால் மட்டும் போதாது. பல்வகைப்பட்ட சான்றுகள் (Dversified Sources) கிடைக்கக் கூடியதாகவும் இருப்பது சிறந்தது. அப்போதுதான் ஆய்வாளர் தெளிவாகப் பொருள் விளக்கமளிப்பதும், தடையின்றி கருத்துக்களை வெளிப்படுத்துவதும், சுயமான கருத்துருவாக்கம் (Ideation of Originality) செய்வதும் சாத்தியமாகும். 6. ஆய்வுத் தலைப்பு நெகிழ்வுத் தன்மை (Flexibility) கொண்டதாக இருத்தல் வேண்டும். சில சமயங்களில் போதிய சான்றுகள் எதிர்பார்த்தபடி கிடைக்காமல் போகலாம். அல்லது கிடைக்கும் சான்றுகள் தலைப்புக்குப் பொருத்தமற்றவையாக இருக்கலாம். அப்போது ஆய்வுத் தலைப்பை மாற்றவோ அல்லது திருத்தவோ நேரிடலாம். எனவே தலைப்பு வளையாத்தன்மை (சுபைனை)யுடையதாக 7. ஆய்வுத் தலைப்புக்கேற்ற சான்றுகள் ஆய்வாளர் அறிந்த மொழிகளில் உள்ளனவா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டியது அவசியம். மூலச் சான்றுகள் பிரகிருத, சமஸ்கிருத, தமிழ், மராத்தி, உருது, பிரெஞ்சு, டச்சு, ஆங்கில மொழிகளில் இருக்கக்கூடும். சம்பந்தப்பட்ட மொழிகளில் போதிய பயிற்சியின்றி அம்மொழிகளில் உள்ள சான்றுகளை நம்பி ஆய்வுத் தலைப்பைத் தேர்ந்தெடுத்தலாகாது. 8. ஆய்வுத் தலைப்பு நடைமுறை சாத்தியமானதாக இருக்க வேண்டும். நிதி ஆதார வசதியையும், காலக்

குறிப்பு

கெடுவையும் மனதில் கொண்டு தலைப்பைத் தெரிவு செய்ய வேண்டும். குறிப்பாக ஆய்வைக் குறிப்பிட்ட காலத்துக்குள் முடிக்கத் தக்கதாகத் தலைப்பைத் தேர்ந்தெடுப்பது சிறந்தது. முதுகலைப் பட்டத்துக்கான ஆய்வு ஆறு மாதங்களிலும், எம்.பில் ஆய்வு ஓராண்டிலும், டாக்டர் பட்டத்துக்கான ஆய்வு மூன்று ஆண்டுகளிலும் முடிக்கக் கூடியதாக இருக்கலாம். 9. ஆய்வுத் தலைப்பு சமூகத் தேவைகள், பொருளாதாரத் தொலைநோக்கு, அரசியல் ஒருமைப்பாடு ஆகியவற்றுக்குப் பொருத்தமானதாகவும் இருக்கலாம். நிகழ்ந்ததை நிகழ்ந்தவாறே கூறுவதுதான் வரலாறு என்ற எண்ணம் மாறி வருகிறது. பழமையார்வலர் மனப்பான்மை (Antiquarian Outlook) சமூகப் பொறுப்புணர்ச்சியோடு அறிவொளிமிக்கதாக இருக்க வேண்டும் என்ற கருத்து வலுப்பெற்று வருகிறது. எனவே ஆய்வுத் தலைப்பு சமூக, பொருளாதார, அரசியல் நிர்வாகப் பொருள் வளமுடையதாக இருக்கலாம் 10. ஆய்வுத் தலைப்பு தல அல்லது பிராந்திய வரலாறு (Regional History) பற்றியதாக இருப்பது நல்லது. தேசிய மற்றும் மாநில வரலாறு சம்பந்தப்பட்ட சான்றுகள் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டுவிட்டன. எனவே நுண்ணாய்வு (Micro Research) மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம். இத்தகைய ஆய்வுகள் புதிய சான்றுகளை வெளிக் கொண்டு வரவும், புதுப்பொருள் விளக்கம் கொடுப்பதற்கும், புல்லிதழ் வரலாறு (Grass-Root History) மலர்வதற்கும் ஏற்றதாக இருக்கும். ஆய்வுத் தலைப்பைத் தேர்ந்தெடுக்கும் போது தவிர்க்க வேண்டியவை: 1). சிக்கல்மிக்க, சர்ச்சைக்குரிய, சமகாலப் பிரச்சனை, 2). ஒப்பீட்டாய்வு (Comparative Research) அல்லது வரலாறுத் தத்துவ ஆய்வு. 3). முன்னரே ஆய்வு செய்யப்பட்ட அல்லது ஆய்வில் இருக்கும் தலைப்பு. தெரிந்தோ தெரியாமலோ இத்தகைய தலைப்பைத் தேர்ந்தெடுத்து செய்யப்படும் ஆய்வு ஆய்வுத் திருட்டு (Plagiarism) ஆகும். 4). போதிய சரியான சான்றுகள், கிடைக்காத தலைப்பு, வழக்கொழிந்த (Hackneyed) மற்றும் மறை மந்திரமான (Esoteric) தலைப்புகள். 5.பண்பாடு, சமயச் செல்வாக்கு, வெளிநாட்டுக் கொள்கை போன்ற பரப்பில் விரிவான பொருள், 6. நிதி வசதி மற்றும் காலக்கெடு மீறிய ஆய்வுத் தலைப்பு. ஆய்வுத் தலைப்பின் வகைகள் (Types of Research Topics) வருமாறு: 1). கடந்த கால வரலாற்று மாமனிதர்களின் வாழ்க்கை வரலாறு, 2) அரசு குடும்பங்களின் வரலாறு 3) நிர்வாகம் பற்றிய வரலாறு 4). சமூக, அரசியல், சமய, பொருளாதார, நிர்வாக நிறுவனங்கள் பற்றிய வரலாறு˙ 5). சமூக முக்கியத்துவமுடைய வரலாற்று நிகழ்வுகள், நடவடிக்கைகள், 6).தல அல்லது பிராந்திய வரலாறு. 7). கோவில்கள். 8). குறிப்பிட்ட கால கட்டத்தில் சமூக நிலை. 9). குறிப்பிட்ட நிலப்பகுதி பற்றிய வரலாறு. 10). ஒன்றுக்கு மேற்பட்ட அறிவுத்துறைகள் சார்ந்த ஆய்வு (Inter-Disciplinary Research). ஆய்வுத் தலைப்பு ஆகாயத்திலிருந்தோ அல்லது அசரீறி மூலமாகவோ வருவதன்று. மாறாகப் பொருத்தமான ஆய்வுத் தலைப்பு முயன்று பெறவேண்டிய ஒன்றாகும்.

## 13.4. நடுநிலை நோக்கு

குறிப்பு

நடுநிலை நோக்கு என்றால் என்ன? நடுநிலை நோக்கு அல்லது பொருள் நோக்கு (Objectivity) என்பது வரலாற்றாளர் வரலாற்றை வரையும் போது பாரபட்சமின்றி சமநிலை தவறாது இருக்க வேண்டும் என்பதாகும். அதாவது வரலாற்றாளரின் அணுகுமுறை அவருடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டிருக்க வேண்டும். வரலாற்றாளர் அல்லது வாலாற்று ஆய்வாளர் ஒரு தேர்ந்த நீதிபதியைப் போன்று "சமன் செய்து சீர்தூக்குங்கோல்போல" நின்று வரலாற்று முடிவுகளை எடுக்க வேண்டும். அப்போது தான் வரலாற்றைச் சார்பின்றி வரைய முடியும். வரலாறு நியாயமானதாகவும் நம்பத்தக்கதாகவும் இருக்கும். எனவே வரலாற்று ஆய்வாளர் தனிமுறைச் சார்பற்று (Impersonal) இருக்க வேண்டியது இன்றியமையாதது. வரலாற்று நடுநிலை நோக்கு பற்றிச் சொல்லுதல் எவர்க்கும் எளியனவாகும். ஆனால் சொல்லியபடி செய்து முடித்தல் அரியனவாகும். அதனால் தான் "வரலாற்று நடுநிலை நோக்கு வரலாற்று ஆய்வின் மிக முக்கிய அதே சமயம் மிகவும் குழப்பமிக்கதாகவும் உள்ளது" என்று கூறுகிறார் வால்ஷ் (W.H.Walsh) நடுநிலை நோக்கு பற்றி ராங்கே வரலாற்று அறிவியலின் தந்தை (Father of Scientific History) என்று போற்றப்படும் ஜெர்மானிய வரலாற்று வித்தகர் லியோபோல்டு வான் ராங்கே வரலாற்று நடுநிலை நோக்குக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தார். இவர் திறனாய்வு முறை (Critical Method) மூலம் வரலாற்று உண்மைகளை உறுதி செய்ய வேண்டுமென்றார். வரலாறு என்பது வரலாற்று உண்மைகளைக் கண்டுபிடிப்பது தான் வரலாற்று விதிகளை வகுப்பதல்ல என்று உறுதியாகக் கூறுகிறார் ராங்கே. அவர் வரலாற்று நடுநிலை பற்றிய இரண்டு கருத்துக்களை வலியுறுத்தியுள்ளார். 1). ஒவ்வொரு வரலாற்று உண்மையும் தனித்தனியே திறனாய்வு முறை மூலம் உறுதி செய்யப்படுதல் வேண்டும் ˙ 2). ஒவ்வொரு வரலாற்று உண்மையும் வரலாற்றாளரின் சுயச்சார்பின்றிச் சுயேச்சையாக இருக்க வேண்டும். இவை வரலாற்று நடுநிலை நோக்கு பற்றிய அடிப்படை நெறிகளாகும்.

நடுநிலை நோக்கின் முக்கியத்துவம் நடுநிலை நோக்கு வரலாற்று வரைவின் உயிர் மூச்சாகும். சார்பின்றி எழுதப்படும் வரலாற்று ஒழுக்கத்தோடு வாழும் வாழ்க்கையைப் போன்றது. வரலாற்று நடுநிலை நோக்கின் முக்கியத்துவத்துக்கான காரணங்கள் வருமாறு: 1) வாலாற்றின் நம்பகத் தன்மையை உறுதி செய்கிறது 2). திறனாய்வு முறை மூலம் சான்றுகளைப் பகுத்தாய்ந்து எப்பக்கமும் சாராது முறைப்படுத்த முடியும். 3) வரலாற்றாய்வாளரை விருப்பு வெறுப்புகளிலிருந்து பாதுகாக்கிறது. 4). நடுநிலை நோக்குடன் எழுதப்படும் வரலாறே உண்மையான வரலாறு என்ற எண்ணத்தை வரலாற்று ஆய்வாளர்களிடையே நிலைப்படுத்துகிறது. 5. இதுதான் வரலாற்று உண்மையைக் காப்பாறாமை நேர்வழி. 6. வரலாற்றாளரின் தார்மீகக் கடமையை வலியுறுத்துகிறது. மருங்கை காய

நடுநிலை நோக்கு வரலாற்று வரைவியலில் நியாயத்தையும், நேர்மையையும், ஒழுக்கத்தையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

குறிப்பு

நடுநிலை நோக்குக்கு எதிரான தடைகள் நடுநிலை நோக்குடன் வரலாறு எழுதுவதென்பது எளிதான காரியமன்று. அதற்குப் பல தடைகள் (Barriers to Objectivity) உள்ள ன. அவற்றுள் முக்கியமானவை வருமாறு: 1. வரலாற்று நிகழ்வுகளின் தன்மை (Nature of Historical Events). வரலாற்று நிகழ்வுகளைப் பற்றிய சான்றுகள் முழுமையாகக் கிடைப்பதில்லை. இவை மிகக் குறைவாகவோ அல்லது மிக அதிகமாகவோ கிடைக்கக் கூடும். சான்றுகள் அழிக்கப்பட்டோ , மறைக்கப்பட்டோ, சிதைக்கப்பட்டோ , விடுபட்டோ இருக்கலாம். எனவே சான்றுகளின் தன்மை வரலாற்றையும் மீறி அவரது நடுநிலை நோக்கைப் பாதிக்க வாய்ப்புண்டு. 2. வரலாற்று நிகழ்வுகளைத் தேர்ந்தெடுத்தல் (The Selection of Historical Events).

வரலாற்றின் பரப்பு பெரிது. அதன் வீச்சு அதிகம். எதைப் பற்றி எழுதுவது என்பதை வரலாற்றாளரோ அல்லது வரலாற்று ஆய்வாளரோ தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது. அதற்கேற்ப சான்றுகளை சேகரிக்க வேண்டும். நிகழ்வுகளுக்கேற்ற ஆய்வுத் தலைப்பா? அல்லது ஆய்வுத் தலைப்புக்கேற்ப நிகழ்வுகளைத் தெரிவு செய்வதா? என்பது நடுநிலை நோக்குக்குத் தடையாக உள்ளது. 3. ஆசிரியரின் ஆளுமை (The Personality of the Author). வரலாறு அல்லது வரலாற்று ஆய்வின் தன்மையும் தரமும் அதன் ஆசிரியரின் ஆளுமையைப் பொறுத்துள்ளது. ஆசிரியரின் விருப்பு, வெறுப்பு, பெருமை, பொறாமை, வேண்டுதல், வேண்டாமை அவரது நடுநிலை நோக்கைப் பாதிக்கக் கூடும். அதேபோன்று அரசியல் கொள்கைப் பிடிப்பு சாதி, இன, சமயப்பற்று, தேசிய உணர்வு, மனப்பான்மை போன்றவற்றையும் ஆசிரியரின் பொருள் நோக்கு பாதிக்கப்படலாம். 4. விவரிப்பு விளக்க க் கலப்பு (The Mixture of Narration and Explanation).

வரலாற்றாளரின் வேலை கடந்த கால நிகழ்வுகளை நிகழ்ந்தவாறே விவரிப்பதாகும். ஆனால் வரலாற்றாளரோ வரலாற்று ஆய்வாளர்களோ கடந்த காலத்தை விவரிப்பதோடு நிற்பதில்லை. அதை விளக்கவும், விமரிசிக்கவும் செய்கின்றனர். அப்போது வரலாற்றாளரின் சொந்தக் கருத்தோ மனப்பான்மையே வரலாற்று வரைவில் கலந்து அவரது நடுநிலை நோக்கைத் திரித்து விடுகிறது. 5. வரலாற்று ஊகங்கள் (Historical Assumption). ஊகங்கள் வரலாற்றின் வைரிகள்,

விரோதிகள். ஆனால் இவைதான் வரலாற்றின் நண்பர்களாகக் கருதப்படுகின்றன. வரலாற்று விளக்கங்கள் அனைத்தும் ஊகங்களின் விரிவாக்கமேயாகும். இறைச் சட்டம், அறிவாற்றல், அறிவொளி, கற்பனைக் காவியம், கார்டேசியனிசம், நேர்க்காட்சி வாதம், அறிவியல் சோஷலிசம், மீண்டும் நிகழ்தல், முன்னேற்றம், சுயவிருப்பாற்றல், வரலாற்றின் பொருள், வரலாற்றியம், சார்பியம் போன்றவை

**குறிப்பு**

ஊகங்களேயாகும். ஊகங்கள் வரலாற்று நடுநிலைக் நோக்குக்கு எதிரான தடைக் கற்கள். 6. வரலாற்றில் கலைக்கூறு (Art Element in History) வரலாறு கலையாகக் கருதப்படுகிறது. வெறும் வரலாறு (அநசந ாளைவழசல) எலும்புக் கூடாயின் கலை அதன் சதையாகும் என்று கூறப்படுகிறது. எனவே கற்பனையைக் கலந்து இலக்கியக் கவர்ச்சியோடு வரலாறு வரையப்படுகிறது. ஊகத்தைப் போன்றே கற்பனையும் கலையும் வரலாற்று நடுநிலைக்கெதிரான தடையாகும். 7. தவறாகப் புரிந்து கொள்ளல் (Error of Understanding) வரலாற்றைத் தவறாகப் புரிந்து கொள்வது நடுநிலை நோக்கைப் பாதிக்கும். தவறாகப் புரிந்து கொள்வதற்குப் போதிய சான்றுகள் இன்மை, குறிப்பிட்ட காலகட்டத்தை விரும்புவது அல்லது வெறுப்பது, எடுத்துக் கொண்ட பொருளில் ஆர்வமின்மை, யாரையாவது திருப்திப்படுத்த அல்லது தாக்க எழுதுவது போன்ற பல காரணங்கள் இருக்கக் கூடும். எனவே தவறாகப் புரிந்து கொள்வதால் வரலாற்றுச் சமநிலை நோக்கில் பாதிப்பு ஏற்படுகிறது. 8. உட்புறச் சார்புடைமை (Inverted Subjectivism). வரலாற்றாளர் தாமரை இலைத் தண்ணீர் போல் இருக்க வேண்டும். ஓடம் தண்ணீரில் மிதக்கலாம், மூழ்வி விடக் கூடாது. வரலாற்று ஆய்வாளர் வரலாற்றுக்கு வெளியே இருந்து வரலாற்றை ஆய வேண்டும். வரலாற்றாளர் வரலாற்றில் இருக்கலாம். ஆனால் வரலாற்றோடு இருக்கக் கூடாது. ஹெரோடொட்டசும், தூசிடைடிசும் கி.மு. 5-ம் நூற்றாண்டு கிரேக்கர்களாகவும், புனித அகஸ்டின் கி.பி. 5-ம் நூற்றாண்டின் கிறித்துவராகவும், மாக்கியவெல்லி 15-ம் நூற்றாண்டின் மறுமலர்ச்சிக்கால வரலாற்றாளராகவும், பிரான்சிஸ் பேக்கன் 16-ம் நூற்றாண்டின் அறிவுப் புரட்சியாளராகவும், டில்லமாண்ட் 17-ம் நூற்றாண்டுப் பிரெஞ்சுக்காரராகவும், கிப்பன் 18-ம் நூற்றாண்டு அறிவொளி ஆங்கிலேயராகவும், மாம்சன் 19-ம் நூற்றாண்டு ஜெர்மானியராகவும், டாயின்பி 20-ம் நூற்றாண்டு வரலாற்றுத் தத்துவராகவும் இருந்தே வரலாற்றை அணுகியுள்ளனர். இத்தகைய உட்புறச் சார்புடைமை நடுநிலை நோக்குக்கு எதிரான தடையாகும். 9. திரித்துக் கூறல் (Distortion). திரித்துக் கூறல் தவறு. வரலாற்றாளர் தெரிந்தே செய்வதாகும். அறிந்தோ அல்லது அறியாமலோ செய்தாலும் திரித்துக் கூறல் தவறுதான். கூலிக்கு வேலை செய்யும் வரலாற்றாளர் (Mercenary Historians) செய்யும் வேலை இது. தவறான எண்ண ங்களாலும் (Prejudices) வரலாறு திரித்துக் கூறப்படலாம். என். சுப்பிரமணியன் கூறுவதைப் போன்று வரலாற்றைச் சரியாகப் புரிந்து கொள்ளாதது தவறு என்றால் அதைத் திரித்துக் கூறல் குற்றமாகும். 10. சான்றுகளின் தூய்மையின்மை (Impurity of Sources) வரலாற்றுச் சான்றுகள் கலப்பு உலோகம் போன்றவை. இவற்றை பகுப்பாய்வுத் திறனாய்வு என்ற உலைக் களத்தில் காய்ச்சி சுத்தப்படுத்த வேண்டும். அப்போது தான் வரலாற்று நிகழ்வுகளை நிகழ்ந்தவாறு கூற முடியும். சான்றுகளைத் தூய்மைப்படுத்துதல், வரலாற்று நிகழ்வுக்கான கருத்தை அறிதல், அதை வாசகர் புரிந்து கொள்ளல் ஆகிய மூன்று கட்டங்களிலும் தூய்மைக்கேடு

ஏற்பட வாய்ப்புண்டு. எனவே சான்றுகளின் தூய்மையின்மை வரலாற்று நடுநிலை நோக்குக்கெதிரான தடையாகும்.

குறிப்பு

### 13.4.1. நடுநிலை நோக்கின் முன்தேவைகள் (Pre Requisities of objectivity)

வரலாற்றாளர் நீதிபதியைப் போன்றவர் வழக்குரைஞர் அல்லர். இவர் தீக்காய்வார் போல் இருந்து வரலாற்றை வரைய வேண்டும். அதற்கான முன் தேவைகள் வருமாறு: 1). சான்றுகளைத் திரட்ட அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். 2).புதிய சான்றுகள் யார் மூலம் கிடைத்தாலும் அதைத் திறனாய்ந்து ஏற்றுக் கொள்ள வேண்டும். 3). ஆரோக்கியமான அறிவியல் மனப்பான்மையும், நேர்மையான சுயக் கட்டுப்பாடும், திறனாய்வுத் திறமை இருக்க வேண்டும். 4). ”வரலாற்று உண்மைகள் “உண்மைகளைத் தவிர வேறில்லை என்பதைக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். 5) வரலாற்று உணர்வு இருக்க வேண்டும். 6.எழுத்து நடை எடுத்துக் கொண்ட பொருளுக்கு ஏற்றதாக இருக்க வேண்டும்.

## 13.5. வரலாற்றுச் சுயநோக்கு (Historical Subjectivity or Bias)

சுயநோக்கு என்றால் என்ன? சுயநோக்கு அல்லது தன்னிலை நோக்கு மனித இயல்பைப் பொறுத்தது என்று கூறுகிறார் டிரவெல்யன். இந்நோக்கு ஆய்வுப் பொருளில் இல்லை. மாறாக இது வரலாற்றாளரின் மனதில் உள்ளது. எனவே சுயநோக்கு உளவியல் சம்பந்தப்பட்டது. சுயநோக்கு என்பது ஒருவரின் ஒரு தலைச்சார்பை (Bias)க் குறிக்கிறது. இது உள்ளுணர்வு சார்ந்த அகநிலையாகும். விருப்பு, வெறுப்பு, வேண்டும், வேண்டாமை, தப்பெண்ணங்கள், மனப்பான்மை, பழக்க வழக்கம், அணுகுமுறை, ஏற்றுக் கொண்ட பொறுப்பு, அச்சம், தூண்டப்படுதல், பற்று, பாசம், அறியாமை, அனுதாபம், ஆக்ரோஷம் போன்ற மன உணர்ச்சி காரணமாக சுயநோக்கு உருவாகி வெளிப்படுகிறது. சுயநோக்கு வரலாற்றில் (Subjective History) வரலாற்றாளரின் சுயநலமும், சொந்த மதிப்பீடுகளும், தப்பெண்ண மும் தலை தூக்கி நிற்கும். சுயநோக்கும் (Subjectivity) ஒருதலைச் சார்புடைமையும் (Bias) ஒன்றல்ல எனக் கருதுவோருமுளர். சார்புடைமை இயல்பு சுயநோக்கு வெளிப்பாடு நடைமுறையில் இவ்விரண்டுக்குமிடையே வித்தியாசமில்லாத வேறுபாடு உள்ளது. அதாவது இரண்டும் ஒன்றுதான்.

சுயநோக்கு தவிர்க் முடியாததா? வரலாற்றின் சுயநோக்கு மிகவும் குழப்பமளிப்பதாகக் கருதுகிறார் வால்ஷ். வரலாற்றாளர் சுயநோக்கைத் தவிர்க்கவோ அல்லது துறக்கவோ முடியாது என்கிறார் கார்ல் பெக்கர். வரலாற்றாளரின் மதிப்புத் திட்டம் (Value Scheme) இவரது ஆய்விலும் எழுத்திலும் ஆழப் பதியவே செய்யும் என்று கூறுகிறார் எர்னஸ்ட் நாகல்.

**குறிப்பு**

மதிப்பீடு செய்யாமல் வரலாற்றை வரைய வேண்டும் என்று கூறுவது உடல் பெருத்த மாடு மேய்ப்போன்தான் உடல் பெருத்த மாடுகளை மேய்க்க வேண்டும் என்று கூறுவதைப் போன்றது என்று சொல்கிறார் நாகல். சுயநோக்கின்றி எழுதப்படும் வரலாறு ஈர்ப்பின்றித் தெளிவற்று இருக்கும் என்று எச்சரிக்கிறார் பியூரி. வரலாற்றாளரின் பண்பு நலன்கள் சுயசார்புக் கருத்துக்களைத் தவிர்க்க முடியாததாக்கி விடுகின்றன என்பது டிரவெல்யானது கருத்து. சுயநோக்கு வரலாற்றாளரின் இயல்பாகையால் இது தவிர்க்க முடியாதது என்று பல வரலாற்றாளர்கள் கருதுகின்றனர். இதற்குப் பின்வரும் காரணங்களைக் காட்டுகிறார் அமெரிக்க வரலாற்றாளர் சார்லஸ் பியர்டு : 1) வரலாற்றாளர் ஒரு வேதியியல் விஞ்ஞானியைப் போன்று ஆய்வுப் பொருளை கூர்ந்து நோக்கித் திறனாய முடியாது. 2) வரலாற்றாளர் துண்டு துண்டாகச் சிதறிக் கிடக்கும் சான்றுகளிலிருந்து தேவையானவற்றைத் தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது. 3). வரலாற்றாளர் தனது ஆய்வு முடிவுகளை வரலாற்று வரைவுக்கேற்ப சரிசெய்ய வேண்டியுள்ளது. 4). வரலாற்றாளர் கருத்துருவாக்கங்கள் மூலம் கடந்த காலத்தைப் பற்றிய வடிவத்தைத் "திணிக்க" வேண்டியிருக்கிறது. 5). வரலாற்றாளர் ஆர்வம் கொண்டிருக்கும் நிகழ்ச்சிகள் கலையம்சங்களைக் கொண்டிருக்கக் கூடும். 6). வரலாற்றாளர் "நடுநிலை மனதோடு" வரலாற்றை வரைவது நடைமுறை சாத்தியமற்றது. சுயநோக்கு மூன்று வழிகளில் வெளிப்படலாம். 1). அறியாமல் செய்வது. வரலாற்றாளர் தன்னையுமறியாமல் சுயநோக்கை வெளிப்படுத்துதல். இத்தவற்றைச் சுட்டிக்காட்டினால் திருத்திக் கொள்வார். 2) அறிந்தே செய்வது. சார்புடைமை காரணமாக சுய உணர்வோடு சுயநோக்குடன் எழுதுவது. தெரிந்தே தவறு செய்வதால் இவர்கள் திருந்த மாட்டார்கள். 3). வேண்டுமென்றே செய்வது. வரலாற்று உண்மைகளைத் திரித்துக் கூறுவது இந்த ரகத்தைச் சேர்ந்தது. ஆவணங்களை மறைப்பதும், போலி ஆவணங்களை இடச்செருகல் செய்வதும், ஆவணங்களில் விரும்புவதை மட்டும் எடுத்துக் கொண்டு விரும்பாததை விடுவிப்பதும், ஆவணங்களை அழிப்பதும் வேண்டுமென்றே செய்யும் தவறுகளாகும். இவை அறிவுறுத்தல் தவறுகள் (DidacticalErrors) எனப்படும். இவை தவறுகள் மட்டுமல்ல, குற்றங்களாகும்.

சான்றுகள் இன்மை, குறிப்பிட்ட காலகட்டத்தை விரும்புவது அல்லது வெறுப்பது, எடுத்துக் கொண்ட பொருளில் ஆர்வமின்மை, யாரையாவது திருப்திப்படுத்த அல்லது தாக்க எழுதுவது போன்ற பல காரணங்கள் இருக்கக் கூடும். எனவே தவறாகப் புரிந்து கொள்வதால் வரலாற்றுச் சமநிலை நோக்கில் பாதிப்பு ஏற்படுகிறது. 8. உட்புறச் சார்புடைமை (Inverted Subjectivism). வரலாற்றாளர் தாமரை இலைத் தண்ணீர் போல் இருக்க வேண்டும். ஓடம் தண்ணீரில் மிதக்கலாம், மூழ்கி விடக் கூடாது. வரலாற்று ஆய்வாளர் வரலாற்றுக்கு வெளியே இருந்து வரலாற்றை ஆய வேண்டும். வரலாற்றாளர் வரலாற்றில் இருக்கலாம். ஆனால் வரலாற்றோடு இருக்கக் கூடாது. ஹெரோடொட்டசும், தூசிடைடிசும் கி.மு.5-ம்

நூற்றாண்டு கிரேக்கர்களாகவும், புனித அகஸ்டின் கி.பி.5-ம் நூற்றாண்டின் கிறித்துவராகவும், மாக்கியவெல்லி 15-ம் நூற்றாண்டின் மறுமலர்ச்சிக்கால வரலாற்றாளராகவும், பிரான்சிஸ் பேக்கன் 16-ம் நூற்றாண்டின் அறிவுப் புரட்சியாளராகவும், டில்லமாண்ட் 17-ம் நூற்றாண்டுப் பிரெஞ்சுக்காரராகவும், கிப்பன் 18-ம் நூற்றாண்டு அறிவொளி ஆங்கிலேயராகவும், மாம்சன் 19-ம் நூற்றாண்டு ஜெர்மானியராகவும், டாயின்பி 20-ம் நூற்றாண்டு வரலாற்றுத் தத்துவராகவும் இருந்தே வரலாற்றை அணுகியுள்ளனர். இத்தகைய உட்புறச் சார்புடைமை நடுநிலை நோக்குக்கு எதிரான தடையாகும். 9. திரித்துக் கூறல் (Distortion). திரித்துக் கூறல் தவறு. வரலாற்றாளர் தெரிந்தே செய்வதாகும். அறிந்தோ அல்லது அறியாமலோ செய்தாலும் திரித்துக் கூறல் தவறுதான். கூலிக்கு வேலை செய்யும் வரலாற்றாளர் (Mercenary Historians) செய்யும் வேலை இது. தவறான எண்ண ங்களாலும் (Prejudices) வரலாறு திரித்துக் கூறப்படலாம். என்.சுப்பிரமணியன் கூறுவதைப் போன்று வரலாற்றைச் சரியாகப் புரிந்து கொள்ளாதது தவறு என்றால் அதைத் திரித்துக் கூறல் குற்றமாகும். 10. சான்றுகளின் தூய்மையின்மை (Impurity of Sources). வரலாற்றுச் சான்றுகள் கலப்பு உலோகம் போன்றவை. இவற்றை பகுப்பாய்வுத் திறனாய்வு என்ற உலைக் களத்தில் காய்ச்சி சுத்தப்படுத்த வேண்டும். அப்போது தான் வரலாற்று நிகழ்வுகளை நிகழ்ந்தவாறு கூற முடியும். சான்றுகளைத் தூய்மைப்படுத்துதல், வரலாற்று நிகழ்வுக்கான கருத்தை அறிதல், அதை வாசகர் புரிந்து கொள்ளல் ஆகிய மூன்று கட்டங்களிலும் தூய்மைக்கேடு ஏற்பட வாய்ப்புண்டு. எனவே சான்றுகளின் தூய்மையின்மை வரலாற்று நடுநிலை நோக்குக்கெதிரான தடையாகும். 35.1.5 நடுநிலை நோக்கின் முன்தேவைகள் (Pre Requisities of Objectivity) வரலாற்றாளர் நீதிபதியைப் போன்றவர் வழக்குரைஞர் அல்லர். இவர் தீக்காய்வார் போல் இருந்து வரலாற்றை வரைய வேண்டும். அதற்கான முன் தேவைகள் வருமாறு: 1).சான்றுகளைத் திரட்ட அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். 2).புதிய சான்றுகள் யார் மூலம் கிடைத்தாலும் அதைத் திறனாய்ந்து ஏற்றுக் கொள்ள வேண்டும். 3). ஆரோக்கியமான அறிவியல் மனப்பான்மையும், நேர்மையான சுயக் கட்டுப்பாடும், திறனாய்வுத் திறமை இருக்க வேண்டும். 4). ”வரலாற்று உண்மைகள்” உண்மைகளைத் தவிர வேறில்லை என்பதைக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். 5).வரலாற்று உணர்வு இருக்க வேண்டும். 6.எழுத்து நடை எடுத்துக் கொண்ட பொருளுக்கு ஏற்றதாக இருக்க வேண்டும்.

## 13.6. வரலாற்றுத் தர்க்க வாதத் தவறுகள் (Historical Fallacies)

வரலாற்றாளர் செய்யும் தவறுகளால், நடுநிலை நோக்கு சுயநோக்காகி விடுகிறது. அதற்கான அடிப்படைக் காரணங்களில் ஒன்று அவருக்குத்

தர்க்கவியலில் (Logic) போதிய பயிற்சியின்மையேயாகும். வரலாற்றுச் சான்றுகளைத் திரட்டும் போதும், திரட்டிய சான்றுகளை பகுத்தாய்ந்து ஒழுங்குபடுத்தும் போதும், ஒழுங்குபடுத்திய சான்றுகளைப் பயன்படுத்தும் போதும் இத்தவறுகள் ஏற்படுகின்றன. உதாரணமாக சான்றுகளைச் சரிபார்த்தல், சான்றுகளின் சிறப்பைக் கண்டறிதல், விவரித்தல், காரண - காரியத் தொடர்பு காணல், வேறுபட்டிருக்கும் நிகழ்வுகளுக்கிடையே ஒற்றுமை காணல், கட்டுரையாக்கம் ஆகியவற்றைத் தர்க்கவாத விதிகளின்படி செய்யாவிடில் தவறுகள் நேரலாம். இது பிரௌடின் வியாதி (Froude's Disease) எனப்படும். சான்றுகளை சரிபார்க்கான்மை, நினைவாற்றலை நம்புவது, கால இடைவெளிகளைக் கற்பனையால் நிரப்புவது இந்நோய்களுக்கான அறிகுறிகளாகும். இவையன்றிப் பின்வரும் காரணங்களாலும் தர்க்கவாதத் தவறுகள் ஏற்படலாம். 1. குறிப்பிட்ட சூழ்நிலைகள் குறிப்பிட்ட நிகழ்ச்சிக்குக் காரணமாக இருந்தால் அத்தகைய சூழ்நிலைகள் அதேபோன்ற நிகழ்ச்சியைத் தோற்றுவிக்கும் என்று முடிவு செய்தல். 2. பிற்கால எண்ணங்களை முற்கால நிகழ்ச்சிகளின் மேல் ஏற்றிக் கூறல். 3. வரலாற்றாளரின் முன்மதிப்பீடுகளை வரலாற்று நிகழ்ச்சிகளின் மூலம் வெளிப்படுத்தல். 4. சான்றுகளுக்கப்பாற்பட்ட முடிவுகளுக்கு வருதல். 5. சில நிகழ்வுகளைக் கொண்டு பொதுக் கருத்துக்களையோ அல்லது விதிகளையோ உருவாக்குதல். 6. வரலாற்றை நிகழ்ந்தவாறு விவரிக்காமல் வரலாற்றாளர் நினைத்தவாறு வரைதல்.

எனவே வரலாற்று ஆய்வில் ஈடுபடுவோர் தர்க்கவாதத் தவறுகளைத் தவிர்க்க வேண்டும். 35.4 மதிப்பீடு வரலாறு நடுநிலை நோக்கோடு எழுதப்படுதல் வேண்டும் என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்க இயலாது. நிகழ்ந்ததை நிகழ்ந்தவாறே கூற வேண்டு மென்கிறார் ராங்கே. ஸ்பேடை ஸ்பேட் என்றே சொல்ல வேண்டும்“ (Call a spade a spade) என்று அறிவுறுத்துகிறார் மைக்கேல் ஒக்ஷாட். வரலாற்றாளரின் வேலை வரலாற்று உண்மைகளை உறுதி செய்வதேயன்றி ஒழுக்க முடிவுகளுக்கு வருவதல்ல என்பதைத் தெளிவுபடுத்துகிறார் ஹெர்பர்ட் பட்டர்பீல்டு. அறிவியல் நடுநிலை நோக்குடன் வரலாறு வரையப்படுதல் வேண்டும் என்பதில் வரலாற்றாளர்களை விட வரலாற்றுத் தத்துவ ஞானிகளே அதிக அக்கறை காட்டுகின்றனர் என்று கருதுகிறார் ஹான்ஸ் மேயர்ஹாஃப். எனினும் வரலாற்று உண்மைகள் வரலாற்றாளரின் மனக்கண்ணாடி மூலம் செல்லும் போது கருத்துக்கோட்டம் (Fact Refraction) ஏற்படவே செய்யும் என்று கூறப்படுகிறது. இது மனிதனால் ஒழுக்கம் கெடாது வாழ முடியாது என்று கூறுவதைப் போன்றது. வரலாற்றை விவரித்தல், வரலாற்றை விளக்குதல், வரலாற்றுத் தத்துவ விதிகள் வகுத்தல் ஆகியவற்றுக்கிடையேயான அடிப்படை வேறுபாடுகளைப் புரிந்து கொண்டால் நடுநிலை நோக்குடன் வரலாற்றை வரையலாம்.

## 13.7. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

1. சிக்கலைத் தேர்ந்தெடுப்பதற்கான சில உதவிக்குறிப்புகளை பட்டியலிடுங்கள்.

2. யோசனைகளை எவ்வாறு உருவாக்க முடியும்?

3. மார்க் பெவிர் தனது தி லாஜிக் ஆ.்.ப் தி ஹிஸ்டரி ஆ.்.ப் ஐடியாஸ் புத்தகத்தில் என்ன வாதத்தை முன்வைக்கிறார்?

## 13.8. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்

1. சிக்கலைத் தேர்ந்தெடுப்பதற்கான சில குறிப்புகள்:

• ஏற்கனவே விரிவாக ஆராயப்பட்ட தலைப்பைத் தேர்ந்தெடுப்பதைத் தவிர்க்கவும்.

• ஆராய்ச்சி வாழ்க்கையைத் தொடங்கும் போது, சர்ச்சைக்குரிய தலைப்புகளைத் தவிர்க்கவும்.

• செலவுகள், நேரம், திறமை போன்றவை மனதில் கொள்ள வேண்டும்.

2. ஒருவரின் சொந்த உள்ளுணர்வின் மூலமாகவும், பின்னணி இலக்கியங்களைப் படிப்பதன் மூலமாகவும், தொடர்புடைய துறையில் மற்றவர்களுடன் கலந்துரையாடல் மூலமாகவும் யோசனைகளை உருவாக்க முடியும்.

3. அவர் வாதத்தை முன்வைக்கிறார்: 'வரலாற்றுக் கதையில் புறநிலைத்தன்மையுடன் கூடிய ஒரு மானுடவியல் அறிவியலானது, மனித செயல்கள்.். முகவர் நோக்கத்தை அர்த்தத்துடன் சமன்படுத்தும் விளக்கத்தில் தங்கியுள்ளது.

## 13.9. அத்தியாயச் சுருக்கம்

• பின்தொடர A1 மற்றும் A2 என குறைந்தபட்சம் இரண்டு நடவடிக்கை படிப்புகள் இருக்க வேண்டும். கட்டுப்படுத்தப்பட்ட மாறிகளின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்புகளால் செயல் முறை வரையறுக்கப்படுகிறது, உதாரணமாக, பண்டிகை நேரத்தில், சில வகையான பொருட்களை வாங்குவது ஒரு செயல்பாடாகும்.

• ஒரு ஆராய்ச்சி சிக்கல் என்பது ஏற்கனவே உள்ள பிரச்சனையாகும், இதற்கு ஆராய்ச்சியாளர் சிறந்த தீர்வைக் கண்டறிய விரும்புகிறார்,

குறிப்பு

மேலும் குறிக்கோளை அடைய எடுக்க வேண்டிய நடவடிக்கை. கொடுக்கப்பட்ட சூழல் அல்லது சூழலில் செயல் செயல்படுத்தப்பட வேண்டும்.

- ஆராய்ச்சிச் சிக்கலைப் பிரிப்பது என்பது ஆராய்ச்சிச் சிக்கலை செயல்பாட்டு அடிப்படையில் கூறுவதாகும். அனைத்து தொழில்நுட்ப விதிமுறைகளின் அறிக்கையும் தெளிவாக செய்யப்பட வேண்டும். ஆராய்ச்சியின் அடிப்படைக் கோட்பாடுகள் அடையாளம் காணப்பட வேண்டும். ஆய்வுக்கு ஒரு நியாயமான கால அளவு குறிப்பிடப்பட வேண்டும்.

- எழுதுவது வரலாற்றின் குறிப்பிடத்தக்க பகுதியாகும் மற்றும் எழுதாமல் வரலாற்றை கற்பனை செய்ய முடியாது. ஒரு எழுத்தாளர் தனது எழுத்து மூலம் பல்வேறு ஆதாரங்களில் இருந்து பெற்ற வரலாற்று அறிவைப் பகிர்ந்து கொள்கிறார். வரலாற்றில், எழுத்தாளர் தனது விஷயத்தைப் பற்றிய விவாதத்தை முன்வைக்கும் ஒரு ஆய்வறிக்கையை முன்மொழிகிறார்.

- எழுத்தாளர் எழுதத் தொடங்கும் முன், அவர் தனது பணிக்காகச் சேகரித்த தரவுகளைப் பற்றிய தெளிவான புரிதலைப் பெற வேண்டும். அவர் தனது செயல்முறையைத் தொடங்குவதற்கு முன் தெளிவான நோக்கங்களையும் முடிவையும் அடைய வேண்டும்.

- எழுத்தாளர் தனது தனிப்பட்ட சார்புகளை அவர் எழுதும் காகிதத்தை மறைக்க விடக்கூடாது. கடந்த கால நிகழ்வுகளின் அடிப்படையில் மதிப்புமிக்க தீர்ப்புகளை வழங்குவதில் இருந்து எழுத்தாளர்கள் விலகி இருக்க வேண்டும்.

- வரலாற்று எழுத்துக்கு ஆவணமாக்கல் இன்றியமையாததாக இருந்தாலும், எழுத்து பல்வேறு ஆதாரங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட தகவல்களின் துண்டுகளை சீரமைப்பதில்லை.

- வரலாற்று விசாரணையின் ஒவ்வொரு அடியிலும் அகநிலையின் ஒரு கூறு நுழைகிறது. நிகழ்காலம் கடந்த காலத்தைப் பற்றிய நமது அறிவை பாதிக்கிறது, ஏனென்றால் கடந்த கால நிகழ்வுகள் வரலாற்றாசிரியரின் மனதில் தவிர வேறு எங்கும் இல்லை, அவர் இப்போது பொருள் மற்றும் பொருளாக மாறியுள்ளார்.

- ஜியா-உத்-தின் பரானி அல்லது அபுல் ஃபசல் முறையே தங்களின் தாரிக்-இ-ஃபெரோஸ்ஷாஹி மற்றும் அக்பர்நாமாவை எழுதியபோது, அவர்கள் தங்கள் அரசியல் கருத்துக்களிலிருந்தும் அல்லது தங்கள் எஜமானருக்கு விசுவாசத்திலிருந்தும் விடுபடவில்லை.

### 13.10. முக்கிய சொற்கள்

- புறநிலை: இது தனிப்பட்ட அகநிலையிலிருந்து சுயாதீனமான உண்மையின் கருத்து (ஒருவரின் கருத்து, உணர்ச்சிகள் அல்லது கற்பனையால் ஏற்படும் சார்பு).

- அகநிலை: இது தனிப்பட்ட உணர்வுகள், ரசனைகள் அல்லது கருத்துகளின் அடிப்படையில் அல்லது தாக்கம் செலுத்தும் தரமாகும்.

- ஆராய்ச்சி சிக்கல்: இது ஒரு கவலைக்குரிய பகுதி, மேம்படுத்தப்பட வேண்டிய நிலை, அகற்றப்பட வேண்டிய சிரமம் அல்லது அறிவார்ந்த இலக்கியங்களில், கோட்பாட்டில் அல்லது நடைமுறையில் இருக்கும் ஒரு சிக்கலான கேள்வி, அர்த்தமுள்ள புரிதலின் அவசியத்தை சுட்டிக்காட்டுகிறது. மற்றும் வேண்டுமென்றே விசாரணை.

## 13.11. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

**குறுகிய வினாக்கள்**

1. ஆராய்ச்சி சிக்கலை உருவாக்கும் கூறுகளை பட்டியலிடுங்கள்.

2. ஒரு வரலாற்றுப் படைப்பை உருவாக்க ஒரு எழுத்தாளர் தேர்ச்சி பெற வேண்டிய மூன்று அடிப்படை நடைமுறைகளைக் குறிப்பிடவும்.

3. அகநிலை என்பது எதைக் குறிக்கிறது?

4. அகநிலையால் பாதிக்கப்பட்ட சில வரலாற்றுப் படைப்புகளை குறிப்பிடவும்.

**விரிவான வினாக்கள்**

1. ஒரு ஆராய்ச்சிச் சிக்கலைச் சந்திக்க வேண்டிய விவரக்குறிப்புகளைப் பற்றி விவாதிக்கவும்.

2. ஆராய்ச்சியில் ஈடுபடும் படிகளை விரிவாகக் கூறுங்கள்.

## 13.12. கூடுதல் வாசிப்புகள்

Warren, John. 1998. *The Past and Its Presenters*: An Introduction to Issues in Historiography. London: Hodder & Stoughton Educational.

Ferro, Marc. 2003. *The Use and Abuse of History*: Or How the Past is Taught to Children. Abingdon: Routledge.

E. Sreedharan. 2004. *A Textbook of Historiography: 500 BC to AD 2000*. New Delhi: Orient Blackswan.

Sharma, Arvind. 2003. *Hinduism and its Sense of History*. New Delhi: OUP India.

Iggers, Georg G. 2005. *Historiography in the 20th Century: From Scientific Objectivity to the Postmodern Challenge*. Connecticut: Wesleyan University Press.

Stuart, Hughes H. 1964. *History as Art and as Science.* New York: Joanna Cotler Books.

Fea, John. 2013. *Why Study History? Reflecting on the Importance of the Past*. Washington: Baker Publishing Group.

குறிப்பு

# அலகு-14

## திறனாய்வு அகம் புறம்

உள்ளடக்கம்

14.1. முன்னுரை

14.2. நோக்கங்கள்

14.3. வரலாற்றுத் திறனாய்வு (Historical Criticism)

14.3.1. புறத் திறனாய்வு (Heuristics or External Criticism)

14.3.2. அகத்திறனாய்வு (Hermeneutics or Internal criticism)

14.4. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

14.5. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்

14.6. அத்தியாயச் சுருக்கம்

14.7. முக்கிய சொற்கள்

14.8. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

14.9. கூடுதல் வாசிப்புகள்

## 14.1. முன்னுரை

வரலாற்று ஆதாரங்கள் உண்மையானதாக இல்லாமல் இருக்கலாம் அல்லது அவற்றின் உள்ளடக்கத்தில் அவை சார்புடையதாக இருக்கலாம் என்பதால் வரலாற்று ஆதாரங்களின் விமர்சனம் அவசியம். இந்த

ஆதாரங்களை மதிப்பிடும் நோக்கத்திற்காக, இரண்டு வகையான விமர்சனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இவை உள் விமர்சனம் மற்றும் வெளிப்புற விமர்சனம். வெளிப்புற விமர்சனம் மூலத்தின் நம்பகத்தன்மையை சரிபார்க்கிறது, அதேசமயம் உள் விமர்சனம் ஒரு உரையில் உள்ள உண்மையான அர்த்தங்களின் பகுப்பாய்வு மற்றும் ஆய்வுடன் தொடர்புடையது, ஏனெனில் அர்த்தங்கள் மாறுபடலாம் மற்றும் அர்த்தங்கள் மழுப்பலாக இருக்கலாம். ஆதாரம் அங்கீகரிக்கப்பட்ட பிறகு உள் விமர்சனம் செய்யப்படுகிறது. ஒரு மொழியில் அதே வார்த்தை இருக்கலாம் வெவ்வேறு அர்த்தங்கள் அல்லது அது பயன்படுத்தப்படும் சூழல் சில சமயங்களில் புரிந்து கொள்ள கடினமாக இருக்கும் முற்றிலும் புதிய அர்த்தத்தை கொடுக்கலாம். இந்த பிரிவில், இந்த இரண்டு வகையான விமர்சனங்கள் மற்றும் அவற்றின் நடத்தை சம்பந்தப்பட்ட செயல்முறைகள் விவாதிக்கப்படுகின்றன.

## 14.2. நோக்கங்கள்

**இந்த அத்தியாயத்தை படிப்பதன் மூலமாக கீழ்காண்பனவற்றை புரிந்து கொள்ள இயலும்**

- உள் மற்றும் வெளிப்புற விமர்சனத்தின் அம்சங்கள் மற்றும் செயல்முறை பற்றி விவாதிக்கப்பட்டுள்ளது

- நேர்மறை விளக்க விமர்சனத்தின் நோக்கங்கள் மற்றும் கொள்கைகள் விளக்கப்பட்டுள்ளது

## 14.3. வரலாற்றுத் திறனாய்வு (Historical Criticism)

ஆய்வுத் தலைப்பைத் தேர்ந்தெடுத்தல், பூர்வாங்க நூற்பட்டியல் தயாரித்தல், ஆய்வுக் கட்டுரைச் சுருக்கம் எழுதுதல் ஆகியவை வரலாற்று ஆய்வின் முதல் மூன்று நடவடிக்கைகள் என்று முன்னர் குறிப்பிட்டோம். 1). சான்றுப் பகுப்பாய்வு , 2) ஒருங்கமைத்தல், 3) கட்டுரையாக்கம், 4). மேற்கோளாட்சி , 5). ஆய்வுக் கட்டுரையின் அமைப்பு ஆகியவை வரலாற்று ஆய்வின் பிற நடவடிக்கைகளாகும். இவை வரலாற்றாய்வு முறையியல் (Methodology of Historical Research) என்று அழைக்கப்படுகிறது. சான்றுகளின்றேல் வரலாறில்லை. சான்றுகளே வரலாற்றுக்கான மூலப் பொருள்கள். சான்றுகளைச் சேகரித்து, சரிபார்த்து, அவற்றின் நம்பகத் தன்மையை உறுதி செய்த பின்னரே வரலாறு வரையப்படுகிறது. இதற்கான ஆய்வு முறையே திறனாய்வு ஆகும். கடந்த காலத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கான ஆராய்ச்சி வழிகளைக் கண்டுபிடிப்பதே திறனாய்வு என்று வரையறுத்துள்ளார் பாலின் யங் (Puline Young) வரலாற்றுத் திறனாய்வு

குறிப்பு

ஆவணங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. ஆவணங்கள் கடந்த கால நிகழ்ச்சிகளைப் பற்றிய அறிக்கைகள். இவை நிகழ்ந்தவை பற்றிய தகவல்களைத் தரவேண்டும் என்ற சுய உணர்வோடு கவனமாகத் தயாரிக்கப் பட்டவையாகும் என்று கூறுகிறார் கார்டர் குட் (Carter V.Good). எனினும் ஆவணங்களைப் பகுப்பாயாது அப்படியே ஏற்றுக் கொள்ள முடியாது. அவற்றைத் திறனாய்ந்து, சரிபார்த்து, மதிப்பீடு செய்ய வேண்டும். ஆவணங்களின் உண்மைத் தன்மையையும் நம்பகத் தன்மையையும் உறுதி செய்து, ஒவ்வொரு தகவலையும் கூர்ந்து கவனித்து சரிபார்த்த பின்னரே ஏற்றுக் கொள்ள வேண்டும் அல்லது நிராகரிக்க வேண்டும். சுரங்கப் பாறையை வெட்டி எடுத்து அதிலிருந்து தங்கத்தைப் பிரித்தெடுப்பதைப் போன்று ஆவணங்களிலிருந்து உண்மைச் சான்றுகளைக் கண்டறிய வேண்டும்! பிழைகளையும் தவறுகளையும் திரிபுகளையும் நீக்கி உண்மையைக் கண்டறிவதே வரலாற்றுத் திறனாய்வின் நோக்கமாகும்... சுருங்கக் கூறின் ஆவணங்களின் பகுப்பாய்வு மதிப்பீடே வரலாற்றுத் திறனாய்வு “ ஆகும். வரலாற்றுத் திறனாய்வு புறத் திறனாய்வு, அகத் திறனாய்வு என்று இருவகைப்படும்.

இருவகைத் திறனாய்வு முறைகள் வரலாற்று ஆய்வாளரின் நோக்கம் சான்றுகளின் உண்மைத் தன்மையை உறுதி செய்வதாகும். பகுப்பாய்வு நடவடிக்கைகளை (Analytical Operations)க் கொண்ட திறனாய்வு முறைகள் மூலம் சான்றுகளின் நம்பகத்தன்மை சோதிக்கப்படுகிறது. வரலாற்றுத் திறனாய்வு முறைகள் இரண்டு: 1). புறத் திறனாய்வு ˙ 2) அகத் திறனாய்வு

### 14.3.1. புறத் திறனாய்வு (Heuristics or External Criticism)

பொருள் விளக்கம் ஹியூரிஸ்டிக்ஸ் (Heuristics) என்ற சொல் கண்டுபிடிக்க (to find out) என்ற பொருளைக் கொண்ட ஹியூரிஸ்கீன் (ர்நரசளைமநனை) என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். அதாவது ஆவணங்களின் நம்பகத்தன்மை (Authenticity)யையும், உண்மைத் தன்மை (Veracity)யையும் கண்டறிவதே புறத் திறனாய்வாகும். இதற்குப் பொது விதிகள் எதுவும் வகுக்கப்பட வில்லை. ஹியூரிஸ்டிக்ஸ் பற்றிய புத்தகம் எதுவுமில்லை புறத்திறனாய்வு ஒரு கலை என்று கூறுகிறார் ரேனியா (G.J.Renier). இது பழக்கத்தாலும், முயற்சியாலும், அனுபவத்தாலும் வளர்த்துக் கொள்ள வேண்டிய கலையாகும். எனினும் பின்வரும் புறத்திறனாய்வு நுட்பமுறைகள் மூலம் சான்றுகளைச் சேகரித்து, பகுத்தாய்ந்து, மதிப்பீடு செய்ய முடியும். (Preparatory Study) புறத்திறனாய் ஆய்வுப் பயணத்தின் ஆரம்பகட்டமாகும். முதலில் ஆவணங்களின் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். மூலச் சான்றுகளைக் கொண்ட ஆவணங்கள் ஆவணக் காப்பகங்கள், அருங்காட்சியகங்கள், நூலகங்கள், தனியார் சேர்ப்புகள் ஆகியவற்றினின்றும் கிடைக்கக் கூடும். மூலச் சான்றுகளின் இருப்பிடத்தைக் கண்டுபிடிப்பதே ஒரு கலைதான் அங்கிருந்து அவற்றை

**குறிப்பு**

அடைவது அருங்கலையாகும்!! ஏற்றுக் கொள்ளப்பட்ட வரலாறு (Accepted History) இச்சான்றுகள் அல்லது ஆவணங்கள் கிடைப்பதற்கான ஒப்புகளை (Clues or Cues)க் கொடுக்கும். பூர்வாங்க ஆய்வு கீழ்நிலைத் திறனாய்வு (Lower Criticism) ஆகும். இது பற்றிய தெளிவிருந்தால் ஆய்வாளரின் அலைச்சலும் நேரமும் மிச்சமாகும். நம்பகத்தன்மையை உறுதி செய்தல் (Ascertaining Authenticity) ஆவணங்கள் வரலாற்று அடையாளங்களாகும். ஆவணங்கள் கிடைத்து விட்டால் மட்டுமே போதாது. அவை ஆய்வுத் தேவைகளுக்குப் பொருத்தமானவைதானா என்பதைப் பார்க்க வேண்டும். பொருத்தமானவையாகப்பட்டால் அவற்றில் காணப்படும் வரலாற்றுப் பதிவுகள் (Historical Traces) நம்பகத்தக்கவைதானா என்பதை உறுதி செய்ய வேண்டியது இன்றியாமையாதது. ஏன்? ஆவணங்கள் போலியாக இருக்கலாம். திரிக்கப்பட்ட நகல்களாக இருக்கக் கூடும். இடைச் செருகல்களாகவும் இருக்கலாம். எழுத்துத் திருட்டு இடம் பெற்றிருக்கலாம். கையெழுத்து புரியாமல் போகலாம். எனவே ஆவணங்கள் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுதல் வேண்டும். ஆவணங்களின் மூலம், காலம், எழுதப்பட்ட இடம், ஆசிரியர், கையெழுத்து போன்ற விவரங்கள் சரிபார்க்கப்பட வேண்டும். குறிப்பாக ஆவணங்களின் காலம், தேதி, தோன்றிய இடம், காரணகர்த்தா பற்றிய தகவல்களின் நம்பகத்தன்மை சந்தேகத்துக்கு இடமின்றி தெளிவுபடுத்த வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார் ஆலன் ஜான்சன். புறத்திறனாய்வு நுட்பங்கள் (Techniques of External Criticism) ஆவணங்களைக் கண்டறிந்து, சேகரித்து, பகுத்தாய்வதற்கான நுட்பங்களை நடைமுறை அனுபவத்தால் உருவாக்கியுள்ளனர். ஜி.ஜே.ரேனியர் பின்வரும் மூன்று நுட்பங்களை முக்கியமானவையாகக் கருதுகிறார். 1 ஏற்றுக் கொள்ளப்பட்ட வரலாறு உரைகல்லாகக் கருதப்படுதல் வேண்டும். 2.எந்த ஆவணம் உண்மையானது என்று அறிந்து கொள்ளக் கூடிய பயிற்சியும், முயற்சியும், திறமையும் வேண்டும். 3.பிற வரலாறு சார்ந்த இயல்களின் துணை கொண்டு ஆவணங்களின் நம்பகத்தன்மை சரிபார்க்கப்படுதல் வேண்டும். இதற்குக் காலவவரன் முறை, தொல்லெழுத்துக் கலை, முத்திரையியல், கல்வெட்டியியல், தொல்பொருளியல், காசியியல், ராஜதந்திரவியல் போன்றவை துணைபுரியக் கூடும். புறத்திறனாய்வின் பணிகள் (Functions of External Criticism) புறத்திறனாய்வு பூர்வாங்க ஆய்வுப் பணியாகும். இது சான்றுகளை மதிப்பீடு செய்வதற்கு முந்தைய நிலையாகும். இதன் பணிகளாவன: 1). வரலாற்று ஆய்வு முறையைத் துவக்கி வைக்கிறது. 2). சான்றுகள் உள்ள இடங்களைக் கண்டுபிடிக்க உதவுகிறது. 3) சான்றுகளின் நம்பகத் தன்மையைக் கண்டறிய பயன்படுகிறது. 4). சான்றுகள் உருவான இடம், காலம், உருவாக்கியோர் போன்ற தகவல்களை சேகரிக்க முடிகிறது. 5) துவக்க நிலையிலேயே வரலாறு சார்ந்த துணை இயல்களின் பங்களிப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள முடிகிறது. 6). சரியான பொருள் விளக்கமளிக்க உதவுகிறது.

குறிப்பு

### 14.3.2. அகத்திறனாய்வு (Hermeneutics or Internal criticism)

பொருள் விளக்கம் ஹெர்மநியூட்டிக்ஸ் (Hermeneutics) என்ற சொல் ஹெர்மநியூட்டிகே (hermenetike) என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். இச்சொல்லுக்கு உட்பொருளை வெளிப்படுத்துதல் (Interpretation) என்று பொருள். அதாவது ஆவணங்கள் அல்லது சான்றுகளின் உள்ளடக்கத்தை (Content) உறுதி செய்வதாகும். இது பொருள் நோக்குக் திறனாய்வு (Interpretative) ஆய்வதைப் போன்று அகத்திறனாய்வு அவற்றின் உட்பொருளை ஆய்வு செய்கிறது. எனவே இது உயர் திறனாய்வு (Higher criticism) ஆகும். ஆவணங்கள் வரலாற்றுப் பதிவுகளைத் தாங்கிச் செல்லும் வாகனங்கள். இப்பதிவுகள் தனித்தோ அல்லது சேர்ந்தோ காணப்படும். இவை உண்மையானவையா அன்றி உண்மை போன்றவையா என்பதை உறுதி செய்ய வேண்டும். பொதுவாக அகத்திறனாய்வு எழுத்து வடிவச் சான்றுகளுக்கே பயன்படும். ஆவணப் பதிவுகள், சரியாகவோ, தவறாகவோ அல்லது இரண்டும் கலந்தோ இருக்கக் கூடும். சில உள் நோக்கத்தோடு எழுதப்பட்டிருக்கலாம். எனவே ஆவணச் சான்றுகளுக்குக் காரணமானவர்களின் அறிவு, ஆற்றல், அனுபவம், உள்நோக்கம், தப்பெண்ணங்கள், விருப்பு வெறுப்புகள், சூழ்நிலை போன்றவற்றை ஆழ்ந்து அறிய வேண்டும். சுருங்கக் கூறின் ஆவண ஆசிரியரின் சொந்த குணங்களை (Personal Traits)க் கண்டறிவதன் மூலம் அவரது கூற்றுக்களைக் கூர்ந்து ஆராயலாம். இருவகை அகத்திறனாய்வு புறத்திறனாய்வு ஆவணங்களின் நம்பகத்தன்மையை உறுதி செய்கிறது. அகத் திறனாய்வு அவற்றின் உண்மைத் தன்மையைத் தீர்மானிக்கிறது. அகத் திறனாய்வு இரு வகைப்படும் உடன்பாட்டு அகத்திறனாய்வு 2. எதிர்மறைத் திறனாய்வு. 1. உடன்பாட்டு அகத்திறனாய்வு (Positive internal Criticism) ஆவணங்களின் உண்மைத் தன்மையை உறுதி செய்வதே உடன்பாட்டு அகத்திறனாய்வின் நோக்கமாகும். இது ஆக்கப் பூர்வமானது. இத்திறனாய்வு ஆவண மொழியை மையமாகக் கொண்டது. மொழி மனதின் வெளிப்பாடாகையால் மொழி ஆய்வு இன்றியமையாதது. வார்த்தைகள் காலத்துக்குக் காலம், இடத்துக்கு இடம் மாறக் கூடியது.

ஒரே ஆவணத்தில் ஒரு சொல்லோ அல்லது சொற்றொடரோ பல இடங்களில் பல பொருள்களில் பயன்படுத்தியிருக்கக் கூடும் சில பொருளற்ற சொற்கள் அலங்காரத்துக்காக இடம் பெற்றிருக்கலாம். வழக்கமாக வார்த்தைகளுக்கு இரண்டு பொருள்கள் இருக்கும். 1).எழுத்தியல்பான பொருள் (Literal Meaning). இது வார்த்தையின் நேரடியான அர்த்தம் 2) உண்மையான பொருள் (Real Meaning). இது வார்த்தைக்குள் மறைந்திருக்கும் பொருள் வார்த்தையின் சிறப்புப் பொருள், ஆசிரியரின் மனதில் உள்ளதன் வெளிப்பாடு. வார்த்தைகளின் உண்மைப் பொருளை அறிந்து கொள்வதற்கு மொழியியல் அறிவு இன்றியமையாதது. 2. எதிர்மறை அகத்திறனாய்வு (Negative Internal Criticism) ஆவணங்களில் உள்ள தவறுகளைக் களைவதே எதிர்மறை

குறிப்பு

அகத் திறனாய்வின் நோக்கமாகும். வார்த்தைகளோ, சொற்றொடர்களோ, வாக்கியங்களோ அல்லது பக்கங்களோ பொய்யாகவோ, தவறாகவோ அல்லது திரித்துக் கூறப்பட்டதாகவோ இருக்கலாம். எனவே ஒவ்வொரு கூற்றையும் சந்தேகிக்க வேண்டும். சந்தேகமே தெளிவுக்கான துவக்கம். ஏனெனில் ஆவணகர்த்தா நிகழ்ந்ததை நிகழ்ந்தவாரே கூறலாம் அல்லது அவர் நினைத்தவாறு கூறலாம் அல்லது பிறர் எதிர்பார்ப்பதைக் கூறலாம். எதிர்மறை அகத்திறனாய்வின் போது கவனிக்க வேண்டியவை: 1) ஆவணத்தை அத்தாட்சியாகக் கொண்டு அது கூறுவதே உண்மை என்று எடுத்துக் கொள்ளக் கூடாது. 2) ஆவணத்தின் ஒரு பகுதி பொய்யாக இருந்தால் ஆவணம் முழுவதும் பொய்யாக இருக்கும் என்ற முடிவுக்கு வரக்கூடாது. 3) உறுதியாகக் கூறப்படுபவை உண்மையான கூற்றுக்களாக இருக்க வேண்டுமென்பதில்லை. 4) தகவல்கள் அதிகமா இருந்தால் உண்மைகளும் அதிகமாக இருக்கும் என்று ஊகித்தலாகாது. 5) ஆசிரியர் நிகழ்ச்சியை நேரில் பார்த்தார் அல்லது பங்கு கொண்டார் என்பதற்காக அவர் எழுதியதை அப்படியே நம்பிவிடலாகாது. 6). அதேபோன்று ஆசிரியர் ஆட்சியாளருக்கு அருகாமையில் இருந்தார் என்பதற்காக அவர் சொல்வதை உண்மை என்று ஏற்கலாகாது. இருவகைத் தவறுகள் திறனாய்வு வரலாற்று ஆய்வாளரைத் தவறுகளினின்றும் காப்பாற்றுகிறது. ஆய்வாளர் துப்பறியும் நிபுணரைப் போன்றவர். தவறான துப்புகளைக் கொண்டு சரியான குற்றவாளியைக் கண்டுபிடிக்க முடியாது. அதேபோன்று தவறான சான்றுகளைக் கொண்டு வரலாற்று உண்மையைக் கண்டறிய இயலாது. சான்று எவ்வழியோ அவ்வழியே ஆய்வாளர் செல்ல வேண்டும். ஆய்வாளர் இருவகைத் தவறுகளை எதிர்கொள்ள நேரிடலாம் 1) நம்பிக்கை பற்றிய தவறுகள் 2).வழுவின்மை பற்றிய தவறுகள். 1. நம்பிக்கை பற்றிய தவறுகள் (Errors of Good Faith) ஆவணகர்த்தாக்கள் உண்மையையே கூறுவர் என்று நம்புகிறோம். ஆனால் அவர்கள் உண்மைக்குப் புறம்பாக சுய உணர்வோடு வேண்டுமென்றே செய்பவை நம்பிக்கை பற்றிய தவறுகள்" ஆகும். இத்தகைய தவறுகளுக்கான காரணங்களாவன: 1) ஆசிரியரின் தன்னல நோக்கம். 2) ஆசிரியர் சூழ்நிலைக் கைதியாகச் செயல்படல் 3) ஆசிரியரின் சொந்த விருப்பு வெறுப்புகள் 4) ஆசிரியரின் தன்முனைப்பு, பேரார்வம், தற்செறுக்கு. 5) ஆசிரியர் வாசகரை மகிழ்விப்பதற்காக எழுதுவது · 6) ஆசிரியர் தெரிந்தே உண்மையைத் திரித்துக் கூறல். வழுவின்மை பற்றிய தவறுகள் (Errors of Accuracy) ஆவணகர்த்தா சொல்வதைச் சரியாக, துல்லியமாக, தெளிவாகச் சொல்ல வேண்டும். அவ்வாறு சொல்லாத போது வழுவின்மை பற்றிய தவறுகள் ஏற்படும். இத்தகைய தவறுகளுக்கான காரணங்கள்: 1) ஆசிரியர் தனக்குக் கிடைத்த ஆவணங்களைச் சரியானவையாக அப்படியே ஏற்றுக் கொள்ளல் 2) ஆசிரியல் இயல்பாகவே சரியானவற்றைத் தவறாகப் புரிந்து கொள்ளல் 3) உள்நோக்கத்தின் தாக்கத்தால் தெரியாமல் செய்யும் தவறுகள் 4). சூழ்நிலையின் செல்வாக்குக்குள்ளாகி செய்யும் தவறுகள் 5) அச்சத்தைத் துணிவென்றெண்ணிச் செய்யும் தவறுகள். 6)

அறிவாற்றலும், மனமுதிர்ச்சியும், அனுபவமும் இன்மையால் இழைக்கும் தவறுகள்.

**மதிப்பீடு**

வரலாற்று ஆய்வாளர் ஆய்வுத் தலைப்பைத் தீர்மானித்தவுடன் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்கிறார். சான்றுகளைச் சேகரித்தலும் அவற்றைத் திறனாய்வு செய்வதும் அவரது தலையாய பணிகளாக உள்ளன. புறத்திறனாய்வு அகத்திறனாய்வு மூலம் சான்றுகளின் உறைவிடங்களான ஆவணங்களின் நம்பகத்தன்மையையும் உண்மைத் தன்மையையும் உறுதி செய்கிறார். நம்பிக்கை மற்றும் வழுவின்மைத் தவறுகளினின்றும் தன்னைத் தற்காத்துக் கொள்கிறார். சான்றுகள் வரலாற்றுக்கான மூலப் பொருள்களாகையால் ஆய்வாளர் சான்றுப் பகுப்பாய்வில் மிகுந்த அக்கறை கொள்ள வேண்டியது இன்றியமையாதது. இத்திறனாய்வுத் தன்மை ஆய்வாளரின் ஆளுமையையும், நேர்மையையும் முயற்சியையும் பொறுத்துள்ளது.

**குறிப்பு**

## 14.4. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

1. வெளிப்புற விமர்சனம் என்ன அழைக்கப்படுகிறது?

2. எந்த இரண்டு நிலைகளில் விளக்கம் செல்கிறது?

3. நேர்மறை விளக்க விமர்சனத்தின் இரண்டு முக்கிய வேலைகள் யாவை?

4. உரையின் உண்மையான பொருளைக் கண்டறிய எந்த பொதுக் கொள்கையைப் பயன்படுத்தலாம்?

## 14.5. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்

1. வெளிப்புற விமர்சனம் ஹியூரிஸ்டிக்ஸ் என்று அழைக்கப்படுகிறது, அதாவது கண்டுபிடிக்க தூண்டுதல் அல்லது கண்டுபிடிப்பதில் உதவுதல் அல்லது வழிகாட்டுதல். இது உயர்ந்த விமர்சனத்திற்கு மாறாக குறைந்த விமர்சனம் என்றும் அழைக்கப்படுகிறது.

2. விளக்கம் இரண்டு நிலைகளைக் கடந்து செல்கிறது, முதலாவது ஆவணத்தின் நேரடி அர்த்தத்தை அறிய ஆவணத்தின் மொழியைப் பற்றியது, இரண்டாவது அதன் உண்மையான பொருளைக் கையாள்கிறது.

3. நேர்மறை விளக்க விமர்சனத்தின் முதல் வேலை ஆவணத்தின் நேரடி அல்லது அகராதி அர்த்தத்தை அறிவது, இரண்டாவதாக ஆவணத்தில்

உள்ள வார்த்தைகளின் சிறப்பு அல்லது உண்மையான அர்த்தத்தை அறிவது.

குறிப்பு

## 14.6. அத்தியாயச் சுருக்கம்

- பகுப்பாய்வு செயல்பாடு வெளிப்புற விமர்சனம் மற்றும் உள் விமர்சனம் என இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு கிளைகளுக்கும் வேறு பெயர்களும் உண்டு. வெளிப்புற விமர்சனம் ஹியூரிஸ்டிக்ஸ் என்று அழைக்கப்படுகிறது, அதாவது கண்டுபிடிக்க தூண்டுதல் அல்லது கண்டுபிடிப்பதில் உதவுதல் அல்லது வழிகாட்டுதல்.

- வரலாறு இயற்றப்பட்ட உண்மைகள் அல்லது அலகுகள் தானாக ஒருங்கிணைக்கப்பட்டு, கடந்த காலக் கதையைச் சொல்லும் வகையில் அமைக்கப்பட்டிருக்காது. கதை அர்த்தமுள்ளதாக மாறுவதற்கு முன்பு நிறைய பிரதிபலிப்பு மற்றும் விளக்கமளிக்கும் திறன்களைப் பயன்படுத்த வேண்டும்.

- ஒரு சிலர் ஆயத்தப் பணிகளுக்கு அதிக நேரத்தையும் உழைப்பையும் செலவிடுகிறார்கள், அவர்கள் ஆவணங்களைத் திருத்துவதற்கும் வகைப்படுத்துவதற்கும் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணிக்கின்றனர். ஜெர்மனியின் வைட்ஸ், மாம்சென் மற்றும் ஹாரோ மற்றும் இந்தியாவின் ஜதுநாத் சர்க்கார் போன்ற வெளிப்புற விமர்சனம் மற்றும் வரலாற்று மறுகட்டமைப்பு பணிகளை ஒரு சிலர் இணைக்கின்றனர்.

- ஆசிரியரின் நோக்கங்கள், கருத்துக்கள், யோசனைகள் மற்றும் விருப்பங்கள் உயர் விமர்சனத்திற்கு மையமாக உள்ளன, அங்கு ஆசிரியரின் நல்ல நம்பிக்கை மற்றும் துல்லியம் ஆகியவை பிழையின் அனைத்து சாத்தியக்கூறுகளையும் அகற்றுவதற்காக மிக நுணுக்கமாக ஆராயப்படுகின்றன.

- கடந்த கால நீதிமன்ற வரலாற்றாசிரியர்கள் பெரும்பாலும் தங்கள் புரவலர்களைப் புகழ்வதற்காக கணக்குகளை எழுதியுள்ளனர், அவர்கள் அந்த நோக்கத்திற்காக பணியமர்த்தப்பட்டதால் அல்லது ஆட்சியாளர்களின் நல்ல அல்லது கெட்ட செயல்களால் அவர்கள் தனிப்பட்ட முறையில் ஈர்க்கப்பட்டதால், அவர்கள் எழுதும் சோதனையை எதிர்க்க முடியாது. உண்மையாகவே நிஜம் என்று நினைத்தேன்.

- நேர்மறை விளக்க விமர்சனம் ஆவணத்தின் நேரடி அர்த்தத்தை அறிவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஒவ்வொரு ஆவணத்தின் ஆய்வும் அதன் உள்ளடக்கங்களின் பகுப்பாய்வோடு தொடங்க வேண்டும், இது ஆசிரியரின் உண்மையான அர்த்தத்தை தீர்மானிக்கும் ஒரே நோக்கத்துடன் செய்யப்பட வேண்டும்.

**குறிப்பு**

• ஒவ்வொரு மொழிக்கும் அதன் சொந்த நுண்ணிய அர்த்தங்கள் இருக்கும், மேலும் உண்மையான அர்த்தத்தை அறிந்து கொள்வதற்கு ஒருவர் மொழியில் சிறந்த புலமை பெற்றிருக்க வேண்டும் என்பது ஆராய்ச்சிக்கு தேவைப்படுகிறது. பொதுவாக ஒரே வார்த்தையில் அதே அர்த்தம் அது நிகழும். ஆனால் ஆவணங்கள் எழுதப்பட்ட சாதாரண மொழியில், அதாவது பத்தியிலிருந்து பத்திக்கு ஏற்ற இறக்கங்கள்.

• அனைத்து மொழிகளும் பரிணாம வளர்ச்சியின் தொடர்ச்சியான செயல்முறையால் மாற்றத்திற்கு உட்பட்டவை. ஒவ்வொரு சகாப்தத்திற்கும் அதன் சொந்த மொழி உள்ளது, இது ஒரு தனி அடையாள அமைப்பாக கருதப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட ஆவணத்தைப் படிக்க அந்தக் கால மொழியின் பரிச்சயம் அவசியம்.

## 14.7. முக்கிய சொற்கள்

• ஹூரிஸ்டிக்ஸ்: சிக்கலைத் தீர்ப்பது அல்லது சுய-கண்டுபிடிப்புக்கான எந்தவொரு அணுகுமுறையும் உகந்தது, சரியானது அல்லது பகுத்தறிவு என்று உத்தரவாதமளிக்கப்படாத ஒரு நடைமுறை முறையைப் பயன்படுத்துகிறது, இருப்பினும் உடனடி, குறுகிய கால இலக்கு அல்லது தோராயத்தை அடைவதற்கு போதுமானது.

• அகவிமரிசனம்: இது உரையின் பொருளை மீட்டெடுக்கும் ஆய்வாளரின் முயற்சியாகும். இது ஹெர்மெனிட்டிக்ஸ் கட்டமாகும், இதில் ஆய்வாளர் ஆவணத்தின் வெளிப்புற கூறுகளை விட உரையின் அர்த்தத்துடன் ஈடுபடுகிறார்.

• வெளிப்புற விமர்சனம்: மூலத்தின் செல்லுபடியை சரிபார்த்து ஒரு ஆதாரம் உண்மையானதா என்பதை வரலாற்றாசிரியர்கள் தீர்மானிக்கும் ஒரு செயல்முறையாகும்.

• ஹெர்மெனிட்டிக்ஸ்: இது விளக்கத்தின் கோட்பாடு மற்றும் வழிமுறையாகும், குறிப்பாக விவிலிய நூல்கள், ஞான இலக்கியம் மற்றும் தத்துவ நூல்களின் விளக்கம்.

• உவமை: இது ஒரு பாத்திரம், இடம் அல்லது நிகழ்வு நிஜ உலகப் பிரச்சினைகள் மற்றும் நிகழ்வுகள் பற்றிய பரந்த செய்தியை வழங்கப் பயன்படுத்தப்படும் ஒரு கதையாகும்.

• அனாக்ரோனிசம்: இது சில ஏற்பாட்டில் உள்ள காலவரிசை முரண்பாடு, குறிப்பாக வெவ்வேறு காலகட்டங்களில் இருந்து நபர்கள், நிகழ்வுகள், பொருள்கள், மொழி விதிமுறைகள் மற்றும் பழக்கவழக்கங்களின் இணைப்பாகும்.

## 14.8. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

குறிப்பு

**குறுகிய வினாக்கள்**

1. ஒரு நபர் ஆராய்ச்சிக்கு அழைத்துச் செல்லும்போது எதிர்கொள்ளும் மூன்று சூழ்நிலைகள் யாவை?

2. வெளிப்புற விமர்சனத்தின் மூன்று செயல்பாடுகளைப் பற்றி ஒரு சிறு குறிப்பை எழுதவும்.

3. ஒரே மொழி வெவ்வேறு இடங்களில் எப்படிப் பேசப்படுகிறது, புரிந்து கொள்ளப்படுகிறது?

4. உள் விமர்சனத்திற்கு முதலில் என்ன செய்ய வேண்டும்?

5. உள் விமர்சனம் எந்த இரண்டு பொது விதிகளுக்கு நம்மை அழைத்துச் செல்கிறது?

**விரிவான வினாக்கள்**

1. நேர்மறையான விமர்சனத்திற்கு நினைவில் கொள்ள வேண்டிய கொள்கைகளைப் பற்றி விவாதிக்கவும்.

2. நேர்மறை விளக்க விமர்சனத்தில் ஈடுபட்டுள்ள இரண்டாவது கட்டத்தை பகுப்பாய்வு செய்யுங்கள்.

3. நூல்களின் உண்மையான அர்த்தத்தை விளக்குவதில் உள்ள சிக்கல்களை விரிவாகக் கூறுங்கள்.

## 14.9. கூடுதல் வாசிப்புகள்

Warren, John. 1998. *The Past and Its Presenters*: An Introduction to Issues in Historiography. London: Hodder & Stoughton Educational.

Ferro, Marc. 2003. *The Use and Abuse of History*: Or How the Past is Taught to Children. Abingdon: Routledge.

E. Sreedharan. 2004. *A Textbook of Historiography: 500 BC to AD 2000*. New Delhi: Orient Blackswan.

Sharma, Arvind. 2003. *Hinduism and its Sense of History*. New Delhi: OUP India.

Iggers, Georg G. 2005. *Historiography in the 20th Century: From Scientific Objectivity to the Postmodern Challenge*. Connecticut: Wesleyan University Press.

Stuart, Hughes H. 1964. *History as Art and as Science.* New York: Joanna Cotler Books.

Fea, John. 2013. *Why Study History? Reflecting on the Importance of the Past*. Washington: Baker Publishing Group.

குறிப்பு

## அலகு-15

### அடிக்குறிப்புகள் மற்றும் துணை நூல் பட்டியல்

உள்ளடக்கம்

15.1. முன்னுரை

15.2. நோக்கங்கள்

15.3. காலப் பெட்டகம் (Time Frame)

15.4. தர்க்க வாதம் (Reasoning)

15.5. ஆய்வுக் கட்டுரையாக்கம் (Exposition of A Thesis)

15.6. அத்தியாயங்கள் பிரித்தல் (Chapterisation)

15.7. தலைப்புகளும் கிளைத் தலைப்புகளும் (Headings and Sub Headings)

15.8. பொருளழுத்தத்துக்கு முக்கியத்துவம் (The Importance of Emphasis)

15.9. தொடர் வரிசையின் முக்கியத்துவம் (The Importance of Serialisatin)

15.10. எழுத்து நடை (The Writing style)

15.11. ஆவண மேற்கோளாட்சி

15.12. முன்னுரை (Preface)

15.13. அடிக்குறிப்புகள் (Footnotes)

15.14. மேற்கோள்கள் (Quotations)

15.15. பட்டியல்கள், வரைபடங்கள், தேசப்படங்கள் (Tables, charts and Maps)

15.16. நூற்பட்டியல் (Bibliography).

15.17. பிற்சேர்க்கைகள் (Apendixes).

15.18. அட்டவணை (Index).

15.19. ஆதாரங்கள் பட்டியல் (Bibliography)

15.20. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்
15.21. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்
15.22. அத்தியாயச் சுருக்கம்
15.23. முக்கிய சொற்கள்
15.24. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
15.25. கூடுதல் வாசிப்புகள்

## 15.1. முன்னுரை

வரலாற்று ஆய்வில் அடிக்குறிப்புகளும் துணை நூல் பட்டியல்களும் மிகவும் முக்கியமான ஒன்று. ஏனென்றால் ஓர் ஆய்வாளரின் தரத்தை மதிப்பீடு செய்ய இவை முக்கியமான காரணிகளாக விளங்குகிறது. அடிக்குறிப்புகள் பக்கத்தின் கீழே கொடுக்கப்பட்டுள்ள கூடுதல் தகவலைக் குறிக்கும். துணை நூல் பட்டியல் என்பது ஒரு தகவலை எழுதும் போது அல்லது ஆராய்ச்சி செய்யும் போது பயன்படுத்திய அனைத்து ஆதாரங்களையும் பற்றிய தகவலைக் குறிக்கிறது, ஆனால் அவை உரையில் குறிப்பிடப்படவில்லை. மறுபுறம், குறிப்புகள், ஒரு உரையில் ஒருவர் குறிப்பிட்ட அல்லது குறிப்பிட்டுள்ள அனைத்து ஆதாரங்களையும் உள்ளடக்கியது. வரலாற்று ஆய்வுகள் முடிந்த பிறகு இவற்றைக் குறிப்பிட வேண்டும். இந்த அத்தியாயமானது அடிக்குறிப்புகள் மற்றும் துணை நூல் பட்டியலின் அவசியமும் அதனோடு தொடர்புடைய பிற காரணிகளும் இதில் விளக்கப்பட்டுள்ளது.

## 15.2. நோக்கங்கள்

**இந்த அத்தியாயத்தை படிப்பதன் மூலமாக கீழ்காண்பனவற்றை புரிந்து கொள்ள இயலும்**

- வரலாற்று ஆராய்ச்சியில் அடிக்குறிப்புகளின் பயன்பாட்டை பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது
- அடிக்குறிப்புகள், நூல் பட்டியல் மற்றும் குறிப்புகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகளைப் பற்றி விவாதிக்கப்பட்டுள்ளது

## 15.3. காலப் பெட்டகம் (Time Frame)

வரிசைப்படுத்தப்பட வேண்டியது அவசியம். சர் லூயி நேமியர் (Sir Louis Namier) என்ற 18-ம் நூற்றாண்டு வரலாற்றாளர்தான் முதன் முதலில் சான்றுகளைத் தலைப்பு வாரியாகச் சீர்படுத்தும் முறையைச்

குறிப்பு

செயல்படுத்தினார். வரலாற்றாளர் கைதேர்ந்த ஓவியரைப் போன்று செயல்பட வேவண்டும் புகைப்படக்காரரைப் போன்று இருத்தலாகாது என்று கூறினார் நேமியர். 3. புவியியல் வழி வரிசைப்படுத்தல் (Geographical Arrangement) வரலாற்று ஆய்வு குறிப்பிட்ட நிலப்பகுதி அல்லது நிர்வாகப்பகுதியைப் பற்றியதாக இருக்கலாம். அப்போது சான்றுகளை நிலப்பகுதிவழி வரிசைப்படுத்துவது பொருத்தமாகவும் வசதியாகவும் இருக்கும். இந்த முறையில் இடங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இதில் உள்ள குறைபாடு என்னவெனில் பல்வேறு இடங்களில் நடைபெற்ற பொதுவான நிகழ்ச்சிகள் இடவாரியாகத் திரும்பத் திரும்ப எழுதப்படுவதால் தொடர்ச்சி கெட்டுவிடும். எனவே புவியியல் வழி. வரிசைப்படுத்தல் பாரபட்சமற்றதாகத் தோன்றினாலும் நிலையானதல்ல என்று கூறுகிறார் கோட்ச்சாக் (Louis Gottschalk). 4. நபர் வழி வரிசைப்படுத்தல் (Personality Based Arrangement) சான்றுகளை வரலாற்று மாமனிதர்கள் வழி வரிசைப்படுத்தலாம். தலைவர்கள், தளபதிகள், ஆட்சியாளர்கள், விஞ்ஞானிகள், கலைஞர்கள், சிந்தனையாளர்கள், ஆன்மீக மகான்கள் சாதனைகள் செய்திருப்பர். இத்தகையோரின் வரலாற்றுப் பங்களிப்புகளை வெளிப்படுத்தும் வகையில் சான்றுகளை வரிசைப்படுத்துவது பொருத்தமாக இருக்கும். 5. நிறுவன வழி வரிசைப்படுத்தல் (Institution based Arrangement) 19-ம் நூற்றாண்டின் இடைப் பகுதியிலிருந்து சமூக நிறுவனங்களின் வரலாற்று முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது. நிறுவனங்கள் எண்ணங்கள், கருத்துக்கள், மதிப்புகளின் அமைப்பு வடிவங்கள். இவை அரசியல், சமூகம், சமயம் சார்ந்தவையாக இருக்கலாம். நிறுவனங்கள் ஆய்வுப் பொருளாயின் அவற்றைச் சுற்றிச் சான்றுகள் வரிசைப்படுத்தப்படுதல் வேண்டும். 6. கருத்துருவாக்கவழி வரிசைப்படுத்தல் (Concept Based Arrangement) கருத்துருவாக்கம் வரலாற்று ஆய்வின் சாரமாகும். தனி மரங்களுக்கிடையே கானகத்தைக் காணும் முயற்சி இது. சான்றுகள் கூறும் பொது உண்மையே கருத்துருவாக்கம். எனவே ஆய்வின் இறுதிக் கட்டமான கருத்துருவாக்கங்களுக் கேற்ப சான்றுகளை வரிசைப்படுத்த வேண்டும். சான்றுகளை வரிசைப் படுத்துவதற்குப் பொதுவான பொருத்தமான சிறந்த வழி என்று எதுவுமில்லை வரலாற்று ஆய்வின் நோக்கம், பரப்பு, தன்மை ஆகியவற்றுக்கேற்ப வரிசைப்படுத்தல் முறை அல்லது முறைகளைப் பயன்படுத்தலாம். ஒவ்வொரு முறையிலும் நிறை குறைகள் உள்ளன. உதாரணமாகக் காலவரன்முறை வரிசைப்படுத்தல் நிகழ்ச்சிகளை வேறுபாடின்றி வரிசைப்படுத்தி வரலாற்றைப் படிக்க முடியாமல் செய்து விடுகின்றது என்று மெக்காலே, பார்சன், கிராப் போன்றோர் குறைப்பட்டுக்கொண்டனர். அதேபோன்று தலைப்புவழி வரிசைப்படுத்துவதால் வரலாற்று ஆய்வு திரித்துக் கூறப்படுகிறது. தனித்துவமிக்க நிகழ்ச்சிகளின் முக்கியத்துவம் குறைகிறது, வரலாற்றுக் கோர்வைபாதிக்கப்படுகிறது, இயல்பான ஓட்டம் தடைபடுகிறது, வரைவு செயற்கையாக உள்ளது என்று கூறுவோர் உண்டு. இதேபோன்று பிற முறைகளும் குறைபாடுடையவையே. எனவே ஒவ்வொரு வரிசைப்படுத்தும்

முறையின் தனித் தன்மை கருதி ஆய்வுக்குப் பொருத்தமானவற்றைப் பயன்படுத்திக் கொள்வது விவேகமாகும்.

குறிப்பு

## 15.4. தர்க்க வாதம் (Reasoning)

தர்க்கவாதம் ஒருங்கமைத்தல் நடவடிக்கையில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இது ஆய்வுப் பணியில் ஏற்படும். இடைவெளிகளை (Gaps)ப் பூர்த்தி செய்ய உதவுகிறது. வரலாற்று ஆய்வில் இடைவெளிகள் ஏற்படுவது இயல்பானது, தவிர்க்க இயலாதது. ஏனெனில் ஆய்வாளருக்குப் போதுமான சான்றுகள் கிடைக்காமல் போகலாம். ஆய்வு வரைவுக்கு மேலும் சில தகவல்கள் தேவைப்படலாம். வழக்கமாக ஆய்வாளர் முதல்தர சான்றுகளுக்கே முன்னுரிமை கொடுக்கிறார். முதல்தரச் சான்றுகள் இல்லாத போது இரண்டாந்தரச் சான்றுகளைப் பயன்படுத்துகிறார். இரண்டாந்தரச்சான்றுகளும் தேவையான தகவல்களைத் தரவில்லையாயின் ஆய்வாளர் என்ன செய்ய வேண்டும்? சான்றுகள் கிடைக்காமையால் ஆய்வில் ஏற்படும் இடைவெளிகளை எவ்வாறு நிரப்புவது? தர்க்கவாதத்தின் மூலம் ஆய்வு இடைவெளிகளைப் பூர்த்தி செய்யலாம். இவ்வாய்வு முறை ஆக்கப்பூர்வமான தர்க்க வாதம் (Constructive Reasoning) என்று அறியப்படுகிறது. ஆக்கப்பூர்வமானதர்க்கவாதம் என்பது விதிதமுறையான தர்க்கவாதம் (Deductive Reasoning or Logic) ஆகும். இது அனுமான முறை (Inferential Method) தர்க்க ரீதியாக உய்த்துணர்ந்து தேவையான தகவல்களைப்பெறல். அதாவது ஒப்புக்கொள்ளப்பட்ட அல்லது தெரிந்த உண்மையிலிருந்து தெரியாத விபரத்தைப் பெறுவதாகும். புகை வருவதால் நெருப்பு இருக்கும் என்று கூறுவதைப் போன்றது. ஆக்கப்பூர்வமான தர்க்கவாதம் இருவகைப்படும். 1. உடன்பாட்டுத் தர்க்க வாதம் (Positive Reasoning). இத்தர்க்கவாத முறையைக் கொண்டு ஆவணங்களில் காணப்படும் சான்றுகளைக் கொண்டு அவற்றில் கூறப்படாத தகவல்களைக்க கொண்டு அவற்றில் கூறப்படாத தகவல்களை ஊகித்துக் கொள்வது. வரலாற்று உண்மைகளுக்கிடையே நிலையான தொடர்பு இருப்பதால் சான்றுகளில் விடப்பட்ட விபரங்களைப் பூர்த்தி செய்து கொள்வது உடன்பாட்டுத் தர்க்கவாதமாகும். இத்தர்க்கவாத முறை எளிமையானது, பாதுகாப்பானது, பயன்படக் கூடியது. 2. எதிர்மறைத் தர்க்க வாதம; (Negative Reasoning). ஆவணத்தில் உண்மை பதிவு செய்யப்படாத நிலையில் உண்மையை ஊகித்துக் கொள்ளக் கூடாது என்பது எதிர்மறை தர்க்கவாதமாகும். அதாவது ஆவணச் சான்று இல்லாத வரலாற்றுத் தகவல் உண்மையல்ல என்பது இதன் சாரமாகும். எதிர்மறைத் தர்க்கவாதம் ஏற்றுக் கொள்ளத்தக்கதன்று. ஏனெனில் வரலாற்று நிகழ்வுகள் அனைத்தும் பதிவு செய்யப் படுவதில்லை. பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் அழிந்து

குறிப்பு

போயிருக்கலாம் அல்லது கிடைக்காமல் இருக்கலாம். எனவே ஆய்வாளர் எதிர்மறைத் தர்க்கவாதத்தைத் தவிர்க்க வேண்டும்.

**மதிப்பீடு**

ஆய்வுப்பணியை ஒருங்கமைத்தல் ஆய்வாளரின் பொறுப்பான நடவடிக்கை ஆகும். பாடுபட்டுச் சேர்த்த சான்றுகளுக்கு வடிவம் கொடுக்கும் வேலை இது. இதை வரலாற்று ஆய்வுமுறையியலின் உள்ளீடு என்று கூறலாம். மகிழ்வூந்தின் பகுதிகள் மகிழ்வூந்தாகாது. இப்பகுதிகள் பொருத்தமாகச் சேர்க்கப்படும் போதுதான் மகிழ்வூந்து உருவாகிறது. அதேபோன்று சான்றுகள் சரியாக ஒருங்கிணைக்கப்படும் போதுதான் ஆய்வுக்கட்டுரை அல்லது வரலாறு பொலிவு பெறுகிறது. சான்றுகளைத் தொகுப்பது (Grouping of Facts). ஒருங்ககமைத்தலின் சாரமாகும். சான்றுகள் சிதறிக்கிடந்தால் அவற்றுக்குச் சிறப்பில்லை சான்றுகளுக்குச் செவ்வொழுங்கு (Symmetry) கொடுக்கப்படும் போது தான் அவை சிறப்படைகின்றன என்று கூறுகின்றனர் பார்சன் மற்றும் கிராப் (Barzun and Graft).

## 15.5. ஆய்வுக் கட்டுரையாக்கம் (Exposition of A Thesis)

ஆய்வுக் கட்டுரையாக்கம் என்றால் என்ன? ஆய்வுக் கட்டுரையாக்கம் படைப்புப் பணியாகும். இது வரலாற்று ஆய்வின் இறுதிக் கட்டமாகும். அரும்பாடுபட்டுச் சேகரித்து, திறனாய்வு செய்து, ஒருங்கிணைத்து, வரிசைப்படுத்தப்பட்ட வரலாற்றுச் சான்றுகளுக்கு வடிவம் கொடுக்கும் நடவடிக்கையே ஆய்வுக் கட்டுரையாக்கம் ஆகும். அதாவது சரி பார்க்கப்பட்ட சான்றுகளைப் புத்திசாலித்தனமாக, புரியக் கூடியவாறு, சுவைபடக் கூறுவதாகும். சான்றுகள் தானாகப் பேசாது. அவற்றைப் பேச வைக்க வேண்டும். ஆய்வுக் கட்டுரையாக்கம் தெளிவாகவும், இனிமையாகவும், பொருள் பொதிந்ததாகவும் இருத்தல் வேண்டும்.

ஆய்வுக் கட்டுரையாக்கத் திட்டம் (Plan of Thesis writing) வரலாற்று ஆய்வாளருக்குக் கட்டுரையாக்கத்தைப் பற்றிய தெளிவான திட்டம் இருக்க வேண்டும். இத்திட்டத்தின்படி தான் ஆய்வாளர் பூர்வாங்க ஆய்வுக்கட்டுரைச் சுருக்கத்தைத் தயாரிக்கிறார். இக்கட்டுரைச் சுருக்கத்தின் முழுமையான விரிவாக்கமே ஆய்வுக் கட்டுரையாக்கம். இதில் சான்றுகள் ஒரு கட்டமைப்புக்குள் இருக்கும். சான்றுகள் தர்க்கரீதியாக ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும். அதாவது ஒரு கருத்தோ அல்லது கருத்துத் தொகுப்போ அடுத்த கருத்து அல்லது கருத்துத் தொகுப்பை பின்தொடர்வதாக இருத்தல் வேண்டும். சுருங்கக்கூறின் கருத்துத் தொடர்ச்சியே கட்டுரையாக்கத் திட்டத்தின் உயிர் நாடியாகும். ஒருமை (Unity), ஒழுங்கு (Order), செறிவு (Brevity), நடை (Style),

கைவண்ணம் (Personal Touch) ஆகியவை இத்திட்டத்தின் சிறப்பியல்புகளாகும்.

குறிப்பு

## 15.6. அத்தியாயங்கள் பிரித்தல் (Chapterisation)

ஆய்வுக்கட்டுரை பல அத்தியாயங்களாகப் பிரிக்கப்படுதல் வேண்டும். அப்போதுதான் கருத்துக்களுக்கு வடிவம் உண்டாகும். இந்த வடிவம் அறிவுக்கு ஏற்புடைத்ததாகவும் (Cogent), ஒத்திருப்பதாகவும் (Coherent), முழுமையாகவும் (Completeness) இருக்க வேண்டியது இன்றியமையாதது. ஆய்வுக் கட்டுரை அத்தியாயங்களைக் கொண்ட கட்டமைப்பாகும். அத்தியாயத்தின் நோக்கம் குறிப்பிட்ட ஆய்வுக் கட்டுரைப் பிரிவைத் தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் எழுதுவதாகும். ஒவ்வொரு அத்தியாயமும் தன்னிறைவு (Self-Contained) கொண்டதாக இருக்க வேண்டும். அத்தியாயங்களின் அளவு கூடியவரை சமமாக இருப்பது நல்லது. ஒரு அத்தியாயம் ஐந்து பக்கங்களிலும் மற்றொரு அத்தியாயம் ஐம்பது பக்கங்களிலும் இருந்தால் ஆய்வுக் கட்டுரை சமநிலையின்றி திறமை நயமில்லாமல் (Clumsy) இருக்கும். அத்தியாயத்தின் பிரிவுகளும், உட்பிரிவுகளும், பத்திகளும், வாக்கியங்களும், சொற்றொடர்களும், சொற்களும் தர்க்க ரீதியாக, தெளிவாக, சமநிலையோடு, உயிரோட்டமுடையதாக அமைந்திருக்க வேண்டியது அவசியம். ஒரு அத்தியாயம் அடுத்த அத்தியாயத்தோடு உயிர்த்தொடர்பு (Organic Link) கொண்டிருக்க வேண்டும்.

## 15.7. தலைப்புகளும் கிளைத் தலைப்புகளும் (Headings and Sub Headings)

ஒவ்வொரு அத்தியாயத்துக்கும் தலைப்பு கொடுக்க வேண்டும். அதேபோன்று அத்தியாயத்துக்குள் கிளைத்தலைப்புகள் கொடுக்கப்பட வேண்டும். அப்போதுதான் அவை ஆய்வுக்கட்டுரையைப் படிப்போரின் கவனத்தையும் கருத்தையும் கவரும் அத்தியாயங்களுக்கு ஒழுங்கையும், தெளிவையும், அர்த்தத்தையும் கொடுக்கும். நூறிலிருந்து முன்னூறு பக்க அளவில் உள்ள ஆய்வுக்கட்டுரையில் தலைப்புகளும் கிளைத் தலைப்புகளும் இல்லாவிடில் வாசகர்கள் கண்ணைக்கட்டிக் காட்டில் விட்டவர்களைப் போன்று திக்குதிசை தெரியாது திண்டாடுவார்கள் முக்கிய கருத்துக்கள் வார்த்தை வெள்ளத்தில் மூழ்கிப் போய்விடும். கட்டுரையின் வடிவமைப்பே தெரியாமல் போகலாம். ஆய்வுக் கட்டுரைக்குத் தலைப்புகளும் கிளைத் தலைப்புகளும் கொடுப்பதில் பல நன்மைகள் உண்டு. 1).மேலோட்டமாகப் படிப்பவர்களுக்குக் கூட ஆய்வுக் கட்டுரையின் பரப்பும் வீச்சும் தெளிவாகத் தெரியும். கட்டுரையின் நிலவமைப்பு (Topography) நன்கு தெரிவதால் அதன் மேடு பள்ளங்களையும், நெளிவு சுளிவுகளையும் கண்டு கொள்வது எளிது. 2).

குறிப்பு

ஆய்வுக் கட்டுரையின் நோக்கும் போக்கும் சந்தேகத்துக்கிடமின்றி இருக்கும். 3) ஆய்வாளரின் ஆய்வுக் களம்" நன்கு வரையறுக்கப்படுகிறது. 4). ஆய்வின் கட்டுக்கோப்பு தெளிவாக்கப்படுகிறது. 5). திறனாய்வாளர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்களின் விமரிசனங்களைக் கேட்டுத் தக்க திருத்தங்களைச் செய்யலாம். 6). அவசியமாயின் ஆய்வுக் கட்டுரையில் தக்க மாற்றங்கள் செய்வதில் இடர்பாடு இருக்காது.

## 15.8. பொருளழுத்தத்துக்கு முக்கியத்துவம் (The Importance of Emphasis)

ஆய்வுக்கட்டுரையில் காலவரன்முறை, நிகழ்ச்சிகள், நபர்கள், நிறுவனங்கள், கருத்துக்கள் போன்றவை இடம் பெறுகின்றன. இவற்றுள் மிகமுக்கியமானவை, முக்கியமானவை, முக்கியமற்றவை இருக்கக் கூடும். சில நிகழ்ச்சிகள் வேறு சில நிகழ்ச்சிகளைவிட முக்கியத்துவமுடையதாக இருக்கக்கூடும். சிறப்பு நிகழ்ச்சிகளுக்கோ, நபர்களுக்கோ, நிறுவனங்களுக்கோ அல்லது கருத்துக்களுக்கோ அழுத்தம் (Emphasis) கொடுத்துச் சிறப்பிக்க வேண்டியிருக்கும். அப்போது பொருளமுதத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆய்வுக் கட்டுரையை வரைய வேண்டும். இது விகிதாச்சார நீதி (Proportionate Justice) என்று கூறப்படுகிறது.

## 15.9. தொடர் வரிசையின் முக்கியத்துவம் (The Importance of Serialisatin)

தொடர்ச்சி ஆய்வு கட்டுரையின் ஆன்மா போன்றது. நிகழ்ச்சிகளை இணைப்பது தொடர்ச்சி ஆகும். அதாவது வரலாற்று நிகழ்வுகள் உயிர்த்தொடர்போடு ஒன்றையொன்று பின் தொடர வேண்டும். காலவரன் முறை (Chronology), காரண - காரியத் தொடர்பு (Caustion), கற்பனை (Imagination) ஆகிய மூன்றாம் நிகழ்ச்சித் தொடர்ச்சிக்கான முறைகளாகும். நிகழ்ச்சித் தொடர்ச்சிக்கான விதிகளாவன: 1). ஆய்வின் அடிப்படையில் பொதுவான முடிவுகளைக் கூறல் 2) ஆய்வாளரின் கருத்துருவாக்கங்களைக் கூறல். 3) சூழல், நிலவமைப்பு, சமூகம், நிறுவனம் பற்றிய பொது முடிவுகளைக் கொடுத்தல், 4). குறிப்பிட்ட வரலாற்றுத் தத்துவத்துக்கு சம்பந்தப்பட்ட கண்டுபிடிப்பைக் கூறல். 5) ஆய்வுத் திட்டத்தின்படி முடிவுகளைக்கூறல் 6) ஆய்வின் அடிப்படையில் பொருள் விளக்கமளித்தல். புதிய தகவல்களைத்தரல், புதிய விளக்கமளித்தல், புதிய முடிவுகளுக்கு வரல் ஆகிய மூன்றும் நிகழ்ச்சித் தொடர்ச்சியின் முக்கிய நோக்கங்களாகும். வரலாற்று நிகழ்வுகளை நிகழ்ந்தவாறே கூறுவதுதான் ஆய்வாளரின் வேலை. வரலாற்று விளக்கமளித்தலும், விதிகளை வகுத்தலும் தத்துவரின் வேலை. ஆனால்

நடைமுறையில் ஆய்வாளர் நிகழ்ச்சிகளை விவரித்தால் மட்டும் போதாது அவற்றுக்கு விளக்கத்தையும் கொடுக்க வேண்டும். வரலாற்று விவரிப்பும் விளக்கமும் கலையாகும். வரலாற்று விதிகளை வகுப்பதற்கு ஆய்வு அனுபவமும், மனமுதிர்ச்சியும், சிந்தனை சக்தியும், வரலாற்று விவேகமும் வேண்டும்.

## 15.10. எழுத்து நடை (The Writing style)

ஆய்வுக்கட்டுரை ஆய்வாளருக்கும் வாசகருக்குமிடையே தகவல் தொடர்பை ஏற்படுத்துகிறது. இது ஆய்வாளரின் அயறா உழைப்பின் விளைவாகும். இதன் பயனும் பெருமையும் ஆய்வுக் கட்டுரை எவ்வாறு எழுதப்பட்டுள்ளது என்பதைப் பொறுத்தே உள்ளது. ஆய்வின் தரம் எவ்வளவுதான் உயர்வாக இருந்தாலும் ஆய்வுக்கட்டுரையை யாரும் படிக்கவில்லையாயின் அதனால் என்ன பயன்? ஆய்வாளரின் எழுத்து நடையே ஆய்வுக்கட்டுரை விரும்பிப்படிக்கத் தூண்டுகிறது. ஆய்வுக்கட்டுரையை நயமான நடையில் எழுத வேண்டுமாயின் பின்வரும் குறிப்புகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும். 1. தெளிவான சிந்தனை (Clear Thinking). ஆய்வாளருக்குச் சிந்தனைத் தெளிவு அவசியம். தெளிவிருந்தால்தான் எழுத்து நடை எளிமையாக இருக்கும். 2. மொழித்திறன் (Language skill). ஆய்வாளருக்கு சொல்லாட்சித் திறன் இருக்க வேண்டியது இன்றியமையாதது. சிறிய, எளிய, வழக்கத்தில் உள்ள சொற்களையே கையாள வேண்டும். வல்லுனர்களுக்கே விளங்கக் கூடிய நுணுக்கச் சொற்களையும் மற்றும் அலங்காரச் சொற்களையும் தவிர்க்க வேண்டும். 3. சொற்செறிவு (Brevity). ஆய்வாளர் சொல்ல வேண்டியதைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்க வேண்டும். சொற்சிக்கனம் தேவை. 4. நடுநிலை நோக்கு (Objective). ஆய்வுக்கட்டுரை படிக்கக் கூடியதாக மட்டும் இருந்தால் போதாது. அது நம்பத்தக்கதாகவும் இருக்க வேண்டும். நடை உண்மையை வெளிப்படுத்த வேண்டும் மறைக்கக் கூடாது. 5. சிறிய வாக்கியங்கள் (Short Sentences). சிறிய எளிய இனிய வாக்கியங்கள் சுவையைக் கூட்டும். நீண்ட சிக்கலான வாக்கியங்கள் சலிப்பை உண்டாக்கும். 6. பேச்சு நடையைத் தவிர்த்த ல் (Avoid Colloquialism) பேச்சு நடை ஆய்வுக் கட்டுரைக்கு ஏற்றதல்ல. நான், நாங்கள் போன்ற பெயர்ச்சுட்டுகளைத் தவிர்க்க வேண்டும். சுருங்கக்கூறின் ஆய்வுக் கட்டுரை ஆரம்பம் முதல் முடிவு வரை ஆர்வத்தோடு படிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

## 15.11. ஆவண மேற்கோளாட்சி

ஆவண மேற்கோளாட்சி ஆய்வுக் கட்டுரையாக்கத்தில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இதுவே ஆய்வுக் கட்டுரை உண்மையானது, நம்பகமானது, ஆதாரப்பூர்வமானது என்பதை மெய்ப்பிக்க வல்லது.

ஆவண மேற்கோளாட்சி "என்ற சொல்லுக்கு இரண்டு பொருட்கள் உள்ளன: 1). நூலக அறிவியலில் இச்சொல்லுக்குக் குறிப்பிட்ட பாடத்தைப் பற்றிய தகவல்களை மீட்பித்தல் என்று பொருள். 2) வரலாற்று ஆய்வில் இச்சொல் மூல ஆதாரங்களைப் பற்றிய தகவல்" என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது.

ஆவண மேற்கோளாட்சியின் நோக்கங்கள் ஆவணங்களே வரலாற்றாய்வுக்கு அடிப்படை. ஆவணங்களிலிருந்து மேற்கோளாகக் காட்டப்படும் சான்றுகளைப் பற்றிய ஆய்வு முறையே ஆவண மேற்கோளாட்சி எனப்படுகிறது. இதன் நோக்கங்கள் வருமாறு: 1) ஆய்வுக் கட்டுரையில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள், விளக்கங்கள், விவாதங்கள் ஆகியவற்றுக்கு அத்தாட்சியாக இருத்தல், 2) ஆய்வாளர் பிறருக்கு எந்த அளவுக்குக் கடன்பட்டுள்ளார் என்பதைக் காட்டல், 3). கருத்து மாறுபாடுகளை அதிகாரப் பூர்வமாக்கல் 4). வாசகர்கள் மேற்கொண்டு தகவல்களைப் பெற உதவல். 5) ஆய்வாளர் பயன்படுத்திய சான்றுகள், மேற்கோள்கள், கருத்துக்கள் ஆகியவற்றைச் சரிபார்க்க உதவல், 6) அடிக்குறிப்புகள், பிற்சேர்க்கைகள் மூலம் மேலும் விபரங்களைக் கொடுக்க. ஆவண மேற்கோளாட்சியற்ற ஆய்வுக் கட்டுரை அதிகாரப் பூர்வமானதாக அங்கீகரிக்கப்பட மாட்டாது. 39.3 ஆவண மேற்கோளாட்சியின் உள்ளடக்கப் பகுதிகள் ஆவண மேற்கோளாட்சி பின்வரும் உள்ளடக்கப் பகுதிகளைக் கொண்டது.

## 15.12. முன்னுரை (Preface)

முன்னுரை ஆய்வின் பகுதியல்ல. இது ஆய்வுக்கான பீடிகையாகும். முன்னுரை ஆய்வை அறிமுகப்படுத்துகிறது. ஆய்வாளர் முன்னுரையில் 1).எந்த நோக்கத்தோடு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது 2) ஆய்வின் பின்னணி, பரப்பு, இயல்பு பற்றிச் சுருக்கமாகச் சொல்ல வேண்டும். ஆய்வாளருக்கு உதவிய நிறுவனங்கள், நபர்கள், நண்பர்கள் ஆகியோருக்கு நேரடியான முகமன் புகழ்ச்சியின்றி நன்றிக்கடன் தெரியவிக்கலாம். ஆய்வாளரே தனது ஆய்வறிக்கை ஆதாரப் பூர்வமானது, திறனாய்வு மிக்கது, தெளிவானது என்றெல்லாம் கூறிக் கொள்ளலாகாது! மாறாக ஆய்வாளரின் அடக்கம், தெளிவு, சாதுர்யம், அறிவாற்றல், மனமுதிர்ச்சி, முன்னுரை மூலம் வெளிப்பட வேண்டும். முன்னுரை மிகச் சுருக்கமாக இருப்பது நல்லது. தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த ஆய்வுக் கட்டுரைகளில் காணப்படும் முன்னுரைகளை ஆய்வாளர் முன்மாதிரியாகக் கொள்ளலாம். ஆய்வின் பரப்பு குறுகியதாக இருந்தால் முன்னுரைக்கு பதில் நன்றி தெரிவிப்பு (Acknowledgements) என்று குறிப்பிட்டால் போதும்.

குறிப்பு

## 15.13. அடிக்குறிப்புகள் (Footnotes)

ஆய்வுக் கட்டுரையில் அந்தந்த பக்கத்தின் அடிப்பகுதியில் கொடுக்கப்படும் குறிப்புகளே அடிக்குறிப்புகள் எனப்படும். கட்டுரையின் உடல் பகுதியில் கூறப்பட்ட தகவல்களை வலுப்படுத்தக் கூடிய துணைத் தகவல்கள் இவை. ஆய்வுக்கட்டுரையின் கருத்தோட்டம் தடைபடாமலிருக்கும் பொருட்டு அடிக்குறிப்புகள் தரப்படுகின்றன. ஆய்வாளரின் உழைப்பின் அகலத்தையும் ஆழத்தையும் அறிந்து கொள்வதற்கான அளவுமானியே அடிக்குறிப்புகள். இவை அதிகபட்சம் ஒரு பக்கத்தின் கால் பகுதிக்கு மேல் போகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். அடிக்குறிப்புகள் சுருக்கமாக, துல்லியமாக, பொருத்தமாக இருக்க வேண்டியது அவசியம். அடிக்குறிப்பான நோக்கங்கள் வருமாறு: 1). ஒரு வாக்குமூலத்தையோ, கருத்தையோ அல்லது விளக்கத்தையோ செல்லத்தக்கதாக்கல். 2) பெறப்பட்ட தகவல்களுக்கு ஏற்பளித்தல் 3). கூறப்பட்ட கருத்துக்களை விரிவு படுத்தவோ, விளக்கவோ, துணைத் தகவல்களைச் சேர்க்கவோ பயன்படுத்தல் 4) உதாரணங்கள் கொடுக்க் 5). கட்டுரையின் பிற பகுதிகளில் காணப்படும் தகவல்களுக்குக் குறுக்குக் குறிப்பு (Cross Reference) கொடுக்க் 6). மேற்கோள்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கொடுத்ததற்கு நன்றி தெரிவிக்க் 7). தலைப்புகளையோ, துணை தலைப்புகளையோ விளக்க. 8). தன்னுடைய பங்களிப்புகளைப் பிறருடையவற்றினின்றும் வேறுபடுத்திக் காட்ட 9).வாசகருக்குப் பிரச்னையின் பின்னணியைப் புலப்படுத்த ˙ 10). சான்று மூலங்களுக்கு வாசகர்களை வழிப்படுத்த. அடிக்குறிப்புகளை எப்படித் தரவேண்டும்? இதற்கு இரண்டு முறைகள் உள்ளன: 1. முதல் தர மேற்கோள் குறிப்பு (Primary Reference). ஆய்வுக் கட்டுரையில் முதலில் கொடுக்கப்படும் ஆவணம் அல்லது நூல் பற்றிய குறிப்பு இவ்வகையைச் சேர்ந்தது. இதைப் பின்வருமாறு குறிப்பிட வேண்டும் : 1. சத்தியனாதய்யர், இந்திய வரலாறு முதல் பாகம் (சென்னை . 1952) பக்.133. கட்டுரையில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணும் அடிக்குறிப்பில் உயர்த்திக் கொடுக்கப்பட்டுள்ள எண்ணும் ஒன்றாக இருக்கும். 2. இரண்டாம் தர மேற்கோள் குறிப்பு (Secondary Reference). முதல் தர மேற்கோள் குறிப்பைத் திரும்பவும் குறிப்பிட வேண்டியிருந்தால் சுருக்கக் குறிப்புகளைப் பயன்படுத்தலாம். இவை இரண்டாம் தர மேற்கோள் குறிப்புகளாகும். உதாரணமாக முன்னர் குறிப்பிட்ட ஆர். சத்தியனாதய்யரின் நூலை இடைக் குறுக்கீடின்றிக் குறிப்பிட வேண்டுமாயின் (Ibid) அதாவது அதே இடத்தில் “என்ற சொல்லைப் பயன்படுத்த வேண்டும். உதாரணமாக Ibid p.400 என்று குறிப்பிட வேண்டும். இதுபோன்று ஒரு அத்தியாயத்தில் ஒரு குறிப்புக்கு நான்கு அல்லது ஐந்து தடவைக்கு மேல் பயன்படுத்தாமல் இருப்பது நல்லது. இம்முறையைக் கட்டுரை முழுவதிலும் பின்பற்ற வேண்டும். ஆய்வு வழிகாட்டியும், ஆய்வுக் கட்டுரை மதிப்பீட்டாளரும், பிற ஆய்வு மாணவர்களும் அடிக்குறிப்புகளைக் கவனத்துடன் பார்ப்பார்கள். எனவே

அடிக்குறிப்புகள் அக்கறையுடன் கொடுக்கப்படுதல் கவனிக்க வேண்டியவை: 1) அடிக்குறிப்புகள் ஆய்வுக் கட்டுரையை வலுப்படுத்துவதாகவும், அறிவொளியூட்டக் கூடியதாகவும், செல்லுபடியாக்கத் தகாததாகவும் இருக்க வேண்டும். 2) ஆய்வுக் கட்டுரையின் முதல் நகலிலேயே (First draft) இவற்றைச் சேர்த்து விடுதல் வேண்டும். 3). ஒவ்வொரு அடிக்குறிப்பும் சுருக்கமாக, துல்லியமாக, பொருத்தமாக இருக்க வேண்டும். 4). அடிக் குறிப்புகள் ஆய்வுக் கட்டுரை முழுவதும் முரண்பாடின்றி ஒரே சீராக வேண்டும். 5). அடிக் குறிப்புகளுக்கிடையே ஒற்றை இடைவெளி (Single Space) விட வேண்டும். 6). ஒவ்வொரு அடிக்குறிப்பும் முற்றுப் புள்ளியுடன் முடிய வேண்டும். 7) அடிக் குறிப்பு அடுத்த பக்கங்களுக்கும் தொடரலாம். 8).இவை அத்தியாயம் வாரியாக வேண்டும். கட்டுரையில் கொடுக்கப்படும் எண்களும் அடிக்குறிப்புகளில் உயர்த்திக் காட்டப்படும் எண்களும் ஒன்றாக இருக்க வேண்டும். 9). அடிக்குறிப்பில் கொடுக்கப்படும் ஆசிரியரின் பெயர், நூலின் தலைப்பு போன்ற விவரங்கள் முழுமையாக இருக்க வேண்டும். 10). அடிக்குறிப்புகளை ஒவ்வொரு பக்கத்தின் கீழோ, அத்தியாயத்தின் இறுதியிலோ அல்லது கட்டுரையின் கடைசியிலோ கொடுக்கலாம். இவற்றை அந்தந்த பக்கத்தில் அடிப்பகுதியில் கொடுப்பதே சிறந்தது. அடிக்குறிப்புகளில் எதை, எப்போது, எவ்வளவு, எப்படிக் குறிப்பிட வேண்டும் (Citation) என்பதற்கான விதிகள் வருமாறு: 1. எதைக் குறிப்பிட வேண்டும்? (What to Cite?) 1) அதிகாரப் பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட மூலச் சான்றுகள் 2) வெளியிடப்பட்ட சான்றுகள் 3). ஒரே கருத்தைக் கூறுவோருள் முதலாவது உள்ளவரைக் குறிப்பிடல்˙ 4). நன்கு தெரிந்த தகவல்களைத் தவிர்த்தல்˙ 5). கூறியது கூறாமை. 6). நீளமான மற்றும் சர்ச்சைக்குரிய அல்லது சந்தேகத்துக்கிடமான விவரங்களை விடுத்தல். 2. எப்போது குறிப்பிட வேண்டும்? (When to Cite?) 1) ஆய்வுக் கட்டுரையின் முதல் நகலிலேயே குறிப்பிடல்˙ 2) ஒவ்வொரு சான்று அல்லது தகவலை நன்றியோடு ஏற்றுக் கொள்ளும் போது 3) கட்டுரையில் கொடுக்கப்படும் மேற்கோளிலிருந்து மாறுபடும் போது அல்லது மாறுபட்டக் கருத்தைக் கூறும்போது 4). மேலும் தகவல்களைத் தர. 3. எவ்வளவு குறிப்பிட வேண்டும்? (How much to Cite?) 1) அடிக் குறிப்பு மிகச் சுறுக்கமாக இருக்க வேண்டும். 2). நீளம் குறைவாக இருக்க வேண்டும் 3). பிற ஆய்வாளர்களின் முடிவுகளோடு தொடர்புபடுத்தக் கூடிய அளவுக்கு 4). பொருத்த மானவற்றை மட்டும் குறிப்பிடல் 5) சர்ச்சைக்குரியவற்றைத் தவிர்த்தல் 6). தேவையான அளவுக்கே குறிப்பிடல். 4. எப்படிக் குறிப்பிட வேண்டும்? (How to cite) அடிக்குறிப்புகளைக் கொடுக்கையில் மரபுவழிச் சுருக்கங்கள் (Abbreviations) பின்பற்றப்படுதல் வேண்டும். உதாரணமாக ante (மேலே), Circa (தேதி நிச்சயமில்லை ) e.g. (சான்றாக), Etseq (பின் தொடரும் வரிகள்), Ibid (அதே இடத்தில்), Infra (கீழே), mss (கையெழுத்துப் பிரதி), n.d (தேதியில்லை), Passim (இங்குமங்கும்), Supra (மேலே), Viz (அதாவது)..... இக்குறியீடுகளைக் கையாள்வதால்

இடம் மிச்சமாகும். டூர்பியன் கையேடு (Turbians Guide) அடிக்குறிப்பு எழுதுவது பற்றிய ஆதாரப்பூர்வமான வழிகாட்டியாகும்.

குறிப்பு

## 15.14. மேற்கோள்கள் (Quotations)

மேற்கோள்கள் ஆய்வுக் கட்டுரையின் அத்தியாவசியக் கூறாகும். இவை எடுத்துக்காட்டு வாசகங்கள். இவற்றைப் பொருத்தமான இடங்களில் சேர்க்க வேண்டும். மேற்கோள்கள் கவர்ச்சி மிக்கவை. எனவே இவற்றை அளவோடு பயன்படுத்த வேண்டும். இவை சுருக்கமாகவும், சுவையாகவும், ஆய்வுக் கருத்தோடு தொடர்புடையதாகவும் இருக்க வேண்டியது அவசியம். எப்போது மேற்கோள்களைக் கொடுக்க வேண்டும்? 1). சர்ச்சைக்குறிய கருத்துக்களை விவாதிக்கும் போது 2).பிறரது கருத்துக்களைத் திறனாய்வு செய்யும் போது 3) ஆய்வாளரின் முடிவுகளை உறுதிப்படுத்தும் போது. மேற்கோள்களைக் கையாளும் போது ஆய்வாளர் கவனிக்க வேண்டியவை: 1) மேற்கோள் வாசகத்தை மாற்றாமல் உள்ளவாறே கொடுக்க வேண்டும். 2) மேற்கோளின் போது இடைச்செருகல் (Interpolation) இருப்பின் அது சதுர அடைப்பானுக்குள் (Square Bracket) இருக்க வேண்டும். 3). மேற்கோள் மிகவும் நீளமாக இருப்பின் ஒரு பகுதியையோ அல்லது சில வார்த்தைகளையோ நீக்கி விடலாம். இது தொக்கு நிற்றல் (Ellipsis) ஆகும். இந்நீக்கம் மூன்று புள்ளிகளால் (....) குறிக்கப்படல் வேண்டும். இப்புள்ளிகள் மேற்கோளின் துவக்கத்திலோ , இடையிலோ அல்லது முடிவிலோ இருக்கலாம். 4). மேற்கோள் உரிய குறியீடுகளால் (" ") காட்டப்பட வேண்டும். 5). மேற்கோள் ஒற்றை இடைவெளி (Single Space)யுடன் கொடுக்கப்படுதல் வேண்டும். 6) மேற்கோள்கள் ஒரு பக்கத்தின் கால் பகுதிக்கு மேல் போகக்கூடாது. ஆனால் அடுத்த பக்கத்துக்குத் தொடரலாம்.

## 15.15. பட்டியல்கள், வரைபடங்கள், தேசப்படங்கள் (Tables, charts and Maps)

பட்டியல் தகவல்களைப் பட்டியலிட்டுக் காட்டுகிறது. வரைபடம் குறிப்பிட்ட காலகட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்களை அறிவிக்கிறது. தேசப்படம் நிகழ்ச்சிகள் நிகழ்ந்த இடங்களைக் காட்டும். தேவையாயின் புள்ளி விவர அட்டவணைகளைப் பயன்படுத்தலாம். இவை, 1). குறிப்பிட்ட தகவல் தொகுப்புகளைக் காட்டவும் 2) ஆய்வுக் கட்டுரையின் பகுதிகளுக்கிடையேயான தொடர்புகளைக் கூறவும் 3) தகவல்களைக் கவனத்தைக் கவரும் வகையில் தரவும் உதவுகின்றன.

குறிப்பு

## 15.16. நூற்பட்டியல் (Bibliography).

நூற்பட்டியல் வெளியிடப்பட்ட மற்றும் வெளியிடப்படாத ஆதாரங்களைக் கொண்ட பட்டியல் ஆகும். இவை மூல முதல் தர ஆதாரங்கள் (Primary Sources) மற்றும் பிற வழி இரண்டாந்தர ஆதாரங்களையும் (Secondary Sources) உள்ளடக்கியது. நூற்பட்டியல் நான்கு வகைப்படும். 1) மேற்கோள் காட்டப்பட்ட ஆவணங்கள் அல்லது நூல்கள் (Works Cited) 2) எடுத்தாளப்பட்ட சான்றுகள் (Sources consulted); 3) தேர்ந்தெடுக்கப்பட்ட நூற்பட்டியல் (Selected Bibliography) 4). குறிப்போடு கூடிய நூற்பட்டியல் (Annotated Bibliography). வரலாற்று ஆய்வின் துவக்கத்திலேயே பூர்வாங்க நூற்பட்டியல் (Preparatory or Working Bibliography) தயாரிக்கப்படுகிறது. இதன் திருத்தப்பட்ட இறுதி நூற்பட்டியல் ஆய்வு முடிவில் முழுமையானதாக்கப்படுகிறது. இறுதி நூற்பட்டியல் (Final Bibliography) தயாரிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை: 1. அகர வரிசையால் அட்டவணையிடப்பட வேண்டும். 2) ஆவணம் அல்லது நூலின் முழு விவரங்கள் இருக்க வேண்டும். 3). மூல நூலில் தலைப்பு நீளமாக இருப்பின் அனைத்து வரிகளும் ஒரேக் கோட்டிலிருந்து துவங்க வேண்டும். 4). விளக்கக் குறிப்பு தலைப்பையொட்டியதாக இருக்க வேண்டும். 5). நன்கு அறிமுகமான ஆதாரங்களுக்கு வெளியீட்டுக் காலத்தை மட்டும் குறிப்பிட்டால் போதும். 6) ஆய்வுக்குப் பயன்படுத்தாத ஆனால் ஆய்வுப் பொருளுக்குத் தொடர்புடைய ஆதாரங்களைச் சேர்க்கலாம் 7) ஆசிரியர் பெயர் இல்லாத நூல்களைத் தனியே பட்டியலிட்டுக் காட்ட வேண்டும் 8). நூற்பட்டியலை ஒவ்வொரு அத்தியாயத்தின் இறுதியிலோ அல்லது ஆய்வுக் கட்டுரையின் முடிவிலோ கொடுக்கலாம். ஆய்வுக் கட்டுரையின் முன்னுரையில் நூற்பட்டியல் பற்றிய குறிப்பைக் கொடுப்பது மரபு. இதில் ஆய்வின் போது பயன்படுத்தப்பட்ட ஆதாரங்களின் தன்மை, தகுதி, பயன், பொருத்தம், சிறப்பு பற்றிச் சுருக்கமாகக் கூறல் வேண்டும்.

## 15.17. பிற்சேர்க்கைகள் (Apendixes).

பிற் சேர்க்கைகள் ஆய்வுக் கட்டுரையின் கூறப்படாத நீளமான ஆவண ஆதாரங்கள், தகவல் தொகுப்புகள், விளக்கங்கள் அல்லது சர்ச்சைக்குரிய விவாதங்கள் பற்றியவை. இவற்றை ஆய்வுக் கட்டுரையின் முடிவில் நூற்பட்டியலுக்கு முன்போ அல்லது பின்போ இணைக்கலாம். இவை I, II, III, IV, V... என்று ரோமன் எண்ணிட்டுச் சேர்க்க வேண்டும். ஒவ்வொரு பக்கத்தின் உச்சி மையத்தில் “பிற்சேர்க்கை” என்று பெரிய எழுத்துக்களில் (Capitals) குறிப்பிட வேண்டும். பிற்சேர்க்கைத் தலைப்பும் அவ்வாறே இருத்தல் வேண்டும்.

## 15.18. அட்டவணை (Index).

பொருள் அட்டவணை ஆய்வுக் கட்டுரைக்கு அவசியமில்லை. ஆனால் ஆய்வுக் கட்டுரை அச்சாகி வெளியிடப்பட்டால் இது அவசியம். இது பொருளின் (Matter) அல்லது ஆசிரியர் (Author) அடிப்படையில் தனித்தனியாகவோ அல்லது பொதுவாகவோ இருக்கலாம். பொருள் அட்டவணைதான் ஆய்வுக் கட்டுரையின் இறுதிப் பகுதியாகும்.

## 15.19. ஆதாரங்கள் பட்டியல் (Bibliography)

ஓர் ஆய்வுக் கட்டுரையானது எந்தெந்த நூல்களின் துணையுடன் எழுதப்பட்டது என்ற பட்டியலைத் தெரிவிப்பது தான் துணை நூற்பட்டியல். இது ஆய்வடங்கல் என்றும், கருவி நூற்பட்டியல் என்றும், பார்வை நூற்பாட்டியல் என்றும் அழைக்கப்படுவது வழக்கம். இந் நூற்பட்டியல் எதிர்கால ஆய்வுக்கு உதவியாக செயல்நூல் பட்டியல் (Working Bibliography) தயாரிக்க பெரும் உதவியாக இருக்கிறது. துணை நூற்பட்டியல் தயாரிக்க பெரும் உதவியாக இருக்கிறது. துணை நூற்பட்டியலை மூன்று வகைப்படுத்தலாம். அவை செயல் விபரத் தொகுப்பு (Working Bibliography), எடுத்தாண்ட துணை நூற்பட்டியல் (Annotated Bibliography), (Selected Bibliography) எனப்படும். பயன்படுத்திய நூல்களை மட்டுமே துணை நூற்பட்டியலில் சேர்ப்பது துணை நூற்பட்டியல் எனவும், அழைக்கப்படுகின்றன. ஆய்வின் முன்னோடியாக, முதுகெழும்பாக துணைநூற்பட்டியல் கருதப்படுகிறது. துணைநூற்பட்டியலை இருவிதமாகக் கொடுக்கலாம். அடிப்படைச்சான்றுகள் அல்லது முதனிலைச்சான்றுகள், இரண்டாம் நிலைச்சான்றுகள் என வகைப்படுத்துதல் ஒருமுறை. இம்முறை தலைப்புகளுக்கேற்றவாறு வரிசைப்படுத்துதல் ஒரு முறை. இம்முறை தலைப்புகளுக்கேற்றவாறு வரிசைப்படுத்துதல் ஆகும். ஆசிரியரின் பெயர்களைக் கொண்டு அகரவரிசையில் வரிசைப்படியாகக் கொண்டு வரிசைப்படுத்தி துணை நூற்பாட்டியல் தயாரித்தலும் ஒருவகை உண்டு. இம்முறை பொதுவாக நடைமுறையில் அதிகம் பயன்படுத்துவதில்லை. அடிப்படை ஆதாரங்களைக் கொண்டு தயாரிக்கப்படும் துணை நூற்பட்டியல் உண்டு. இம்முறை பொதுவாக நடைமுறையில் அதிகம் -. நூலின் தலைப்பு 3. பதிபகம் வெளியீடு 4. பதிப்பு செய்த ஆண்டு உதாரணமாக ஆர். சத்தியநாத அய்யர், மதுரை நாயக்கர்கள் வரலாறு, சென்னை பல்கலைக்கழகம், 1980. இந்நூலை ஆய்வுக்கு பயன்படுத்துவதாகக் கொள்வோம். இதில் ஆசிரியர் பெயர் இரு பிரிவாகத் தரப்பட்டுள்ளது.

இவ்விபரங்களைத் துணை நூற்பாட்டியலுக்குக் கொண்டு வரும் போது சத்தியநாத அய்யர், ஆர். மதுரை நாயக்கர் வரலாறு, சென்னை 1980. என்று எழுதலாம். ஏனெனில், ஆசிரியர் பெயர் சத்தியநாத அய்யர் என்று

குறிப்பு

இருப்பதால் பெயரின் விகுதியாக குலப்பெயர் உள்ளது. பொதுவாக ஆசிரியர் பெயர் மட்டுமே நால்பட்டியலில் இடம் பெற வேண்டும். ஆசிரியரின் மதம், இனம், இடம் மற்றும் பிற இருப்பின் பெயருக்குப் பின்னால் இருக்க வேண்டும். உதாரணமாக சென்னை இராமன் கே.வி. என பெயர் இருந்தால் இராமன் என எழுதுவது தவறு. சிறப்புப்பட்டங்கள் ஏதேனும் பெற்றிருந்தால் அதைப் போட வேண்டுமென்ற அவசியம் இல்லை . உதாரணமாக திரு. அ. கணபதி என்று இருப்பதால் அதை கணபதி, திரு. அ. என்று எழுவது போலதான் டாக்டர் பட்டங்களும் மற்ற பட்டங்களுமாகும். ஆசிரியரின் பெயர் மட்டும் தான் தேவையே தவிர. ஆசிரியர்களின் பட்டங்களும், மதிப்புகளும் அவசியமில்லாதது. எடுத்துக்காட்டாக, ஒரு அமைச்சர் நூல் எழுதியிருந்தால் அதில் அவரது பதவியைச் சேர்கக் வேண்டியதில்லை. உதாரணமாக பிரதமர் நேரு Discovery of India என்னும் நூல் எழுதியிருந்தால் நேரு என எழுதினால் போதுமானது. நேரு, மாண்புமிகு பிரதமர் என எழுதக்கூடாது. எனவே இனத்தின் பெயரையோ, ஊரின் பெயரையோ, பட்டம், பதவிகளையோ எழுதி ஆசிரியர்களைத் துணை நூற்பட்டியலில் மதிப்பு மரியாதைகளைப் பெற எண்ணுதல் தவறு. அங்ஙனம் எழுதுவது துணை நூற்பட்டியல் தயாரிப்பிற்குப் பணிச்சுமையாக இருப்பதுடன், அவை நிலையான மதிப்பாக கருத முடியாது. ஆசிரியரின் உண்மையான பெயரை நூலில் கொடுக்காத பொழுது, நூலில் கொடுக்கப்பட்ட பெயர் புனைப்பெயர் ஆயினும் அப்படியே எழுதத் தடையில்லை. உண்மையான பெயரை நூலில் கொடுக்காத பொழுது, நூலில் கொடுக்கப்பட்ட பெயர் புனைப்பெயர் ஆயினும் அப்படியே எழுதத் தடையில்லை. உண்மைப் பெயரைத் தேடி காலத்தாழ்ந்த வேண்டிய அவசியமில்லை. அறிவொளி தீபன் என்றே புனைப்பெயருடன் இருந்தால் அறிவொளிதீபன் என்றே எழுத வேண்டும். அதைப்பிரித்து எழுதல் கூடாது. நூலின் பெயர் ஆசிரியரின் பெயரை அடுத்து எழுதப் பெற வேண்டும். நூலின் பெருந்தலைப்பை மட்டுமே கொடுத்தால் போதுமானது. எடுத்துக்காட்டாக தென்னிந்திய கல்வெட்டுகள் தமிம் நாடு மற்றும் கேரளா என்று இருந்தால் தென்னிந்திய கல்வெட்டுகள் என்று மட்டும் இருந்தால் அதுவே நிறைவான செயலாகும். இந்நூல் பல்வேறு தொகுதிகளைக் கொண்டிருக்குமெனில் அந்நூலுடன் தொகுதியையும் சேர்த்து இடம்பெறச் செய்தல் வேண்டும். அதாவது தென்னிந்தியா கல்வெட்டுகள் தொகுதி -1 என்று சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கண்டவாறு உள்ள நூலில் அது வெளியிடப்பட்ட ஆண்டு குறிப்பிடப்படவில்லை என்றால் ஆண்டு எழுதும் இடத்தில் ஆண்டு இல்லை (M., ) என்று எழுத வேண்டும். அதேபோல (,., ) என்ற போடப்பட்டால் பதிப்பக்கப்பட்ட இடம் குறிப்பிடப்படவில்லை என்று பொருள்.

நூலை பதிப்பித்து வெளியிடுவோர் இருந்தால் அச்சிட்டோர் பெயர் எழுத வேண்டியதில்லை. சில சமயத்தில் பதிப்பாளர் பெயர் குறிப்பிடப்படாமல்

இருப்பதும் உண்டு. இது போன்ற சமயத்தில் அச்சிட்டோர் பெயரைக் குறிப்பிட்டு எழுதவேண்டும்.

**குறிப்பு**

நூல்கள் பல பதிப்புகளாக வெளிவருகின்றன. ஆய்வுக்குப் பயன்படுத்திய நூல் எந்தப் பாதிப்பு என்பதை குறிப்பிட வேண்டும். ஒவ்வொரு மறுபதிப்பும் பல மாற்றங்களுடன் வெளிவருவதால், கடைசியாக வெளிவந்த நூலைக் கட்டாயமாகப் பார்க்க வேண்டும். மாறாக, முதல் பதிப்பை மட்டுமே பார்த்திருந்தால் ஆய்வாளருக்கு மிகுந்த பயனைத் தராது.

நூல்களைத் தவிர காலமுறை இதழ்களும் பல புதிய செய்திகளைத் தாங்கி வருகின்றன. ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனி இதழ்கள் இருக்கின்றன. ஆய்வாளர் இது போன்ற இதழ்களைப் பயன்படுத்துவதன் மூலம் புதிய செய்திகளை ஆய்வில் தர முடியும், இது போன்ற கால முறை இதழ்களில் மற்றும் சிறப்பு மலர்கள் போன்றவற்றில் வெளிவரும் ஆய்விற்குப் பயன்படும் கட்டுரைகளையும் துணை நூற்பட்டியலில் கொடுக்கப்படும் விதம் நூல்களிலிருந்து சற்று வேறுபட்டுக் குறிக்கப்படும் அது கீழ்க்கண்டவாறு குறிக்கப்படும். 1. கட்டுரை ஆசிரியர் 2. கட்டுரையின் தலைப்பு 3. இதழின் பெயர் 4. இதழின் எண், துணை எண் 5. இதழை வெளியிடுபவர் 6. இதழ் வெளியாகும் இடம் 7. இதழ் வெளிவந்த ஆண்டு கட்டுரைகளை மேற்கண்டவாறு கொடுத்தாலும் சில விதி முறைகளையும் ஆய்வாளர்கள் கடைப்பிடிக்க வேண்டும்.

கட்டுரையின் தலைப்பினை மேற்கோள் குறியிட வேண்டும். இதழின் பெயரில் ஆய்வு எழுத்துக்களை (italic) இருக்க வேண்டும். கட்டுரை இடம் பெறும் பக்கங்கள் குறிப்பிடல் வேண்டும். தினசரியில் கட்டுரை எடுக்கப்பட்டால் தினசரியின் பெயர், தேதி, மாதம், ஆண்டு, ஆகியன குறிப்பிடல் சிறப்பு தினசரியின் பெயர் ஆய்வு எழுத்துக்களை (italic) துணை நூற்பட்டியல் எழுதும் போது ஆசிரியர் ஒருவரோ அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் இருந்தால் ஏற்படும் சிக்கல்களுக்குக் கீழ்கண்டவாறு விளக்கம் தரலாம்.

ஓர் ஆசிரியர் எனில் நூல்களுக்கு வழக்கம் போல, ஆசிரியர் பெயர், பெயரின் முதலெழுத்து, தலைப்பு ஆய்வு எழுத்துக்களை (italic) பதிப்பு செய்த இடம், ஆண்டு, இம் முறையைக் கையாளலாம். எடுத்துக்காட்டாக, (Krishnaswami Ayyangar S. Sources of Vijayanagar History. Madras; Universityof Madras, 1991.

ஆசிரியரும் தொகுப்பாசிரியராக இருவர் இருந்தால், தொகுத்தவர் நன. என தொகுப்பாசிரியருமாக பெயர் தலைப்பினைத் தொடர்ந்து எழுத வேண்டும். நூல் மற்றொருவரால் திருத்தி வெளியடப்பட்டால், திருத்தி வெளியிட்டவர் பெயர் தலைப்பினைத் தொடர்ந்து இடம் பெறல் வேண்டும். மொழி பெயர்க்கப்பட்ட நூலாதலின் எம் மொழியிலிருந்து

யாரால் மொழிபெயர்க்கப்பட்டது என்பதை தலைப்பினை அடுத்து எழுத வேண்டும்.

வாழ்வியற் களஞ்சியம் எழுதும் பொழுது கீழ்கண்ட முறையைக் கையாளலாம்.

வாழ்வியற் களஞ்சியம் தொகுதி எட்டு. தஞ்சாவூர் : தமிழ்ப் பல்கலைக்கழகம் 1991.

பேட்டி எனில், பேட்டியளித்தவர் பதவி, போட்டியின் பேட்டியின் தலைப்பு, இடம், தேதி.

விரிவுரை எனில், பேட்டியளித்தவர், பதவி பேட்டியின் தலைப்பு , இடம், தேதி பதிப்பிக்கப்படாத ஆய்வேடுகளுக்கு முறையாக அனைத்தும் எழுதிவிட்டு, இறுதியில் பதிக்கப்படவில்லை (Unpublished) என அடைப்புக் குறிப்பில் குறித்தல் வேண்டும்.

அடிக்குறிப்புகள் (Footnotes) ஓர் ஆய்வுக்கட்டுரை எழுதும் ஆய்வாளர் ஆய்வுக்குத் தேவையான சான்றுகளை எதிலிருந்து எடுத்துள்ளார் என்பதைக் குறிப்பிடவும், தெரிந்த உண்மைச் சான்றுகளுக்கு நன்றி கூறும் முகமாகவும் குறிப்பிடுவதே" அடிக்குறிப்புகள் ஆய்வுக்கட்டுரையின் பக்கங்களின் அடியில் குறிப்பிடுவதே அடிக்குறிப்புகள் ஆகும். இவை கருத்துரை விளக்கவுரை மற்றும் தகவல் அளிப்பதற்கும் பயன்படுகின்றன. அதாவது சில எதிர்மறையான வாதங்கள் உண்மைகளை ஆய்வாளர் சந்திக்க நேர்ந்தால் அவற்றையும் அடிக்குறிப்பில் தெரியப்படுத்திவிட வாய்ப்பு உள்ளது. அடிக் குறிப்பின் மூலம் சில மேற்கோள்கள் முழுமையாக வரையறுத்துக் கூறுமுடியும். அடிக்குறிப்புகள் அடிக்குறிப்பு (1) ஆய்வுக் கட்டுரையில் அந்தந்த பக்கங்களுக்கு கீழாகவும் (2) ஆய்வுக் கட்டுரையின் ஒவ்வொரு அத்தியாயங்களுக்கு ஆசிரியர் இருவர் அல்லது மூவர் இருந்தால் அவர்கள் அனைவரின் பெயர்களை எழுதி அதன் பின் மேலே கூறப்பட்ட முறையையே கையாளலாம்.

மூன்றிற்கும் மேற்பட்ட ஆசிரியர்களை ஒரு நூல் பெற்றிருந்தால் "et al" குறிப்பிடல் வேண்டும்."et al " என்றால் தமிழில் மற்றும் பிறர் எனக் கொள்ளலாம். உதாரணமாக,

NovoGrod J.R., et.al. Case Book in public Administration New York;, Holt, Rine chart and Winston, Inc, 1969.

நூல் தொகுத்து வெளியிடப்பட்டால் தொகுப்பாளர் பெயர் முதலில் இடம் பெற வேண்டும் தொகுப்பாளர் என்று அடைப்பிற்குள் காட்டுவது சிறந்த முறையாகக் கருதலாம் (எ.கா.)

Basham,A.L.ed. A Cultural History of India, Oxford; 1975.

ஆசிரியர் பெயர் தெரியவில்லையேல் நூலை அகர வரிசையில் வகைப்படுத்தலாம். எ.கா்- திருக்கோகரணம் ஸ்தல வரலாறு புதுக்கோட்டை தேவஸ்தான வெளியீடு, (M.,)

குறிப்பு

பின்னரும் (3) புத்தகம் அல்லது பி.எச்.டி ஆய்வுக் கட்டுரையின் அனைத்து அத்தியாயங்களுக்கு பின்னரும் கொடுக்கப்படலாம், (4) சமூக அறிவியல் (Social sciences) ஆய்வுக் கட்டுரைகளில் அடைப்புகளில் குறிப்புகள் கொடுக்கப்படுகின்றன (Paranthetical References). அதாவது, மேற் குறிப்பிட்ட முறைகளைத் தவிர கட்டுரையின் வரிகளுக்கு இடையே அடிக்குறிப்பு எண்ணுக்கு பதிலாக (ஆசிரியர் பெயர், நூலின் பெயர், ஆண்டு) இவை அடைப்புக்குள் கொடுக்கப்படுகின்றன. அடிக்குறிப்ககள் பயன்பாடு முக்கியமாக ஆடுயு (Morden Language Association for Researchers, USA). The Chicago Manual of Style, APA formating and Style Guides Curreap Loodu ஆய்வு முறையில் ஒன்றை தேர்ந்தெடுத்து பயன்படுத்துவது நன்று. இங்கு ஆடுயு ஆய்வு முறை உதாரணமாக கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு ஆய்வாளர் தனது ஆய்வுக்கட்டுரையில் மேலே கொடுக்கப்பட்டுள்ள நான்கு முறைகளில் ஏதாவது ஒரு முறையைக் கையாளலாம். அதை ஆய்வாளரே முடிவெடுத்துக் கொள்ளலாம் என்றாலும், அடிக்குறிப்பு அந்தந்தப் பக்கங்களிலேயே கொடுக்கப்பட்டால் நல்லது. ஏனென்றால், ஆய்வுக் கட்டுரையைப் படிக்கும் போது ஏற்படும் சிரமம் குறையும். மேலும் ஆய்வாளர் அடிக்குறிப்புகளுக்கு எண்களிடுவதில் தவறு ஏற்பட வாய்ப்புக்கு இடமில்லை. தலைப்புகளுக்குப் பின்னர் அடிக்குறப்பிடுவது தட்டெழுத்துச் செய்ய வசதியாக இருப்பதுடன் கட்டுரையின் பணி விரைவில் முடிவடைந்து விடும். இம்முறையில் அடிக்குறிப்பைப் பார்க்கும் ஆர்வம் குறைந்து விடும். இதே குறைபாடு மூன்றாவது முறையிலும் வருகிறது. எனவே இதையும் நல்ல முறையெனக் கருத முடியாது. என்றாலும் பல்கலைக்கழகங்களின் விதியானது ஒரு ஆய்வுக்கட்டுரை இத்தனை பக்கங்களுக்குக் குறைவாக இருக்கக் கூடாது என்று உள்ளதால் இம்மாதிரியான அடிக்குறிப்பு முறைகள் அவசியமாகிறது. அடிக்குறிப்பு - துணைப்பட்டியல் வேறுபாடு

அடிக்குறிப்புக்கும் துணை நூற்பட்டியலுக்கும் சில அடிப்படை வித்தியாசங்கள் உள்ளன. அடிக்குறிப்பில் இரண்டு வித்தியாசங்கள் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளன. அதாவது, அடிக்குறிப்பில் பக்கங்களின் எண்போட வேண்டியதுடன், நூலின் ஆசிரியர் பெயரை அப்படியே எழுதலாம். உதாரணமாக, எ.கணபதி என எழுதலாம். ஆனால் துணை நூற்பட்டியலில் கணபதி, எ. என எழுத வேண்டும். மேலும் அடிக்குறிப்பில் முதல் முறை அடிக்குறிப்பு இடும் போது தவிர நூலின் பதிப்பு, பதிப்பாளர், இடம், ஆண்டு போன்றவை குறிக்காமலும் சுருக்கத்தை கொடுக்கலாம். ஆனால் இன்றைய தினம் மேற்கண்ட விபரங்கள் அனைத்தையும் அடிக்குறிப்பில் சேர்ப்பது வழக்கமான ஒன்று

என்றே கூறலாம். உதாரணமாக, ராபர்ட் சி. பீங்கலி, மெய்தை இயலும் தேசியமும், நியூயார்க் ஹார்பெர்ரோ 1941, பக். 5.

யாருடைய பெயரில் நூல் வெளியிடப்படுகிறதோ அதை எழுதினால் போதுமானது. யாருக்காக அது வெளியிடப்பட்டிருந்தாலும் அதுபற்றி கவலை கொள்ள வேண்டிய அவசியமில்லை. சில சமயங்களில் மூல நூல் கிடைக்காமல் போகும் வாய்ப்பு ஏற்படுமாயின் அதை மேற்கோள் காட்டும் நூலையும் சேர்த்துக் காட்டலாம்.

மேலும் சில நூல்கள் ஒருவரால் எழுதப்பட்டு வேறொருவரால் வெளியிடப்பட்டு இருக்கும் அவ்வேளையில் எழுதியவரே வெளியீட்டாளராகவும் இருக்குமோ என்ற எண்ணம் எழலாம். அப்படி சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. குடவாயில் பாலசுப்பிரமணி சோழ மண்டலத்து வரலாற்று நாயர்களின் சிற்பங்களும் ஓவியங்களும் என்னும் நூலை எழுதியுள்ளார். ஆனால் அதை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. எனவே இந்நூலின் வெளியீட்டுரிமை பல்கலைக் கழகத்திற்கே உரித்தாகும். வரைபடங்கள் (Maps)

ஆய்வுத் தலைப்பின் தன்மையை பொறுத்து வரைபடங்கள் ஓர் ஆய்வுக்கட்டுரைகள் இடம்பெற வாய்ப்பு உள்ளது. இத்தகைய வரைபடங்கள் ஆய்வுக்கட்டுரைகளில் கூறப்பட்டுள்ள கருத்தினை வலியுறுத்திக் கூறப்பயன்படுத்த வேண்டும். அத்தகைய் வரைபடங்களின எண்ணிக்கைகள் தொடர்ச்சியாக ஓர் ஆய்வுக்கட்டுரையின் ஆரம்பத்தில் இருந்து முடிவு வரை எண்களால் மற்றும் வரைபடத்திற்குரிய தலைப்புகளாலும் குறிப்பிட வேண்டும். ஒரு ஆய்வுக்கட்டுரையில் இடம் பெற்றிருக்கும் அனைத்து வரைபடங்களின் எண்ணிக்கை, அதன் தலைப்புகள் இவை இடம் பெற்றிருக்கும் பக்கங்கள் போன்றவை வரிசையாகப் பொருளடக்கத்தில் இடம் பெற்றிருக்க வேண்டும். அட்ட வணைகள் (Tables)

## 15.20. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

1. குறிப்புகளில் என்ன அடங்கும்?
2. அடிக்குறிப்புகள் என்ன முக்கியமான செயல்பாட்டைச் செய்கின்றன?
3. அடிக்குறிப்புகளில் என்ன இருக்கிறது?

## 15.21. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க பதில்கள்

1. குறிப்புகளில் அனைத்து புத்தகங்கள்.்.பத்திரிகைகள்.்.அறிக்கைகள் போன்றவை அடங்கும், அவை ஆசிரியரால் குறிப்பிடப்பட்ட அல்லது மேற்கோள் காட்டப்படுகின்றன.

2. அறிக்கையின் முடிவில், மீண்டும் மீண்டும் குறிப்புகளை ஆலோசிப்பதற்கான கடினமான முயற்சியைத் தவிர்க்க, அவை உரையின் பக்கத்திலேயே தயாராகக் குறிப்பை வழங்குகின்றன.

3. அடிக்குறிப்புகள் உரையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துப் பொருட்களையும், பக்கத்தின் கீழே தொடர்புடைய குறிப்புடன் (எண் அல்லது சின்னம்) கொண்டிருக்கும்.

## 15.22. அத்தியாயச் சுருக்கம்

- நூலகப் பணி ஒரு தொடர்ச்சியான செயலாகும். இதற்கு அவ்வப்போது கூடுதலாக தேவைப்படுகிறது. புதிய பொருள் வெளிச்சத்திற்கு வரும்போது, நூல் அட்டவணையில் நுழைகிறது, ஆனால் இந்த விஷயத்தில் கிடைக்கும் இலக்கியத்தின் அளவை அறிய ஆரம்ப கட்டத்தில் ஒரு தோராயமான யோசனை அவசியம்.

- அட்டை பட்டியல்கள், குறியீடுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி ஒரு நூல் பட்டியல் தயாரிக்கப்படுகிறது

பருவ இதழ்கள் மற்றும் குறிப்பு புத்தகங்கள் நூலகங்கள், அருங்காட்சியகங்கள், காப்பகங்கள் மற்றும் பிற களஞ்சியங்களில் கிடைக்கும்.

- ஒரு நூலியல் முழு இலக்கிய மூலத்தையும் உள்ளடக்கியது, ஆய்வு செய்யப்பட்டு பொருத்தமானதாகவும் பயனுள்ளதாகவும் கண்டறியப்பட்டது, அவை உரையில் மேற்கோள் காட்டப்பட்ட அல்லது குறிப்பிடப்படாமல் இருக்கலாம்.

- உரைக்குள் மேற்கோள் காட்டப்பட்ட கட்டுரைகள், தாள்கள், புத்தகங்கள், மோனோகிரா.்.ப்கள் போன்றவை எப்போதும் தொடர்புடைய குறிப்புகளுடன் இருக்க வேண்டும், அதாவது ஆசிரியர் மற்றும் வெளியிடப்பட்ட ஆண்டு, எ.கா., (கோத்தாரி, 1988).

- சில சந்தர்ப்பங்களில், அடிக்குறிப்புகளில் விளக்க அறிக்கைகள், சுருக்கங்களின் முழு வடிவம், உரையின் ஒரு பகுதியைக் குறிப்பிடும் கூடுதல் நியாயங்கள், தேவைப்பட்டால், அதாவது, உரை தெளிவாகப் புரியவில்லை என்றால், வாசகர் படிக்கலாம்.

- அடிக்குறிப்புகள் அவை குறிப்பிடப்பட்ட பக்கத்தின் கீழே எண் அடிப்படையில் வழங்கப்படுகின்றன. மறுபுறம், நூலியல் எப்போதும் அகர வரிசைப்படி முழு உரையின் முடிவில் தோன்றும்.

- பல்வேறு குறிப்பு பாணிகளில் அமெரிக்க உளவியல் சங்கம் (யூீயு) பாணிகள், சிகாகோ கையேடு நடை, நவீன மொழி சங்கம் மேற்கோள்,

ஹார்வர்ட் குறிப்பு, ஆக்ஸ்போர்டு குறிப்பு, ஆர்சுயு குறிப்பு, முதலியன அடங்கும்.

குறிப்பு

## 15.23. முக்கிய சொற்கள்

- அடிக்குறிப்பு: இது ஒரு பக்கத்தின் கீழே அச்சிடப்பட்ட கூடுதல் தகவலாகும்.

- மோனோகிரா.்.ப்: இது ஒரு பாடம் அல்லது ஒரு பாடத்தின் ஒரு அம்சம், பெரும்பாலும் ஒரு எழுத்தாளர் அல்லது கலைஞரால், மற்றும் பொதுவாக ஒரு அறிவார்ந்த விஷயத்தில் எழுதுதல் அல்லது கண்காட்சிக்கான ஒரு சிறப்புப் படைப்பாகும்.

- நூல் பட்டியல்: இது உங்கள் வேலையை ஆராய்ச்சி செய்யும் செயல்பாட்டில் நீங்கள் பயன்படுத்திய அனைத்து ஆதாரங்களின் பட்டியலாகும் (குறிப்பிடப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும்).

## 15.24. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

**குறுகிய வினாக்கள்**

1. நூலியல் எதை உள்ளடக்கியது?

2. பிற்சேர்க்கையின் உள்ளடக்கங்களை பட்டியலிடுங்கள்.

**விரிவான வினாக்கள்**

1. அறிக்கை எழுதுவதில் உரை குறிப்புகள் மற்றும் அடிக்குறிப்புகள் எவ்வாறு கொடுக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றி விவாதிக்கவும்.

2. அடிக்குறிப்புகள், குறிப்புகள் மற்றும் நூலியல் ஆகியவற்றுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை விளக்குங்கள்.

## 15.25. கூடுதல் வாசிப்புகள்

Warren, John. 1998. *The Past and Its Presenters*: An Introduction to Issues in Historiography. London: Hodder & Stoughton Educational.

Ferro, Marc. 2003. *The Use and Abuse of History*: Or How the Past is Taught to Children. Abingdon: Routledge.

E. Sreedharan. 2004. *A Textbook of Historiography: 500 BC to AD 2000*. New Delhi: Orient Blackswan.



Sharma, Arvind. 2003. *Hinduism and its Sense of History*. New Delhi: OUP India.

Iggers, Georg G. 2005. *Historiography in the 20th Century: From Scientific Objectivity to the Postmodern Challenge*. Connecticut: Wesleyan University Press.

Stuart, Hughes H. 1964. *History as Art and as Science.* New York: Joanna Cotler Books.

Fea, John. 2013. *Why Study History? Reflecting on the Importance of the Past*. Washington: Baker Publishing Group.